ஸ்ரீமத்பகவத்கீதை

பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓங்காராநந்தர்

www.omkaravidya.com

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

ஸ்ரீமத்பகவத்கீதை

(பாகம் - 3)

விளக்கவுரை

பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓங்காரானந்தர்

Published By

UV Foundation, Chennai



பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓங்காராநந்தர்

பொருளடக்கம்

பா. எண்	தலைப்பு	ப. எண்
01.	பதிமூன்றாவது அத்யாயம்	06
02.	பதினான்காவது அத்யாயம்	140
03.	பதினைந்தாவது அத்யாயம்	216
04.	பதினாறாவது அத்யாயம்	289
05.	பதினேழாவது அத்யாயம்	387
06.	பதினெட்டாவது அத்யாயம்	485

Downloaded from **www.omkaravidya.com**

பதிமூன்றாவது அத்யாயம்

ओं श्रीकृष्णाय परमात्मने नमः ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம:

अथ त्रयोदशोऽध्यायः அத த்ரயோதஶோऽத்யாய:

क्षेत्र-क्षेत्रज्ञ-विभाग-योगः க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விபாக-யோக:

முகவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் முதல் ஆறு அத்யாயங்களில் ஜீவாத்ம லக்ஷணங்கள், கர்மயோக ஸாதனம், மனித முயற்சி, தன்னம்பிக்கை, புருஷார்த்தம் ஆகியவற்றை முக்கியமாக உபதேசித்தார்.

அடுத்த ஆறு அத்யாயங்களில் ஈச்வர லக்ஷணம், பக்தியை வெளிப்படுத்தும் முறைகள், பக்தியை வளர்க்கும் வழிகள், ஈச்வர அநுக்ரஹத்தின் தன்மை முதலியவை உபதேசிக்கப்பட்டன.

தத் த்வம் அஸி। என்ற மஹாவாக்யத்தில், முதல் ஆறு அத்யாயங்கள் **த்வம்** பதத்தின் அதாவது ஜீவாத்மாவைப் பற்றிய விளக்கமாகவும், அடுத்த ஆறு அத்யாயங்கள் **தத்** பதத்தின், அதாவது பரமாத்மாவைப் பற்றிய விளக்கமாகவும், கடைசி ஆறு அத்யாயங்கள் **அஸி** பதத்தின், அதாவது ஜீவாத்ம-பரமாத்ம-ஐக்யத்தின் விளக்கமாகவும் அமைந்துள்ளன என்று பெரியோர் கூறுவர்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸ்ரீமத்பகவத்கீதையின் 13 முதல் 18 வரையிலான அத்யாயங்களில் ஜீவாத்ம பரமாத்ம ஐக்யத்தைப் பற்றி பகவான் உபதேசிக்கப் போகிறார்.

ஜீவன், ஜகத், ஈச்வரன் - இவற்றிலுள்ள வேற்றுமைகள் உண்மையல்ல, அவை மாயத் தோற்றங்கள். அவை பரம்பொருளின் மீது கற்பிக்கப்பட்டவை என்பது அத்வைத ஸித்தாந்தத்தின் உபதேசம்.

இந்த அத்யாயங்களில் ஞானயோக ப்ரதானமான ஸாதனங்கள், ஸத்குணங்கள் முதலியவை உபதேசிக்கப்பட உள்ளன.

இந்த பதிமூன்றாவது அத்யாயத்திற்கு **க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விபாக-யோகம்** என்று பெயர்.

ஆத்மா-அநாத்மா என்றும் **பராப்ரக்ருதி-அபராப்ரக்ருதி** என்றும் முன்பு கூறப்பட்டதுதான், இப்பொழுது **க்ஷேத்ரஜ்ஞ-க்ஷேத்ரம்** என்று கூறப்படுகிறது.

அநாத்மா, அபராப்ரக்ருதி என்று கூறப்பட்டதுதான் **க்ஷேத்ரம். ஆத்மா, பராப்ரக்ருதி** என்று கூறப்பட்டதுதான் **க்ஷேத்ரஜ்ஞன்.**

ஆதிசங்கரர் இந்த அத்யாயத்தை **க்ஷேத்ராத்யாய:** என்று கூறுகிறார். கடவுளைப் பற்றிய தத்துவத்தைத் தெளிவாகக் கூறுவதற்காக இந்த அத்யாயம் தொடங்கப்படுகிறது என்று கூறுகிறார்.

பராபக்தன் ஆவதற்குரிய வழிமுறைகளை பகவான் இங்கு கூறுகிறார் என்றும் ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

பராபக்தனுக்குரிய லக்ஷணங்களை அடைவதற்கான மெய்யறிவும் இங்கு உபதேசிக்கப்படுகிறது என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

अर्जुन उवाच

प्रकृतिं पुरुषं चैव क्षेत्रं क्षेत्रज्ञमेव च ।

एतद्वेदितुमिच्छामि ज्ञानं ज्ञेयं च केशव ।।

அர்ஜுந உவாச

ப்ரக்ருதிம் புருஷம் சைவ க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞமேவ ச ।

ஏதத்வேதிதுமிச்சாமி ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ச கேஶவ ।।

பதவுரை

அர்ஜுந: - அர்ஜுனன், **உவாச** - கூறினான்.

ஹே கேஶவ - ஓ கேசவரே! **ப்ரக்ருதிம்** - ப்ரக்ருதியையும், **புருஷம் ச ஏவ** - அவ்வாறே புருஷனையும், **க்ஷேத்ரம்** - க்ஷேத்ரத்தையும், **க்ஷேத்ரஜ்ஞம் ஏவ ச** - அவ்வாறே க்ஷேத்ரத்தை அறிபவனையும், **ஜ்ஞாநம்** - ஞானத்திற்கான உபாயத்தையும், **ஜ்ஞேயம் ச** - அறியப்பட வேண்டியதையும், **ஏதத்** - இதை, **வேதிதும்** - அறிவதற்கு, **இச்சாமி** - நான் விரும்புகிறேன்.

பொழிப்புரை

அர்ஜுனன் கூறினான்.

Downloaded from **www.omkaravidya.com**

ஓ கேசவரே! ப்ரக்ருதி, புருஷன், க்ஷேத்ரம், க்ஷேத்ரத்தை அறிபவன், ஞானத்திற்கான உபாயம், அறியப்பட வேண்டியது - இவற்றை அறிய விரும்புகிறேன்.

விளக்கவுரை

இந்த ச்லோகம், ஆதிசங்கரரின் உரையில் இல்லை. ச்லோகங்களின் எண்ணிக்கை கணக்கிலும் இது வராது. இருப்பினும், இந்த ச்லோகத்தைப் படிப்பது, அத்யாயத்திலுள்ள விஷயங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

அர்ஜுனன் பகவானை **ஹே கேஶவ!** என்று அழைக்கிறான். **க** என்றால் ப்ரஹ்மா, **இ** என்றால் விஷ்ணு, **ச** என்றால் சிவன். ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்ராத்மகராக இருக்கக்கூடியவர் என்றும் பொருள் கூறுவர்.

ப்ரக்ருதி, புருஷன் ஆகிய இரண்டும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளவை.

ப்ரக்ருதி, புருஷன், க்ஷேத்ரன், க்ஷேத்ரஜ்ஞன், ஞானம், ஜ்ஞேயம் ஆகியவற்றைப் பற்றி பகவானிடமிருந்து தெளிவாக அறிந்துகொள்ள விரும்புகிறான் அர்ஜுனன்.

श्रीभगवानुवाच

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते ।

एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः ।। १३ - १ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஸ்ரீபகவாநுவாச

இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே ।

ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி

தத்வித: ।। 13 - 1 ।।

பதவுரை

ஸ்ரீபகவாந் - ஸ்ரீபகவான், **உவாச** - கூறினார்.

ஹே கௌந்தேய! - ஓ குந்தியின் புதல்வனே! **இதம்** - இந்த, **ஶரீரம்** - உடல், **க்ஷேத்ரம் இதி** - க்ஷேத்ரம் என்று, **அபிதீயதே** - கூறப்படுகிறது. **ஏதத்** - இதை (உடலுக்குள் இருந்துகொண்டு உடலை), **ய:** - எவன், **வேத்தி** - அறிகிறானோ, **தம்** - அவனை, **க்ஷேத்ரஜ்ஞ: இதி** - க்ஷேத்ரத்தை அறிந்தவன் என்று, **தத்வித:** - அதனை அறிந்தவர்கள், **ப்ராஹு:** - கூறுகிறார்கள்.

பொழிப்புரை

ஸ்ரீபகவான் கூறினார்.

ஓ குந்தியின் புதல்வனே! இந்த உடல், க்ஷேத்ரம் என்று கூறப்படுகிறது. இந்த உடலுக்குள் இருந்துகொண்டு உடலை அறிபவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று அதனை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில் க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் என்ற சொற்களுக்குச் சுருக்கமாகப் பொருள் கூறுகிறார். பின்பு விரிவாகக் கூறுவார்.

Downloaded from **www.omkaravidya.com**

க்ஷேத்ரம், ப்ரக்ருதி ஆகிய சொற்கள் ஒரே பொருளை உடையவை. அதுபோல, க்ஷேத்ரஜ்ஞன், புருஷன், ஜ்ஞேயம் ஆகிய சொற்களும் ஒரே பொருளை உடையவை.

தத்துவ ஞானம் உள்ளிட்ட நற்குணங்களைச் சேர்த்து ஞானம் என்று கூறுகிறார் பகவான்.

இதம் ஶரீரம் என்பது, நம்மால் இப்பொழுது அனுபவிக்கப்படுகின்ற சரீரத்தைக் குறிக்கிறது. பொதுவாக, வெளியிலுள்ள பொருட்களைத்தான் இது, இவை என்று சொல்வோம். இங்கு, பகவான் ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம் இரண்டையும் சேர்த்து **இதம்** (இது) என்று சொல்கிறார்.

க்ஷேத்ரம் என்பதன் பொருள் –

உடல், மனம், இந்த்ரியங்கள் அனைத்தும் சேர்ந்ததுதான் க்ஷேத்ரம். அது நம்மால் அறியப்படுவது.

சரீரம் என்றால் மாறக்கூடியது, தேயக்கூடியது என்று பொருள். **தேஹ:, சரீரம், தநு:, வபு:** என்று உடலுக்குப் பல பெயர்கள் உள்ளன.

அறியாமையினால், ஜீவாத்மாவைத் துன்புறுத்தக்கூடியது க்ஷேத்ரம். தன்னைப் பற்றிய அறியாமையினால் உயிருக்கு, உடல், உறவுகள், உலகப்பொருட்கள் ஆகியவற்றில் பற்று ஏற்படுகிறது. உயிர்களாகிய நாம் துன்பப்படுவதற்கு, அறியப்படுகின்ற உடல், மனம் ஆகியவை காரணமாக இருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

ஆராய்ச்சி செய்து, உண்மையை உணரும் வரை, துன்பப்படுவதுபோல்தான் இருக்கும். இந்த உடலை வைத்துத்தான் நம்மைப் பற்றிய உண்மையை நாம் புரிந்துகொள்கிறோம்.

நம்மைப் பற்றிய அறியாமையுடன் வாழும்போது, இந்த உடல், மனம் ஆகியவை, துன்பத்திற்குக் காரணமாகிறது. நம்மைப் பற்றிய உண்மையை அறிவதற்கும் இது ஸாதனமாக இருக்கிறது.

க்ஷேத்ரம் என்ற சொல்லுக்கு இப்படியெல்லாம் பொருள்கொள்ளலாம் - தேயக் கூடியது, மாறக் கூடியது, அழியக் கூடியது, துன்பத்தைக் கொடுப்பது, துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு உதவுவது, புண்ய பாபங்களாகிய வினைப்பயன்களை அனுபவிக்கின்ற விளைநிலம்.

இந்த உலகிலுள்ள அனைத்து ஸ்தூல ஸூக்ஷ்ம பதார்த்தங்களும் (பருப்பொருட்களும் நுண்பொருட்களும்) க்ஷேத்ரம் என்று பகவான் பின்னால் கூறுவார்.

அறியப்படுபவை அனைத்தும் க்ஷேத்ரம் என்று புரிந்துகொள்ளலாம்.

க்ஷேத்ரஜ்ஞன் என்பதன் பொருள் -

க்ஷேத்ரம் ஜாநாதி இதி க்ஷேத்ரஜ்ஞ: ।

க்ஷேத்ரத்தை அறிபவன் க்ஷேத்ரஜ்ஞன்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த உடல் முழுவதும் வ்யாபித்து, ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களை எவன் அறிகிறானோ, இந்த உடலின் வாயிலாக உலகை எவன் அறிகிறானோ, அவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

எந்த ஒரு தத்துவம், உடல் முழுவதும் வ்யாபித்து, உடல், மனதை அறிகிறதோ, உடல், மனம் வாயிலாக உலகத்தை அறிகிறதோ, அந்தத் தத்துவத்திற்கு க்ஷேத்ரஜ்ஞன் என்று பெயர்.

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।

क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ।। १३ - २ ।।

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர்ஜ்ஞாநம் யத்தஜ்ஜ்ஞாநம்
மதம் மம ।। 13 - 2 ।।

பதவுரை

ஹே பாரத - ஓ பரத குலத்தோனே! **மாம் (ஏவ)** - என்னையே, **ஸர்வக்ஷேத்ரேஷு** - அனைத்து க்ஷேத்ரங்களிலும் உள்ள, **க்ஷேத்ரஜ்ஞம் ச அபி (= ஏவ)** - க்ஷேத்ரஜ்ஞனாக, **வித்தி** - அறிந்துகொள். **க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ:** - க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் ஆகியவற்றைப் பற்றிய, **ஜ்ஞாநம்** - ஞானம், **யத்** - எதுவோ, **தத்** - அதுவே, **ஜ்ஞாநம்** - ஞானம் (**இதி** - என்பதே,) **மம** - எனது, **மதம்** - கருத்து.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ பரத குலத்தோனே! என்னையே அனைத்து க்ஷேத்ரங்களிலும் உள்ள க்ஷேத்ரஜ்ஞனாக அறிந்துகொள். க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் ஆகியவற்றைப் பற்றிய ஞானமே ஞானமாகும் என்பது எனது கருத்து.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், 10 ஆவது அத்யாயத்தில், அனைத்து உடல்களிலும் இருக்கின்ற ஆத்ம தத்துவம் நானே என்று கூறியருளினார்.

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்த்தித: । 10 - 20

இதனையே முதல் விபூதியாக, பகவான் கூறினார்.

ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் । 7 - 5

என்று பராப்ரக்ருதியின் இலக்கணத்தைக் கூறும்பொழுது சொன்னார்.

இப்படிப் பலவிடங்களில், பகவான், நாம் சொல்கின்ற 'நான்' என்ற சொல்லுக்குப் பொருள் தானே என்று கூறுகிறார்.

ஜீவன் வேறு, ஈச்வரன் வேறு அல்ல. தலைவன், தொண்டன் என்பவையெல்லாம் நடைமுறைக் கோணத்தில்தான். ஆனால் பாரமார்த்திக த்ருஷ்டியாகிய அறுதிக் கோணத்தில், இருப்பது ஒரே மெய்ப்பொருள் மட்டுமே.

Downloaded from **www.omkaravidya.com**

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் - 355)

மெய்ப்பொருளில் உயிர்களுக்கு உயிரான இறைவன், உயிர்கள், உலகங்கள் அனைத்தும் மாயையால் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

கடல் என்ற சொல் பரந்த நீர்ப்பரப்பைக் குறிக்கிறது. அலை என்ற சொல், காற்றினால் ஏற்படுகின்ற நீரின் தன்மையைக் குறிக்கிறது. தண்ணீர் என்ற சொல்லும் இருக்கிறது.

அலை, கடல், தண்ணீர் ஆகிய மூன்று சொற்களுள், தண்ணீர் என்ற சொல்லுக்கு மட்டும்தான் இருப்பு இருக்கிறது.

கடல் என்ற சொல்லும், அலை என்ற சொல்லும் தண்ணீர் என்ற இருப்புடைய சொல்லைச் சார்ந்து இயங்குகின்ற சொற்கள், அவற்றுக்கு உண்மையில் பொருள் இல்லை.

உயிர்களுக்கு உதாரணமாக அலையையும், கடவுளுக்கு உதாரணமாகக் கடலையும், மெய்ப்பொருளுக்கு உதாரணமாகத் தண்ணீரையும் எடுத்துக்கொள்ளலாம்.

கனவில், நம்முடைய மனமே பல்வேறு தோற்றங்களை உருவாக்குகிறது. அதுபோல, மாயை எல்லாவற்றையும் கற்பிக்கிறது.

இந்த ச்லோகத்தின் முக்கியமான கருத்து - ஜீவாத்மா பரமாத்மாதான் என்பதாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

வாழ்க்கையில் அனைத்திலும் உயர்ந்தது, தாழ்ந்தது என தர வேறுபாடு நடைமுறையில் இருப்பது உண்மைதான். ஆனால், தத்துவ நோக்கில், அனைத்திற்கும் மூலம் ஒன்றே, அதில் உயர்வு, தாழ்வு வேற்றுமைகள் இல்லை. அதுவே தூய உணர்வு. இறைவனுக்கு மூலப்பொருளாக இருப்பதும், உயிருக்கு மூலப்பொருளாக இருப்பதும் ஒரே தூய உணர்வுதான்.

தூய உணர்வு ஒன்றே. அது எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. க்ஷேத்ரஜ்ஞனாக என்னை அறிந்துகொள் என்று சொல்லும்பொழுது, நானே நீ, நீயே நான் என்ற உண்மையை பகவான் கூறுகிறார்.

நம் இருவருக்குமிடையே உள்ள வேற்றுமைகள் உண்மையல்ல. அவை வெறும் மாயத்தோற்றங்கள். உண்மையில் நீயும் நானும் ஒரே மெய்யுணர்வு தத்துவம்தான் என்கிறார் பகவான்.

ஜீவ-ப்ரஹ்ம-ஐக்ய-போதக-வாக்யம் மஹாவாக்யம் ।

எந்த ஒரு சொற்றொடர், கடவுளும் நானும் ஒன்று என்று உணர்த்துகிறதோ, அதற்கு மஹாவாக்யம் என்று பெயர்.

அறிபவன், அறியப்படுபொருள் என அனைத்திற்கும் மூலமாக இருப்பது ஒரே பொருள்தான். ஒரே மெய்ப்பொருளில், அறிபவன், அறியப்படுபொருள், அறிவு ஆகிய அனைத்தும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

பூமி சுற்றுவது என்பது நமக்கு அனுபவமாக இல்லை எனினும், அறிவுபூர்வமாக அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

பூமி இருந்த இடத்திலேயே இருப்பது என்பது அனுபவம், சுற்றிக் கொண்டிருக்கிறது என்பது அறிவு.

வேற்றுமை அனுபவங்கள் இருந்தாலும், அவை உண்மையல்ல. ஒன்றாக இருக்கின்ற மெய்ப்பொருள் ஒன்றே உண்மை. இதைப் புரிந்துகொள்வதே இந்த உபதேசத்தின் நோக்கம்.

எல்லா உடல்களிலும் எல்லா மனங்களிலும் எல்லா உயிர்களிலும் என்னை க்ஷேத்ரஜ்ஞனாக அறிந்துகொள்வாயாக! என்கிறார் பகவான்.

ப்ரஹ்மைவ ஸத்யம்।

ப்ரஹ்மம்தான், இந்த உடலுக்குள் இன்பம், துன்பம் முதலான எல்லாவற்றையும் அறிந்துகொண்டு இருக்கிறது. உண்மையில் இன்ப துன்பங்களைக் கடந்ததாகவே இந்தத் தூய உணர்வு தத்துவம் இருக்கிறது.

ஜீவாத்மாவின் யதார்த்த ஸ்வரூபமும், பரமாத்மாவின் யதார்த்த ஸ்வரூபமும் ஒன்றே. நாம் கடவுளை அடைய வேண்டிய அவசியமில்லை. கடவுள் உண்மையிலேயே நம் ஸ்வரூபமாகத்தான் இருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த எண்ணம்தான் நமக்கு மோக்ஷத்தைத் தருகிறது. இந்த ஞானமானது, முக்தியடைய வேண்டும் என்ற எண்ணத்தையே நீக்கிவிடுகிறது.

உடலைப் பற்றியும், உடலில் இருந்துகொண்டு, உடலை அறிபவனைப் பற்றியும் அறிந்துகொள்வதே ஞானமாகும்.

ஆத்ம-அநாத்ம-விவேகம்தான் உண்மையிலேயே பயனுள்ள ஞானம். பிற ஞானங்கள் நமக்குத் துன்பத்தைத் தரலாம். ஆனால், இந்த ஞானம், நமக்கு இன்பத்தைத்தான் உணர்த்தும்.

இந்த ஞானம்தான் துன்பத்தை, பந்தத்தை, ஸம்ஸாரத்தை அடியோடு நீக்கக்கூடியது. பகவான் சாஸ்த்ரரூபமாக இருக்கிறார்.

மம மதம் என்று பகவான் கூறுவது - இதுவே வேதங்கள், சாஸ்த்ரங்களின் அபிப்ராயம், ஸித்தாந்தம் என்பதைக் குறிக்கிறது.

तत्क्षेत्रं यच्च यादृक्च यद्विकारि यतश्च यत् ।

स च यो यत्प्रभावश्च तत्समासेन मे शृणु ।। १३ - ३ ।।

தத்க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஶ்ச யத் ।
ஸ ச யோ யத்ப்ரபாவஶ்ச தத்ஸமாஸேந மே ஶ்ருணு ।। 13 - 3 ।।

பதவுரை

தத் - அந்த, **க்ஷேத்ரம்** - க்ஷேத்ரம், **யத் ச** - எது என்றும், **யாத்ருக் ச** - எத்தகையது (அதன் ஸ்வரூபம் என்ன) என்றும், **யத்விகாரி**

Downloaded from **www.omkaravidya.com**

- எவ்விதமான மாறுபாடு உடையது என்றும், **யத: ச யத்** - எதிலிருந்து எது (எதன் கார்யம் எது) என்றும், **ஸ: ச** - அவன் (அந்த க்ஷேத்ரஜ்ஞன்,) **ய:** - யார், **யத்ப்ரபாவ: ச** - எத்தகைய பெருமை உடையவன், **தத்** - அதை, **ஸமாஸேந** - சுருக்கமாக, **மே** - என்னிடமிருந்து, **ஶ்ருணு** - கேள்.

பொழிப்புரை

அந்த க்ஷேத்ரம் எது? அதன் தன்மை என்ன? அது எவ்விதமான மாறுபாடுகளை உடையது? அது எதிலிருந்து தோன்றியுள்ளது? க்ஷேத்ரஜ்ஞன் என்பவன் யார்? அவனுடைய பெருமை என்ன? - இவற்றையெல்லாம் என்னிடமிருந்து சுருக்கமாகக் கேட்டு அறிந்துகொள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞனைப் பற்றி மேலும் தான் கூறப்போவதை, நாம் நன்கு கவனித்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, **ஶ்ருணு** - கேள் என்கிறார்.

அந்த க்ஷேத்ரம் எத்தகைய தன்மையை உடையது, அதன் தர்மங்கள் (இயல்புகள்) என்ன?

நெருப்பு என்றால் சுடும்தன்மை என்று இருப்பதுபோல், க்ஷேத்ரத்தின் இயல்புகள் எவை?

அதனுடைய மாற்றங்கள் யாவை?

Downloaded from **www.omkaravidya.com**

எத்தகைய காரணத்திலிருந்து இந்த க்ஷேத்ரம் தோன்றியிருக்கிறது?

க்ஷேத்ரஜ்ஞனுடைய சிறப்பு என்ன?

இவற்றையெல்லாம் பகவான் உபதேசிக்கப் போகிறார்.

ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक् ।

ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ।। १३ - ४ ।।

ருஷிபிர்பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக் ।
ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பிர்விநிஶ்சிதை: ।। 13 - 4 ।।

பதவுரை

ருஷிபி: - ரிஷிகளால், **பஹுதா** - பல்வேறு கோணங்களில் (பல்வேறு மந்த்ரங்களில்), **கீதம்** - பாடப்பட்டுள்ளது. **விவிதை:** - பலவிதமான, **சந்தோபி:** - வேத மந்த்ரங்களால், **ப்ருதக்** - தனித்தனியாகவும், **விநிஶ்சிதை:** - நன்கு நிச்சயிக்கப்பட்டவையும், **ஹேதுமத்பி:** - யுக்திகளுடன் கூடியவையும், **ப்ரஹ்மஸூத்ர-பதை: ச ஏவ** - பரம்பொருளைச் சுட்டிக் காட்டுபவையுமான சொற்களாலும், (**கீதம்** - கூறப்பட்டுள்ளது).

பொழிப்புரை

ரிஷிகளால் பல்வேறு கோணங்களில், பல்வேறு மந்த்ரங்களில் பாடப்பட்டுள்ளது. பலவிதமான வேத மந்த்ரங்களால், தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது. நன்கு நிச்சயிக்கப்பட்ட,

Downloaded from **www.omkaravidya.com**

யுக்திகளுடன் கூடிய, பரம்பொருளைச் சுட்டிக் காட்டுபவையுமான சொற்களாலும் கூறப்பட்டுள்ளது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில், க்ஷேத்ரத்தின் லக்ஷணத்தையும், க்ஷேத்ரஜ்ஞனின் லக்ஷணத்தையும் சாஸ்த்ர ப்ரமாணங்களின் வாயிலாகத்தான் நாம் தெரிந்துகொள்கிறோம் என்ற கருத்தைக் கூறுகிறார்.

சாஸ்த்ரங்களை உபதேசித்த ரிஷிகள் கூறியிருக்கிறார்கள். ரிக் வேதம் முதலான வேதங்களின் மந்த்ர, ப்ராஹ்மண பாகங்கள், அவற்றின் பல்வேறு கிளைகளில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

நித்ய, நைமித்திக, காம்ய, ப்ராயச்சித்த கர்ம விஷயங்கள், பூஜைக்குரிய பல்வேறு தெய்வத் திருவுருவங்கள், எந்தெந்த தேவதைகளுக்கு எப்படி ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்க வேண்டும் போன்ற விஷயங்கள் தனித்தனியே பிரித்து உபதேசிக்கப்பட்டுள்ளன.

ச்ரத்தாபக்தியுடன் நன்கு சாஸ்த்ரத்தை ஆராய்ந்து, சந்தேகத்திற்கு இடமில்லாமல், யுக்திபூர்வமாக, வேத வாக்யங்களின் பரமதாத்பர்யம் என்ன என்பதும் நன்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் ।

(தைத்திரீய உபநிஷதம் – ப்ரஹ்மாநந்தவல்லீ)

Downloaded from **www.omkaravidya.com**

முதலான வேதத்திலுள்ள ஸூத்ர வாக்யங்களையும் எடுத்துக்கொள்ளலாம்.

ப்ரஹ்மஸூத்ரம் என்ற சொல்லுக்கு, இறைவனைப் பற்றிக் கூறக்கூடிய மிகச் சுருக்கமான வாக்யங்கள் என்று பொருள்.

உபநிஷதங்களின் பரமதாத்பர்யம் என்ன என்பதை, வ்யாஸாசார்யர் ப்ரஹ்மஸூத்ரத்தில் யுக்திபூர்வமாக நிரூபணம் செய்திருக்கிறார். அதைத்தான் இரண்டாவது வரி கூறுகிறது.

சாஸ்த்ரத்தை அறிந்த பெரியோர்களால், யுக்திபூர்வமாக ப்ரஹ்மஸூத்ர பதங்களின் மூலம் இது உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ரிஷிகளாலும் வேதங்களாலும் ப்ரஹ்மஸூத்ர பதங்களாலும் இந்த க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ விவேகமானது உபதேசிக்கப்பட்டுள்ளது.

महाभूतान्यहङ्कारो बुद्धिरव्यक्तमेव च ।

इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रियगोचराः ।। १३ - ५ ।।

इच्छा द्वेषः सुखं दुःखं सङ्घातश्चेतना धृतिः ।

एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ।। १३ - ६ ।।

மஹாபூதான்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச ।
இந்த்ரியாணி தஶைகம் ச பஞ்ச சேந்த்ரியகோசரா: ।। 13 - 5 ।।
இச்சா த்வேஷ: ஸுகம் து:க்கம் ஸங்காதஶ்சேதநா த்ருதி: ।
ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேந ஸவிகாரமுதாஹ்ருதம் ।। 13 - 6 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

அவ்யக்தம் - மாயை, **புத்தி:** - (ஸமஷ்டி) புத்தி, **அஹங்கார:** - (ஸமஷ்டி) அஹங்காரம், **மஹாபூதானி** - ஐம்பெரும் ஸூக்ஷ்ம பூதங்கள், **தஶ-இந்த்ரியாணி ச ஏவ** - (ஐந்து செயற்கருவிகள், ஐந்து அறிவுக்கருவிகளாகிய) பத்து இந்த்ரியங்கள், **ஏகம் ச** - மனம் ஒன்று, **பஞ்ச ச** - மேலும் ஐந்து, **இந்த்ரிய-கோசரா:** - ஸ்தூல பஞ்சபூதங்கள், **இச்சா** - விருப்பு, **த்வேஷ:** - வெறுப்பு, **ஸுகம் -** இன்பம், **து:க்கம் -** துன்பம், **ஸங்காத:** - உடல்-மனக் கூட்டமைப்பு, **சேதநா** - சிதாபாஸன், **த்ருதி:** - உறுதி (என்று), **ஸவிகாரம்** - வேறுபாடுகளுடன் கூடியதாக, **ஏதத்** - இந்த, **க்ஷேத்ரம்** - க்ஷேத்ரம், **ஸமாஸேந** - சுருக்கமாக, **உதாஹ்ருதம்** - கூறப்படுகிறது.

பொழிப்புரை

மாயை, ஸமஷ்டி புத்தி, ஸமஷ்டி அஹங்காரம், ஐம்பெரும் ஸூக்ஷ்ம பூதங்கள், ஐந்து செயற்கருவிகள், ஐந்து அறிவுக்கருவிகளாகிய பத்து இந்த்ரியங்கள், ஒரு மனம், ஐந்து ஸ்தூல பஞ்சபூதங்கள், விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், உடல்-மனக் கூட்டமைப்பு, சிதாபாஸன், உறுதி என்று வேறுபாடுகளுடன் கூடியதாக, இந்த க்ஷேத்ரம் சுருக்கமாகக் கூறப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ஸ்தூல உடலை க்ஷேத்ரம் என்று கூறினார். மனதையும் நாம் சேர்த்துக்கொண்டோம். இந்த

Downloaded from **www.omkaravidya.com**

உடலுக்குள் எவற்றையெல்லாம் நாம் அறிகிறோமோ, அவை க்ஷேத்ரம் எனப்படும்.

உடல், மனம் முதலியவை நம்மால் அறியப்படக் கூடியவை. க்ஷேத்ரத்தைப் பற்றி மேலும் பின்வருமாறு கூறுகிறார் பகவான்.

அனைத்து மாறுபாடுகளிலும் வ்யாபித்திருக்கக்கூடிய ப்ரபஞ்ச விகாரங்கள், நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய தன்மாத்திரை ரூபமாகிய ஸூக்ஷ்ம பஞ்சமஹாபூதங்கள் ஆகியவை க்ஷேத்ரம் எனப்படும்.

இந்த்ரியங்களுக்குப் புலப்படுகின்ற ஸ்தூல பூதங்களும் க்ஷேத்ரத்தில் அடங்கும்.

ஐம்பூதங்களின் படைப்பிற்குக் காரணமான ஸமஷ்டி அஹங்காரமும் க்ஷேத்ரமாகும். சாஸ்த்ரங்களில் அதற்கு ஹிரண்யகர்பர் என்று பெயர்.

அஹங்கார: என்பது, இங்கு ஸமஷ்டி அந்தக்கரண அபிமானி சைதன்யம், அதாவது ஸமஷ்டி (எல்லோருடைய ஒட்டுமொத்த) மனதில் விளங்குகின்ற உணர்வு.

அஹங்காரத்திற்குக் காரணமான ஸமஷ்டி புத்தியும் ஹிரண்யகர்பரின் அம்சம்தான்.

பூமிராபோ5நலோவாயு: கம் மநோபுத்திரேவ ச ।

அஹங்கார இதீயம் மே பிந்நா: ப்ரக்ருதிரஷ்டதா ।। 7 – 4

Downloaded from **www.omkaravidya.com**

இவ்வாறு, இது பற்றி பகவான் ஏற்கெனவே ஏழாவது அத்யாயத்தில் கூறினார்.

அவ்யக்தம் என்பது இறைவனுடைய மாயாசக்தி.

கர்மேந்த்ரியங்கள் ஐந்து - கை, கால், பேசுகின்ற வாய், எருவாய், கருவாய். ஞாநேந்த்ரியங்கள் ஐந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி. இவற்றுடன் மனமும் சேர்க்கப்பட்டுள்ளது.

தஸ்தா சரந்தம்। என்று வேதத்திலும் ஒரு மந்த்ரம் காணப்படுகிறது.

இந்த்ரியங்களுக்குப் புலப்படுகின்ற விஷயங்களாக, ஸ்தூல பூதங்கள் இருக்கின்றன. நம்முடைய உடலிலும் ஸ்தூல, ஸூக்ஷ்மங்கள் இருக்கின்றன. புறத்தில் நாம் காண்கின்ற ப்ரபஞ்சத்திலும் ஸ்தூல, ஸூக்ஷ்மங்கள் இருக்கின்றன.

ஸ்தூல உடலிலுள்ள ஸூக்ஷ்மமான அம்சங்கள், ப்ரபஞ்சத்தின் ஸ்தூலத்திலுள்ள ஸூக்ஷ்மமான அம்சங்களை க்ரஹிக்கின்றன.

அவ்யக்தமாகிய மாயாசக்தியிலிருந்து ஸமஷ்டி புத்தியும், ஸமஷ்டி புத்தியிலிருந்து ஸமஷ்டி அஹங்காரமும், ஸமஷ்டி அஹங்காரத்திலிருந்து ஐந்து ஸூக்ஷ்ம பூதங்களும், அவற்றிலிருந்து ஐந்து ஞானேந்த்ரியங்கள், ஐந்து கர்மேந்த்ரியங்கள், மனம், இவற்றுக்கு விஷயமான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவையும் தோன்றுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

இச்சா - விருப்பம். இன்பத்திலும், இன்பம் தரும் பொருட்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் தோன்றும் விருப்பம்.

த்வேஷ: - துன்பம் தரக்கூடிய உறவுகள், பொருட்களிடத்திலுள்ள வெறுப்பு.

இவையெல்லாம் மனதில் இருக்கக்கூடிய உணர்ச்சிகள்.

ஸங்காத: என்றால், உடல்-மனக்கூட்டமைப்பு.

சேதநா என்றால் உடலில் வெளிப்படுகின்ற உணர்வு தத்துவம்.

த்ருதி: என்பது செயலை முடிக்கும் வரையுள்ள உறுதி.

இவையே க்ஷேத்ரம் எனப்படும்.

இது ஜீவனைக் காப்பாற்றுகிறது, ஜீவன் புண்ய பாபங்களைச் செய்வதற்கு உதவிபுரிகிறது. இது அழியக்கூடியது, மாறக்கூடியது.

பகவான், மாறக்கூடிய க்ஷேத்ரத்தைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறியுள்ளார்.

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।

आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ।। १३ - ७ ।।

அமாநித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ।
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்யமாத்ம-
விநிக்ரஹ: ।। 13 - 7 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

அமாநித்வம் - தற்பெருமை இன்மை, **அதம்பித்வம்** - டம்பமின்மை (எளிமை), **அஹிம்ஸா** - பிற உயிர்களைத் துன்புறுத்தாமை, **க்ஷாந்தி:** - பொறுமை, **ஆர்ஜவம்** - நேர்மை, **ஆசார்ய-உபாஸநம்** - குருவை இறைவனாகக் கருதி வழிபடுதல், **ஶௌசம்** - தூய்மை, **ஸ்தைர்யம்** - உறுதி, **ஆத்ம-விநிக்ரஹ:** - உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துதல்.

பொழிப்புரை

தற்பெருமை இன்மை, எளிமை, பிற உயிர்களைத் துன்புறுத்தாமை, பொறுமை, நேர்மை, குருவை இறைவனாகக் கருதி வழிபடுதல், தூய்மை, உறுதி, உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துதல்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ஞானத்தைப் பெறுவதற்கான தகுதிகளாகிய குணங்களைக் கூறத் தொடங்குகிறார்.

1. **அமாநித்வம்** - தற்பெருமை இன்மை.

தகுதி இருக்கிறதோ இல்லையோ, தன்னை உயர்வாக நினைத்துக்கொள்ளுதல், மறைமுகமாகப் பிறரைத் தாழ்வாக நினைத்தல் - இதற்கு **மாநித்வம்** என்று பெயர்.

பகவானுடைய படைப்பில், ஒவ்வொருவரும் அவரவருக்குரிய தன்மைகளுடன் இருக்கிறார்கள். நம்மிடம் ஏதாவது

Downloaded from **www.omkaravidya.com**

சிறப்பிருந்தால், அது பகவானுடையது என்று எண்ண வேண்டும்.

தற்பெருமையின்றி, பணிவாக இருக்க வேண்டும். பள்ளத்தில்தான் நீர் நிறையும். பணிவாக இருப்பவனிடத்தில்தான் ஆனந்தம் நிறையும். அறிவுபூர்வமான பணிவு வேண்டும். பயத்தினால் பணிவாக இருந்து பயனில்லை.

பணிவாக இருப்பதிலுள்ள நன்மைகளை உணர்ந்து, பணிவாக இருக்க வேண்டும். ஆண்டவனிடத்திலும் அறிஞர்களிடத்திலும் நாம் எப்பொழுதும் பணிவாக இருக்க வேண்டும்.

பணிவும், அன்பும் உள்ள இடத்தில் இன்பம் நிறைந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இது ஞானத்தை அடைவதற்குரிய தகுதி மட்டுமல்ல, ஞானிகளின் இயல்பும் கூட. ஞானத்தை அடைந்தவர்கள் எப்பொழுதும் பணிவாக, அன்பாக இருப்பார்கள்.

2. **அதம்பித்வம்** - எளிமை

தம்பித்வம் என்றால் ஆடம்பரமாகத் தன்னைக் காட்டிக்கொள்ளுதல், அதற்கு மாறானது எளிமை.

நடை, உடை, பாவனையாலும் பேச்சாலும் தனது மஹத்துவத்தைப் பெரிதாக ப்ரகடனப்படுத்திக்கொள்ளுதல்

Downloaded from **www.omkaravidya.com**

ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடை என்பதை உணர வேண்டும். எளிமையாக வாழ்க்கை நடத்தப் பழக வேண்டும்.

பணிவு, அன்பு, எளிமை ஆகியவை ஞானத்தைப் பெறுவதற்கும் ஞானத்தைப் பெற்றதற்கும் அடையாளமாக விளங்குகின்றன.

3. **அஹிம்ஸா** - பிறரைத் துன்புறுத்தாமை

மனதால், வாக்கால், உடலால், பிறர் மூலமாக என்று பலவிதங்களில் துன்புறுத்துவது பலரது இயல்பு.

சிறுகுழந்தைகள் ஒருவரை ஒருவர் கையால் அடித்துக் காயப்படுத்திக் கொள்வார்கள். சிறிது வளர்ந்தவர்கள், வார்த்தைகளால் கொல்வார்கள். உடலாலும் சொல்லாலும் துன்புறுத்த முடியாதபோது, மனதால் அவர்கள் நன்றாக இருக்கக்கூடாது என்று நினைப்பார்கள். இவை மூன்றையும் தவிர்க்க வேண்டும்.

இருப்பது ஒன்றே என்ற அத்வைத தத்துவ ஞானத்தை நாம் உணர்ந்துவிட்டால், மனதால்கூட யாருக்கும் துன்பம் தர எண்ண மாட்டோம்.

மனம், வாக்கு, காயங்களால் பிறரைத் துன்புறுத்தக்கூடாது. பிறரைத் துன்புறுத்தாமல் இருப்பதற்கு ஒரு பண்பு முக்கியமாகத் தேவைப்படுகிறது. அதுவே அடுத்துக் கூறப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

4. க்ஷாந்தி: - பொறுமை

வாழ்க்கையில் பல நிலைகளில் நமக்குப் பொறுமை தேவைப்படுகிறது. பிறர் நமக்குத் துன்பம் இழைத்தால், அதனைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் மிகுந்த பொறுமை தேவை. அவசரப்பட்டு எதையுமே அடைய முடியாது.

உயர்ந்த ஞானத்தைப் பெறுவதற்குப் பொறுமையாகப் படிக்க வேண்டும். முற்காலங்களில் காடுகளில், கடுமையான சூழ்நிலைகளில் தவ வாழ்க்கையுடன் கற்றார்கள்.

வருகின்ற நோய்களைப் பொறுத்துக்கொள்ளுதல், குளிர், வெப்பம், மழை, காற்று முதலியவற்றைத் தாங்கிக்கொள்ளுதல் என பொறுமைக்குப் பல பரிமாணங்கள் இருக்கின்றன.

கோபப்படாமல் இருத்தல், பிறருக்குத் துன்பம் தராமலிருத்தல் ஆகியவற்றைக் குறிக்கும் பொறுமை என்ற பண்பு மிக முக்கியமானது.

5. ஆர்ஜவம் - நேர்மை

மனதில் நினைப்பதற்கும் பேசுவதற்கும் செயல்படுவதற்கும் இடையே வேறுபாடு இல்லாத தன்மை. எண்ணம், சொல், செயல் நேர்க்கோட்டில் இருக்க வேண்டும்.

இது குறித்து, வேதத்தில் நிறைய ப்ரார்த்தனைகள் இருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

வாங் மே மநஸி ப்ரதிஷ்டிதா । மநோ மே வாசி ப்ரதிஷ்டிதம் ।

எனது வாக்கு மனதில் இருக்கட்டும். மனம் வாக்கில் இருக்கட்டும்.

கர்மண்யேகம் மநஸ்யேகம் வசஸ்யேகம் மஹாத்மநாம் ।
கர்மண்யந்யத் மநஸ்யந்யத் வசஸ்யந்யத் துராத்மநாம் ।।

மஹான்கள் நினைப்பது, சொல்வது, செய்வது எல்லாம் ஒன்றாக இருக்கும். தீயவர்கள் நினைப்பது, சொல்வது, செய்வது எல்லாம் வெவ்வேறாக இருக்கும்.

ஆர்ஜவம் உடையவனுக்கு அர்ஜுனன் என்று பெயர்.

6. **ஆசார்ய-உபாஸநம்** - குருவை இறைவனாகக் கருதி வழிபடுதல்

ஆதிசங்கரர், ஆசார்யர் என்ற சொல்லுக்கு, **மோக்ஷ-ஶாஸ்த்ர-உபதேஷ்டு:** - மோக்ஷ சாஸ்த்ரத்தை உபதேசிப்பவர் என்று பொருள் கூறுகிறார்.

பொதுவாக, **உப** என்றால் அருகில் என்றும், **ஆஸநம்** என்றால் அமர்தல் என்றும் அர்த்தம்.

ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தம் ஆசாரே ஸ்தாபயத்யபி ।
ஸ்வயம் ஆசரதே யஶ்ச தம் ஆசார்யம் ப்ரசக்ஷதே ।।

அறிவுபூர்வமான நல்லொழுக்க வாழ்க்கைமுறையில் வாழ்பவர், அதற்குரிய சாஸ்த்ரங்களின் பொருளை நன்கு

Downloaded from **www.omkaravidya.com**

கற்றுத் தருபவர், மாணவனை அறிவுபூர்வமான நல்லொழுக்க நெறியில் நடக்கும்படி செய்பவர் ஆசார்யர்.

இங்கு, இந்த இடத்தில், மோக்ஷத்தைத் தரக்கூடிய ஞானத்தை உபதேசிப்பவர் என்று பொருள்.

அத்வைத ஸித்தாந்த சாஸ்த்ரத்தை உபதேசிக்கின்ற குருவினிடத்தில் பரிபூர்ண ச்ரத்தை வைத்து, மனதாலும் வாக்காலும் உடலாலும், அவருக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும்.

குருநாதரின் அனுமதிபெற்று, அவருக்கு ஸேவை செய்ய வேண்டும்.

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்ஶிந: ।। 4 – 34 ।।

‘பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் அந்த உண்மையை ஆசார்யரிடமிருந்து அறிந்துகொள். உண்மையை உள்ளவாறு உணர்ந்த அவர்கள், உனக்குப் புரியும்வரை உபதேசிப்பார்கள்’ என்று பகவான் ஏற்கெனவே கூறியுள்ளார்.

குருவிடம் நம் பக்தியை வெளிப்படுத்துவதால், ஈச்வரனுக்கு பூஜை செய்வதால் ஏற்படும் புண்யத்தைக்காட்டிலும் பல மடங்கு புண்யம் கிடைக்கும் என்று குருகீதை முதலான நூல்கள் கூறுகின்றன.

குரு ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம: ।

என்று சொல்லி, குருவை நமஸ்காரம் செய்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

அறிவுபூர்வமான ஒழுக்கநெறியில் நின்று, மோக்ஷ சாஸ்த்ரத்தை உபதேசிக்கின்ற, தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற குருநாதரை இவ்வாறு வழிபடுகிறோம்.

அவரை ஈச்வரனாகக் கருதி வழிபடுவதால், ஞானம் கிடைப்பது மட்டுமல்ல, நிறைய புண்யமும் கிடைக்கும். குருவிடம் வெளிப்படுகின்ற அருங்குணங்களை நாமும் வளர்த்துக்கொள்ள முடியும்.

த்ருஷ்டபலன், அத்ருஷ்டபலன் ஆகிய இரண்டையும் கொடுக்கக்கூடிய சக்தி ஆசார்யராகிய குருநாதருக்கு இருக்கிறது. ஈச்வரன்தான் நமக்கு ஆசார்யரை அருள்கிறார்.

ஆசார்யரிடத்தில் பரிபூர்ண ச்ரத்தையுடன், பக்தியை வெளிப்படுத்துபவனுக்குத்தான் ஞானம் கிடைக்கும், ஞானமானது பலனையும் கொடுக்கும்.

ஸஹ வீர்யம் கரவாவஹை ।

'ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து அறிவின் ஆற்றலை, ஒழுக்கத்தின் ஆற்றலை வெளிப்படுத்துவோமாக' என்று வேதம் ப்ரார்த்தனை செய்கிறது.

7. ஶௌசம் - தூய்மை

எல்லாவற்றையும் தூய்மையாகவும் ஒழுங்குப்பாட்டுடனும் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய உடல், நாம் தங்கியிருக்கக்கூடிய இடம், நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலை ஆகியவை தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அரசாங்கத்தில் **ஸ்வச்ச பாரத்** என்றே இதற்கோர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பாரத தேசத்தில் நதிகள் தூய்மையாகக் காக்கப்பட வேண்டும். வீடுகளும் கோயில்களும் பொதுவிடங்களும் தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

தூய்மையாக இருப்பது என்பதை, பகவான் ஓர் உயர்ந்த பண்பாக, கீதையில் கூறுகிறார்.

புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும். (திருக்குறள் - 298)

என்பது வள்ளுவர் வாக்கு.

தூய்மை என்பது ஞானத்திற்கு மிக முக்கியமான ஒன்று. அசுத்தமாக இருப்பது என்பது தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நோய்களை உண்டுபண்ணும்.

நம் உடலில் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என எல்லா இடங்களிலிருந்தும் அழுக்கு வெளியேறுகிறது. உண்ட உணவும் செரித்து, கழிவு உடலிலிருந்து வெளியேறுகிறது. உடலை அவ்வப்போது தூய்மைப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

இறைவனை நினைத்து, உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கு, சாஸ்த்ரங்களில் நிறைய மந்த்ரங்கள் இருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

ம்ருத்ஜலாப்யாம் பாஹ்யஶௌசம் ।
ப்ரதிபக்ஷபாவநயா அந்த: ஶௌசம் ।

மண்ணாலும் நீராலும் புறத்தில் உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறோம். அகத்தில், மனதிலுள்ள தீய குணங்களை நீக்கி, அவற்றுக்கு மாறான நற்குணங்களை நினைப்பதன் மூலம் மனதைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அறிவு, எண்ணங்கள், சொற்கள், உடல், செயல்கள், உடை, சுற்றுப்புறம் - என அனைத்திலும் தூய்மை மிளிர வேண்டும். நாம் பயன்படுத்துகின்ற அனைத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வது என்பது ஒரு தெய்வீகப் பண்பு.

தூய்மை மனதிற்கு நல்ல குணங்களைக் கொடுக்கும். தூய்மைப்படுத்துதல் என்பது மந்த்ரங்களாலும் தந்த்ரங்களாலும் செய்யப்படும். உடல், மனம், பஞ்சபூதங்கள், உயிர் என எல்லாவற்றையும் தூய்மைப்படுத்திக்கொள்வதற்கு ஆகமங்களில் பஞ்சசுத்தி முறைகள் உபதேசிக்கப்பட்டுள்ளன.

'நாள்தோறும் புனிதமான சொற்களைக் கூறுகிறோம். தேவர்கள் எங்களைத் தூய்மைப்படுத்தட்டும், எங்களுடைய மனதாலும் அறிவாலும் நாங்கள் தூய்மையை அடைவோமாக!' என்ற பொருளுடைய வேத மந்த்ரங்கள் உள்ளன.

உடற்பயிற்சி செய்வதால் மனதிற்குப் புத்துணர்ச்சி ஏற்படுவதுபோல், தூய்மையினாலும் மனதிற்கு ஓர் அமைதி ஏற்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

8. **ஸ்தைர்யம்** - உறுதி, தர்ம மார்கத்தில் உறுதியாக நிலைத்து நிற்றல்.

வாழ்க்கையில் நாம் எதை அடைய விரும்புகிறோம், அதனை அடைவதற்குரிய வழி என்ன என்பதில் நமக்குக் குழப்பம் இருக்கக் கூடாது. அதற்குத்தான் சாஸ்த்ரங்கள், மஹான்கள் உபதேசித்து நமக்கு வழிகாட்டுகிறார்கள்.

அந்த வழியில் நாம் உறுதியாகத் தொடர்ந்து செல்ல வேண்டும், தளர்ந்துவிடக் கூடாது.

தளர்வறியா மனம் தரும் அபிராமி கடைக்கண்களே

என்று பாடினார் அபிராமி பட்டர்.

மனச்சோர்வுக்கு இடம் தரக் கூடாது. ஆன்மிக வாழ்வில் உறுதியாக நின்று, இந்த உடலிலிருந்து உயிர் பிரிவதற்குள் குறிக்கோளை அடைந்தே ஆக வேண்டும்.

பலர் தடை செய்வார்கள், ஏளனம் செய்வார்கள். பொருளிலும் இன்பத்திலும் மனதைச் செலுத்தாமல் தர்மமாக ஈச்வரபக்தியுடன் வாழ்ந்து, வாழ்வின் பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷத்தை உணர்ந்து, அதில் நிலைத்து நிற்றலே இங்கு **ஸ்தைர்யம்** என்று சொல்லப்படுகிறது.

உடலுக்கு நோய் வந்தாலோ, உறவினர்களை இழந்தாலோ, எதற்கும் மனம் கலங்காமல் தொடர்ந்து உறுதியுடன் இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உலகியல் வாழ்வில் நிலையானவற்றை ஒருபொழுதும் அடைந்துவிட முடியாது. உயிருக்கு நன்மை பயக்கின்ற விஷயங்களில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, நாம் நம்முடைய நிம்மதிக்காக உலகைச் சார்ந்திருக்கக் கூடாது.

பொருளாதார இழப்புகள், நோய்கள் போன்று வாழ்க்கையில் பல கஷ்டங்கள் வரத்தான் செய்யும். அவற்றை எதிர்கொள்வதற்காகத்தான் வாழ்க்கை நடத்துகிறோம் என்ற தெளிந்த அறிவுடன் இருக்க வேண்டும்.

இப்பொழுது நாம் நல்வழியில் சென்றாலும், முன்வினை காரணமாக, வாழ்க்கையில் சில ப்ரச்சினைகள் தோன்றக் கூடும். அப்பொழுது, நாம் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சியிலிருந்து நழுவுவதற்கு, அதனை ஒரு காரணமாகச் சொல்லித் தப்பித்துக் கொள்ளக்கூடாது.

என்றைக்கும் நாம் நம்முடைய அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். உடல்நிலை சரியாக இல்லாவிட்டாலும் மானஸீகமாகவாவது தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும். அதற்குத்தான் **ஸ்தைர்யம்** என்று பெயர்.

யுதிஷ்டிர: என்ற சொல்லுக்கே, யுத்தத்தில் ஸ்திரமாக இருப்பவன் என்று பொருள்.

அமுதம் கிடைக்கும்வரை, தேவர்களும் அஸுரர்களும் கடைகின்ற முயற்சியை நிறுத்தவில்லை. ஹாலாஹல விஷம் முதலிய துன்பங்கள் வந்தாலும் முயற்சியை விடாமல் இருந்ததால் அமுதத்தைப் பெற்றார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

சாதாரண மனிதன், ஒரு செயலைத் தொடங்கினால் கஷ்டம் வரும் என்றெண்ணித் தொடங்கவே மாட்டான். நடுத்தரமானவன், ஆரம்பித்து, கஷ்டம் வந்தால் விட்டுவிடுவான். ஆனால் உயர்ந்த மனிதன்தான் குறிக்கோளை அடையும்வரை சோர்ந்தே போகாமல், தளராமல் தொடர்ந்து முயற்சி செய்து வெற்றியடைகிறான்.

9. **ஆத்ம-விநிக்ரஹ:** - உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துதல்

ஆத்ம என்ற சொல்லுக்கு, இங்கு உடல், மனம், இந்த்ரியங்கள் என்று பொருள். உடல், மனம், இந்த்ரியங்களைக் காப்பாற்றுவது நம் பொறுப்பு. அவை கேட்பதையெல்லாம் கொடுத்து, அவற்றைக் கெடுத்துவிடக் கூடாது.

எண்ணங்கள், சொற்கள், செயல்கள் எல்லாவற்றையும் பாதுகாக்க வேண்டும். மனதில் தோன்றியவற்றையெல்லாம் செயல்படுத்தும் முயற்சியில் இறங்கக் கூடாது. வாயில் வந்தவற்றையெல்லாம் பேசக்கூடாது. இவை தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் தீங்கை விளைவிக்கும்.

மனிதர்களாகிய நாம் கூடி வாழும் இயல்பை உடையவர்கள். நம்முடைய மனம் பரந்து விரிய வேண்டும். அதன்பொருட்டு நம் உடல், மனம், இந்த்ரியங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

உடலையும் உள்ளத்தையும் நெறிப்படுத்த சிறுவயதிலிருந்தே பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஜப்பான் போன்ற

Downloaded from **www.omkaravidya.com**

நாடுகளில் குழந்தைகளுக்கு எவ்விதம் பயிற்சி கொடுக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். நம் தேசத்திலும் இவை இருந்தன.

ஆனால் பொருள் மோகம், பதவி மோகம் ஆகியவற்றால் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ, அதை விட்டுவிட்டு வேறு எதையோ தெரிந்துகொண்டு அதனால் நன்மை ஏற்படும் என்று நினைக்கிறார்கள்.

இது போன்ற உபதேசங்களின் முக்கியத்துவத்தைப் பலர் புரிந்துகொள்ள மாட்டார்கள். இருந்தாலும், சாஸ்த்ரம், ஒவ்வொருவரும் தன்னைக் கட்டி ஆள வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கூறுகிறது.

கடவுளைச் சார்ந்திருந்து, தர்மத்தைக் கடைப்பிடிப்பது ஒன்றே இதற்கு வழி. இறைவன், சாஸ்த்ரங்களில் கூறியுள்ளவற்றைத்தான் மஹான்கள் நமக்கு எடுத்துக் கூறுகிறார்கள். அவற்றைக் கேட்டு, நாம் உடலையும் மனதையும் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.

தஸ்மாத் த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப । 3 – 41

உடல், மனம் இந்த்ரியங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து, பகவான் ஏற்கெனவே மூன்றாவது அத்யாயத்தில் கூறினார்.

इन्द्रियार्थेषु वैराग्यमनहङ्कार एव च ।

जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ।। १३ - ८ ।।

Downloaded from **www.omkaravidya.com**

இந்த்ரியார்த்தேஷு வைராக்யமநஹங்கார ஏவ ச ।
ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:க்கதோஷாநுதர்ஶநம் ।। 13 - 8 ।।

பதவுரை

இந்த்ரிய-அர்த்தேஷு - இந்த்ரிய விஷயங்களில், **வைராக்யம்** - பற்றின்மை (விருப்பு வெறுப்பு அற்ற தன்மை), **அநஹங்கார: ஏவ ச** - தான் உடல் என்ற எண்ணமின்மை, **ஜந்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி-து:க்க-தோஷ-அநுதர்ஶநம்** - பிறப்புத் துன்பம், இறப்புத் துன்பம், முதுமைத் துன்பம், நோய்த் துன்பம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை நாள்தோறும் எண்ணிப் பார்த்தல்.

பொழிப்புரை

இந்திரிய விஷயங்களில் பற்றின்மை, அதாவது விருப்பு வெறுப்பு அற்ற தன்மை, தான் உடல் என்ற எண்ணமில்லாமல் இருத்தல், பிறப்புத் துன்பம், இறப்புத் துன்பம், முதுமைத் துன்பம், நோய்த் துன்பம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை நாள்தோறும் எண்ணிப் பார்த்தல்.

விளக்கவுரை

10. **இந்த்ரிய-அர்த்தேஷு வைராக்யம்** - இந்த்ரிய விஷயங்களில் பற்றின்மை (விருப்பு வெறுப்பு அற்ற தன்மை).

Downloaded from **www.omkaravidya.com**

இந்த்ரியங்கள் என்றால் பொறிகள், அறிவுக்கருவிகள். இந்த்ரிய-அர்த்தம் என்றால் பொறிகளுக்குப் புலப்படுகின்ற புலனின்பப் பொருட்கள்.

மெய் (தோல்), வாய் (சுவைக்கின்ற நாக்கு), கண், மூக்கு, செவி ஆகியவை ஐம்பொறிகள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவை அவற்றால் அனுபவிக்கப்படுபவை.

சுவை நாக்காலும், ஒளி கண்ணாலும், ஊறு தோலாலும், ஓசை காதாலும், நாற்றம் மூக்காலும் நுகரப்படுகின்றன.

இந்த்ரிய விஷயங்களில் பற்றற்ற தன்மை வேண்டும் என்கிறார் பகவான். இந்த உலகிலுள்ள எந்தப் பொருளும் நமக்கு இன்பம் தருவதில்லை என்பதை பகவான் கீதையின் பலவிடங்களில் கூறி வருகிறார்.

யே ஹி ஸம்ஸ்பர்ஶஜாபோகா: து:க்கயோநய ஏவ தே ।
ஆத்யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே புத: ।। 5 - 22 ।।

இந்த உலக இன்பங்கள் அனைத்தும் துன்பத்திற்குத்தான் காரணமாகின்றன. அந்த இன்பங்களுக்குத் தொடக்கமும் முடிவும் இருக்கின்றன. அறிவாளி அந்த இன்பங்களில் மயங்குவதில்லை என்று முன்பு கூறினார்.

இல்லறத்தில் இருப்பவன், இந்த்ரிய விஷயங்களை முறையாக அனுபவிக்க வேண்டும். மோக்ஷத்தை விரும்புபவன், வைராக்யத்துடன் இவற்றை விட்டுவிட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

வைராக்யத்திற்குக் காரணம் நித்ய-அநித்ய-வஸ்து-விவேகம் (நிலையானது, நிலையற்றது குறித்தப் பகுத்தறிவு), விவேகத்திற்குக் காரணம், நிஷ்காம-தர்மாநுஷ்டானம் (கர்மயோகம்).

நிஷ்காம-தர்மானுஷ்டானத்திற்குக் காரணம், ஸகாம-தர்மானுஷ்டானம். அதற்குக் காரணம், சாஸ்த்ரத்தில் உள்ள ச்ரத்தை. பகவான் மனிதப் பிறவியில் கொடுத்துள்ள அறிவை, சரியான முறையில் பயன்படுத்துவதே ச்ரத்தைக்குக் காரணம்.

இந்த்ரியங்கள், இந்த்ரிய விஷயங்களில் சேர்வதால், இன்ப-துன்பங்கள் ஏற்படுகின்றன.

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. (திருக்குறள் - 27)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

நாம் அனுபவிக்கின்ற புலனின்பங்களை ஆராய்ந்து, அதனால் நமக்குத் துன்பம் ஏற்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, நாம் அனுபவிக்கின்ற இன்பங்களில் உள்ள துன்பக் கலப்பை உணர்ந்து, அந்தத் துன்பக் கலப்புடன் இருக்கின்ற இன்பத்தை விடுவதற்குச் சிறிது சிறிதாகப் பழக வேண்டும்.

அவ்வாறு புலனின்பங்களை விடுவதால், அறிவாலும் நற்பண்புகளாலும் பேரானந்தத்தை உணர்கின்ற ஆற்றல் உள்ளத்திற்கு வந்துவிடும். இன்பத்தின்பொருட்டு நாம் எந்தப்

Downloaded from **www.omkaravidya.com**

பொருளையோ, மனிதரையோ, சூழ்நிலையையோ சார்ந்திருப்பதிலிருந்து விடுபட்டு விடுவோம்.

நம்மிடத்தில் பேரானந்தத்தை உணர வேண்டுமானால், நாம் இந்தப் புலனின்பங்களில் உள்ள பற்றை விட்டுத்தான் ஆக வேண்டும்.

புலனின்பங்கள் நிலையான இன்பத்தைத் தராது என்று உணர்ந்து, அதில் நாட்டமில்லாமல் இருக்க வேண்டும். அவற்றில் விருப்போ வெறுப்போ கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இறைவன் அருளாலும், நல்லோர் தொடர்பாலும், நம்முடைய அறிவுசார்ந்த முயற்சிகளாலும் புலனின்பப் பொருட்களில் பற்றற்ற மனப்பான்மையை அடைய வேண்டும்.

11. **அநஹங்கார:** - தான் உடல் என்ற எண்ணமின்மை

உடலை நான் என்று எண்ணுகின்ற எண்ணத்திற்கு **அஹங்கார:** என்று பெயர். உடலுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. உடலை ஒரு கருவியாக மட்டுமே கையாள வேண்டும்.

அஹம் கர்த்தா அஹங்கார:। என்று தத்வபோதம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. நான் செயல்புரிபவன் என்ற எண்ணமே அஹங்காரம் என்று அங்கு சொல்லப்பட்டது. ஆனால், அதைக்காட்டிலும் **அஹங்கார:** என்ற சொல்லுக்கு, தேஹாத்மபுத்தி (தன்னை உடலாகக் கருதுகின்ற எண்ணம்) என்ற அர்த்தத்தைத்தான் இங்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

மனதுடன் கூடிய உயிராகிய எனக்கு, தற்காலிகமாக இந்த உடல் என்ற கருவி கொடுக்கப்பட்டுள்ளது.

கருவியையே தான் என்று நினைத்து, அதனை அலங்கரித்துத் தன்னை உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. கருவியை கர்த்தாவாக ஆக்கக்கூடாது.

Money is a good servant, but a bad master.

பணம் என்பது சிறந்த கருவி, ஆனால் மோசமான தலைவன் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். பணத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்தால், அது நம்மைப் பாவக்குழியில் தள்ளிவிடும்.

பணம் என்பது நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டதாகும். பணத்தைக்கொண்டு, உடலின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

ஆனால், பணத்தைப் பயன்படுத்தி, இந்த உடலுக்கு அளவுக்கு மீறிப் புலனின்பங்களைக் கொடுக்கக் கூடாது. அதன்பொருட்டு சமூகத்தைச் சுரண்டக் கூடாது. பொருள், கட்டிடங்கள் – என எதுவாக இருந்தாலும், சமூகத்திற்கு நன்மை செய்வதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

தானும் நல்ல காரியங்களைச் செய்யாமல், நல்ல காரியங்களைச் செய்பவர்களை இகழ்ந்துகொண்டு, பயனற்ற சொற்களைப் பேசிக்கொண்டு வாழ்நாட்களை வீணடித்தல் மாபெரும் பாபமாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலை ஆரோக்யமாகப் பராமரிக்க வேண்டும். தேவைப்படுகின்ற அளவான உணவு, உறக்கம், உழைப்பு, உடற்பயிற்சி ஆகியவற்றைக் கொடுத்து உடலைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

ஆனால், அதே சமயத்தில் நம்மை உடலாகவே நினைத்துக் கொண்டுவிடக் கூடாது.

பரோபகாரார்த்தம் இதம் ஶரீரம்।

என்று பெரியோர்கள் கூறுவர். இந்த உடலே, உலகிற்கு உபகாரம் செய்வதற்குத்தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்।

தர்மத்தைக் கடைப்பிடிப்பதற்கு முதல் ஸாதனம் (கருவி) இந்த உடலே ஆகும். சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய முடியும். உடலை வைத்துத்தான் நாம் புண்யத்தை ஸம்பாதிக்க முடியும்.

இறைவனை வழிபடுவதற்காகவும், அறச்செயல்களைச் செய்வதற்காகவும் மோக்ஷத்தை உணர்வதற்காகவும் பகவான் கொடுத்துள்ள ஓர் அற்புதமான வாய்ப்பு இந்த மனித உடல்.

அநித்யமஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் । 9 - 33

‘நிலையில்லாத, இன்பமில்லாத இந்த உடலைப் பெற்றுள்ள நீ, நிலையான, இன்பமே வடிவான என்னை நினைத்து வழிபடுவாயாக’ என்று பகவான் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட ஈசனை நாடுதல்

என்பது ஆன்றோர் வாக்கு.

உடலை நான் என்று கருதாத எண்ணம், நம்மிடத்தில் இருக்க வேண்டும். அதே நேரத்தில், உடல் ஒரு கருவி என்ற எண்ணமும் இருக்க வேண்டும்.

இந்த உடல் எப்பொழுது வேண்டுமானாலும் நம்மிடமிருந்து பிரிக்கப்படலாம் என்ற விவேகமும் இருக்க வேண்டும்.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. (திருக்குறள் - 340)

இந்த உடலில் ஒரு மூலையில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற இந்த உயிருக்கு, இன்னும் நிலையான வீடு கிடைக்கவில்லைபோலும்! என்கிறார் திருவள்ளுவர்.

12. **ஜந்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி-துக்க-தோஷ-அநுதர்ஶநம்** - பிறப்புத் துன்பம், இறப்புத் துன்பம், முதுமைத் துன்பம், நோய்த் துன்பம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை நாள்தோறும் எண்ணிப் பார்த்தல்.

வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துன்பங்களைப் பற்றி நன்கு உணர்ந்தால்தான், உடல்பற்று, உலகப்பற்று ஆகியவற்றிலிருந்து விடுபட முடியும்.

இந்த உடல் பிறக்கும்போது ஒரு துன்பம் இருக்கிறது. எல்லாவற்றிலும் துன்பம் இருக்கிறது. துன்பம் என்பதே,

Downloaded from **www.omkaravidya.com**

வாழ்க்கையில் ஒரு குறைதான். துன்பத்தை அறிவுபூர்வமாக ஏற்றுக்கொண்டால், அது இன்பமாகிவிடும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். (திருக்குறள் - 628)

என்று திருவள்ளுவர் கூறுவது ஓர் உயர்ந்த, பக்குவப்பட்ட மனநிலையாகும்.

தாயின் வயிற்றில் இருக்கும்பொழுதும், பிறப்பின்பொழுதும் தாய்க்கும் குழந்தைக்கும் துன்பம் ஏற்படுகிறது. அதனை எண்ணிப் பார்க்க வேண்டும். பிறப்பெடுக்காத நிலையை அடைய முயற்சிக்க வேண்டும் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று, இறக்கும்போதும் துன்பம் இருக்கிறது. உடலிலிருந்து உயிர் பிரிவது பெரிய துன்பம்.

பிறக்கும்போது நாம் அனுபவித்தத் துன்பமானது, நல்ல வேளை நமக்கு மறந்துவிட்டது. இறக்கும்போதும் அதேபோன்று ஒரு துன்பம் ஏற்படும், அது இப்பொழுது நமக்குத் தெரியாது.

பிறப்பு, இறப்பு ஆகிய குறைபாடுகள், இந்த உடல் எடுப்பதுடன் தொடர்புடையவை.

உடலை நான் என்று கருதக்கூடாது என்று கூறிய பகவான், உடலுடன் நமக்குள்ள தொடர்பால் என்னவெல்லாம் துன்பங்கள் ஏற்படுகின்றன என்பதைப் புரிய வைக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

மேலும், முதுமைத் துன்பம் என்ற ஒன்று இருக்கிறது. வயதான காலத்தில் இந்த உடலில் வாழவும் முடியாது, இறக்கவும் முடியாது. குறிப்பாக, முதுமையில் உடலில் பல்வேறு நோய்களுடன் நாம் போராட வேண்டியிருக்கும்.

அறிவுபூர்வமான பக்குவத்துடன் இருப்பவர்கள், உணவுக் கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலிய பல்வேறு பயிற்சிகளால் உடலை நன்கு வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் எப்படி வாழ்ந்தாலும், முதுமைத் துன்பத்தைத் தவிர்க்க முடியாது.

துன்பத்தின் தன்மையை அவ்வப்போது நினைத்துப் பார்த்தல் என்பதையே பகவான் ஒரு நற்பண்பாகக் கூறுகிறார். கீதையின் முதல் அத்யாயமே **விஷாதயோக:** - துயர வெளிப்பாடு என்ற தலைப்பில் அமைந்துள்ளது.

அர்ஜுனனிடத்தில் உடல் நடுக்கம், கண்களில் நீர் வழிதல் முதலான துன்ப வெளிப்பாடுகளை அங்கு பார்த்தோம். அர்ஜுனன் மட்டுமல்ல, மனித உடல்களில் வாழ்கின்ற அனைத்து உயிர்களுமே துன்பத்தை அனுபவிக்கின்றன.

உடல் வாழ்க்கையில் நமக்கு ஏற்படக்கூடிய துன்பத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். உடலால் நமக்குத் துன்பம் வருகிறது என்பதைப் புரிந்துகொண்டால்தான் உடல்பற்றை விட முடியும்.

யத்ர யத்ர ஶரீரம் தத்ர தத்ர து:க்கம் ।

என்று பெரியோர்கள் கூறுவர். உடல் உள்ள இடத்தில், துன்பம் நிச்சயம்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸுகது:க்க போக-ஆயதநம்। இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற இருப்பிடமாகத்தான் இந்த உடலே இருக்கிறது என்றும், **ஸுகது:க்க-போக-ஸாதநம்।** மனம் என்ற கருவிதான் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது என்றும் தத்வ போதத்தில் கூறப்பட்டுள்ளது.

பிறப்புத் துன்பம், இறப்புத் துன்பம், முதுமைத் துன்பம் ஆகியவற்றுடன் வாழ்க்கையில் நோய்த் துன்பமும் அவ்வப்போது வருகிறது.

உற்சாகமாகச் செயல்பட முடியாமல், நோய்கள் நம்மை முடக்கிப்போடுகின்றன. உடல் ஒத்துழைப்பதில்லை. மனோபலம் இருந்தால், உடலின் ச்ரமங்கள் தெரிவதில்லை என்பதும் உண்மைதான்.

நம்முடைய தவறான நடைமுறைகள், வாழ்க்கைமுறைகளால் உடலுக்கு நோய்கள் ஏற்படுகின்றன. அதாவது, உணவுக்கட்டுப்பாடு இல்லாமல், உடற்பயிற்சிகள் செய்யாமல் இருப்பதால், உடலுக்கு நோய்கள் ஏற்படுகின்றன.

உடலை நன்கு பராமரித்தாலும், வினைப்பயன்கள் காரணமாக, எதிர்பாராத நோய்கள் வரத்தான் செய்யும்.

ஆக, இந்த உடலில் உள்ள குறைபாடுகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உடலை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். அதே சமயம், உடலில் அபிமானம் வைத்து, உடலைக் குறித்துப் பெருமைபடக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

ஆத்மஞானம் அல்லது ப்ரஹ்மஞானம், உடல்பற்றிலிருந்து நம்மை விடுவிக்கும். ஞானத்திற்கு மிக முக்கியமான குணங்களாக இவை இருப்பதால், இந்த நற்பண்புகள் இங்கு உபதேசிக்கப்படுகின்றன.

असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।

नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ।। १३ - ९ ।।

असக்திரநபிஷ்வங்க: புத்ரதாரக்ருஹாதிஷு ।
நித்யம் ச ஸமசித்ததத்வமிஷ்டாநிஷ்டோபபத்திஷு ।। 13 - 9 ।।

பதவுரை

அஸக்தி: - (உடல் முதலானவற்றில்) பற்றில்லாமல் இருத்தல், **புத்ர-தார-க்ருஹ-ஆதிஷு** - மக்கள், மனைவி, வீடு முதலியவற்றில், **அநபிஷ்வங்க: -** பற்றில்லாமல் இருத்தல், **இஷ்ட-அநிஷ்ட-உபபத்திஷு** - விரும்பியது, விரும்பாதது ஆகியவற்றை அடையும்போது, **நித்யம் ச** - என்றுமே, **ஸமசித்ததத்வம்** - விருப்பு வெறுப்பற்ற ஸமமான மனநிலை கொண்டவனாக இருத்தல்.

பொழிப்புரை

உடல் முதலானவற்றில் பற்றில்லாமல் இருத்தல், மக்கள், மனைவி, வீடு முதலியவற்றில் பற்றில்லாமல் இருத்தல், விரும்பியது, விரும்பாதது இவற்றை அடையும்போது என்றுமே, விருப்பு வெறுப்பற்ற ஸமமான மனநிலை கொண்டவனாக இருத்தல்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

13. **அஸக்தி:** - பற்றில்லாமல் இருத்தல்

இந்த உடலில் ஏற்படுகின்ற துன்பங்களை நினைத்துப் பார்க்க வேண்டும் என்று பகவான் கூறினார். துன்பங்கள் என்ற குறைபாடு உடையது இந்த உடல். இதனை மெய்ப்பொருளை உணர்வதற்குப் பயன்படுத்த வேண்டும்.

உடல் துன்பங்களுக்கு இருப்பிடமானது, நிலையில்லாதது என்பதை உணர்ந்து, அதில் பற்று வைக்காமல் இருக்க வேண்டும்.

புலனின்பங்களில் பற்றின்மை வேண்டும் என்று கூறிய பகவான், உடலில் உள்ள குறைபாடுகளைக் கூறினார். இந்த உடலைக் கருவியாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர, உடலில் பற்று வைக்கக் கூடாது.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான்என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே

என்பது திருமூலர் வாக்கு.

உடலை வெறுக்கவும் கூடாது, உடல்மீது பற்று வைக்கவும் கூடாது. உடை வேறு, உடல் வேறு என்ற அறிவு நமக்கு இருப்பதுபோல், உடல் வேறு, நான் வேறு என்ற அறிவும் நமக்கு இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த உடலை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். இந்த உடலில் பற்றுவைத்து, புலனின்ப நாட்டங்களில் ஈடுபடக்கூடாது.

உடலின்மீது பொறுப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும். அதே நேரம், உடலுக்கு எந்த நேரத்தில் எந்தத் துன்பம் ஏற்பட்டாலும், அதனைப் பொறுத்துக்கொள்கின்ற மனோபாவனையும் நமக்குத் தேவை.

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பது திருமூலர் வாக்கு.

14. புத்ர-தார-க்ருஹ-ஆதிஷு அநபிஷ்வங்க: - மக்கள், மனைவி, வீடு முதலியவற்றில் பற்றில்லாமல் இருத்தல்.

ஆன்மிக வாழ்க்கையில் முன்னேற விரும்புபவன், அமைதியான ஆனந்தத்தை உணர விரும்புபவன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்றையும் விட்டுவிட வேண்டும்.

நிலம், தோட்டம் போன்ற சொத்துகளில் பற்று வைத்து, பலர் அதன்மயமாகவே ஆகிவிடுகின்றனர்.

இந்த உலகிற்கு வந்திருக்கிறோம், இந்த உலக உறவுகள் தற்காலிகமானவை என்பதை நாம் மறந்து, உறவினர்மயமாகவே ஆகிவிடக் கூடாது. அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கஷ்டம் வந்தால், அவர்கள் மயமாகி, நமக்கே வந்துவிட்டதுபோல் துடிக்கக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

இவையெல்லாம் ஒரு கோணத்தில் பார்த்தால் சரிதான். ஆனால் மற்றொரு கோணத்தில், இதனை நன்றாகப் புரிந்துகொண்டு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் மயமாகி, கவலைக்கு ஆளாகக்கூடாது.

குடும்பத்தினரிடம் அதிகமாகப் பற்றுவைக்கக் கூடாது. அவர்களை விட்டு, எப்பொழுது வேண்டுமானாலும் கிளம்பத் தயாராக இருக்க வேண்டும்.

எல்லோருக்கும் செய்ய வேண்டியதைப் பொறுப்பாகச் செய்ய வேண்டும். அவர்கள் வளர்ந்த பிறகு, அவர்களை நாம் தொந்தரவு செய்யக்கூடாது.

கடவுளைச் சார்ந்திருந்து, ஸத்விஷயங்களைப் படித்து, வாழ்க்கையை நிறைவு செய்வதற்கு நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

பற்று வைப்பதும் முக்கியம், பற்றை விடுவதும் முக்கியம். பற்று இருப்பதால்தான், பலரால் பொறுப்புடன் செயல்பட முடிகிறது. ஆனால் ஒரு காலத்தில் பற்றை விடத்தான் வேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் நுழைந்து, தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு, அதில் பற்றை விட வேண்டும்.

வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் மனதளவில் துறவு மனப்பான்மையுடன் இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலில் பற்றற்ற தன்மை, உறவுகளிடத்தில் பற்றற்ற தன்மை, நண்பர்களிடத்தில் பற்றற்ற தன்மை வேண்டும்.

எல்லோரிடத்திலும் அன்பாக இருக்க வேண்டும், பொறுப்பாக உதவ வேண்டும், அவர்களுடைய மேன்மைக்காக ப்ரார்த்தனை செய்ய வேண்டும். அதே சமயம், இந்த வாழ்க்கையின் உண்மையைப் புரிந்துகொண்டு, பற்றற்று இருக்க வேண்டும்.

15. **இஷ்ட-அநிஷ்ட-உபபத்திஷு நித்யம் ச ஸமசித்ததத்வம்** - விரும்பியது, விரும்பாதது இவற்றை அடையும்போது, என்றுமே ஸமமான சித்தம் கொண்டவனாக இருத்தல்.

ஸர்வத்ர த்வம் பவ ஸமசித்த: ।

என்று ஆதிசங்கரர் பஜ கோவிந்தத்தில் கூறுகிறார்.

விருப்பு வெறுப்பில்லாத மனநிலைக்குப் பெயர்தான் ஸமசித்ததத்வம்.

இன்பத்திலும் இன்பத்தைக் கொடுக்கின்ற பொருட்கள், உறவுகள், சூழ்நிலைகளிலும் விருப்பம் இருக்கிறது. துன்பத்திலும் துன்பத்தைக் கொடுக்கின்றவற்றிலும் வெறுப்பு இருக்கிறது.

ஆக, எல்லாவற்றிலும் பிடித்தது, பிடிக்காதது என்று இருக்கின்றது. பொதுவாக, எது நல்லதோ, அது நமக்குப் பிடிக்காது. எது கெட்டதோ, அது நமக்குப் பிடிக்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

உதாரணத்திற்கு உடற்பயிற்சி செய்ய பிடிக்காது, சாப்பிடப் பிடிக்கும்.

வாழ்க்கையில் தெளிவான குறிக்கோளை நோக்கிப் பயணிக்கின்ற ஒருவனுக்கு, வாழ்க்கையில் விரும்பத் தக்கது, வெறுக்கத் தக்கது என்பது வரும். விருப்பும் வெறுப்பும் மனதின் அமைதியைக் குலைக்கும்.

விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளே சஞ்சலத்திற்குக் காரணமாகின்றன. ஆனால், விருப்பு வெறுப்புகளை அறிவுபூர்வமாகச் சற்று ஆராய்ந்து பார்த்தால், மனம் அமைதியாகிவிடும்.

இன்பத்தை விரும்புதல், துன்பத்தை வெறுத்தல் என்பதிலிருந்து விலகுவதற்கு, மனதிற்குப் பயிற்சியளிக்க வேண்டும். அதுவே ஸமசித்தம் எனப்படும்.

ஸமத்திற்கு எதிர்ப்பதம் விஷமம், அதுவே சஞ்சலம்.

எப்பொழுதும் ஸமசித்தத்துடன் இருக்க வேண்டுமானால், இறைவனிடத்தில் பக்தியுடன் இருந்து, அறவாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். கர்மயோகத்தைத்தான் பகவான் இப்படிக் குறிப்பிடுகிறார்.

நம் முன்வினைப் பயன்களால் வாழ்க்கையில் இன்பம் தரும், அதனைக் கண்டு துள்ளிக் குதிக்கக் கூடாது. துன்பம் வந்தால் துவண்டுபோகக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

நாள்தோறும் நாம் செய்ய வேண்டிய செயல்களைச் செய்வதற்கு, மனதிற்குப் பயற்சியளிக்க வேண்டும். அதற்கு இறைவனிடத்தில் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

வாழ்க்கையில் இன்ப துன்பங்களால் நாம் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து விலகாமல், மனதை ஸமநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।

विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ।। १३ - १० ।।

மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ ।
விவிக்ததேஶஸேவித்வமரதிர்ஜநஸம்ஸதி ।। 13 - 10 ।।

பதவுரை

அநந்யயோகேந - என்னையே முற்றிலும் சார்ந்திருப்பதன் மூலம், **மயி ச** - என்னிடத்தில், **அவ்யபிசாரிணீ** - நிலைபிறழாத, மாறாத, **பக்தி:** - தூய பேரன்பு, **விவிக்த-தேஶ-ஸேவித்வம்** - தனித்த இடத்தை நாடல், **ஜநஸம்ஸதி** - மக்கள் கூட்டத்தில், **அரதி:** - விருப்பமின்மை.

பொழிப்புரை

என்னையே முற்றிலும் சார்ந்திருப்பதன் மூலம், என்னிடத்தில் நிலைபிறழாத, மாறாத, தூய பேரன்பு, தனித்த இடத்தை நாடுதல், மக்கள் கூட்டத்தில் விருப்பமின்மை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

16. அவ்யபிசாரிணீ பக்தி:

பகவானிடத்தில் நெறிபிறழாத, மாறாத பக்தியை வளர்த்துப் பழக வேண்டும். இறைவனிடத்தில் பேரன்பை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை, நம் நாட்டில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் காட்டித் தந்திருக்கிறார்கள்.

என்ன கஷ்டம் வந்தாலும், கடவுளிடத்தில் உள்ள அன்பு குறையவே கூடாது. இறைவனைத் தவிர வேறு எதுவுமே நமக்கு வாழ்க்கையில் முடிந்த குறிக்கோள் கிடையாது. கடவுள் ஒருவரே முடிந்த குறிக்கோள் என்பதை உணர்ந்து பக்திசெலுத்த வேண்டும்.

உலக வாழ்க்கையில் உறவுகள், பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களையும் கடவுள்நிலையில் வைத்து பாவனை செய்வோம் என்றாலும், மிக முக்கியமாக, எல்லோரிடத்திலும் இறைவனையே பார்த்துப் பழக வேண்டும்.

உலகியல் வாழ்க்கையில் உடல்பற்று, பொருட்பற்று முதலியவை இல்லாமல், இன்பமே வடிவான இறைவனை எப்பொழுதும் சார்ந்திருத்தலே **அநந்யயோகம்** எனப்படும்.

இந்த ச்லோகத்தில் க்ருஷ்ணபக்தி கூறப்பட்டுள்ளதாகக் கூறுவர். எந்த வடிவத்தில் வழிபட்டாலும், ஈச்வரபக்தி என்று பொதுவாகப் பொருள்கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உருவகத்தாலே உணர்ந்து உணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே
அதன்இயல் ஒளியுறும் அறிவாம்
அதன்நிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்

என்று மஹாகவி பாரதியார் பாடுவதுபோல், உலகைப் படைத்து, காத்து, ஒடுக்கி, மறைத்து, அருள்புரிகின்ற ஆண்டவனை அறிந்து, அவரிடத்தில் பேரன்பு செலுத்திப் பழக வேண்டும்.

இறைவனிடத்தில் அன்பு செலுத்தச் செலுத்த, உலகில் எல்லோரிடமும் நாம் செலுத்தும் அன்பும் வளரும்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும், தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா

என்று பாடிய பாரதியார்,

அன்பிற் சிறந்த தவமில்லை என்றும் பாடியிருக்கிறார்.

இறைவனைச் சார்ந்திருக்கக் கூடிய, நிலைபிறழாத பக்தி நமக்கு வேண்டும். அதற்கு நாள்தோறும் இறைவனுடைய திருநாமங்களை ஓத வேண்டும். ஆலயத்திற்குச் சென்று ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும், வழிபாட்டிற்கு மலர்களை ஸமர்ப்பிக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலால் என்னென்ன வகையில் செய்ய முடியுமோ, அவ்வாறெல்லாம் சேவை செய்ய வேண்டும். அருளாளர்கள் அருளியுள்ள பாடல்களைப் பாட வேண்டும். திருநாவுக்கரசரின் திருஅங்கமாலை, திருஞானசம்பந்தரின் பதிகங்கள் போன்றவற்றைப் படித்தால், நமக்கு உள்ளத்தில் பக்தி ஓங்கி வளரும்.

ஈச்வரபக்தி என்பது ஆன்மிக வாழ்க்கைக்கு மிக முக்கியமான ஒரு ஸாதனமாகும். இறைவனும் நாமும் ஒன்று என்ற தத்துவத்தை நாம் புரிந்துகொண்டாலும், நாள்தோறும் குளித்து, உண்டு, உலக வாழ்க்கையில் ஈடுபடுவதற்கிடையில் இறைவனிடத்தில் பேரன்பு செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். எல்லா உயிர்களையும் நேசிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஈச்வரனிடத்தில் வைராக்யபூர்வமான, அசையாத, மாறாத பக்தி வேண்டும். நம்முடைய முன்வினைப் பயன்களால்தான் துன்பம் வருகிறது என்பதைப் புரிந்துகொண்டு, கஷ்டம் வருகின்றபோது, மேலும் அதிகமாக பகவானிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். பகவானிடத்தில் செலுத்துகின்ற அன்பு ஒருபோதும் குறையக்கூடாது.

ஒருநாளும் பகவானைக் குறைகூறி, அவரிடத்தில் பக்தி செலுத்துவதிலிருந்து விலகக்கூடாது. தூய்மையான, பற்றற்ற பக்தி வேண்டும். பகவானிடமிருந்து நாம் உலக விஷயங்கள் எதையும் எதிர்பார்க்கக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

நல்ல பண்புகளை வளர்க்கவும், ஞானம், முக்தி ஆகியவற்றைப் பெறவும் செய்யப்படும் பக்தியையே இங்கு பகவான் குறிப்பிடுகிறார்.

17. **விவிக்ததேஶ-ஸேவித்வம்** - மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லாத, தனிமையான, தூய்மையான இடத்தை நாடுதல்.

இயற்கையாகவே தூய்மையான இடம், அல்லது நாம் தூய்மைப்படுத்திய இடம் ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பெரியோர்கள் மந்த்ரங்களால் புனிதப்படுத்திய இடம் என்றும் சொல்லலாம்.

தனிமையில் இருப்பதைத்தான் பகவான் இவ்வாறு கூறுகிறார். ஏகாந்தமாக இருந்து பழக வேண்டும்.

இயற்கையாகவோ, செயற்கையாகவோ மாசுகளற்ற, பாம்பு, புலி போன்ற மிருகங்களால் ஏற்படும் துன்பங்கள் இல்லாத இடத்தை நாட வேண்டும். காடு, நதிக்கரை, கோயில்கள், மலைக்குகைகள் போன்றவை உகந்தவை.

அந்த இடங்களில் இருந்து பழக வேண்டும், த்யானத்தில் ஈடுபட வேண்டும். அங்கு சென்றால் மன அமைதியும், மனத்தெளிவும் ஏற்படும்.

இயற்கையான தெய்வீகமான சூழ்நிலைகள், நாம் த்யானம் செய்வதற்கு அநுகூலமாக இருக்கும். அந்த இடங்களில் த்யானித்தால், சாஸ்த்ரங்களைக் கற்று நாம் பெற்ற

Downloaded from **www.omkaravidya.com**

ஞானத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும், நன்கு பலப்படுத்திக்கொள்ள முடியும்.

தனிமையான, தூய்மையான, தெய்வீகமான இடத்தை நாடிச் செல்ல ஆசைப்பட வேண்டும். அத்தகைய இடங்கள், ஆசிரியரிடமிருந்து பெற்ற ஞானத்தை நன்கு வளர்ப்பதற்கும், ஆழ்ந்து சிந்திப்பதற்கும் பயன்படும்.

18. **ஜநஸம்ஸதி அரதி:** - மக்கள் கூட்டத்தில் விருப்பமின்மை.

பக்குவமில்லாத மக்கள் உலகியல் விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பார்கள். பண்பாடு இல்லாத, பணிவில்லாத, ப்ரச்சினைகளை உண்டு பண்ணுவதிலேயே விருப்பமுள்ள, விருப்பு வெறுப்புடன் கூடிய மக்கள் வாழ்கின்ற இடங்களில் நாம் இருக்கக் கூடாது.

போகாத இடம் தனிலே போக வேண்டாம்,
துஷ்டரைக் கண்டால் தூர விலகு

என்றெல்லாம் பெரியோர் கூறுவர்.

அது போன்ற கூட்டத்தில் எங்கும் சேர்ந்துவிடக் கூடாது. முக்கியமாக, ஸத்ஸங்கத்திலிருந்து பழக வேண்டும். ஸத்ஸங்கத்திலிருந்தால் நம் அறியாமை நீங்கும், அறிவு வளரும். சொற்களில் உயர்ந்த தன்மை மேலோங்கும். நம் சொற்கள் எல்லோருக்கும் பயன்படும்.

Downloaded from **www.omkaravidya.com**

தீயோர் சேர்க்கையை முற்றிலும் தவிர்க்க வேண்டும், நல்லோர் சேர்க்கையை நாடியிருக்க வேண்டும்.

த்யஜ துர்ஜந ஸம்ஸர்கம் பஜ ஸாது ஸமாகமம் ।
குரு புண்யமஹோராத்ரம் ஸ்மர நித்யமநித்யதாம் ।।

'தீயோர் சேர்க்கையை விட்டுவிடு, நல்லோர் சேர்க்கையை நாடியிரு. இரவும் பகலும் அறச்செயல்களைச் செய்துகொண்டிரு. வாழ்க்கையில் நிலைத்தது எது, நிலையற்றது எது என்பதை அடிக்கடி நினைத்துக்கொண்டே இரு' என்று இந்த ச்லோகம் கூறுகிறது.

अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थदर्शनम् ।

एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ।। १३ - ११ ।।

அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்த்ததர்ஶநம் ।
ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்தமஜ்ஞாநம் யததோऽந்யதா ।। 13 - 11 ।।

பதவுரை

அத்யாத்ம-ஜ்ஞாந-நித்யத்வம் - ஆத்ம தத்துவத்தை அறிந்துகொள்வதற்கு இடைவிடாது முயற்சித்தல், **தத்த்வ-ஜ்ஞாந-அர்த்த-தர்ஶநம்** - தத்துவ ஞானத்தின் பயனான மோக்ஷத்தை எப்பொழுதும் மனதில் நிறுத்துதல், **ஏதத்** - இதுவே, **ஜ்ஞாநம்** - ஞானம், **இதி** - என்று, **ப்ரோக்தம்** - கூறப்பட்டுள்ளது. **யத்** - எது, **அத:** - இதற்கு, **அந்யதா** - வேறானதோ, **(தத்) அஜ்ஞாநம்** - (அது) அஜ்ஞானம்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஆத்ம தத்துவத்தை அறிந்துகொள்வதற்கு இடைவிடாது முயற்சித்தல், தத்துவ ஞானத்தின் பயனான மோக்ஷத்தை எப்பொழுதும் மனதில் நிறுத்துதல் - இதுவே ஞானம் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு வேறானது அஜ்ஞானம் எனப்படும்.

விளக்கவுரை

19. **தத்த்வ-ஜ்ஞாந-அர்த்த-தர்ஶநம்** - தத்துவ ஞானத்தின் பயனை அறிந்திருத்தல்

ப்ரபஞ்சத்தில் எது உண்மை, எது பரமார்த்த ஸத்யம் என்பதைப் பற்றிய அறிவைப் பெறுவதால் ஏற்படும் பயன் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

அந்த அறிவின் பயன் - பரிபூரண ஆனந்தம், நிறைவு, த்ருப்தி, துன்பமில்லாத நிலை. இதனை நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் நிம்மதியாக இருக்க வேண்டுமெனில் வாழ்க்கையின் உண்மையைப் பற்றிப் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

நிம்மதி என்ற பயனைக் கொடுப்பது, தத்துவ ஞானம் ஒன்றே. தத்துவ ஞானத்தின் பயனைத் தெரிந்து வைத்திருந்தால்தான், அதனை அடைவதற்கு முயற்சி எடுப்போம்.

20. **அத்யாத்ம-ஜ்ஞாந-நித்யத்வம்** - ஆத்ம தத்துவத்தை அறிந்துகொள்வதற்கு இடைவிடாது முயற்சித்தல்.

Downloaded from **www.omkaravidya.com**

தத்துவ ஞான நூல்களை, தகுந்த ஆசிரியரிடம் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

ச்ரவணம், மனனம், நிதித்யாஸனம் ஆகிய ஞானயோக ஸாதனைகளைப் பழக வேண்டும்.

தத்துவ நூல்களின் மையக்கருத்தைத் தெரிந்துகொள்ளுதல் ச்ரவணம். அதில் கூறப்பட்டுள்ளவற்றுக்கும் நம்முடைய அனுபவங்களுக்கும் இருக்கக்கூடிய முரண்பாடுகளை, தகுந்த சான்றுகளால் நீக்கி, உண்மையை உணர்தல் மனனம்.

நம்மைப் பற்றியும், நம்மைச் சுற்றியிருப்பவர்களைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் நாம் கொண்டுள்ள தவறான எண்ணங்களை, த்யானத்தின் மூலம் நீக்கிக்கொள்ள வேண்டும். அது நிதித்யாஸனம் எனப்படும்.

இந்தப் படைப்பில் உண்மையும் பொய்யும் கலந்திருக்கின்றன. உண்மை எது, பொய் எது என்பதை, தத்துவ நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் - 355)

என்று திருவள்ளுவர் கூறியதற்கிணங்க, தத்துவ நூல்களை, ஆசிரியரின் துணைகொண்டு, கற்று, தெளிந்த மெய்யறிவைப் பெற வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

மெய்யறிவைப் பெற்று, ஐயங்களை நீக்கிக்கொண்டு, மெய்ப்பொருளை ஆழ்ந்து த்யானிக்க வேண்டும் என்பதுதான் இந்தப் பண்பில் கூறப்பட்டுள்ளது.

இதுவரை பார்த்த பண்புகள் –

1. தற்பெருமையின்மை,

2. ஆடம்பரமின்மை (எளிமை),

3. பிறரைத் துன்புறுத்தாமை,

4. பொறுமை,

5. நேர்மை,

6. குருவை வழிபடுதல்,

7. தூய்மை,

8. ஆன்மிக வாழ்வில் உறுதியாக நிலைத்திருத்தல்,

9. உடலையும் மனதையும் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்,

10. புலனின்பப் பொருட்களில் பற்றற்ற தன்மை,

11. உடலை நான் என்று எண்ணாமல் ஒரு கருவியாக வைத்திருத்தல்,

12. இந்த உடலின் பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய துன்பங்களின் குறைபாடுகளைச் சிந்தித்தல்,

Downloaded from **www.omkaravidya.com**

13. எல்லோரிடத்திலும் அன்பு செலுத்துவதற்கிடையில், உடல் முதலான எதன் மீதும் பற்றில்லாமல் இருத்தல்,

14. மனைவி, மக்கள், வீடு ஆகியவற்றில் பற்றில்லாமல் இருத்தல்,

15. வாழ்க்கையில் விரும்பியது, விரும்பாதது எது கிடைத்தாலும் விருப்புவெறுப்பில்லாமல் ஸமநிலையில் மனதை வைத்திருத்தல்,

16. இறைவனிடத்தில் பேரன்பு செலுத்துதல்,

17. தனிமையான இடங்களை நாடியிருத்தல்,

18. உலக இன்ப நாட்டம் உடையவர்களுடன் பழகாமல் இருத்தல்,

19. தத்துவ ஞானத்தின் பயனை அறிந்திருத்தல்,

20. தத்துவ நூல்களை இடைவிடாமல் கற்று, தெளிந்து, த்யானித்தல் -

இவையனைத்தும் சேர்ந்து ஞானம் என்று சொல்லப்படுகிறது.

இவற்றுக்கு எதிர்மாறாக இருப்பவை அனைத்தும் அஜ்ஞானம் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

1. தன்னைப் பற்றிப் பெரிதாக எண்ணிக்கொள்ளுதல்,

2. ஆடம்பரமாக இருத்தல்,

3. பிறரைத் துன்புறுத்துதல்,

4. கோபப்படுதல்,

Downloaded from **www.omkaravidya.com**

5. மனதில் ஒன்று வைத்து, வாயினால் ஒன்று பேசி நேர்மையில்லாமல் இருத்தல்,

6. குருவிடம் மரியாதையில்லாமல் நடந்துகொள்ளுதல்,

7. தூய்மையில்லாமல் இருத்தல்,

8. மனவுறுதியில்லாமல் அடிக்கடி மனம் தளர்ந்து போதல்,

9. உடல், மனதைக் கட்டுப்பாட்டில் வைக்காமல் இருத்தல்,

10. புலனின்பங்களில் ஆழ்ந்த நாட்டமுடன் இருத்தல்,

11. உடலை நான் என்று நினைத்தல்,

12. வாழ்க்கையில் நாம் அனுபவிக்கின்ற துன்பங்களின் குறைபாட்டைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இருத்தல்,

13. உடல் மீது பற்று வைத்தல்,

14. வீடு, மனைவி, மக்கள் மீது அளவுக்கு மீறி பற்று வைத்தல்,

15. விருப்புவெறுப்புகளுக்கு ஆளாகி மனம் சஞ்சலப்படுதல்,

16. இறைவனிடத்தில் அன்பு செலுத்தாமலிருத்தல்,

17. உலக இன்ப நாட்டமுடையோருடன் பழகுதல்,

18. தனிமையான இடத்தை நாடாமல் இருத்தல்,

19. வாழ்க்கையின் முக்கியமான குறிக்கோளாகிய மோக்ஷத்தை உணர வேண்டும் என்ற ஆசையில்லாமல் இருத்தல்,

Downloaded from **www.omkaravidya.com**

20. அதற்கான முயற்சிகளில் ஈடுபடாமலிருத்தல் - இவையே அஜ்ஞானம் எனப்படும்.

ஞானம் என்று கூறப்பட்டவை முக்திக்கு ஸாதனம். **அத்யாத்ம-ஞான-நித்யத்வம்** என்பதுதான் நேரடியாக முக்தியைக் கொடுக்கும். பிற 19 பண்புகளும் அந்த ஞானத்தைப் பெறுவதற்கான மனப்பக்குவத்தைத் தரும்.

உண்மையில், தத்துவ ஆராய்ச்சி மட்டுமே ஞானத்தைத் தரும். தத்துவ ஆராய்ச்சி செய்வதற்குரிய பக்குவத்தைத் தரக்கூடிய சக்தி, பிற பண்புகளுக்கு இருக்கின்றன.

இந்த 20 பண்புகளும் சேர்ந்து, மனிதனுக்கு உள்ளத்தில் மெய்யறிவை ஏற்படுத்தி, அதில் ஆழ்ந்து நிலைபெறச் செய்து, முழுமையாகத் துன்பத்திலிருந்து விடுபடச் செய்கிறது. பிறருடைய துயரத்தை நீக்கக்கூடிய சக்தியும் இவனுக்கு வருகிறது.

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वामृतमश्नुते ।

अनादिमत्परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ।। १३ - १२ ।।

ஜ்ஞேயம் யத்தத்ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வாம்ருதமஶ்நுதே ।
அநாதிமத்பரம் ப்ரஹ்ம ந ஸத்தந்நாஸதுச்யதே ।। 13 - 12 ।।

பதவுரை

யத் - எது, **ஜ்ஞேயம்** - அறியப்பட வேண்டியதோ, **யத்** - எதை, **ஜ்ஞாத்வா** - அறிந்தபின், **அம்ருதம்** - மரணமின்மையை

Downloaded from **www.omkaravidya.com**

(அமைதியான ஆனந்தத்தை), **அஸ்நுதே** - (மனிதன்) அடைவானோ, **தத்** - அதை, **ப்ரவக்ஷ்யாமி** - கூறுகிறேன். **தத்** - அது, **அநாதிமத்** - தொடக்கமற்றதும் (காரணமற்றதும்), **பரம்** - காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாத, **ப்ரஹ்ம** - மேலான பரம்பொருள். **ஸத்** - (அது) தோற்றத்திற்கு வந்துள்ள பெயர் வடிவங்களாகிய கார்யம் என்றோ, **ந உச்யதே** - கூறப்படுவதில்லை, **அஸத்** - தோற்றத்திற்கு வராத பெயர் வடிவங்களாகிய காரணம் என்றோ, **ந (உச்யதே)** - கூறப்படுவதில்லை.

பொழிப்புரை

எது அறியப்பட வேண்டியதோ, எதை அறிந்த பின், மனிதன் மரணமற்ற தன்மையை உணர்வானோ, அதனைக் கூறுகிறேன். அது தொடக்கமற்றதும், காலம், இடம், பொருள் முதலியவற்றால் வரையறுக்கப்படாததுமான மேலான பரம்பொருள். அது தோற்றத்திற்கு வந்துள்ள பெயர் வடிவங்களாகிய கார்யம் என்றோ, தோற்றத்திற்கு வராத பெயர் வடிவங்களான காரணம் என்றோ கூறப்படுவதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணரிடம் அர்ஜுனன், ப்ரக்ருதி, புருஷன், க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன், ஞானம், ஜ்ஞேயம் ஆகிய ஆறு சொற்களுக்கான பொருளைக் கேட்டான்.

Downloaded from **www.omkaravidya.com**

பகவான் க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் ஆகியவை பற்றிச் சுருக்கமாகவும், ஞானம் என்பதைப் பற்றி விரிவாகவும் கூறினார்.

இப்பொழுது, ஜ்ஞேயம் என்பதைக் கூறும்பொழுது, க்ஷேத்ரஜ்ஞனைப் பற்றித்தான் கூறுகிறார். க்ஷேத்ரஜ்ஞன் என்றால் தூய உணர்வு. உடலுக்குள், உயிருக்கும் ஆதாரமாக இருக்கின்ற உணர்வே க்ஷேத்ரஜ்ஞன்.

உணர்வு மட்டுமே உண்மை என்பதுதான் பாடம். உயிர், உடல், மனம் ஆகியவையெல்லாம் கயிற்றில் பாம்பைப்போல வெறும் தோற்றமே.

ஜ்ஞேயம் என்ற சொல்லுக்கு, அறியப்பட வேண்டியது என்று பொருள். அதனை நன்றாகக் கற்றுக்கொடுக்கப் போகிறேன் என்று பகவான் ப்ரதிஜ்ஞை செய்கிறார். அதன் பலனைக் கூறுகிறார். எதை அறிந்தால், அமுதத்தன்மையை அனுபவிப்பாயோ, அதனைக் கூறுகிறேன் என்கிறார். அமுதத்தன்மை என்பது முக்தி, ஆனந்தம், முழுமை, த்ருப்தி, நிறைவுணர்வு.

இந்த அறிவினால் ஆழ்ந்த மன அமைதியும், மனதை வேடிக்கைப் பார்க்கின்ற அறிவுபூர்வமான மனநிலையும் ஏற்படும்.

அறியப்பட வேண்டியதை அறிந்தால், மனதில் நிறைவு ஏற்படும். வாழ்க்கையில் எத்தனையோ விஷயங்களை அறிகிறோம். நாம் அறிகின்ற விஷயங்களெல்லாம் நமக்கு

Downloaded from **www.omkaravidya.com**

நிறைவையா தருகின்றன? உலகில் நாம் அறிகின்ற அனைத்தும் குறைபாடுடையவையாக இருக்கின்றன.

நிறைவைப் பற்றி அறிந்தால்தான் நிறைவு ஏற்படும். உண்மையிலேயே நிறைவுதான் இருக்கிறது. குறை என்பதெல்லாம் நம் அறியாமையால் விளைந்த கற்பனை.

நிறைவை அறியாததால்தான், குறையை உண்மை என்று நம்பி, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அநாதிமத் - தொடக்கமற்றது. அதாவது, தூய உணர்வு எதிலிருந்தும் தோன்றவில்லை. எப்பொழுது தோன்றியது என்றும் தெரியாது. காலத்திற்கும் அப்பாற்பட்டது.

தனக்குக் காரணமற்ற, காலமற்ற, காலத்தையும் காரணத்தையும் கடந்த மெய்ப்பொருள், பரம்பொருள் - அதுவே வாழ்க்கையில் அறியப்பட வேண்டியது.

பரம் ப்ரஹ்ம - காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாத மெய்ப்பொருள். அது அனைத்திற்கும் ஆதாரமானது.

ந ஸத் ந அஸத் - தோற்றத்திற்கு வந்திருக்கின்ற பெயர் வடிவங்களாகிய கார்யங்கள் அனைத்தும் - **ஸத்** எனப்படும். தோற்றத்திற்கு வராத பெயர் வடிவங்கள் - **அஸத்** எனப்படும்.

குயவனார் களிமண்ணைப் பிசைந்து வைத்திருக்கிறார். அதனைக்கொண்டு எத்தனையோ தட்டுகள், பானைகள், கூஜாக்கள் செய்யப் போகிறார். தோற்றத்திற்கு வராத

Downloaded from **www.omkaravidya.com**

நிலையில் பல வடிவங்கள், பெயர்கள் அதற்குள் இருக்கின்றன.

பிறகு, பல்வேறு வடிவங்கள், பெயர்களை உடைய மண்பாண்டங்களை அவர் செய்கிறார்.

வெளிப்பட்டிருக்கின்ற பெயர், வடிவங்களும் ஒரு காலத்தில் வெளிப்படாத நிலைக்குச் சென்றுவிடும். நம்முடைய உடலையே எடுத்துக்கொண்டால், ஒரு காலத்தில் இந்த உடல் இல்லை, இன்னொரு காலத்தில் இது இருக்கப் போவதில்லை.

இல்லாத நிலைக்கு **அஸத்** என்று பெயர். இருக்கின்ற நிலைக்கு **ஸத்** என்று பெயர்.

அறியப்பட வேண்டியதாகிய மெய்ப்பொருள் - இருக்கின்ற பொருளுமல்ல, இல்லாத பொருளுமல்ல. தோற்றத்தில் வெளிப்பட்டு இருக்கின்ற பொருள், தோற்றத்தில் வெளிப்பட்டு, பிறகு இல்லாமல் போகின்ற பொருள், தோற்றத்திற்கு வெளிப்படாத பொருள் - இந்த வகைகளில் பரம்பொருள் சேராது.

தோற்றத்திற்கு முன்பு இல்லை, தோன்றிய பிறகு இருக்கிறது, மீண்டும் இல்லாமல் போகிறது என்பதான பொருள் அல்ல மெய்ப்பொருள்.

மெய்ப்பொருளைச் சார்ந்துதான், பிற பொருட்களின் பெயர்களும் வடிவங்களும் இருக்கின்றன, மறைகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

எந்த ஓர் அடிப்படையான மாறாத மெய்ப்பொருளில், மாறுகின்ற பொருட்கள் தோன்றி, இருந்து, மறைகின்றனவோ, அந்த ஆதாரமான மெய்ப்பொருளைத்தான் வாழ்க்கையில் அறிந்துகொள்ள வேண்டும்.

மன அமைதியின் பொருட்டு எல்லோராலும் அறியப்பட வேண்டியது மெய்ப்பொருள். அதற்குத் தொடக்கமில்லை, காலமில்லை. தோன்றுகின்ற அனைத்துப் பொருட்களுக்கும் ஆதாரமாக, கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாததாக, கண்ணும் கருத்தும் அதைச் சார்ந்து இயங்குவதாக, அதனை அறிந்துகொள்ள வேண்டும்.

सर्वतः पाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।

सर्वतः श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ।। १३ - १३ ।।

ஸர்வத: பாணிபாதம் தத்ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம் ।

ஸர்வத: ஶ்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ।। 13 - 13 ।।

பதவுரை

தத் - அது, **ஸர்வத:** - எங்கும், **பாணிபாதம்** - கைகால்கள் உடையது, **ஸர்வத: -** எங்கும், **அக்ஷி-ஶிரோ-முகம்** - கண்கள், தலைகள், முகங்கள் (வாய்கள்) உடையது, **ஸர்வத:** - எங்கும், **ஶ்ருதிமத்** - செவிகள் உடையது, **லோகே** - உலகில், **ஸர்வம்** - அனைத்தையும், **ஆவ்ருத்ய** - வ்யாபித்து, **திஷ்டதி** - நிற்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

அது எங்கும் கைகால்கள் உடையது. எங்கும் கண்கள், தலைகள், முகங்கள் (வாய்கள்) உடையது. எங்கும் செவிகள் உடையது. உலகில் அனைத்தையும் வ்யாபித்து நிற்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தோற்றத்திற்கு வந்துள்ள அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கின்ற மெய்ப்பொருளைப் பற்றி - அறிய வேண்டியது என்ற தலைப்பின்கீழ் உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

மெய்ப்பொருள் எங்கும் கைகால்களை உடையது என்று சொன்னால், எல்லோருடைய கைகளும் கால்களும் மெய்ப்பொருளுடையது என்று பொருள்.

எல்லாப் பக்கங்களிலும் கண்களையும் தலைகளையும் வாய்களையும் காதுகளையும் உடையது மெய்ப்பொருள். எல்லாவற்றையும் அது வ்யாபித்திருக்கிறது.

இதனைப் புரிந்துகொள்வதற்கு நாம் ஒரு வழிமுறையைக் கையாள்கிறோம். அதற்கு **அத்யாரோப-அபவாத-ப்ரக்ரியா** என்று பெயர். கற்பனையைக் கூறி, உண்மையை விளக்கி, பிறகு கற்பனையை நீக்குகின்ற வழிமுறை அது.

நமக்குத் தெரிந்தும், தெரியாத ஒரு விஷயம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். தெரிந்த பொருளையே, நாம் சில நேரம் கவனிப்பதில்லை. அதனைக் கவனிக்கும்படி

Downloaded from **www.omkaravidya.com**

செய்ய வேண்டுமெனில், அதற்குச் சில முறைகளைக் கையாளுகிறோம்.

முதலில் தெரிந்த ஒன்றைக் கூறி, தெரிந்ததில் தெரியாததாக மறைந்திருக்கும் ஒன்றைப் புரியவைத்து, ஏற்கெனவே தெரிந்து வைத்துள்ள விஷயத்தை நீக்குவோம். இப்படித் தெரிந்ததற்குள் தெரியாத அம்சத்தை உணர்த்துகிறது சாஸ்த்ரம்.

இதற்குக் கூறப்படும் உதாரணம் - வெளிச்சத்தில் கையைக் காட்டுதல். என்ன இருக்கிறது என்று கேட்டால், எல்லோரும் கை இருக்கிறது என்று கூறுவார்கள். இருட்டில் காண்பித்தால் கை தெரியாது. ஆக, வெளிச்சமும் இருக்கிறது, கையும் இருக்கிறது என்று விளங்கிக் கொள்கிறோம்.

இரண்டும் இருந்தாலும், நாம் வெளிச்சத்தை ஒரு பொருளாகவே கவனிப்பதில்லை. கையை மட்டும்தான் கவனிக்கிறோம்.

கையைக் காண்பித்து, வெளிச்சத்தை விளக்குகிறோம். கையை எடுத்த பிறகும், வெளிச்சம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம்.

கையைப் பார்க்கும்பொழுதே வெளிச்சத்தையும் பார்க்கத்தான் செய்கிறோம். வெளிச்சம் இல்லையென்றால், கையைப் பார்க்கவே முடியாது.

அதுபோன்று, உடல், மனதைக் கூறி, உணர்வில்லாமல் உடல், மனம் செயல்படாது என்பதை உணர்த்துகிறது சாஸ்த்ரம்.

Downloaded from **www.omkaravidya.com**

உணர்வில்லையெனில் உடலும் மனமும் புலப்படாது. உணர்வே உயர்ந்தது. உணர்வில்லாமல் உணரப்படுபவற்றை உணர முடியாது.

உணர்வே அறியப்பட வேண்டியது. உலகில் பிறவற்றை அறிந்தால், துன்பம் கலந்த இன்பம்தான் கிடைக்கும். துன்பமும் அதிகரிக்கும். ஆனால் உணர்வை அறிந்தால், துன்பம் கலவாத இன்பத்தை உணரலாம்.

ஆக, எல்லாப் பக்கங்களிலும் கைகால்கள், கண்கள், தலைகள், முகங்கள், செவிகளை உடையது என்று சொல்வதன் மூலம் எல்லாவற்றிலும் இருக்கின்ற உணர்வு தத்துவத்தைக் கவனித்து, உண்மையை உணர்ந்துகொள்ளுமாறு உபதேசிக்கிறார் பகவான்.

सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम् ।

असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ।। १३ - १४ ।।

ஸர்வேந்த்ரியகுணாபாஸம் ஸர்வேந்த்ரியவிவர்ஜிதம் ।
அஸக்தம் ஸர்வப்ருச்சைவ நிர்குணம்
குணபோக்த்ரு ச ।। 13 - 14 ।।

பதவுரை

ஸர்வ-இந்த்ரிய-குண-ஆபாஸம் - எல்லா இந்த்ரியங்களின் குணங்களை விளக்குவது, **ஸர்வ-இந்த்ரிய-விவர்ஜிதம்** - இந்த்ரியங்கள் இல்லாதது, **அஸக்தம்** - பற்றற்றது, **ஸர்வப்ருத் ச ஏவ** - அனைத்தையும் தாங்குவது, **நிர்குணம்** - குணங்களற்றது,

Downloaded from **www.omkaravidya.com**

குணபோக்த்ரு ச - குணங்களை அனுபவிப்பது (போல் இருக்கிறது).

பொழிப்புரை

மெய்ப்பொருள், எல்லா இந்த்ரியங்களின் குணங்களை விளக்குவது, இந்த்ரியங்கள் இல்லாதது, பற்றற்றது, அனைத்தையும் தாங்குவது, குணங்களற்றது, குணங்களை அனுபவிப்பதுபோல் இருக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அறியப்பட வேண்டிய மெய்ப்பொருளைப் பற்றி உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

உணர்வு இல்லாமல், உணரப்படுகின்ற உடல், மனம் முதலியவை இயங்க முடியாது. உடல், மனம் முதலியவை மாயத் தோற்றங்கள். இதனைப் புரிந்துகொண்டு விட்டால், நம் கவனமெல்லாம் பேரின்பமே வடிவமாகிய உணர்வை நோக்கிச் செல்லும்.

இந்த உலக வாழ்க்கை ஒரு தர்மமான விளையாட்டு என்பதைப் புரிந்துகொண்டு, துன்பப்படாமலும், உலக இன்பங்களில் மூழ்கிப்போகாமலும், இந்த உலகிற்கு நம்மால் இயன்ற நல்ல காரியங்களைச் செய்துவிட்டுச் செல்வோம்.

கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்து இந்த்ரியங்களும் உணர்வு இருப்பதால்தான்

Downloaded from **www.omkaravidya.com**

செயல்படுகின்றன. கண்ணுக்குப் பார்த்தல், காதுக்குக் கேட்டல் முதலான குணங்கள் இருக்கின்றன.

உணர்வு இருப்பதால்தான் இந்த்ரியங்கள் செயல்படுகின்றன. நம்மால் பார்க்க முடிகிறது, கேட்க முடிகிறது.

இந்த்ரியங்களும், அவற்றின் பின்னால் மனமும், அதன் பின்னால் உணர்வும் இருப்பதால்தான் அனைத்தும் உணரப்படுகின்றன.

இந்த்ரியங்களுக்குப் பின்னால் உள்ள உணர்வு தத்துவத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உணர்வாகிய மெய்ப்பொருள் இந்த்ரியங்களை ஒளிர்விக்கிறது. ஆனால் மெய்ப்பொருளுக்குக் கண், காது முதலான இந்த்ரியங்கள் இல்லை.

விழிப்பு நிலையில் நாம் இந்த்ரியங்களைப் பயன்படுத்துகிறோம். நித்ராசக்தியினால் கனவுலகம் தோன்றுகிறது. கனவு நிலையில், இந்த இந்த்ரியங்களைப் பயன்படுத்தாமல், வேறு கற்பனை இந்த்ரியங்கள் மூலம் உலக விஷயங்களை அனுபவிக்கிறோம்.

உணர்வுக்கு இந்த்ரியங்கள் இல்லை. ஆனால் இந்த்ரியங்கள் உணர்வில்லாமல் செயல்பட முடியாது.

அஸக்தம் - எதனுடனும் ஒட்டிக்கொள்ளாதது மெய்ப்பொருள். எல்லா இந்த்ரியங்களுக்கும் அருள்புரிந்தாலும், மெய்ப்பொருள் எதனுடனும் ஒட்டிக்கொள்வதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

ஆகாசம் எல்லாவற்றிற்கும் இடம் கொடுக்கிறது. ஆனால் எந்தப் பொருளுடனும் அது ஒட்டிக்கொள்வதில்லை. உணர்வு, அதைப் போன்றது.

எந்தப் பொருளுடனும் ஒட்டிக்கொள்ளவில்லை எனினும், எல்லாவற்றையும் அது தாங்குகிறது. எல்லா குணங்களையும் அனுபவிப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் அது குணங்களற்றதாக இருக்கிறது.

இவ்வாறு அறியப்பட வேண்டிய மெய்ப்பொருளின் இலக்கணங்கள் இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளன.

बहिरन्तश्च भूतानामचरं चरमेव च ।

सूक्ष्मत्वात्तदविज्ञेयं दूरस्थं चान्तिके च तत् ।। १३ - १५ ।।

பஹிரந்தஶ்ச பூதாநாமசரம் சரமேவ ச ।
ஸூக்ஷ்மத்வாத்ததவிஜ்ஞேயம் தூரஸ்த்தம்
சாந்திகே ச தத் ।। 13 - 15 ।।

பதவுரை

தத் (ஜ்ஞேயம் ப்ரஹ்ம) - அது (அறியப்பட வேண்டிய பரம்பொருள்), **பூதாநாம்** - உயிர்களுக்கு, **பஹி:** - வெளியிலும், **அந்த: ச** - உள்ளும் (**அஸ்தி** - உள்ளது). **அசரம்** - அசையாததாகவும், **சரம் ஏவ ச** - அசைவதாகவும் (**அஸ்தி** - உள்ளது.) **தூரஸ்த்தம் ச -** தூரத்தில் உள்ளதாகவும், **அந்திகே ச** - அருகில் உள்ளதாகவும் (**அஸ்தி** - உள்ளது). **தத்** - அது, **ஸூக்ஷ்மத்வாத்** - நுண்மையான தன்மையால்,

Downloaded from **www.omkaravidya.com**

அவிஜ்ஞேயம் - (அறியப்படுபொருளாக) அறிய முடியாததாக இருக்கிறது.

பொழிப்புரை

அறியப்பட வேண்டியதான பரம்பொருள், உயிர்களுக்கு வெளியிலும் உள்ளும் உள்ளது. அசையாததாகவும் அசைவதாகவும் உள்ளது. தூரத்தில் உள்ளதாகவும், அருகில் உள்ளதாகவும் உள்ளது. அது நுண்மையான தன்மையால், அறியப்படுபொருளாக அறிய முடியாததாக இருக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அறியப்பட வேண்டிய மெய்ப்பொருளின் இலக்கணங்களைக் கூறுகிறார். மெய்ப்பொருளானது, பல்வேறு வகையான உடல்களை உடைய உயிர்களிடத்தில் உள்ளும் புறமும் உள்ளது.

தூய உணர்வு தத்துவம் எல்லாவற்றையும் வ்யாபித்திருக்கிறது. அனைத்து உடல்களின் உள்ளேயும் வெளியேயும் அது விளங்கிக் கொண்டிருக்கிறது.

அசைகின்ற, அசையாத, உயிருள்ள, உயிரற்ற அனைத்திலும் மெய்ப்பொருள் வ்யாபித்திருக்கிறது. அசையாதவை தென்னை மரம் போன்று உயிருள்ளதாகவும் இருக்கலாம், சுவர் முதலியவை போன்று உயிரற்றதாகவும் இருக்கலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

அசைகின்ற உயிருள்ளவை - மனிதர்கள், பறவைகள், விலங்குகள் போன்றவை. அசைகின்ற உயிரற்றவை கார் முதலான வாகனங்கள்.

அசைகின்ற, அசையாத பொருட்கள் அனைத்திலும், மெய்ப்பொருள் நம்மால் உணர்ந்துகொள்ளப்படுகிறது.

அறியப்பட வேண்டிய அந்த மெய்ப்பொருள் வெகு தொலைவிலும் இருக்கிறது, மிக அருகாமையிலும் இருக்கிறது. எங்கும் இருக்கிறது என்பது இவ்வாறு கூறப்படுகிறது.

தொலைவில் இருப்பதையும் உணர்வுதான் உணர்த்துகிறது, அருகில் இருப்பதையும் உணர்வுதான் உணர்த்துகிறது. அருகிலும் தொலைவிலும் உணர்வுதான் இருக்கிறது.

அந்த மெய்ப்பொருள் மிக மிக நுண்ணியதாக இருப்பதால், அறியப்பட முடியாததாக இருக்கிறது. இதனை அறிந்துகொள்ள வேண்டும்.

நம் கண்களைக் கொண்டு எல்லாப் பொருட்களையும் காணலாம். இந்தக் கண்களால், இந்தக் கண்களையே காண முடியாது. கண்ணாடியில் தென்படும் கண்களைக்கொண்டு பார்க்கலாமே என்று கேட்டால், அது நிழல்.

நிழல் கண்ணைக் கொண்டு, நிஜக் கண்ணைக் காண்பதற்கே நிஜக் கண் வேண்டும். நிஜமின்றி நிழலில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

உணர்வாகவே இருக்கின்ற நம்மை, உணரப்படுபொருளாக ஒரு நாளும் அறிய முடியாது. இருக்கின்றவற்றிலேயே நுண்மையிலும் நுண்மையானவர்கள் நாம்தான்.

அறியப்பட வேண்டிய பொருளானது, உண்மையில் அறியப்பட முடியாததாகத்தான் இருக்கிறது.

என்னை நான் அறியப்படுபொருளாக அறிய முடியாது. ஆனால் எல்லாவற்றையும் அறிகின்ற என்னை அறிவதுதான் வாழ்க்கையின் முக்கியமான குறிக்கோளாக இருக்க வேண்டும்.

என்னைப் பற்றிய உண்மையை உள்ளவாறு அறிந்துகொண்டால், அறிவதற்கோ ஆசைப்படுவதற்கோ வேறு எதுவும் இல்லை.

अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।

भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ।। १३ - १६ **।।**

அவிபக்தம் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம் ।
பூதபர்த்ரு ச தஜ்ஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச ।। 13 - 16 ।।

பதவுரை

தத் - அந்த, **ஜ்ஞேயம்** - அறிய வேண்டிய பொருள், **பூதேஷு** - உயிர்களில், **அவிபக்தம் ச** - பிரிக்க முடியாததாக இருக்கிறது (இருப்பினும்), **விபக்தம் இவ ச** - பிரிந்திருப்பதுபோல், **ஸ்திதம்** - உள்ளது. **ச** - மேலும், **பூதபர்த்ரு:** - உயிர்களைத்

Downloaded from **www.omkaravidya.com**

தாங்குவது, **க்ரஸிஷ்ணு:** - விழுங்குவது (ஒடுக்குவது), **ப்ரபவிஷ்ணு: ச** - படைப்பது (அதுவே ஆகும்).

பொழிப்புரை

அந்த அறிய வேண்டியதான பொருள், உயிர்களில் பிரிக்க முடியாததாக இருக்கிறது. இருப்பினும், பிரிந்திருப்பதுபோல உள்ளது. மேலும் உயிர்களைத் தாங்குவதும், ஒடுக்குவதும், தோற்றுவிப்பதும் அதுவே ஆகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அறியப்பட வேண்டிய மெய்ப்பொருளின் இலக்கணங்களைக் கூறுகிறார்.

மெய்ப்பொருளானது, எல்லா உயிர்களிடத்திலும் சரீரங்களால் பிரிக்கப்பட முடியாததாக இருக்கிறது. உண்மையில் பிளவுபடாத அது, எல்லா உடல்களிலும் பிளவுபடுத்தப்பட்டதுபோல காணப்படுகிறது.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், நம்மில் பல வேற்றுமைகள் இருக்கின்றன. ஆனால், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், நம்மிடத்தில் உள்ள ஒற்றுமையை நம்மாலேயே பிரிக்க முடியாது.

மேலெழுந்தவாரியான வேற்றுமைகளை, அறவழியில் சமூக நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும். அத்துடன், மன அமைதியின்பொருட்டு, ஆழமாக உள்ள ஒற்றுமையை நாம்

Downloaded from **www.omkaravidya.com**

புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துகொள்வதற்கு நமக்குப் பக்குவம் நிறைந்த அறிவு தேவைப்படுகிறது.

உணர்வானது, உண்மையில் பகுக்கப்படாத போதிலும், உயிர்களிடத்தில் பகுக்கப்பட்டதுபோல விளங்கிக் கொண்டிருக்கிறது. உணர்வு எதனாலும் பகுக்கப்படாதது, பிளவுப்படுத்தப்பட முடியாதது, வரையறுக்கப்படாதது.

அறியப்பட வேண்டிய அந்த மெய்ப்பொருள், அனைத்து உயிர்களையும் உடல்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது.

குடம், கட்டிடம் ஆகியவற்றுக்குள் இருக்கின்ற ஆகாசம் (வெளி) வரையறுக்கப்பட்டதுபோல் காட்சியளிக்கிறது. கட்டிடங்களால் ஆகாசம் வகுக்கப்பட்டதுபோல, வரையறுக்கப்பட்டதுபோல, பிளவுபடுத்தப்பட்டதுபோலத் தோன்றினாலும் ஆகாசம் உண்மையில் எதனாலும் வரையறுக்கப்படாதது.

அது மட்டுமல்ல, எல்லாக் கட்டிடங்களையும் ஆகாசம்தான் தாங்கிக்கொண்டிருக்கிறது. அனைத்திற்கும் அவகாசம் (இடம்) கொடுப்பது எதுவோ, அதுவே ஆகாசம் எனப்படும்.

மெய்ப்பொருள், அசைகின்ற அசையாத, அனைத்து உயிர்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. படைத்த அனைத்தையும் அதுவே க்ரஹித்துக் கொள்கிறது, அதுவே வெளிப்படுத்துகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

உணர்வில்தான் அனைத்தும் ஒடுங்குகின்றன. உணர்விலிருந்துதான் அனைத்தும் தோன்றுகின்றன. தோற்றமும் ஒடுக்கமும் மெய்ப்பொருளிலேயே நிகழ்கின்றன.

ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते ।

ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य विष्ठितम् ।। १३ - १७ ।।

ஜ்யோதிஷாமபி தஜ்ஜ்யோதிஸ்தமஸ: பரமுச்யதே ।
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய
விஷ்டிதம் ।। 13 - 17 ।।

பதவுரை

தத் - அது, **ஜ்யோதிஷாம் அபி** - ஒளிகளுக்கெல்லாம், **ஜ்யோதி:** - ஒளியானதாகவும், **தமஸ:** - இருளுக்கு (அறியாமைக்கு), **பரம்** - அப்பாற்பட்டதாயும், **உச்யதே** - கூறப்படுகிறது. **ஜ்ஞாநம்** - அறிவாகவும், **ஜ்ஞேயம்** - அறியப்பட வேண்டியதாகவும், **ஜ்ஞாந-கம்யம்** - அறிவினால் அடையப்படுவதாகவும் (அறிவின் பயனாகவும்), **ஸர்வஸ்ய** - எல்லோருடைய, **ஹ்ருதி** - உள்ளத்திலும், **விஷ்டிதம்** - நன்கு நிலைபெற்றுள்ளது.

பொழிப்புரை

அது ஒளிகளுக்கெல்லாம் ஒளியானதாகவும், அறியாமையாகிய இருளுக்கு அப்பாற்பட்டதாகவும் கூறப்படுகிறது. அறிவாகவும், அறியப்பட வேண்டியதாகவும், அறிவினால் அடையப்படுகின்ற பயனாகவும், எல்லோருடைய உள்ளத்திலும் நன்கு நிலைபெற்றுள்ளது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் மெய்ப்பொருளானது, ஒளிக்கெல்லாம் ஒளியானது, இருளுக்கு அப்பாற்பட்டது என்று கூறுகிறார். இருள் என்பது அறியாமையின் குறியீடு.

அறியாமையையும் ஒளிர்விக்கக்கூடிய, மேலான அறிவே வடிவான, உணர்வே வடிவானது மெய்ப்பொருள்.

அனுபவத்தில், நாம் புறத்திலுள்ள பொருளையும் அறிகிறோம், ஒளியையும் அறிகிறோம். அவ்வாறு அறிவதற்குக் கண்ணின் துணையும் மனதின் துணையும் தேவைப்படுகின்றன.

கண்ணையும் மனதையும், புறத்திலுள்ள ஒளியையும் இருளையும், பொருட்கள் எல்லாவற்றையும் ஒளிர்விக்கின்ற அறிவொளியாகிய, உணர்வொளியாகிய தத்துவத்தைப் பற்றி, இங்கு பகவான் உபதேசிக்கிறார்.

ஒளிர்விக்கக் கூடியவையான ஸூர்யன், சந்த்ரன், நக்ஷத்ரங்கள், நெருப்பு, மின்னல், மின்விளக்குகள் - இவற்றுக்கெல்லாம் ஒளியாக விளங்குவது மெய்ப்பொருள்.

புறத்தில் நாம் காண்பது அறிவற்ற ஜட ஒளி. புறத்தில் நாம் ஒளியையும் இருளையும் காண்கிறோம்.

அறிவற்ற ஒளியை அறிவது அறிவொளி. அந்த உணர்வொளிதான் இங்கு அறியப்பட வேண்டியதாகக் கூறப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

உலக விஷயங்களை அறிகிறோம். அறிபவனை, உணர்பவனை, உணர்பவனுடைய உண்மை தத்துவமாகிய உணர்வை அறிய வேண்டும் என்று பகவான் உபதேசிக்கிறார்.

மெய்ப்பொருள் அறிவாகவும், அறியப்பட வேண்டியதாகவும், அறிவால் அறியப்படும் பயனாகவும் எல்லோருடைய உள்ளத்திலும் சிறப்புற்று விளங்கிக் கொண்டிருக்கிறது.

தூய உணர்வு இல்லாமல் எதுவுமே விளங்காது.

அறியப்பட வேண்டிய மெய்ப்பொருளை அறிவதால், மோக்ஷம், ஆனந்தம் என்ற பயன் கிடைக்கிறது. வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள், துன்பமில்லாத பேரின்பத்தை உணர்வது. அது நம் ஸ்வரூபமாகவே இருக்கிறது என்று சாஸ்த்ரம் நமக்குக் கற்றுத் தருகிறது.

அனைத்திற்கும் ஆதாரமான மெய்ப்பொருள் நம் உள்ளத்திற்குள் விளங்கிக் கொண்டிருக்கிறது. அறியப்பட வேண்டிய பொருள், அறிபவனுடைய ஸ்வரூபமாகவே இருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।

मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ।। १३ - १८ ।।

இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத: ।
மத்பக்த ஏதத்விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே ।। 13 - 18 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

இதி - இவ்வாறு, **க்ஷேத்ரம்** - க்ஷேத்ரமும், **ததா** - அவ்வாறே, **ஜ்ஞாநம்** - ஞானமும், **ஜ்ஞேயம் ச** - அறியப்பட வேண்டியதை (க்ஷேத்ரஜ்ஞனை)ப் பற்றியும், **ஸமாஸத:** - சுருக்கமாக, **உக்தம்** - கூறப்பட்டன. **மத்-பக்த:** - என்னுடைய பக்தன், **ஏதத்** - இதை, **விஜ்ஞாய** - நன்கறிந்து, **மத்-பாவாய** - அமைதியான ஆனந்தத்தை உணர்வதற்கு, **உபபத்யதே** - உரியவன் ஆகிறான்.

பொழிப்புரை

இவ்வாறு க்ஷேத்ரம், ஞானம், அறியப்பட வேண்டிய க்ஷேத்ரஜ்ஞன் ஆகியவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டன. என்னுடைய பக்தன், இதை நன்கறிந்து, அமைதியான ஆனந்தத்தை உணர்வதற்கு உரியவன் ஆகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அர்ஜுனன் கேட்ட ஆறு விஷயங்களில், க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன், ஞானம், ஜ்ஞேயம் ஆகிய நான்கு விஷயங்களுக்கு விளக்கம் கூறிவிட்டார்.

பகவான் சுருக்கமாக இவற்றை விளக்கிக் கூறியிருக்கிறார். 12 ஆவது ச்லோகத்தில், **யத் ஜ்ஞாத்வா அம்ருதம் அஶ்நுதே।** என்று பலனைக் கூறினார். எதை அறிந்தால், நீ அமுதத்தை அனுபவிப்பாயோ என்றால், இந்த உலகில் வாழ்ந்து

Downloaded from **www.omkaravidya.com**

கொண்டிருக்கும்போதே, உடல்பற்று, உலகப்பற்று ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, பேரின்பத்தை, பேரமைதியை உணர்வாய் என்று பொருள்.

பகவான், **மத்பக்த:** - என்னுடைய பக்தன் என்று கூறுகிறார். க்ருஷ்ணபக்தன் என்று பொருள்கொண்டாலும், ஈச்வரபக்தன் என்று பொதுவாகவும் பொருள்கொள்ளலாம்.

வரையறுக்கப்படாத பேரின்பமாக இருக்கின்ற இறைவனுடைய பக்தன் என்று பொருள்கொள்ள வேண்டும். அமைதியும் ஆனந்தமுமாக இருக்கிறார் பகவான். நாமும் அதைத்தான் அடைய விரும்புகிறோம். உண்மையில் நாம் அமைதியான ஆனந்தமாகத்தான் இருக்கிறோம்.

மத்பக்த: - துன்பமில்லாத, மேலான ஆனந்தத்தை விரும்புபவன் என்று பொருள். அவன் இதுவரை கூறபட்டவற்றை நன்கு புரிந்துகொண்டு, ஆனந்தமே வடிவான பரம்பொருளின் ஸ்வரூபத்தை அடைகிறான் (உணர்கிறான்).

இறைவன் ஆனந்த ஸ்வரூபமாக இருக்கிறார். அமைதியே வடிவான, வரையறுக்கப்படாத, அந்தப் பேரின்பத்தை, பக்தன் தன்னிடத்தில் உணர்கிறான். அதனால் மனதில் ஆழ்ந்த அமைதியை உணர்கிறான்.

உணர்வே அமைதியின் வடிவம், பேரின்பத்தின் வடிவம். அதை உணர்வதால் உள்ளத்திலும் பேரமைதி ஏற்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि ।

विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृतिसम्भवान् ।। १३ - १९ ।।

प்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி ।

விகாராம்ஶ்ச குணாம்ஶ்சைவ வித்தி

ப்ரக்ருதிஸம்பவாந் ।। 13 - 19 ।।

பதவுரை

ப்ரக்ருதிம் - ப்ரக்ருதியையும், **புருஷம் ச ஏவ** - புருஷனையும், **உபௌ அபி** - இவை இரண்டையும், **அநாதீ** - காரணமற்றவையாக, **வித்தி** - அறிந்துகொள். **விகாராந் ச** - மாற்றங்களையும், **குணாந் ச ஏவ** - குணங்களையும், **ப்ரக்ருதி-ஸம்பவாந்** - ப்ரக்ருதியிலிருந்து உண்டானதாக, **வித்தி** - அறிந்துகொள்.

பொழிப்புரை

ப்ரக்ருதி, புருஷன் - இவை இரண்டையும் காரணமற்றவையாக அறிந்துகொள். மாற்றங்களையும் குணங்களையும் ப்ரக்ருதியிலிருந்து உண்டானதாக அறிந்துகொள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ப்ரக்ருதி, புருஷன் ஆகிய சொற்களுக்குப் பொருள் கூறத் தொடங்குகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரக்ருதி, புருஷன் இரண்டும் அநாதி - காரணமற்றது, காலமற்றது. இரண்டும் எதிலிருந்து, எப்பொழுது தோன்றியது என்று கூற முடியாது.

இவை இரண்டிற்கும் காரணமுமில்லை. இவை எதனுடைய காரியமும் அல்ல.

ப்ரபஞ்சத்தில் நாம் அனுபவிக்கின்ற குணங்களும் குண பரிணாமங்களும் ப்ரக்ருதியிலிருந்துதான் தோன்றுகின்றன.

ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் ப்ரக்ருதி, புருஷன், குணங்கள் பற்றியெல்லாம் உபதேசிக்கப்பட்டுள்ளது. குணங்கள், விகாரங்கள் ஆகியவை படைப்புக்கு முன்னால் ஸமமான நிலையில் இருக்கின்றன. படைப்பின்பொழுது, அவை மாறுபாடுடைய நிலைக்கு வருகின்றன.

ஒரு விதையை, சரியான நேரத்தில் பூமியில் விதைக்கும்பொழுது, அதில் ஸமமாக இருக்கின்ற தன்மையில் சஞ்சலம் ஏற்பட்டு, அதிலிருந்து பரிணாமம் ஏற்படுகிறது.

அதுபோன்று இந்த மாபெரும் படைப்பில் ப்ரக்ருதியின் மாறுபாடுகள், குணங்கள் எப்படியிருக்கின்றன என்பதை, பகவான் இங்கு உபதேசிக்கிறார்.

ப்ரக்ருதியானது குணங்களையும் விகாரங்களையும் உடையது என்று தெரிந்துகொள் என்கிறார். மறைமுகமாக நாம் புரிந்துகொள்ள வேண்டியது - புருஷன் நிர்குணமாகவும் நிர்விகாரமாகவும் இருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

புருஷன் என்ற சொல்லால் தூய உணர்வே குறிப்பிடப்படுகிறது.

புராணத்வாத் புருஷ:। பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் இருப்பது.

பூர்ணத்வாத் புருஷ:। முழுமையானது, எங்கும் நீக்கமற நிறைந்தது.

புரி ஶேதே இதி புருஷ:। அனைவருடைய உடல்களிலும் உள்ளங்களிலும் உணர்வாக விளங்கிக் கொண்டிருப்பது.

புருஷன் மாற்றங்கள் அற்றது, குணங்கள் அற்றது. ப்ரக்ருதி மாற்றங்களுடன் கூடியது, குணங்களுடன் கூடியது.

कार्यकरणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते ।

पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ।। १३ - २० ।।

கார்யகரணகர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே ।

புருஷ: ஸுகது:க்காநாம் போக்த்ருத்வே

ஹேதுருச்யதே ।। 13 - 20 ।।

பதவுரை

கார்ய-கரண-கர்த்ருத்வே - பருவுடல், நுண்ணுடல், இந்த்ரியங்கள் ஆகியவற்றை உண்டுபண்ணும் விஷயத்தில், **ப்ரக்ருதி:** - ப்ரக்ருதியானது, **ஹேது:** - காரணமாக, **உச்யதே** - கூறப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

புருஷ: - சிதாபாஸன் (நிழல் உணர்வு), **ஸுகது:க்காநாம்** - இன்ப-துன்பங்களின், **போக்த்ருத்வே** - அனுபவ விஷயத்தில், **ஹேது: (இவ)** - காரணம் (போன்று), **உச்யதே** - கூறப்படுகிறான்.

பொழிப்புரை

பருவுடல்-நுண்ணுடல் (இந்த்ரியங்கள்) ஆகியவற்றை உண்டுபண்ணும் விஷயத்தில் ப்ரக்ருதியானது, காரணமாகக் கூறப்படுகிறது. சிதாபாஸனாகிய நிழல் உணர்வு, இன்ப துன்பங்களை அனுபவிப்பவன் போன்று கூறப்படுகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ப்ரக்ருதி, புருஷன் ஆகியவற்றைப் பற்றிய உபதேசத்தைத் தொடர்கிறார்.

ஏற்கெனவே ஏழாவது அத்யாயத்தில் என்னுடைய ப்ரக்ருதியானது - பராப்ரக்ருதி, அபராப்ரக்ருதி என்று இரண்டுவிதமாக இருக்கிறது என்று பகவான் கூறினார்.

பராப்ரக்ருதிதான் க்ஷேத்ரஜ்ஞன், ஞேயம், புருஷன்.

அபராப்ரக்ருதிதான் க்ஷேத்ரம், ப்ரக்ருதி என்று சொல்லப்படுகிறது.

கார்யம் என்பது பருவுடல். கரணம் என்பது கர்மேந்த்ரியங்கள், ஞானேந்த்ரியங்கள், மனம் ஆகிய கருவிகள். இவை அனைத்தும் அபராப்ரக்ருதியாகிய மாயையிலிருந்துதான் தோன்றியிருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

புருஷன் என்பது ஜீவசைதன்யம். அவனே, இந்த ப்ரக்ருதியில் அறியாமையால் இன்பதுன்பங்களை அனுபவிக்கிறான்.

அறியாமையுடன் கூடிய சேதனம்தான், இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

உண்மையிலேயே நிர்குணமான, நிர்விகாரமான புருஷனிடத்தில், இந்த ப்ரக்ருதியானது, கார்ய கரணங்களை உண்டுபண்ணி, உண்மையை மறைத்து, இன்ப துன்பங்களை அனுபவிக்கும்படிச் செய்கிறது.

நாம் எல்லோரும் உடல், மனம், புத்தி ஆகியவற்றுக்கு, அறியாமையால் அடிமையாகி, இந்த உடல், மனம், புத்தி மூலமாக உலக ஆசாபாசங்களுக்கு ஆளாகி, இன்ப துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

கார்ய-கரண-கர்த்ருத்வத்திற்கு ப்ரக்ருதி காரணம். போக்த்ருவத்திற்குக் காரணம் புருஷன்.

கர்மாவைச் செய்வதும் புருஷன்தான். அறியாமையால் செயல்புரிகிறான், அதற்கு ப்ரக்ருதி உதவி செய்கிறது. கர்மாவைச் செய்வதால், அதன் பலனை அனுபவிக்கிறான், அதற்கும் ப்ரக்ருதி உதவுகிறது.

அறியாமையினால் செயல்புரிவது, செயலின் பலனை அனுபவிப்பது என்பது புருஷனுக்கு ஏற்படுகிறது. அதற்கு மாயாசக்தியாகிய அபராப்ரக்ருதி உதவிபுரிந்து கொண்டிருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान्गुणान् ।

कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ।। १३-२१ ।।

புருஷ: ப்ரக்ருதிஸ்த்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந்குணாந் ।

காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு ।। 13 - 21 ।।

பதவுரை

ஹி - ஏனெனில், **ப்ரக்ருதிஸ்த்த:** - ப்ரக்ருதியில் இருக்கின்ற, **புருஷ:** - புருஷன், **ப்ரக்ருதிஜாந்** - ப்ரக்ருதியில் உண்டான, **குணாந்** - குணங்களை, **புங்க்தே** - அனுபவிக்கிறான். **அஸ்ய** - இவனுக்கு, **குணஸங்க:** - குணங்களுடன் உள்ள தொடர்பானது, **ஸத்-அஸத்** - மேலானவையும் கீழானவையும் ஆகிய, **யோநி-ஜந்மஸு** - யோனிகளில் பிறப்புக்கு, **காரணம்** - காரணமாக அமைகிறது.

பொழிப்புரை

ஏனெனில், ப்ரக்ருதியில் இருக்கின்ற புருஷன், ப்ரக்ருதியில் உண்டான குணங்களை அனுபவிக்கிறான். இவனுக்கு, குணங்களுடன் உள்ள தொடர்பானது, மேலானவையும் கீழானவையும் ஆகிய யோனிகளில் பிறப்புக்குக் காரணமாக அமைகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ப்ரக்ருதி, புருஷனைப் பற்றி உபதேசித்துக் கொண்டிருக்கிறார். ப்ரக்ருதி, புருஷன்

Downloaded from **www.omkaravidya.com**

இரண்டுமே அநாதி. குணங்களும் விகாரங்களும் ப்ரக்ருதியைச் சேர்ந்தவை.

கார்ய, கரணங்கள் (உடல், இந்த்ரியங்கள்) ஆகியவற்றுக்குக் காரணம் ப்ரக்ருதி. இன்ப துன்பங்களை அனுபவிப்பது புருஷன்.

இந்த ச்லோகத்தில் பகவான் இவ்வாறு கூறுகிறார். ப்ரக்ருதியுடன் தன்னை அபிமானித்துக் கொண்டிருக்கின்றவன், அதாவது உடல்-மனதை ஆத்மாவாக நினைப்பவன், அறியாமையினால் ப்ரக்ருதியின் குணங்களை அனுபவிக்கிறான்.

புருஷன் அறியாமையினால், ப்ரக்ருதியை (உடல்-மனம் முதலியவற்றை) ஆத்மாவாக எண்ணிக்கொள்கிறான்.

ப்ரக்ருதியினால் ஏற்படுகின்ற இன்ப-துன்ப மோஹங்கள் - அதாவது நான் இன்பமாக இருக்கிறேன், நான் துன்பமாக இருக்கிறேன், நான் பண்டிதனாக இருக்கிறேன், நான் முட்டாளாக இருக்கிறேன் என்று கூறிக்கொண்டு, ப்ரக்ருதியின் குணங்களை அனுபவிக்கிறான்.

ஸத்யோநி: என்றால் தேவர்கள் முதலான மேலான சரீரங்கள். **அஸத்யோநி:** என்றால் கீழான சரீரங்கள். மனித சரீரம் இடைப்பட்ட நிலையில் இருக்கிறது.

பல பிறவிகளாக, இவன் உடல்-மனம் ஆகியவற்றில் அபிமானம் கொண்டிருக்கிறான். இந்த அபிமானத்தால்தான் அவன் இன்ப-துன்பங்களை அனுபவிக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸம்ஸாரம் அல்லது துன்பத்திற்குக் காரணம் குணஸங்கம் - தன்னை அவற்றுடன் சேர்த்துக்கொள்ளுதல்.

புருஷன், ப்ரக்ருதியில் இருந்துகொண்டு, ப்ரக்ருதியையே (ப்ரக்ருதியின் கார்யமாகிய உடல், மனதையே) ஆத்மாவாக நினைத்துக்கொண்டு, ப்ரக்ருதியின் குணங்களைத் தன்னுடைய குணங்களாக எண்ணி அனுபவிக்கிறான்.

பல பிறவிகளாக, இதனிடத்தில் அபிமானம் வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு பிறவியிலும் உடல்-மனதுடன் தன்னை இணைத்துப் பழகிவிட்டான்.

அதனால் வாழ்க்கையில் ஏகப்பட்ட ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் உடையவனாக, இன்ப துன்பங்களை அனுபவிக்கிறான்.

பகவான் புருஷனின் உண்மையான இலக்கணத்தை அடுத்த ச்லோகத்தில் கூறுகிறார்.

उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।

परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः।। १३ - २२ ।।

उपद्रष्टानुमन्ता च भर्त्ता भोक्ता महेश्वरः ।

परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ।। 13 - 22 ।।

பதவுரை

அஸ்மிந் - இந்த, **தேஹே** - உடலில், **பர:** - மேலான, **புருஷ:** - புருஷன், **உபத்ரஷ்டா** - அருகில் நின்று காண்பவர், **அநுமந்தா**

Downloaded from **www.omkaravidya.com**

ச - அனுமதிப்பவர், **பர்த்தா** - தாங்குபவர், **போக்தா** - அனுபவிப்பவர், **மஹேஶ்வர:** - உடலில் இருந்துகொண்டு அருள்புரியும் மேலான ஈச்வரன், **பரமாத்மா** - (இடம், பொருள், காலம் முதலான எந்த வரையறைகளும் இல்லாத) தூய உணர்வாகிய பரமாத்மா, **இதி ச அபி** - என்றும், **உக்த:** - (சாஸ்த்ரங்களிலும் மஹான்களாலும்) கூறப்பட்டுள்ளது.

பொழிப்புரை

இந்த உடலில் மேலான புருஷன் - அருகில் நின்று காண்பவர், அனுமதிப்பவர், தாங்குபவர், அனுபவிப்பவர், உடலில் இருந்துகொண்டு அருள்புரியும் மேலான ஈச்வரன், இடம், பொருள், காலம் முதலான எந்த வரையறைகளும் இல்லாத தூய உணர்வாகிய பரமாத்மா - இவ்வாறெல்லாம் இருக்கிறார் என்று சாஸ்த்ரங்களிலும் மஹான்களாலும் கூறப்பட்டுள்ளது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், புருஷன், ப்ரக்ருதியின் குணங்களில் பற்றுடையவனாக, இன்ப துன்பங்களை அனுபவிக்கிறான் என்று கூறினார்.

உயிரின் ஸம்ஸாரத்திற்குக் காரணம், அறியாமையும் அறியாமையினால் தோன்றுகின்ற ஆசை, பற்று ஆகியவையே ஆகும். உயிர், தன்னை மெய்ப்பொருளாக உணர்ந்து, ஆசை, பற்று ஆகியவற்றை விட வேண்டும்.

அதன்பொருட்டு பகவான் இங்கு புருஷனின் யதார்த்த ஸ்வரூபத்தை உபதேசிக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

யஜ்ஞாத்வா அம்ருதம் அஶ்நுதே। (13-12) எதை அறிந்தால், ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு, மோக்ஷ இன்பத்தை உணர்வாயோ என்று ஏற்கெனவே கூறினார்.

ஆத்மாவின்மீது கற்பிக்கப்பட்டுள்ளவற்றை அத்யாரோப-அபவாத முறையில் நீக்க வேண்டும் என்பதையும் ஞேயம் என்ற தலைப்பின்கீழ் பகவான் கூறினார்.

உபத்ரஷ்டா - தான் மாறாமல் இருந்துகொண்டு, அருகிலிருந்து உடல், மனதின் செயல்களை அறிபவர், அருகிலிருந்து காண்பவர், ஸாக்ஷி.

ஒருவன் வேலை செய்யும்பொழுது, அவனது கைகால்கள் அசைகின்றன, அவனிடத்தில் மாற்றங்கள் தென்படுகின்றன. ஆனால், அருகிலிருந்து காண்பவனிடத்தில் எந்த மாற்றமும் இல்லை.

யாகசாலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகளுடன் இதனை இணைத்துக் கூறுகிறார் ஆதிசங்கரர். யாகசாலையில் யஜமானன், புரோகிதர்கள் எல்லோரும் பலவிதமான செயல்களைச் செய்துகொண்டிருப்பார்கள்.

ஆனால், அந்த யாகசாலையில் ப்ரஹ்மா என்ற ஒருவர், நன்கு விஷயம் தெரிந்தவர், ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு, அனைத்தும் சரியாக நடக்கின்றனவா என்று மேற்பார்வை பார்த்துக் கொண்டிருப்பார்.

அவரைப் போன்று, இந்த உடலிலுள்ள மனம், இந்த்ரியங்கள் ஆகியவை செயல்பட்டாலும், செயல்படாமல்

Downloaded from **www.omkaravidya.com**

இருந்துகொண்டு, இந்தச் செயல்பாடுகளைக் கவனிப்பது தூய உணர்வே ஆகும். அதுவே இங்கு **உபத்ரஷ்டா** என்று சொல்லப்படுகிறது. செயல்படுகின்ற இந்த்ரியங்களுடன் இணைந்து, மாறாமல், விகாரப்படாமல், அவற்றைப் பார்ப்பது தூய உணர்வே ஆகும்.

ஆதிசங்கரர் மற்றொரு பொருளும் கூறுகிறார். கண்கள், மனம், புத்தி - இவை எல்லாப் புறப்பொருட்களையும் பார்க்கின்றன. கண்கள் பார்க்கின்றன. கண்களை மனம் பார்க்கிறது. மனதைப் பார்க்கக்கூடியதாக ஆத்மா இருக்கிறது.

ஆத்மா அருகிலிருந்து பார்ப்பவன் என்று சொல்லும்பொழுது, ஸாக்ஷியாக இருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த உடலில் இருந்துகொண்டு, உலகின் ஆசாபாசங்களுக்கு ஆளாகி, இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். அந்த அனுபவங்களுக்கு ஸாக்ஷியாக இருப்பதே நம் உண்மையான ஸ்வரூபம்.

அநுமந்தா - அனுமதி கொடுப்பவர். உடல், மனம் முதலியவை இயங்குவதற்கு அருள்புரிபவர். வெளிச்சமில்லையெனில் எப்படிச் செயல்புரிய முடியாதோ, அப்படி ஆத்ம சைதன்யம் இல்லையெனில், உடலோ மனதோ செயல்புரிய முடியாது.

பர்த்தா - உணர்வாக இருந்துகொண்டு, எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருப்பவர். உடல், மனம், புத்தி, இந்த்ரியங்கள் ஆகியவை சேர்ந்திருந்தாலும், ஆத்ம

Downloaded from **www.omkaravidya.com**

சைதன்யம் இருப்பதால்தான், இவை ஒன்றாகச் சேர்ந்து செயல்புரிகின்றன.

நகையைத் தங்கம் தாங்குகிறது. கடலைத் தண்ணீர் தாங்குகிறது. தாங்குதல் என்றால், கீழே ஒரு பொருள் இருந்துகொண்டு, தனக்கு மேலே ஒரு பொருளைத் தாங்குவதைப் போன்று அல்ல.

இங்கு சொல்லப்படுவது - வ்யாபித்துத் தாங்குதல். நகையை வ்யாபித்து எப்படித் தங்கம் தாங்கிக் கொண்டிருக்கிறதோ, அப்படி இந்த ஆத்ம சைதன்யம், உடல், மனம் எல்லாவற்றையும் வ்யாபித்து, அவைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது.

போக்தா - எல்லாவற்றையும் அனுபவிப்பவர். ஆத்மா அனைத்தையும் நுகர்வதுபோலக் காணப்படுகிறது. ஆராய்ந்து பார்த்தால், நுகர்ச்சிக்கு ஸாக்ஷியாக இருக்கிறது என்பது விளங்கும்.

மஹேஶ்வர: - எல்லோருடைய உடல்களிலும் இருந்துகொண்டு அருள்புரிபவர்.

உடல், மனம், புத்தி ஆகியவைகளை அறிந்தாலும், இவற்றை உண்மையில்லை என்று நீக்கும்பொழுது, அறியும்தன்மையும் நீங்கிவிடும்.

இந்த வாழ்க்கை கனவுக்கு ஒப்பானது என்ற உண்மையைப் புரிந்துகொள்ளும்பொழுது, இவற்றுக்கு ஸாக்ஷியாக இருக்கிறார் என்ற தன்மையையும் நீக்கிவிடுவோம்.

Downloaded from **www.omkaravidya.com**

நாம் அறிகின்ற பொருட்களெல்லாம் வெறும் மாயத்தோற்றம் என்று புரிந்துகொள்ளும்பொழுது, அறிகின்ற தன்மையும் மாயத்தோற்றம் என்று புரிந்துகொள்வோம். அதைத்தான் **பரமாத்மா** என்ற சொல் குறிக்கிறது.

புருஷன், உண்மையில் தூய உணர்வாக, காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் வரையறுக்கப்படாத, முழுமையான மெய்ப்பொருளாக விளங்குகிறார்.

நிழல் உணர்வு, நிஜ உணர்வு - இரண்டும் இந்த உடலில் இருக்கின்றன. அனுபவித்தல் முதலானவை நிழல் உணர்வுக்குத்தான் இருக்கின்றது.

எங்கும் நிறைந்துள்ள தூய உணர்வுதான், மாயையினால், (ப்ரக்ருதியினால்) வரையறுக்கப்பட்ட ஜீவன்போன்று காட்சியளிக்கிறது.

நிஜ உணர்வு எங்கும் நீக்கமற நிறைந்தது. இடம், காலம், பொருள் ஆகியவற்றைக் கடந்தது. அந்தத் தத்துவமாக நம்மைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இந்த ச்லோகத்தின் உள்ளார்ந்த பொருள்.

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।

सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ।। १३ - २३ ।।

ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணை: ஸஹ ।

ஸர்வதா வர்த்தமானோ5பி ந ஸ பூயோ5பிஜாயதே ।। 13 - 23 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ய: - எவன், **புருஷம்** - புருஷனையும் (நிர்குணமான பரமாத்மாவையும்), **ப்ரக்ருதிம் ச** - ப்ரக்ருதியையும், **குணை: ஸஹ** - குணங்களுடன் கூட, **ஏவம்** - இவ்வாறு, **வேத்தி** - (பிரித்து) அறிகிறானோ, **ஸ:** - அவன், **ஸர்வதா** - எவ்வாறு, **வர்த்தமாந: அபி** - எந்த வாழ்க்கைமுறையில் இருந்தாலும், **பூய:** - மீண்டும், **ந அபிஜாயதே** - பிறப்பதில்லை (அகப்பற்று, புறப்பற்று முதலியவற்றில் ஆழ்வதில்லை).

பொழிப்புரை

நிர்குணமான புருஷனையும், குணங்களுடன் கூடிய ப்ரக்ருதியையும் இவ்வாறு எவன் பிரித்து அறிகிறானோ, அவன் எவ்வாறு, எந்த வாழ்க்கைமுறையில் இருந்தாலும், அவன் மீண்டும் அகப்பற்று, புறப்பற்று முதலியவற்றில் ஆழ்வதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்துடன் ப்ரக்ருதி-புருஷ-விவேகத்தை நிறைவு செய்கிறார்.

புருஷன், ப்ரக்ருதி இரண்டுமே அநாதி. குண விகாரங்களுக்குக் காரணம் ப்ரக்ருதி. புருஷன், ப்ரக்ருதியில் இருந்துகொண்டு, இன்ப துன்பங்களை அனுபவிப்பவன்போலக் காணப்படுகிறான். புருஷனுக்கு உண்மையிலேயே இன்ப துன்பங்கள் இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

எவரொருவர், குணங்களுடன் கூடியுள்ள ப்ரக்ருதியையும், நிர்குணமான புருஷனையும் இவ்வாறு குரு, சாஸ்த்ர உபதேசங்களின் மூலம் நன்கு பகுத்து அறிகிறாரோ, அவர் மீண்டும் பிறப்பதில்லை என்கிறார் பகவான்.

மோக்ஷம் என்பது மீண்டும் உடல் எடுக்காத நிலை. ப்ரக்ருதியையும் புருஷனையும் பிரித்து அறிபவர், தன்னுணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார். தன்னுணர்வை முக்கியமாக நினைத்தால்தான் ஸம்ஸாரம். தன்னை ஒரு குறுகிய உடலாகவோ மனமாகவோ அவர் கருதிக் கொள்வதில்லை.

அவர் ப்ரஹ்மசர்யம், க்ருஹஸ்த்தம், வானப்ரஸ்த்தம், ஸந்ந்யாஸம் ஆகியவற்றில் எந்த வாழ்க்கைமுறையைப் பின்பற்றினாலும், எப்படிப்பட்ட வாழ்க்கைமுறையில் இருந்தாலும், அவற்றிற்குரிய அறங்களை உலகியல் வாழ்க்கையில் கடைப்பிடிப்பார். ஆனால் அவர் உடல்பற்று, உலகப்பற்று உடையவராக இருப்பதில்லை.

ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मानमात्मना ।

अन्ये साङ्ख्येन योगेन कर्मयोगेन चापरे ।। १३ - २४ ।।

த்யாநேநாத்மநி பஶ்யந்தி கேசிதாத்மாநமாத்மநா ।
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே ।। 13 - 24 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

கேசித் - சிலர், **கர்மயோகேந** - கர்மயோகத்தினாலும், **அபரே ச** - இன்னும் சிலர், **ஸாங்க்யேந யோகேந** - ச்ரவண, மனனங்களாலும் (வேதாந்த விசாரத்தினாலும்), **அந்யே** - மற்றும் சிலர், **த்யாநேந** - நிதித்யாஸனத்தாலும், **ஆத்மாநம்** - மெய்ப்பொருளை, **ஆத்மநா** - குருமுகமாக சாஸ்த்ரங்களைக் கற்ற புத்தியினால், **ஆத்மநி** - மனதில், **பஶ்யந்தி** - காண்கிறார்கள் (உணர்கிறார்கள்).

பொழிப்புரை

சிலர் கர்மயோகத்தினாலும், இன்னும் சிலர், ச்ரவண, மனனங்களாலும், அதாவது வேதாந்த விசாரத்தினாலும், மற்றும் சிலர் நிதித்யாஸனத்தாலும் மெய்ப்பொருளை, குருமுகமாக சாஸ்த்ரங்களைக் கற்ற புத்தியினால் மனதில் உணர்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஆன்மிக வாழ்க்கையிலுள்ள மூன்று விதமான ஸாதகர்களைப் பற்றிக் கூறுகிறார்.

எல்லா ஸாதகர்களுடைய நோக்கமும், நான் தூய பரம்பொருளாக இருக்கிறேன் என்பதை உணர்ந்துகொள்வதே ஆகும்.

Downloaded from **www.omkaravidya.com**

நான் என்பது, உடல், மனம், புத்தி ஆகியவற்றால் வரையறுக்கப்பட்டது அல்ல. நான் என்பது உடல் முதலான அனைத்திற்கும் ஆதாரமான உணர்வைக் குறிக்கிறது.

உணர்வின் மீதுதான் வரையறுக்கப்பட்ட நான் என்பது இயங்கிக் கொண்டிருக்கிறது. மஹாகவி பாரதியாரின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், **நான் எனும் பொய்யை நடத்துவோன் நான்** என்று சொல்லலாம்.

இதனைத் தன்னுணர்வை வைத்துக்கொண்டுதான் சொல்ல முடியும். ஆனால், நான் என்பது உண்மையில் தன்னுணர்வைக் குறிக்காது. இதனை நாம் மறக்கக் கூடாது.

நம் உடலில் ஏதேனும் ஒரு பகுதியில் வலி இருந்தாலும், வாய்தான் வலி இருக்கிறது என்பதைச் சொல்கிறது. வாய் சொன்னாலும், அது வலியுள்ள அந்தப் பகுதியைத்தான் குறிக்கும்.

வாயால் ஸந்தோஷமாக இருக்கிறேன் என்று சொன்னாலும், அது மனதிலுள்ள ஸந்தோஷத்தைத்தான் குறிக்கும்.

அதேபோன்று, நான் எங்கும் நிறைந்த தூய உணர்வாக இருக்கிறேன் என்று சொல்லும்பொழுது, இதனை வரையறைக்குட்பட்ட உடல், மனதுடன் சேர்ந்துள்ள நான் என்ற தத்துவம் சொன்னாலும், அது வரையறைக்குட்படாத, எங்கும் நீக்கமற நிறைந்த தத்துவத்தைத்தான் குறிக்கும்.

இந்த உண்மையைப் புரிந்துகொள்வதற்கு, ஆன்மிக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் முயல்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

சிலர் ஆத்ம ஸ்வரூபத்தை, ஆசார்யரிடம் சாஸ்த்ரத்தை உபதேசம் பெற்ற, புத்தியைக் கொண்டு, தங்களுடைய உள்ளத்தில் த்யானத்தினால் பார்க்கிறார்கள்.

ஆத்மநா என்றால் குருமுகமாக, ஸம்ப்ரதாயமாக, சாஸ்த்ரங்களைக் கற்ற புத்தியினால் என்று பொருள்.

ஆத்மநி என்றால் மனதில், **ஆத்மானம்** என்றால் ஆத்மாவை, மெய்ப்பொருளை நிதித்யாஸனத்தினால் பார்க்கிறார்கள் (உணர்கிறார்கள், த்யானிக்கிறார்கள்).

சிலர் நிதித்யாஸனத்தின் மூலம் ஆத்ம ஸ்வரூபத்தை உணர்கிறார்கள். இவர்கள் ச்ரவண, மனனங்களை நிறைவுசெய்து நிதித்யாஸனத்தைச் செய்பவர்கள்.

வேறு சிலர், ஸாங்க்ய யோகம் எனப்படும் ஞானயோக ஸாதனையில் ஈடுபடுகிறார்கள். அதாவது, வேதாந்த சாஸ்த்ர நூல்களை, குருமுகமாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். முறைப்படி ச்ரவணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் பின்னால் த்யானம் செய்து ஆத்மாவை உணர்வார்கள்.

வேறு சிலர், ச்ரவணத்திற்கு ஸாதனமான கர்மயோகத்தைச் செய்கிறார்கள். நாம் மனத்தூய்மையைப் பெற வேண்டும். அப்பொழுதுதான் ச்ரவணம் செய்ய முடியும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ச்ரவணம் செய்தால்தான், மனனம், நிதித்யாஸனம் முதலிய ஸாதனைகளைச் செய்ய முடியும்.

மனத்தூய்மையின் நோக்கம், ச்ரவண, மனனம். ச்ரவண மனனங்களின் நோக்கம், நிதித்யாஸனம்.

Downloaded from **www.omkaravidya.com**

நிதித்யாஸனம், ச்ரவண மனனம், கர்மயோகம் ஆகிய மூன்றுவிதமான ஸாதனைகளைச் செய்கின்ற ஸாதகர்களைப் பற்றி, பகவான் இந்த ச்லோகத்தில் கூறியிருக்கிறார்.

अन्ये त्वेवमजानन्तः श्रुत्वान्येभ्य उपासते ।

तेऽपि चातितरन्त्येव मृत्युं श्रुतिपरायणाः ।। १३ - २५ ।।

அந்யே த்வேவமஜாநந்த: ஶ்ருத்வாந்யேப்ய உபாஸதே ।

தேऽபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா: ।। 13 - 25 ।।

பதவுரை

து - மாறாக, **அந்யே** - மற்றும் சிலர், **ஏவம்** - இவ்வாறு, **அஜாநந்த:** - அறியாதவராய், **அந்யேப்ய:** - (சாஸ்த்ரங்களைக் கற்ற) மற்றவர்களிடமிருந்து, **ஶ்ருத்வா** - கேட்டறிந்து, **உபாஸதே** - த்யானிக்கிறார்கள். **தே அபி ச** - அவர்களும்கூட, **ஶ்ருதிபராயணா:** - சாஸ்த்ரத்தைக் கேட்பதில் ஈடுபாடு உடையவராய், **ம்ருத்யும்** - மரணத்தை, **அதிதரந்தி ஏவ** - நிச்சயமாகக் கடக்கிறார்கள்.

பொழிப்புரை

மாறாக, மற்றும் சிலர் இவ்வாறு அறியாதவராய், சாஸ்த்ரங்களைக் கற்ற மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்து த்யானிக்கிறார்கள். அவர்களும்கூட, சாஸ்த்ரத்தைக் கேட்பதில் ஈடுபாடு உடையவராய், மரணத்தை நிச்சயமாகக் கடக்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஞானத்தை அடையும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஸாதகரும் ஒவ்வொரு விதமான ஸாதனையைச் செய்கிறார்கள் என்று கூறுகிறார்.

சிலர் நிதித்யாஸனம், சிலர் ச்ரவண மனனம், சிலர் ச்ரவணம் செய்வதற்குரிய மனத்தூய்மையைப் பெறுவதற்காக கர்மயோகம் செய்கிறார்கள் என்று கூறினார்.

வேறு சிலரோ, நிறைய நற்செயல்களைச் செய்திருக்கிறார்கள், வைராக்யம் மிக்கவர்கள், ச்ரத்தாபக்தி மிக்கவர்கள்.

ஆனால், அவர்களுக்கு சாஸ்த்ரத்தை ஆழமாகக் கற்று, விஷயத்தை உள்வாங்கிக்கொள்கின்ற ஆற்றல் இல்லை.

ஆனால், அவர்களுடைய மனதில் பக்குவம் இருக்கிறது. எது நிலையானது, எது நிலையற்றது என்ற விவேகமும் வைராக்யமும் இருக்கிறது.

ஆனால் வ்யாகரணம், தர்க்கம் முதலான சாஸ்த்ரங்களை ஆழமாகக் கற்கவோ, பிறருக்கு எடுத்துக் கற்பிக்கவோ அவர்களுக்கு சக்தியில்லை.

அவர்களும் முமுக்ஷுக்கள்தான். அவர்கள் நன்கு சாஸ்த்ரங்களைக் கற்ற மஹான்கள், பெரியோர்களிடமிருந்து கேட்கிறார்கள். அவ்வாறு கேட்டுக் கேட்டே விஷயத்தை உள்வாங்கிக்கொள்கிறார்கள். தத்துவத்தைப் புரிந்துகொள்ளும் சக்தியை பகவான் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

அவர்கள் முற்பிறவிகளில் கர்மயோகம் செய்திருக்கக்கூடும். அவர்களுக்கு இறையருள் நிறைய இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

அவர்கள் பாமர ஜனங்களாக இருந்தாலும், மஹாத்மாக்களிடத்தில் ச்ரத்தாபக்தியை வைத்து, அவர்கள் கூறுகின்ற தத்துவ விஷயங்களை நன்கு புரிந்துகொள்கிறார்கள்.

அவர்களும்கூட இந்த ஸம்ஸாரத்தை, பிறவிப்பெருங்கடலை நிச்சயமாகக் கடந்துவிடுகிறார்கள். **ம்ருத்யு:** என்றால் இந்த இடத்தில் பிறப்பு-இறப்புச் சுழல். அதனை அவர்கள் கடந்துவிடுகிறார்கள்.

அவர்களுக்கு பகவான், **ஶ்ருதிபராயணா:** என்று ஒரு பெயர் கொடுக்கிறார். அவர்கள் சாஸ்த்ரங்களைக் கேட்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள்.

காசி முதலான க்ஷேத்ரங்களில் தொடர்ந்து மஹாத்மாக்களின் ஸத்ஸங்கங்கள் நடந்து கொண்டிருக்கும். அங்கு சென்று, அந்த மஹான்கள் கூறுவதைக் கேட்டுக் கேட்டே ஆனந்தமாக இருப்பார்கள்.

இந்தப் பிறவியில் அறிய வேண்டிய உண்மையை உணராதவர்கள் மீண்டும் மீண்டும் தன்னிடத்திலேயே வருகிறார்கள் என்று யமதர்மராஜா கடோபநிஷதத்தில் கூறுகிறார். அவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

அதாவது உடல்பற்று, உலகப்பற்றில் அவர்கள் உழலுகிறார்கள் என்று பொருள்.

விவேக வைராக்யத்துடன் கூடியவர்களாக, மஹான்களிடமிருந்து விடாமல் ச்ரவணம் செய்பவர்களுக்கு, ச்ரவணத்திலேயே மனன நிதித்யாஸனங்களும் அமைந்துவிடுகின்றன. அவ்வாறு கேட்டுக் கேட்டே அவர்கள் ஸம்ஸார ஸாகரத்தை நிச்சயமாகக் கடந்துவிடுகிறார்கள்.

இதில் ஒரு நுணுக்கமான விஷயம் இருக்கிறது. சாஸ்த்ரத்தை முறையாகக் கேட்பவர்தான் ஸம்ஸாரத்தைக் கடப்பார்.

ச்ரவணமே இவர்களுக்கு மனன நிதித்யாஸனமும் ஆகிவிடுகிறது. அதனால் அவர்கள் ஸம்ஸாரத்தைக கடந்துவிடுகிறார்கள்.

यावत्सञ्जायते किञ्चित्सत्त्वं स्थावरजङ्गमम् ।

क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ।। १३ - २६ ।।

யாவத்ஸஞ்ஜாயதே கிஞ்சித்ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத்தத்வித்தி பரதர்ஷப ।। 13 - 26 ।।

பதவுரை

ஹே பரதர்ஷப! - ஓ பரதகுலத்தில் உதித்த சிறந்தோனே! **யாவத்** - யாதொன்று, **ஸ்தாவரஜங்கமம்** - அசையாதது, அசைவதாக (உயிருள்ள, உயிரற்ற), **கிஞ்சித்** - காணப்படுகின்ற அனைத்து, **ஸத்த்வம்** - வேற்றுமைப் பொருட்களும், **ஸஞ்ஜாயதே** -

Downloaded from **www.omkaravidya.com**

நன்கு தோன்றுகிறதோ, **தத்** - அது, **க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-ஸம்யோகாத்** - க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் இவர்களைப் பற்றிய அவிவேகத்தினால் ஏற்பட்டது, **(இதி) வித்தி** - என்று அறிந்துகொள்.

பொழிப்புரை

ஓ பரத குலத்தில் உதித்த சிறந்தோனே! அசைகின்ற, அசையாத, உயிருள்ள, உயிரற்றவைகளாகக் காணப்படுகின்ற வேற்றுமைப் பொருட்கள் அனைத்தும் தோன்றுவதற்குக் காரணம், க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞனைப் பற்றிய பகுத்தறிவின்மையே என்று அறிந்துகொள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இதுவரை உபதேசித்தவற்றின் சுருக்கத்தைக் கூறுகிறார்.

ச்லோகத்திலுள்ள **ஸத்த்வம்** என்ற சொல்லுக்கு, நாம் அனுபவிக்கின்ற வேற்றுமைப்பொருட்கள் என்று அர்த்தம்.

நாம் அனுபவிக்கின்ற அசைகின்ற, அசையாத பொருட்கள் அனைத்திலும் உயிருள்ளவை, உயிரற்றவை ஆகியவை இருக்கின்றன. இவை அனைத்தும் மாயாசக்தியினால் ஓர் ஒழுங்குப்பாட்டுடன் தோன்றுகின்றன.

தோன்றுதல், இருத்தல், ஒடுங்குதல் ஆகிய எல்லாவற்றிலுமே ஓர் ஒழுங்கு இருப்பதைக் காண்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

யச்ச கிஞ்சித் ஜகத் ஸர்வம், ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் போன்ற இடங்களில் வருவதைப்போல, **கிஞ்சித், கிஞ்ச** போன்ற சொற்களுக்குச் சிறிதளவு என்று பொருள்கொள்வதைக் காட்டிலும், காணப்படுகின்ற அனைத்தும் என்று பொருள்கொள்ள வேண்டும்.

இவ்வாறு காணப்படுகின்ற, தோன்றுகின்ற அனைத்தும் க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞனுடைய சேர்க்கையினால் ஏற்படுகின்றன என்று பகவான் கூறுகிறார்.

பொதுவாக, **ஸம்யோகம்** என்ற சொல்லுக்கு, சேர்க்கை என்று பொருள். இந்த இடத்தில் **அவிவேகம்** என்று பொருள், அதாவது பகுத்தறிவின்மை.

க்ஷேத்ரத்தைப் பற்றியும் க்ஷேத்ரஜ்ஞனைப் பற்றியும் தெரியாததால்தான், இந்த ப்ரபஞ்சம் நமக்கு ஸத்யமாகத் தோன்றுகிறது. க்ஷேத்ரஜ்ஞனின் யதார்த்த ஸ்வரூபமான சைதன்யம் மட்டுமே உண்மை. அதன்மீது கற்பிக்கப்பட்டுள்ள இந்த வேற்றுமைகள் நிறைந்த உலகமனைத்தும், க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞனைப் பற்றிய அறியாமையினால் வந்தது.

இந்தத் தோற்றங்கள் அனைத்துமே, மெய்ப்பொருளை அறியாததால் ஏற்பட்ட வேற்றுமைக் கற்பனைகள்.

மெய்ப்பொருளை அறியாததால், நம்மால் மெய்ப்பொருளையும் பொய்ப்பொருளையும் பகுத்தறிய முடியவில்லை. குரு சாஸ்த்ரத்தின் மூலம் தத்துவத்தை

Downloaded from **www.omkaravidya.com**

ஆராய்ச்சிசெய்து பார்த்தால், க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விவேகம் ஏற்படுகிறது.

இந்த அத்யாயத்திற்குப் பெயரே **க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விபாகயோகம்** என்பதுதான்.

இந்த க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விபாக ஞானத்தினால் இந்த ப்ரபஞ்சம் மித்யா என்பது நமக்கு விளங்குகிறது.

க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் நாம் நன்கு சேர்த்துக் குழப்பியிருப்பதால், அவிவேகத்தினால், இந்த மித்யா ப்ரபஞ்சம் நமக்குக் காட்சியளிக்கிறது என்று தெரிந்துகொள்கிறோம்.

யாதொன்று இந்த அசைகின்ற, அசையாத அனைத்துமாகத் தோற்றமளிக்கிறதோ, அந்தத் தோற்றத்திற்குக் காரணம் க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-அவிவேகமே ஆகும். ப்ரக்ருதி-புருஷ-அவிவேகம் என்றும் சொல்லலாம்.

க்ஷேத்ரஜ்ஞனின் ஸ்வரூபமான தூய உணர்வைப் பற்றிய அத்வைத ஞானத்தை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும், பேதபுத்தியை விட்டுவிட வேண்டும்.

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।

विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति ।। १३ - २७ ।।

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம் ।

விநஶ்யத்ஸ்வவிநஶ்யந்தம் ய: பஶ்யதி ஸ பஶ்யதி ।। 13 - 27 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஸர்வேஷு - அனைத்து, **பூதேஷு** - உயிர்களிலும், **ஸமம்** - ஸமமாக, **திஷ்டந்தம்** - விளங்கிக் கொண்டிருப்பவரும், **விநஶ்யத்ஸு** - அழிவனவற்றுள், **அவிநஶ்யந்தம்** - அழியாதவரும், **பரமேஶ்வரம்** - (உடல், இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்ட மேலானவருமான) பரமேச்வரனை, **ய:** - எவன், **பஶ்யதி** - பார்க்கிறானோ, **ஸ:** - அவனே, **பஶ்யதி** - (மெய்ப்பொருளை) உணர்கிறான்.

பொழிப்புரை

அனைத்து உயிர்களிலும் ஸமமாக விளங்கிக் கொண்டிருப்பவரும், அழிவனவற்றுள் அழியாதவரும், உடல், இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்ட, மேலானவருமான பரமேச்வரனை எவன் பார்க்கிறானோ, அவனே மெய்ப்பொருளை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், **ஸம்யக்-தர்ஶநம்** என்று சொல்லப்படக்கூடிய ஸமதர்சனத்தை இங்கு உபதேசிக்கிறார்.

இந்த க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விபாக யோகத்தின் பயன் என்னவென்றால், க்ஷேத்ரத்தில் க்ஷேத்ரஜ்ஞனைத் தரிசித்தல்.

உலக வாழ்க்கையின் எல்லா மாயத் தோற்றங்களிலும், மாயைக்கு அப்பாற்பட்ட, மறையாத சைதன்ய தத்துவத்தைத்

Downloaded from **www.omkaravidya.com**

தரிசித்தலே மோக்ஷ ஸாதனம். அதுவே துன்பமில்லாத இன்பத்திற்கு ஸாதனம் என்பதுதான் சாஸ்த்ரத்தின் தாத்பர்யம்.

இந்த உலகில் நாம் காண்பதெல்லாம் அறியாமையினால் விளைந்த சேர்க்கை என்று பார்த்தோம். இந்தக் கற்பனையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ப்ரஹ்மா முதல் புல் வரை இருக்கக்கூடிய அனைத்து சரீரங்களிலும் ஸமமாக, அதாவது எந்தவிதமான வேற்றுமையும் இல்லாமல் இருப்பது நிர்விசேஷமான மெய்ப்பொருள்.

அதற்கு எந்தவிதமான அடைமொழியும் கூற முடியாது. நகையில் தங்கம் ஸமமாக இருக்கிறது. ஆடையில் நூல் ஸமமாக இருக்கிறது. கடலில் தண்ணீர் ஸமமாக இருக்கிறது. எல்லாப் பொருட்களிலும் ஆகாசம் ஸமமாக இருக்கிறது. அதுபோன்று, தூய உணர்வாகிய சைதன்யம், எல்லா சரீரங்களிலும் ஸமமாக இருக்கிறது.

எல்லாவற்றிலும் அத்வைதமான ஸம வஸ்துதான் இருக்கிறது. ஏற்கெனவே **பண்டிதா: ஸமதர்ஶிந:** (5-18) என்ற கருத்துக் கூறப்பட்டது. ஆறாவது அத்யாயத்திலும் இது கூறப்பட்டது.

பகவான் விஷமத்தில் உள்ள ஸமத்தைத் தரிசிக்கக் கற்றுத் தருகிறார். ஸமத்தைத் தரிசித்தால் ஆனந்தம், விஷமத்தைத் தரிசித்தால் துன்பம்தான்.

மேலான ஆத்ம தத்துவமானது, உடல், இந்த்ரியங்கள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டது என்பதை **பரமேஶ்வரம்** என்ற

Downloaded from **www.omkaravidya.com**

சொல்லானது குறிக்கிறது. **பரமாத்மா** என்று (13-22) ச்லோகத்தில் கூறப்பட்டதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இந்த சரீரத்திற்கு அதிபதியாக இருக்கின்ற ஜீவன், ஜகத்திற்கு அதிபதியாக இருக்கின்ற ஈச்வரன் - இருவருக்கும் ஆதாரமாக இருக்கின்ற சைதன்யமாகிய தூய உணர்வுதான், **பரமேஶ்வரம்** என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

அந்த பரமார்த்த தத்துவமானது, ஜீவனுக்கு ஜீவத் தன்மையையும், ஈச்வரனுக்கு ஈச்வரத் தன்மையையும் மாயையினால் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

அழிகின்ற உடல்களில், மாறுகின்ற மனங்களில், அழியாத, மாறாத, ஸமமான மெய்ப்பொருள் விளங்கிக்கொண்டிருக்கிறது. **திஷ்டந்தம்** என்ற சொல்லானது யாண்டும் விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிக்கிறது.

மெய்ப்பொருள் காண்பது அறிவு (திருக்குறள் - 355)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அந்த மெய்ப்பொருளை எவன் அறிவுக்கண்ணால் காண்கிறானோ, அவனே உண்மையைக் காண்கிறான்.

எவன் ஸமத்தைக் காண்கிறானோ, அவனே உண்மையைக் காண்கிறான், மெய்ப்பொருளைக் காண்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆக, விஷமமாக இருக்கின்ற க்ஷேத்ரத்தில், ஸமமாக இருக்கின்ற க்ஷேத்ரஜ்ஞனைத் தரிசிக்க வேண்டும். அதுவே மோக்ஷத்திற்கு ஸாதனம் என்பதை பகவான் உணர்த்துகிறார்.

समं पश्यन्हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।

न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ।। १३ - २८ ।।

ஸமம் பஶ்யந்ஹி ஸர்வத்ர ஸமவஸ்த்திதமீஶ்வரம் ।

ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம் ।। 13 - 28 ।।

பதவுரை

ஸர்வத்ர - எல்லா இடங்களிலும், **ஸமவஸ்த்திதம்** - நன்கு ஸமமாக இருக்கின்ற, **ஈஶ்வரம்** - ஈச்வரனை, **ஸமம்** - ஸமமாக, **பஶ்யந் ஹி (= ஏவ)** - காணும் காரணத்தாலேயே, **ஆத்மநா** - தன்னால், **ஆத்மாநம்** - தன்னை, **ந ஹிநஸ்தி** - அழித்துக்கொள்வதில்லை (அழிகின்ற உடல், மனமாக தன்னைக் கருதிக்கொள்வதில்லை). **தத:** - அதனால், **பராம்** - மேலான, **கதிம்** - கதியை (மோக்ஷத்தை), **யாதி** - அடைகிறான் (உணர்கிறான்).

பொழிப்புரை

எல்லா இடங்களிலும் நன்கு ஸமமாக இருக்கின்ற ஈச்வரனை, ஸமமாகக் காணும் காரணத்தாலேயே, அழிகின்ற உடல், மனமாக தன்னைக் கருதிக் கொள்வதில்லை. அதனால் மேலான மோக்ஷத்தை உணர்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸமதர்சனத்தைப் பற்றிய உபதேசத்தைத் தொடர்கிறார். முன்பு எல்லா சரீரங்களிலும் பரம்பொருள் இருக்கிறது என்று கூறினார். இங்கு, சரீரத்திற்கு உள்ளும், சரீரத்திற்கு வெளியிலும் எல்லா இடங்களிலும் பரம்பொருள் இருக்கிறது என்று கூறுகிறார்.

சுவரிடை வெளிபோல் என்று கைவல்ய நவநீதம் கூறும். சுவற்றுக்குள்கூட ஆகாசம் இருக்கிறது. அதுபோல, உடல்களுக்குள்ளும் உடல்களுக்கு வெளியிலும் உடல் முழுவதும் வ்யாபித்துள்ள தூய உணர்வு தத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்வைதமாக (இரண்டற்றதாக), எங்கும் வ்யாபித்திருக்கின்ற, அனைத்தையும் ஆளுகின்ற பரமேச்வரனை, அறிவால் அறிந்துகொள்ள வேண்டும்.

ஆளுதல் என்பது நேரடியாக அல்ல. ஸூர்யனின் வெளிச்சத்தில் நாம் செயல்புரிகிறோம். ஸூர்யன்தான் எல்லோரையும் செயல்பட வைக்கிறார் என்று கூறுகிறோம் அல்லவா!

உண்மையில் ஸூர்யனின் ஸந்நிதியில் நாம் செயல்படுகிறோம். அதுபோல, உணர்வின் அருளால், உடல், மனம், இந்த்ரியங்கள் செயல்படுகின்றன.

எல்லாவற்றிலும் ஸமமாக இருக்கின்ற, அனைத்தும் செயல்புரிவதற்கு அருள்புரிந்து கொண்டிருக்கின்ற அந்த

Downloaded from **www.omkaravidya.com**

ஒருமைப்பாட்டையே நன்கு கவனிக்கின்ற ஒருவன், தன்னைத் தானே அழித்துக் கொள்வதில்லை.

அழியக் கூடிய உடலாகவோ, மாறக் கூடிய மனமாகவோ, தன்னைக் கருதிக் கொள்வதில்லை என்று பொருள். அழிகின்ற, மாறுகின்ற பொருட்களுடன் இவன் தன்னை இணைத்துக் கொள்வதில்லை.

அவன் தன்னை இறவாதவனாக, பிறவாதவனாக, மாறாதவனாக உணர்கிறான். அதனால் அவன் மேலான கதியை, துன்பமில்லாத பேரின்பத்தை இங்கேயே இப்பொழுதே உணர்கிறான்.

அறியாமை அறவே அகன்றுவிட்டதால், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற மோக்ஷ இன்பத்தை உணர்கிறான்.

அழிகின்ற, மாறுகின்ற உடல், மனம் ஆகியவற்றில் வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே, அழியாத, மாறாத மெய்ப்பொருளாகத் தன்னை அறிந்து, முக்தியை உணர்கிறான்.

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।

यः पश्यति तथात्मानमकर्तारं स पश्यति ।। १३ - २९ ।।

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வஶ: ।

ய: பஶ்யதி ததாத்மாநமகர்த்தாரம் ஸ பஶ்யதி ।। 13 - 29 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ய: - எவன், **கர்மாணி** - கர்மங்கள் அனைத்தும், **ஸர்வஶ:** - எல்லா விதங்களிலும், **ப்ரக்ருத்யா ஏவ ச** - ப்ரக்ருதியினால்தான், **க்ரியமாணாநி** செய்யப்படுகின்றன, **(இதி) (பஶ்யதி)** - (என்று) (காண்கிறானோ), **ததா** - அவ்வாறே, **ஆத்மாநம்** - ஆத்மாவை, **அகர்த்தாரம்** - அகர்த்தாவாகவும், **பஶ்யதி** - காண்கிறானோ, **ஸ:** - அவனே, **பஶ்யதி** - (உள்ளதை உள்ளவாறு) காண்கிறான்.

பொழிப்புரை

எவன், கர்மங்கள் அனைத்தும் எல்லா விதங்களிலும் ப்ரக்ருதியினால்தான் செய்யப்படுகின்றன என்று காண்கிறானோ, அவ்வாறே ஆத்மாவை அகர்த்தாவாகவும் காண்கிறானோ, அவனே உள்ளதை உள்ளவாறு காண்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், செயல்புரிவது யார் என்பதைக் கூறுகிறார்.

கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை: (3-5)

ப்ரக்ருதிதான் எல்லாவற்றையும் செய்கிறது, ஆத்மா செயல்புரிவதில்லை என்று முன்பே கூறப்பட்டது. கர்மத்தில் அகர்மம் என்று நான்காவது அத்யாயத்திலும் இந்தக் கருத்து கூறப்பட்டது.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரக்ருதியினால்தான் எல்லா வகையிலும் செயல்கள் நிகழ்கின்றன. உலகியல் செயல்கள், ஆன்மிகச் செயல்கள் அனைத்தையும் முக்குணமயமான மாயைதான் செய்கிறது.

த்ரிபிர்குணமயை: பாவை: ஏபி: ஸர்வமிதம் ஜகத் । (7-13)

என்று பகவான் கூறியதை இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

நாம்தான் செயல்புரிகிறோம் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மாயாசக்திதான் காரியங்களைச் செய்கிறது.

ஜடமான மாயை எப்படிச் செயல்புரியும் என்று கேட்டால், தூய உணர்விடமிருந்து இரவல் வாங்கிக்கொண்டு செயல்புரிகிறது. ஆக, மாயாசக்திதான் செயலாற்றுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஸர்வஶ: என்பதற்கு நித்ய, நைமித்திக, காம்ய, ப்ராயச்சித்த, ப்ரதிஷித்த கர்மங்கள் அனைத்தும் என்று பொருள். இவ்வாறாக எல்லாச் செயல்களையும் மாயைதான் செய்கிறது.

க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ விவேகம் வரும்வரை, நாம்தான் செயல்புரிந்து கொண்டிருக்கிறோம் என்று நினைப்போம்.

ஆனால், விவேகம் வந்தவுடன், உடல், மனம் ஆகியவை மாயையால் செயல்புரிகின்றன என்று புரிந்துகொள்கிறோம்.

எல்லாச் செயல்களும் ப்ரக்ருதியினாலேயே செய்யப்படுகின்றன என்றும், அவ்வாறே, ஆத்மா

Downloaded from **www.omkaravidya.com**

செயல்புரியாதது என்றும், எவன் புரிந்துகொள்கிறானோ, அவனே உண்மையைப் பார்க்கிறான்.

எப்பொழுது ஒருவன் தன்னைச் செயல்புரியாதவன் என்று அறிகிறானோ, அப்பொழுதே அவன் உண்மையை உணர்கிறான். தன்னை மெய்ப்பொருளாக அறிந்து, முக்தியை உணர்கிறான்.

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।

तत एव च विस्तारं ब्रह्म सम्पद्यते तदा ।। १३ - ३० ।।

யதா பூதப்ருதக்பாவமேகஸ்த்தமநுபஶ்யதி ।
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ।। 13 - 30 ।।

பதவுரை

யதா - எப்பொழுது, **பூத-ப்ருதக்-பாவம்** - பல்வேறு உயிர்களின் உள்ளே உறைகின்ற, **ஏகஸ்த்தம்** - ஒன்றாகிய மெய்ப்பொருளை, **தத: ஏவ ச** - அதனிடமிருந்தே, **விஸ்தாரம்** - பரந்து விரிந்த ப்ரபஞ்சம் தோன்றியிருக்கிறது என்று, **அநுபஶ்யதி** - காண்கிறானோ (குருவின் உபதேசத்தின் துணைகொண்டு அறிகிறானோ), **ததா** - அப்பொழுது, **ப்ரஹ்ம** - பரம்பொருளை, **ஸம்பத்யதே** - அடைகிறான் (பரம்பொருளாகவே தன்னை உணர்ந்துகொள்கிறான்).

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

பல்வேறு உயிர்களின் உள்ளே உறைகின்ற, ஒன்றாகிய மெய்ப்பொருளிடமிருந்தே, இந்தப் பரந்து விரிந்த ப்ரபஞ்சம் தோன்றியிருக்கிறது என்பதை, குரு சாஸ்த்ர உபதேசத்தின் துணைகொண்டு எப்பொழுது ஒருவன் அறிகிறானோ, அப்பொழுதே அவன் பரம்பொருளை அடைகிறான். அதாவது, பரம்பொருளாகவே தன்னை உணர்ந்துகொள்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், நம்முடைய கவனமானது, தூய உணர்வில்தான் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த ச்லோகத்தைக் கூறுகிறார்.

வேற்றுமைகளைக் கவனித்தால், இன்ப துன்பங்களாகிய ஸம்ஸாரமானது தொடர்ந்துகொண்டே இருக்கும். வேற்றுமையில் இருக்கக்கூடிய அத்வைத ப்ரஹ்ம சைதன்யத்தைத்தான் நாம் எப்பொழுதுமே கவனிக்க வேண்டும்.

மோக்ஷத்திற்கு ஸாதனம், எல்லாவிடங்களில் ஸமமாக இருக்கின்ற மெய்ப்பொருளைக் கவனித்தலே ஆகும். பல்வேறு உபாதிகளில், உயிருள்ள, உயிரற்றவைகளில் ஒன்றாக இருக்கக்கூடிய மெய்ப்பொருளை உணர்ந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அநுபஶ்யதி என்பதற்கு, **சாஸ்த்ர-ஆசார்ய-உபதேஶம-அநுபஶ்யதி** - சாஸ்த்ரம், ஆசார்யருடைய உபதேசத்தைச் சார்ந்து, அறிவுக்கண்ணால் பார்த்தல் என்று பொருள்.

தத: ஏவ ச விஸ்தாரம் - மெய்ப்பொருளிலிருந்துதான் இந்தப் பரந்து விரிந்திருக்கின்ற ப்ரபஞ்சம் தோன்றியிருக்கிறது என்றும் புரிந்துகொள்ள வேண்டும்.

யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி ।
யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி । தத் விஜிஜ்ஞாஸஸ்வ ।
தத் ப்ரஹ்ம இதி । (தைத்திரீய உபநிஷத் - ப்ருகுவல்லீ)

என்று உபநிஷதம் கூறுவதற்கிணங்க, பரம்பொருளிடமிருந்துதான் ப்ரபஞ்சம் தோன்றியிருக்கிறது என்ற கருத்தானது கூறப்பட்டுள்ளது.

யாரிடமிருந்து இந்தப் பரந்து விரிந்திருக்கின்ற ப்ரபஞ்சம், இடம், காலம், பொருட்கள் ஆகியவை தோன்றியிருக்கின்றனவோ, அந்த மெய்ப்பொருள் எல்லாப் பொருட்களிலும் வ்யாபித்திருக்கிறது.

அவ்வாறு அனைத்திலும் வ்யாபித்துள்ள மெய்ப்பொருளை எவன் குரு, சாஸ்த்ரமுகமாக அறிந்துகொள்கிறானோ, அவன் அந்த மெய்ப்பொருளையே அடைகிறான்.

மெய்ப்பொருளை அடைதல் என்றால் என்ன?

எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும், எல்லாப் பொருட்களுமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும்

Downloaded from **www.omkaravidya.com**

மெய்ப்பொருளை உண்மையில் அடைய முடியாது. அதுவே நான் என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி । (முண்டகோபநிஷத் : 3-2-9)

பரம்பொருளை அறிபவன், பரம்பொருளாகவே ஆகிறான் என்று உபநிஷதம் கூறுகிறது.

பகவான், 29 ஆவது ச்லோகத்தில் ஜீவாத்ம பேதத்தை நிராகரித்தார். இந்த 30 ஆவது ச்லோகத்தில் அநாத்ம பேதத்தை நிராகரிக்கிறார் என்று ஓர் உரையாசிரியர் கூறுகிறார்.

ப்ரஹ்ம-ஆத்மா ஒன்றுதான் இருக்கிறது. பல ஜீவர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணுவது உண்மையல்ல. ப்ரஹ்மத்திற்கு அந்நியமாக ஒரு பொருளும் இல்லை. அவ்வாறு அந்நியமாகத் தோன்றுபவையெல்லாம் வெறும் தோற்றம், கற்பனை என்பதை பகவான் நிரூபித்திருக்கிறார்.

க்ஷேத்ரஜ்ஞனின் யதார்த்த ஸ்வரூபமான தூய உணர்வை அறிந்து, அந்தத் தூய உணர்வாகவே நம்மை உணர வேண்டும் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து.

अनादित्वान्निर्गुणत्वात्परमात्मायमव्ययः ।

शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ।। १३ - ३१ ।।

அநாதித்வாந்நிர்குணத்வாத்பரமாத்மாயமவ்யய: ।

ஶரீரஸ்த்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே ।। 13 - 31 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஓ கௌந்தேய - ஓ குந்தியின் புதல்வனே! **அநாதித்வாத்** - அநாதியாக இருப்பதாலும் (காரணமற்றதாக இருப்பதாலும்), **நிர்குணத்வாத்** - குணங்களற்றதாக இருப்பதாலும், **அயம்** - இந்த, **அவ்யய:** - அழிவில்லாத, **பரமாத்மா** - பரமாத்மா, **ஶரீரஸ்த்த: அபி** - உடல்களில் உள்ளதாயினும், **ந கரோதி** - (எதையும்) செய்வதும் இல்லை, **ந லிப்யதே** - எதிலும் ஒட்டிக்கொள்வதும் இல்லை.

பொழிப்புரை

ஓ குந்தியின் புதல்வனே! காரணமற்றதாக இருப்பதாலும், குணங்களற்றதாக இருப்பதாலும், இந்த அழிவில்லாத பரமாத்மா, உடல்களில் உள்ளதாயினும், எதையும் செய்வதும் இல்லை, எதிலும் ஒட்டிக்கொள்வதும் இல்லை. அதாவது, எதனாலும் பாதிக்கப்படுவதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் க்ஷேத்ரம்-க்ஷேத்ரஜ்ஞனைப் பகுத்து ஆராய்ந்து, க்ஷேத்ரஜ்ஞனை நன்கு உணரச் செய்கிறார்.

க்ஷேத்ரஜ்ஞனான தூய உணர்வையே, முக்கியமாக கவனிக்க வேண்டும். மனதில் அதுதான் ஆழமாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் அதைத்தான் நாம் உணர வேண்டும்.

இதை உணர்ந்துவிட்டால், மீண்டும் தன்னுணர்வு, யான், எனது என்ற எண்ணங்களுக்கு முக்கியத்துவம் இருக்காது. இந்த

Downloaded from **www.omkaravidya.com**

ஞானத்தைப் பெற்ற பிறகும், இந்த உலகில், இந்த உடலில் வாழ்ந்துகொண்டுதான் இருப்போம்.

இந்த உடலை அறச்செயல்களில் ஈடுபடுத்துவோம். ஆனால், அந்த அறச்செயல்களை நான்தான் செய்கிறேன் என்ற எண்ணமோ, அந்த அறச்செயல்களில் ஒட்டிக்கொள்வதோ, அந்தச் செயல்களின் விளைவுகளால் பாதிப்படைவதோ கிடையாது.

இந்த உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதும், தன்னைப் பரமாத்மாவாக இவன் உணர்ந்திருப்பதால், இவன் செயல்புரிவதுமில்லை, செயல்களிலோ செயல்களின் விளைவுகளிலோ ஒட்டிக்கொள்வதுமில்லை.

ஒருவர் துறவியாக இருந்தால் உலகியல் செயல்களையோ, வைதிக கர்மங்களையோ செய்யப் போவதில்லை.

த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராஶ்ரய: ।
கர்மண்யபிப்ரவ்ருத்தோऽபி நைவ கிஞ்சித் கரோதி ஸ: ।। 4 - 20 ।।

தன்னை மெய்ப்பொருளாக உணர்ந்தவன், செயல்புரிந்தாலும் செயல்புரியாதவனே என்று பகவான் கூறினார். செயலும், செயலின் பல்வேறு அம்சங்களும் ப்ரஹ்மமே என்று (4-24) ச்லோகத்தில் கூறினார்.

இந்த மாறாத பரமாத்மா, சரீரத்தில் இருந்தபோதிலும், செயல்புரிவதோ, செயலின் விளைவுகளால் பாதிப்படைவதோ இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

ஞானபலம் உடையவனின் உள்ளத்தை இன்பதுன்பங்கள் தாக்குவதில்லை. அறிவுவலிமையானது, மனவலிமையாக மாறும்.

இந்த பரமாத்மா தொடக்கமற்றது. அதாவது, எதிலிருந்தும் தோன்றாதது, குணங்களற்றது.

மாற்றங்களோ குணங்களோ இல்லாத பரமாத்மா, உடலில் இருந்தாலும், செயல்புரிவதுமில்லை, செயலின் விளைவுகளால் பாதிக்கப்படுவதுமில்லை.

பரமாத்மாவாகத் தன்னை உணர்ந்திருப்பவனும், செயல்புரிந்தாலும், தான் செயல்களால் பாதிக்கப்படுவதில்லை என்று புரிந்துகொள்ள வேண்டும்.

यथा सर्वगतं सौक्ष्म्यादाकाशं नोपलिप्यते ।

सर्वत्रावस्थितो देहे तथात्मा नोपलिप्यते ।। १३ - ३२ ।।

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாதாகாஶம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்த்திதோ தேஹே ததாத்மா
நோபலிப்யதே ।। 13 - 32 ।।

பதவுரை

யதா - எவ்வாறு, **ஸர்வகதம்** - எங்கும் வ்யாபித்துள்ள, **ஆகாஶம்** - ஆகாசமானது, **ஸௌக்ஷ்ம்யாத்** - மிகவும் நுண்மையாக இருப்பதால், **ந உபலிப்யதே** - பாதிக்கப்படுவதில்லையோ, **ததா** - அவ்வாறே, **தேஹே** - உடலில், **ஸர்வத்ர** - எங்கும்,

Downloaded from **www.omkaravidya.com**

அவஸ்த்தித: - வ்யாபித்துள்ள, **ஆத்மா** - ஆத்மா, **ந உபலிப்யதே** - பாதிக்கப்படுவதில்லை.

பொழிப்புரை

எவ்வாறு, எங்கும் வ்யாபித்துள்ள ஆகாசமானது, மிகவும் நுண்மையாக இருப்பதால் பாதிக்கப்படுவதில்லையோ, அவ்வாறே உடலில் எங்கும் வ்யாபித்துள்ள ஆத்மா பாதிக்கப்படுவதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தூய உணர்வு தத்துவத்தை, நம் உள்ளங்களில் நன்கு பதிய வைக்கிறார். நாம் எல்லோரும் உண்மையில் தூய உணர்வாக இருக்கிறோம், அதனால் நாம் நிறைவானவர்கள்.

குறைகளை உடைய, வரையறுக்கப்பட்ட உடல்கள், மனங்கள் அனைத்தும் மாயத்தோற்றங்கள், கற்பனைகள்.

ஆத்மா, செயல்களிலோ செயல்களின் பலன்களிலோ ஒட்டிக் கொள்வதில்லை என்ற கருத்தை, சென்ற ச்லோகத்தில் கூறிய பகவான், அதனைப் புரிந்துகொள்வதற்கு, இங்கு ஓர் உதாரணம் தருகிறார்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற ஆகாசமானது எதனுடனும் ஒட்டுவதில்லை. ஆகாசத்தில் கோடிக்கணக்கான பொருட்கள் இருக்கின்றன. ஆனால் எந்தப் பொருளின் குணமோ, தன்மையோ ஆகாசத்தைப் பாதிப்பதில்லை. மாசுகள்

Downloaded from **www.omkaravidya.com**

காற்றைத்தான் மாசுபடுத்த முடியுமே தவிர, ஆகாசத்தை எதுவும் மாசுபடுத்த முடியாது.

ஆகாசம் எத்தனை பொருட்களுக்கு இடம் கொடுத்தாலும், எத்தனைப் பொருட்களை வ்யாபித்திருந்தாலும், எப்பொழுதுமே எதனுடனும் ஒட்டாமல் இருக்கிறது. அதற்குக் காரணம், அது மிக நுண்மையாக இருப்பதே ஆகும். ஆத்மா அதைக் காட்டிலும் நுண்மையானது.

ஆத்மா நித்ய-அஸங்க:। ஆத்மா ஒருபொழுதும் எதனுடனும் ஒட்டிக் கொள்வதில்லை. உள்ளத்தில் தத்துவ ஞானம் பலமாக இருந்தால், எதுவும் நம்மைப் பாதிக்காது என்பதையும் அனுபவத்தில் உணரலாம்.

செயல்களை உண்மை என்று நினைத்து, நாம்தான் அதனுடன் நம்மை இணைத்துக்கொள்கிறோம். சிந்தித்துப் பார்த்தால், அவை உண்மையில் இல்லை என்பது விளங்கும்.

ஞானபலத்தினால், செயல்களின் பற்று என்பது தானாகவே நீங்கிவிடும்.

ஆகாசம் எப்படி எதனுடனும் ஒட்டாமல் இருக்கிறதோ, அப்படி, ஆத்மாவானது பலவிதமான மாறுபாடுகளை உடைய இந்த உடலில் சிறிதளவும் ஒட்டிக் கொள்வதில்லை, பாதிப்படைவதில்லை.

இந்த உடலில் இருக்கின்ற நான், இந்த உடல், மனதில் ஏற்படும் இன்ப துன்பங்களால் சிறிதளவும் பாதிக்கப்படுவதில்லை. பாதிக்கப்பட்டதாக, தவறாக எண்ணிக்கொள்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः ।

क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत ।। १३ - ३३ ।।

யதா ப்ரகாஶயத்யேக: க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி: ।

க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பாரத ।। 13 - 33 ।।

பதவுரை

ஹே பாரத! - ஓ பரத குலத்தோனே! **யதா** - எவ்வாறு, **ஏக:** - ஒரே, **ரவி:** - ஸூர்யன், **இமம்** - இந்த, **க்ருத்ஸ்நம்** - அனைத்து, **லோகம்** - உலகையும், **ப்ரகாஶயதி** - ஒளிர்விக்கிறதோ, **ததா** - அவ்வாறே, **க்ஷேத்ரீ** - க்ஷேத்ரியான ஆத்மா, **க்ருத்ஸ்நம்** - அனைத்து, **க்ஷேத்ரம்** - உடல்களையும், **ப்ரகாஶயதி** - ஒளிர்விக்கிறது.

பொழிப்புரை

ஓ பரத குலத்தோனே! எவ்வாறு ஒரே ஸூர்யன் இந்த அனைத்து உலகையும் ஒளிர்விக்கிறதோ, அவ்வாறே க்ஷேத்ரியான ஆத்மா அனைத்து உடல்களையும் ஒளிர்விக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஆத்மஸ்வரூபமான க்ஷேத்ரஜ்ஞன், அனைத்தையும் ஒளிர்விப்பது, தன்னில் தான் ஒளிர்வது என்ற கருத்தை உபதேசிக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆத்மாவிடமிருந்து உணர்வைப் பெற்று, உடல், மனம் முதலான பிறவனைத்தும் செயல்படுகின்றன. உதாரணத்தில் ஸூர்யனின் ஒளி கூறப்பட்டுள்ளது. இங்கு தூய உணர்வாகிய சைதன்யத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும்.

இருள், ஒளி என்பவை நம் கண்ணுக்குத் தெரிகின்றன. அதேபோன்று, ஆத்மாவிற்கு அஜ்ஞானம், ஞானம் (அறியாமை, அறிவு) என்பது தெரிகிறது.

ஆத்மா மனதிலுள்ள எண்ணங்களை அறிந்து, அதற்கு ஸாக்ஷியாக இருக்கிறது. ஆத்மா - அறிவையும் அறியாமையையும் அறிகின்ற தூய உணர்வொளியாக இருக்கிறது.

ஒளி என்ற சொல்லானது உபசாரத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. புறத்தில் உள்ள ஜட ப்ரகாசம்போன்று அதனை நினைத்துக்கொள்ளக் கூடாது.

புறத்திலுள்ள ஒளியை, கண் அறிகிறது. கண்ணை மனம் அறிகிறது. மனதை நான் அறிகிறேன். என்னை எதன் துணைகொண்டும் நான் அறிவதில்லை. என்னை நானே அறிகிறேன்.

எல்லாவற்றையும் அறிகிறேன். ஆனால், என்னை அறிவதற்கு எந்தக் கருவியும் தேவையில்லை. வெளிச்சத்தை அறிவதற்கு, கண் தேவை. கண்ணைத் தெரிந்துகொள்வதற்கு மனம் தேவை. மனதை அறிவதற்கு நான் போதும்.

Downloaded from **www.omkaravidya.com**

என்னைத் தெரிந்துகொள்வதற்கு எதுவும் தேவையில்லை. நானே க்ஷேத்ரஜ்ஞனாக, ஆத்ம சைதன்யமாக இருக்கிறேன்.

ஆத்மா ஸர்வப்ரகாஶக: ஸ்வயம்ப்ரகாஶ: - நான் அனைத்தையும் ஒளிர்விக்கிறேன், தன்னில் தான் ஒளிர்கிறேன்.

ஆத்மா உணர்வொளியாக இருந்துகொண்டு, அனைத்தையும் ஒளிர்விக்கிறது. ஒளிர்விக்கப்படுகின்ற அனைத்தும் மாயத்தோற்றங்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நடைமுறை வாழ்வின் கோணத்தில்தான் அறிபவன், அறியப்படுபொருள் போன்றவையெல்லாம். அறியப்படுகின்ற பொருட்கள் உண்மையல்ல, வெறும் தோற்றம் என்பதைப் புரிந்துகொண்டால், அறிபவன் என்ற தன்மையும் நீங்கிவிடும்.

அறிபவன் என்ற தன்மையை நீக்கிய பிறகு, அதைப் பற்றி நினைக்கவோ, பேசவோ முடியாது. உபதேசத்திற்காக இப்படிக் கூறுகிறோம்.

எப்படி ஒரே ஸூர்யன், இந்த அனைத்து உலகையும் ஒளிர்விக்கிறானோ, அப்படி ஒரே ஆத்ம சைதன்யம் எல்லா உடல்களையும் ஒளிர்விக்கிறது.

க்ஷேத்ரீ என்ற சொல், க்ஷேத்ரமாகிய உடலில் இருக்கின்ற ஆத்ம சைதன்யத்தைக் குறிக்கிறது.

ஒரே ஆத்ம சைதன்யம், எல்லா உடல்களையும், எல்லா உடல்களிலும் இருக்கின்ற எல்லா மனங்களையும், எல்லா ஜடப்பொருட்களையும் ஒளிர்விக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

ஒரு ஸூர்யன் இருப்பதுபோல், அத்வைத தத்துவமான ஆத்ம சைதன்யம் ஒன்றே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆத்மா அஸங்கமாக, எதனோடும் ஒட்டாததாக இருந்தாலும், அனைத்திற்கும் ஆதாரமாக இருந்துகொண்டு, அனைத்தையும் இயங்கச் செய்கின்ற உணர்வு தத்துவம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

ஆத்மா தானே ஒளிர்கிறது, பிறவற்றையும் தானே ஒளிர்விக்கிறது. ஒளிர்வித்தாலும் அவற்றுடன் ஒட்டிக்கொள்வதில்லை.

ஸூர்யன் மலம், சந்தனம் இரண்டையும் ஒளிர்விக்கிறது. ஆனால் மலம், சந்தனம் ஆகியவற்றின் குணங்கள் ஸூர்யனைப் பாதிப்பதில்லை, ஆகாசத்தையும் பாதிப்பதில்லை.

ஆகாசம், ப்ரகாசம் ஆகிய இரண்டு எடுத்துக்காட்டுகளின் மூலம், ஆத்மாவின் **அஸங்கத்வம்** (எதனோடும் ஒட்டாத தன்மை), **ஸ்வயம்ப்ரகாஶத்வம்** (தன்னில் தான் ஒளிர்கின்ற) ஆகியவை உபதேசிக்கப்பட்டன.

ஆகாசத்தைப் போன்று எதனோடும் ஒட்டாதது என்று சொல்வதால், அது ஜடம் என்று எண்ணிவிடக்கூடாது. அது உணர்வு என்பதைக் கூறி, சேதனத்தன்மையும் இங்கு உணர்த்தப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।

भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ।। १३ - ३४ ।।

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா ।
பூதப்ரக்ருதிமோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம் ।। 13 - 34 ।।

பதவுரை

ஏவம் - இவ்வாறு, **க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ:** - க்ஷேத்ர, க்ஷேத்ரஜ்ஞர்களின், **அந்தரம்** - இடையே, **பூத-ப்ரக்ருதி-மோக்ஷம் ச** - க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞ தன்மை இரண்டும் மித்யா என்று, **ஜ்ஞாந-சக்ஷுஷா** - அறிவையே கண்ணாகக்கொண்டு, **யே** - எவர்கள், **விது:** - அறிகிறார்களோ, **தே** - அவர்கள், **பரம்** - முக்தியை, **யாந்தி** - அடைகிறார்கள் (உணர்கிறார்கள்).

பொழிப்புரை

இவ்வாறு, க்ஷேத்ர, க்ஷேத்ரஜ்ஞர்களின் இடையே, க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞ தன்மை இரண்டும் மித்யா என்று அறிவையே கண்ணாகக்கொண்டு, எவர்கள் அறிகிறோர்களோ, அவர்கள் முக்தியை உணர்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த அத்யாயத்தை நிறைவுசெய்கிறார்.

க்ஷேத்ரம், ப்ரக்ருதி ஆகிய சொற்கள் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன. அதேபோன்று, க்ஷேத்ரஜ்ஞன், புருஷன், ஞேயம் ஆகிய சொற்களின் பொருளும் ஒன்றுதான்.

Downloaded from **www.omkaravidya.com**

க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேற்றுமையின் தன்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

சாஸ்த்ரம், ஆசார்யர் ஆகியோரால் உபதேசிக்கப்பட்ட அறிவுக்கண்ணைக் கொண்டு, அறிந்துகொள்ள வேண்டும்.

ஆசார்யர் சாஸ்த்ரத்தை உபதேசிக்கும் பொழுது, அதனால் நம் உள்ளத்தில் மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது. அந்த அறிவையே கண்ணாகக் கொண்டு, க்ஷேத்ரத்திற்கும் க்ஷேத்ரஜ்ஞனுக்கும் இடையே உள்ள வேற்றுமையை அறிந்துகொள்ள வேண்டும்.

பூதப்ரக்ருதி என்பது அறியாமை. கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாத அறியாமை எப்படித் தோன்றியது என்று நமக்குத் தெரியாது.

பூதப்ரக்ருதி-மோக்ஷம் என்பது அறியாமையின் நீக்கத்தைக் குறிக்கிறது. அறியாமை அல்லது மாயையை நீக்குகின்ற தன்மையையும் அறிந்துகொள்ள வேண்டும்.

அறியாமை, மாயை எப்படி வந்தது என்ற ஆராய்ச்சியில் ஈடுபடாமல், அறியாமை, மாயைக்கு இருப்பு இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, அவற்றை நீக்க வேண்டும்.

அவ்வாறு மாயையை நீக்குபவர்கள், பரமார்த்த தத்துவமான பரம்பொருளை உணர்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

அவர்கள் மறுபடியும் தன்னுணர்வுடன் தங்களை இணைத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் முக்தியை உணர்கிறார்கள்.

இந்த அத்யாயத்தில் அர்ஜுனன் கேட்ட க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன், ஞானம், ஜ்ஞேயம், புருஷன், ப்ரக்ருதி ஆகிய ஆறு விஷயங்களை பகவான் விளக்கினார்.

இதற்கான ஸாதனங்களான கர்மயோகம், உபாஸனை, ச்ரவண, மனன, நிதித்யாஸனம் ஆகியவையும் கூறப்பட்டன. இதன்மூலம் கிடைக்கக்கூடிய ஞானத்தால், எல்லாவற்றையும் ஸமமாகப் பார்க்கின்ற மனோபாவம் பலனாகக் கிடைக்கும்.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे

श्रीकृष्णार्जुनसंवादे क्षेत्रक्षेत्रज्ञविभागयोगो नाम त्रयोदशोऽध्यायः ।। १३ ।।

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸூ ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந-
ஸம்வாதே க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாகயோகோ
நாம த்ரயோதஶோऽத்யாய: ।। 13 ।।

சொற்குற்றம், பொருட்குற்றம் நீங்குவதற்கு, ஓம் தத் ஸத் என்று கூறி, உபநிஷதங்களின் பரமதாத்பர்யத்தை விளக்கிக் கூறுகின்ற, ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கின்ற, மனதைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்-அர்ஜுனன் ஆகியோரின் அருள் உரையாடல் வடிவிலிருக்கும் இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்தில்

Downloaded from **www.omkaravidya.com**

க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விபாகம் என்ற தலைப்பிலான இந்த பதிமூன்றாவது அத்யாயம் நிறைவுபெறுகிறது.

ॐ श्रीकृष्णार्पणमस्तु। ஓம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து।

Downloaded from **www.omkaravidya.com**

பதினான்காவது அத்யாயம்

ओं श्रीकृष्णाय परमात्मने नमः ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம:

अथ चतुर्दशोऽध्यायः அத சதுர்தஶோऽத்யாய:

गुणत्रयविभागयोगः குணத்ரயவிபாகயோக:

முகவுரை

குணத்ரயவிபாக: என்றால் மூன்று குணங்களைப் பற்றி பகுத்தறிதல் என்று பொருள். மூன்றாவது அத்யாயத்தில் தொடங்கி, ப்ரக்ருதியின் குணங்களைப் பற்றி, பலவிடங்களில் பகவான் உபதேசித்து வருகிறார்.

ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்றும் மாயையின் குணங்களாகும். குணங்களின் ஸ்வரூபம், எவ்வாறு இந்த குணங்கள் ஜீவனைக் கட்டிப் போடுகின்றன, குணங்களை எவ்வாறு புரிந்துகொள்வது, குணங்களின் பலன்கள், குணங்களால் மறுபிறவி எப்படியிருக்கும் போன்ற விஷயங்களை இந்த அத்யாயத்தில் கற்கப் போகிறோம்.

குணாதீதன் ஆவது எப்படி? குணங்களைக் கடந்த ஆத்ம ஸ்வரூபம் எப்படிப்பட்டது? என்பதைப் பற்றியும் இந்த அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த அத்யாயத்தில் ஸகுண-நிர்குண-விவேகம் கூறப்பட்டுள்ளது. அதாவது, ஆத்மாவின் நிர்குண

Downloaded from **www.omkaravidya.com**

ஸ்வரூபத்தையும், அநாத்மாவின் ஸகுண ஸ்வரூபத்தையும் பகுத்தறியப் போகிறோம்.

பதிமூன்றாவது அத்யாயத்தில் கூறப்பட்ட க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-விவேகம்தான் மற்றொரு கோணத்தில் இங்கு உபதேசிக்கப்படுகிறது.

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान् गुणान् ।
कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ।। 13 - 21 ।।

புருஷன் ப்ரக்ருதியில் இருந்துகொண்டு, ப்ரக்ருதியில் வெளிப்படுகின்ற குணங்களை அனுபவிக்கிறான். அதற்குக் காரணம், புருஷனுக்கு குணங்களுடனான தொடர்பு என்று பகவான் உபதேசித்தார்.

ஆகவே, அந்த குணங்களைப் பற்றியும், அவை எப்படி ஜீவாத்மாவை பந்தப்படுத்துகின்றன என்பது பற்றியும் அறிந்துகொள்வது முக்கியமாகிறது.

श्रीभगवानुवाच

परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञानमुत्तमम् ।

यज्ज्ञात्वा मुनयः सर्वे परां सिद्धिमितो गताः ।। १४ - १ ।।

ஸ்ரீபகவாநுவாச
பரம் பூய: ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநாநாம் ஜ்ஞாநமுத்தமம் ।
யஜ்ஜ்ஞாத்வா முநய: ஸர்வே பராம் ஸித்திமிதோ கதா: ।। 14 - 1 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஸ்ரீபகவாந் - ஸ்ரீபகவான், **உவாச** - கூறினார்.

யத் - எதை (எந்த ஜீவ-ப்ரஹ்ம-ஐக்ய-ஞானத்தை), **ஜ்ஞாத்வா** - அறிந்தபின், **முநய:** - முனிவர்கள், **ஸர்வே** - அனைவரும், **இத:** - இந்த உடலிலிருந்து (இங்கேயே), **பராம்** - மேலான, **ஸித்திம்** - நிலையை (ஜீவன்முக்தியை), **கதா:** - அடைந்துள்ளனரோ, **ஜ்ஞாநாநாம்** - ஞானங்களுள் (பிற ஞானங்களுக்கு ஆதாரமானதும்), **உத்தமம்** - உத்தமமானதும், **பரம்** - மேலானதுமான, **ஜ்ஞாநம்** - ஞானத்தை, **பூய:** - மீண்டும், **ப்ரவக்ஷ்யாமி** - தெளிவாகக் கூறுகிறேன்.

பொழிப்புரை

எந்த ஜீவ-ப்ரஹ்ம-ஐக்ய ஞானத்தை அறிந்தபின், முனிவர்கள் அனைவரும், இந்த உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே ஜீவன்முக்தியை அடைந்தார்களோ, பிற ஞானங்களுக்கு ஆதாரமான, அந்த மேலான ஞானத்தை, உனக்கு மீண்டும் தெளிவாகக் கூறுகிறேன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மீண்டும் உத்தமமான அந்த ஞானத்தை உபதேசிக்கிறேன் என்று ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

பரவஸ்து விஷயத்வாத் என்று ஆதிசங்கரர் கூறுகிறார். அதாவது, மேலான மெய்ப்பொருளைப் பற்றிய ஞானம் என்பதால், இது எல்லாவற்றிலும் உயர்ந்த ஞானமாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

பிற அறிவுகளெல்லாம் நம்மை பந்தத்திலிருந்து விடுவிக்காது. இந்த அறிவு மட்டுமே நம்மை பந்தத்திலிருந்து விடுவிக்கும். ஆகவே எல்லா ஞானங்களிலும் சிறந்த ஞானம் என்கிறார் பகவான். எல்லா ஞானங்களுக்கும் அடிப்படையாக விளங்குவது - ப்ரஹ்ம ஞானம், ஆத்ம ஞானம், ஜீவாத்ம-பரமாத்ம-ஐக்ய ஞானம்.

உத்தமமான பலனாகிய மோக்ஷத்தைத் தருவதால், இது உத்தமமான ஞானமாகும்.

அறவாழ்க்கையைக் கடைப்பிடித்து, ஆழ்ந்து சிந்திக்கின்றவர்கள் முனிவர்கள் எனப்படுவார்கள்.

முனிவர்கள் எல்லோரும் எந்த மேலான ஞானத்தைப் பெற்று, இந்த உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே, மோக்ஷத்தை உணர்ந்தார்களோ, அந்த ஞானத்தை உபதேசிக்கப் போகிறார் பகவான்.

ஞானத்தைப் பெற்ற முனிவர்கள், இந்த உடலில் வாழும்பொழுதே, தன்னுணர்வை விட்டுவிட்டு, நிலையான பேரமைதியை உணர்கிறார்கள்.

பகவான் இந்த ச்லோகத்தில், தான் உபதேசிக்கப் போகின்ற விஷயத்தையும், அதற்குரிய தகுதியையும், அதனால் கிடைக்கின்ற பயனையும் உபதேசித்திருக்கிறார்.

(**விஷயம்** - ஆத்ம ஞானம், **தகுதி** - அறத்தைக் கடைப்பிடித்து, ஆழ்ந்து சிந்தித்தல், **பயன்** - மோக்ஷம், ஜீவன்முக்தி).

Downloaded from **www.omkaravidya.com**

इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।

सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ।। १४ - २ ।।

இதம் ஜ்ஞானமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: ।
ஸர்கேঽபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச ।। 14 - 2 ।।

பதவுரை

இதம் - இந்த, **ஜ்ஞானம்** - ஞானத்தை, **உபாஶ்ரித்ய** - பின்பற்றி (சார்ந்திருந்து), **மம** - என்னுடைய, **ஸாதர்ம்யம்** - ஸ்வரூபத்தை, **ஆகதா:** - பெற்றுள்ளவர்கள், **ஸர்கே அபி** - படைப்பிலும், **ந உபஜாயந்தே** - தோன்றுவதில்லை, **ப்ரலயே ச** - ஒடுக்கத்திலும், **ந வ்யதந்தி** - ஒடுங்குவதில்லை (மோக்ஷத்தை உணர்கிறார்கள்).

பொழிப்புரை

இந்த ஞானத்தைச் சார்ந்திருந்து, என்னுடைய ஸ்வரூபத்தைப் பெற்றுள்ளவர்கள், படைப்பிலும் தோன்றுவதில்லை, ஒடுக்கத்திலும் ஒடுங்குவதில்லை. மோக்ஷத்தை உணர்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ஞானத்தின் பயனைக் கூறுகிறார்.

அறவாழ்க்கையைப் பின்பற்றுகின்ற முனிவர்கள், ஞான ஸாதனங்களாகிய ச்ரவணம், மனனம், நிதித்யாஸனம்

Downloaded from **www.omkaravidya.com**

ஆகியவற்றின் மூலம் வேதாந்தத்தைச் சார்ந்திருந்திருந்து, பகவானும் தானும் அடிப்படையில் ஒன்று என்பதைப் புரிந்துகொள்கிறார்கள்.

உபாதி பேதத்தினால், நாமும் பகவானும் வேறாக இருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால், ஜீவன், ஈச்வரன் இருவருக்கும் அடிப்படை, ஸச்சிதானந்த ஸ்வரூபமே என்பதை அவர்கள் உணர்கிறார்கள்.

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் மட்டுமல்ல, உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் அடிப்படை ஒன்றே.

இந்த உண்மையை உணர்ந்தவர்கள், மறுபடியும் படைப்பானது தோன்றும்போது உடல் எடுப்பதில்லை. ப்ரளயத்தில், அவர்கள் உடலை விடுவதுமில்லை. சுருக்கமாகக் கூறினால், அவர்களுக்குப் பிறப்போ இறப்போ இல்லை.

பொதுவாக, உயிர்கள், உடல் எடுத்து, அதில் இன்ப-துன்பங்களை அனுபவித்து, பிறகு அந்த உடலை விடுத்து, வேறோர் உடலை எடுத்து, மீண்டும் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன.

ஆனால், உண்மையை உள்ளவாறு உணர்ந்தவர்கள், இந்தச் சுழற்சியாகிய ஸம்ஸாரத்தில் உழல்வதில்லை.

மற்றொரு கோணத்தில் சொன்னால், அவர்களுக்கு உடல் பற்றோ, உலகப் பற்றோ இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

मम योनिर्महद्ब्रह्म तस्मिन्गर्भं दधाम्यहम् ।

सम्भवः सर्वभूतानां ततो भवति भारत ।। १४ - ३ ।।

மம யோநிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மிந்கர்பம் ததாம்யஹம் ।
ஸம்பவ: ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத ।। 14 - 3 ।।

பதவுரை

மஹத் - பேராற்றல் படைத்த, **ப்ரஹ்ம** - மாயையானது, **மம** - என்னுடைய, **யோநி:** - படைப்புக்குக் காரணமாக இருக்கிறது. **தஸ்மிந்** - அதனுள், **அஹம்** - நான், **கர்பம்** - கர்ப்பத்தை, **ததாமி** - கொடுக்கிறேன். **ஹே பாரத!** - ஓ அர்ஜுனா! **ஸர்வபூதாநாம்** - அனைத்து உயிர்களின், **ஸம்பவ:** - தோற்றம், **தத:** - அதிலிருந்து, **பவதி** - உண்டாகிறது.

பொழிப்புரை

பேராற்றல் படைத்த மாயையானது, என்னுடைய படைப்புக்குக் காரணமாக இருக்கிறது. அதனுள் நான் கர்ப்பத்தைக் கொடுக்கிறேன். ஓ அர்ஜுனா! அனைத்து உயிர்களின் தோற்றமானது, அதிலிருந்து உண்டாகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ ஸம்யோகமாகிய கற்பனைக்கு, அதாவது, அத்வைதமான ப்ரஹ்மனை, த்வைத ப்ரபஞ்சமாகக் காட்சியளிக்கும்படி செய்வதற்கு எது காரணம் என்பதை உபதேசிக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

மம யோநி: மஹத்ப்ரஹ்ம ।

என்னைச் சார்ந்திருக்கின்ற முக்குணமயமான மாயை, இந்த உலகிற்குக் காரணம். அதுவே இந்தப் படைப்பிலுள்ள அனைத்தையும் தாங்குகிறது.

இந்த ச்லோகத்தில் **ப்ரஹ்ம** என்ற சொல்லுக்கு மாயை என்று பொருள். பெரிய மாயைதான், இந்தப் படைப்புக்குக் காரணமாக இருக்கிறது என்கிறார் பகவான். அத்வைத ஸ்வரூபமான என்னை, பலவாறாகக் காட்டுவது மாயையே ஆகும் என்கிறார்.

மாயையினிடத்தில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன் என்கிறார் பகவான். இதன் பொருள் என்னவென்றால், தூய உணர்வாகிய பரம்பொருளிடமிருந்து, மாயை ஆற்றலை இரவல் வாங்கிக்கொள்கிறது.

மாயாசக்தி ஜடமானது. உணர்வின் தன்மையை, அது இரவல் வாங்கிக்கொள்கிறது. உடலில் உணர்வு இருப்பதுபோல், மாயையில் உணர்வு இரவல் வாங்கிக் கொள்ளப்படுகிறது.

உண்மையில் உணர்வற்ற, அறிவற்ற மாயையானது, பரம்பொருளுடன் சேர்ந்து, அதன் உணர்வுத்தன்மையை இரவல் வாங்கிக்கொண்டு, உணர்வுடையதாக, படைக்கக்கூடிய தன்மை உடையதாக மாறுகிறது.

இறைவன் இருக்கிறார். மாயாசக்தி இருக்கிறது. இறைவன் மாயாசக்திக்கு அருள்புரிகிறார். அதனால் மாயாசக்தி படைக்கக்கூடிய ஆற்றல் படைத்ததாக ஆகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

தூய உணர்வாகிய இறைவனின் அருளால், மாயையில் ப்ரதிபிம்ப உணர்வு ஏற்படுகிறது. பிறகு, மாயையிலிருந்து பல்வேறு வேற்றுமைப் படைப்புகள் உண்டாகின்றன.

ஆக, உணர்வைச் சார்ந்திருந்து, உணர்வின் நிழலைப் பெற்று, உலகப் படைப்புகளை மாயை நிகழ்த்துகிறது.

सर्वयोनिषु कौन्तेय मूर्तयः सम्भवन्ति याः ।

तासां ब्रह्म महद्योनिरहं बीजप्रदः पिता ।। १४ - ४ ।।

ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தி யா: ।
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநிரஹம் பீஜப்ரத: பிதா ।। 14 - 4 ।।

பதவுரை

ஹே கௌந்தேய - ஓ குந்தியின் புதல்வனே! **ஸர்வயோநிஷு** - அனைத்து கருப்பைகளிலும், **யா:** - எந்த, **மூர்த்தய:** - வடிவங்கள், **ஸம்பவந்தி** - உண்டாகின்றனவோ, **தாஸாம்** - அந்த வடிவங்களுக்கு, **ப்ரஹ்ம** - மாயையே, **மஹத்யோநி:** - பிறப்பிடம் (தாய்), **அஹம்** - நான், **பீஜப்ரத:** - விதையை அருளும், **பிதா** - தந்தை.

பொழிப்புரை

ஓ குந்தியின் புதல்வனே! அனைத்து கருப்பைகளிலும் எந்த வடிவங்கள் உண்டாகின்றனவோ, அந்த வடிவங்களுக்கு மாயையே பிறப்பிடமாகிய தாய். நான் விதையை அருளும் தந்தை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், படைப்பைச் சுருக்கமாகக் கூறுகிறார். ஏனெனில் மூன்று குணங்களைப் பற்றிக் கூறும்பொழுது, படைப்பைப் பற்றிக் கூறியாக வேண்டும்.

பகவான், தனது சைதன்யத்தை மாயையில் கொடுப்பதாக, ப்ரதிபிம்பிக்கச் செய்வதாகக் கூறினார். ப்ரபஞ்சம் தோன்றுவதற்காக, மாயையினிடத்தில், தூய உணர்வு கர்பாதானம் செய்கிறது.

மாயாசக்தி, தூய உணர்வின் தன்மையை இரவல் வாங்கிக்கொள்கிறது என்று பார்த்தோம்.

இந்த ப்ரபஞ்சத்தில் எத்தனையோ விதமான உயிரினங்கள் இருக்கின்றன. 84 லக்ஷம் யோனி பேதம் என்று கூறுவர். முட்டையிலிருந்து தோன்றுவன, கருப்பையிலிருந்து தோன்றுவன, வியர்வையிலிருந்து தோன்றுவன, பூமியைப் பிளந்துகொண்டு தோன்றுவன ஆகிய எல்லாவிதமான உடல்களும் (வடிவங்களும்) தோன்றுகின்றன.

அவை அனைத்திற்கும் மூல காரணம், மஹத்தான காரணம் என்று சொல்லப்படுவது **ப்ரஹ்ம** என்ற சொல்லால் குறிக்கப்படும் மாயை.

சைதன்யமான நான், அந்த மாயாசக்திக்கு விதையைக் கொடுக்கின்ற தந்தையாக இருக்கிறேன் என்று பகவான் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்தப் படைப்புக்கு மாயையும் தூய உணர்வும் தாயும் தந்தையுமாக இருக்கின்றனர் என்பதை இந்த இரண்டு ச்லோகங்களும் உபதேசித்திருக்கின்றன.

தந்தையாகிய தூய உணர்வின் நிழலைப் பெற்றுக்கொண்டு, தாயான மாயாசக்தி அனைத்து உடல்களையும் படைக்கிறாள். உணர்வின் நிழலைப் பெறக்கூடிய தன்மை உடையதாக, மாயை இருக்கிறது.

தூய உணர்வு எவ்வித குணங்களும் மாற்றங்களும் செயல்களும் அற்றது. அது நிழலைக் கொடுக்கின்ற செயலையும்கூட செய்யவில்லை. தூய உணர்வின் நிழலை மாயை பெற்றுக்கொள்கிறது. அதுவே இங்கு பீஜப்ரதானம் (விதையைத் தருதல்) என்று சொல்லப்படுகிறது.

सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृतिसम्भवाः ।

निबध्नन्ति महाबाहो देहे देहिनमव्ययम् ।। १४ - ५ ।।

ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதிஸம்பவா: ।
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநமவ்யயம் ।। 14 - 5 ।।

பதவுரை

ஹே மஹாபாஹோ - ஓ பெருந்தோள் படைத்தவனே! **ஸத்த்வம்** - ஸத்வம், **ரஜ:** - ரஜஸ், **தம:** - தமஸ், **இதி** - என்று, **ப்ரக்ருதிஸம்பவா:** - ப்ரக்ருதியிலிருந்து உண்டான, **குணா:** - குணங்கள், **அவ்யயம்** - அழிவில்லாத, **தேஹிநம்** - உடலை

Downloaded from **www.omkaravidya.com**

உடையவனை (உயிரை), **தேஹே** - உடலில், **நிபத்நந்தி** - பந்தப்படுத்துகின்றன (கட்டுகின்றன).

பொழிப்புரை

ஓ பெருந்தோள் படைத்தவனே! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று ப்ரக்ருதியிலிருந்து உண்டான குணங்கள், அழிவில்லாத உயிரை, உடலில் கட்டுகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மாயையின் குணங்களைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார்.

இறைவனிடத்தில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று தூய உணர்வு, மற்றொன்று மாயை. நம்மிடத்தில் தூய உணர்வும், உடல்-மனம் என்ற அம்சமும் இருப்பதைப்போன்றது இது.

உடல்-மன அம்சத்தைப் போன்ற மாயைக்கு **ப்ரக்ருதி:** என்று பெயர்.

இந்த மாபெரும் படைப்பிற்குக் காரணமாக இருப்பதால், மாயைக்கு ப்ரக்ருதி என்று பெயர். படைப்பு **விக்ருதி:** எனப்படும். உதாரணமாக, தங்கக்கட்டி **ப்ரக்ருதி:** என்றும், நகைகள் **விக்ருதி:** என்றும் சொல்லப்படும்.

ப்ரக்ருதியிலிருந்து ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம் ஆகிய மூன்று குணங்கள் வெளிப்படுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

மூன்று குணங்களின் பெயர்களைக் கூறியிருக்கிறார் பகவான். **ஸத்வம்** என்பது அமைதி, தெளிந்த அறிவு முதலியவற்றைக் குறிக்கும். **ரஜ:** என்பது சஞ்சலமான தன்மை, துன்பம், தெளிவின்மை முதலியவற்றைக் குறிக்கும். **தம:** என்பது மந்தத்தன்மை, சோம்பேறித்தனம், உறக்கம் இவற்றைக் குறிக்கும்.

அறிவு, அறிவும் அறியாமையும் கலந்த தன்மை, முற்றிலும் அறியாமை - இவ்வாறாக, இந்த மூன்று குணங்கள் வெளிப்படுகின்றன. இவை கண்ணுக்குத் தெரியாது. இவற்றின் வெளிப்பாடுகளை வைத்துத்தான் நம்மால் இப்பொழுது, இந்தக் குறிப்பிட்ட குணம் நம்மிடத்தில் மேலோங்கியிருக்கிறது என்று புரிந்துகொள்ள முடியும்.

இந்த மூன்று குணங்களும், ஜீவாத்மாவை (உடலை உடைய உயிரை), உடலிலும் மனதிலும் உலகப் பொருட்களிலும் கட்டுகின்றன. குறிப்பாக, உடலிலும் மனதிலும் நன்றாகக் கட்டிப் போடுகின்றன.

இந்த ச்லோகம், மூன்று குணங்களின் பெயர்களையும், அவற்றுக்குக் காரணமான ப்ரக்ருதியையும் கூறி, மூன்று குணங்கள் ஜீவாத்மாவை உடலில் கட்டிப் போடுகின்றன என்று கூறியுள்ளது.

கயிற்றால் ஒரு பொருளைக் கட்டுவதுபோல், இந்த குணங்கள் உயிரை உடலில் கட்டிப் போடுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

तत्र सत्त्वं निर्मलत्वात्प्रकाशकमनामयम् ।

सुखसङ्गेन बध्नाति ज्ञानसङ्गेन चानघ ।। १४ - ६ ।।

தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத்ப்ரகாஶகமநாமயம் ।
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந சாநக ।। 14 - 6 ।।

பதவுரை

ஹே அநக! - ஓ பாபமற்றவனே! **தத்ர** - அந்த மூன்று குணங்களுள், **ஸத்த்வம்** - ஸத்வ குணமானது, **நிர்மலத்வாத்** - (ரஜோ குண, தமோ குணங்களுடன் தொடர்பு இன்றி) அழுக்கு இல்லாததால், **ப்ரகாஶகம்** - தெளிவானது, **அநாமயம்** - இடையூறுகளற்றது, **ஸுகஸங்கேந** - இன்பத்தில் பற்றினாலும், **ஜ்ஞாநஸங்கேந ச** - அறிவில் பற்றினாலும், **பத்நாதி** - பந்தப்படுத்துகிறது.

பொழிப்புரை

ஓ பாபமற்றவனே! அந்த மூன்று குணங்களுள் ஸத்வ குணமானது, ரஜோ குண, தமோ குணங்களுடன் தொடர்பின்றி, அழுக்கு இல்லாததால் தெளிவானது, இடையூறுகளற்றது. இன்பத்தில் பற்றினாலும், அறிவில் பற்றினாலும் பந்தப்படுத்துகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஸத்வ குணத்தின் தன்மைகளைப் பற்றிக் கூறுகிறார். செயல்பாடுகளை

Downloaded from **www.omkaravidya.com**

வைத்துத்தான், அந்தக் குணத்தை தெரிந்துகொள்ள முடியும் என்று முன்பே பார்த்தோம்.

பகவான் அர்ஜுனனை, பாபமற்றவனே! என்று அழைக்கிறார்.

ஸத்வகுணம் மேலோங்கினால், இடையூறுகள், தடைகள் ஆகியவை இருக்காது. முக்கியமாக, ரஜோகுணத்தின் சஞ்சலம் இருக்காது.

ஆமயம் என்றால் இடையூறு என்றும், **அநாமயம்** என்றால், மனதளவில் எந்தவிதமான சஞ்சலமும் இல்லாத தன்மை என்றும் பொருள். ஸத்வ குணம் மேலோங்கினால், மனம் தெளிவாக இருக்கும். அதனை **ப்ரகாஶகம்** என்ற சொல் குறிக்கிறது.

ரஜோகுணத்தின் கலப்பில்லாத ஸத்வ குணம் தூய்மையானது, மாசற்றது. **நிர்மலத்வாத்** - தூய்மையாக இருப்பதால் என்கிறார் பகவான்.

ஸத்வ குணம் மேலோங்கினால் மனம் அமைதியாக, தெளிவாக, ஆனந்தமாக இருக்கும். அறிவு மேலோங்கும், விழிப்புணர்வும் கவனமும் அதிகரிக்கும்.

நினைவாற்றல் தெளிவாக இருக்கும், குழப்பம் இருக்காது. அரைகுறையாகச் செயல்பட மாட்டோம். ரஜோ குணம், தமோ குணம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்பொழுது, இந்த விஷயம் மேலும் தெளிவாகும். கண், காது முதலான இந்த்ரியங்கள் விஷயங்களைத் தெளிவாக உணர்த்தும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸத்வ குணத்தின் இலக்கணத்தைக் கூறிய பகவான், அது எப்படி பந்தப்படுத்துகிறது என்பதையும் கூறுகிறார்.

ஸத்வ குணமானது, நிறைய தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அறிவில் நம்மை ஈடுபடுத்தும். அறிவுபூர்வமாக வாழக்கூடிய இன்பத்தில் நம்மை பந்தப்படுத்தும்.

மனிதன் துன்பத்தைத் தவிர்க்கவும், இன்பத்தை அடையவும் ஓயாது முயன்று கொண்டிருக்கிறான்.

அறிவிலும் இன்பத்திலும் பந்தப்படுத்தக் கூடிய தன்மையை உடையது ஸத்வ குணம். இறைவனை வழிபடுபவதாலும், ஜபம், த்யானம் முதலிய ஸாதனைகளில் ஈடுபடுவதாலும், ஸத்ஸங்கத்தாலும் ஏற்படுகின்ற இன்பத்தில் நம்மை இது ஈடுபடுத்தும்.

இது நல்லதுதான். எல்லாவிதமான பந்தங்களிலிருந்தும் விடுவிக்கக்கூடியது இந்த ஸத்வ குண பந்தம்.

மனதில் அமைதி, உற்சாகம், அறிவில் தெளிவு, ஒளிபொருந்திய தன்மை, சஞ்சலமில்லாத தன்மை ஆகியவை மேலோங்கியிருந்தால், அதனை ஸத்வகுணத்தின் காரியம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

அது ஜீவாத்மாவை, நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், நன்கு அறிந்து கொண்டிருக்கிறேன் என்று பந்தப்படுத்தும்.

ஞானம், ஸுகம் ஆகிய இரண்டும் க்ஷேத்ரத்தின் தர்மங்கள்தான்.

Downloaded from **www.omkaravidya.com**

உண்மையில், தூய உணர்வு இன்பமாகவோ துன்பமாகவோ இருப்பதில்லை. இன்பமாக இருக்கிறேன் என்ற மனதின் தன்மையை நாம் ஆத்மாவின்மீது ஏற்றுகிறோம். நான் தெளிந்த அறிவுடையவனாக இருக்கிறேன் என்ற அநாத்மாவின் தர்மத்தை ஆத்மாவில் ஏற்றுகிறோம்.

இது சற்று நுணுக்கமான விஷயம்தான். உண்மையில் நான் ஞானியுமல்ல, ஸுகியுமல்ல. அதாவது, நான் அறிவாளியோ, இன்பமானவனோ அல்ல.

உண்மையில் நான் பேரின்ப வடிவம், சிறு இன்ப வடிவமல்ல நான். இதுவே உண்மை.

விஷயத்தின் தர்மத்தை, அதனை உடையவனிடத்தில் ஏற்றக்கூடாது என்று ஆதிசங்கரர் இங்கு உபதேசித்திருக்கிறார்.

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।

तन्निबध्नाति कौन्तेय कर्मसङ्गेन देहिनम् ।। १४ - ७ ।।

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம் ।
தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம் ।। 14 - 7 ।।

பதவுரை

ரஜ: - ரஜோ குணத்தை, **ராகாத்மகம்** - விருப்ப வடிவானதாகவும், **த்ருஷ்ணா-ஆஸங்க-ஸமுத்பவம்** - வேட்கைக்கும் பற்றுக்கும் இருப்பிடமாகவும், **வித்தி** - அறிந்துகொள்வாயாக! **ஹே கௌந்தேய** - ஓ குந்தியின்

Downloaded from **www.omkaravidya.com**

புதல்வனே! **தத்** - அது, **கர்மஸங்கேந** - கர்மத்தில் பற்றினால், **தேஹிநம்** - உயிரை, **நிபத்நாதி** - நன்கு தளைக்கிறது.

பொழிப்புரை

ரஜோ குணத்தை விருப்ப வடிவானதாகவும், வேட்கைக்கும் பற்றுக்கும் இருப்பிடமாகவும் அறிந்துகொள்வாயாக! ஓ குந்தியின் புதல்வனே! அது, கர்மத்தில் பற்றினால், உயிரை நன்கு தளைக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ரஜோ குணத்தைப் பற்றி உபதேசிக்கிறார்.

எப்படி ஒரு துணியில் காவி நிறத்தை ஏற்றினால், அது அந்த நிறமாகவே ஆகிவிடுகிறதோ, அப்படி உலக விஷயங்களில் ஆழமாக ஒட்டிக்கொள்கின்ற தன்மை மேலோங்கினால், மனதில் ரஜோ குணம் மேலோங்கியிருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

ராகாத்மகம் என்ற சொல், உலக விஷயங்களில் ஆழ்ந்த பற்றைக் குறிக்கிறது.

அப்ராப்த-அபிலாஷ: த்ருஷ்ணா। இதுவரை நம்மிடத்தில் இல்லாத ஒன்றை அடைவதற்கு ஆசைப்படுதலே **த்ருஷ்ணா** எனப்படும்.

ஆஸங்க: ப்ராப்தே விஷயே மநஸ: ப்ரீத்திலக்ஷண: ஸம்ஶ்லேஷ: ।

Downloaded from **www.omkaravidya.com**

ஏற்கெனவே அடைந்த விஷயத்தில் ஆழமாகப் பற்றுவைத்து, அதனுடன் ஒட்டிக்கொள்ளுதல் **ஆஸங்க:** எனப்படும்.

ஆசை, பற்று வடிவமான அந்த அளவுக்கு மீறிய ஒட்டுதலானது, உயிரை கர்மம் செய்யத் தூண்டும். அவன் தன்னை கர்மி என்று சொல்லிக் கொள்வான்.

ஜீவாத்மாவில் செயல்புரிபவன் என்ற தன்மையைக் கற்பித்து, உலகியல் செயல்களிலும் ஆன்மிகச் செயல்களிலும் அதிகமாக ஈடுபடத் தூண்டக் கூடியது இந்த ரஜோ குணம்.

ரஜோகுணம் மேலோங்கினால், அதிகமாகச் சிந்திக்க முடியாது. செயல்புரிவதில்தான் நாட்டம் அதிகமாக இருக்கும். பரபரப்பு, செய்து முடிக்க வேண்டுமே என்ற கவலை போன்ற உணர்ச்சிரீதியான ப்ரச்சினைகள் அவனிடத்தில் அதிகமாகக் காணப்படும்.

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।

प्रमादालस्यनिद्राभिस्तन्निबध्नाति भारत ।। १४ - ८ ।।

தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வதேஹிநாம் ।
ப்ரமாதாலஸ்யநித்ராபிஸ்தந்நிபத்நாதி பாரத ।। 14 - 8 ।।

பதவுரை

ஹே பாரத - ஓ அர்ஜுனா! **தம: து** - தமோ குணத்தையோ, **அஜ்ஞாநஜம்** - அறியாமையில் தோன்றியதாகவும், **ஸர்வதேஹிநாம்** - எல்லா உயிர்களுக்கும், **மோஹநம்** -

Downloaded from **www.omkaravidya.com**

மோஹத்தை (மயக்கத்தை) உண்டாக்குவதாகவும், **வித்தி** - அறிந்துகொள். **ப்ரமாத-ஆலஸ்ய-நித்ராபி:** - கவனக்குறைவு, சோம்பல், உறக்கம் இவற்றின் மூலம், **தத்** - அது, **நிபத்நாதி** - தளைக்கிறது.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! தமோ குணத்தை அறியாமையில் தோன்றியதாகவும், எல்லா உயிர்களுக்கும் மயக்கத்தை உண்டாக்குவதாகவும் அறிந்துகொள். கவனக்குறைவு, சோம்பல், உறக்கம் இவற்றின் மூலம், அது உயிரைத் தளைக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தமோ குணத்தைப் பற்றிக் கூறுகிறார்.

தமோ குணம், அறியாமையிலிருந்து வெளிப்படுவது என்கிறார் பகவான். அஜ்ஞானமே தமோ குணம் என்றும் சொல்வதுண்டு.

மூன்று குணங்களுமே அறியாமையிலிருந்து தோன்றியவைதான் என்றாலும், இங்கு குறிப்பாக, தமோ குணத்தைப் பற்றிப் பார்க்கிறோம்.

அறியாமையை வைத்து, தமோ குணத்தைப் புரிந்துகொள்கிறோம். தமோ குணம் மேலோங்கினால், எதையும் சரியாகப் பிரித்துப் புரிந்துகொள்ள முடியாது.

Downloaded from **www.omkaravidya.com**

எதையும் தெளிவாகச் சிந்திக்கவோ, வெளிப்படுத்தவோ முடியாது. எப்பொழுதும் குழப்பமாக இருக்கக்கூடிய ஒரு மனநிலை இருக்கும். பகுத்தறியக்கூடிய தன்மை சரியாக இருக்காது.

உடலை உடைய எல்லோருக்குமே, இந்த மூன்று குணங்களின் அனுபவம் உண்டு. அதன் அளவில்தான் வேறுபாடுகள் இருக்கும்.

எல்லா விஷயங்களும் எல்லோருக்கும் புரிந்துவிடாது. எதுவுமே புரியாதவர் என்றும் உலகில் யாரும் இல்லை.

இங்கு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில், மனதில் மேலோங்கியிருக்கும் குணத்தைப் பற்றி பகவான் பேசுகிறார்.

ப்ரமாத-ஆலஸ்ய-நித்ராபி: பத்நாதி ।

தமோகுணமானது கவனக்குறைவு, சோம்பேறித்தனம், கண்ட நேரத்தில் தூங்குதல் ஆகியவற்றில், இந்த ஜீவாத்மாவை பந்தப்படுத்துகிறது.

செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் ஒத்திப்போட்டுக் கொண்டே இருப்பது தமோ குணத்தின் வெளிப்பாடுதான். அப்படியே செய்தாலும் கவனத்துடன் செய்யாமல், ஏனோதானோவென்று செய்தல் தமோ குணத்தின் தாக்கமாகும்.

ஆத்மாவிற்கு ஒரு குணமும் இல்லை. ஆனால், இந்தத் தமோ குணமானது கவனக்குறைவு, சோம்பேறித்தனம்

Downloaded from **www.omkaravidya.com**

ஆகியவற்றில் நம்மை பந்தப்படுத்தி, நம்மை குற்றவுணர்ச்சி உடையவர்களாக ஆக்கிவிடும்.

सत्त्वं सुखे सञ्जयति रजः कर्मणि भारत ।

ज्ञानमावृत्य तु तमः प्रमादे सञ्जयत्युत ।। १४ - ९ ।।

ஸத்த்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத ।

ஜ்ஞானமாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத ।। 14 - 9 ।।

பதவுரை

ஹே பாரத - ஓ அர்ஜுனா! **ஸத்த்வம்** - ஸத்வ குணமானது, **ஸுகே** - இன்பத்திலும், **ரஜ:** - ரஜோ குணமானது, **கர்மணி** - செயலிலும், **ஸஞ்ஜயதி** - ஈடுபடுத்துகிறது (நன்கு கட்டுகிறது). **தம: து** - தமோ குணமோ, **ஜ்ஞானம்** - அறிவை, **ஆவ்ருத்ய** - மறைத்து, **ப்ரமாதே** - கவனமின்மையில், **ஸஞ்ஜயதி** - ஈடுபடுத்துகிறது (நன்கு கட்டுகிறது). **உத** - ஆச்சர்யம்! (கட்டுவதுபோல இருக்கிறது).

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! ஸத்வ குணமானது இன்பத்திலும், ரஜோ குணமானது செயலிலும் உயிரை நன்கு கட்டுகின்றன. தமோ குணமானது, அறிவை மறைத்து, கவனமின்மையில் நன்கு கட்டுகிறது. ஆச்சர்யம்! (கட்டுவதுபோல இருக்கிறது).

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் மூன்று குணங்களும் ஜீவனை ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களில் எப்படிக் கட்டுகின்றன என்பதை இந்த ச்லோகத்தில் ஸாரமாகக் கூறுகிறார்.

ஸத்வ குணமானது ஜீவாத்மாவை, நான் இன்பமாக இருக்கிறேன் என்ற எண்ணத்தில் பந்தப்படுத்துகிறது, நன்கு இணைக்கிறது, பின்னிப் பிணைக்கிறது.

ரஜோ குணமானது, ஜீவாத்மாவைச் செயலில் ஈடுபடுத்தி, பந்தப்படுத்துகிறது. செயல்புரிய வேண்டுமென்றால், மனதில் ஆசை வேண்டும்.

ஆசையில்லாமல் செயல்புரிய முடியாது. ஆசைக்குக் காரணம் நிறைவின்மை. நிறைவின்மைக்குக் காரணம், தன்னைப் பற்றிய அறியாமை. **அவித்யா, காம, கர்ம** என்று இந்த மூன்றும் சாஸ்த்ரத்தில் சேர்த்தே சொல்லப்படுகின்றன.

அறியாமையினால் ஆசை, ஆசையினால் செயல், செயலினால் பிறப்பு, இறப்பு - தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

நான் கர்த்தா, நான் செயல்புரிய வேண்டும் என்று நம்மைச் செயலில் தூண்டுவது ரஜோ குணம்.

தமோ குணமானது, ஸத்வ குணத்தால் ஏற்படக்கூடிய பகுத்தறிவை மறைத்து, கவனமின்மையில் ஜீவனை பந்தப்படுத்துகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரமாத: என்றால் நன்றாக இருக்கிறது என்று பொருளல்ல. **ப்ரமோத:** என்பதைத்தான் நாம் தவறாக ப்ரமாதம் என்று கூறி வருகிறோம்.

ப்ரமாதோ நாம ப்ராப்த-கர்த்தவ்ய-அகரணம்। என்று ஆதிசங்கரர் கூறுகிறார். **ப்ரமாத:** என்றால் கவனக்குறைவால் செய்ய வேண்டிய கடமையைக் செய்யாமலிருத்தல்.

அந்தத் தன்மையில் நம்மை ஈடுபடுத்துவது தமோகுணம். பொறுப்புடன் செயல்பட வேண்டிய விஷயங்களில், அலட்சியமாக இருக்க வைத்து, பந்தப்படுத்துகிறது, நன்றாகப் பிணைக்கிறது.

உத என்பதற்கு - என்னே இந்த குணங்களின் தன்மை! என்று பொதுவாகப் பொருள் கூறினாலும், கட்டுவதுபோல இருக்கிறது என்ற ஒரு முக்கியமான பொருளும் இருக்கிறது.

ஆராய்ச்சி செய்து பார்த்தால், நாம் பந்தத்தில் இல்லை என்பது நமக்கு விளங்கும்.

உத என்ற சொல்லுக்கு, **அபி** (மேலும்) **அஹோ** (ஆச்சர்யம், ஐயகோ), **இவ** (போல) ஆகிய அர்த்தங்கள் உண்டு.

இந்த மூன்று குணங்களும் எப்படி நம்மை பந்தப்படுத்துகின்றன என்பதை, பகவான் இவ்வாறு கூறியருளுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

रजस्तमश्चाभिभूय सत्त्वं भवति भारत ।

रजः सत्त्वं तमश्चैव तमः सत्त्वं रजस्तथा ।। १४ - १० ।।

ரஜஸ்தமஶ்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத ।
ரஜ: ஸத்த்வம் தமஶ்சைவ தம: ஸத்த்வம் ரஜஸ்ததா ।। 14 - 10 ।।

பதவுரை

ஹே பாரத - ஓ அர்ஜுனா! **ரஜ:** - ரஜோ குணத்தையும், **தம: ச** - தமோ குணத்தையும், **அபிபூய** - அடக்கி, **ஸத்த்வம்** - ஸத்வ குணம், **பவதி** - மேலெழுகிறது. **ததா** - அவ்வாறே, **ரஜ:** - ரஜோ குணமானது, **ஸத்த்வம்** - ஸத்வ குணத்தையும், **தம: ச ஏவ** - தமோ குணத்தையும், **தம:** - தமோ குணமானது, **ஸத்த்வம்** - ஸத்வ குணத்தையும், **ரஜ:** - ரஜோ குணத்தையும், (**அபிபூய** - அடக்கி, **பவதி** - மேலெழுகிறது).

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! ரஜோ குணத்தையும் தமோ குணத்தையும் அடக்கி, ஸத்வ குணம் மேலெழுகிறது. அவ்வாறே ரஜோ குணமானது, ஸத்வ, தமோ குணங்களை அடக்கி மேலெழுகிறது. தமோ குணமானது, ஸத்வ, ரஜோ குணங்களை அடக்கி மேலெழுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மூன்று குணங்களில் ஒவ்வொரு குணமும் எப்படி மற்ற இரு குணங்களைக் காட்டிலும் மேலோங்குகிறது என்பதைக் கூறுகிறார்.

மூன்று குணங்களும் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்காது. அவற்றில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சில சமயங்களில், ஸத்வ குணமானது, ரஜோ குணத்தையும் தமோ குணத்தையும் அடக்கி, மேலோங்கி விளங்குகிறது. நூறு சதவிகிதம் ஒரே குணத்தில் இருப்பவர்கள் எவரும் இல்லை. முயற்சியுடன் கூடிய பயிற்சிகளால், ஸாதனைகளால், ஸத்வ குணத்தை வளர்க்க முடியும்.

ஆனால் எவரிடத்திலும் நூற்றுக்கு நூறு ஸத்வ குணம் மட்டுமே இருக்கும் என்று சொல்ல முடியாது. சில நேரங்களில் ஸத்வ குணமானது, ரஜோ குணம், தமோ குணம் ஆகியவற்றைக் காட்டிலும் மேலோங்கி விளங்கும்.

சீராக, அமைதியாக, ஒழுங்குப்பாட்டுடன், தெளிவாக நாம் செயல்புரியும்போது, இப்பொழுது நம்மிடத்தில் ஸத்வகுணம் மேலோங்கியிருக்கிறது என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

சில சமயங்களில், ஸத்வ குணத்தையும் தமோ குணத்தையும் அடக்கி, ரஜோகுணம் மேலோங்கியிருக்கும். அப்பொழுது நம்முடைய மனதில் பரபரப்பு, படபடப்பு ஆகியவை இருக்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

சில சமயங்களில் ரஜோ குணத்தையும் ஸத்வ குணத்தையும் அடக்கி, தமோ குணம் மேலோங்கியிருக்கும். சோர்வு, மந்தத்தன்மை போன்றவை அப்பொழுது தலைதூக்கும். அதற்கு உடல்ரீதியான காரணங்களும் இருக்கலாம், உணர்ச்சிரீதியான காரணங்களும் இருக்கலாம்.

பலவிதமான சூழ்நிலைகள், காரணங்கள், நம் கர்மங்கள் ஆகியவற்றை முன்னிட்டு இந்த குணங்கள் இயங்குகின்றன.

குணங்கள் மாறி மாறி வந்துகொண்டிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மந்தமாக, சோம்பேறித்தனமாக இருக்கின்ற குணத்தை ஜெயிப்பதற்கு, சுறுசுறுப்பாகச் செயலில் ஈடுபடுகின்ற ரஜோகுணத்தை நாம் வளர்த்துக்கொள்ள முடியும்.

குணங்களின் இயல்பு இப்படி இருந்தாலும், நமக்கும் செயல்படுகின்ற சுதந்திரம் இருக்கிறது. குணங்களை வெல்வதற்கு நாம் முயற்சியெடுக்கத்தான் வேண்டும்.

ரஜோ குணத்தைக் கையாண்டு, நிறைய புண்ய காரியங்களைச் செய்வதன் மூலம் ஸத்வ குணம் வளரும். தமோ குணத்தை, ரஜோ குணத்தின் தன்மையினாலும், ரஜோ குணத்தை, ஸத்வ குணத்தின் தன்மையினாலும் வெல்ல வேண்டும்.

நம்முடைய முயற்சியின் முக்கியத்துவத்தையும் இந்த இடத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

सर्वद्वारेषु देहेऽस्मिन्प्रकाश उपजायते ।

ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्त्वमित्युत ।। १४ - ११ ।।

ஸர்வத்வாரேஷு தேஹேऽஸ்மிந்ப்ரகாஶ உபஜாயதே ।

ஜ்ஞானம் யதா ததா வித்யாத்விவ்ருத்தம்

ஸத்த்வமித்யுத ।। 14 - 11 ।।

பதவுரை

யதா - எப்பொழுது, **அஸ்மிந்** - இந்த, **தேஹே** - உடலில், **ஸர்வ-த்வாரேஷு** - எல்லா வாயில்கள் (காது முதலான இந்த்ரியங்கள்) வழியாகவும், **ஜ்ஞானம்** - பகுத்தறிவு என்னும், **ப்ரகாஶ:** - ஒளி, **உபஜாயதே** - உண்டாகிறதோ, **உத (= அபி)** - மேலும் (இன்பம் மேலோங்கியிருக்கும் போதும்), **ததா** - அப்பொழுது, **ஸத்த்வம்** - ஸத்வ குணம், **விவ்ருத்தம்** - அதிகரித்துள்ளது, **இதி** - என்று, **வித்யாத்** - அறிய வேண்டும்.

பொழிப்புரை

எப்பொழுது இந்த உடலில், எல்லா வாயில்கள் வழியாகவும், அதாவது காது முதலான இந்த்ரியங்கள் வழியாகவும், பகுத்தறிவு என்னும் ஒளி உண்டாகிறதோ, மேலும் எப்பொழுது உள்ளத்தில் இன்பம் மேலாங்கியிருக்கிறதோ, அப்பொழுது ஸத்வ குணம் அதிகரித்துள்ளது என்று அறிய வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில் ஸத்வ குணத்திற்கான அடையாளத்தைக் கூறுகிறார்.

இந்த உடலில், ஒரு தத்துவம் இருக்கிறது, யாரோ ஒருவர் இருக்கிறார் என்பதை நமக்குப் புரிய வைப்பதே இந்த்ரியங்கள்தான்.

நான் பார்க்கிறேன், கேட்கிறேன் என்று சொல்கிறோம். மனதில் தோன்றும் எண்ணங்களையும் நாம் அறிகிறோம். இதை வைத்துக்கொண்டே ஆத்மா என்ற ஒன்று உள்ளே இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே, இது லிங்கம், அடையாளம் என்று சொல்வார்கள்.

ஸூக்ஷ்ம சரீரம், அதிலுள்ள இந்த்ரிய சக்தி ஆகியவற்றை லிங்க சரீரம் என்று சொல்வது வழக்கம்.

ஒரு செயலை வைத்து, அந்தச் செயலைச் செய்தவர் ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். கடவுள் இருக்கிறார் என்பதற்கு அடையாளம், உலகம் இருப்பதுதான்.

படைப்பைக் கொண்டே, படைத்துக் காப்பாற்றுபவனை அறிந்துகொள்கிறோம்.

நம் உடல், இந்த்ரியங்கள் ஆகியவற்றைக் கையாளுகின்ற ஓர் உணர்வு தத்துவம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

தன்னுணர்வு தத்துவம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, மெய், வாய், கண், மூக்கு, செவி, புத்தி முதலானவை அடையாளங்களாக இருக்கின்றன.

எப்பொழுது, எல்லாம் தெளிவாகத் தெரிகிறதோ, அதாவது கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவற்றில் பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி, முகரும் சக்தி, சுவைக்கும் சக்தி, தொட்டு உணரும் சக்தி ஆகியவை சிறப்பாகச் செயல்படுகின்றனவோ, அப்பொழுது புத்தியானது அவற்றைத் தெளிவாகப் பகுத்தறிகிறது.

ப்ரகாஶ: என்பதற்கு **அந்த:க்கரணஸ்ய புத்தே: வ்ருத்தி:** - அதாவது உள்ளத்தில், புத்தியில் தோன்றும் தெளிவான பகுத்தறிவு என்று பொருள். இது இந்த ஒலி, இது இன்ன சுவை என ஒவ்வொன்றையும், புத்தியானது தெளிவாகப் பகுத்தறிகிறது.

எப்பொழுது நமக்கு அறிவில் தெளிவு இருக்கிறதோ, அப்பொழுது ஸத்வ குணம் மேலோங்கியிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இது ஸத்வ குணத்தைப் புரிந்துகொள்வதற்கான லிங்கம், அடையாளம் ஆகும்.

ஏற்கெனவே லக்ஷணம் கூறப்பட்டாலும், மேலும் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்காக, இது கூறப்படுகிறது.

உத - மேலும், நான் இன்பமாக இருக்கிறேன் என்ற எண்ணத்தின் மூலமும் ஸத்வகுணம் மேலோங்கியிருக்கிறது என்று புரிந்துகொள்ளலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

எப்பொழுது இந்த உடலில், எல்லாப் பொறிகளிலும் புலன்களை உணரும் ஆற்றலானது, தெளிவாக, ஒளிபொருந்தியாக விளங்குகிறதோ, அறிவில் தெளிவு ஏற்படுகிறதோ, அப்பொழுது ஸத்வ குணம் ஓங்கியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

மேலும் நான் இன்பமாக இருக்கிறேன் என்று நாம் உணரும்பொழுதும், உள்ளத்தில் ஸத்வ குணம் மேலோங்கியிருக்கிறது என்று புரிந்துகொள்ளலாம்.

लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।

रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ।। १४ - १२ ।।

லோப: ப்ரவ்ருத்திராரம்ப: கர்மணாமஶம: ஸ்ப்ருஹா ।
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப ।। 14 - 12 ।।

பதவுரை

ஹே பரதர்ஷப! - ஓ பரத குலத்தில் சிறந்தோனே! **லோப:** - பொருட்பற்று (பிறரது பொருளை அபகரித்தல்), **ப்ரவ்ருத்தி:** - உடல் அசைவுகள், **கர்மணாம் ஆரம்ப:** - செயலில் முயற்சி, **அஶம:** - சஞ்சலம் (அமைதியின்மை), **ஸ்ப்ருஹா** - ஆசை, **ஏதாநி** - இவை, **ரஜஸி** - ரஜோ குணம், **விவ்ருத்தே** - அதிகரிக்கும்போது, **ஜாயந்தே** - தோன்றுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ பரத குலத்தில் சிறந்தோனே! பொருட்பற்று, அதாவது பிறரது பொருளை அபகரிக்க நினைத்தல், உடல் அசைவுகள், செயலில் முயற்சி, சஞ்சலம் அல்லது அமைதியின்மை, ஆசை - இவை ரஜோ குணம் அதிகரிக்கும்போது தோன்றுகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ரஜோ குணத்தின் அடையாளங்களை உபதேசிக்கிறார்.

பிறரது பொருளை அபகரிக்க வேண்டும் என்ற ஆசை, கை கால்களை அசைத்துக்கொண்டே இருத்தல், அமைதியாக இருக்க முடியாத ஸ்வபாவம், வைதிகமான செயல்களையோ, உலகியல் செயல்களையோ செய்யத் தொடங்குதல், அதிகமான களிப்பு, மகிழ்ச்சி, கோபம் இவற்றை வெளிப்படுத்துதல், அளவுக்கு மீறிய பற்று, அமைதியில்லாமல் தவித்தல், பற்றை வெளிப்படுத்துதல் - இவை ரஜோ குணம் அதிகரிப்பதன் அடையாளங்கள்.

பார்த்ததையெல்லாம் அடைய நினைப்பது சிலரது வழக்கம். பிறரிடமுள்ள சாதாரண பொருளுக்குக்கூட ஆசைப்பட்டு, அது நன்றாக இருக்கிறதே, தனக்கு அது கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைப்பது **ஸ்ப்ருஹா** எனப்படும்.

ரஜோ குணம் அதிகரித்தால், இதுபோன்ற தன்மைகள் வெளிப்படும். ரஜோ குணத்தால்தான் நம் மனதில் இப்படிப்பட்ட எண்ணங்களும், உடலளவில் இப்படிப்பட்ட

Downloaded from **www.omkaravidya.com**

செயல்களும் தோன்றுகின்றன என்று புரிந்துகொள்ள வேண்டும்.

பிறரிடத்தில் இது வெளிப்படுவதைக் கவனிப்பதைக் காட்டிலும், நம்மிடத்தில் இந்த அடையாளங்களைப் பார்த்து, சரிசெய்துகொள்வதுதான் மிக முக்கியம்.

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।

तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ।। १४ - १३ ।।

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।

तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ।। 14 - 13 ।।

பதவுரை

ஹே குருநந்தந - ஓ குருவம்சத்தில் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருபவனே! **அப்ரகாஶ:** - பகுத்தறிவின்மை, **அப்ரவ்ருத்தி: ச** - முயற்சி இன்மை, **ப்ரமாத:** - கவனமின்மை, **மோஹ: ஏவ ச** - அவ்வாறே மதிமயக்கமும், **ஏதாநி** - இவை, **தமஸி** - தமோ குணம், **விவ்ருத்தே** - அதிகரிக்கும்போது, **ஜாயந்தே** - உண்டாகின்றன.

பொழிப்புரை

ஓ குருவம்சத்தில் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருபவனே! பகுத்தறிவின்மை, முயற்சியின்மை, கவனமின்மை, மதிமயக்கம் ஆகியவை தமோ குணம் அதிகரிக்கும்போது உண்டாகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தமோ குணத்தின் அடையாளங்களைக் கூறுகிறார். இந்த மூன்று குணங்களும் கண்ணுக்குத் தெரிவதில்லை. இந்த குணங்களின் காரியங்களை வைத்து, அவற்றை ஊகித்துப் புரிந்துகொள்கிறோம்.

உள்ளத்தில் தமோகுணம் அதிகரித்தால், முழுமையான பகுத்தறிவின்மை வெளிப்படும். அறிவு மழுங்கிவிடும், அவன் செயல்படவே மாட்டான்.

அப்ரகாஶ: அப்ரவ்ருத்தி: - படித்துப் புரிந்துகொள்ளவும் முடியாது, ஒரு வேலையைக் கொடுத்தால், அவனால் செய்யவும் முடியாது.

எப்பொழுது, படித்தாலும் ஒன்றுமே புரியாமல், எதையும் மனதில் வாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோமோ, செயல்படவே முடியவில்லையோ, அப்பொழுது தமோகுணம் மேலோங்கியிருக்கிறது என்று பொருள்.

ப்ரமாத: - செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் அலட்சிய மனோபாவத்துடன் இருப்பது.

மோஹ: - எல்லா விஷயங்களையும் தவறாகவே புரிந்துகொள்ளுதல். எந்த நோக்கில் சொல்லப்படுகிறதோ, அந்த நோக்கத்தில் புரிந்துகொள்ளாமலிருத்தல்.

Downloaded from **www.omkaravidya.com**

தமோகுணம் அதிகமாக இருக்கின்ற ஒருவரிடம், ஹரிச்சந்த்ரன் கதையைச் சொன்னால், பொய் சொன்னதால்தான் ஹரிச்சந்த்ரன் கஷ்டப்பட்டார் என்று புரிந்துகொள்வார்.

ஸத்யத்தைக் கடைப்பிடிப்பதற்காக, எவ்வளவு த்யாகம் செய்தார் என்பதைச் சொல்வதுதான் நோக்கம். ஆனால் விபரீதமாக அர்த்தம் செய்துகொள்வார்.

இன்றைக்கு ஊடகங்கள் ஒருவர் பேசுவதை மற்றொன்றாகத் திரித்துப் பேசுகின்றன. இவையெல்லாம் மோஹத்தில், தமோகுணத்தில்தான் அடங்கும்.

ஏவ என்பது எல்லாவற்றிலும் சேர்க்கப்பட வேண்டும். மிக மந்தமான நிலையில், எதிலும் ஈடுபாடு இல்லாமல், தன் இஷ்டப்படி தவறாகப் புரிந்துகொள்ளுதல் தமோ குணத்தின் வெளிப்பாடாகும்.

यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।

तदोत्तमविदां लोकानमलान्प्रतिपद्यते ।। १४ - १४ ।।

யதா ஸத்த்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத் ।
ததோத்தமவிதாம் லோகாநமலாந்ப்ரதிபத்யதே ।। 14 - 14 ।।

பதவுரை

யதா - எப்பொழுது, **தேஹப்ருத்** - உடலை உடையவன், **ஸத்த்வே ப்ரவ்ருத்தே து** - ஸத்வ குணம் ஓங்கியபோது, **ப்ரலயம்** - மரணத்தை, **யாதி** - அடைகிறானோ, **ததா** -

Downloaded from **www.omkaravidya.com**

அப்பொழுது, **உத்தமவிதாம்** - படைப்பைப் பற்றிய உண்மையை அறிந்தவர்களுடைய, **அமலாந்** - குற்றமற்ற, **லோகாந்** - உலகங்களை, **ப்ரதிபத்யதே** - அடைகிறான்.

பொழிப்புரை

ஸத்வ குணம் ஓங்கியிருக்கும்போது மரணம் அடைகின்ற ஜீவன், படைப்பைப் பற்றிய உண்மையை அறிந்தவர்களுடைய, குற்றமற்ற உலகங்களை அடைகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸத்வ குணம் மோலோங்கியிருக்கும்பொழுது, மரணமடைபவன் அடைகின்ற கதியைக் கூறுகிறார்.

இறக்கும்போது எந்த குணம் மேலோங்கியிருக்கிறதோ, அந்த குணத்தின் அடிப்படையில் அந்த ஜீவன் அடுத்த உடலை எடுக்கும்.

தேஹப்ருத் என்ற சொல்லானது, தேகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற, தேகத்தில் இருந்துகொண்டு இன்பதுன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஜீவாத்மாவைக் குறிக்கும்.

ஜீவாத்மாவிற்கு மரணமில்லை. ஜீவாத்மா உடலுடன் சேர்வதே பிறப்பு, உடலை விட்டுப் பிரிவதே இறப்பு.

அவ்வாறு ஸத்வகுணம் மேலோங்கியிருக்கும்பொழுது உடலை விடுகின்ற ஜீவன், படைப்பைப் பற்றிய

Downloaded from **www.omkaravidya.com**

உண்மையை அறிந்தவர்கள் அடைகின்ற உலகங்களை அடைகிறான்.

உத்தமவித் - படைப்பைப் பற்றிய உண்மையை அறிந்தவர் என்று பொருள். அதாவது, ஹிரண்யகர்ப உபாஸனை செய்தவர்கள் அடைகின்ற ப்ரஹ்மலோகத்தை அந்த ஜீவன் அடைகிறான்.

அமலாந் - குற்றமற்ற இடம். அங்கு தமோகுணத்தின் ஆதிக்கம் இருக்காது, புத்தி தெளிவாக இருக்கும். அத்தகைய இடத்தை அடைகிறான் என்று பொருள்.

रजसि प्रलयं गत्वा कर्मसङ्गिषु जायते ।

तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ।। १४ - १५ ।।

ரஜஸி ப்ரலயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே ।
ததா ப்ரலீநஸ்தமஸி மூடயோநிஷு ஜாயதே ।। 14 - 15 ।।

பதவுரை

ரஜஸி (ப்ரவ்ருத்தே) - ரஜஸ் (ஓங்கியபோது), **ப்ரலயம்** - மரணத்தை, **கத்வா** - அடைந்து, **கர்மஸங்கிஷு** - கர்மத்தில் பற்று உள்ளவர்கள் இடையே, **ஜாயதே** - பிறக்கிறான். **ததா** - அவ்வாறே, **தமஸி (ப்ரவ்ருத்தே)** - தமஸ் (ஓங்கியபோது), **ப்ரலீந:** - இறந்தவன், **மூடயோநிஷு** - அறிவில்லா யோனிகளில், **ஜாயதே** - பிறக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ரஜோ குணம் ஓங்கியபோது மரணம் அடைகின்றவன், கர்மத்தில் பற்று உள்ளவர்களின் இடையே பிறக்கிறான். தமோ குணம் ஓங்கியபோது மரணம் அடைகின்றவன், அறிவில்லா யோனிகளில் பிறக்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ரஜோ குணம் மேலோங்கும்போது மரணமடைகின்றவனும், தமோ குணம் மேலோங்கும்போது மரணமடைகின்றவனும் அடைகின்ற கதிகளைப் பற்றிக் கூறுகிறார்.

ரஜோகுணம் ஓங்கியிருக்கும்போது, உடலை விடுகின்ற ஜீவாத்மா, மீண்டும் வைதிக, லௌகிக கர்மங்களைச் செய்கின்ற மனித உடலில் பிறப்பான்.

எப்பொழுதும் ஆழ்ந்து செயலில் ஈடுபடுகின்ற சூழலில் பிறப்பான். அது ஒன்றும் தவறல்ல. ஆனால், அதிலேயே நின்றுவிடக் கூடாது.

ஸத்வ குணம் ஓங்கியிருக்கும்போது உடலை விடுகின்ற ஜீவர்கள், உத்தமமான சரீரங்களைப் பெற்று, ப்ரஹ்மலோகத்திற்குச் செல்வார்கள் என்று பார்த்தோம்.

தமோகுணம் ஓங்கியிருக்கும்போது மரணமடையும் ஜீவன், அறிவு வளர்ச்சியில்லாத விலங்குகள், பறவைகள் முதலான உடல்களை எடுக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

குணங்களைப் பற்றி இவ்வாறு தெரிந்துகொண்டு, நாம் ஸத்வ குணத்தை வளர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

कर्मणः सुकृतस्याहुः सात्त्विकं निर्मलं फलम् ।

रजसस्तु फलं दुःखमज्ञानं तमसः फलम् ।। १४ - १६ ।।

கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்த்விகம் நிர்மலம் பலம் ।

ரஜஸஸ்து பலம் து:க்கமஜ்ஞாநம் தமஸ: பலம் ।। 14 - 16 ।।

பதவுரை

ஸுக்ருதஸ்ய கர்மண: - புண்ய செயல்களுக்கு (புண்யமான செயல்களை)ச் செய்பவனுக்கு, **ஸாத்த்விகம்** - ஸாத்விகமும், **நிர்மலம்** - தூய்மையும் ஆன (இன்பம்), **பலம்** - பயன், **ஆஹு:** - என்று கூறுகிறார்கள். **ரஜஸ: து** - ராஜஸ கர்மத்திற்கோ, **து:க்கம்** - துன்பம், **பலம்** - பயன், **தமஸ:** - தாமஸ கர்மத்திற்கு, **அஜ்ஞாநம்** - அறியாமை, **பலம்** - பலன்.

பொழிப்புரை

புண்யமான செயல்களைச் செய்பவனுக்கு ஸாத்விகமும் தூய்மையும் ஆன இன்பம் பயனாகக் கிடைக்கும். ராஜஸமான செயல்களைச் செய்பவனுக்குத் துன்பம் பயனாகக் கிடைக்கும். தாமஸமான செயல்களுக்குப் பயன் அறியாமை ஆகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் மூன்று குணங்களின் பயன்களைக் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

புண்ய செயல்களைச் செய்வதால், ஸத்வகுணம் ஓங்கும். அதாவது மனத்தெளிவு, மன ஒருமுகப்பாடு, மன அமைதி, தெளிந்த அறிவு ஆகியவை ஸாத்விகமான செயல்களால் கிடைக்கக்கூடிய பயன்கள்.

இதைப் பற்றி, பகவான் பின்னால் கூறுவார்.

நியதம் ஸங்கரஹிதம் அராகத்வேஷத: க்ருதம் ।
அபலப்ரேப்ஸுநா கர்ம யத்தத்ஸாத்த்விகமுச்யதே ।। 18 - 23 ।।

ஸத்வகுணம் ஓங்க வேண்டுமெனில் ஸாத்விகமான செயல்களைச் செய்ய வேண்டும். தர்மானுஷ்டானங்களை, பலனை விரும்பாமல் செய்ய வேண்டும்.

அருளியலைச் சார்ந்ததாக, உள்ளத்தை அமைப்படுத்தக்கூடிய நோக்கத்துடன் செய்யக்கூடிய செயல்கள் ஸாத்விகமானவை. சுயநலமில்லாமல், பொதுநல நோக்குடன் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யப்படும் செயல்கள் ஸாத்விகமானவை. அதனால், மனதில் அமைதி, தெளிவு, ஒருமுகப்பாடு, பரந்த மனப்பான்மை ஆகியவை ஏற்படும்.

ரஜோகுணத்தினால் விளைந்த செயல்கள், பெரும்பாலும் பொருளியலைச் சார்ந்ததாக இருக்கும். அவை துன்பத்தையே தரும்.

குறுகிய மனப்பான்மையுடன் செய்யப்படும் செயல்களில் தோல்விகள் ஏற்படும். அது மட்டுமல்ல, எவ்வளவு

Downloaded from **www.omkaravidya.com**

கிடைத்தாலும் அதில் நிறைவு ஏற்படாது. அவற்றின் பயன் துன்பம்தான்.

ரஜோ குணத்திலாவது ஓரளவிற்குப் பிறரை மதிக்கின்ற ஸ்வபாவம் இருக்கும். ஆனால் தமோ குணத்தில் இருப்பவர்கள், அளவுக்கு அதிகமான சுயநலத்துடன், பிறருக்குத் தீங்கு செய்வதையே திட்டம்போட்டுச் செய்வார்கள். அவர்களுடைய அறியாமை மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகும்.

அவர்களால் அறிவையோ அமைதியையோ உணர முடியாது, பிறருக்கும் வழங்க முடியாது.

இங்கு பகவான் இவற்றைச் சொல்வதற்குக் காரணம் - நாம் தமோ குணக் காரியங்களை, பிறருக்குத் தீங்கு விளைவிக்கின்ற செயல்களை விட்டுவிட வேண்டும் என்பதற்காகத்தான்.

சுயநலமான செயல்களை விட்டுவிட்டு, பொதுநலத்தை முன்னிட்டு நாம் செய்கின்ற செயல்கள், நமக்கும் சமூகத்திற்கும் அமைதியைத் தரும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

सत्त्वात्सञ्जायते ज्ञानं रजसो लोभ एव च ।

प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ।। १४ - १७ ।।

ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப ஏவ ச ।

ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச ।। 14 - 17 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஸத்த்வாத் - ஸத்வ குணத்திலிருந்து, **ஜ்ஞாநம்** - அறிவு, **ஸஞ்ஜாயதே** - உண்டாகிறது. **ரஜஸ:** - ரஜோ குணத்திலிருந்து, **லோப: ஏவ ச** - பொருட்பற்றும், **தமஸ:** - தமோ குணத்திலிருந்து, **ப்ரமாதமோஹௌ** - கவனக்குறைவும் மயக்கமும், **அஜ்ஞாநம் ஏவ ச** - அறியாமையும் கூட, **பவத:** - உண்டாகின்றன.

பொழிப்புரை

ஸத்வ குணத்திலிருந்து அறிவு உண்டாகிறது. ரஜோ குணத்திலிருந்து பொருட்பற்று உண்டாகிறது. தமோ குணத்திலிருந்து கவனக்குறைவு, மயக்கம், அறியாமை ஆகியவை உண்டாகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் மூன்று குணங்களின் பயன்களை ஸாரமாகக் கூறுகிறார்.

ஸத்வ குணம் நம்மிடத்தில் மேலோங்கும்போது, கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவை தெளிவாக விஷயங்களை அறியக்கூடிய ஆற்றல் படைத்ததாக இருக்கும்.

ரஜோ குணம் ஓங்கினால், கிடைத்த விஷயங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற வேகம் தோன்றும். ஒருவன் ஒரு வைர மூட்டையுடன் நீரில் நடந்து கொண்டிருந்தான். தண்ணீரின் அளவு அதிகரித்ததும் அவன்

Downloaded from **www.omkaravidya.com**

கூச்சலிட்டான். தன்னைக் காப்பாற்றும்படி சொல்லவில்லை, மூட்டையைக் காப்பாற்றுங்கள் என்றான்!

மூட்டையைக் காப்பாற்றி விட்டார்கள், ஆனால் யார் அதனைச் சுமந்து சென்றானோ, அவன் நதியில் அடித்துச் செல்லப்பட்டான். அந்த அளவிற்குச் சிலருக்கு லோப புத்தி இருக்கிறது.

லோப: என்றால் பொருளாசை, பொருட்பற்று என்று அர்த்தம். அவர்கள் தானும் அனுபவிக்க மாட்டார்கள், பிறருக்கும் வழங்க மாட்டார்கள். அவர்களிடம் பாதுகாப்பின்மை அதிகமாக இருக்கும்.

தானே அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் அனுபவிக்க முடியாமல் அவஸ்தைப்படுவதும் உண்டு. இது ரஜோ குணத்தின் பயன்.

தமோ குணம் அதிகரித்தால், அறியாமை அதிகரிக்கும். யாராவது எடுத்துச் சொன்னால்கூட நமக்கு விளங்காது. பகுத்தறிவு சரியாக வேலை செய்யாது. செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறிவிடுவர்.

எல்லாவற்றையும் தவறாகப் புரிந்துகொள்வர். நல்லதைக்கூட கெட்டதாகப் பார்க்கும் மனோபாவம் வரும்.

ஆக, அறியாமை, மயக்கம், கவனக்குறைவு, அலட்சிய மனோபாவம் ஆகியவை தமோகுணத்தின் விளைவுகள். உண்மையைத் தெரிந்துகொள்ளாத தன்மை, தவறாகப் புரிந்துகொள்ளும் தன்மை, தான் கடமைகளைச் செய்யாமல்,

Downloaded from **www.omkaravidya.com**

கடமைகளைச் செய்பவர்களை நிந்திக்கின்ற மனப்பான்மை - இவை தமோகுணத்தின் பயன்கள்.

ऊर्ध्वं गच्छन्ति सत्त्वस्था मध्ये तिष्ठन्ति राजसाः ।

जघन्यगुणवृत्तिस्था अधो गच्छन्ति तामसाः ।। १४ - १८ ।।

ஊர்த்வம் கச்சந்தி ஸத்த்வஸ்த்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா: ।
ஜகந்யகுணவ்ருத்திஸ்த்தா அதோ கச்சந்தி தாமஸா: ।। 14 - 18 ।।

பதவுரை

ஸத்த்வஸ்த்தா - ஸத்வத்தில் உள்ளவர்கள், **ஊர்த்வம்** - மேலான உலகங்களுக்கு, **கச்சந்தி** - செல்கிறார்கள். **ராஜஸா:** - ராஜஸர்கள், **மத்யே** - இடையில் (மநுஷ்யலோகம் முதலானவற்றில்), **திஷ்டந்தி** - நிற்கின்றனர். **ஜகந்யகுணவ்ருத்திஸ்த்தா** - கீழான குண ஒழுக்கத்தில் உள்ள, **தாமஸா:** - தாமஸர்கள், **அத:** - கீழே, **கச்சந்தி** - செல்கிறார்கள்.

பொழிப்புரை

ஸத்வ குணத்தில் உள்ளவர்கள், மேலான உலகங்களுக்குச் சென்று, தேவ சரீரங்களை எடுக்கிறார்கள். ராஜஸ குணத்தில் உள்ளவர்கள், மீண்டும் மனித உடல்களை எடுக்கிறார்கள். கீழான குண ஒழுக்கமான தாமஸ குணத்தில் உள்ளவர்கள், கீழான மிருக உடல்களை எடுக்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மூன்று குணங்களில் ஒவ்வொன்றும் ஓங்கியிருக்கும்போது உடலை உகுக்கின்ற ஜீவர்கள் அடைகின்ற கதிகளைப் பற்றி ஸாரமாகக் கூறுகிறார்.

இந்த கருத்துகளை, நம் மனதில் நன்கு பதிய வைப்பதற்காக, மீண்டும் மீண்டும் கூறுகிறார்.

தமோ குணத்தை, ரஜோ குணத்தினால் வெற்றிகொள்ள வேண்டும். ரஜோ குணத்தை, ஸத்வ குணத்தால் வெல்ல வேண்டும். ஸத்வ குணத்தை நன்கு வளர்ப்பதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

தமோ குணத்தின் வெளிப்பாடு சோம்பேறித்தனம். அது நீங்குவதன்பொருட்டு, தர்மாநுஷ்டானம், ஈச்வர பக்தி, கர்மயோகம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு ரஜோ குணத்தை வளர்ப்பதன் மூலம் தமோகுணத்தை வெல்ல வேண்டும்.

பகவானை த்யானித்து, ரஜோ குணத்தையும் கட்டுப்படுத்தி, மனதை ஒருமுகப்படுத்தி, குருமுகமாக வேதாந்த சாஸ்த்ரத்தைக் கற்று, ஸத்வ குணத்தையும் வெற்றிகொள்ள வேண்டும்.

குணங்களைக் கடந்த பரம்பொருளைப் பற்றிய அறிவைப் பெற்று, ஸத்வ குணத்தைக் கடந்தவனாகவும் தன்னை உணர வேண்டும். இதுவே ஆன்மிக வாழ்க்கையாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

நம்முடைய பிறப்பையோ, சூழ்நிலையையோ மாற்ற முடியாது. ஆனால், நம்மிடமுள்ள குணங்களை, முயற்சிசெய்து நம்மால் மாற்றிக்கொள்ள முடியும். அவ்வாறு ஸத்வ குணத்தை வளர்ப்பதற்கு ஸத்ஸங்கம் தேவை.

குணத்தில் உயர வேண்டும் என்பதை நாம் மனதில் ஆழமாகச் சொல்லிக் கொள்ள வேண்டும். சுயபரிந்துரை இதற்கு மிக உதவும்.

ஸத்வ குணம் மேலோங்கியிருப்பவர்கள் மேலே செல்கிறார்கள்.

அதாவது, மனித உடலைக் காட்டிலும் மேலான தேவ சரீரங்களை எடுக்கிறார்கள் என்று பொருள்.

ரஜோ குணம் மேலோங்கியிருக்கும்போது இறப்பவர்கள் மீண்டும் மனித உடல்களை எடுக்கிறார்கள். கர்மங்களைச் செய்து, பிறகு ஸத்வ குணத்தைப் பெற்று, ஞானத்தில் நிலைபெறுவார்கள் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

தமோகுணத்தை **ஜகந்யகுணம்** என்கிறார் பகவான். அதற்குக் கீழான குணம் என்று பெயர். தமோகுணம் மேலோங்கியிருப்பவர்கள் எப்பொழுதும் சோம்பேறிகளாக, யார் சொல்வதையும் கேட்காமல், பிறரைக் குறைகூறிக் கொண்டு, பிறருக்குத் துன்பம் கொடுத்துக்கொண்டு இருப்பார்கள்.

காவ்யஶாஸ்த்ரவிநோதேந காலோ கச்சதி தீமதாம் ।
வ்யஸநேந து மூர்க்காணாம் நித்ரயா கலஹேந வா ।।

Downloaded from **www.omkaravidya.com**

அறிவாளிகளுக்கு, புண்ய காரியங்களைச் செய்வதிலும் நல்ல சாஸ்த்ரங்களைக் கற்பதிலும் நேரம் செல்கிறது. முட்டாள்களுக்குக் கவலைப்படுதல், பிறருக்குக் கவலையை ஊட்டுதல், கலகம் செய்தல், உறங்குதல் ஆகியவற்றில் காலம் செல்கிறது.

தமோகுணம் மேலோங்கியிருப்பவர்கள் மனித உடல்களை எடுக்க மாட்டார்கள். கீழான மிருக உடல்களை எடுத்துத் துன்பப்படுவார்கள்.

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।

गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ।। १४ - १९ ।।

நாந்யம் குணேப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி ।
குணேப்யஶ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோऽதிகச்சதி ।। 14 - 19 ।।

பதவுரை

யதா - எப்பொழுது, **த்ரஷ்டா** - (அனைத்தையும் பார்ப்பவன்) ஜீவாத்மா, **குணேப்ய:** - குணங்களுக்கு, **அந்யம்** - வேறாக, **கர்த்தாரம்** - கர்த்தாவை, **ந அநுபஶ்யதி** - அறியவில்லையோ, **ச** - மேலும், (**ஸ்வம்** -தன்னை), **குணேப்ய:** - குணங்களுக்கு, **பரம்** - மேலாக (வேறாக) **வேத்தி** - (அகர்த்தாவாக) அறிகிறானோ, **ஸ:** - அவன், **மத்பாவம்** - என் ஸ்வரூபத்தை, **அதிகச்சதி** - அடைகிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

எப்பொழுது, அனைத்தையும் பார்ப்பவனான ஜீவாத்மா, குணங்களுக்கு வேறாக கர்த்தாவை அறியவில்லையோ, தன்னை குணங்களுக்கு வேறான, மேலான அகர்த்தாவாக அறிகிறானோ, அப்பொழுது அவன் என் ஸ்வரூபத்தை அடைகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், குணாதீத லக்ஷணத்தை உபதேசிக்கிறார்.

அறிவை நன்கு பயன்படுத்துகின்ற ஜீவாத்மா, குணங்களுக்கு வேறாக கர்த்தா இல்லை என்பதைப் புரிந்துகொள்கிறான்.

அநுபஶ்யதி என்பதற்கு **ஶாஸ்த்ர-ஆசார்ய-உபதேஶமநுபஶ்யதி।** - வேதாந்த சாஸ்த்ரம், ஆசார்யர் ஆகியோரின் உபதேசத்தைச் சார்ந்து பார்க்கிறான் என்று பொருள்.

ஆத்மா அல்லது நான், கர்த்தா அல்ல. ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள்தான் கர்த்தாவாக இருக்கின்றன. குணங்களுடன் இணைத்துக்கொள்ளும்பொழுதுதான், கர்த்ருத்வம் (செயல்புரிபவன் என்ற தன்மை) கற்பிக்கப்படுகிறது.

உண்மையில் எனக்கு கர்த்ருத்வம் இல்லை. மாயையின் குணங்களால், ஆத்மாவாகிய என்னில் கர்த்ருத்வம் கற்பிக்கப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

உண்மையில் நான் செயல்புரிபவனோ, செயலின் பலனை அனுபவிப்பவனோ அல்ல என்ற கருத்து, நான்கு, ஐந்து அத்யாயங்களிலேயே விரிவாக உபதேசிக்கப்பட்டது.

மேலும், குணங்களுக்கு வேறான, நிர்குணமான பரம்பொருளாகத் தன்னை உணர்கிறான் என்ற கருத்தையும் பகவான் இங்கு கூறுகிறார்.

அத்தகையவன் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறான். குணங்களுக்கு வேறான, அகர்த்தாவான பரமாத்மாவே நான் என்று, பரம்பொருளுடன் ஒன்றாக இருக்கும் தன்மையை உணர்கிறான்.

உண்மையில் நான் ப்ரஹ்மமாகத்தான் இருக்கிறேன், தனித்தன்மை என்பது உண்மையில்லை. மாயையினால் இந்தக் கற்பனை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து தனித்தன்மையை, தன்னுணர்வை விட்டுவிடுகிறான்.

எனவே அவன் ஜீவ**பா**வத்தை விட்டுவிட்டு, ப்ரஹ்ம **பா**வத்தை உணர்ந்துகொள்கிறான். அப்பொழுதே அவன் தன்னை அஸம்ஸாரி, நித்யமுக்தன் என்பதையும் உணர்ந்துவிடுகிறான். இதுவே மோக்ஷ ஸாதனமாகும்.

குணங்களுக்கு வேறாக கர்த்தா இல்லை என்றும், குணங்கள் மாயத்தோற்றங்கள் என்றும், அகர்த்தவான ஆத்மா, ப்ரஹ்மஸ்வரூபம் என்றும் உணர்பவன், தன்னை ப்ரஹ்மமாகவே உணர்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।

जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ।। १४ - २० ।।

குணாநேதாநதீத்ய த்ரீந்தேஹீ தேஹஸமுத்பவாந் ।

ஜந்மம்ருத்யுஜராது:க்கைர்விமுக்தோ‌ऽம்ருதமஶ்நுதே ।। 14 - 20 ।।

பதவுரை

தேஹீ - தேஹியானவன் (உயிர், ஆத்மா), **தேஹ-ஸமுத்பவாந்** - உடல், மனம் முதலியவற்றுக்குக் காரணமான, **ஏதாந்** - இந்த, **த்ரீந்** - மூன்று, **குணாந்** - குணங்களையும், **அதீத்ய** - (மெய்யறிவினால்) கடந்து, **ஜந்ம-ம்ருத்யு-ஜரா-து:க்கை:** - பிறப்பு, இறப்பு, முதுமைத் துன்பங்களிலிருந்து, **விமுக்த:** - விடுபட்டவனாய், **அம்ருதம்** - பிறவாப் பெருநிலையை (மோக்ஷத்தை), **அஶ்நுதே** - அடைகிறான் (உணர்கிறான்).

பொழிப்புரை

ஜீவாத்மாவானவன், உடல், மனம் முதலியவற்றுக்குக் காரணமான இந்த மூன்று குணங்களையும் மெய்யறிவால் கடந்துவிடுகிறான். அதன் மூலம், பிறப்பு, இறப்பு, முதுமைத் துன்பங்களிலிருந்து விடுபட்டவனாக, பிறவாப் பெருநிலையாகிய மோக்ஷத்தை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நிர்குண தத்துவமான, குணங்களுக்கு ஸாக்ஷியான, ஆத்ம தத்துவத்தைப் பற்றி உபதேசிக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

தேஹீ என்ற சொல்லானது, உடலில் இருக்கக்கூடிய ஜீவாத்ம தத்துவத்தைக் குறிக்கிறது.

நாம் உடல்களாக நம்மைக் கருதிக்கொள்கிறோம். ஆனால், உண்மையில் நாம் உடல்களை உடையவர்களாக இருக்கிறோம்.

உடல் உண்மையல்ல என்பதைப் புரிந்துகொண்டால், உடலை உடையவர்களாகவும் நாம் இல்லை என்பதைப் புரிந்துகொள்வோம். உடல் ஒரு மாயத்தோற்றம் என்று உணர்ந்துவிட்டால், உடல் என்னுடையது என்ற எண்ணத்தையும் நீக்கிவிடுவோம்.

மாயையின் ஸத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய குணங்கள், உடல், மனம், முதலானவற்றை உண்டுபண்ணுவதற்குக் காரணமாக இருக்கின்றன.

மெய்யறிவைப் பெற்ற ஜீவாத்மா, குணங்களையும், அவற்றிலிருந்து தோன்றியவற்றையும் பொய்யென்று புரிந்துகொண்டு, அவை மித்யா - வெறும் தோற்றமே என்று நிச்சயம் செய்கிறான்.

இந்த உடலைப் பற்றி எண்ணினால், பிறப்பின்போது ஏற்படும் துக்கம், உடலை விட்டுக் கிளம்பும்போது ஏற்படும் துக்கம், முதுமையால் வரும் துக்கம் என ஏகப்பட்ட துன்பங்கள் இருக்கின்றன.

ஜந்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி-து:க்க-தோஷாநுதர்ஶநம் । (13-8)

Downloaded from **www.omkaravidya.com**

என்று பகவான் ஏற்கெனவே கூறினார். உடல் வாழ்க்கையின் துன்பங்களைச் சிந்தித்துப் பார்த்து, உடல் வாழ்க்கையில் பற்றற்ற தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

மெய்யறிவால் குணங்களையும், அவற்றிலிருந்து தோன்றிய உடல், மனதையும் வெறும் தோற்றம் என்று புரிந்துகொண்டு அவற்றைக் கடந்தவன், பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் முதலியவற்றால் ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்து விடுபட்டவனாக, இங்கேயே அழியாத மெய்ப்பொருளாகத் தன்னை உணர்ந்துகொள்கிறான். அவனுக்கு மறுபிறவி இல்லை. இங்கேயே இப்பொழுதே மோக்ஷத்தை உணர்கிறான்.

19, 20 ஆகிய ச்லோகங்களில், குணாதீதமான, நிர்குணமான ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்து, உடல், மனதில் உள்ள அபிமானங்களை, மெய்யறிவால் நீக்குவது பற்றி பகவான் உபதேசித்திருக்கிறார்.

अर्जुन उवाच

कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।

किमाचारः कथं चैतांस्त्रीन्गुणानतिवर्तते ।। १४ - २१ ।।

அர்ஜுந உவாச

கைர்லிங்கைஸ்த்ரீந்குணாநேதாநதீதோ பவதி ப்ரபோ ।

கிமாசார: கதம் சைதாம்ஸ்த்ரீந்குணாநதிவர்த்ததே ।। 14 - 21 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

அர்ஜுந: - அர்ஜுனன், **உவாச** - கூறினான்.

ஹே ப்ரபோ - ஓ அனைத்தையும் ஆள்பவரே! **ஏதாந்** - இந்த, **த்ரீந்** - மூன்று, **குணாந்** - குணங்களை, **அதீத:** - கடந்தவர், **கை:** - எத்தகைய, **லிங்கை:** - அடையாளங்களால், (**ஜ்ஞாயதே** - அறிந்துகொள்ளப்படுகிறார்?) **கிம் ஆசார:** - எத்தகைய நடத்தையுள்ளவர், **கதம் ச** - எவ்வாறு, **ஏதாந்** - இந்த, **த்ரீந்** - மூன்று, **குணாந்** - குணங்களையும், **அதிவர்த்ததே** - கடக்கிறார்.

பொழிப்புரை

அர்ஜுனன் கூறினான்.

ஓ அனைத்தையும் ஆள்பவரே! இந்த மூன்று குணங்களையும் கடந்தவர், எத்தகைய அடையாளங்களால் அறிந்து கொள்ளப்படுகிறார்? அவர் எத்தகைய நடத்தை உள்ளவர்? இந்த மூன்று குணங்களையும் அவர் எவ்வாறு கடக்கிறார்?

விளக்கவுரை

பகவானுடைய ஸகுண-நிர்குண-விவேக உபதேசம் நிறைவுபெற்ற பிறகு, அர்ஜுனன் கேள்வி கேட்கிறான்.

பகவான் குணங்களைக் கடந்த மெய்ப்பொருள் தத்துவத்தைப் பற்றிக் கூறினார். மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்தை உடையவர் எப்படியிருப்பார் என்பதே அர்ஜுனனின் கேள்வி.

Downloaded from **www.omkaravidya.com**

பகவானை அர்ஜுனன் **ஹே ப்ரபோ!** என்று அழைக்கிறான். **ப்ரபு:** என்று சொல்லுக்கு அனைத்தையும் ஆளக் கூடியவர் என்று பொருள்.

மூன்று குணங்களுக்கும் வேறாகத் தன்னை உணர்ந்துகொண்டவர், எத்தகைய அடையாளங்களை உடையவராக இருப்பார்? என்று அர்ஜுனன் கேட்கிறான்.

குணங்களைக் கடந்தவருடைய இலக்கணம் என்ன?

இந்த ஞானத்தைப் பெற்ற பிறகு, அவர் உலக வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்வார்? அவர் ஓரிடத்தில் அமர்ந்திருப்பாரா அல்லது செயல்புரிவாரா? செயல்புரிந்தால், அவருடைய செயல்கள் எத்தகையவையாக இருக்கும்?

பிறரால் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களை அவர் எப்படி எதிர்கொள்வார்?

இதுபோன்ற கேள்விகள் இதில் அடங்கியிருக்கின்றன.

ஸ்திதப்ரஜ்ஞ லக்ஷணத்தைப் பற்றி, அர்ஜுனன் இரண்டாவது அத்யாயத்தில் கேள்வி கேட்டான். 12 ஆவது அத்யாயத்தில், பகவானாகவே பராபக்த லக்ஷணத்தை உபதேசித்தார்.

ஸ்திதப்ரஜ்ஞலக்ஷணம், பராபக்தலக்ஷணம், குணாதீதலக்ஷணம் ஆகிய மூன்றுமே ஒன்றுதான்.

அர்ஜுனன் இந்த ச்லோகத்தில், குணாதீத உபாயத்தையும் - அதாவது மூன்று குணங்களையும் அவர் எவ்வாறு கடக்கிறார் என்பதையும் கேட்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

புறச்செயல்களை வைத்துத்தான், ஒரு மனிதரின் குணத்தைப் பற்றி அநுமானம் செய்கிறோம். அதைக்காட்டிலும் முக்கியமாக, நம்மை நாமே புரிந்துகொள்ள இந்த ஞானம் உதவும்.

பிறரை முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியாது, புரிந்துகொள்ள வேண்டிய தேவையும் இல்லை, அவசியமும் இல்லை. யார் குணாதீதன் என்று ஆராய்வது நம்முடைய வேலை அல்ல.

நாம் குணங்களைக் கடந்துவிட்டோமா என்பதை எப்படி அடையாளம் கண்டுகொள்வது? குணாதீத தன்மையை அடைந்துவிட்டால், நம்முடைய நடவடிக்கை எப்படி இருக்கும்? குணாதீதன் ஆவதற்கு என்ன வழி?

இவ்வாறு, இவை நம்மைப் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவ வேண்டும். நமக்கு மன அமைதி வேண்டும் என்பதற்காகத்தான் கீதையைக் கற்கிறோம், பிறரை எடைபோடுவதற்காக அல்ல.

எனவே அந்த அடிப்படையில் இந்த ச்லோகத்தின் பொருளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

श्रीभगवानुवाच

प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।

न द्वेष्टि सम्प्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ।। १४ - २२ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஸ்ரீபகவாநுவாச

ப்ரகாஶம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்டவ ।
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தாநி ந நிவ்ருத்தாநி
காங்க்ஷதி ।। 14 - 22 ।।

பதவுரை

ஸ்ரீபகவாந் - ஸ்ரீபகவான், **உவாச** - கூறினார்.

ஹே பாண்டவ! - ஓ அர்ஜுனா! **ப்ரகாஶம் ச** - ஸத்வ குண காரியத்தினாலோ (தெளிவினாலோ), **ப்ரவ்ருத்திம் ச** - ரஜோ குண காரியத்தினாலோ (செயலில் முயற்சியாலோ), **மோஹம் ஏவ ச** - தமோ குண காரியத்தினாலோ (மயக்கத்தினாலோ), **ஸம்ப்ரவ்ருத்தாநி** - வந்தவற்றை, **ந த்வேஷ்டி** - அவர் வெறுப்பதில்லை, **நிவ்ருத்தாநி** - போனவற்றுக்காக, **ந காங்க்ஷதி** - ஏங்குவதில்லை.

பொழிப்புரை

ஸ்ரீபகவான் கூறினார்.

ஓ அர்ஜுனா! ஸத்வ குண காரியமாகிய தெளிவினாலோ, ரஜோ குண காரியமான செயலில் முயற்சியாலோ, தமோ குண காரியமாகிய மயக்கத்தினாலோ வந்தவற்றை அவர் வெறுப்பதும் இல்லை, போனவற்றுக்காக அவர் ஏங்குவதும் இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அர்ஜுனனின் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார்.

அர்ஜுனனின் கேள்விகளாக ஆதிசங்கரர் இந்த இரண்டை வகைப்படுத்துகிறார்.

1) எந்த அடையாளங்களைக்கொண்டு ஒருவர் குணாதீதன் ஆகிவிட்டார் என்று தெரிந்துகொள்வது? (அவரது நடவடிக்கைகளை இதிலேயே சேர்த்துக் கொள்ளலாம்).

2) குணாதீதன் ஆவதற்குரிய வழி என்ன?

பகவான் பதில் கூறுகிறார். **ப்ரகாஶ:, ப்ரவ்ருத்தி:, மோஹ:** ஆகிய மூன்று சொற்களும் முறையே ஸத்வ, ரஜோ, தமோ குண காரியங்களைக் குறிக்கின்றன.

மனத்தெளிவு, மனதின் படபடப்பு, மந்தத்தன்மை ஆகியவற்றை குணாதீதன் வெறுப்பதில்லை. அவற்றுடன் தன்னை இணைத்துக் கொள்வதில்லை.

மனம் தெளிவாக இருக்கிறது என்று அவர் மகிழ்வதுமில்லை, மனம் படபடப்பாக இருக்கிறது, மந்தமாக இருக்கிறது என்று வருந்துவதுமில்லை.

ஆத்மா ஸத்வகுண காரியமோ, ரஜோகுண காரியமோ, தமோகுண காரியமோ அல்ல. மாயையைச் சார்ந்த குணங்களின் வெளிப்பாடுதான், மனம் முதலான படைப்புகள். அவற்றுடன் தூய உணர்வான ஆத்மாவாகிய என்னை நான்

Downloaded from **www.omkaravidya.com**

இணைத்துக்கொள்ள மாட்டேன் என்ற ஞானத்தினால் இவ்வாறு கருதுகிறார்.

நான் தெளிவாக இருக்கிறேன், இன்பமாக இருக்கிறேன், அமைதியின்றி இருக்கிறேன், முட்டாளாக இருக்கிறேன், சஞ்சலமாக இருக்கிறேன் என சொல்வதெல்லாம் மனதுடன் தன்னை இணைத்துக்கொண்டுதான்.

குணாதீதன், மனதின் தர்மங்களுடன் தன்னை இணைத்துக்கொள்வதில்லை. அவற்றை அவர் வெறுப்பதில்லை.

அஜ்ஞானி, உண்மையை அறியாததால், தமோ குணத்தை வெறுக்கிறான், ஸத்வ குணத்தை விரும்புகிறான். குணாதீதன் அவற்றைக் குறித்து வருந்துவதோ, வெறுப்பதோ இல்லை.

குணாதீதன் குணங்களை விரும்புவதுமில்லை. உறங்க வேண்டும், அதற்காக தமோகுணம் வேண்டுமென்றோ, செயல்புரிய வேண்டும், அதற்கு ரஜோகுணம் வேண்டுமென்றோ, அமைதி வேண்டும், அதற்காக ஸத்வகுணம் வேண்டுமென்றோ, அவர் நினைப்பதில்லை.

குணாதீதன், முக்குணங்களை வெறுப்பதுமில்லை, விரும்புவதுமில்லை. காரணம், முக்குணங்கள் என்னைச் சேர்ந்தவை அல்ல என்ற ஞானத்துடன் அவர் இருக்கிறார்.

முக்குணங்கள் மனதின் தர்மங்கள். நான் மனம் அல்ல, அவைகளுக்கு ஸாக்ஷி. எனவே, அவை எப்படியிருந்தாலும், அவற்றை நான் மதிக்கப் போவதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

இவ்வாறு குணாதீதன் தனக்குள் புரிந்துவைத்திருப்பது, இன்னொருவருக்குத் தெரியாது. இந்த அடையாளங்கள் அவரவருக்குத்தான் தெரியும் என்கிறார் ஆதிசங்கரர்.

நம்முடைய மனதிலுள்ள விருப்பு வெறுப்புகளை, நாம்தான் அறிய முடியும். சில செயல்கள் மூலம் பிறர் அறியக்கூடும். அது அநுமானம் மட்டுமே. நமக்குத்தான் நேரடியாக அவை விளங்கும்.

பிறரைப் பற்றி அநுமானம் செய்வதற்கு, இந்த அறிவை நாம் பயன்படுத்தக் கூடாது. நம்முடைய தன்னுணர்வையே நாம் நீக்கும்பொழுது, பிறருடைய தன்னுணர்வுக்கு ஏன் மதிப்புத் தர வேண்டும்?

இது மிக முக்கியமான ச்லோகம், நன்கு நினைவில் கொள்ள வேண்டிய ச்லோகம்.

முக்தி என்பது, மனதின் கோணத்தில் இல்லை. ஆத்மாவின் கோணத்தில் முக்தி என்பது தேவையில்லை என்பதை இந்த ச்லோகம் தெளிவுபடுத்துகிறது.

ஆத்மா எப்பொழுதுமே முக்தியில்தான் இருக்கிறது. மனம் என்றைக்குமே முக்தியடைய முடியாது. ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களில் சுழன்று கொண்டிருப்பதுதான் மனதின் இயல்பு.

ஸமாதி அப்யாஸத்தினால் மனதின் பிடியிலிருந்து ஓரளவு விடுபடலாம். ஆனால், அறிவால், மனதை உண்மையென்று மதிக்காமல் இருப்பதே போதுமானது என்பதுதான், அத்வைத ஸித்தாந்தத்தின் முக்கியமான உபதேசம்.

Downloaded from **www.omkaravidya.com**

தத்துவங்களை ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தால், காலப்போக்கில் அந்த ஞான பலத்தாலேயே மனதின் தன்மைகளை மதிக்காத தன்மை ஏற்பட்டுவிடும்.

उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।

गुणा वर्तन्त इत्येव योऽवतिष्ठति नेङ्गते ।। १४ - २३ ।।

उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।

गुणा वर्तन्त इत्येव योऽवतिष्ठति नेङ्गते ।। 14 - 23 ।।

பதவுரை

यः - எவர், **उदासीनवत्** - உதாஸீனத்தன்மை உடையவராக, **आसीनः** - இருந்துகொண்டு, **गुणैः** - குணங்களால், **न विचाल्यते** - அசைக்கப்படுவதில்லையோ, **यः** - எவர், **गुणाः** - குணங்கள், **वर्त्तन्ते** - செயல்படுகின்றன, **इति एव** - என்று (புரிந்துகொண்டு), **अवतिष्ठति** - நிற்கிறாரோ, (**सः** - அவர்), **न इङ्गते** - (தனது ஸ்வரூபத்திலிருந்து) அசைவதில்லை.

பொழிப்புரை

எவர், உதாஸீனத்தன்மை உடையவராக இருந்துகொண்டு, குணங்களால் அசைக்கப்படுவதில்லையோ, எவர், குணங்கள் செயல்படுகின்றன என்று புரிந்துகொண்டிருக்கிறாரோ, அவர், தனது ஸ்வரூபத்திலிருந்து அசைவதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், குணங்களைக் கடந்தவரைப் பற்றி உபதேசிக்கிறார்.

குணங்களைக் கடந்த தன்மை என்பது ஆத்மாவினுடையது. குணங்களைக் கடந்த தன்மையை தன் ஸ்வரூபமாக உணர்ந்திருப்பவர் குணாதீதன்.

முக்குணங்களால் மனதில் ஏற்படுகின்ற சஞ்சலங்களைக் குறித்து, அவர் மகிழ்வதுமில்லை, வருந்துவதுமில்லை.

அவர் மனதை நன்கு பண்படுத்தியவர் எனினும், மனதின் நிலையற்ற, மாறிக்கொண்டே இருக்கின்ற தன்மையையும் புரிந்து வைத்திருக்கிறார். அதனால், மனதுடன் தன்னை இணைத்துக் கொள்வதில்லை.

உதாஸீந: என்றால் விருப்பு வெறுப்பு இல்லாதவர் என்று பொருள். ஒரு புதிய இடத்தில், அறிமுகமில்லாத நபர்களிடத்தில் நமக்கு விருப்போ, வெறுப்போ இருக்காது. அந்த மனநிலைக்குப் பெயர்தான் உதாஸீனத்வம்.

எவராவது நமக்கு இன்பத்தைக் கொடுத்தால் அவரிடத்தில் விருப்பமும், துன்பத்தைக் கொடுத்தால் அவரிடத்தில் வெறுப்பும் ஏற்படுகின்றன. அவ்வாறு விருப்போ வெறுப்போ இல்லாமல், எதிலும் சேராமல் இருப்பவர்தான் உதாஸீனன்.

எந்தப் பக்கமும் சேராமல், நடுநிலையில் ஒருவர் இருப்பதுபோல், இவர் தன்னிடத்திலேயே உடல்-மனம்

Downloaded from **www.omkaravidya.com**

ஆகியவைகளில் இருந்தாலும், அவற்றுடன் சேராமல் உதாஸீனனாக இருக்கிறார்.

உடலையோ மனதையோ, விரும்பாமலோ வெறுக்காமலோ இருக்கிறார். இவ்வாறு உதாஸீனத்தன்மை உடையவர், குணாதீதன் ஆவதற்குரிய வழியில் நிலைபெற்றிருக்கிறார்.

ஆத்மாவை நன்கு தெரிந்துகொண்டவர், உடல்பற்று, உள்ளப்பற்று, உலகப்பற்று ஆகியவற்றை நன்கு துறந்தவர், குணங்களால் அசைக்கப்படுவதில்லை. தன்னைப் பற்றிய உண்மை அறிவில் அவர் நிலைத்திருப்பதே அதற்குக் காரணம்.

குணா குணேஷு வர்த்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே । (3-28)

என இந்தக் கருத்தை பகவான் ஏற்கெனவே கூறினார். அதாவது, உடல், மனம், புத்தி ஆகியவை மாயையின் முக்குணங்களால் தோன்றியவை. இந்த உலகிலுள்ள அனைத்துமே முக்குணங்கள் மயமானவை.

அறிகின்ற உடல் மனமும், அறியப்படுபொருளான உலகமும் - அனைத்துமே குணமயமாக இருக்கின்றன. உடல்-மனம், உலகம் - இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன.

Matter and matter interacts, it doesn't matter என்று கூறுவார்கள்.

ஆக, ஸ்தூல நிலையில் உள்ள ஜடப் பொருட்கள், ஸூக்ஷ்ம நிலையிலுள்ள ஜடப் பொருட்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

உடல்-மனமாகிய குணம், உலகமாகிய குணத்துடன் தொடர்புகொள்கிறது என்று அறிபவர், தனது உண்மை ஸ்வரூபத்திலிருந்து நழுவுவதில்லை, அசைவதில்லை.

குணாதீதன் விருப்பு வெறுப்பு அற்றவராக, இந்த உடல்-மனதில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர் குணங்களால் சற்றும் பாதிக்கப்படுவதில்லை. குணங்களும் குணங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டு செயல்படுகின்றன என்பதை அறிந்து, இவர் அசையாமல் இருக்கிறார். உடலாலோ உள்ளத்தாலோ உலகாலோ, அவர் சிறிதளவும் பாதிக்கப்படுவதில்லை.

समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकाञ्चनः ।

तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ।। १४ - २४ ।।

ஸமது:க்கஸுக: ஸ்வஸ்த்த: ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந: ।
துல்யப்ரியாப்ரியோ தீரஸ்துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: ।। 14 - 24 ।।

பதவுரை

ஸமது:க்கஸுக: - இன்பத்திலும் துன்பத்திலும் ஸமமானவர், **ஸ்வஸ்த்த:** - தன் ஸ்வரூபத்தில் நிலைத்தவர், **ஸம-லோஷ்ட-அஶ்ம-காஞ்சந:** - மண்கட்டி, கல், பொன் இவற்றை ஸமமாகக் காண்பவர், **துல்ய-ப்ரிய-அப்ரிய:** - தன்னை விரும்புபவர், தன்னை விரும்பாதவர் ஆகியோரிடத்தில் ஸமமாக இருப்பவர், **தீர:** - சிறந்த

Downloaded from **www.omkaravidya.com**

பகுத்தறிவாளர், **துல்ய-நிந்தாத்மஸம்ஸ்துதி:** - தன்னைப் புகழ்பவரிடத்திலும் இகழ்பவரிடத்திலும் ஸமமாக இருப்பவர்.

பொழிப்புரை

இன்பத்திலும் துன்பத்திலும் ஸமமானவர், தன் ஸ்வரூபத்தில் நிலைத்தவர், மண்கட்டி, கல், பொன் ஆகியவற்றை ஸமமாகக் காண்பவர், தன்னை விரும்புபவர் - தன்னை விரும்பாதவர் ஆகியோரிடத்தில் ஸமமாக இருப்பவர், சிறந்த பகுத்தறிவாளர், மெய்யறிவில் நிலைபெற்றவர், தன்னைப் புகழ்பவரிடத்திலும் இகழ்பவரிடத்திலும் ஸமமாக இருப்பவர்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் குணாதீதனுடைய இலக்கணங்களை மேலும் கூறுகிறார்.

ஸமது:க்கஸுக: - இன்பத்திலும் துன்பத்திலும் ஸமமானவர். அதாவது, துன்பத்தை வெறுப்பதுமில்லை, இன்பத்தை விரும்புவதுமில்லை. இந்த ஸமமான மனநிலைக்குக் காரணம், ப்ரஹ்ம ஞானம். அதனால் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாத மனநிலையை உடையவராக இருக்கிறார்.

ஸ்வஸ்த்த: - தன்னில் தான் இருப்பவர். உடலையோ மனதையோ தானாகக் கருதாதவர். தன்னை உணர்வாக உணர்ந்து, அந்த உணர்விலேயே நிலைத்திருப்பவர்.

ஸம-லோஷ்ட-அஶ்ம-காஞ்சந: - மண்கட்டி, கல், பொன் முதலான விருப்பு வெறுப்புக்குக் காரணமான எல்லாப்

Downloaded from **www.omkaravidya.com**

பொருட்களிலும் ஸமமாக இருக்கிறார். பொருட்களை விரும்புவதுமில்லை, வெறுப்பதுமில்லை.

பெரும்பாலானவர்கள் பொன்னை விரும்புவார்கள். சிலர் வைராக்யத்தின் காரணமாகப் பொன்னை வெறுப்பார்கள். குணாதீதன் அதனை விரும்புவதுமில்லை, வெறுப்பதுமில்லை, அதனை ஒரு பொருட்டாக மதிப்பதே இல்லை.

இவர், தன்னுடைய உடலைப் பொறுப்பாகப் பராமரிக்கிறாரே தவிர, அதனை உண்மை என்று கருதுவதில்லை. அப்படிப்பட்டவர், எப்படிப் பொன்னை விரும்புவார்?

துல்ய-ப்ரிய-அப்ரிய: - தன்னிடத்தில் அன்பு செலுத்துபவரிடத்திலும் அன்பு செலுத்தாதவரிடத்திலும் ஸமமாக, விருப்பு வெறுப்பில்லாமல் இருக்கிறார்.

இவர் யாரையும் விரும்புவதில்லை, வெறுப்பதுமில்லை. இவரை விரும்புபவர்களிடத்திலோ, வெறுப்பவரிடத்திலோ கூட, அவருக்கு விருப்பமோ வெறுப்போ இல்லை.

தீர: - என்றால் சிறந்த பகுத்தறிவாளர் என்று பொருள்.

துல்ய-நிந்தாத்மஸம்ஸ்துதி: - தன்னை இகழ்பவரிடத்திலும் புகழ்பவரிடத்திலும் ஸமமாக இருப்பவர்.

முன்பு கூறப்பட்டது, மனதளவில் அன்பு செலுத்துபவர், செலுத்தாதவர்களைப் பற்றி ஆகும். இங்கு, புகழ்பவர், இகழ்பவர் ஆகியோரைப் பற்றிக் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

பொன், கல், மண்ணாங்கட்டி, இன்பம், துன்பம், தன்னிடத்தில் அன்பு செலுத்துபவர், தன்னை வெறுப்பவர், தன்னை இகழ்பவர், தன்னைப் புகழ்பவர் - இவை எவற்றாலும் எவராலும் பாதிக்கப்படாத, பொறுப்புணர்வு மிக்க, உடல் மனதிலிருந்து நன்கு தன்னை விடுவித்துக்கொண்ட குணாதீதனுடைய இலக்கணங்களாக இவற்றை பகவான் உபதேசித்திருக்கிறார்.

मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।

सर्वारम्भपरित्यागी गुणातीतः स उच्यते ।। १४ - २५ ।।

मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारम्भपरित्यागी गुणातीतः स उच्यते ।। 14 - 25 ।।

பதவுரை

மான-அபமானயோ: - மானத்திலும், அவமானத்திலும், **துல்ய:** - ஸமமாக இருப்பவர், **மித்ர-அரி-பக்ஷயோ:** - நண்பர், பகைவர் இருவர் பக்ஷத்திலும், **துல்ய:** - ஸமமாக இருப்பவர், **ஸர்வ-ஆரம்ப-பரித்யாகீ** - முழுமையான துறவறம் மேற்கொண்டவர், (**ய:**) **ஸ:** - (எவரோ) அவர், **குணாதீத:** - குணாதீதன், **உச்யதே** - எனப்படுகிறார்.

பொழிப்புரை

மானத்திலும் அவமானத்திலும் ஸமமாக இருப்பவர், நண்பர்-பகைவர் இருவர் பக்ஷத்திலும் ஸமமாக இருப்பவர்,

Downloaded from **www.omkaravidya.com**

முழுமையான துறவறம் மேற்கொண்டவர், குணாதீதன் எனப்படுகிறார்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் குணாதீதனுடைய இலக்கணங்களைக் கூறுகிறார்.

மானம் என்றால், பிறர் நம் மீது வைத்திருக்கக்கூடிய மதிப்பை வெளிப்படுத்துதல். மாலை, மரியாதை, பாராட்டு, நமஸ்கரித்தல் முதலியவை. அவமானம் என்றால் அதற்கு நேர்மாறானது, அவமானப்படுத்துகின்ற செயல்கள்.

இகழ்ச்சி, புகழ்ச்சி ஆகியவை சொற்களால் நிகழ்பவை. மானம், அவமானம் - செயல்களில் செய்யப்படுபவை.

சிலர் தனக்கு மாலை, மரியாதை வேண்டாம் என்று மறுப்பார்கள். பொதுவாக, அவமானத்தை யாரும் விரும்புவதில்லை. ஆனால், சிலர் தனக்கு அவமானம் வரட்டும் என்றுகூட நினைப்பார்கள். இது அவரவர் மனநிலையைப் பொருத்தது. ஞானி, மான அவமானங்களை விரும்புவதுமில்லை, வெறுப்பதுமில்லை.

ஞானி மான அவமானங்களை ஏற்றுக்கொள்கிறார் என்று சொல்வதைக்காட்டிலும், அவர் அவற்றை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை என்று சொல்வதுதான் சரி.

நண்பனுடைய குழு, பகைவனுடைய குழு ஆகியவற்றிலும் ஸமநிலையுடன், விருப்பு வெறுப்பில்லாமல் இருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

நண்பர் மீது விருப்பும் இல்லை, பகைவர் மீது வெறுப்பும் இல்லை.

குணாதீதமான ஆத்ம தத்துவத்தைப் பற்றிய ஞானத்தினால்தான், ஞானியால் அவ்வாறு ஸமமான மனநிலையுடன் இருக்க முடிகிறது.

யாரும் நமக்கு நண்பனும் இல்லை, பகைவனும் இல்லை. எல்லோருமே தூய உணர்வுதான். ஞானி ஸமதர்சனத்தை உடையவர் என்ற கருத்து, ஏற்கெனவே 5, 6 அத்யாயங்களில் நன்கு விளக்கப்பட்டது.

கல்வியும் அடக்கமும் உடைய அந்தணர், பசு, யானை, நாய், நாயைச் சமைத்து உண்பவர் - இவர்கள் அனைவரிடத்திலும் ஞானி ஸமமான அறிவுப்பார்வையை உடையவர் **(ச்லோகம் 5-18)** என்று கூறப்பட்டது. ஞானி, ஒன்பது விதமான மக்களிடத்தில் ஸமமான மனநிலையை உடையவர் **(ச்லோகம் 6-9)** என்பது கூறப்பட்டது.

ஆக, நண்பருக்கு வேண்டியவர், பகைவருக்கு வேண்டியவர் ஆகியவரிடத்திலும் ஞானிக்கு விருப்பு வெறுப்பு இல்லை.

ஞானிக்குத் தன்னளவில் நண்பர், பகைவர் என்று எவரும் கிடையாது. மற்றவர்களின் கோணத்திலும் நண்பர், பகைவர் என்பது கிடையாது என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஆரம்ப: என்றால் பலனைக் கொடுக்கத் தொடங்குகின்ற செயல்கள் என்று பொருள். த்ருஷ்ட-அத்ருஷ்ட-கர்மங்கள்

Downloaded from **www.omkaravidya.com**

என்று சொல்லப்படும் லௌகிக, வைதிக கர்மங்களை ஞானி விட்டுவிடுகிறார்.

அவர் நல்ல காரியமும் செய்வதில்லை, கெட்ட காரியமும் செய்வதில்லை. அவருடைய இருப்பே உலகிற்கு நன்மையைச் செய்கிறது.

அவர் எல்லாவிதமான செயல்களையும் விட்டுவிடுகிறார். ப்ராரப்த கர்மத்தை அனுபவித்துத் தீர்க்கும்பொருட்டு, உடலைக் காப்பாற்றிக்கொள்வதற்குரிய அடிப்படையான செயல்களை மட்டும் செய்கிறார்.

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।

स गुणान्समतीत्यैतान्ब्रह्मभूयाय कल्पते ।। १४-२६ ।।

மாம் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே ।

ஸ குணாந்ஸமதீத்யைதாந்ப்ரஹ்மபூயாய கல்பதே ।। 14 - 26 ।।

பதவுரை

ய: - எவர், **மாம் ச (= ஏவ)** - என்னையே, **அவ்யபிசாரேண** - பிறழாத, மாறாத, **பக்தியோகேந** - பக்தி யோகத்தினாலும் (ஞான யோகத்தினாலும்), **ஸேவதே** - வழிபடுகிறாரோ, **ஸ: (ஏவ)** - அவரே, **ஏதாந் -** இந்த, **குணாந்** - குணங்களை, **ஸமதீத்ய** - (நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற ஞானத்தினால்) நன்கு கடந்து, **ப்ரஹ்மபூயாய** - பரம்பொருளாகவே, **கல்பதே** - ஆகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

எவர், என்னையே பிறழாத, மாறாத பக்தி யோகத்தினாலும் ஞான யோகத்தினாலும் வழிபடுகிறாரோ, அவரே, நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற ஞானத்தினால், இந்தக் குணங்களை நன்கு கடந்து, பரம்பொருளாகவே ஆகிறார்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் குணாதீதனாவதற்குரிய உபாயத்தை உபதேசிக்கிறார்.

ஒருவர் இல்லறத்தானாக இருந்தாலும், துறவியாக இருந்தாலும், அவர் அனைத்து உயிர்களின் உள்ளங்களிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற தூய உணர்வு தத்துவமான இறைவனிடத்தில் பேரன்பு செலுத்துகிறார், விச்வரூபமாக இறைவனை நன்கு த்யானிக்கிறார்.

இங்கு, குறிப்பாக, இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்காமல் வீற்றிருக்கின்ற ஈச்வர தத்துவத்தைப் பற்றித்தான் கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஐந்தாவது அத்யாயத்தின் கடைசியில் பகவான் இவ்வாறு கூறினார்.

போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேஶ்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம்
ஶாந்திம்ருச்சதி ।। 5 - 29 ।।

Downloaded from **www.omkaravidya.com**

அனைத்து உயிர்களின் உள்ளங்களிலும் வெளிப்படுகின்ற இறைவனை எவர் அறிந்து த்யானிக்கிறாரோ, அவர் அமைதியடைகிறார் என்று பகவான் அங்கு கூறியருளினார்.

புறத்தில் பூஜைகள் செய்தாலும், இறைவனை அகத்தில் த்யானிப்பது விசேஷம். அகத்திலும் புறத்திலும் அனைத்துப் பெயர் வடிவங்களிலும் ஆதாரமாக இருக்கின்ற அந்தப் பரம்பொருளை, மாறாத, நெறிபிறழாத பக்தியோகத்தினால் வழிபட வேண்டும்.

யோக: என்றால் இறைவனுடன் தொடர்புவைத்தல் என்று பொருள். பக்தி என்பது அதற்கு ஸாதனமாக இருக்கிறது. பலவிதமான வழிபாட்டு முறைகள் இருந்தாலும், இங்கு முக்கியமாக ஆத்ம த்யானத்தை எடுத்துக்கொள்கிறோம்.

அவ்யபிசாரேண - நிலைபிறழாத பக்தி என்பது மிக முக்கியம். எந்தவிதமான உலகியல் பலன்களையும் விரும்பி பக்தி செய்யக்கூடாது. மோக்ஷத்தையே குறிக்கோளாகக் கொண்டு, பூஜை, த்யானம் இவற்றைச் செய்ய வேண்டும்.

இவ்வாறு, எவர் நிலைபிறழாத பக்தி என்ற ஸாதனத்தால், ஹ்ருதயத்தில் இருக்கக்கூடிய இறைவனை த்யானிக்கிறாரோ, வழிபடுகிறாரோ, அவர் ஞான யோகத்தினால் இந்தக் குணங்களைக் கடந்தவராகிறார்.

பக்தி யோகத்தினால் இறைவனை வழிபடுபவர், ஞான யோகத்தினால் குணங்களைக் கடந்தவராகி, மோக்ஷத்திற்குத் தகுதியுடையவராக ஆகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இரண்டாவது அத்யாயத்தில், **அம்ருதத்வாய கல்பதே।** (2-15) என்று கூறப்பட்டதும், இங்கு **ப்ரஹ்மபூயாய கல்பதே** என்று சொல்லப்படுவதும் ஒன்றுதான். குணங்களைக் கடந்து, தன்னை மெய்ப்பொருளாக உணர்ந்து, மோக்ஷத்தை உணர்கிறார் என்று பொருள்.

ஆக, குணாதீதனாவதற்கு உபாயம், நெறிபிறழாத, வைராக்ய பூர்வகமான பக்தியோகம் என்று இந்த ச்லோகத்தில் பகவான் உபதேசிக்கிறார்.

ஈச்வர பக்தியானது, ஜீவ-ஈச்வர-ஐக்ய ஞானத்தைக் கொடுக்கிறது.

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் ஆதாரமாக இருக்கக்கூடிய தத்துவம் ஒன்று என்ற ஞானத்தை பகவான் அருள்கிறார். அதன் மூலம் அவர் தன்னை ப்ரஹ்ம ஸ்வரூபமாக உணர்ந்துகொள்வதற்குரிய தகுதியைப் பெறுகிறார்.

பக்தி யோகத்தின் பயன் ஞான யோகம். ஞான யோகத்தின் பயன், ஒருவர் தன்னை குணாதீதனாக உணர்ந்துகொள்ளுதல், அதாவது தன்னை ப்ரஹ்மமாக உணர்ந்துகொள்ளுதல்.

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீத்திபூர்வகம் ।
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ।। 10 - 10 ।।

தன்னிடத்தில் பக்தி செலுத்துபவர்களுக்கு, தான் புத்தி யோகமாகிய ஞான யோகத்தை அருள்வதாக பகவான் கூறியதை இங்கு ஒப்புநோக்கலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

ब्रह्मणो हि प्रतिष्ठाहममृतस्याव्ययस्य च ।

शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ।। १४ - २७ ।।

ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச ।
ஶாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச ।। 14 - 27 ।।

பதவுரை

ஹி - ஏனெனில், **அஹம்** - நான், **அம்ருதஸ்ய** - மரணமற்ற, **அவ்யயஸ்ய ச** - மாறுதலற்ற, **ஶாஶ்வதஸ்ய** - யாண்டும் இருக்கக்கூடிய, **தர்மஸ்ய** - தர்மத்தினுடைய, **ஐகாந்திகஸ்ய ச** - அனைவருக்கும் ஒரே மாதிரியான (மாறாத), **ஸுகஸ்ய** - இன்பமும் ஆன, **ப்ரஹ்மண:** - பரமாத்மாவிற்கு, **ப்ரதிஷ்டா (அஸ்மி)** - ஆதாரமாக, நிலைக்களனாக, வ்யாபியாக (இருக்கிறேன்).

பொழிப்புரை

ஏனெனில், நான் மரணமற்ற, மாறுதலற்ற, யாண்டும் இருக்கக்கூடிய தர்ம வடிவான, அனைவருக்கும் ஒரே மாதிரியான இன்ப வடிவமான பரமாத்மாவிற்கு ஆதாரமாக, நிலைக்களனாக, வ்யாபியாக இருக்கிறேன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த அத்யாயத்தை நிறைவு செய்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இதற்கு முந்தைய ச்லோகத்தில், **ப்ரஹ்மபூயாய கல்பதே**। ப்ரஹ்மமாகத் தன்னை உணர்ந்துகொள்கிறார் என்று கூறினார்.

உண்மையில் நாம் ப்ரஹ்மமாகத்தான் இருக்கிறோம். மனிதனாகவும் ஜீவனாகவும் நம்மைத் தவறாக நினைத்துக்கொண்டோம். அந்த அறியாமையை நீக்குவதே ஞானயோகத்தின் முக்கியமான உபதேசம்.

தானே ப்ரஹ்மன் என்பதை அவர் உணர்ந்துகொள்கிறார். ப்ரஹ்மன் ப்ரத்யகாத்மாவாக இருக்கிறது. ஒவ்வோர் உடலிலும், ஜீவனுக்கும் ஆதாரமாக இருக்கக்கூடியது ஸத்யமான பரமாத்மாதான்.

அஹம் ப்ரத்யகாத்மா அஸ்மி ।

என்று அவர் புரிந்துகொள்கிறார்.

அழியாத, மாறாத, என்றும் இருக்கக்கூடிய ஸ்வரூபமாக, ஞான யோகமாகிய தர்மத்தினால் அடையப்படுகின்ற, துன்பம் கலவாத பேரின்பமாக இருக்கிறேன் என்பதை அவர் உணர்கிறார்.

ப்ரஹ்மண: ப்ரதிஷ்டா அஹம் ।

ப்ரஹ்மத்தின் ஆத்மஸ்வரூபமாக நான் இருக்கிறேன். அதாவது, பரமாத்மாவின் இருப்பாக நான் இருக்கிறேன் என்பதை உணர்ந்துகொள்கிறார். இவ்வாறு ஸம்யக் ஞானத்தினால், தன்னை பரமாத்மாவாக உணர்ந்துகொள்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

சில உரையாசிரியர்கள், **ப்ரஹ்மண: ப்ரதிஷ்டா** என்பதற்கு ஹிரண்யகர்பனுடைய இருப்பாகிய பரிபூர்ண ப்ரஹ்மன் என்று பொருள் கூறுகிறார்கள். ஆனால், இங்கு ஆதிசங்கரரின் உரையையே நாம் முக்கியமாக எடுத்துக்கொள்கிறோம்.

அஹம் ப்ரஹ்மண: ப்ரதிஷ்டா அஸ்மி ।

ஜீவனாகத் தோன்றுகின்ற, உண்மையில் தூய உணர்வாகிய என்னிடத்தில் பரமாத்மா ப்ரதிஷ்டையாகி இருக்கிறார், ஆத்ம ஸ்வரூபமாக இருக்கிறார்.

மெய்ப்பொருள் என் ஆத்மஸ்வரூபமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, குணாதீதன் பக்தியோகத்தினால், தன்னை மெய்ப்பொருளாகவே உணர்ந்துகொள்கிறார்.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे

श्रीकृष्णार्जुनसंवादे गुणत्रयविभागयोगो नाम चतुर्दशोऽध्याय: ।। १४ ।।

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
குணத்ரயவிபாகயோகோ நாம சதுர்தஶோऽத்யாய: ।। 14 ।।

சொற்குற்றம், பொருட்குற்றம் நீங்குவதற்கு, ஓம் தத் ஸத் என்று கூறி, உபநிஷதங்களின் பரமதாத்பர்யத்தை விளக்கிக் கூறுகின்ற, ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கின்ற, மனதைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்-அர்ஜுனன் ஆகியோரின் அருள்

Downloaded from **www.omkaravidya.com**

உரையாடல் வடிவிலிருக்கும், இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்தில் குணத்ரய-விபாகம் என்ற தலைப்பிலான இந்த பதினான்காவது அத்யாயம் நிறைவுபெறுகிறது.

ॐ श्रीकृष्णार्पणमस्तु। ஓம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து।

Downloaded from **www.omkaravidya.com**

பதினைந்தாவது அத்யாயம்

ओं श्रीकृष्णाय परमात्मने नमः ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம:

अथ पञ्चदशोऽध्यायः அத பஞ்சதஶோऽத்யாய:

पुरुषोत्तमयोगः புருஷோத்தமயோக:

முகவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் வேதாந்த சாஸ்த்ரத்தின் ஸாரத்தை இந்த அதிகாரத்தை இந்த அத்யாயத்தில் உபதேசித்து அருளியிருக்கிறார்.

எப்பொழுதும் மன அமைதியுடன் ஆனந்தமாக வாழ வேண்டுமெனில், நாள்தோறும் கீதா சாஸ்த்ரத்தின் கருத்துகளை த்யானிக்க வேண்டும்.

யோக: என்றால் தலைப்பு. புருஷோத்தமன் என்பது விஷயம். இந்த அத்யாயத்தில் 20 ச்லோகங்கள்தான் உள்ளன. ஆனால், இதில் கூறப்பட்டுள்ள கருத்துகள் மிக ஆழமானவை.

இந்த அத்யாயத்தை, வடநாட்டில் பல ஆச்ரமங்களில், நாள்தோறும் உணவருந்தும் முன்பு பாராயணம் செய்வது வழக்கமாக உள்ளது.

நாள்தோறும் மனிதன் சாஸ்த்ரத்தைச் சிறிதளவாவது கற்ற பிறகுதான், உணவு உண்ண வேண்டும் என்பது நியதி. சாஸ்த்ரம் படிக்காமல் ஒரு நாள்கூட சாப்பிடக் கூடாது

Downloaded from **www.omkaravidya.com**

என்பதற்காக, குறிப்பாக இந்த அத்யாயத்தைப் பாராயணம் செய்துவிட்டு உண்பது வழக்கம்.

இந்த அத்யாயத்தில் சாஸ்த்ரத்தின் ஸாரம் முழுவதும் உள்ளது. இந்த உலக வாழ்க்கை என்றால் என்ன? கடவுள் என்பவர் யார்? ஜீவன் யார்? வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்ன? இன்ப துன்பங்களைக் கடந்து உண்மையை உணர்வதற்கு என்ன வழி?

இவை பற்றியெல்லாம் இந்த அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த அத்யாயத்தின் கடைசியில் பகவான் இவ்வாறு கூறுகிறார்.

'அர்ஜுனா! இது மிகவும் ஆழமான, பாதுகாக்கப்பட வேண்டிய அறிவுப் பெட்டகம். நான் அதனை உனக்கு அன்புடன் உபதேசித்துள்ளேன். இந்தக் கருத்துகளை நன்கு உள்வாங்கிக்கொண்டு, அறிவாளியாகவும் செய்ய வேண்டிய செயல்களைச் செய்தவனாகவும் ஆவாயாக' (15-20) என்று கூறி நிறைவு செய்கிறார்.

இந்த அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகள் முழுவதையும் நாம் நன்கு சிந்திக்க வேண்டும்.

புருஷோத்தம: என்ற சொல்லுக்கு, தூய உணர்வு என்றுதான் பொருள். அதைச் சொல்கின்ற முறைகள் இங்கு சிறப்பாக அமைந்துள்ளன.

இதுவரை நாம் பார்த்த **க்ஷேத்ரஜ்ஞ:, ஜ்ஞேயம், புருஷ:** என்ற சொற்களால் குறிப்பிடப்பட்ட தூய உணர்வாகிய

Downloaded from **www.omkaravidya.com**

பரம்பொருள்தான், இங்கு புருஷோத்தமன் என்று கூறப்படுகிறார்.

ஆதிசங்கரர் இந்த அத்யாயத்திற்கு எழுதியுள்ள முகவுரையில் இவ்வாறு கூறுகிறார் –

இறைவனைச் சார்ந்திருந்து, வினைகளை ஆற்றுபவர்களுக்கு, வினையின் பயன்கள் கிடைக்கின்றன. உண்மையை உணர வேண்டும் என்று இறைவனைச் சார்ந்திருந்து, ஆராய்ச்சி செய்பவர்களுக்கு, இறைவன் உண்மையை உணர்த்துகிறார்.

ஆகவே, இறைவனைச் சார்ந்திருந்து, பக்தி என்ற ஸாதனத்துடன், கர்மங்களைச் செய்தால் கர்மபலன் கிடைக்கும். தத்துவ ஞானத்தை வேண்டுபவர்களுக்கு, பகவான் அதனை அருள்கிறார் என்று புரிந்துகொள்கிறோம்.

தத்துவ ஞானமாகிய, தன்னைப் பற்றிய தெளிந்த மெய்யறிவைப் பெற்றவர்கள், குணாதீதர்களாக ஆகிறார்கள் என்பது பதினான்காவது அத்யாயத்தின் கடைசியில் கூறப்பட்டது.

ஆத்ம தத்துவத்தை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அர்ஜுனன் கேட்காவிட்டாலும், அதனை நன்கு சொல்ல விரும்பி, பகவான் இந்த அத்யாயத்தைத் தொடங்குகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

श्रीभगवानुवाच

ऊर्ध्वमूलमधः शाखमश्वत्थं प्राहुरव्ययम् ।

छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ।। १५ - १ ।।

ஸ்ரீபகவாநுவாச

ஊர்த்வமூலமத: ஶாகமஶ்வத்தம் ப்ராஹுரவ்யயம் ।

சந்தாம்ஸி யஸ்ய பர்ணாநி யஸ்தம் வேத ஸ வேதவித் ।। 15 - 1 ।।

பதவுரை

ஸ்ரீபகவாந் - ஸ்ரீபகவான், **உவாச** - கூறினார்.

அஶ்வத்தம் - ஸம்ஸாரமாகிய மரத்தை, **ஊர்த்வ-மூலம்** - உயர்ந்த, மேலான, நுண்ணியதான காரணத்தை உடையதாகவும், **அத: ஶாகம்** - தாழ்ந்த, கீழான, கண்ணுக்குத் தெரிகின்ற காரியத்தை உடையதாகவும் (ஓயாத கர்மபலன்களை உடையதாகவும்), **ப்ராஹு:** - கூறுகிறார்கள். **யஸ்ய** - எதற்கு, **சந்தாம்ஸி** - வேதங்கள், **பர்ணாநி** - இலைகளோ, **ய:** - எவர், **தம்** - அதனை, **வேத** - அறிகிறாரோ, **ஸ:** - அவர், **வேதவித்** - வேதத்தை (வேதத்தின் உட்பொருளை) அறிந்தவர்.

பொழிப்புரை

ஸ்ரீபகவான் கூறினார்.

ஸம்ஸாரமாகிய மரமானது உயர்ந்த, மேலான, நுண்ணியதான காரணத்தை உடையது. அதே சமயம், தாழ்ந்த, கீழான,

Downloaded from **www.omkaravidya.com**

கண்ணுக்குத் தெரிகின்ற காரியத்தை உடையது, ஓயாத கர்ம பலன்களை உடையது என்றும், இதற்கு வேதங்கள் இலைகளாக இருக்கின்றன என்றும் கூறுகிறார்கள். எவர் அதனை அறிகிறாரோ, அவர் வேதத்தின் உட்பொருளை அறிந்தவர் ஆவார்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணரே உபதேசத்தைத் தொடங்குகிறார். தத்துவத்தை விளங்க வைப்பதற்காக, வாழ்க்கையின் மீது நமக்குள்ள பற்று நீங்க வேண்டும் என்பதற்காக, ஒரு மரத்தின் உருவகத்தைக் கூறுகிறார்.

பற்று நீங்கப் பெற்றவனுக்குத்தான் மெய்ப்பொருள் தத்துவத்தை விளங்கிக்கொள்ளக் கூடிய தகுதி வரும்.

வாழ்க்கையில் மிகுந்த பற்றுடையவனுக்கு, மெய்ப்பொருளை அறிந்து கொள்வதற்குரிய தகுதியில்லை என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

இந்த ச்லோகத்தின் கடைசியில் இவ்வாறு உள்ளது -

ய: தம் வேத ஸ: வேதவித் ।

எவர் இதனை அறிகிறாரோ, அவர் வேதத்தின் உட்பொருளை அறிந்தவராவார்.

வேதவித் என்பதற்கு **வேதார்த்தவித்** - வேதத்தின் உட்பொருளை அறிந்தவர் என்று ஆதிசங்கரர் பொருள்

Downloaded from **www.omkaravidya.com**

கூறுகிறார். சாஸ்த்ரத்தின் ஆழ்ந்த, முக்கியமான பொருளாகிய மெய்ப்பொருளை உணர்ந்தவர்.

வேதத்தின் உட்பொருளை எவ்வாறு அறிய வேண்டும்?

இந்த வாழ்க்கையை இறைவனுடன் இணைத்து அறிய வேண்டும். இறைவனில்லாமல் இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையில்லை.

இந்த உடல் இல்லாமல், இந்த உடலுக்குள் நான் என்ற தத்துவமில்லாமல், இந்த உலகை நாம் அறிய முடியாது. நான் என்ற தன்னுணர்வுடன் சேர்த்துத்தான் அனைத்தையும் அறிகிறோம். அதைப்போல, இந்த ப்ரபஞ்சத்தை இறைவனுடன் சேர்த்து எவர் அறிகிறாரோ, அவரே வேதத்தின் உட்பொருளை அறிந்தவர் ஆகிறார்.

இதற்கு ஓர் உருவகம் கொடுக்கிறார் பகவான். ஒரு மரம் நீண்ட காலமாக இருக்கிறது. அது மேலான காரணத்தை உடையதாக இருக்கிறது. **ஊர்த்வம்** என்பதற்கு மேலே என்று சொற்பொருள் எடுத்துக்கொள்ளக்கூடாது. அதாவது, மரத்தின் வேர் மேலே இருக்கிறது என்று பொருள்கொள்ளக் கூடாது.

காரணம் மேலானது என்று புரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக, மரத்தின் காரணமாகிய வேர் கண்ணுக்குத் தெரியாது. மரம்தான் கண்ணுக்குத் தெரியும்.

இந்த மர உருவகமானது, ரிக் வேதத்தில் இருக்கிறது, கடோபநிஷதத்திலும் இருக்கிறது. யஜுர் வேதத்தில் தைத்திரீய ஆரண்யகத்தில் ஸூர்ய நமஸ்கார மந்த்ரங்களிலும் இருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த மரம், மேலான காரணமாகிய வேரைக் கொண்டது. இலைகளுடன் கூடிய கிளைகள் வெளிப்பட்டுள்ளன. அவை கீழானவை, தாழ்ந்தவை என்று பொருள். காரணம் உயர்ந்தது, காரியம் தாழ்ந்தது.

மேலான காரணத்தையும், கீழான காரியத்தையும் உடைய, **அஶ்வத்த:** எனப்படும் இந்த அரச மரம், நீண்ட காலமாக இருப்பதாகப் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

வேர்கள் கண்ணுக்குத் தென்படாமல் உயர்ந்ததாக இருக்கின்றன. நடுப்பகுதி, கிளைகள், இலைகள் கண்ணுக்குத் தெரியக் கூடியவையாக இருக்கின்றன.

இதற்கு **ஸம்ஸாரவ்ருக்ஷ-வர்ணநம்** என்று ஆதிசங்கரர் பெயரிட்டுள்ளார். இந்த உலக வாழ்க்கை இறைவனை மேலான காரணமாக உடையது. காரணமாகிய தூய உணர்வு, மேலான மெய்ப்பொருள் கண்ணுக்குத் தெரிவதில்லை.

இந்த உலக வாழ்க்கையானது, கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத இறைவனை, மேலான காரணமாகக் கொண்டிருக்கிறது.

அஶ்வத்த: என்பதற்கு பொதுவாக அரசமரம் என்று அர்த்தம் இருந்தாலும், ஆதிசங்கரர் - **ஶ்வ: ந திஷ்டதி** - இன்றைக்கு இருப்பதுபோல் நாளைக்கு இருக்காது, மாறிக்கொண்டே இருக்கின்ற இந்த மாபெரும் படைப்பு என்று பொருள் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்தப் படைப்பு தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. பொதுவாக, நம்முடைய செயல்களால் இந்த வாழ்க்கை பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வேதங்கள் இந்த வாழ்க்கையாகிய மரத்திற்கு இலைகளாக இருக்கின்றன. வேதங்களில் கூறப்பட்டுள்ள தர்மங்களைத்தான் வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறோம். அந்த தர்மங்களின் பலன்களை அனுபவிக்கிறோம். புண்ய பாபங்களைச் செய்து, மீண்டும் மீண்டும் பிறவிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

எப்படி இலைகள் மரத்தைப் பாதுகாக்கின்றனவோ, அப்படி வேதங்கள், வேதங்களில் கூறப்படுகின்ற கடமைகள் நம்முடைய வாழ்க்கையைப் பாதுகாக்கின்றன.

வேதத்தின் கர்மகாண்டத்தில் ச்ரத்தை வைத்துள்ள ஒருவனுக்குச் செய்யப்படும் உபதேசம் இது. உலகியல் வாழ்க்கையில் மனம் போனபடி வாழ்கின்றவனுக்கு இது கூறப்படவில்லை.

கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத மேலான பொருளை, காரணமாக உடையது இந்தப் படைப்பு. அதே சமயம், கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டுகின்ற பஞ்சபூதமயமான, தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்ற, மாறிக் கொண்டிருக்கின்ற இந்தப் படைப்பை வேதங்களாகிய இலைகள் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

மெய்ப்பொருளைக் காரணமாகவும், மாயத்தோற்றமாகிய இந்த உலகத்தைக் காரியமாகவும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வாழ்க்கையைப் பாதுகாப்பது, நமது - அறியாமை, ஆசை, செயல்கள்தான்.

ஆக, இவ்வாறு, இந்த ப்ரபஞ்ச வாழ்க்கை உயர்ந்த காரணத்தையும், கீழான காரியத்தையும் உடையது என்று பகவான் கூறியுள்ளார்.

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः ।

अधश्च मूलान्यनुसंततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके ।। १५ - २ ।।

अधश्चोर्ध्वं प्रस्रुतास्तस्य शाखा

गुणप्रवृद्धा विषयप्रवालाः ।

अधश्च मूलान्यनुसन्ततानि कर्मानुबन्धीनि

मनुष्यलोके ।। 15 - 2 ।।

பதவுரை

குணப்ரவ்ருத்தா: - (மூன்று) குணங்களால் ஓங்கி வளர்ந்ததும், **விஷயப்ரவாலா:** - விஷயங்களைத் தளிர்களாகக் கொண்டதுமாக, **தஸ்ய** - அதனுடைய, **ஶாகா:** - கிளைகள் (உலகங்கள்), **அத:** - கீழும், **ஊர்த்வம் ச** - மேலும், **ப்ரஸ்ருதா:** - படர்ந்துள்ளன. **மனுஷ்யலோகே** - மனிதர்களின் உலகத்தில் (உடல்களில்), **கர்ம-அனுபந்தீநி** - செயல்களும் அவற்றின் பலன்களுமாகிய, **மூலாநி** - சல்லிவேர்கள், **அத: ச** - கீழேயும், **அனுஸந்ததாநி** - வலிமை பெற்று விளங்குகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

மூன்று குணங்களால் ஓங்கி வளர்ந்ததும், விஷயங்களைத் தளிர்களாகக் கொண்டதுமாக அதனுடைய கிளைகள், அதாவது உலகங்கள் கீழும் மேலும் படர்ந்துள்ளன. மனிதர்களின் உடல்களில், செயல்களும் அவற்றின் பலன்களுமாகிய சல்லிவேர்கள் கீழேயும் வலிமை பெற்று விளங்குகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் உலக வாழ்க்கையாகிய மரத்தை மேலும் வர்ணிக்கிறார்.

இந்தப் படைப்பாகிய மரத்தின் கிளைகள், மேலும் கீழும் பரவியிருக்கின்றன. தேவலோகம், பூலோகம், கீழான உலகங்கள் என கிளை பரப்பியிருக்கின்றன.

பல்வேறு வகையான கோள்கள், உலகங்கள் ஆகியவற்றை இது குறிக்கிறது. ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் ஆகிய மூன்று குணங்களால், உலக வாழ்க்கையாகிய இந்த மரம் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது.

உலக வாழ்க்கையாகிய மரம் செழிப்பாக இருப்பதற்குக் காரணம், முக்குணங்கள். மேலும், விஷயம் என்ற சொல்லால் குறிக்கப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றைத் தளிர்களாக, கொழுந்துகளாக உடையது.

ஒரு மரத்தில் ஆழமாகச் செல்கின்ற ஆணிவேர் இருக்கும். அதைச் சார்ந்து, கீழே சல்லிவேர்கள் அங்குமிங்கும்

Downloaded from **www.omkaravidya.com**

பரவியிருக்கும். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் நாம் செய்கின்ற செயல்களும், அவற்றின் விளைவுகளும் அவ்வாறு சல்லிவேர்களைப் போலப் பரவியிருக்கின்றன.

புலனின்ப விஷயங்களில் நமக்கு இருக்கின்ற பல்வேறு விருப்பு வெறுப்புகள், இந்த வாழ்க்கையைப் பலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதைத்தான் சல்லிவேர் குறிக்கிறது.

இது எங்கே இருக்கிறது? **மநுஷ்யலோகே** - மனித உடலில் அது நன்கு காணப்படுகிறது. மனித உடலில்தான் வினைகளின் விளைவுகள் நன்கு உணரப்படுகின்றன.

உயிர்கள், பல்வேறு வகையான உடல்களை எடுத்து, அந்தந்த உடல்களில் புலனின்பங்களை நுகர்ந்து கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம், மனித உடலில் அந்த உயிர்கள் ஆற்றிய வினைகளே ஆகும்.

न रूपमस्येह तथोपलभ्यते नान्तो न चादिर्न च सम्प्रतिष्ठा।

अश्वत्थमेनं सुविरूढमूलमसङ्गशस्त्रेण दृढेन छित्त्वा ।। १५ - ३ ।।

ந ரூபமஸ்யேஹ ததோபலப்யதே நாந்தோ ந சாதிர்ந ச

ஸம்ப்ரதிஷ்டா ।

அஶ்வத்தமேநம் ஸுவிரூடமூலமஸங்கஶஸ்த்ரேண

த்ருடேந சித்த்வா ।। 15 - 3 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

அஸ்ய - இதனுடைய (ஸம்ஸார மரத்தினுடைய), **ரூபம்** - உருவம், **இஹ** - இவ்வுலக வாழ்க்கையில், **ததா (ஏவ)** - இவ்வாறு, **ந உபலப்யதே** - காணப்படுவதில்லை. (**அஸ்ய** - இதற்கு), **ந அந்த:** - முடிவு இல்லை, **ந ச ஆதி:** - தொடக்கம் இல்லை, **ந ச ஸம்ப்ரதிஷ்டா** - நிலைத்தும் இருப்பதில்லை.

ஸுவிரூடமூலம் - (உலக வாழ்க்கையின் உருவகமான) நன்கு வேரூன்றிய, **ஏநம்** - இந்த, **அஶ்வத்தம்** - ஸம்ஸார மரத்தை, **த்ருடேந** - உறுதியான, **அஸங்க-ஶஸ்த்ரேண** - பற்றின்மை என்னும் கோடாரியால், **சித்வா** - வெட்டிவிட்டு,

பொழிப்புரை

இந்த ஸம்ஸார மரத்தினுடைய உருவத்தை, இந்த உலக வாழ்க்கையில் இன்னதென்று அறிய முடியாது. இதற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை, இது நிலைத்து நிற்பதும் இல்லை. உலக வாழ்க்கையின் உருவகமான, நன்கு வேரூன்றிய இந்த ஸம்ஸார மரத்தை, உறுதியான பற்றின்மை என்ற கோடாரியால் வெட்ட வேண்டும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், முதல் ச்லோகத்தில் மாயையுடன் கூடிய பரம்பொருளை அறிமுகப்படுத்தினார். அதிலிருந்துதான் இந்த ப்ரபஞ்சம் தோன்றியிருக்கிறது என்று புரிந்துகொள்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

மாயையுடன் கூடிய பரம்பொருளையும் இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையையும் நன்கு அறிந்துகொள்பவரே, சாஸ்த்ரத்தின் உட்பொருளை நன்கு அறிந்தவர் என்று கூறினார்.

கர்மங்கள் பிறவிகளுக்குக் காரணம் எனினும், நமக்குப் பக்குவத்தைக் கொடுத்து, ஞானத்தைக் கொடுத்து, பிறவியிலிருந்து விடுவிப்பதற்கும் அவை காரணமாக இருக்கின்றன என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மனிதனால்தான் கர்மம் செய்யவும் முடியும், கர்மங்களிலிருந்து விடுபடவும் முடியும்.

இந்தப் படைப்பு ஏன் தோன்றியது, எப்படித் தோன்றியது என்று ஆராய்ச்சி செய்து பார்த்தால், அது தெளிவான முடிவைத் தரவே தராது.

இன்று வரையிலும் பௌதிக விஞ்ஞானிகளும் ஓயாமல் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தப் படைப்பிற்கு மூல காரணத்தை அவர்களால் அறிய முடியவில்லை.

அத்வைத ஸித்தாந்தம் உபதேசிப்பது இதுதான் - இதன் மூலத்தை அறிய முடியாது, அறிய வேண்டிய அவசியமில்லை.

இந்த உலக வாழ்க்கையின் தன்மை இத்தகையது என்று எவராலும் சொல்ல இயலாது. ஏனெனில் இதற்குத் தொடக்கமோ, முடிவோ, நிலைத்திருக்கும் தன்மையோ இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

ஒவ்வொரு நாளும் ஓயாமல் மாறிக்கொண்டே இருக்கின்ற, இன்று இருப்பதுபோல் நாளை இல்லாத இந்த உலக வாழ்க்கையை விட்டு, நாம் விலகிவிட வேண்டும்.

உலக வாழ்க்கையில் பற்று வைக்காமல், அந்தப் பற்றிலிருந்து நாம் விடுபட வேண்டும். இதுதான் நாம் செய்ய வேண்டியதாகும்.

அரசமரத்தை ஒரு கோடாரியால் வெட்டுவதைப் போன்று, இந்த உலக வாழ்க்கையில் உள்ள பற்றை வெட்டிவிட வேண்டும்.

ஆழ்ந்த உலகப் பற்றை, பற்றற்ற தன்மை என்ற கோடாரியைக்கொண்டு, உறுதியாக வெட்டிவிட வேண்டும். பற்றற்ற தன்மையினால், பற்றை வெற்றிகொள்ள வேண்டும்.

அஸங்கஶஸ்த்ரம் என்பது வைராக்யத்தைக் குறிக்கிறது. வைராக்யம் என்றால், பற்றற்ற தன்மை. அதனை ஸம்பாதிக்க வேண்டும். அப்பொழுதுதான் உலக விஷயங்கள் நம்மை பாதிக்காது.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். (திருக்குறள் - 349)

பற்றற்ற தன்மையே பிறவித் துன்பத்தை அழிக்கும். பற்றுடன் இருந்தால், துன்பம் மிகுந்த நிலையற்ற பிறவிகள் தொடரும்.

Downloaded from **www.omkaravidya.com**

ततः पदं तत्परिमार्गितव्यं यस्मिन्गता न निवर्तन्ति भूयः ।

तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ।। १५ - ४ ।।

ततः पदम् तत्परिमार्कितव्यम् यस्मिंन्कदा न निवर्त्तन्ती भूयः ।
तमेव चाद्यम् पुरुषम् प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता
पुराणी ।। 15 - 4 ।।

பதவுரை

யதः - எவரிடமிருந்து, **புராணீ** - பழமையான, **ப்ரவ்ருத்திः** - ஸம்ஸாரம் (உலகம்), **ப்ரஸ்ருதா** - தோன்றி உள்ளதோ, **தம்** - அந்த, **ஆத்யம்** - ஆதிபுருஷரான (ஸகுணப்ரஹ்மனான), **புருஷம் ஏவ** - அவரையே, **ப்ரபத்யே** - சரணடைகிறேன். **ததः** - மேலும், **யஸ்மிந்** - எங்கு, **கதாः** - சென்றவர்கள், **பூயः** - மீண்டும், **ந நிவர்த்தந்தே** - திரும்புவதில்லையோ, **தத்** - அந்த, **பதம்** - பதமானது, **பரிமார்கிதவ்யம்** - தேடப்பட வேண்டும்.

பொழிப்புரை

எவரிடமிருந்து பழமையான ஸம்ஸாரமாகிய இந்த உலகம் தோன்றி உள்ளதோ, அந்த ஆதிபுருஷரான அவரையே சரணடைகிறேன். மேலும், எங்கு சென்றவர்கள், மீண்டும் திரும்புவதில்லையோ, அந்த பதமானது தேடப்பட வேண்டும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், சாஸ்த்ரத்தின் ஸாரத்தை இந்த அத்யாயத்தில் உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த மாய ப்ரபஞ்சத்தின் உண்மைத்தன்மையை உணர இயலாது. ஆனால், இதற்குக் காரணமான மெய்ப்பொருளை உணர்ந்து, இந்த மாய ப்ரபஞ்சத்தின் மீதுள்ள பற்றை நீக்கினால், அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும். இந்த வாழ்க்கையை எப்படி ஆராய்ந்து பார்த்தாலும், ஓரிடத்தில் விடை காண முடியாமல் போகும். முறையாக சாஸ்த்ரங்களைக் கற்றால்தான் உண்மை விளங்கும்.

உலக வாழ்க்கையில் பற்றை விட்டுவிட வேண்டும் என்று பகவான் உபதேசித்தார்.

3, 4 ச்லோகங்கள் தொடர்ச்சியுடையவையாக இருக்கின்றன. நன்கு வேர் விட்டுள்ள ஸம்ஸார மரமானது, உறுதியான பற்றற்ற தன்மை என்ற ஆயுதத்தால் நன்கு வெட்டப்பட வேண்டும்.

பிறகு, அந்த மேலான காரணமாக இருக்கக்கூடிய அந்த மெய்ப்பொருளை அறிந்துகொள்ள வேண்டும்.

பரிமார்கிதவ்யம் என்பதற்கு, தேட வேண்டும் என்று பொருள். குருவிடம் சென்று, சாஸ்த்ரங்களைக் கற்று, ஆராய்ந்து புரிந்துகொள்ள வேண்டும் என்று அர்த்தம்.

நாமாகத் தேடிக்கொண்டே இருந்தால், விடை கிடைக்காது. ஏற்கெனவே அறிந்தவர்களிடத்தில் சென்று அறிய வேண்டும்.

தத் விஜிஜ்ஞாஸஸ்வ । தத் ப்ரஹ்மேதி ।

என்று வேதம் சொல்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

அவ்வாறு மெய்ப்பொருளை அறியும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

மெய்ப்பொருளை உள்ளவாறு உணர்ந்துவிட்டால், மீண்டும் உடல்பற்று, உலகப்பற்று, தன்னுணர்வு ஆகியவற்றில் சிக்கிக்கொள்ள மாட்டோம்.

ஆக, இந்தப் படைப்பிற்கு மேலான காரணமாக இருக்கின்ற, படைப்பு முழுவதும் வ்யாபித்திருக்கின்ற அந்த மெய்ப்பொருளை அறிய வேண்டும். மீண்டும் பற்று வராத வண்ணம் அறிந்துகொண்டுவிட்டால், பற்று நீங்கிவிடும்.

அற்றது பற்றெனில் உற்றது வீடு என்பது நம்மாழ்வார் வாக்கு.

மெய்ப்பொருளை அறிந்துகொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய ஸாதனம் என்ன?

நம்முடைய வாழ்க்கை, இந்தப் படைப்பு முதலியவை, ஆனந்தமே வடிவான மெய்ப்பொருளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. ஆனந்தமான அந்த மெய்ப்பொருளை நாம் உணர வேண்டும்.

பொய்யான, நிலையற்ற இன்பத்தைக் கொடுக்கக்கூடிய இந்த வாழ்க்கையில் உள்ள பற்றை, அறிவின் துணைகொண்டு நீக்கி, மெய்ப்பொருளை உணர முற்பட வேண்டும்.

மெய்ப்பொருளை உணர்வதற்கு, நாம் பகவானை சரணாகதி செய்ய வேண்டும். மெய்ப்பொருளை அறிய வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருத்தலே, இங்கு சரணாகதி எனப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

தம் ஆத்யம் புருஷம் என்பதற்கு ஸகுண ப்ரஹ்ம ஈச்வரனாகவும் பொருள்கொள்ளலாம். மெய்ப்பொருளை அறியும்பொருட்டு, அவரை சரணடைதல் என்பது முமுக்ஷுத்வம், ஜிஜ்ஞாஸுத்வத்தைக் குறிக்கிறது.

பக்திபூர்வமான சரணாகதியாகவும் எடுத்துக் கொள்ளலாம், மோக்ஷத்தை விரும்புகின்ற ஆர்வத்தையும் எடுத்துக்கொள்ளலாம். மோக்ஷத்தைத் தரக் கூடிய ஞானத்தைத் தேடுவதாகவும் பொருள்செய்து கொள்ளலாம்.

மெய்ப்பொருளை அறிவதே, உணர்வதே நம் குறிக்கோளாகும். அதற்குரிய மெய்யறிவை நாம் பெற வேண்டும்.

யாரிடமிருந்து, இந்தப் பழமையான மாபெரும் படைப்பானது வெளிப்பட்டிருக்கிறதோ, அந்த மெய்ப்பொருளை, **ஊர்த்வமூலம்** என்ற மேலான காரணத்தை, எந்த மெய்ப்பொருளிடமிருந்து மாயாசக்தியானது ப்ரபஞ்சத்தைத் தோற்றுவித்திருக்கிறதோ, மாயைக்கும் அதிபதியான அந்த மெய்ப்பொருளை உணர விரும்புகிறேன். அதன்பொருட்டு குருநாதரை சரணாகதி செய்கிறேன் என்பது இந்த ச்லோகத்தின் உள்ளார்ந்த பொருள்.

निर्मानमोहा जितसङ्गदोषा अध्यात्मनित्या विनिवृत्तकामाः ।

द्वन्द्वैर्विमुक्ताः सुखदुःखसञ्ज्ञैर्गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ।। १५ - ५ ।।

நிர்மாநமோஹா ஜிதஸங்கதோஷா அத்யாத்மநித்யா

விநிவ்ருத்தகாமா: ।

Downloaded from **www.omkaravidya.com**

த்வந்த்வைர்விமுக்தா: ஸுகது:க்கஸம்ஜ்ஞைர்கச்சந்த்யமூடா:

பதமவ்யயம் தத் ।। 15 - 5 ।।

பதவுரை

விநிவ்ருத்தகாமா: - ஆசைகளை அறவே ஒழித்தவர்களும், **ஜித-ஸங்கதோஷா:** - விருப்பு வெறுப்பை வெற்றிகொண்டவர்களும், **ஸுகது:க்கஸம்ஜ்ஞை:** - இன்பம் துன்பம் எனப்படும், **த்வந்த்வை:** - இருமைகளிலிருந்து, **விமுக்தா:** - விடுபட்டவர்களும் (இருமைகளை அறிவால் துறந்தவர்களும்), **நிர்மாநமோஹா:** - தற்பெருமையும் அவிவேகமும் நீங்கப்பெற்றவர்களும், **அத்யாத்ம-நித்யா:** - மெய்யறிவில் நிலைபெற்றவர்களும் (ஞானநிஷ்டர்களும்), **அமூடா:** - அறியாமை, ஐயம், திரிபு ஆகியவை நீங்கியவர்களுமாகிய (அவர்கள்), **தத்** - அந்த, **அவ்யயம்** - அழியாத, **பதம்** - பரம்பொருளை, **கச்சந்தி** - அடைகிறார்கள்.

பொழிப்புரை

ஆசைகளை அறவே ஒழித்தவர்கள், விருப்பு வெறுப்பை வெற்றிகொண்டவர்கள், இன்பம் துன்பங்களாகிய இருமைகளிலிருந்து விடுபட்டவர்கள், அதாவது இருமைகளை அறிவால் துறந்தவர்கள், தற்பெருமையும் அவிவேகமும் நீங்கப் பெற்றவர்கள், மெய்யறிவில் நிலைபெற்றவர்கள், அறியாமை, ஐயம், திரிபு ஆகியவை நீங்கியவர்களாகிய ஞானநிஷ்டர்கள், அந்த அழியாத பரம்பொருளை அடைகிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மெய்ப்பொருளையே சார்ந்திருக்க வேண்டும் என்று கூறினார். அதற்குரிய தகுதிகளை இங்கு கூறுகிறார்.

அறியாமை, ஐயம், திரிபு ஆகியவற்றிலிருந்து விடுபட்டவர்களான ஞானிகள் அந்த மாறாத, அழியாத பரம்பொருளை அடைகிறார்கள். அந்த ஞானிகள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை பகவான் மேலும் கூறுகிறார்.

நிர்மாநமோஹா: - மானம் என்றால், நான் உடல் என்ற எண்ணம். நான் அதைச் செய்தேன், இதைச் செய்கிறேன், இதைச் செய்யப் போகிறேன் என்ற அபிமானத்துடன் இருத்தல்.

மானம் என்றால் தற்பெருமை என்றும் ஒரு பொருள் உண்டு. **அமாநித்வம்** - தற்பெருமையின்மை ஆன்மிக வாழ்க்கைக்கு மிகத் தேவையான ஒரு பண்பு என்று பகவான் 13 ஆவது அத்யாயத்தில் கூறினார்.

ஞானிகள் அழகு, இளமை, பணம், பதவி, கல்வி என எதைக் குறித்தும் கர்வப்படாமல் பணிவாக இருக்கிறார்கள்.

மோஹ: என்றால் அவிவேகம். ஞானிகள் அவிவேகத்திலிருந்து விடுபட்டவர்களாக இருக்கிறார்கள். அதாவது, எது தர்மம், எது அதர்மம், எது நிலையானது, எது நிலையற்றது என்ற பகுத்தறிவை உடையவர்களாக இருக்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

இவர்கள் தற்பெருமையும் அவிவேகமும் நீங்கப்பெற்றவர்கள். பணிவும் வாழ்க்கையைப் பற்றிய தெளிந்த பகுத்தறிவும் உடையவர்கள்.

ஜித-ஸங்கதோஷா: - யாருடன் பழகினாலும் விருப்பு வெறுப்பு அற்றவர்கள். பற்றோ, வெறுப்போ இல்லாதவர்கள்.

ஒருவருடன் பழகும்போது நமக்கு ப்ரியம் வரலாம் அல்லது வெறுப்பு வரலாம். ஆனால், ஞானிகள் அத்தகைய மனிதர்களிடம் அருகில் இருந்தால்கூட, பற்றையும் வெறுப்பையும் வெற்றிகொள்வார்கள்.

நண்பர்களிடத்திலும் பகைவர்களிடத்திலும் விருப்பு வெறுப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். பிறருடன் பழகும்போது, அவர்களது குறைநிறைகளால் பாதிக்கப்படாமல் இருக்கிறார்கள்.

அத்யாத்ம-நித்யா: - ஆத்ம ஸ்வரூபம் உண்மையிலேயே பரம்பொருள்தான் என்பதைப் புரிந்துகொள்வதற்காக, அதற்குரிய வாழ்க்கைநெறியிலேயே இருப்பவர்கள்.

அத்யாத்ம சாஸ்த்ரமாகிய ஆத்மவித்யையிலேயே எப்பொழுதும் நிலைத்திருப்பவர்கள். **அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் (13-11)** என்று பகவான் முன்பே கூறினார்.

விநிவ்ருத்தகாமா: - ஆசைகளிலிருந்து முழுமையாக நன்கு விடுபட்டவர்களான வைராக்யசாலிகள் என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

மேலும், இவர்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களாகிய இருமைகளிலிருந்து நன்கு விடுபட்டவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இன்பத்தை விரும்புவதுமில்லை, துன்பத்தை வெறுப்பதுமில்லை.

இவர்கள், இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாத மனநிலையுடன், தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை பொறுமையாக, அழகாகச் செய்து வருகிறார்கள்.

இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ள தகுதிகள், ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியைக் குறிக்கின்றன. ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியைப் பெற்று, ஞானத்தைப் பெற்றவர்கள்தான் மெய்ப்பொருளை நன்கு உணர்வார்கள் என்பது கருத்து.

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।

यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ।। १५ - ६ ।।

ந தத்பாஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக: ।
யத்கத்வா ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம ।। 15 - 6 ।।

பதவுரை

யத் - எதை, **கத்வா** - அடைந்தபின், **ந நிவர்த்தந்தே** - திரும்புவதில்லையோ, **தத்** - அதை, **ஸூர்ய:** - ஸூர்யனும், **ந பாஸயதே** - ஒளிர்விப்பதில்லை, **ந ஶஶாங்க:** - சந்த்ரனும் ஒளிர்விப்பதில்லை, **ந பாவக:** - அக்னியும் ஒளிர்விப்பதில்லை, **தத்** - அதுவே, **மம** - என்னுடைய, **பரமம்** - மேலான, **தாம** - இருப்பிடம்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

எதை அடைந்தபின் திரும்புவதில்லையோ, அதை ஸூர்யனும் ஒளிர்விப்பதில்லை, சந்த்ரனும் ஒளிர்விப்பதில்லை, அக்னியும் ஒளிர்விப்பதில்லை. அதுவே என்னுடைய மேலான இருப்பிடம்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் மேலான, மாறாத மெய்ப்பொருளை ஞானிகள் உணர்கிறார்கள் என்று கூறியருளினார்.

இங்கு, அந்த மெய்ப்பொருளின் ஸ்வரூபத்தைக் கூறுகிறார். எதனாலும் அது விளக்கப்படுவதில்லை. அதுதான் எல்லாவற்றையும் விளக்குகிறது.

தூய உணர்வாகிய அந்த மெய்ப்பொருள் ஸ்வயம்ப்ரகாசமாக, தன்னைத் தானே விளக்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் புத்தி, மெய், வாய், கண், மூக்கு, செவி முதலான அகத்திலுள்ள கருவி கரணங்களையும், புறத்திலுள்ள கருவி கரணங்களையும் ஒளிர்விக்கிறது.

ஸூர்யன், சந்த்ரன், அக்னி முதலான புறத்திலுள்ளவற்றையும் ப்ரகாசப்படுத்துவது, அந்த மெய்ப்பொருளே ஆகும். மெய்ப்பொருளை இவை எவையும் ப்ரகாசப்படுத்த முடியாது.

ஆத்மா அல்லது ப்ரஹ்மன் ஸ்வயம்ப்ரகாச ஸ்வரூபமாக இருக்கிறது. ஸூர்யன் அதனை ஒளிர்விப்பதில்லை, ஒளிர்விக்க முடியாது. ஸூர்யனுடைய ஒளியை இரவல்பெற்று,

Downloaded from **www.omkaravidya.com**

தான் ஒளியுடையதாக விளங்கும் சந்த்ரனும் அதனை ஒளிர்விக்க முடியாது.

பாவக: என்பது அக்னி பகவானுக்கு ஒரு பெயர். **பாவநம் கரோதி இதி பாவக:।** அக்னி பகவானை நாம் வழிபடுகிறோம். அவர் நம் மனதிலுள்ள மாசுகளையெல்லாம் நீக்கி, நமக்கு மனத்தூய்மையை அருள்கிறார், புனிதப்படுத்துகிறார், புண்யங்களை அருள்கிறார்.

பொதுவாக, சிவபெருமானை, **ஸோம-ஸூர்ய-அக்நி-லோசந:** - ஸூர்யன், சந்த்ரன், அக்னி ஆகிய மூன்றையும் கண்களாக உடையவர் என்று கூறுவோம்.

ஸூர்யோ மே சக்ஷுஷி ஶ்ருத:। .....
சந்த்ரமா மே மநஸி ஶ்ருத:। .....
அக்நிர் மே வாசி ஶ்ருத:।

என்றெல்லாம் வேத மந்த்ரங்கள் இருக்கின்றன.

ஸூர்ய தேவதை என் கண்களுக்கு அருள்புரியட்டும். சந்த்ர தேவதை என் மனதிற்கு அருள்புரியட்டும். அக்னி தேவதை என் வாக்கில் இருக்கட்டும் என்று ப்ரார்த்தனைகள் இருக்கின்றன.

ஜட ப்ரகாசமாக இருக்கக்கூடிய ஸூர்யன், சந்த்ரன், அக்னி முதலான தத்துவங்களோ அல்லது அதன் தேவதைகளோ, எவையும் நமக்கு மெய்ப்பொருளை விளக்கிவிட முடியாது.

Downloaded from **www.omkaravidya.com**

மெய்ப்பொருளை உணர்ந்துவிட்டால், மீண்டும் இந்த உலகில் பற்று ஏற்பட வாய்ப்பே கிடையாது. உடல்களிலோ, உலகப்பொருட்களிலோ மீண்டும் பற்று வராது.

பற்றின்மை என்ற ஆயுதத்தால் ஸம்ஸார வ்ருக்ஷத்தை வெட்ட வேண்டும் என்று பகவான் ஏற்கெனவே (15-3) கூறினார்.

யத் கத்வா ந நிவர்த்தந்தே தத் மம பரமம் தாம ।

எதை உணர்ந்த பிறகு, உலக வாழ்க்கையில் நாம் முற்றிலும் பற்றை விட்டுவிடுகிறோமோ, அந்த பரமானந்த போதரூபம், ஸச்சிதானந்த ஸ்வரூபம், ஒப்புயர்வற்ற, ஈடுஇணையற்ற அந்தத் தத்துவம் - அதுவே என்னுடைய ஸ்வரூபம் என்கிறார் பகவான்.

தாம என்ற சொல், பொதுவாக இருப்பிடத்தைக் குறிக்கும். இங்கு அது ஸ்வரூபத்தைக் குறிக்கிறது. **ஊர்த்வமூலம் (15-1)** - மேலான காரணம் என்று சொல்லப்பட்ட அதுவே, **பரமம் தாம** - மேலான ஸ்வரூபம் என்று சொல்லப்படுகிறது.

முதலில், தூய உணர்வானது, மாய ப்ரபஞ்சத்துடன் இணைத்துப் பார்க்கப்படுகிறது. பிறகு மாய ப்ரபஞ்சத்திலிருந்து விலக்கிப் பார்க்கப்படுகிறது. இவ்வாறு விலக்கிப் பார்த்தால்தான் மாய ப்ரபஞ்சத்தில் நாம் பற்றுடையவர்களாக இருக்க மாட்டோம். இந்த வாழ்க்கையின் தன்மையைப் புரிந்துகொள்வோம்.

யத் கத்வா ந நிவர்த்தந்தே தத் மம பரமம் தாம ।

Downloaded from **www.omkaravidya.com**

என்பதற்கு - 'எதை அடைந்த பிறகு, மீண்டும் திரும்புவதில்லையோ, அதுவே என்னுடைய மேலான இருப்பிடம்' என்பது சொற்பொருள்.

'எந்த மெய்ப்பொருளை நன்கு உணர்ந்துவிட்டால், மீண்டும் உடல்பற்று, உலகப்பற்று, அகப்பற்று, புறப்பற்று, யான் எனது எனும் செருக்கு வராதோ, அதுவே என்னுடைய மேலான ஸ்வரூபம்' என்பது குறிப்புப் பொருள்.

மெய்ப்பொருள் காண்பது அறிவு (திருக்குறள் - 355) என்ற கருத்தை இந்த ச்லோகம் நமக்கு உபதேசிக்கிறது.

இந்த ச்லோகமானது, ப்ரஹ்மத்தின் யதார்த்த ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாசம் என்பதை உணர்த்துகிறது. அதாவது, பரம்பொருள் தன்னில் தான் ஒளிர்கிறது.

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ

பாந்தி குதோ'யமக்நி: ।

தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ।।

இந்த மந்த்ரமானது, முண்டகோபநிஷத் (2-2-11), கடோபநிஷத் (2-2-15) ஆகியவற்றில் உள்ளது. இதன் பொருள் -

'அங்கு ஸூர்யன் ஒளிர்வதில்லை. சந்த்ரனோ, நக்ஷத்ரங்களோ எவையும் அதனை ஒளிர்விப்பதில்லை. மின்னல்களும் அக்னியும் எப்படி ஒளிர்விக்கப் போகின்றன? ஸ்வயம்ப்ரகாசமான அதனைச் சார்ந்துதான் இந்த்ரியங்களும்

Downloaded from **www.omkaravidya.com**

மனமும் புறத்திலுள்ள ப்ரபஞ்சமும் ஒளிர்விக்கப்படுகின்றன' என்பதாகும்.

பல துளைகள் உள்ள ஒரு குடத்திற்குள் வைக்கப்பட்டுள்ள தீபத்தை எடுத்துக்காட்டாகக் கூறி, தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தில் **(ச்லோகம்-4)** ஆதிசங்கரர் இதனை விளக்கினார். இந்த உடலிலுள்ள தூய உணர்வானது இந்த்ரியங்கள் வழியாகச் சென்று அனைத்தையும் ஒளிர்விக்கிறது என்று அங்கு கூறப்பட்டது.

ममैवांशो जीवलोके जीवभूत: सनातन: ।

मन:षष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ।। १५ - ७ ।।

மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: ।
மந:ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்த்தாநி கர்ஷதி ।। 15 - 7 ।।

பதவுரை

மம - எனது, **அம்ஶ: ஏவ (= அம்ஶ: இவ)** - அம்சமே (ப்ரதிபிம்ப சைதன்யமே), **ஜீவலோகே** - அனைத்து உடல்களிலும், **ஸநாதந:** - என்றும் உள்ள, **ஜீவபூத:** - ஜீவனாக இருந்துகொண்டு, **ப்ரக்ருதிஸ்த்தாநி -** ப்ரக்ருதியில் உள்ளதும், **மந: ஷஷ்டாநி** - மனதை ஆறாவதாகக் கொண்டதுமான, **இந்த்ரியாணி** - இந்த்ரியங்களின் மூலம், **கர்ஷதி** - (உலகை) அனுபவிக்கிறான் (செயல்புரிகிறான்).

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

எனது அம்சமே, அனைத்து உடல்களிலும், என்றும் உள்ள ஜீவனாக இருந்துகொண்டு, ப்ரக்ருதியில் உள்ளதும், மனதை ஆறாவதாகக் கொண்டதுமான இந்த்ரியங்களின் மூலம் உலகில் செயல்புரிகிறான், அனுபவிக்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த உலக வாழ்க்கையில், மனித உடலில் ஜீவனாகக் காட்சியளிப்பதும் தன்னுடைய அம்சம்தான் என்று கூறுகிறார்.

உடலில் இருந்துகொண்டு, நான் செயல்புரிகிறேன், செயலின் பலனை அனுபவிக்கிறேன் என்று சொல்பவன் ஜீவன். அம்சம் என்று சொன்னாலும், அம்சம்போல என்று புரிந்துகொள்ள வேண்டும்.

கட்டிடத்திற்குள் ஆகாசத்தின் அம்சம் இருக்கிறது என்று சொல்கிறோம். ஆகாசத்திற்கு அம்சம் இல்லை. கட்டிடத்தால், அது அம்சம் உடையதைப் போன்று காணப்படுகிறது.

உண்மையில் ஆகாசத்திற்கு அம்சம் கிடையாது. அதைப்போல, உறுப்புகளற்ற பரம்பொருளுக்கு அம்சங்கள் கிடையாது. இருப்பினும், உபாதி பேதங்களால் அம்சம் இருப்பதுபோலத் தோன்றுகிறது.

ஒவ்வொரு ஜீவனும் உண்மையில் ப்ரஹ்மஸ்வரூபமே ஆகும் என்பதுதான் அத்வைத ஸித்தாந்தத்தின் உபதேசம்.

Downloaded from **www.omkaravidya.com**

என்னுடைய அம்சம்தான், இந்த மனித உடலில் ஜீவனைப்போன்று காட்சியளிக்கிறது என்கிறார் பகவான்.

மனம் என்பதை மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றுடன் சேர்த்து ஆறாவது இந்த்ரியமாகக் கூறுகிறார்.

மனமானது இந்த்ரியங்களுடன் தொடர்புடையது. ஜீவன் கண், காது முதலானவைகளின் மூலமாகத்தான், விஷயங்களை ஆகர்ஷிக்கிறது.

இந்த உலகில், ஒவ்வோர் உடலிலும் இறைவன் வரையறுக்கப்பட்டவர்போல காணப்படுகிறார். அந்தந்த உடலில் மனம், இந்த்ரியங்களாகிய கருவிகளைக் கொண்டு, ப்ரக்ருதியுடன் சேர்ந்து, அவரே செயல்புரிகிறார்.

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।

गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ।। १५ - ८ ।।

ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: ।
க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாஶயாத் ।। 15 - 8 ।।

பதவுரை

ஈஶ்வர: - (இந்த உடலுக்குத் தலைவனான) ஜீவன், **யத்** - எப்பொழுது, **உத்க்ராமதி** - விட்டுக் கிளம்புகிறானோ, (அப்பொழுது மனம், இந்த்ரியங்கள் ஆகியவற்றை ஆகர்ஷிக்கிறான்). **யத் ச அபி** - எப்பொழுது, **ஶரீரம்** - உடலை, **அவாப்நோதி** - அடைகிறானோ, **வாயு:** - காற்றானது,

Downloaded from **www.omkaravidya.com**

ஆஶயாத் - (அவற்றின்) இருப்பிடத்திலிருந்து, **கந்தாந் இவ** - மணங்களை (இழுத்துச் செல்வதுபோல்), **ஏதாநி** - இவற்றை (மனதுடன் கூடிய இந்த்ரியங்களை), **க்ருஹீத்வா** - எடுத்துக்கொண்டு, **ஸம்யாதி** - நன்கு கிளம்புகிறான்.

பொழிப்புரை

இந்த உடலுக்குத் தலைவனான ஜீவன், எப்பொழுது உடலை விட்டுக் கிளம்புகிறானோ, அப்பொழுது மனம், இந்த்ரியங்கள் ஆகியவற்றை ஆகர்ஷிக்கிறான். எப்பொழுது மற்றோர் உடலை அடைகிறானோ, அப்பொழுது, காற்றானது மலர்களிலிருந்து மணங்களை இழுத்துச் செல்வதைப் போல, மனதுடன் கூடிய இந்த்ரியங்களை எடுத்துக்கொண்டு நன்கு கிளம்புகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், பரம்பொருளின் இலக்கணங்களைக் கூறி, அந்தப் பரம்பொருளே இந்த உடலில் ஜீவாத்மாவாக இருக்கிறது என்று கூறினார்.

ஜீவாத்மாவானது ப்ரக்ருதியிலுள்ள மனம், இந்த்ரியங்களுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது. அது சரீரத்தை வ்யாபித்து ஆகர்ஷிக்கிறது.

இந்த ச்லோகத்தில் **ஈஶ்வர:** என்ற சொல்லுக்கு ஜீவன் என்று பொருள், இந்த உடலுக்குத் தலைவன் என்று அர்த்தம்.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரஹ்மனின் அம்சம்போன்ற இந்த ஜீவாத்மாவானது, உடலை விட்டுக் கிளம்பும்போது, மனம், இந்த்ரியங்களை ஆகர்ஷித்துக் கொண்டு கிளம்புகிறது.

மற்றோர் உடலை அடையும்பொழுது, காற்றானது மலர்களிலிருந்து மணத்தை எப்படி எடுத்துக்கொண்டு செல்கிறதோ, அப்படி இந்த ஜீவாத்மாவாகிய பரமாத்மாவானது, மனம் உட்பட ஆறு இந்த்ரியங்களையும் க்ரஹித்துக்கொண்டு, அதாவது நன்கு எடுத்துக்கொண்டு அந்த சரீரத்தை அடைகிறது.

எப்பொழுது சரீரத்தை விட்டுக் கிளம்பினாலும், எப்பொழுது இன்னொரு சரீரத்தை அடைந்தாலும் இந்த இந்த்ரியங்களையும் மனதையும் எடுத்துக்கொண்டுதான் கிளம்புகிறது, உள்ளே நுழைகிறது.

ஆக, உள்ளே நுழையும்போதும், உடலை விட்டுக் கிளம்பும்போதும் இதுதான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

श्रोत्रं चक्षुः स्पर्शनं च रसनं घ्राणमेव च ।

अधिष्ठाय मनश्चायं विषयानुपसेवते ।। १५ - ९ ।।

ஶ்ரோத்ரம் சக்ஷுः ஸ்பர்ஶநம் ச ரஸநம் க்ராணமேவ ச ।

அதிஷ்டாய மநஶ்சாயம் விஷயாநுபஸேவதே ।। 15 - 9 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஶ்ரோத்ரம் - செவி, **சக்ஷு:** - கண், **ஸ்பர்ஶனம் ச** - தோல், **ரஸனம்** - நாக்கு, **க்ராணம் ஏவ ச** - மூக்கு இவற்றையும், **மன: ச** - மனதையும், **அதிஷ்டாய** - தன் வசப்படுத்தி, **அயம்** - இவன், **விஷயான்** - விஷயங்களை, **உபஸேவதே** - அனுபவிக்கிறான்.

பொழிப்புரை

செவி, கண், தோல், நாக்கு, மூக்கு இவற்றையும் மனதையும் தன் வசப்படுத்தி, இந்த ஜீவன் விஷயங்களை அனுபவிக்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் மாயையுடன் கூடிய பரம்பொருளை காரணமாக உடையது இந்த ப்ரபஞ்சம் என்று உபதேசித்தார். பற்றற்ற தன்மையினால், இந்த மாய ப்ரபஞ்சத்திலிருந்து விலக வேண்டும்.

மாயையுடன் கூடிய பரம்பொருளுக்கு ஆதாரமாக இருப்பது, மாயைக்கு அப்பாற்பட்ட பரம்பொருள். உரிய தகுதிகளைப் பெற்று, அந்தப் பரம்பொருளை உணர வேண்டும்.

மாயையினால், பரம்பொருளுடைய அம்சமே ஜீவாத்மாவாகக் காட்சியளிக்கிறது. ப்ரஹ்மஸ்வரூபத்தைப் பற்றிய உபதேசத்தைக்காட்டிலும், ப்ரஹ்மனே ஜீவனாக இருக்கிறார் என்பதுதான் அதிகமாக உபதேசிக்கப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த ஜீவன் உடலை விட்டு வேறு உடலுக்குச் செல்லும்போது, இந்த்ரியங்களையும் மனதையும் சேர்த்து எடுத்துக்கொண்டு செல்கிறான் என்று பகவான் கூறினார்.

இந்த ச்லோகத்தில் சொல்லப்படும் கருத்து இதுவே -

ப்ரஹ்மமானது, இந்த உடலில் ஜீவ வடிவில் இருந்துகொண்டு, கண், காது, மூக்கு, நாக்கு, தோல், மனம் - இவற்றைச் சார்ந்திருந்து, உலக விஷயங்களை அனுபவிக்கிறது. அதாவது இந்த்ரியங்களுடன் இணைந்து, இந்த்ரிய விஷயங்களை அனுபவிக்கிறது.

ஜீவன் உடலுக்கு வேறாகவும் இருக்கிறது, உடலுடன் இணைந்து உலக விஷயங்களை அனுபவிக்கவும் செய்கிறது.

இங்கு ஞானேந்த்ரியங்கள் மட்டும் சொல்லப்பட்டிருக்கின்றன, கர்மேந்த்ரியங்களையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆக, ஜீவன் அனுபவிக்கிறது, செயல்புரியவும் செய்கிறது. ப்ரஹ்மமானது, இந்த உடலில் ஜீவனாக இருந்துகொண்டு கர்த்தாவாகவும் போக்தாவாகவும் இருக்கிறது.

நான் என்ற தத்துவம், உண்மையிலேயே ப்ரஹ்ம தத்துவமாக இருக்கிறது. இதை அறியாததால், ஜீவன் உடலில் இருந்துகொண்டு, இந்த அனுபவங்களைப் பெறுகிறான்.

இந்த உடலுக்கு வேறானவன் நான் என்பது அவனுக்குத் தெரிவதில்லை. உடலுக்கு வேறான நான், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள் என்பதையும் அவன் உணர்வதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

நம்முடைய நோக்கம் என்னவென்றால், இந்த உடலில் ஜீவனாக இருப்பது ப்ரஹ்மன்தான் என்று புரிந்துகொண்டு, ஜீவத்தன்மையை விட்டுவிட வேண்டும். அதற்குத்தான் முக்தி என்று பெயர்.

उत्क्रामन्तं स्थितं वापि भुञ्जानं वा गुणान्वितम् ।

विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः ।। १५ - १० ।।

உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜாநம் வா குணாந்விதம் ।
சூவிமூடா நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ: ।। 15 - 10 ।।

பதவுரை

உத்க்ராமந்தம் - வெளியில் செல்பவரும், **ஸ்திதம் வா அபி** - உள்ளிருப்பவரும், **குண-அந்விதம்** - குணங்களுடன் கூடியவரும், **புஞ்ஜாநம் வா** - அனுபவிப்பவரும் ஆன, (**ஏநம்** - இந்தப் பரம்பொருளை), **விமூடா:** - மதிமயக்கம் உடையவர்கள், **ந அநுபஶ்யந்தி** - காண்பதில்லை. **ஜ்ஞாநசக்ஷுஷ:** - அறிவுக்கண்ணை உடையவர்கள், **(குரு-ஶாஸ்த்ர-உபதேசம்-அநு)பஶ்யந்தி** - (குரு-சாஸ்த்ரத்தின் உதவியுடன்) காண்கிறார்கள் (அறிகிறார்கள்).

பொழிப்புரை

வெளியில் செல்பவரும், உள்ளிருப்பவரும், குணங்களுடன் கூடியவரும், அனுபவிப்பவரும் ஆன இந்தப் பரம்பொருளை மதிமயக்கம் உடையவர்கள் காண்பதில்லை. அறிவுக்கண்ணை

Downloaded from **www.omkaravidya.com**

உடையவர்கள், குரு சாஸ்த்ரத்தின் உதவியுடன் காண்கிறார்கள், அறிகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், பரமாத்மாதான், இந்த உடலில் ஜீவாத்மாவாக இருந்துகொண்டு, உடலிலிருந்து உடலுக்கு மாறுபவராகக் காட்சியளிக்கிறார் என்று கூறினார்.

அடுத்த ச்லோகத்திலுள்ள **ஏநம்** என்ற சொல்லை இங்கு எடுத்துக்கொள்ளலாம்.

ஜீவாத்ம ஸ்வரூபமாக இருக்கின்ற பரமாத்மாவானவர், வேறோர் உடலிலிருந்து கிளம்புகிறார். இந்த உடலில் இருக்கிறார். இந்த உடலில் இருப்பது மட்டுமல்லாமல், ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களுடன் உலக விஷயங்களை அனுபவிக்கிறார். சோம்பேறித்தனம், சுறுசுறுப்பு, அமைதி, இன்பம், துன்பம் எல்லாவற்றையும் குணங்களுடன் சேர்த்து அனுபவிக்கிறார்.

மேற்கண்ட கருத்துகளை பகவான், 13, 14 அத்யாயங்களில், இந்த ச்லோகங்களில் கூறினார்.

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்வம் ஸ்தாவர ஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ-ஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ।। 13 - 26 ।।

ப்ரகாஶம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்டவ ।
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தாநி ந நிவ்ருத்தாநி
காங்க்ஷதி ।। 14 - 22 ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஆக, ஜீவாத்மாவாக இருக்கின்ற பரமாத்மாவானவர், குணங்களுடன் சேர்ந்து இந்த்ரிய விஷயங்களை அனுபவிக்கிறார்.

அவ்வாறு இருப்பினும், இந்த உடலில் ஜீவாத்ம ஸ்வரூபமாக இருக்கின்ற பரமாத்மாவை, ஆழமாகச் சிந்திப்பதற்கு சக்தியில்லாதவர்கள், உலக விஷயங்களை நோக்கியே செல்பவர்கள், வாழ்க்கையை ஆராய்ச்சி செய்யாதவர்கள், புத்திசக்தியைப் பயன்படுத்தாதவர்கள் அறிவதில்லை.

அவர்கள், கடவுள் தங்களுக்குக் கொடுத்துள்ள அறிவாற்றலைப் பயன்படுத்தி, பெரியோர்கள், சாஸ்த்ரங்கள் கூறுகின்றவற்றைக் கற்பதில்லை, சிந்திப்பதில்லை.

உண்மையிலேயே நான் யார்?

உடலா? மனமா? புத்தியா? ஜீவாத்மாவா? ப்ரஹ்மனா? என்ற தத்துவத்தைத் தெரிந்துகொள்வதற்கு, அவர்கள் முயற்சியே செய்வதில்லை.

ஜ்ஞாநசக்ஷுஷ: பஶ்யந்தி ।

அறிவை நன்கு பயன்படுத்துபவர்கள், அறிவையே கண்ணாகக் கொண்டிருப்பவர்கள், இந்த உண்மையை குரு சாஸ்த்ரத்தின் உதவியுடன் அறிகிறார்கள்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (திருக்குறள் - 393)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

Downloaded from **www.omkaravidya.com**

அறிவுக்கண்ணை உடையவர்கள் தன்னைப் பற்றிய உண்மையை உணர்ந்துகொள்கிறார்கள். அறிவுக் கண்ணைப் பயன்படுத்தாதவர்கள், அதனை அறிவதில்லை.

பகவானை எங்கும் சென்று தேட வேண்டாம். அவர் இந்த உடலிலேயே இருக்கிறார். அவர் ஆத்மஸ்வரூபமாக இருக்கிறார்.

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்த்தித: । (10-20)

என்று பகவான் கூறினார்.

இந்த உடலில் க்ஷேத்ரஜ்ஞனாக பரம்பொருள் இருக்கிறார் என்றும் பார்த்தோம்.

மலர்மிசை ஏகினான் (திருக்குறள் - 3) என்று திருவள்ளுவரும்,

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் என்று மாணிக்கவாசகரும் கூறுகின்றபடி, இறைவனை நமக்குள் அறிந்துகொள்ள வேண்டும். அதுவே வாழ்க்கையின் நோக்கம்.

நாம் வாழ்க்கையைப் பற்றி எப்படிப் புரிந்துகொள்கிறோம்? என்ற அறிவைப் பொருத்து, நாம் இந்த உலகைப் பார்க்கின்ற விதம் மாறி அமையும். அது நமக்கும் சமூகத்திற்கும் நன்மையைத் தரும்.

இந்த உடலிலிருந்து கிளம்பினாலும், இந்த உடலில் நிலைபெற்றிருந்தாலும், குணங்களுடன் சேர்ந்து இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பரமாத்ம

Downloaded from **www.omkaravidya.com**

ஸ்வரூபமான ஜீவாத்மாவை, அஜ்ஞானிகள் சாஸ்த்ரத்தின் துணையை நாடாமல், அறியாமல் இருக்கிறார்கள்.

அறிவுக் கண்ணைக் கொண்டவர்கள் குருசாஸ்த்ரத்தின் துணைகொண்டு, இதனை நன்கு உணர்ந்துகொள்கிறார்கள்.

यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।

यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ।। १५-११ ।।

यதந்தோ யோகிநஶ்சைநம் பஶ்யந்த்யாத்மந்யவஸ்த்திதம் ।

யதந்தோऽப்யக்ருதாத்மாநோ நைநம்

பஶ்யந்த்யசேதஸ: ।। 15 - 11 ।।

பதவுரை

யதந்த: - முயற்சி செய்யும், **யோகிந: ச** - ஞானயோக ஸாதகர்கள், **ஆத்மநி** - தன்னிடத்தில், **அவஸ்த்திதம்** - உறைபவராக, **ஏநம்** - இந்தப் (பரம்பொருளை), **பஶ்யந்தி** - காண்கிறார்கள். **அக்ருதாத்மாந:** - மனப்பக்குவம் இல்லாதவர்களான, **அசேதஸ:** - அவிவேகிகள், **யதந்த: அபி** - முயற்சி செய்தாலும், **ஏநம்** - இந்தப் (பரம்பொருளை), **ந பஶ்யந்தி** - காண்பதில்லை.

பொழிப்புரை

முயற்சி செய்யும் ஞானயோக ஸாதகர்கள், தங்களிடத்தில் உறைபவராக இந்தப் பரம்பொருளைக் காண்கிறார்கள். மனப்பக்குவம் இல்லாதவர்களான அவிவேகிகள், முயற்சி செய்தாலும், இந்தப் பரம்பொருளைக் காண்பதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், உலகிற்குக் காரணமாகக் கூறப்பட்ட பரம்பொருளே ஆத்மாவாக இருக்கிறது என்ற கருத்தை உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

நான் என்ற சொல்லுக்குப் பொருளாக இருப்பது பரம்பொருளே ஆகும். இந்தப் படைப்பின் ஆதாரம், மூலகாரணம் பரம்பொருள். அது ஸத்-சித்-ஆனந்தம் - தூய இருப்பு, தூய உணர்வு, தூய ஆநந்த வடிவானது.

இதுதான் ப்ரஹ்மனுடைய ஸ்வரூபம், லக்ஷணம். இவை இறைவனுடைய குணங்களல்ல, இறைவனுடைய இயல்பு.

உண்மையில் ப்ரஹ்மமே ஆத்மாவாக இருக்கிறது. இதுதான் சாஸ்த்ரத்தினுடைய முக்கியமான உபதேசம்.

இந்த ச்லோகத்தில் பகவான் மற்றொரு முக்கியமான விஷயத்தைக் கூறுகிறார்.

புத்தியில், ஹ்ருதய குகையில் உறைகின்ற, புலப்படுகின்ற ப்ரஹ்ம ஸ்வரூபமாக இருக்கின்ற ஆத்மாவை, முயற்சி செய்கின்ற யோகிகள், அதாவது ஞானயோக ஸாதகர்கள் புலனடக்கப் பயிற்சியாலும், சாஸ்த்ர உபதேசத்தாலும் பொறுமையாக, கவனமாக, முயற்சித்து அறிகிறார்கள்.

கர்மயோகம் செய்து, சித்தசுத்தியைப் பெற்று, மனப்பக்குவத்தை அடைந்து, இந்த ஆத்ம தத்துவத்தை உள்ளத்தில் உணர்கிறார்கள். ஆத்மா அல்லது நான்,

Downloaded from **www.omkaravidya.com**

உண்மையில் பரம்பொருளாக இருக்கிறேன் என்பதை உணர்கிறார்கள்.

முயற்சி செய்கின்ற யோகிகள், கர்மயோக, ஞானயோக ஸாதனைகளால், முறையே இந்த உண்மையை உணர்ந்துகொள்கிறார்கள்.

அவிவேகிகள் இதனை உணர்வதில்லை என்பதையும் பகவான் கூறுகிறார்.

அக்ருதாத்மாந: - முயற்சி செய்தாலும், மனதிற்கு நல்ல பண்பாட்டைக் கொடுக்காதவர்கள் என்று பொருள்.

பக்குவமில்லாதவன் வேதாந்த சாஸ்த்ரத்தைக் கற்றாலும் இந்த உண்மையை உணர முடியாது. கர்மகாண்டத்தை நன்கு அநுஷ்டித்து, அதன் மூலம் பக்குவப்பட்டவன்தான், இந்த உண்மையை உணர முடியும். பக்குவப்படாதவன் முயற்சியை மேற்கொண்டாலும், ச்ரவண மனன நிதித்யாஸனம் செய்தாலும், இந்த உண்மையை உணர முடியாது.

எனவே மனப்பக்குவத்துடன் முயற்சி செய்ய வேண்டும் என்பது இதனுடைய உள்ளார்ந்த பொருள்.

அசேதஸ: என்றால் அவிவேகிகள் என்று பொருள். நித்யாநித்ய விவேகமே இல்லாதவனுக்கு, வைராக்யம் முதலான ஸாதனங்கள் எங்கே வரப்போகின்றன?

Downloaded from **www.omkaravidya.com**

அவனால் ச்ரவணம், மனனம் முதலியவற்றைச் செய்ய முடியாது.

ஞானயோக ஸாதனையின் மூலம் ஆத்மாவை ப்ரஹ்மன் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்குரிய மனப்பக்குவத்தைப் பெற்றே ஆக வேண்டும் என்பதை இந்த ச்லோகம் தெளிவாக நமக்கு உபதேசிக்கிறது.

இந்த அத்யாயத்தில் 6 முதல் 11 ச்லோகங்களில், ஆத்ம விசாரம், ஆத்மாவே ப்ரஹ்மன் என்ற தத்துவ விசாரமானது நிறைவுபெறுகிறது.

பரம்பொருளே ஆத்மாவாக இருந்துகொண்டு, உலக விஷயங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இதனை அறிந்தால், முக்தியை உணரலாம்.

எங்கும் நீக்கமற நிறைந்த, வரையறுக்க முடியாத பரம்பொருளாகத் தன்னை உணர வேண்டும் என்பதே இதனுடைய ஆழ்ந்த பொருள்.

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।

यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ।। १५-१२ ।।

यதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதேऽகிலம் ।

யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ தத்தேஜோ வித்தி

மாமகம் ।। 15 - 12 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

யத் - எந்த, **தேஜ:** - ஒளி, **ஆதித்யகதம்** - ஸூர்யனைச் சார்ந்ததாக, **அகிலம் ஜகத்** - உலகனைத்தையும், **பாஸயதே** - ஒளிர்விக்கிறதோ, **யத்** - எது, **சந்த்ரமஸி** - சந்த்ரனில் (உள்ளதோ), **யத் ச** - எது, **அக்நௌ** - அக்னியில் (உள்ளதோ), **தத்** - அந்த, **தேஜ:** - ஒளியை, **மாமகம்** - என்னுடையதாக, **வித்தி** - அறிவாயாக.

பொழிப்புரை

எந்த ஒளியானது, ஸூர்யனைச் சார்ந்ததாக உலகனைத்தையும் ஒளிர்விக்கிறதோ, அதே போன்று, எந்த ஒளியானது சந்த்ரனிலும் அக்னியிலும் உள்ளதோ, அந்த ஒளியை என்னுடையதாக அறிவாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தன்னுணர்வுக்கு ஆதாரமாக இருப்பதே மெய்ப்பொருள்தான் என்ற கருத்தைக் கூறியருளினார்.

தன்னுணர்வு (ஜீவத்வம்) என்பது மாயையால் ப்ரஹ்மத்தின்மீது கற்பிக்கப்பட்ட ஒன்று.

இந்த உடலில் ஆத்மாவாக விளங்கிக்கொண்டிருக்கின்ற அந்த ப்ரஹ்ம தத்துவத்தை, புண்யம் செய்து, பக்குவத்தைப் பெற்ற முயற்சியாளர்கள் உணர்ந்துகொள்கிறார்கள். புண்யமில்லாதவர்கள், பக்குவமில்லாத காரணத்தினால், முயற்சித்தாலும் தெரிந்துகொள்வதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

அந்த மெய்ப்பொருளை ஸூர்யன், சந்த்ரன் முதலியவை ஒளிர்விக்காது என்ற கருத்தையும் பகவான் முன்பு கூறினார்.

ஜீவனையும் உலகத்தையும் இயக்குகின்ற, அல்லது இயங்குவதற்குக் காரணமாக இருக்கின்ற ஆதார தத்துவம் மெய்ப்பொருளே என்பதை உணர்த்துகிறார் பகவான். இதன் மூலம், எல்லாம் ஒன்று என்ற அத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டப் போகிறார்.

ஸூர்யனிடமிருந்து வெளிப்படுகின்ற ஒளியானது உலகம் முழுவதையும் ஒளிர்வித்துக் கொண்டிருக்கிறது. அதே போன்று, இரவில் சந்த்ரனின் ஒளியானது உலகை ஒளிர்விக்கிறது. நெருப்பிடமிருந்தும் ஒளி பெறுகிறோம்.

ஸூர்யன், சந்த்ரன், நெருப்பு - இவையனைத்தும் பரம்பொருளைச் சார்ந்தே இயங்குகின்றன. ஒளிக்கு ஒளியாக விளங்குவது பரம்பொருள்.

விளக்கினுக் குள்ளே விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்கட்கு
விளக்குடையான் கழல் மேவலு மாமே

என்பது திருமூலர் வாக்கு.

இதன் பொருள் - இந்த உடலுக்குள் உள்ளம் இருக்கிறது. உள்ளத்தில் உணர்வு தத்துவமாகிய மெய்ப்பொருளை உணர்ந்து இடைவிடாமல் சிந்தித்தால், நாம் எப்பொழுதும் அமைதியிலும் ஆனந்தத்திலும் திளைத்திருக்க முடியும்.

Downloaded from **www.omkaravidya.com**

இறைவன் நம் ஸ்வரூபமாகவும் இருக்கிறார், ப்ரபஞ்ச ஸ்வரூபமாகவும் இருக்கிறார் என்பது கருத்து.

ஒரே மெய்ப்பொருள்தான், தன்னுணர்வாகவும் உலகமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।

पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ।। १५ - १३ ।।

காமாவிஶ்ய ச பூதாநி தாரயாம்யஹமோஜஸா ।
புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா
ரஸாத்மக: ।। 15 - 13 ।।

பதவுரை

ச - மேலும், **அஹம்** - நானே, **காம்** - பூமியுள், **ஆவிஶ்ய** - புகுந்து, **ஓஜஸா** - ஓஜஸ் சக்தியால், **பூதாநி** - உயிர்களை, **தாரயாமி** - தாங்குகிறேன். **ரஸாத்மக:** - ரஸமயமான, **ஸோம:** - சந்த்ரனாக, **பூத்வா** - இருந்துகொண்டு, **ஸர்வா:** - அனைத்து, **ஓஷதீ:** - செடிகொடிகளையும், **புஷ்ணாமி ச** - போஷிக்கவும் செய்கிறேன்.

பொழிப்புரை

மேலும், நானே பூமியுள் புகுந்து, ஓஜஸ் சக்தியால் உயிர்களைத் தாங்குகிறேன். ரஸமயமான சந்த்ரனாக இருந்துகொண்டு, அனைத்துச் செடிகொடிகளையும் போஷிக்கவும் செய்கிறேன்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், பரம்பொருளாக, தான் பூமிக்குள் நுழைந்து, தமது வலிமையினால் ப்ரபஞ்சத்தைத் தாங்குகிறேன் என்று கூறுகிறார்.

ஓஜோ பலம்। என்று வேதம் சொல்கிறது. **காமராகவிவர்ஜிதம் பலம்।** என்று ஆதிசங்கரர் கூறுகிறார். பேராசை, பெரும்பற்று இல்லாத வலிமைதான் உண்மையான வலிமை.

ஓஜஸ் சக்தியைப் பற்றி வேதத்தில் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளது. அது இறைவனுடைய வலிமையாகக் கூறப்படுகிறது.

எவனொருவன் பேராசை, பெரும்பற்றை விட்டுவிட்டு, வலிமையுடன் இருக்கிறானோ, அவனுடைய வலிமை, இறைவனுடைய வலிமைக்கு நிகரானது.

இங்கு, பகவான், தாம் ஓஜஸ் சக்தியுடன் பூமியினுள் நுழைந்து, உயிர்க்கூட்டங்கள் நிறைந்திருக்கின்ற ப்ரபஞ்சத்தைத் தாங்குகிறேன் என்று கூறுகிறார்.

எடை அதிகம் என்பதைக் குறிக்க, **குர்வீ** என்ற சொல்லை ஆதிசங்கரர் பயன்படுத்துகிறார். அதாவது, இந்த பூமியின் எடை என்பது எவ்வளவு பெரியது! இந்த பூமியினுடைய பாரம் எவ்வளவு இருக்கும் என்று நம்மால் சொல்ல முடியாது. இது கீழே விழாமல், குறிப்பிட்ட முறையில் ஓர் ஒழுங்குப்பாட்டுடன் சுழன்றுகொண்டிருக்கிறது. அதை இயக்குகின்ற தத்துவமாக பகவான் இருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

யேந த்யௌருக்ரா ப்ருதிவீ ச த்ருடா

(தைத்திரீய ஸம்ஹிதை : 4-1-8)

என்றும்,

ஸ தாதார ப்ருதிவீம் । (தைத்திரீய ஸம்ஹிதை : 4-1-8)

என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இறைவன் எல்லாக் கோள்களையும் தாங்குகிறார், இந்த பூமியையும் தாங்குகிறார். புவியீர்ப்பு சக்தியின் ஆதாரமாக இருந்துகொண்டு, இந்த பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த பூமியில் இருக்கின்ற அசைகின்ற, அசையாத, உயிருள்ள, உயிரற்ற எல்லாவற்றையும் இறைவன் தாங்குகிறார்.

நெல், கோதுமை முதலான தான்யங்களில் ஊட்டச்சத்து இருக்கிறது. அதற்குக் காரணம், சந்த்ரனாகிய ஸோம பகவான்.

ஸூர்யன், சந்த்ரன் இருவருமே நம் வாழ்க்கைக்குப் போஷாக்கு அளிக்கிறார்கள். இருவருமே நமக்குத் தேவை.

நேரடியாகக் கிடைக்கின்ற ஸூர்ய ஒளி, மறைமுகமாக சந்த்ரன் மூலமாகக் கிடைக்கின்ற ஸூர்ய ஒளி ஆகியவையே நம்முடைய உணவுப் பொருட்களுக்குக் காரணம். உணவிலுள்ள சத்து, சந்த்ரனால்தான் ஏற்படுகிறது.

சத்து வடிவமாக இருந்து, அந்த உணவுகளை, நல்ல வலிமை தரக்கூடியவையாக ஆக்குகிறேன் என்கிறார் பகவான்.

Downloaded from **www.omkaravidya.com**

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।

प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ।। १५-१४ ।।

अहम் वैஸ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாஸ்ரித: ।

ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம் ।। 15 - 14 ।।

பதவுரை

அஹம் - நானே, **ப்ராணிநாம்** - உயிர்களின், **தேஹம்** - உடலை, **ஆஸ்ரித:** - இருப்பிடமாகக்கொண்டு, **வைஸ்வாநர:** - ஜாடராக்னியாக (வயிற்றுக்குள் உள்ள நெருப்பாக), **பூத்வா** - ஆகி, **ப்ராண-அபாந-ஸமாயுக்த:** - ப்ராணன் அபானனுடன் கூடி, **சதுர்விதம்** - நான்கு வகையான, **அந்நம்** - உணவை, **பசாமி** - சமைக்கிறேன் (ஜீரணம் செய்கிறேன்).

பொழிப்புரை

நானே உயிர்களின் உடலை இருப்பிடமாகக்கொண்டு, ஜாடராக்னி எனப்படும் வயிற்றுக்குள் உள்ள நெருப்பாக ஆகி, ப்ராணன், அபானன் ஆகியவற்றுடன் கூடி, நான்கு வகையான உணவையும் ஜீரணம் செய்கிறேன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், உணவுப் பொருட்களை உண்டுபண்ணுபவராகவும், உணவில் ஸத்தாகவும், தாம் இருப்பதாக உபதேசித்தார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த ச்லோகத்தில், உண்பவனிடத்திலும் நானே விளங்கிக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார்.

அயமக்நிர் வைஶ்வாநர: யோऽயமந்த:புருஷ:

யேநேதமந்நம் பச்யதே ।

(ப்ருஹதாரண்யக உபநிஷதம் : 5-9-1)

இறைவன் உயிர்களின் வயிற்றில் ஜாடராக்னியாக இருக்கிறார் என்ற கருத்து, உபநிஷதத்திலும் கூறப்பட்டுள்ளது.

பகவான், உயிர்கள் வாழ்கின்ற உடல்களில் வைச்வானரனாக இருக்கிறார். அது மட்டுமல்ல, வயிற்றினுள் ஸமான ப்ராணனாக இருந்துகொண்டு, நான்கு வகையான உணவுகளைப் பக்குவப்படுத்துகிறார்.

உணவை ஏற்று, உணவை ஜீரணம் செய்பவனும் நானே என்கிறார் பகவான்.

நான்கு வகையான உணவுப் பொருட்கள் உள்ளன.

பக்ஷ்யம் - பற்களால் கடித்து உண்ணக்கூடிய முறுக்கு, அப்பம் போன்றவை.

போஜ்யம் - நாக்கினால் தள்ளித் தள்ளி விழுங்கப்படக்கூடிய பருப்பு, சாதம் முதலியவை.

லேஹ்யம் - நக்கி உண்ணக் கூடிய தேன் போன்றவை.

ஶோஷ்யம் - கரும்பு முதலிய உறிஞ்சி உண்ணக் கூடியவை.

Downloaded from **www.omkaravidya.com**

நம் உடலுக்குள் உள்ள அக்னியானது, சரியான அளவிலிருந்து, இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். முறையாக உணவு உண்ணுதல் ப்ராணாக்னிஹோத்ரம் எனப்படும். இது வைச்வானர உபாஸனையாகும். ஆகவே, உணவு உண்பதை ஒரு தெய்வீகமான செயலாகச் செய்ய வேண்டும்.

அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி । (4-30)

என்று ஆஹார நியமத்தை ஒரு யஜ்ஞமாக, பகவான் முன்பு கூறினார்.

பகவான் நம்முடைய உடலுக்குள் வைச்வானர அக்னியாக இருக்கிறார் என்பதை உணர்ந்து நாம் உணவை உட்கொள்ளும்பொழுது, அந்த உணவில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலும், அது நம் உடலைத் தாக்காது என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

அந்நம் ப்ரஹ்மா ரஸோ விஷ்ணு: போக்தா தேவோ மஹேச்வர: ।
இதி ஸஞ்சிந்த்ய புஞ்ஜாந: அந்நதோஷைர்ந லிப்யதே ।।

உணவுப்பொருளை ப்ரஹ்மதேவராகவும், அதிலுள்ள ஸத்தை மஹாவிஷ்ணுவாகவும், உணவை உண்பவனை மஹேச்வரனாகவும் பாவனை செய்து, நாம் உணவை அருந்தினால், எல்லாவிதமான குற்றங்களும் நீங்கும் என்று பெரியோர் கூறுவர்.

இவ்வாறு உணவு உண்ணும்போது, உடலுக்கு நோய் வராது, மனதில் நல்ல எண்ணங்கள் வளரும் என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च ।

वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ।। १५ - १५ ।।

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த:

ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச ।

வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ

வேதாந்தக்ருத்வேதவிதேவ சாஹம் ।। 15 - 15 ।।

பதவுரை

ச - மேலும், **அஹம்** - நானே, **ஸர்வஸ்ய** - அனைவருடைய, **ஹ்ருதி** - உள்ளத்தில், **ஸந்நிவிஷ்ட:** - புகுந்திருப்பவன் (நன்கு வீற்றிருப்பவன்), **மத்த:** - என்னைச் சார்ந்தே, **ஸ்ம்ருதி:** - நினைவும், **ஜ்ஞாநம்** - அறிவும், **அபோஹநம் ச** - மறதியும் (ஏற்படுகின்றன). **ஸர்வை:** - அனைத்து, **வேதை: ச** - வேதங்களாலும், **வேத்ய:** - அறியப்பட வேண்டியவன், **அஹம் ஏவ** - நானே. **வேதாந்தக்ருத்** - வேதாந்தத்தை (கற்பிக்கின்ற ஸம்ப்ரதாயத்தை)ச் செய்தவனும், **வேதவித் ஏவ ச** - வேதத்தின் உட்பொருளை உணர்ந்தவனும், **அஹம்** - நானே.

பொழிப்புரை

நானே அனைவருடைய உள்ளங்களிலும் நன்கு வீற்றிருப்பவன். என்னைச் சார்ந்தே நினைவும் அறிவும் மறதியும் ஏற்படுகின்றன. அனைத்து வேதங்களாலும் அறியப்பட வேண்டியவன் நானே. வேதாந்தத்தைக்

Downloaded from **www.omkaravidya.com**

கற்பிக்கின்ற ஸம்ப்ரதாயத்தைச் செய்தவனும் நானே. வேதத்தின் உட்பொருளை உணர்ந்தவனும் நானே.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் சாஸ்த்ரத்தின் ஸாரத்தை இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

இந்த வாழ்க்கை இறைவனை, மெய்ப்பொருளை அடிப்படையாகக் கொண்டுதான் தோன்றியுள்ளது.

நம்முடைய உடலாலும் உள்ளத்தாலும் அறியப்படுகின்ற உலகப்பொருட்கள் அனைத்தும் மெய்ப்பொருளிலிருந்துதான் மாயையால் தோன்றியிருக்கின்றன. கயிற்றில் பாம்பைப்போல, இந்த உலகம், உயிர்கள் அனைத்தும் மெய்ப்பொருளில் கற்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் அத்வைத ஸித்தாந்த சாஸ்த்ரோபதேசம்.

இந்தப் படைப்பை மெய்ப்பொருளுடன் இணைத்துத் தெரிந்துகொள்ள வேண்டும். படைப்பில் பற்று கொள்ளக்கூடாது.

மெய்ப்பொருளை அறிவதற்கு, பகவான் கூறுகின்ற வழி இதுவே. அதாவது, நம்மையே நாம் ஆராய்ச்சி செய்தால், இந்த உடலில் விளங்கிக் கொண்டிருக்கின்ற அந்தத் தூய உணர்வே மெய்ப்பொருள் என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

பகவான், இந்தப் படைப்பில் மெய்ப்பொருளே பல்வேறு பொருட்களாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்தினார்.

ஸூர்யன், சந்த்ரன் முதலியவற்றை ஒளிர்விப்பவராகவும், உணவுப் பொருளாகவும் உண்பவனாகவும் அவரே விளங்குகிறார் என்பதை பகவான் உபதேசித்தார். இப்பொழுது உபதேசத்தை அழகாக நிறைவு செய்கிறார்.

அனைவருடைய உள்ளங்களிலும் நான் நன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார்.

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்த்தித: । (10-20)

அனைவருடைய உள்ளங்களிலும் நான் தூய உணர்வாக, ஆத்ம ஸ்வரூபமாக, 'நான்' என்ற சொல்லுக்கு உண்மைப்பொருளாக விளங்குகிறேன் என்று கூறினார்.

அனைவருடைய உள்ளங்களிலும் ஐயத்திற்கு இடமில்லாமல், சிறிதுகூட நாம் தவறாகக் கருத முடியாத அளவுக்கு, சரியானதையும் தவறானதையும் எந்தவொரு தத்துவம் உள்ளத்திலிருந்து அறிந்து கொண்டிருக்கிறதோ, அந்த ஒரு தத்துவமாக, இறைவன் விசேஷமாக, சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

நான் இருக்கிறேன் என்ற விஷயத்தில், நமக்கு ஐயமோ, தவறாகப் புரிந்துகொள்ளுதலோ இருக்கவே முடியாது. நான் என்னவாக இருக்கிறேன் என்பதில்தான் ஐயப்பாடு, தவறாகப் புரிந்துகொள்ளுதல் இருக்கலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆனால் நான் இருக்கிறேன் என்று சொல்கிறோம். நான் இருக்கிறேன் என்பதை உணர்கிறோம். அந்த உணர்வே நான்.

நான் என்ற சொல்லும் கூட, தூய உணர்வின் மீது கற்பிக்கப்பட்டிருக்கின்ற ஒரு சொல்லே ஆகும். நான், நீ, அது, அவன், அவள், இது, இவன், இவள் முதலான ப்ரதிபெயர்ச்சொற்கள் அனைத்தும் உணர்வில் கற்பிக்கப்பட்டவைதான். இது அத்வைத ஸித்தாந்தத்தின் முக்கியமான உபதேசம்.

அனைவருடைய உள்ளங்களிலும் உணர்வாக, நான் என்ற சொல்லுக்கு ஆதாரமாக விளங்கிக்கொண்டிருக்கிறேன் என்று பகவான் கூறுகிறார்.

ஏற்கெனவே அனுபவித்ததை நினைத்துப் பார்க்கிறோம் அல்லவா! அவ்வாறு நினைவுபடுத்திப் பார்க்கின்ற, அந்த குறிப்பிட்ட எண்ணங்களுக்கு, **ஸ்ம்ருதி:** என்று பெயர்.

புதிதாக நாம் தெரிந்துகொள்கின்றவற்றுக்கு **ஜ்ஞானம்** - அறிவு என்று பெயர்.

நாம் அனுபவித்ததை, அறிந்ததை, சில சமயங்களில் மறந்துவிடுகிறோம். அதற்கு **அபோஹநம்** என்று பெயர்.

மறதியின்போது, நினைவாற்றலும் வேலை செய்யாது. சில சமயங்களில், கண் முதலான பொறிகளைக்கொண்டு, முன்னால் உள்ள பொருட்களைக்கூட நம்மால் சரியாகத் தெரிந்துகொள்ள முடியாது. சிலருக்கு மனநிலை சரியில்லாமல் போகிறதல்லவா, அதுபோன்றது.

Downloaded from **www.omkaravidya.com**

புண்யம் அதிகமானால், உள்ளத்தில் நல்ல நினைவாற்றலும் நன்கு புரிந்துகொள்ளும் ஆற்றலும் வெளிப்படும். பாபங்கள் மேலோங்கினால், எத்தகைய அறிவைப் பெற்றிருந்தாலும், பாபத்தின் காரணமாக, அந்த எண்ணங்கள் மறைந்துவிடும், மறந்துவிடும் என்று பெரியோர் கூறுவர்.

உணர்ச்சிகள் அனைத்தும், எண்ணங்கள் அனைத்தும் உணர்வைச் சார்ந்தே இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பகவான் இங்கு நினைவு, அறிவு, மறதி ஆகிய மூன்றையும் எடுத்துக்கொண்டுள்ளார்.

'என்னைச் சார்ந்தே நினைவும் அறிவும் மறதியும் ஏற்படுகின்றன' என்று கூறிய பகவான், 'அனைத்து வேதங்களாலும் அறியப்பட வேண்டியவன் நானே' என்றும் கூறுகிறார்.

வேதங்கள் அனைத்தும், நம் ஸ்வரூபமாக இருக்கின்ற தூய உணர்வாகிய மெய்ப்பொருளையே உணர்த்துவதற்காகத்தான் பல கோணங்களில் உபதேசித்துக் கொண்டிருக்கின்றன.

உள்ளத்தைப் பக்குவப்படுத்துவதற்கான வழிமுறைகளும், உண்மையை உணர்வதற்கான வழிமுறைகளும், வேதங்களின் வாயிலாகவே நமக்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

அனைத்து வேதங்களாலும் அறியப்பட வேண்டிய பொருள் உணர்வே ஆகும். 'நானே' என்று இங்கு பகவான் கூறுவது, உணர்வாகிய மெய்ப்பொருளையே ஆகும்.

Downloaded from **www.omkaravidya.com**

வேதாந்தக்ருத் - மெய்யுணர்வு தத்துவத்தை விளக்குகின்ற நெறிமுறையை அறிந்தவர்கள் என்று பொருள்.

வேதாந்தத்தின் உட்பொருளை எவ்வாறு விளக்கிச் சொல்ல வேண்டும் என்ற அறிவை உடையவர்களாகவும் நானே விளங்குகிறேன் என்று கூறுகிறார்.

உணர்வே, உணர்த்துகின்ற குருமார்களாகவும் விளங்குகிறது.

உணர்பவனும் மெய்ப்பொருளே, உணர்த்துவதற்கான கருவிகளாகிய ப்ரமாணங்களாகிய நூல்களும் மெய்ப்பொருளே, மெய்யுணர்வு நூல்களின் வாயிலாக உணர்த்துகின்ற குருமார்களும் மெய்ப்பொருளே, உணர்வு தத்துவத்தை உணர்ந்துகொள்பவனும் மெய்ப்பொருளே.

உணர்வாகிய நான், உயிர்களின் உள்ளங்களில் விளங்கிக் கொண்டிருக்கிறேன். வேத சாஸ்த்ரங்களெல்லாம் என்னைச் சார்ந்தே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

எண்ணங்கள், குருமார்கள் அனைவரும் என்னைச் சார்ந்தே இயங்குகிறார்கள். குருமார்களைச் சார்ந்திருந்து, உண்மையை உணர்பவர்களும் என்னைச் சார்ந்தே இயங்குகிறார்கள்.

இங்கு இறைவன் வேறு, உணர்பவன் வேறு (பக்தன் வேறு) என்ற பொருளில் கூறவில்லை.

தூய உணர்வைச் சார்ந்தே அனைத்தும் நிகழ்கின்றன. அறிபவன், அறியப்படுபொருள், அறிவதற்கான கருவி, அறிவு - இவை அனைத்தும் பேரறிவே வடிவான மெய்ப்பொருளைச்

Downloaded from **www.omkaravidya.com**

சார்ந்தே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற பேருண்மையை புருஷோத்தம யோகத்தின் முக்கியமான இந்த ச்லோகம் நமக்கு உணர்த்தியிருக்கிறது.

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।

क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ।। १५ - १६ ।।

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஸ்சாக்ஷர ஏவ ச ।

க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்த்தோ5க்ஷர உச்யதே ।। 15 - 16 ।।

பதவுரை

லோகே - உலகில், **க்ஷர: ச** - க்ஷரன், **அக்ஷர: ஏவ ச** - அக்ஷரன், **த்வௌ இமௌ** - (என்று) இவ்விரண்டு, **புருஷௌ** - புருஷர்கள் (**ஸ்த:** - உள்ளனர்). **ஸர்வாணி** - அனைத்து, **பூதாநி** - அழியக்கூடிய பொருட்களும், **க்ஷர:** - க்ஷரம் (என்றும்), **கூடஸ்த்த:** - அழியாத, மாறாத, நிழல் உணர்வு (ஜீவாத்மா), **அக்ஷர:** - அக்ஷரன் (என்றும்), **உச்யதே** - கூறப்படுகின்றனர்.

பொழிப்புரை

உலகில் க்ஷரன், அக்ஷரன் என்று இவ்விரண்டு புருஷர்கள் உள்ளனர். அனைத்து அழியக்கூடிய பொருட்களும் க்ஷரம் என்றும், அழியாத, மாறாத, நிழல் உணர்வாகிய ஜீவாத்மா அக்ஷரம் என்றும் கூறப்படுகின்றனர்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் சாஸ்த்ரத்தின் ஸாரத்தை, இந்த ச்லோகங்களில் உபதேசிக்கிறார். இதனுடைய அடிப்படையில்தான் இந்த அத்யாயத்திற்கு **புருஷோத்தமயோகம்** என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த உலக வாழ்க்கையில், க்ஷரபுருஷன், அக்ஷரபுருஷன் என்று இருவர் உள்ளனர். **புருஷ:** என்ற சொல்லுக்கே தூய உணர்வு என்று பொருள். இந்த உடலில் வெளிப்படுகின்ற எங்கும் நிறைந்த தூய உணர்வுக்கு, புருஷன் என்று பெயர்.

க்ஷர: என்பது ஜடப்பொருட்கள், சேதனபொருட்கள் எல்லாவற்றையும் குறிக்கும். அதாவது அறிவை வெளிப்படுத்தாத ஜடப்பொருட்கள், அறிவை வெளிப்படுத்தக்கூடிய ஜடப்பொருட்கள் என்று புரிந்துகொள்ள வேண்டும். உடல் முதலான அழியக்கூடியவை அனைத்தும் க்ஷரம் என்பதில் அடங்கும்.

கூடஸ்த்த: என்றால் மாறாதது, அழியாதது என்று பொருள். கொல்லன் பட்டறையில், பாத்திரங்களில் உள்ள ஒடுக்குகளை, அடித்துச் சரிசெய்யக்கூடிய கல்லுக்கு **கூடஸ்த்த:** என்று பெயர். அது ஆடாமல், அசையாமல் இருக்கும்.

அதைப்போன்று, இந்த உடலுக்குள் ஒரு மாறாத தத்துவம் இருக்கிறது. அதைத்தான் **அக்ஷரம்** என்று கூறுகிறார் பகவான். அத்வைத ஸித்தாந்தப்படி இது நிழல் உணர்வு, ஜீவாத்மா.

Downloaded from **www.omkaravidya.com**

கூடஸ்த்த: என்பது இந்த உடலில் வெளிப்படுகின்ற உணர்வு. அது **அக்ஷரம்** - இதைத்தான் சிதாபாஸன், நிழல் உணர்வு என்று கூறுகிறோம்.

ஆக, உடல்கள் **க்ஷரம்** என்றும், நிழல் உணர்வு **அக்ஷரம்** என்றும் சொல்லப்படுகிறது. இது உபாதிகளின் தன்மை.

அனைத்து சரீரங்களும் க்ஷரம் என்றும், சரீரங்களில் வெளிப்படுகின்ற ஜீவ சைதன்யம், நிழல் உணர்வு அக்ஷரம் என்றும் கூறப்படுகிறது.

उत्तम: पुरुषस्त्वन्य: परमात्मेत्युदाहृत: ।

यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वर: ।। १५ - १७ ।।

உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: ।
யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர: ।। 15 - 17 ।।

பதவுரை

து - ஆனால், **ய:** - எந்த, **அவ்யய:** - மாறுதலற்ற (அழிவற்ற), **ஈஶ்வர:** - ஈச்வரன், **லோகத்ரயம்** - மூன்று (அனைத்து) உலகங்களையும், **ஆவிஶ்ய** - புகுந்து, **பிபர்த்தி** - தாங்குகின்றாரோ (**ஸ:** - அந்த), **அந்ய:** - வேறான, **உத்தம:** - மேலான, **புருஷ:** - புருஷன், **பரமாத்மா** - பரமாத்மா, **இதி** - என்று, (**வித்வத்பி:** - அறிஞர்களால்), **உதாஹ்ருத:** - குறிப்பிடப்படுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

மாறுதலற்ற, அழிவற்ற ஈச்வரன், பூலோகம் முதலான அனைத்து உலகங்களிலும், விழிப்பு முதலான அனைத்து நிலைகளிலும், அனைத்து உடல்களிலும் புகுந்து அவற்றைத் தாங்குகிறார். அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கிறார். அந்த ஈச்வரன் க்ஷரம், அக்ஷரம் ஆகியவற்றுக்கு வேறான, மேலான புருஷன், பரமாத்மா என்று அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறார்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் தோற்றத்தில் இருக்கக்கூடிய, அழியக்கூடிய எல்லாம் க்ஷரபுருஷன் என்றும், நிழல் உணர்வாகிய ஜீவாத்மா அக்ஷரபுருஷன் என்றும் கூறினார்.

அக்ஷரபுருஷ:, கூடஸ்த்த: என்பது மாயாசக்தியுடன் கூடிய பரம்பொருளையும் குறிக்கும், அறியாமை என்ற உபாதியுடன் கூடிய நிழல் உணர்வையும் குறிக்கும்.

ஆக, அக்ஷர புருஷனை ஜீவாத்மாவாகவும் சொல்லலாம், ஈச்வரனாகவும் சொல்லலாம். மாயையுடன் கூடிய ப்ரஹ்மன், அக்ஷரபுருஷன் என்று புரிந்துகொள்ளலாம்.

க்ஷரம் என்பது ஜகத்தில் இருக்கக்கூடிய, உயிருள்ள, உயிரற்ற, அசைகின்ற, அசையாத ஜடப்பொருட்கள் அனைத்தையும் குறிக்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

எந்த உபாதிகளும் அற்ற, எந்த குணங்களும் அற்ற, தூய உணர்வைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார் பகவான்.

அந்ய: உத்தம: புருஷ: அஸ்தி ।

க்ஷர புருஷனுக்கும் அக்ஷர புருஷனுக்கும் வேறாக, உயர்ந்த புருஷன் இருக்கிறான். அதுவே, **மாயாரஹித-ஶுத்த-சைதந்யம்** - மாயையின் கலப்பற்ற தூய உணர்வு.

மாயை அல்லது அறியாமையின் கலப்புடைய உணர்வைத்தான் **அக்ஷரபுருஷ:** என்று சொல்கிறோம். க்ஷர புருஷனிலும் அது இருக்கிறது, ஆனால் ஜடப்பொருட்களில் அது வெளிப்படா நிலையில் இருக்கிறது.

சேதன வஸ்துக்கள், அசேதன வஸ்துக்கள் எல்லாவற்றிலும் அது வ்யாபித்திருந்தாலும் சேதனம் தனிப்பட்டதுதான் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

அந்ய: என்றால் முற்றிலும் வேறான என்று பொருள். அவருக்குத்தான் **பரமாத்மா** என்று பெயர்.

சாஸ்த்ரங்களில் பெரியோர்களால் மேலான ஆத்மாவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பரம் என்றால், க்ஷர அக்ஷரங்களைக் கடந்தது என்று பொருள். உடல் முதலான, அறியாமையினால் உண்டான வஸ்துக்களுக்கு வேறானது. **பஞ்சகோஶவிலக்ஷண:** - அன்னமயம் முதலான ஐந்து கோசங்களுக்கு அப்பாற்பட்டது.

Downloaded from **www.omkaravidya.com**

அவஸ்த்தாத்ரயவிலக்ஷண: - விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளுக்கும் வேறானது அது.

எல்லா உடல்களுக்கும் ஆதாரமாக இருக்கக்கூடிய ப்ரத்யக் சைதன்யமாக, அந்த ஆத்ம தத்துவம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு, சாஸ்த்ரங்களில் பெரியோர்களால் மேற்கோள் காட்டப்படுகிறது.

அந்த அழியாத ஈச்வரன், பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று உலகங்களையும் தாங்கிக்கொண்டிருக்கிறது. இப்படியும் பொருள் கொள்ளலாம் - விழிப்பு, கனவு, உறக்க நிலைகளுடன் தொடர்புடைய ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களில் வெளிப்பட்டு, அவற்றைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

மூன்று உலகங்களையும் வ்யாபித்துத் தாங்கிக்கொண்டிருக்கின்ற அந்த ஈச்வரன் **புருஷோத்தம:** என்று சொல்லப்படுகிறார். இந்த ச்லோகத்தில் புருஷோத்தமன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்.

கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படுகின்ற, பெயர், வடிவம், செயல் வடிவமான ப்ரபஞ்சம் க்ஷரம் என்றும், மாயாசக்தியையும் மாயாசக்தியுடன் சேர்ந்திருக்கின்ற சைதன்யத்தையும் அக்ஷரம் என்றும் தெரிந்து கொண்டோம்.

க்ஷரம், அக்ஷரம் ஆகியவற்றுடன் தொடர்பே இல்லாத, இவைகளுக்கு அப்பாற்பட்ட, இவைகளுக்கு ஆதாரமாக

Downloaded from **www.omkaravidya.com**

இருக்கின்ற, மாயையின் கலப்பற்ற தூய உணர்வை புருஷோத்தமன் என்று சாஸ்த்ரம் உபதேசித்திருக்கிறது.

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।

अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ।। १५ - १८ ।।

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि सोत्तमः ।

अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ।। 15 - 18 ।।

பதவுரை

யஸ்மாத் - யாதொரு காரணத்தினால், **அஹம்** - நான், **க்ஷரம்** - க்ஷரத்திற்கு, **அதீதः** - அப்பாற்பட்டவனோ, **அக்ஷராத் அபி ச** - அக்ஷரத்தை விடவும், **உத்தமः** - மேலானவனோ, **அதः** - ஆதலால், **லோகே** - உலகத்திலும் (மஹான்களாலும்), **வேதே ச** - வேதத்திலும் (சாஸ்த்ரங்களிலும்), **புருஷோத்தமः** - புருஷோத்தமன் (**இதி** - என்று), **ப்ரதிதः** - ப்ரஸித்தமாக, **அஸ்மி** - உள்ளேன் (சிறப்பித்துக் கூறப்படுகிறேன்).

பொழிப்புரை

நான் க்ஷரத்திற்கு அப்பாற்பட்டவன், அக்ஷரத்தை விட மேலானவன். இக்காரணத்தினால், உலகில் மஹான்களாலும் வேத சாஸ்த்ரங்களாலும் புருஷோத்தமன் என்று ப்ரஸித்தமாகச் சிறப்பித்துக் கூறப்படுகிறேன்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் புருஷோத்தமனாகிய தூய உணர்வைப் பற்றி மேலும் கூறுகிறார்.

புருஷோத்தமனாகிய நான், க்ஷரபுருஷனுக்கு அப்பாற்பட்டவன். அக்ஷரபுருஷன் என்று சொல்லப்படுகின்ற மாயை, மாயாஸஹித ப்ரஹ்மன், அவித்யாஸஹித ஜீவன் - இவர்களுக்கெல்லாம் மேலானவன் என்று கூறுகிறார்.

புருஷோத்தமன் என்றால் ஜீவ, ஈச்வர, ஜகத் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட, அவற்றை வ்யாபித்திருக்கின்ற தூய உணர்வு என்று பொருள்.

எப்படி, கயிற்றைப் பாம்பானது வ்யாபித்திருப்பதுபோல் காணப்படுகிறதோ, பிறகு கயிறு மட்டுமே உண்மை என்று உணரப்படுகிறதோ, அதைப்போல என்று புரிந்துகொள்ள வேண்டும்.

மண்ணுக்கு வேறாகக் குடம் இல்லாததுபோல் என்ற உதாரணத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

உத், உத்தர: உத்தம: என்று சொல்வர். **உத்தம:** என்பது மிகச் சிறந்த தன்மையைக் குறிக்கும். **க்ஷரம்** என்பது **உத்** என்றும், **அக்ஷரம்** என்பது **உத்தர:** என்றும் எடுத்துக் கொள்ளலாம். க்ஷர அக்ஷரங்களைக் கடந்தவர், அவற்றுக்கு மேலான புருஷோத்தமன் என்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

லோக: என்ற சொல்லுக்கு மஹான்கள் என்று பொருள்கொள்ளலாம்.

வேதத்தைக் கடைப்பிடிக்கின்ற மக்களாலும், சாஸ்த்ரங்களாலும் புருஷோத்தமன் என்று மிகவும் உயர்ந்தவனாகப் போற்றப்படுகிறேன் என்கிறார் பகவான்.

ய: தம் வேத ஸ: வேதவித் । (15-1)

இந்த அத்யாயத்தின் தொடக்கத்தில், எவர் இந்த ப்ரபஞ்சத்தை ப்ரஹ்மத்துடன் சேர்த்து அறிகிறாரோ, அவர் வேதத்தின் உட்பொருளை அறிந்தவர் என்று கூறினார் பகவான்.

மஹான்களும் வேதங்களும் பகவானை புருஷோத்தமன் என்று புகழ்ந்து பேசுகிறார்கள். அவர்களுடைய புகழுக்கு உரியதாக தூய உணர்வு இருக்கிறது.

பகவான், தூய உணர்வே பேசுவதுபோல் உபதேசிக்கிறார்.

அந்தத் தூய உணர்வு நமக்கு வேறானதல்ல. அதுவே நம்முடைய உண்மையான ஸ்வரூபம் என்பதை நாம் அனைவரும் ஆழ்ந்து எண்ணக் கடமைப்பட்டிருக்கிறோம்.

यो मामेवमसम्मूढो जानाति पुरुषोत्तमम् ।

स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ।। १५ - १९ ।।

யோ மாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் ।
ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேந பாரத ।। 15 - 19 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஹே பாரத - ஓ பரத குலத்தோனே! **ய:** - எவனொருவன், **அஸம்மூட:** - மதிமயக்கம் இன்றி (தெள்ளத்தெளிவாக), **புருஷோத்தமம்** - புருஷோத்தமனான, **மாம்** - என்னை (தன் ஸ்வரூபமாக), **ஏவம்** - இவ்வாறு (குருசாஸ்த்ரத்தின் துணையுடன்), **ஜாநாதி** - அறிகிறானோ, **ஸ:** - அவன், **ஸர்வவித்** - எல்லாம் அறிந்தவனாக, **மாம்** - என்னையே, **ஸர்வபாவேந** - எல்லா நிலைகளிலும், **பஜதி** - காண்கிறான்.

பொழிப்புரை

ஓ பரத குலத்தோனே! மதிமயக்கம் இன்றி, தெள்ளத் தெளிவாக, குரு சாஸ்த்ரங்களின் துணையுடன், புருஷோத்தமனான என்னை, தன் ஸ்வரூபமாக அறிபவன், எல்லாவற்றையும் அறிந்தவன் ஆவான். அவன் எல்லா நிலைகளிலும் என்னையே காண்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், புருஷோத்தமனை உள்ளவாறு அறிவதன் பயனை இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

மூட: என்றால் அறிவிலி. **ஸம்மூட:** என்றால் முற்றிலும் அறிவில்லாதவன். **அஸம்மூட:** என்றால் முற்றிலும் அறிவுடையவன் என்று பொருள்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகியவற்றால் அறியாமை, சந்தேகம், திரிபு நீங்கப் பெற்றவன் என்று அர்த்தம்.

Downloaded from **www.omkaravidya.com**

ச்லோகத்தில், பகவான், தூய உணர்வாகிய தன்னைப் பற்றி, **மாம்** - என்னை என்று கூறுகிறார். இதன் ஆழத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ச்ரவண, மனன, நிதித்யாஸனங்களால் புருஷோத்தம தத்துவத்தை இவ்வாறு அறிந்துகொள்பவன், எல்லா வகையிலும் என்னை வழிபடுகிறான் என்று கூறுகிறார் பகவான்.

எல்லா உபாதிகளிலும் இருக்கக்கூடிய நிருபாதிக (உபாதிகளற்ற) சைதன்யத்தை அவன் உணர்ந்துகொள்கிறான் என்று பொருள்.

ஒரே ஸூர்யன் பல கண்ணாடிகளில் பல நிழல் ஸூர்யன்களாகத் தெரிவதுபோல், இரண்டற்ற தூய உணர்வு தத்துவமே, பல்வேறு உபாதிகளில் இருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு புரிந்துகொள்பவன், எங்கும் நீக்கமற நிறைந்த ஆகாசம் போன்ற நிருபாதிகமான சைதன்ய தத்துவத்தை எல்லாவற்றிலும் காண்கிறான்.

இந்த ச்லோகத்தில் உள்ள **பஜதி** என்ற சொல்லுக்கு, இந்த இடத்தில், காண்கிறான் என்று பொருள்.

எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பது நீஅன்றோ பராபரமே

என்பது தாயுமானவர் வாக்கு.

Downloaded from **www.omkaravidya.com**

ஊனாகி உயிராகி என்று மாணிக்கவாசகர் கூறியதுபோல், எல்லாவற்றிலும் அந்த மெய்ப்பொருள் விளங்கிக் கொண்டிருக்கிறது.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் - 355)

என்ற தத்துவத்தின் அடிப்படையில் பகவான் கூறுகிறார்.

ஸ: ஸர்வபாவேந மாம் பஜதி ।

அவன் எல்லா உபாதிகளிலும் விளங்கிக் கொண்டிருக்கின்ற, உபாதிகளை வ்யாபித்து, உபாதிகளுக்கு வேறாக, ஸத்யமாக இருக்கக்கூடிய அந்த மெய்ப்பொருளை நன்கு உணர்கிறான் என்று பொருள்.

அவனைத்தான் **ஸர்வவித்** என்று சொல்ல வேண்டும். எங்கும் நீக்கமற நிறைந்த மெய்ப்பொருளை அறிந்தவன், **ஸர்வவித்** - எல்லாம் அறிந்தவன் எனப்படுகிறான். அவன் எல்லாவற்றிற்கும் ஆதாரமான அத்வைத தத்துவத்தை அறிந்தவன் ஆவான்.

16, 17, 18, 19 ஆகிய நான்கு ச்லோகங்களிலும் க்ஷர புருஷன், அக்ஷர புருஷனை அறிமுகப்படுத்தி, அவற்றின் லக்ஷணங்களைக் கூறி, புருஷோத்தமனை அறிமுகப்படுத்தி, அதன் லக்ஷணங்களைக் கூறி, இந்த புருஷோத்தமனை அறிந்துகொள்வதுதான் மோக்ஷ ஸாதனம் என்று 18 ஆவது ச்லோகத்தில் கூறி, அதன் பயனை இந்த ச்லோகத்தில் கூறியிருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த தத்துவத்தை ச்ரவண, மனன, நிதித்யாஸனங்களால் ஒருவன் தெரிந்துகொள்ள வேண்டும். அறியாமை, ஐயம், திரிபு நீங்கி, இந்த உண்மையை உணர வேண்டும்.

அவ்வாறு உண்மையை உணர்பவன், எல்லாவற்றிலும் மெய்ப்பொருளையே காண்கிறான். 6 ஆவது அத்யாயத்தில் கூறப்பட்டதுபோல், எல்லா உபாதிகளிலும் ஆத்மாவைக் காண்கிறான், ஆத்மாவில் எல்லா உபாதிகளையும் காண்கிறான்.

உலகம், உயிர்கள், கடவுள் - இவை அனைத்துமே தூய உணர்வாகிய மெய்ப்பொருள் தத்துவத்திற்கு வேறாக இல்லை.

இறைவன், உலகம், உயிர்கள் எல்லாம் மெய்ப்பொருளின் மீது கற்பிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் தூய உணர்வாகிய மெய்ப்பொருள் ஒன்றே விளங்கிக் கொண்டிருக்கிறது.

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।

एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ।। १५ - २० ।।

இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரமிதமுக்தம் மயாநக ।

ஏதத்புத்த்வா புத்திமாந்ஸ்யாத்க்ருதக்ருத்யஶ்ச பாரத ।। 15 - 20 ।।

பதவுரை

ஹே அநக - ஓ பாபமற்றவனே! **இதி** - இவ்வாறு, **குஹ்யதமம்** - மிக ரஹஸ்யமான, (பாதுகாக்கப்பட வேண்டியதான), **இதம்** - இந்த, **ஶாஸ்த்ரம்** - சாஸ்த்ரமானது, **மயா** - என்னால்,

Downloaded from **www.omkaravidya.com**

உக்தம் - கூறப்பட்டது. **ஹே பாரத** - ஓ பரதகுலத்தோனே! (அறிவொளியில் மகிழ்பவனே!) **ஏதத்** - இதை, **புத்த்வா** - அறிந்து (ஒருவன்), **புத்திமாந்** - அறிவு உள்ளவன் ஆகவும், **க்ருதக்ருத்ய: ச** - செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனாகவும், **ஸ்யாத்** - ஆகிறான்.

பொழிப்புரை

ஓ பாபமற்றவனே! இவ்வாறு, மிக ரஹஸ்யமான, பாதுகாக்கப்பட வேண்டியதான இந்த சாஸ்த்ரமானது, என்னால் கூறப்பட்டது. ஓ அறிவொளியில் மகிழ்பவனே! இதனை அறிந்து, ஒருவன் அறிவுள்ளவனாகவும், செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனாகவும் ஆகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அர்ஜுனனை 'பாபமற்றவனே!' என்று அழைக்கிறார். பாபமில்லாமல், புண்யமிருந்தால்தான், பக்குவமிருந்தால்தான் இந்த தத்துவங்களையெல்லாம் விளங்கிக்கொள்ள முடியும்.

அர்ஜுனனுக்குத் தகுதி இருக்கிறது என்பதை மனதில் கொண்டு, அர்ஜுனனைப் போன்ற நமக்கும் இதனை உபதேசிக்கிறார்.

அகம் என்றால் பாபம், **அநக:** என்றால் பாபமில்லாதவன், புண்யசாலி என்று பொருள். மனத்தூய்மை, மன

Downloaded from **www.omkaravidya.com**

ஒருமுகப்பாடு, பரந்த மனப்பான்மை ஆகியவற்றை உடையவன் என்று அர்த்தம்.

ஶாஸ் என்றால் கற்பித்தல் என்றும், **த்ரம்** என்றால் பாதுகாத்தல் என்றும் பொருள். சாஸ்த்ரத்தைக் கற்றுக்கொடுப்பவருக்கு **சாஸ்தா** என்று பெயர். ஐயப்பனுக்கு தர்மசாஸ்தா, ஞானசாஸ்தா என்ற பெயர்கள் உண்டு.

ஹிதம் ஶாஸ்தி து:க்காத் த்ராயதே இதி ஶாஸ்த்ரம் ।

சாஸ்த்ரம் என்றால் நல்ல விஷயங்களை நமக்குக் கற்றுக் கொடுத்து, துன்பம் வராமல் வாழ்கின்ற வழிமுறைகளைக் கூறி, நம்மைப் பாதுகாப்பது என்று பொருள். இத்தகைய வழிமுறைகளைக் கூறுகின்ற அறிவுநூலுக்குத்தான் சாஸ்த்ரம் என்று பெயர்.

இந்த இடத்தில் மெய்ப்பொருளை விளக்கிக் கூறுகின்ற நூல், சாஸ்த்ரம் எனப்படும்.

குஹ்யதமம் ஶாஸ்த்ரம் - இது அத்வைத தத்துவத்தை உபதேசிக்கின்ற சாஸ்த்ரமாகும். **குஹ்யம்** என்றால் **ரஹஸ்யம்** என்று பொருள். தகுதியில்லாதவர்களுக்கு இதனைக் கற்றுத் தரக்கூடாது.

ராஜவித்யா ராஜகுஹ்யம் என்று ९ ஆவது அத்யாயத்திலேயே கூறப்பட்டது.

Downloaded from **www.omkaravidya.com**

குஹ்யதமம் ஶாஸ்த்ரம் - மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய சாஸ்த்ரம். தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே இதனை உபதேசிக்க வேண்டும் என்பது கருத்து.

தகுதியில்லாதவர்களுக்குக் கூறினால், அவர்கள் தர்மத்தை மீறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இவ்வாறு, பாதுகாக்கப்பட வேண்டிய இந்த சாஸ்த்ரத்தை, பாபமில்லாத, சித்தசுத்தி உடைய, ஸாதன சதுஷ்ய ஸம்பத்தியை உடைய உனக்கு (அர்ஜுனனுக்கு) உபதேசித்தேன் என்கிறார் பகவான்.

இதனை நீ நன்றாக அறிந்து, த்யானித்து, ஞானியாக ஆவாயாக. ஸ்திதப்ரஜ்ஞனாக ஆவாயாக என்று பொருள்.

இதைத் தெரிந்துகொண்டால்தான் நீ ஞானியாக முடியும். வேறு எதைத் தெரிந்துகொண்டாலும் மோக்ஷத்தை உணரக்கூடிய ஞானியாக ஒருவர் ஆக முடியாது.

இது ஒன்றே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய ஞானம். மற்ற ஞானமெல்லாம் பந்தத்தைக் கொடுக்கக் கூடியவை.

இதைத் தெரிந்துகொண்டு புத்திமானாக, ஞானியாக ஆன பிறகு, ஒருவர் ஆன்மிக வாழ்க்கையில் எந்தவிதமான ஸாதனைகளும் செய்ய வேண்டியதில்லை.

க்ருதக்ருத்ய: என்றால் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவன். **செய்யும் செய்கை செய்து முடித்தவன்** என்று கைவல்ய நவநீதம் கூறும்.

Downloaded from **www.omkaravidya.com**

உலகியல் வாழ்க்கையில், குடும்பத்திற்குச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்துவிட்டேன் என்று சொல்கிறோம். இருப்பினும் நமக்கு நிறைவு ஏற்படுவதில்லை. மற்றவர்களும் என்ன செய்துவிட்டாய் என்று கேட்கிறார்கள்.

இங்கு, நாம் மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் மெய்ப்பொருளை உணர்ந்து, முக்தியடைவதே ஆகும். இதுவே நம் வாழ்க்கையின் குறிக்கோள்.

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட ஈசனை நாடுதல்

என்பதற்கிணங்க, மெய்ப்பொருளை உணர்ந்துவிட்டால், அதற்குப் பிறகு செய்வதற்கு ஒன்றுமில்லை.

ஆன்மிக வாழ்க்கையில் செய்ய வேண்டியதைச் செய்து, நிறைவுபெற்றவன் என்று அர்த்தம்.

நைவ தஸ்ய க்ருதேநார்த்த: (3-18) என்று பகவான் கூறியதைப்போல, அவன் செய்வதால் ஒன்றைப் பெறுவதுமில்லை, செய்யாததால் ஒன்றை இழப்பதுமில்லை. அவன் எதன்பொருட்டும் யாரையும் சார்ந்திருப்பதுமில்லை.

கர்மண்யகர்ம ய: பஶ்யேத் அகர்மணி ச கர்ம ய: ।
ஸ புத்திமாந் மநுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்நகர்மக்ருத் ।। 4 - 18 ।।

செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவன் என்று பகவான் நான்காவது அத்யாயத்தில் கூறியதையும் இங்கு ஒப்பிட்டு நோக்கலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे पुरुषोत्तमयोगो नाम पञ्चदशोऽध्यायः ।। १५ ।।

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
புருஷோத்தமயோகோ நாம பஞ்சதஶோऽத்யாய: ।। 15 ।।

சொற்குற்றம், பொருட்குற்றம் நீங்குவதற்கு, ஓம் தத் ஸத் என்று கூறி, உபநிஷதங்களின் பரமதாத்பர்யத்தை விளக்கிக் கூறுகின்ற, ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கின்ற, மனதைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்-அர்ஜுனன் ஆகியோரின் அருள் உரையாடல் வடிவிலிருக்கும் இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்தில் புருஷோத்தமன் என்ற தலைப்பிலான இந்த பதினைந்தாவது அத்யாயம் நிறைவுபெறுகிறது.

ॐ श्रीकृष्णार्पणमस्तु। ஓம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து।

Downloaded from **www.omkaravidya.com**

பதினாறாவது அத்யாயம்

ॐ श्रीकृष्णाय परमात्मने नमः ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம:

अथ षोडशोऽध्यायः அத ஷோடஶோऽத்யாய:

दैवासुरसम्पद्विभागयोगः தைவாஸுரஸம்பத்விபாகயோக:

முகவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணரின் பேரருளால், பதினாறாவது அத்யாயத்திற்குள் நுழைகிறோம்.

16, 17 ஆகிய இரண்டு அத்யாயங்களும் ஆன்மிக வாழ்க்கைக்குத் தேவையான குணநலன்களைப் பற்றிக் கூறுகின்றன. தீய குணங்களை நீக்கி, நல்ல குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்து, இங்கு அழுத்தந்திருத்தமாக உபதேசிக்கப்படுகிறது.

ஏற்கெனவே 13 ஆவது அத்யாயத்தில் ஞானம் என்ற தலைப்பில் பண்புகளை உபதேசித்தார். இருப்பினும் பகவான் இங்கு விரிவாக உபதேசிக்கப் போகிறார்.

அதஶ்ச மூலாந்யநுஸந்ததாநி கர்மாநுபந்தீநி
மநுஷ்யலோகே । 15 - 2

என்று பகவான் முன்பே கூறினார். அதாவது, முந்தைய மனிதப் பிறவிகளில் செய்த கர்மங்கள் வாஸனாரூபமாக நம் மனதில் இருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

மனித உடலில் நுண்ணுடலில் உள்ள மனதில் - ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களின் அடிப்படையில் தைவீ, ஆஸுரீ, ராக்ஷஸீ என்று மூன்றுவிதமான இயல்புகள் இருக்கின்றன.

நம்மிடத்தில் தெய்வ குணம், அஸுர குணம், ராக்ஷஸ குணம் - இவை மூன்றுமே இருக்கின்றன.

ராக்ஷஸ குணம் என்பது அழிவை உண்டுபண்ணும். அஸுர குணம் என்பது இடைஞ்சல்களை ஏற்படுத்தும். எல்லோருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்று நினைப்பது தெய்வ குணம்.

இந்த சமூகத்தில் மூன்று வகையான மக்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம். மிருக - மனிதன், மனித - மனிதன், தெய்வ - மனிதன் என மூன்றுவிதமான ஸ்வபாவமுடைய மக்கள் இருக்கிறார்கள்.

மோகாஶா: மோககர்மாண: மோகஜ்ஞாநா விசேதஸ: ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஶ்ரிதா: ।। 9 - 12 ।।
மஹாத்மாநஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா: ।
பஜந்த்யநந்யமநஸ: ஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம் ।। 9 - 13 ।।

அஸுர இயல்பு, ராக்ஷஸ இயல்பு, தெய்வ இயல்பு ஆகியவற்றைப் பற்றி பகவான் முன்பு கூறினார். வீணான ஆசைகள், வீணான செயல்கள், வீணான விஷயங்கள் ஆகியவற்றில் ஈடுபடுகின்ற அஸுர, ராக்ஷஸ இயல்பு படைத்தவர்கள், அழிவுசெய்வது, இடைஞ்சல் செய்வது

Downloaded from **www.omkaravidya.com**

போன்றவற்றை தங்களுடைய இயல்பாகக் கொண்டு மயங்கிப்போயிருக்கிறார்கள்.

மஹாத்மாக்கள் தெளிந்த அறிவை உடையவர்களாக, இறைவனை எப்போதும் சார்ந்திருந்து தெய்வீக குணத்தை உடையவர்களாக வாழ்கிறார்கள்.

இவற்றைப் பற்றி விரிவாகக் கூறுவதற்குத்தான் இந்த 16 ஆவது அத்யாயம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அத்யாயத்திற்கு **தைவாஸுரஸம்பத்-விபாகயோக:** என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. யோகம் என்றால் தலைப்பு, பொருள் என்று அர்த்தம். தைவ ஸ்வபாவமுள்ள குணங்கள், அஸுர ஸ்வபாவமுள்ள குணங்கள் ஆகியவற்றைப் பகுத்தறிந்து பகவான் இங்கு உபதேசிக்கிறார். ராக்ஷஸ குணமும் அஸுர குணத்திற்குள் அடங்கும்.

அஸுர குணங்கள் எவை என்று தெரிந்துகொண்டு, அவற்றை நாம் விட்டுவிட வேண்டும். தெய்வ குணங்கள் எவை என்று தெரிந்துகொண்டு, அவற்றை நாம் வளர்க்க வேண்டும். இதுவே இந்த அத்யாயத்தின் நோக்கம்.

தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா । 16 - 5

தைவ ஸம்பத், மோக்ஷத்தை உணர்வதற்கு உதவும், அஸுர ஸம்பத் மீண்டும் மீண்டும் பிறப்பு-இறப்பாகிய துன்பச் சுழலில் நம்மை ஆழ்த்தும் என்று பகவானே கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

அஸுர குணங்களை நீக்குவோம்! தெய்வ குணங்களை வளர்ப்போம்!

श्रीभगवानुवाच

अभयं सत्त्वसंशुद्धिर्ज्ञानयोगव्यवस्थितिः ।

दानं दमश्च यज्ञश्च स्वाध्यायस्तप आर्जवम् ।। १६ - १ ।।

ஸ்ரீபகவாநுவாச

அபயம் ஸத்த்வஸம்ஶுத்திர்ஜ்ஞாநயோகவ்யவஸ்திதி: ।

தாநம் தமஶ்ச யஜ்ஞஶ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் ।। 16 - 1 ।।

பதவுரை

ஸ்ரீபகவாந் - ஸ்ரீபகவான், **உவாச** - கூறினார்.

அபயம் - அச்சமின்மை, **ஸத்த்வஸம்ஶுத்தி:** - மனத்தூய்மை, **ஜ்ஞாநயோகவ்யவஸ்திதி:** - ஞானயோகத்தில் நிலைத்திருத்தல், **தாநம்** - பிறருக்குப் பொருளை வழங்குதல், (என்னுடையது என்ற எண்ணத்தை விடுதல்), **தம: ச** - புலனடக்கம், **யஜ்ஞ: ச** - வழிபாடு (வேள்வி), **ஸ்வாத்யாய:** - சாஸ்த்ரத்தை ஓதுதல், **தப:** - தவம், **ஆர்ஜவம்** - நேர்மை.

பொழிப்புரை

ஸ்ரீபகவான் கூறினார்.

அச்சமின்மை, மனத்தூய்மை, ஞானயோகத்தில் நிலைத்திருத்தல், பிறருக்குப் பொருளை வழங்குதல், அதன்

Downloaded from **www.omkaravidya.com**

மூலம் என்னுடையது என்ற எண்ணத்தை விட்டுவிடுதல், புலனடக்கம், வழிபாடு, சாஸ்த்ரங்களை ஓதுதல், தவம், நேர்மை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் தெய்வ குணங்களைக் கூறத் தொடங்குகிறார். இந்த ச்லோகத்தில் ୨ குணங்கள் கூறப்பட்டுள்ளன.

முதல் பண்பாக அவர் கூறுவது,

1. **அபயம்** - அச்சமின்மை.

பயம் என்பது நம் எல்லோருக்கும் இயல்பாக இருக்கிறது. பயத்தில் ஸாமான்ய பயம், விசேஷ பயம் என்று இரண்டு விதங்கள் இருக்கின்றன.

சிங்கம், புலி முதலியவற்றைப் பார்த்தால், உடலைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற பயம் ஏற்படுகிறது. பயம் என்பது (Instinctive) இயல்புணர்ச்சியாக இருக்கிறது. அந்த பயம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று இங்கு சொல்லப்படவில்லை.

ஆனால் நல்ல காரியம் செய்வதற்கு சிலர் பயப்படுவார்கள். சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளவற்றை நினைத்து, தான் தவறு செய்தால், ஏதேனும் பாபம் வந்துவிடுமோ என்று சிலர் பயப்படுவார்கள். அது ந்யாயமான பயம். **தீவினையச்சம்** -

Downloaded from **www.omkaravidya.com**

பாபம் செய்வதற்கு பயப்பட வேண்டும் என்று திருவள்ளுவரே கூறுகிறார்.

ஆனால் புண்யம் செய்வதற்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை. நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தோன்றினாலும், சமூகத்தில் என்ன சொல்வார்களோ என்று எண்ணி, பலர் செய்வதற்கு முன்வருவதில்லை. அந்த பயம் தேவையில்லை என்று பகவான் இங்கு கூறுகிறார்.

சமூகம் நம்முடன் வந்ததில்லை, வரப்போவதில்லை. தற்காலத்திற்குத்தான் இந்த சமூகத்துடன் சேர்ந்து வாழ்கின்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது.

மனித உடலில் வாழ்கின்ற ஜீவன், உய்வு பெற வேண்டுமெனில், வேதங்களில் கூறப்பட்டுள்ள தர்ம விஷயங்களைக் கடைப்பிடிப்பதற்கு அஞ்சக்கூடாது. அதில் ஏதாவது தவறாகப் போய்விடுமோ என்று பயப்படக் கூடாது.

கருணாமூர்த்தியான பகவான் எப்போதும் நம்மை அபயஹஸ்தத்துடன் காப்பாற்றுகிறார். அந்த எண்ணத்துடன் நாம் பயமில்லாமல் இருக்க வேண்டும்.

உதரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி ।

(தைத்திரீய உபநிஷதம் - ப்ரஹ்மாநந்தவல்லீ)

நமக்கும் இறைவனுக்கும் இடையே வேற்றுமையைக் கற்பிப்பதே பயத்தைத் தரும் என்று வேதம் சொல்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

ந பிபேதி கதாசநேதி ।

(தைத்திரீய உபநிஷதம்- ப்ரஹ்மாநந்தவல்லீ)

ஸமஷ்டியாக (அனைத்துமாக) இருக்கும் இறைவனை வழிபடுபவன், ஒருபொழுதும் பயப்பட மாட்டான் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

ந பிபேதி குதஶ்சநேதி ।

(தைத்திரீய உபநிஷதம்- ப்ரஹ்மாநந்தவல்லீ)

ப்ரஹ்ம தத்துவத்தை உள்ளவாறு புரிந்துகொள்பவன், எதனைக் கண்டும் பயப்பட மாட்டான் என்றும் கூறியுள்ளது.

ஆக, ஸாமான்ய பயம் என்பது நம் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் அதர்மம் செய்வதற்கு பயப்படத்தான் வேண்டும்.

சிலர் பயப்படாமல் அதர்மம் செய்கிறார்கள். ஆனால் தர்மம் செய்வதற்குப் பலர் தயங்குகிறார்கள், பயப்படுகிறார்கள். நம்மை சாமியார் என்று சொல்லிவிடுவார்களோ, கீதை படித்தால் நம்மைப் பற்றி மட்டமாக நினைப்பார்களோ என்று நினைக்கக்கூடாது.

பொருளியல் வாழ்க்கையில் உழல்வதைக்காட்டிலும், அருளியல் வாழ்வில் உய்வுபெறுதல் முக்கியமானது, மேலானது. இந்த உடலிலிருந்து உயிர் கிளம்பும்போது, நல்ல ஸம்ஸ்காரங்களுடன், புண்யங்களுடன் கிளம்ப வேண்டும் என்று முன்னோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

தர்மத்தைக் கடைப்பிடித்தலும், ஜீவாத்மாவிற்கு நன்மையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதிலும் பயமில்லாமல் இருக்க வேண்டும் என்ற குணத்தைத்தான் பகவான் இங்கு உபதேசிக்கிறார்.

அச்சமின்மை என்பது தெய்வீக குணம். தைர்யமாக ஈச்வர பக்தி செய்தல், தர்மங்களைக் கடைப்பிடித்தல், சாஸ்த்ரங்களைக் கற்றல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும்.

சமூகத்திற்காக நாம் வாழக்கூடாது, நமக்காக நாம் வாழ வேண்டும்.

ஆதிசங்கரர் **அபயம்** என்ற சொல்லுக்கு, **அபீருதா அபயஶீலதா** என்று பொருள் கூறுகிறார். அதாவது, சாஸ்த்ரம் கூறுகின்ற விஷயத்தில், சந்தேகத்தை விட்டுவிட்டு, அதனைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருத்தல் என்று அர்த்தம்.

அது மட்டுமல்ல, சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளை நாம் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதால், நாம் நரகத்திற்குச் செல்ல மாட்டோம். ஆகவே, நரகத்தைப் பற்றிய பயத்திலிருந்து விடுபடலாம்.

சாஸ்த்ரங்கள் கூறுவதைக் கடைப்பிடிக்கவில்லையென்றால்தான், நரகத்திற்குச்

சென்றுவிடுவோமோ என்ற பயம் ஏற்படும். அவ்வாறு பயப்படாத நிலையை ஸம்பாதிக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

தர்மத்தை உறுதியாகக் கடைப்பிடிப்பதன் மூலம், அபயம் என்ற குணத்தை ஸம்பாதிக்க வேண்டும்.

ஒரு துறவி எல்லாவற்றையும் துறந்துவிடுகிறார். அவர் பாதுகாப்பின்மையை உணராமல் இருப்பதற்கு **அபயம்** என்று பெயர். பணம், உற்றார், சுற்றம் எல்லாவற்றையும் துறந்துவிட்டாலும், எப்படி வாழப் போகிறேனோ என்ற மனக்கலக்கம் இல்லாமல் வாழ்வதற்கு **அபயம்** என்று பெயர்.

இந்தப் பண்பு இருந்தால்தான் மனம் தூய்மை பெறும். பிறகு வேதாந்தத்தை குருமுகமாகக் கற்று, ஆத்மா அபய ஸ்வரூபம் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள முடியும்.

தர்மாநுஷ்டான நிஷ்டையைத்தான் **அபயம்** என்ற சொல்லால் சாஸ்த்ரம் குறிப்பிடுகிறது. இயல்புணர்ச்சியாக இருக்கின்ற பயத்தை விடுவது ஸாத்யமில்லை. ஆனால் நாமாகக் கற்பனை செய்துகொள்கின்ற பயத்தை விட்டுவிட வேண்டும்.

2. **ஸத்த்வஸம்ஶுத்தி:** - ஸத்த்வம் என்றால் மனம் என்று அர்த்தம். உலகியல் செயல்களில் ஈடுபடும்பொழுது, பிறரை ஏமாற்றாமல் இருக்க வேண்டும் என்ற பண்பு இங்கு கூறப்படுகிறது.

பரவஞ்சந-மாயா-அந்ருதாதி-பரிவர்ஜநம் ஶுத்தபாவேந

வ்யவஹார: இத்யர்த்த: ।

Downloaded from **www.omkaravidya.com**

எல்லோருடன் சேர்ந்து செயலாற்றும்போது விருப்பு வெறுப்பு இல்லாமல், ஏமாற்றுகின்ற புத்தி இல்லாமல், மனத்தூய்மையுடன் செய்ய வேண்டும்.

நம் வாழ்நாள் மிகக் குறுகியது. அல்பமான பணம், பதவி, புகழுக்காக வஞ்சனை செய்யக்கூடாது. மனதில் கபடம் இருக்கக் கூடாது.

மனத்தூய்மையை உடையவர்களாக நாம் இருக்க வேண்டும்.

3. **ஜ்ஞானயோகவ்யவஸ்திதி:**

ஜ்ஞானம் - ஆத்மா முதலான தத்துவங்களைப் பற்றி, சாஸ்த்ரம், குரு ஆகியோரின் வாயிலாகப் பெறப்படும் தெளிந்த ஞானம்.

யோக: - புலனடக்கம், மன ஒருமுகப்பாடு முதலியவற்றால், பெற்ற ஞானத்தைத் தன்மயமாக்குதல், **வ்யவஸ்திதி:** - அதில் உறுதியாக இருத்தல்.

ஞானம் என்பது ச்ரவண மனனங்களையும், யோகம் என்பது நிதித்யாஸனத்தையும், வ்யவஸ்திதி: என்பது இதைத் தவிர வேறு எதிலும் மனதைச் செலுத்தாமல் இருப்பதையும் குறிக்கும்.

அத்யாத்ம-ஜ்ஞாந-நித்யத்வம் தத்த்வ-ஜ்ஞாநார்த்த-

தர்ஶநம் । 13 - 11

என்று பகவான் ஏற்கெனவே கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

தத்துவ ஞானத்தின் பயனை நன்கு புரிந்துகொண்டு, அந்தப் பயனைப் பெறுவதற்காக, வேதாந்த சாஸ்த்ரத்தை முறையாகக் கற்றல். அதே பொருள்தான் இங்கும் கூறப்பட்டுள்ளது.

அபயம் என்றால் எந்தவிதமான பயமும் இல்லாமல் தர்மத்தைக் கடைப்பிடித்தல். இதனால் பொருளோ, புலனின்பங்களோ கிடைக்காமல் போகலாம். ஆனால் நிச்சயமாக மனதிற்குப் பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய ப்ரஹ்ம ஞானம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அபயம், ஸத்த்வஸம்ஶுத்தி:, ஜ்ஞாநயோகவ்யவஸ்திதி: ஆகிய மூன்றுக்கும் இடையே உள்ள தொடர்பை ஓர் உரையாசிரியர் அழகாகக் கூறியுள்ளார்.

அபயம் என்பது தர்மாநுஷ்டான நிஷ்டையைக் குறிக்கிறது. அதன் பயனாக மனத்தூய்மை, மனத்தூய்மையின் பயனாக ஞானயோகத்தில் நிலைத்திருத்தல்.

ஞானயோகத்தில் நிலைத்திருத்தல் என்பதே முதன்மையான தெய்வ ஸம்பத். பிற பண்புகள் அனைத்தும் இதற்கு உதவிபுரிவதற்கு உரியவையே ஆகும்.

அபயம் என்பதிலேயே அனைத்து தர்மங்களும் நற்பண்புகளும் அடங்கிவிடுகின்றன. அதன் விரிவைத்தான் இனியுள்ள பகுதிகளில் பகவான் கூறப் போகிறார்.

அச்சமில்லாத ஆன்மிக வாழ்க்கை வாழ வேண்டும். ஆன்மிக வாழ்க்கையைப் பற்றி பிறர் எப்படி விமர்சித்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

நாம் பிறரைச் சார்ந்திராமல், நம்மைச் சார்ந்து இருக்க வேண்டும். பிறருக்கு நாம் உதவி செய்வதும், இந்த அபயத்தில் அடங்கியிருக்கிறது என்பதை நாம் மறக்கக்கூடாது.

4. **தாநம்** - முடிந்த வரை, இயன்ற வரை, அன்னதானம் முதலியவற்றைச் செய்தல் என்று ஆதிசங்கரர் கூறுகிறார். தேவைப்படுவோருக்கு உணவு, நீர், உடை முதலியவற்றை வழங்க வேண்டும்.

அன்ன யாவினும் புண்ணியம் கோடி -
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்

என்று மஹாகவி பாரதியார் பாடுகிறார்.

'என்னுடையது என்ற எண்ணத்தை நீக்கும்பொருட்டு வழங்குதல்' என்று ஆதிசங்கரர் வேறோர் இடத்தில் தானம் என்ற சொல்லுக்குப் பொருள் கூறியிருக்கிறார்.

திருக்குறளில், **ஒப்புரவறிதல், ஈகை** ஆகிய அதிகாரங்களில் இது தெளிவாக உபதேசிக்கப்பட்டுள்ளது.

நம்மிடமுள்ள பொருட்பற்றை நீக்குவதற்கு, தானம் சிறந்த ஸாதனமாகும். பொருட்பற்று அஸுர ஸம்பத், தானம் தெய்வ ஸம்பத் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

5. **தம:** - புலனடக்கம். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகளை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றில் செலுத்தும்போது விவேகபூர்வமாகச் செயல்பட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

பொதுவாக அடிப்படைத் தேவைகளைத் தாண்டி, பிற புலனின்பங்களில் நாட்டத்தைச் செலுத்தக்கூடாது.

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. (திருக்குறள் - 343)

என்ற குறளை இங்கு ஒப்பு நோக்கலாம்.

6. **யஜ்ஞ:** - வழிபாடு.

வேதங்களில் தேவ யஜ்ஞும், பித்ரு யஜ்ஞும், மநுஷ்ய யஜ்ஞும், பூத யஜ்ஞும், ப்ரஹ்ம யஜ்ஞும் என ஐம்பெரும் வேள்விகள் கூறப்பட்டுள்ளன. நாள்தோறும் கடவுளை வழிபடுதல் தெய்வ ஸம்பத் ஆகும். சமூகத்தைப் போற்ற வேண்டும், மக்களை மதிக்க வேண்டும், இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் - இவையெல்லாம் யஜ்ஞத்தில் அடங்கும்.

7. **ஸ்வாத்யாய:** - சாஸ்த்ரங்களை ஓதுதல்.

புண்யத்தை ஸம்பாதிக்க வேண்டுமெனில், எப்பொழுதும் சாஸ்த்ர ஞானம் மனதில் இருக்க வேண்டும். சாஸ்த்ரத்தை ஒருபொழுதும் மறக்கக் கூடாது. தினமும் படித்துக் கொண்டிருந்தால்தான், அதில் மனம் செல்லும். இல்லையெனில் புத்தி தவறான வழியில் செல்லும். மனம் எப்பொழுதும் சாஸ்த்ரத்தில் தோய்ந்திருக்க வேண்டும்.

8. **தப:** - தவம்.

நாமாக விரும்பி, நம்மை வருத்தி, பண்படுத்திக்கொள்ளுதல் தவம் எனப்படும். வசதி, சொகுசு இவற்றை விரும்பாமல், ஒரு

Downloaded from **www.omkaravidya.com**

காலத்தில் உடலை வருத்தித் தவம் செய்தவர்களே, பிற்காலத்தில் இன்பமாக இருக்க முடியும்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. (திருக்குறள் -261)

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

நமக்கு வருகின்ற துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும், பிறருக்குத் துன்பம் தராமல் இருக்க வேண்டும். இதுவே தவமாகும்.

தவம் என்பது மனதைப் பக்குவப்படுத்துகின்ற ஸாதனை, அதற்கு நிறைய அத்ருஷ்ட சக்தி இருக்கிறது.

9. **ஆர்ஜவம் -** எப்பொழுதும் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் நேர்க்கோட்டில் இருக்க வேண்டும்.

மனதில் ஒன்று நினைத்து, வாக்கில் ஒன்று பேசி, செயலில் மற்றொன்றைச் செய்யக்கூடாது. உள்ளம், உரை, உடல் (செயல்கள்) ஆகியவை நேர்க்கோட்டில் இருக்கின்ற நேர்மை, ருஜு ஸ்வபாவம் **ஆர்ஜவம்** எனப்படும்.

अहिंसा सत्यमक्रोधस्त्यागः शान्तिरपैशुनम् ।
दया भूतेष्वलोलुप्त्वं मार्दवं ह्रीरचापलम् ।। १६ - २ ।।

அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ்த்யாக: ஶாந்திரபைஶுநம் ।
தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ।। 16 - 2 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

அஹிம்ஸா - மனதாலோ சொற்களாலோ செயல்களாலோ பிறரைத் துன்புறுத்தாமல் இருத்தல், **ஸத்யம்** - வாய்மை, **அக்ரோத:** - கோபமின்மை, **த்யாக:** - துறவு மனப்பான்மை, **ஶாந்தி:** - மனவடக்கம், **அபைஶுநம்** - புறங்கூறாமை, **பூதேஷு** - உயிர்களிடத்தில், **தயா** - கருணை, **அலோலுப்த்வம்** - புலனின்ப நாட்டமின்மை, **மார்தவம்** - மென்மை, **ஹ்ரீ:** - (அதர்மமான விஷயங்களில்) வெட்கப்படுதல், **அசாபலம்** - (காரணமில்லாமல்) உடலின் அங்கங்களை அசைக்காமல் இருத்தல்.

பொழிப்புரை

மனதாலோ சொற்களாலோ செயல்களாலோ பிறரைத் துன்புறுத்தாமல் இருத்தல், வாய்மை, கோபமின்மை, துறவு மனப்பான்மை, மனவடக்கம், புறங்கூறாமை, உயிர்களிடத்தில் கருணை, புலனின்ப நாட்டமின்மை, மென்மை, வெட்கப்படுதல், காரணமின்றி உடல் உறுப்புகளை அசைக்காமல் இருத்தல்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் 11 தெய்வீக குணங்களை உபதேசிக்கிறார்.

1. **அஹிம்ஸா** - மனதால்கூட பிறருக்குத் தீங்கு நினைக்கக்கூடாது. இது கடைப்பிடிப்பதற்குக் கடினமான

Downloaded from **www.omkaravidya.com**

வ்ரதம்தான். ஆனால், இதைக் கடைப்பிடிப்பதன் மூலம் நம்முடைய தன்னுணர்வை நீக்க முடியும்.

நம்மைத் துன்புறுத்துபவர்களுக்கு துன்பம் வரட்டும் என்று நினைக்கக்கூடிய அந்த எண்ணமே ஹிம்ஸைதான். மனதில் அந்த எண்ணமே வராமல் இருப்பதற்கு கடவுளிடம் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே!

என்று மஹாகவி பாரதியார் பாடினார்.

நல்ல நெஞ்சால்தான் பகைவனுக்கும் அருள்புரி என்று ப்ரார்த்தனை செய்ய முடியும். பிறரை சொற்களாலும் செயல்களாலும்கூட துன்புறுத்தக் கூடாது. அவற்றுக்கும் காரணம் எண்ணங்கள்தான்.

சிறு வயதில் யாராவது நம்மை அடித்தால், திருப்பி அடித்துவிடுவோம். வளர்ந்து, பக்குவம் வந்த பிறகு, அடிப்பது தவறு என்று புரிந்து கட்டுப்படுத்திக்கொள்வோம். ஆனால் வார்த்தைகளால் சுடுவோம்.

சில நேரங்களில் வார்த்தைகளாலும் சொல்ல முடியாதபோது, மனதிற்குள் பொங்குவோம். 'அவர்களுக்கு அறிவைக் கொடு, மனிதப் பிறவியை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு அருள்புரி' என்று இறைவனிடம் அவர்களுக்காக ப்ரார்த்தனை செய்து பழக வேண்டும். அதற்குத்தான் **அஹிம்ஸை** என்று பெயர்.

Downloaded from **www.omkaravidya.com**

திருவள்ளுவர் அஹிம்ஸைக்கென்று, **இன்னா செய்யாமை, கொல்லாமை, புலால் மறுத்தல்** ஆகிய அதிகாரங்களை அருளியிருக்கிறார்.

2. **ஸத்யம்** - பொய் பேசாமல் இருத்தல். திருவள்ளுவர் **வாய்மை** என்றே ஓர் அதிகாரத்தை அருளிச் செய்திருக்கிறார்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று. (திருக்குறள் - 297)

நம் பேச்சில் பொய் கலவாமல் இருந்தால், பிற அறச்செயல்களைச் செய்ய வேண்டிய அவசியமே இல்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார். பிற அறச்செயல்களைச் செய்ய வேண்டாம் என்று இதற்குப் பொருளல்ல. வாய்மை மிக முக்கியம் என்பதை உணர்த்துவது இதன் நோக்கமாகும்.

மனதில் இருப்பதை அப்படியே பேசுவதற்கு ஸத்யம் என்று பெயர்.

ஆனால்,

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (திருக்குறள் - 291)

என்று திருவள்ளுவர் கூறியதையும் மறக்கக் கூடாது.

ஸத்யம் வத । தர்மம் சர । (தைத்திரீயோபநிஷத் - ஶீக்ஷாவல்லீ)

உண்மை பேசு, தர்மவழியில் நட - என்பது வேதத்தின் கட்டளை.

Downloaded from **www.omkaravidya.com**

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம் । (முண்டகோபநிஷத் : 3 - 1 - 6)

என்ற உபநிஷத மந்த்ரத்தின் ஒரு பகுதி, நம் தேசத்தின் குறிக்கோளாக வைக்கப்பட்டிருக்கிறது.

'வாய்மையே வெல்லும், பொய்மை அல்ல' என்பது அதற்குப் பொருள். ஸத்யம் என்ற குணம், ஒரு மனிதனைச் சார்ந்திருக்கிறது. ஸத்யம் தனியாக இயங்காது.

ஸத்யத்தைக் கடைப்பிடிப்பவன், தனது மனதிலுள்ள அழுக்குகள் நீங்கப் பெறுகிறான். அதன் மூலம் அவன் மன அமைதியையும், மெய்யறிவையும் பெறுகிறான். வாழ்க்கையில் எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறான், துன்பத்தை வெற்றிகொள்கிறான்.

ஸத்யத்திற்குப் பொருள் சொல்லும்போது, ஆதிசங்கரர் பின்வருமாறு கூறுகிறார். 'அன்பாகப் பேச வேண்டும், பொய் கலவாமல் பேச வேண்டும், உள்ளதை உள்ளவாறு சொல்ல வேண்டும்.'

3. **அக்ரோத:** - கோபமின்மை. பொறுமையைத்தான் கோபமின்மை என்று கூறுகிறார் பகவான்.

பிறர் நம் மீது கோபப்பட்டு நம்மை நிந்திக்கும்போதோ, அடிக்க வரும்போதோ, நம் மனதில் கோபம் எழும். அந்தக் கோபம் எழாமல் கட்டுப்படுத்துவதற்கான அறிவுபூர்வமான ஒரு மனநிலையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

பிறர் நம்மை ஆக்ரோஷமாக எதிர்க்க வருகின்றபோது, மனதில் பொறுமை என்ற குணத்தை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: । 3 – 37

ரஜோகுணத்திலிருந்து தோன்றுகின்ற இந்த ஆசை, இந்த கோபம்தான் மனிதனை பாபம் செய்யத் தூண்டுகிறது என்று பகவான் ஏற்கெனவே கூறினார்.

அஹிம்ஸையும் பொறுமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை.

4. **த்யாக: –** துறவு வாழ்க்கை அல்லது துறவு மனப்பான்மை.

துறவு வாழ்க்கையை மேற்கொள்ள முடியாவிட்டாலும், துறவு மனப்பான்மையை வளர்த்துக்கொள்வது மிக முக்கியம். துறவு மனப்பான்மையை ஆழப்படுத்துவதற்கே துறவு வாழ்க்கை. துறவு மனப்பான்மையை ஆழப்படுத்தாத துறவு வாழ்க்கையால் பயனில்லை.

5. **ஶாந்தி: –** எண்ணங்களில் அமைதியாக இருத்தல். படபடப்பு, பரபரப்பு இல்லாமல் இருத்தல். மனதில் எண்ணங்கள் சீராக, அமைதியான நீரோட்டத்தைப் போல இருக்க வேண்டும்.

எண்ணங்களில் கட்டுப்பாடு வேண்டும். அப்பொழுதுதான் மன அமைதியை நாம் உணர முடியும். தரமான, அளவான,

Downloaded from **www.omkaravidya.com**

சமூகத்திற்கு நன்மை பயக்கின்ற, ஆரோக்யமான எண்ணங்களை எண்ணுதல் தெய்வீக குணமாகும்.

மன அமைதி என்ற குறிக்கோளைக் குறித்ததாக எண்ணங்கள் இருக்க வேண்டும். எண்ணங்களை ஒழுங்குபடுத்தி, மனதை அமைதியாக வைத்திருத்தலுக்குத்தான் **ஶாந்தி:** என்று பெயர்.

6. **அபைஶுநம் -** புறங்கூறாமை

சிலர் பிறரது குறைகளைப் பற்றி விஸ்தாரமாக மற்றவரிடத்தில் சொல்லி, அல்ப ஸந்தோஷத்தை அனுபவிப்பார்கள். நாம் அப்படி இருக்கக் கூடாது.

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது. (திருக்குறள் -181)

ஒருவர் செய்த நல்ல செயல்களைச் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, அவரைப் பற்றித் தவறாகப் பிறிரிடத்தில் சொல்லாமல் இருப்பது நல்லது. பர நிந்தை என்பது தவிர்க்கப்பட வேண்டும்.

என்றும் புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா

என்றார் மஹாகவி பாரதியார்.

கோள் மூட்டுகின்ற செயலை விட்டுவிட வேண்டும். அவ்வாறு விட்டுவிடுதல் தெய்வீக குணம்.

7. **பூதேஷு தயா -** உயிர்களிடத்தில் கருணை

துன்பப்படுகின்ற மனிதர்கள், விலங்குகள், பறவைகள் என

Downloaded from **www.omkaravidya.com**

உயிர்களிடத்தில் இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும், துன்பத்தை நீக்குவதற்கு உதவ வேண்டும். இங்கு மனிதர்களை மட்டும் குறிப்பிடவில்லை, பல்வேறு உடல்களில் வாழ்கின்ற உயிர்களையும் சேர்த்து, பகவான் கூறுகிறார்.

ஒரு செடி வாடிப் போயிருந்தால், தண்ணீர் விடுகிறோம் அல்லவா, அது போன்ற செயல்களைச் செய்ய வேண்டும்.

8. **அலோலுப்த்வம் -** புலனின்ப நாட்டமின்மை

சபலம் இல்லாமல் இருத்தல். நமக்கு விருப்பமான பொருளோ, உறவோ அருகில் இருந்தாலும், அதனால் மனம் சஞ்சலப்படாமல் இருக்கின்ற பக்குவமான மனநிலை வேண்டும்.

பசியாற உணவு உண்ணலாம். ஆனால் ஆசையினால், சபலத்தினால் தூண்டப்பட்டு அதிகமாக உண்டு உடலைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது.

லோலுப: என்றால் புலனின்பத்திற்காக அலைதல் என்று பொருள். அறிவுபூர்வமாக முயற்சிசெய்து, அந்த நாட்டத்தை, சபலத்தை விட வேண்டும். அதற்கு, புலனடக்கம் மிக்கவர்களுடன் பழகுதல் சிறந்த வழியாகும்.

9. **மார்தவம் -** மென்மையாக நடந்துகொள்ளுதல்

படபடப்பு, பரபரப்பு இல்லாமல், பிறரிடத்தில் நாம் மென்மையாக, இனிமையாக நடந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அவசரப்படாமல், ஆத்திரப்படாமல் இருப்பது தெய்வீக குணம். **ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு** என்பது பழமொழி.

பதட்டப்படாமல், வேலைகளை மென்மையாக, லாவகமாக, பொறுப்பாகச் செய்ய வேண்டும்.

10. **ஹ்ரீ: -** (அதர்மமான விஷயங்களில்) வெட்கப்படுதல்.

அளவுக்கு மீறிய தைர்யம் தேவையில்லை. எல்லோரிடத்திலும் அன்பாக இருந்தாலும், பார்த்து, நிதானமாகத்தான் பழக வேண்டும்.

மற்றொரு கருத்து, தவறான காரியங்களைச் செய்வதற்கு வெட்கப்பட வேண்டும். வெட்கத்தை வெளிப்படுத்த வேண்டும். மானம், மரியாதை ஆகியவற்றை முக்கியமாகக் கருத வேண்டும். தவறான செயல்களைச் செய்வதற்கு வெட்கப்படுதல் ஒரு தெய்வீக குணமாகும்.

திருவள்ளுவர், **நாணுடைமை** என்றே ஓர் அதிகாரத்தை அருளிச் செய்திருக்கிறார்.

பிறர் நம்மைப் புகழும்போது, நாணம் ஏற்படுகிறதல்லவா, அதுவும் தெய்வீகமானதுதான்.

11. **அசாபலம் -** (காரணமின்றி) உடல் உறுப்புகளை அசைக்காமல் இருத்தல்.

கை, கால்களை அசைத்துக்கொண்டே இருப்பது அஸுர குணம். கைகளால் தாளம் போடுவது, கை விரல்களைச்

Downloaded from **www.omkaravidya.com**

சொடுக்குவது, கால்களை ஆட்டிக்கொண்டே இருப்பது - இவ்வாறெல்லாம் செய்வதால் மனம் சிதறிப் போகும்.

காரணத்துடன்தான் உடல் உறுப்புகளை அசைக்க வேண்டும். காரியங்களைச் செய்யும்போதும், யோகாஸனங்களைச் செய்யும்போதும் உடலை அசைக்கலாம். ஆனால் காரணமில்லாமல் அசைக்கக் கூடாது.

தேவையில்லாத எண்ணங்களை எண்ணக் கூடாது, தேவையில்லாத சொற்களைப் பேசக்கூடாது என்பதையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். தேவையில்லாமல் பேசுவது அஸுர குணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

तेजः क्षमा धृतिः शौचमद्रोहो नातिमानिता ।

भवन्ति सम्पदं दैवीमभिजातस्य भारत ।। १६ - ३ ।।

தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசமத்ரோஹோ நாதிமாநிதா ।
பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத ।। 16 - 3 ।।

பதவுரை

ஹே பாரத - ஓ அர்ஜுனா! **தேஜ:** - தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் முன்நிற்றல், **க்ஷமா** - பொறுமை, **த்ருதி:** - உறுதி, **ஶௌசம்** - தூய்மை, **அத்ரோஹ:** - எவரையும் ஏமாற்றாத தன்மை, **ந அதிமாநிதா** - தற்புகழ்ச்சியின்மை (ஆகியவை), **தைவீம்** - தெய்வ, **ஸம்பதம்** - ஸம்பத்துடன், **அபிஜாதஸ்ய** - மனித உடலில் பிறந்த உயிருக்கு, **பவந்தி** - உண்டாகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் முன்நிற்றல், பொறுமை, உறுதி, தூய்மை, எவரையும் ஏமாற்றாத தன்மை, தற்புகழ்ச்சியின்மை ஆகியவை, மனித உடலில் தெய்வ ஸம்பத்துடன் பிறந்த உயிருக்கு உண்டாகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தைவீ ஸம்பத், அஸுர ஸம்பத் - நற்குணங்கள், தீய பண்புகள் ஆகியவற்றைக் கூறி, நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும், தீய பண்புகளை விட்டுவிட வேண்டும் என்று உபதேசிக்கிறார்.

நீண்ட கால பழக்கத்தினால்தான், இந்தப் பண்புகள் நம்மிடத்தில் வளர்கின்றன. நன்மையோ தீமையோ ஒரே நாளில் நம்மிடத்தில் வருவதில்லை.

நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே என்றும் **தீயார் குணங்கள் உரைப்பதும் தீதே** என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

1. **தேஜ:** என்றால், நல்ல காரியங்களைச் செய்வதற்கு முந்திக்கொண்டு முன்நிற்கும் தன்மை.

ப்ராகல்ப்யம், ந த்வக்கதா தீப்தி:। தோலில் தோன்றும் ஒளியல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார் ஆதிசங்கரர். எல்லோரைக் காட்டிலும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் செயல்புரிதல், நல்ல முறையில் மேலோங்கியிருத்தல்.

Downloaded from **www.omkaravidya.com**

பாரதப் பண்பாட்டில் உயர்ந்த சாஸ்த்ரங்களை ரிஷிகள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைப் பாதுகாப்பதற்கு நான் முன்வருகிறேன் என்று நிற்பது ஓர் உயர்ந்த குணமாகும்.

பலர் இன்பத்தை அனுபவிக்க மட்டும்தான் வருவார்கள். கொள்ளு என்றால் வாயைத் திறந்தும், கடிவாளம் என்றால் வாயை மூடவும் செய்யும் குதிரையைப் போன்றவர்கள்தான் பெரும்பாலான மக்கள்.

நம்முடைய பண்பாட்டைக் காப்பாற்றுவதற்கு, பலர் முன்வருவதில்லை. நமக்கு ஏன் வம்பு என்று பயத்துடன், அழிகின்ற இந்த உடலைக் காப்பாற்றி, ஸுகம் கொடுப்பதிலேயே முனைந்திருக்கிறார்கள்.

பண்பாட்டுடன் கூடிய வாழ்க்கைமுறையை அவர்கள் அறிவதுமில்லை, அறிய விரும்புவதுமில்லை. யாரோ சிலர்தான் இந்தப் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று முன்னோக்கி வருகிறார்கள்.

நான் செய்கிறேன் என்ற கர்வம் இங்கு சொல்லப்படவில்லை. பாரதப் பண்பாடு, ஸநாதன தர்மம் ஆகியவற்றைக் காத்து, ஏழை மக்களை உயர்த்துவதில் முன்நிற்றல் என்பது உயர்ந்த தெய்வீக குணமாகும்.

2. க்ஷமா – பொறுமை

மனதில் சிறிதளவுகூட யாரிடத்திலும் கோபப்படாமல் இருத்தல். கோபம் வந்த பிறகு, வந்த கோபத்தைப்

Downloaded from **www.omkaravidya.com**

பொறுத்துக்கொள்ளுதல் **அக்ரோத:** எனப்படும். **அஹிம்ஸா** என்பது பிறரைத் துன்புறுத்தாமல் இருத்தல்.

இங்கு, பொறுமை என்றால், எவ்வளவுதான் நம்மைச் சொற்களாலும் பலவித உபாயங்களாலும் துன்புறுத்தினாலும், சிறிதளவும் மனதில் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமே வராத தன்மை என்று பொருள்.

3. **த்ருதி: -** உறுதி

உடல் தளர்ந்தாலும், மனம் தளராமல் செயல்புரியும் தன்மை. ஆன்மிக வாழ்க்கைக்கு இந்த உறுதி, மிகத் தேவையான ஒரு பண்பாகும்.

4. **ஶௌசம் -** தூய்மை

உடல் தூய்மை, மனத்தூய்மை இரண்டையும் இங்கு எடுத்துக்கொள்ளலாம். மண், தண்ணீர் முதலியவற்றைக்கொண்டு முந்தைய காலங்களில் உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்வார்கள்.

நல்ல எண்ணங்களை எண்ணி, தீய எண்ணங்களை நீக்கி, மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும். (திருக்குறள் - 298)

என்ற திருவள்ளுவரின் வாக்கை இங்கு ஒப்பு நோக்கலாம்.

புறத்தில் நீரால் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

பொய் பேசாத தன்மையே அகத்தின் தூய்மையை உணர்த்துகிறது.

5. **அத்ரோஹ: -** எவரையும் ஏமாற்றாத தன்மை.

பிறர் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை நீங்கும் வண்ணம், நாம் நடந்துகொள்ளக் கூடாது. எக்காரணத்தை முன்னிட்டும், நம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு நாம் தீங்கு செய்ய நினைக்கக் கூடாது. கபடத்தனமாக நடந்து கொள்ளக்கூடாது.

6. **ந அதிமானிதா -** தற்புகழ்ச்சியின்மை

தற்பெருமை கொள்வது அஸுர குணம், அது சிறிதளவும் இல்லாமல் மிகப் பணிவாக இருப்பது தெய்வீக குணமாகும்.

அமானித்வம் (13-7) என்று பகவான் முன்பே கூறினார். இங்கு அளவுக்கு மீறிய தற்பெருமை இருக்கக்கூடாது என்று கூறுகிறார்.

தன்னைப் பற்றி மிக உயர்வாக எண்ணிக்கொண்டு, எல்லோரும் தன்னைப் பாராட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தற்கொலைக்கு ஸமம் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. எப்போதும் பணிவாக இருப்பதற்கு, நம்முடைய மனதை அறிவின் துணைகொண்டு, பண்படுத்த வேண்டும்.

இவை, மனித உடலில் வாழ்கின்ற ஸாதகனாகிய ஜீவனுக்கு உண்டாகக்கூடிய தெய்வீகப் பண்புகள் என்று பகவான்

Downloaded from **www.omkaravidya.com**

கூறுகிறார். தெய்வீக குணங்களை அறிந்து வாழ்கின்ற ஸாதகனுக்கு, இந்த தெய்வீக குணங்கள் வந்து அமைகின்றன.

दम्भो दर्पोऽभिमानश्च क्रोधः पारुष्यमेव च ।

अज्ञानं चाभिजातस्य पार्थ सम्पदमासुरीम् ।। १६ - ४ ।।

தம்போ தர்போऽபிமாநஶ்ச க்ரோத: பாருஷ்யமேவ ச ।

அஜ்ஞாநம் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பதமாஸுரீம் ।। 16 - 4 ।।

பதவுரை

ஹே பார்த்த - ஓ அர்ஜுனா! **ஆஸுரீம்** - அஸுர, **ஸம்பதம்** - ஸம்பத்துடன், **அபிஜாதஸ்ய** - பிறந்தவனுக்கு, **தம்ப:** - தம்பட்டம் அடித்துக்கொள்ளுதல், **தர்ப:** - கர்வம் (இறுமாப்பு), **அபிமாந: ச** - தன்னை உயர்வாக எண்ணிக்கொள்ளுதல், **க்ரோத:** - கோபம், **பாருஷ்யம் ஏவ ச** - கடுமையான சொல், **அஜ்ஞாநம் ச (பவதி)** - அறியாமை (இயல்பாகின்றன.)

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! அஸுர ஸம்பத்துடன் பிறந்தவனுக்கு, தம்பட்டம் அடித்துக் கொள்ளுதல், கர்வம் (இறுமாப்பு), தன்னை உயர்வாகக் கருதிக் கொள்ளுதல், கோபம், கடுமையான சொல், அறியாமை ஆகியவை இயல்பாகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அஸுர குணங்களைக் கூறத் தொடங்குகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

தம்ப: என்றால் **தர்ம-த்வஜித்வம்** என்று ஆதிசங்கரர் பொருள் கூறுகிறார். அதாவது, தான் செய்கின்ற புண்ய செயல்களைப் பிறரிடத்தில் சொல்லி தம்பட்டம் அடித்துக்கொள்ளுதல்.

தான் செய்த புண்யத்தை இவ்வாறு பறைசாற்றிக் கொள்வதாலேயே, அந்த புண்யம் அழிந்துவிடும் என்று சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது.

புண்யம் நஶ்யதி கீர்த்தநாத் । பாபம் நஶ்யதி கீர்த்தநாத் ।

நாம் செய்த பாபத்தைப் பறைசாற்றினால், பாபம் அழிந்துவிடும். அதேபோன்று, நாம் செய்த புண்யத்தை எல்லோரிடத்திலும் கூறினால், அதுவும் அழிந்துவிடும்.

தர்ப: - கர்வம் (இறுமாப்பு)

பணம், சுற்றத்தார் ஆகியோர் இருப்பதால் ஏற்படும் கர்வம்.

மா குரு தந-ஜந-யௌவந-கர்வம் (பஜ கோவிந்தம்)

செல்வம், சுற்றத்தார், இளமை முதலியவற்றால் ஏற்படுகின்ற கர்வம் நம்மிடம் இருக்கக் கூடாது என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

அபிமாந: - தானே மிக உயர்ந்தவன் என்று எண்ணிக்கொள்ளுதல்.

அபிமானம் என்பதற்கு, பல அர்த்தங்கள் உள்ளன. தன்னையே உடல் என்று எண்ணிக்கொள்ளுதல் அபிமானம் என்று சொல்லப்படும்.

Downloaded from **www.omkaravidya.com**

பொருட்கள், வாழ்விடம், ஆடை, ஆபரணங்கள் ஆகியவற்றில் உள்ள ஆழ்ந்த பற்றுக்கும் அபிமானம் என்று பெயர்.

தன்னை மிக உயர்ந்தவனாகக் கருதிக்கொள்கின்ற புத்தி சிலரிடத்தில் இருக்கும். உண்மையிலேயே அப்படியிருந்தாலும், பணிவினால் அதனை வெற்றிகொள்ள வேண்டும். கடவுளிடத்திலும் பெரியோர்களிடத்திலும் பணிவுடன் இருக்க வேண்டும்.

க்ரோத: - கோபம்

கோபமுடையவன் குருவைக்கூட கொன்றுவிடுவான் என்று சொல்வர். மனதில் ஏற்படும் பெரும் படபடப்பு, உணர்ச்சிக் கொந்தளிப்பினால், ஒருவன் என்ன வேண்டுமானாலும் செய்வான்.

பாருஷ்யம் - கடுமையான சொல்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (திருக்குறள் - 35)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

வெகுளி எனப்படும் கோபத்தினால் ஒருவன் கடுஞ்சொற்களைப் பேசுகிறான்.

வஞ்சகமாகப் புகழ்ந்து பேசுதல், ஒருவரது உடல் உறுப்புகளைப் பார்த்து கேலியாகப் பேசுதல் - இவையும்கூட இதில் அடங்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

அஜ்ஞானம் - எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற பகுத்தறிவு இல்லாமல் இருத்தல். அறிந்துகொள்ள வேண்டியதை அறிந்துகொள்ளாமல் இருத்தல்.

இப்படிப்பட்ட அஸுர குணங்களை உடையவர்களாகவே சிலர் பிறந்து, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பண்புகள் நம்மிடம் இருக்கக் கூடாது.

दैवी सम्पद्विमोक्षाय निबन्धायासुरी मता ।

मा शुचः सम्पदं दैवीमभिजातोऽसि पाण्डव ।। १६ - ५ ।।

தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா ।
மா ஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோऽஸி பாண்டவ ।। 16 - 5 ।।

பதவுரை

தைவீ - தைவ, **ஸம்பத்** - ஸம்பத், **விமோக்ஷாய** - மோக்ஷத்திற்கானது (துன்பங்களிலிருந்து விடுவிக்கும்) என்றும், **ஆஸுரீ** - அஸுர (ஸம்பத்), **நிபந்தாய** - பந்தத்திற்கானது (பிறவிகளில் தளைத்துத் துன்பத்தைக் கொடுக்கும்) என்றும், **மதா** - கருதப்படுகிறது. **ஹே பாண்டவ!** - ஓ அர்ஜுனா! **மா ஶுச:** - வருந்தாதே. **தைவீ -** தைவ, **ஸம்பத்** - ஸம்பத்துடன், **அபிஜாத:** - பிறந்தவனாக, **அஸி** - உள்ளாய்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

தெய்வ ஸம்பத் எனப்படும் தெய்வீகமான பண்புகள் மோக்ஷத்திற்கானவை, துன்பத்திலிருந்து விடுவிக்கக் கூடிவை. அஸுர ஸம்பத் எனப்படும் தீய பண்புகள் பந்தத்திற்கானவை, அவை உயிர்களைப் பிறவிகளில் தளைத்து, துன்பத்தைக் கொடுக்கும் என்று கருதப்படுகிறது. ஓ அர்ஜுனா! வருந்தாதே! நீ தெய்வ ஸம்பத்துடன் பிறந்திருக்கிறாய்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஒரு தெளிவிற்காக வேண்டி, தெய்வ ஸம்பத், அஸுர ஸம்பத் ஆகியவற்றின் பலன்களைக் கூறுகிறார்.

தெய்வீகப் பண்புகள் துன்பத்தை ஏற்படுத்தாமல், பேரின்பத்தில் நம்மைச் செலுத்தக்கூடிய குணங்கள். அவை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை அளிக்கக் கூடியவை. இவ்வாறு வேதங்கள், சாஸ்த்ரங்கள், பெரியோர்களால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

தெய்வீக குணங்கள் மோக்ஷத்தின்பொருட்டு அமைகின்றன. தெய்வீக குணங்கள், நமக்கும் பிறருக்கும் இன்பத்தைக் கொடுக்கக் கூடியவை, துன்பத்திலிருந்து விடுவிக்கக் கூடியவை.

Downloaded from **www.omkaravidya.com**

அஸுர குணங்களோ நமக்கும் பிறருக்கும் துன்பத்தை ஏற்படுத்தக் கூடியவை. ராக்ஷஸ குணம் ஆளையே கொன்றுவிடும். அஸுர குணமானது, பிறருக்கு இடைஞ்சல் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

பிறரைத் துன்புறுத்தி, நிந்தித்து இன்பம் காண்பவன் ராக்ஷஸன். அதர்மமாகப் புலனின்பங்களை அனுபவிப்பவன் அஸுரன். தர்மமான வழியில் புலனின்பங்களை அனுபவிப்பவன் ஸுரன்.

தான் தெய்வ ஸம்பத்துடன் பிறந்திருக்கிறோமா, அஸுர ஸம்பத்துடன் பிறந்திருக்கிறோமா என்று அர்ஜுனனுக்கு மனதில் ஒரு கேள்வி எழலாம்.

பகவான் கூறுகிறார், 'அர்ஜுனா! கவலைப்படாதே. தெய்வீக ஸம்பத்தைச் சார்ந்தே நீ பிறந்திருக்கிறாய்.'

அர்ஜுனனுடைய மனநிலையைக் குறிப்பால் உணர்ந்து, பகவான் இவ்வாறு கூறுகிறார்.

நம்மிடத்தில் அஸுர குணம் இருக்குமோ என்று நீ கவலைப்படத் தேவையில்லை, தெய்வீக குணங்களால் நீ பேரின்பத்தை உணரப் போகிறாய் என்று பொருள்.

உலக மக்களுக்கு உபதேசிக்கும்பொருட்டு, பகவான் அர்ஜுனனை நிமித்தமாக வைத்து தெய்வ குணங்களையும் அஸுர குணங்களையும் இவ்வாறு பிரித்துக் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

தெய்வ ஸம்பத்தின் பலன் மோக்ஷம், அஸுர ஸம்பத்தின் பலன் பந்தம். கீதா சாஸ்த்ரத்தைக் கற்பவர்கள், தெய்வ ஸம்பத்தை வளர்த்து, கவலையிலிருந்து விடுபடுவார்களாக!

द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन्दैव आसुर एव च ।

दैवो विस्तरशः प्रोक्त आसुरं पार्थ मे शृणु ।। १६ - ६ ।।

த்வௌ பூதஸர்கௌ லோகேऽஸ்மிந்தைவ ஆஸுர ஏவ ச ।

தைவோ விஸ்தரஶ: ப்ரோக்த ஆஸுரம் பார்த்த மே

ஶ்ருணு ।। 16 - 6 ।।

பதவுரை

அஸ்மிந் - இந்த, **லோகே** - உலகில், **தைவ:** - தெய்வீக இயல்பு உடையவர்கள் என்றும், **ஆஸுர: ஏவ ச** - அஸுர இயல்பு உடையவர்கள் என்றும், **த்வௌ** - இரண்டு வகையான, **பூதஸர்கௌ** - மனித கூட்டத்தினர் (**ஸ்த:** - இருக்கிறார்கள்). **ஹே பார்த்த** - ஓ அர்ஜுனா! **தைவ:** - தெய்வீக இயல்பு உடையவர்களைப் பற்றி, **விஸ்தரஶ:** - விரிவாக, **ப்ரோக்த:** - கூறப்பட்டது. **மே** - என்னிடமிருந்து, **ஆஸுரம்** - அஸுர இயல்பு உடையவர்களைப் பற்றி, **ஶ்ருணு** - கேட்பாயாக.

பொழிப்புரை

இந்த உலகில் தெய்வீக இயல்பு உடையவர்கள், அஸுர இயல்பு உடையவர்கள் என்று இரண்டு வகையான மனித கூட்டத்தினர் இருக்கின்றனர். ஓ அர்ஜுனா! தெய்வீக இயல்பு

Downloaded from **www.omkaravidya.com**

உடையவர்களைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டது. இனி, என்னிடமிருந்து அஸுர இயல்பு உடையவர்களைப் பற்றிக் கேட்பாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த உலகில் இரண்டு விதமான மனிதர்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார். **பூத:** என்ற சொல் பொதுவாக உயிர்களைக் குறித்தாலும், இங்கு மனிதர் என்று பொருள் கொள்கிறோம்.

த்வயா ஹ ப்ராஜாபத்யா தேவாஶ்ச அஸுராஶ்ச

(ப்ருஹதாரண்யக உபநிஷதம் : 1 - 3 - 1)

மனிதர்களில் தெய்வீக இயல்பும் அஸுர இயல்பும் உடையவர்களாக இரண்டு கூட்டத்தினர் இருக்கின்றனர் என்று வேதத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளது.

பகவான் இருபத்து ஆறு தெய்வீக குணங்களை விரிவாகக் கூறினார். சுருக்கமாக ஆறு அஸுர குணங்களைக் கூறினார். இனி விரிவாக அதனைக் கூறப் போகிறார்.

அஸுர குணங்களைப் பற்றிக் கேட்பதன் நோக்கம், அவற்றை நம்மிடமிருந்து நீக்க வேண்டும் என்பதாகும்.

விலங்கு-மனிதன், மனித-மனிதன், தெய்வ-மனிதன் என்று மூன்றாகப் பிரிப்பது வழக்கம். பிறருக்குத் தீங்கு செய்பவன் விலங்கு-மனிதன். பிறருக்குக் கெடுதல் செய்யாமல், தனக்கு மட்டும் நல்லது செய்துகொள்பவன் மனித-மனிதன். தான்

Downloaded from **www.omkaravidya.com**

கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று பிறருக்கு நன்மை செய்பவன் தெய்வ-மனிதன்.

प्रवृत्तिं च निवृत्तिं च जना न विदुरासुराः ।

न शौचं नापि चाचारो न सत्यं तेषु विद्यते ।। १६ - ७ ।।

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜநா ந விதுராஸுரா: ।
ந ஶௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே ।। 16 - 7 ।।

பதவுரை

ஆஸுரா: - அஸுர இயல்புடைய, **ஜநா:** - மக்கள், **ப்ரவ்ருத்திம் ச** - எதில் ஈடுபடலாம் (செய்யத் தக்கது எது) என்பதையும், **நிவ்ருத்திம் ச** - எதில் ஈடுபடக்கூடாது (செய்யத் தகாதது எது) என்பதையும், **ந விது:** - அறிவதில்லை. **தேஷு** - அவர்களிடம், **ந ஶௌசம்** - தூய்மை இல்லை, **ந அபி ச ஆசார:** - ஆசாரமும் இல்லை, **ஸத்யம்** - வாய்மையும், **ந வித்யதே** - இல்லை.

பொழிப்புரை

அஸுர இயல்புடைய மக்கள், எதில் ஈடுபடலாம், எதில் ஈடுபடக் கூடாது, அதாவது செய்யத் தக்கது எது, செய்யத் தகாதது எது என்பதை அறிவதில்லை. அவர்களிடத்தில் தூய்மை, ஆசாரம், வாய்மை ஆகியவை இருப்பதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அஸுர இயல்புடைய மனிதர்களைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

அஸுர இயல்பு உடையவர்களுக்கு, எதில் ஈடுபடலாம், எதில் ஈடுபடக்கூடாது என்ற பகுத்தறிவு இருக்காது.

வாழ்க்கையின் குறிக்கோளாகிய அமைதியையும் ஆனந்தத்தையும் நோக்கிச் செயல்படக்கூடிய அறிவு அவர்களுக்கு இருக்காது.

அவர்கள் சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளதை செயல்படுத்த மாட்டார்கள். சாஸ்த்ரத்தின் சொற்களை அவர்கள் மதிக்க மாட்டார்கள். விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு, தாங்களாகவே செயல்படுவார்கள்.

தங்களுக்கு நன்மை சொல்லக்கூடிய சாஸ்த்ரங்களையோ பெரியோர்கள் கூறுவதையோ கேட்காமல் அவர்கள் செயல்புரிவார்கள்.

எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற அறிவு அவர்களுக்கு இருக்காது. இதைச் செய்தால் கெடுதல் ஏற்படும் என்று ஒன்றை விட்டு விலகவும் அவர்களுக்குத் தோன்றாது.

செய்யத் தகுந்ததைச் செய்ய மாட்டார்கள். செய்யத் தகாததைச் செய்வார்கள்.

செய்ய வேண்டியவற்றில் ஈடுபாடு இருக்காது. செய்யக் கூடாதவற்றிலிருந்து விலகிச் செல்லும் தன்மையும் அவர்களிடத்தில் இருக்காது.

Downloaded from **www.omkaravidya.com**

மனம் போனபடி, விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு அவர்கள் செயல்படுவார்கள். அது அஸுர குணமுள்ள மக்களின் இயல்பு.

அவர்கள் சரியான நேரத்தில் குளிக்க மாட்டார்கள். மனதில் நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ள மாட்டார்கள். தீய எண்ணங்களை நீக்க மாட்டார்கள். அவர்களிடத்தில் புறந்தூய்மை, அகந்தூய்மை இரண்டுமே இருக்காது.

மநு சாஸ்த்ரம் முதலியவற்றில் சொல்லப்பட்ட ஒழுக்க நடைமுறைகளான ஆசாரங்கள் அவர்களிடத்தில் இருக்காது.

எப்படி அமர வேண்டும், எப்படி உண்ண வேண்டும், எங்கு எதனைச் செய்யலாம், செய்யக் கூடாது போன்றவற்றில் அவர்கள் கவனம் செலுத்த மாட்டார்கள்.

தலைமுடியை சீராக வைத்தலில் தொடங்கி, உடை உடுத்துதல், பேச்சு, அமருதல், நிற்றல், பெரியோர்களின் முன்னால் நடந்துகொள்ளும் முறை - இவற்றில் அவர்களுக்கு மனம் செல்லாது. இவற்றை அவர்கள் கடைப்பிடிக்க மாட்டார்கள். ஆசாரங்களை இவர்கள் இகழ்ந்தும் பேசுவார்கள்.

உள்ளதை உள்ளவாறு பேச மாட்டார்கள். கதை கட்டி, இல்லாதவற்றையெல்லாம் கூறுவார்கள், பொய்யைப் பரப்புவார்கள்.

நாம் பெரியோர்கள் காட்டிய ஒழுக்க நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். உள்ளதை உள்ளவாறு, பொய் கலவாமல் பேச வேண்டும். எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்

Downloaded from **www.omkaravidya.com**

கூடாது என்பதை அறிந்து, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நம்முடைய விருப்பு வெறுப்புகளின்படி வாழக்கூடாது. சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளபடி வாழ வேண்டும். அகத்திலும் புறத்திலும் தூய்மையாக இருக்க வேண்டும். இவ்வாறு தெய்வீக குணங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ।

अपरस्परसम्भूतं किमन्यत्कामहैतुकम् ।। १६-८ ।।

असत्यमப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீஸ்வரம் ।
அபரஸ்பரஸம்பூதம் கிமந்யத்காமஹைதுகம் ।। 16 - 8 ।।

பதவுரை

தே - (அஸுர இயல்பு படைத்த) அவர்கள், **ஜகத்** - உலகம், **அஸத்யம்** - பொய்யானது, **அப்ரதிஷ்டம்** - புண்ய, பாபங்கள் அற்றது, **அநீஸ்வரம்** - கடவுள் இல்லாதது (கடவுளுக்குக் கட்டுப்பட்டதல்ல), **அபரஸ்பரஸம்பூதம்** - ஆண், பெண் சேர்க்கையால் உண்டானது, **காம-ஹைதுகம்** - காமத்தையே காரணமாக உடையது, **கிம் அந்யத்** - வேறென்ன, **(இதி) ஆஹுः** - என்று கூறுகிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

அஸுர இயல்பு படைத்தவர்கள், இந்த உலகம் பொய்யானது, புண்ய பாபங்கள் அற்றது என்று நினைக்கிறார்கள். இந்த உலகிற்குத் தலைவராக, கடவுள் என்று ஒருவர் இல்லை. இது ஆண் பெண் சேர்க்கையால் உண்டானது, காமத்தையே காரணமாக உடையது என்று கூறுகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நம்மிடமுள்ள அஸுர குணங்களை நாம் விட்டுவிட வேண்டும் என்பதற்காக, அஸுர குணங்களைப் பற்றி உபதேசிக்கிறார்.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் தேவ குணமும், அஸுர குணமும் இருக்கின்றன. எதனை நாம் பண்படுத்தி வளர்க்கிறோமோ, அந்த குணமே மேலோங்கும்.

நம்மிடத்தில் இயல்பாகவே அஸுர குணங்கள் இருக்கும். தெய்வீக குணங்களால், அஸுர குணங்களை வெற்றிகொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இல்லையெனில், சமூகத்தில் அமைதி குலைந்துவிடும். சிறிது கால வாழ்க்கைகூட துன்பம் நிறைந்ததாக ஆகிவிடும்.

சமூகம் என்பது, தனிமனிதர்களின் கூட்டமே ஆகும். ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைச் சரிசெய்துகொள்ள வேண்டும். சமூகம் நன்றாக இருக்க வேண்டுமெனில்,

Downloaded from **www.omkaravidya.com**

தெருக்கள் நன்றாக இருக்க வேண்டும். தெருக்கள் நன்றாக இருக்க வேண்டுமெனில் வீடுகள் நன்றாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனும் அறிவுபூர்வமாகத் தனது உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தி வாழக் கடமைப்பட்டிருக்கிறான். சமூகத்தில் யாரும் போரை விரும்புவதில்லை. எல்லோரும் அமைதியையே விரும்புகிறார்கள்.

தனிமனிதனிடத்தில் இருப்பதுபோல, சமூகத்தில் ஒட்டுமொத்தமாகவும் தெய்வீக குணங்கள், அஸுர குணங்கள் இருக்கின்றன.

சமூகத்தில் பெரும்பாலான மனிதர்கள் நல்லவர்கள்தான். ஒரு சிலர்தான் அஸுர குணத்தை உடையவர்கள். நல்லவர்கள் அஸுர குணத்தை வெல்வதற்கு முயற்சி எடுப்பதில்லை. அதனால்தான் அஸுரத்தன்மை உடையவர்கள் தலையெடுத்து, நல்லவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள்.

இதற்கு நல்லவர்களும் பொறுப்பெடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும். எப்படி தனிமனிதன் தன்னிடத்திலுள்ள அஸுர குணத்தை, தெய்வீக குணத்தைக்கொண்டு வெற்றிகொள்ள வேண்டுமோ, அப்படி சமூகத்தில் இருக்கின்ற மக்களும் தெய்வீக குணங்களை மேலோங்கச் செய்து, அஸுர குணம் உடையவர்களை வெற்றிகொள்ள வேண்டும். அவர்களைப் பண்படுத்த நாம் எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

அஸுர குணமுடையவர்களை அழிக்க வேண்டும் என்று பொருளல்ல. நம்மால் முடிந்த வரை, வாழ்க்கையில் சக்தியை வெளிப்படுத்தி, தீமையை வென்று, நன்மையை நிலைநாட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

அஸுர ஜனங்கள் என்ன சொல்கிறார்கள் என்று பகவான் இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

இந்த உலகம் பொய்யானது என்பது அவர்களின் எண்ணம்.

வேதாந்தத்தில் கூறுவது வேறு. அங்கு இந்த உலகம் பொய் என்று சொல்லப்படவில்லை, **மித்யா** - வெறும் தோற்றமே என்று சொல்லப்படுகிறது.

அஸுர இயல்புடையவர்கள், நாம் எப்படி சில காலம் கழித்து இல்லாமல் போய்விடுவோமோ, அப்படியே இந்த உலகமும் இல்லாமல் போய்விடும் என்று நினைக்கிறார்கள்.

இந்த உலகம் இருப்பற்றது என்பது அவர்களின் வாதம். அதனால் இங்கு புண்ய பாபம் என்பதெல்லாம் இல்லை. எதைச் செய்ய வேண்டும், எதை விலக்க வேண்டும் என்ற அறிவுடையவர்களாக அவர்கள் இருப்பதில்லை என்று ஏற்கெனவே 7 ஆவது ச்லோகத்தில் பகவான் கூறினார்.

இந்த உலகம் **அஸத்யம்** என்று சொல்லும்போது, அவனுக்குத் தன்னம்பிக்கையும் இல்லை, யாரையும் நம்பவும் மாட்டான் என்று தெரிகிறது. இந்த சமூகத்தில் ஒருவருமே உண்மையானவர் கிடையாது என்பது அவர்களின் வாதம். எல்லோரும் பொய் வேஷம் போடுகிறார்கள், போலித்தனமாக

Downloaded from **www.omkaravidya.com**

நடந்துகொள்கிறார்கள் என்று நினைக்கிறான். இத்தகைய எண்ணத்திற்கு அஸுர குணம் என்று பெயர்.

உலகில் ஸத்யவான் என்று யாருமில்லை. எல்லோரும் ஏதோ ஒரு கோணத்தில் ஏமாற்றுகிறார்கள் என்ற எண்ணம் உடையவர்கள் அஸுர குணம் படைத்தவர்கள். அவர்களால் எதிர்மறையாகத்தான் சிந்திக்க முடியும். நேர்மறையாக அவர்கள் சிந்திக்க மாட்டார்கள்.

நம்மிடத்தில் தெய்வீகத்தன்மை இருக்கிறது, பிறரிடத்திலும் தெய்வீகத்தன்மை இருக்கிறது என்று பார்க்கின்ற ஓர் உயர்ந்த பாவனை அவர்களிடத்தில் இருப்பதில்லை.

இவர்கள், தானும் நிம்மதியாக இருக்க மாட்டார்கள். இவர்களால் பிறருக்கு அமைதி, ஆனந்தத்தைக் கொடுக்கவும் முடியாது.

அப்ரதிஷ்டம் என்றால் இந்த உலகம் தர்மம் செய்பவனுக்கு இன்பத்தையும், அதர்மம் செய்பவனுக்குத் துன்பத்தையும் தருகிறது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருத்தல் என்று பொருள்.

இன்ப துன்பங்கள் தானாக வருகின்றன, அவற்றுக்குக் காரணமில்லை என்று இவன் நினைக்கிறான். இந்தப் படைப்பிற்குத் தலைவராக, உயிர்களுக்கு வினைப்பயன்களை அருள்பவராக கடவுள் என்று ஒருவர் இல்லை என்று நினைக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த உலகில் புண்யம், பாபம், கடவுள் இருக்கிறார் போன்றவற்றை அஸுர இயல்பு படைத்தவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

புண்ய பாபங்களாகிய தர்ம அதர்மங்களால்தான் இந்த ப்ரபஞ்சம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

தாங்கள் செய்த நல்வினைப் பயன்களையும் தீவினைப் பயன்களையும் அனுபவிப்பதற்காகத்தான், உயிர்கள் பல்வேறு உடல்களை எடுத்துக் கொண்டிருக்கின்றன.

அஸுர குணம் படைத்த நாஸ்திகவாதிகள் இதனை ஒத்துக்கொள்வதில்லை. அது மட்டுமல்ல, இந்த உலகம் தானே தோன்றியது, இதற்கு கடவுள் என்று ஒரு தலைவன் கிடையாது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அவர்களைப் பொருத்தவரை, இந்த உலகைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருள்புரிகின்ற, உயிர்களுக்கு வினைப்பயன்களை அருள்கின்ற கடவுள் என்று ஒருவர் இல்லை.

நாம் பிறப்பதற்குக் காரணம் கர்மம்தான் என்று சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிறது. இறைவன், உயிர்கள் வினைப்பயன்களை நுகர்வதற்காக இந்த உடலைக் கொடுத்திருக்கிறார்.

ஆனால், அஸுர குணம் படைத்தவர்களோ, தாய் தந்தையரிடத்தில் உள்ள காமம்தான் படைப்பிற்குக் காரணம் என்று நினைக்கிறார்கள். ஆடு, மாடு, கோழி, மரங்கள்,

Downloaded from **www.omkaravidya.com**

மனிதன் என எந்த வகையான உயிரினமும் ஆசையினால் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, அடுத்தத் தலைமுறையை உருவாக்குகின்றன. கர்மா என்பதெல்லாம் படைப்பிற்குக் காரணமல்ல, காமம்தான் காரணம் என்பது அவர்களது வாதம்.

ஆணும் பெண்ணும் காமத்தினால் சேர்ந்து படைப்புத் தொழிலை நிகழ்த்துகிறார்கள். இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? தர்மமாவது, அதர்மமாவது, கடவுளாவது, உண்மையாவது - இந்த உலகில் இவை எதுவும் கிடையாது என்று நாஸ்திகவாதம் பேசுகிறார்கள்.

அவர்கள் குறைகளையே கூறிக் கொண்டிருப்பார்களே தவிர, தீர்வைச் சொல்ல மாட்டார்கள்.

ஆன்மிக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சமூகத்திற்கு எவ்வளவோ நன்மை செய்கிறார்கள், மக்களுக்கு சேவை செய்கிறார்கள். ஆனால், நாஸ்திகர்கள் பழி சொல்லிக் கொண்டிருப்பார்களே தவிர, ஆக்கபூர்வமாக ஒரு செயலைச் செய்து, அதை நடைமுறைப்படுத்தி, பயன்படும் வகையில் ஒன்றும் செய்ய மாட்டார்கள்.

ஆனால் பொய்யான விளம்பரங்களைத் தேடிக்கொள்வார்கள். இன்றும் சமூகத்தில் இதனை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

एतां दृष्टिमवष्टभ्य नष्टात्मानोऽल्पबुद्धयः ।

प्रभवन्त्युग्रकर्माणः क्षयाय जगतोऽहिताः ।। १६-९ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோ5ல்பபுத்தய: ।

ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோ5ஹிதா: ।। 16 - 9 ।।

பதவுரை

ஏதாம் - இந்த, **த்ருஷ்டிம்** - பார்வையை, **அவஷ்டப்ய** - பிடித்துக்கொண்டு, **நஷ்ட-ஆத்மாந:** - தங்களது வாழ்க்கையையே அழித்துக்கொண்டவர்களும், **அல்பபுத்தய:** - குறுகிய மனப்பான்மை உடையவர்களும், **உக்ரகர்மாண:** - குரூரச் செயல்கள் உடையவர்களும் ஆன, (**ஜகத:** - உலகின்), **அஹிதா:** - பகைவர்கள், **ஜகத:** - உலகின், **க்ஷயாய** - அழிவின்பொருட்டு, **ப்ரபவந்தி** - செயலில் ஈடுபடுகிறார்கள்.

பொழிப்புரை

மேற்கூறிய பார்வையைப் பிடித்துக்கொண்டு, தங்களது வாழ்க்கையையே அழித்துக் கொண்டவர்களும், குறுகிய மனப்பான்மை உடையவர்களும், கொடுஞ்செயல்கள் செய்பவர்களுமான இந்தப் பகைவர்கள், உலகின் அழிவின்பொருட்டு செயல்படுகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தர்ம-அதர்ம விவேகம் இல்லாத, தூய்மையில்லாத, ஒழுக்கக் கட்டுப்பாடு இல்லாத, பொய் பேசுகின்ற, உலகில் யாருமே நல்லவர்கள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை, படைப்பு வெறும் காமத்தினால்

Downloaded from **www.omkaravidya.com**

உண்டானதுதான் என்றெல்லாம் நினைக்கின்ற அஸுர குணம் படைத்தவர்களைப் பற்றிக் கூறுகிறார்.

இப்படிப்பட்ட பார்வையைத்தான் **லோகாயதம், சார்வாகம்** என்றெல்லாம் கூறுவர். இந்த உலகம்தான் உண்மை, இதற்குப் பிறகு வாழ்க்கை இல்லை, இதற்கு முன்பும் வாழ்க்கை இருந்ததில்லை என்று எண்ணுகின்ற பொருளியல் சார்ந்த பார்வை இது.

உயிர் வேறு, உடல் வேறு என்ற கருத்தை அவர்கள் பொய் என்று கருதுகிறார்கள்.

நஷ்ட-ஆத்மாந: - தங்களது வாழ்க்கையின் பிற்காலத்தைப் பற்றிய சிந்தனையில்லாமல் வாழ்க்கையை அழித்துக் கொள்பவர்கள்.

இளமையில் ரத்தத்துடிப்புடன் இருக்கும்போது, இப்படியெல்லாம் பேசுவார்கள். உடலில் வலிமை குன்றிய பிறகு, அதே கருத்துடன் இருக்க முடியாது. தனக்கு மேலாக ஓர் ஆற்றல் இருக்குமோ என்ற சந்தேகம் வரத்தான் செய்யும்.

இவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளைப் புரிந்துகொள்ளாமல், மனம் போன போக்கில் சென்று, தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்கிறார்கள். தங்களைக் கெடுப்பது மட்டுமல்லாமல், வருங்காலத் தலைமுறையினரையும் கெடுப்பார்கள்.

இவர்கள் குறுகிய மனப்பான்மை உடையவர்களாக இருப்பார்கள். இவர்களிடத்தில் பரந்த மனப்பான்மை

Downloaded from **www.omkaravidya.com**

இருக்காது. ஜாதி, மதம், குலம் என எத்தனையோ உட்பிரிவுகள் இருந்தாலும், எல்லோரிடத்திலும் மனிதநேயமும் ஆன்மநேயமும் உணர்வுநேயமும் இருக்க வேண்டும் என்றுதான் சாஸ்த்ரங்கள் வலியுறுத்திச் சொல்கின்றன.

வேற்றுமை என்பது இயற்கையின் இயல்பாக இருந்தபோதிலும், அறவழியில் ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும்.

அஸுர இயல்பு படைத்தவர்களால் ஒருமுகப்பட்ட மனதுடன், பொறுமையாக ஓரிடத்தில் அமர்ந்து, சாஸ்த்ரம் கூறுகின்ற கருத்துகளைக் கேட்க முடியாது. மனம் அலைபாயும்.

ஆனால், பிறரைப் பற்றி வம்பு பேசும்போது ஒருமுகப்பட்ட மனதுடன் பேசுவார்கள். உயர்ந்த விஷயங்களைத்தான் அவர்களால் கேட்க முடியாது.

எது உண்மையிலேயே மனதிற்கு அமைதியையும் பேரின்பத்தையும் தரக்கூடிய சக்தி படைத்ததோ, திருக்குறள் போன்ற அத்தகைய சாஸ்த்ரங்களில் ஒன்றுமே இல்லை என்று படிக்காமலேயே சொல்வார்கள்.

ஒருவர் படித்து, அதில் கூறப்பட்டுள்ளவற்றை 12 வருடங்கள் கடைப்பிடித்த பிறகு சொன்னால்கூட பரவாயில்லை. கடைப்பிடித்தால், அவர்கள் அதிலுள்ள உண்மையை உணர்ந்துவிடுவார்கள். அவர்களால் படிக்கவும் முடியாது, கடைப்பிடிக்கவும் முடியாது. ஆனால் படித்து, கடைப்பிடித்துக் கொண்டிருப்பவர்களைப் பரிகாசம் செய்வார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

அது மட்டுமல்ல, அவர்கள்தான் உலகத்தையே திருத்தப் போகின்றவர்கள் போன்றும், மற்றவர்கள் சமூகத்திற்குப் பயனில்லாதவர்கள் என்றும் கருதி கொடுஞ்செயல்களைப் புரிவார்கள்.

கொலை செய்தல், குண்டு வைத்து தகர்த்து சமூகத்தில் மக்களுக்குக் கெடுதல் செய்தல், பிற மதங்களை இழிவாகப் பேசுதல், மதமாற்றம் செய்தல் - இவையெல்லாமே கொடுஞ்செயல்கள்தான்.

மதமாற்றம் என்பது தீவிரவாதம்தான். ஒருவன் ஒழுக்கமாக, கட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற வாழ்க்கையை மாற்றுதல் ஒரு தவறான செயல்தான்.

நாகரிகம் இல்லாத இடங்களில் சென்று புதிதாக ஒரு மதத்தைக் கற்றுக்கொடுக்கலாம். ஆனால், ஏற்கெனவே நாகரிகங்கள், பழக்கவழக்கங்கள் சிறந்து விளங்குகின்ற ஓரிடத்தில் சென்று ஏன் மதமாற்றம் செய்ய வேண்டும்?

நல்ல பண்புகளைக் கடைப்பிடிப்பவன், எந்த சமயத்தையும் சாராதவனாக இருந்தாலும் அவன் உண்மையான சமயப்பற்று உடையவன்தான். நற்பண்புகளைக் கடைப்பிடிக்காவிட்டால், அவன் எந்த சமயத்தில் இருந்தாலும், அவன் உண்மையிலேயே சமயப்பற்று உடையவன் அல்ல என்பது ஸ்ரீமத் ஸ்வாமீ சித்பவானந்தரின் வாக்கு.

கொடுஞ்செயல்களைச் செய்பவர்கள், மக்களுக்கு நன்மையைச் செய்யாமல், எப்படி தீமை செய்ய வேண்டும்

Downloaded from **www.omkaravidya.com**

என்று திட்டமிட்டு மக்களை அழிப்பதற்குரிய செயல்களில் ஈடுபடுகிறார்கள், ஓயாது செயல்புரிகிறார்கள். இத்தகைய எண்ணமும் செயலும் அவர்களிடத்தில் இருக்கின்றன.

அவர்களுடைய மனநிலை மாற வேண்டும் என்று நாம் ஆழ்ந்து ப்ரார்த்தனை செய்வோம். சிறிது காலம் இந்த உலகில் வாழ்கின்ற நாம், நல்ல குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும், அஸுர குணங்களை விலக்கிக்கொள்ள வேண்டும்.

எது சரி என்று அறிவதும், எது சரியில்லை என்று அறிவதும் கல்வியின் இரண்டு அம்சங்களாகும்.

அஸுர குணங்களை விலக்கி, தெய்வ குணங்களை வளர்த்து, வருங்காலத் தலைமுறையை தெய்வீகமாக்கும் வண்ணம், உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கு பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நமக்கு அருள்புரியட்டும்.

काममाश्रित्य दुष्पूरं दम्भमानमदान्विताः ।

मोहाद्गृहीत्वासद्ग्राहान्प्रवर्तन्तेऽशुचिव्रताः ।। १६ - १० ।।

காமமாஶ்ரித்ய துஷ்பூரம் தம்பமாநமதாந்விதா: ।

மோஹாத்க்ருஹீத்வாஸத்க்ராஹாந்ப்ரவர்த்தந்தேऽஶு-

சிவ்ரதா: ।। 16 - 10 ।।

பதவுரை

துஷ்பூரம் - நிறைவு செய்ய முடியாததான, **காமம்** - ஆசையை, **ஆஶ்ரித்ய** - சார்ந்திருந்து, **தம்ப-மாந-மத-அந்விதா:** - ஆடம்பரம்,

Downloaded from **www.omkaravidya.com**

தற்பெருமை, கர்வம் இவற்றுடன் கூடியவராய், **மோஹாத்** - பகுத்தறிவின்மையினால், **அஸத்க்ராஹாந்** - தவறான கொள்கைகளை, **க்ருஹீத்வா** - பற்றிக்கொண்டு, **அஶுசிவ்ரதா:** - பிறரை அழிக்கின்ற எண்ணத்துடன், தீய நடவடிக்கைகளை உடையவராய், **ப்ரவர்த்தந்தே** - செயல்படுகின்றனர்.

பொழிப்புரை

நிறைவு செய்ய முடியாததான ஆசையைச் சார்ந்திருந்து, ஆடம்பரம், தற்பெருமை, கர்வம் ஆகியவற்றுடன் கூடியவராய், பகுத்தறிவின்மையினால் தவறான கொள்கைகளைப் பற்றிக்கொண்டு, பிறரை அழிக்கின்ற எண்ணத்துடன் தீய நடவடிக்கைகளை உடையவர்களாக அவர்கள் செயல்படுகின்றனர்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அஸுர இயல்பு படைத்தவர்களைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறார். அஸுர குணங்கள் தவறு என்று புரிந்துகொண்டு, அவற்றிலிருந்து நாம் விலக வேண்டும்.

அஸுர குணம் படைத்தவர்கள், அதர்மம் செய்தாலும் தங்களை தர்மவான்களாக நினைத்துக்கொள்வார்கள். தான் நிறைய தர்மங்கள் செய்வதாகப் பொய் ப்ரசாரத்தில் ஈடுபடுவார்கள். அதற்கு தம்பம் என்று பெயர். வீண் ஜம்பம் என்று கூறுவோம்.

Downloaded from **www.omkaravidya.com**

தாங்கள் ஒன்றைக்கூட உருப்படியாகக் கடைப்பிடிக்க மாட்டார்கள். ஆனால், அதர்மத்தைச் செய்துகொண்டு, தான் அறநெறியைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்வார்கள்.

அஸுர குணம் உடையவன், உண்மையில் மதிப்புக்கு உரியவனாக இல்லாத போதிலும் மதிப்பை எதிர்பார்ப்பான். பணத்தைக் கொடுத்து, புகழை வாங்க முயற்சிப்பான். போலிப் பெருமையுடன் இருப்பான்.

படிப்பு, செல்வம் முதலியவை இருந்தாலும் இல்லாவிட்டாலும், தன்னை மிகச் சிறந்தவனாக நினைத்துக்கொள்வான்.

தன்னிடம் இல்லாதவற்றையும் இருப்பதாக நினைத்து கர்வப்படுவான். இன்றைய காலகட்டத்தில் பணத்தைக் கொடுத்து, பட்டங்களை வாங்கிக் கொள்கிறார்களே, அது போன்ற செயல்களில் ஈடுபடுவான்.

ஆசை என்பது நிரப்ப முடியாதது. எவ்வளவு அனுபவித்தாலும் த்ருப்தி வராது. ஆசை வந்துவிட்டால், அது நிறைவேறும் வரை ச்ரமப்பட வேண்டும். ஆசை பலமாக இருப்பதால், ச்ரமம் தெரிவதில்லை.

ஆசை நிறைவேறிய பிறகு, தான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்று சொல்லிக் கொள்வார்கள். புலனின்பங்களை எவ்வளவு அனுபவித்தாலும், மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்றுதான் தோன்றும்.

Downloaded from **www.omkaravidya.com**

படிப்பும் ஒழுக்கமும் இல்லாதவர்கள், பணம், பதவி, புகழ் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் பின்னால் ஓடுவார்கள். விவேகம், அதாவது பகுத்தறிவு இல்லாமல், கெடுதலை உண்டுபண்ணுகின்ற விஷயங்களைப் பிடித்துக்கொள்வார்கள்.

தற்காலிக இன்பத்தை உண்மை என்று நம்பி, பிற்காலத்தில் துன்பத்தைத் தரக்கூடியவற்றை இவர்கள் நாடுவார்கள்.

கள் குடித்தல், மாமிசம் உண்ணுதல் போன்றவற்றைச் செய்வார்கள். அஸுரர்களில் ஒரு பிரிவினர், தாங்கள் உண்கின்ற போதை வஸ்துக்களை இறைவனுக்குப் படைத்துவிட்டு உண்பார்கள்.

சாஸ்த்ரங்களில் பெரியோர்கள் உபதேசித்திருப்பதை அவர்கள் செய்வதில்லை. அதற்கு மாறானவற்றைச் செய்வார்கள். அதர்மமான செயல்களை மகிழ்ச்சியுடன் செய்து, பிறரது தர்மமான செயல்களையும் தவறாகச் சித்தரித்து, அவர்களை இழிவுபடுத்துவார்கள்.

இவற்றையெல்லாம் நாம் செய்யக்கூடாது. நாம் அமைதியாக தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுதும் பணிவாக இருக்க வேண்டும். தற்பெருமை அடித்துக்கொள்ளக் கூடாது. கள் உண்ணுதல், பிறர் மனை நாடுதல் போன்ற தவறான செயல்களைச் செய்யக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ரங்களைப் படித்து, தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் எது நல்லதோ, அதை நன்கு கெட்டியாகப் பிடித்துக்கொண்டு செயல்படுத்த வேண்டும்.

चिन्तामपरिमेयां च प्रलयान्तामुपाश्रिताः ।

कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ।। १६ - ११ ।।

आशापाशशतैर्बद्धाः कामक्रोधपरायणाः ।

ईहन्ते कामभोगार्थमन्यायेनार्थसञ्चयान् ।। १६ - १२ ।।

சிந்தாமபரிமேயாம் ச ப்ரலயாந்தாமுபாஶ்ரிதா: ।

காமோபபோகபரமா ஏதாவதிதி நிஶ்சிதா: ।। 16 - 11 ।।

ஆஶாபாஶஶதைர்பத்தா: காமக்ரோதபராயணா: ।

ஈஹந்தே காமபோகார்த்தமந்யாயேநார்த்தஸஞ்சயாந் ।। 16 - 12 ।।

பதவுரை

அபரிமேயாம் - அளவு கடந்ததும், **ப்ரலய-அந்தாம் ச** - மரண காலம் வரை தொடர்வதுமான, **சிந்தாம்** - கவலையை, **உபாஶ்ரிதா:** - பற்றிக் கொண்டவர்களும், **காம-உபபோக-பரமா:** - உலகியல் இன்பங்களை அனுபவிப்பதையே மேலாக எண்ணுபவர்களும், **ஏதாவத்** - இவ்வளவே (புருஷார்த்தம்), **இதி** - என்று, **நிஶ்சிதா:** - நிச்சயம் உடையவர்களும், **ஆஶா-பாஶ-ஶதை:** - எல்லையற்ற விருப்பங்களாலும் பற்றுகளாலும், **பத்தா:** - கட்டுண்டவர்களும், **காம-க்ரோத-பராயணா:** - ஆசையும் கோபமும் நிறைந்தவர்களுமான

Downloaded from **www.omkaravidya.com**

(இவர்கள்), **காமபோகார்த்தம்** - ஆசைப்பட்டவற்றை அனுபவிக்கும் பொருட்டு, **அந்யாயேந** - அறத்திற்கு மாறான வழிகளில், **அர்த்த-ஸஞ்சயாந்** - பொருள் தேடுதலின் பொருட்டு, **ஈஹந்தே** - முயற்சிக்கிறார்கள்.

பொழிப்புரை

அளவு கடந்ததும், மரண காலம் வரை தொடர்வதுமான கவலையைப் பற்றிக் கொண்டவர்கள், உலகியல் இன்பங்களை அனுபவிப்பதையே மேலாக எண்ணி, இவ்வளவே புருஷார்த்தம் என்று உறுதியாக நினைப்பவர்கள், எல்லையற்ற விருப்பங்களாலும் பற்றுகளாலும் கட்டுண்டவர்கள், ஆசையும் கோபமும் நிறைந்தவர்களுமான இவர்கள், ஆசைப்பட்டவற்றை அனுபவிக்கும்பொருட்டு, அறத்திற்கு மாறான வழிகளில் பொருள் தேட முயற்சிக்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அஸுர குணங்களைப் பற்றி உபதேசித்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் எப்பொழுதும் எப்படி வாழ்க்கையை நடத்துவது என்பது பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். அது இறக்கும் வரை தொடரும். கவலைப்படுவதை, ஒரு கடமையைப் போன்று செய்வார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

கவலைப்படுவது என்பது இயல்பு. நாம் ஒன்றும் அதை வளர்த்துக்கொள்வதில்லை. கவலையிலிருந்து விடுபடுவதற்குத்தான் நாம் முயற்சிக்க வேண்டும்.

அளவுக்கு மீறி கவலைப்படுவது என்பது ஆழ்ந்த சுயநலத்தின் வெளிப்பாடு. பாதுகாப்பின்மை உணர்ச்சியின் வெளிப்பாடு அது.

தன்னுடைய யோக க்ஷேமத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்து, பணம், சொத்து ஆகியவற்றைப் பற்றியே நினைத்துக் கவலைப்படுவார்கள். மரணம் என்ற ஒன்று இருக்கிறது, இதையெல்லாம் நாம் விட்டுவிட்டுத்தான் போக வேண்டும் என்ற எண்ணம் இருக்காது. இவர்களால் ஆக்கபூர்வமாக எதையுமே எண்ணிப் பார்க்க முடியாது.

தனக்குப் பிறர் ஏதாவது கெடுதல் செய்துவிடுவார்களோ என்ற எண்ணம் இருந்துகொண்டே இருக்கும். இவர்களும் பிறருக்குக் கெடுதல் செய்வார்கள், அது வேறு விஷயம்.

இவர்கள் அளவுக்கு மீறி கவலைப்படுவார்கள்.

எப்பொழுதும் கவலையிலே மூழ்கியிருப்பான் பாவி

என்று மஹாகவி பாரதியார் பாடுகிறார்.

கவலைப்படுவதில் நேரத்தை வீணடிக்கக்கூடாது. அது உடல்நலம், மனநலம், அறிவுநலம் எல்லாவற்றையும் கெடுத்துவிடும். மாறாக, திட்டமிடுவதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

கவலைக்கு என்ன தீர்வு என்பதைக் கண்டறிந்து, அதனைச் செயல்படுத்த வேண்டும். அஸுர குணங்களைப் பற்றிப் படிக்கும்போதே, அவற்றுக்கு மாறான நல்ல குணங்களையும் சிந்தித்துப் பார்த்து, அவற்றை நம்முடைய குணமாக ஆக்கிக்கொள்வதற்கு முயல வேண்டும்.

அஸுர இயல்பு படைத்தவர்கள், எப்பொழுதும் புலனின்ப நுகர்ச்சியையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருப்பார்கள். உடலில் அனுபவிக்க

சக்தியில்லாவிட்டால்கூட, அவர்களிடத்தில் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை நீங்குவதில்லை.

பணம் ஸம்பாதிப்பது, புலனின்பங்களை அனுபவிப்பது - இவ்வளவுதான் வாழ்க்கை என்று அவர்கள் முடிவு செய்துவிடுகிறார்கள். புண்யமாவது, மோக்ஷமாவது என்று நினைப்பார்கள்.

யாவத் ஜீவேத் ஸுகம் ஜீவேத் ருணம் க்ருத்வா க்ருதம் பிபேத் ।
பஸ்மீபூதஸ்ய தேஹஸ்ய புநராகமநம் குத: ।।

என்று கூறுவர்.

‘இருக்கும் வரை ஸந்தோஷமாக இரு, கடனை வாங்கியாவது நெய்யைச் சாப்பிடு. உடல் சாம்பலாகப் போன பிறகு, மறுபிறவி என்று சொல்வதெல்லாம் உண்மையல்ல’ இவ்வாறு சிற்றறிவினர் சிந்திப்பார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

மனதிற்குள், நூற்றுக்கணக்கான ஆசைகளால் கட்டப்பட்டிருப்பார்கள். ஆசையினால்தான் பற்று ஏற்படுகிறது. விருப்பமும் பற்றும் மனிதனைக் கட்டுகின்றன.

பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம் (7-11) ஆசையும் பற்றும் இல்லாத வலிமையாக இருக்கிறேன் என்று பகவான் முன்பே கூறினார்.

புதிதாகப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற ஆசை அவர்களிடத்தில் இருக்கும். இருக்கின்றவற்றிலும் அதீதமான பற்றுடன் இருப்பார்கள். அதனைப் பிறருக்குக் கொடுப்பதற்கு மனமில்லாமல் இருப்பார்கள்.

எல்லா ஆசைகளும் நிறைவேறிவிடாது. ஆசை நிறைவேறாதபோது, கோபம் வரும். அவர்கள் ஆசையும் கோபமும் வடிவெடுத்தவர்களாக இருப்பார்கள். எப்பொழுதும் சஞ்சலமான மனதுடன் இருப்பார்கள். ஆசைப்பட்டதை அனுபவிப்பதற்காக, பிறருடைய சொத்தை அந்யாயமாக, அக்ரமம் செய்து அபகரிக்க முயல்வார்கள்.

ஏமாற்றிப் பொருளை விற்பார்கள். பதவிக்காகவும் பொருளுக்காகவும் நிறைய அதர்மங்களைச் செய்வார்கள். அதனால் அவர்களுக்கு எல்லையற்ற பாபங்கள் சேரும்.

அவர்களால் ஒருபொழுதும் நிம்மதியாக இருக்க முடியாது. பிறருக்கும் நிம்மதியைத் தர முடியாது.

இந்த அஸுர குணம் நம்மிடத்தில் இருக்கவே கூடாது. அளவான, தர்மமான ஆசைகள்தான் நம்மிடம் இருக்க

Downloaded from **www.omkaravidya.com**

வேண்டும். எப்பொழுது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும், விட்டுச் செல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

அளவுக்கு மீறிய முறையற்ற ஆசைகள், நம்மை நிறைய தவறுகள் செய்யத் தூண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

इदमद्य मया लब्धमिदं प्राप्स्ये मनोरथम् ।

इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम् ।। १६ - १३ ।।

இதமத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மநோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ।। 16 - 13 ।।

பதவுரை

அத்ய - இன்று, **மயா** - என்னால், **இதம்** - இது, **லப்தம்** - அடையப்பட்டது. **இமம் (இதம்)** - இந்த, **மநோரதம்** - விருப்பத்தை, **ப்ராப்ஸ்யே** - அடைவேன். **மே** - என்னிடம், **இதம்** - இந்த, **தநம்** - செல்வம், **அஸ்தி** - உள்ளது. **புந:** - மேலும், **இதம் அபி** - இதற்கு மேலும் (செல்வம்), **மே** - எனக்கு, **பவிஷ்யதி** - வரப் போகிறது.

பொழிப்புரை

இன்று என்னால் இது அடையப்பட்டது. இந்த விருப்பத்தை அடைவேன். என்னிடம் இந்தச் செல்வம் உள்ளது. இதற்கு மேலும், என்னிடம் செல்வம் வரப் போகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அஸுர இயல்பு படைத்தவர்களின் மனநிலையை வர்ணிக்கிறார்.

இவையெல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன. மேலும் இவற்றையெல்லாம் நான் அடையப் போகிறேன். இப்படிப்பட்ட எண்ணங்கள் அஸுர குணங்கள்.

பகவான் நம்மை ஒவ்வொரு நாளும் காப்பாற்றுகிறார் என்ற எண்ணத்துடன் ஆனந்தமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இதை மனதிற்குள் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் உடையவர்களால், நிகழ்காலத்தில் ஆனந்தமாக வாழ முடியாது. அவர்களுக்கு ஆனந்தம் ஒரு நாளும் கிடைக்கப் போவதில்லை.

மக்கள் இதைப் புரிந்துகொள்வதில்லை. இந்த அறியாமையிலிருந்து விடுபட மறுக்கிறார்கள். இதனை அறிந்தவர்கள்கூட, சில சமயம் இந்த உண்மையிலிருந்து விலகிவிடுகிறார்கள்.

எனக்கு இன்று இவ்வளவு பணம் கிடைத்தது, இந்த உறவு அல்லது நட்பு கிடைத்தது, இந்த இடம் கிடைத்தது, பதவி கிடைத்தது என பொருள், உறவுகள், சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பற்றி எண்ணுகிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

பொருளியல் வாழ்க்கை சார்ந்த கனவுகள் அவர்களுக்கு இருக்கின்றன. விருப்பங்களை அடைய வேண்டும் என்ற வேட்கை இருக்கும். **மனோரதம்** என்றால் கற்பனை என்று பொருள். அடையப் போகிறேன் என்று பெருமையடித்துக்கொள்ளுதல். அதற்காக உழைக்காமல், வெறுமனே மனக்கோட்டை கட்டுதல்.

இதம் என்பது **இமம்** என்று சில நூல்களில் உள்ளன. **இமம்** என்பது இலக்கணப்படி சரியாக இருந்தாலும், ஆதிசங்கரர், ஆனந்தகிரி, மதுஸூதன ஸரஸ்வதி, தனபதி போன்ற உரையாசிரியர்கள் **இதம் மநோரதம்** என்றுதான் விளக்கம் கூறியிருக்கிறார்கள். ஆகவே, **இதம்** என்ற பாடத்தை எடுத்துக்கொள்வது நல்லது.

என்னிடத்தில் இவையெல்லாம் இருக்கின்றன என்று பணம், செல்வாக்கு, ஆள்பலம் முதலியவற்றைக் குறித்து, இருப்பது இல்லாதது எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்வார்கள்.

கடவுளிடம் பணத்தை வேண்டி ப்ரார்த்தனை செய்துகொண்டே இருப்பார்கள். ஆனந்தமே வடிவான கடவுளை வழிபடுவதே ஆனந்தம் என்பதை உணராமல், இதையெல்லாம் நடத்திக்கொடுத்தால், இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன் என்று அவரிடமே பேரம் பேசுவார்கள்.

நிறைவே வடிவான ஆண்டவனுக்கு நாம் என்ன கொடுக்க முடியும்? நாம் கொடுப்பதால்தான் கோயிலில் பணம் இருக்கிறதா என்ன?

Downloaded from **www.omkaravidya.com**

நமக்கு சேவை செய்வதற்கு இறைவன் ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார் என்று நினைக்க வேண்டும்.

தன்னிடம் பணம் இருக்கிறது, மேலும் பணம் வரப்போகிறது என்று நினைப்பது அஸுர குணமுடையவர்களின் மனப்பான்மை என்று பகவான் கூறுகிறார்.

असौ मया हतः शत्रुर्हनिष्ये चापरानपि ।

ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान्सुखी ।। १६ - १४ ।।

असௌ மயா ஹத: ஶத்ருர்ஹநிஷ்யே சாபராநபி ।

ஈஶ்வரோऽஹமஹம் போகீ ஸித்தோऽஹம்

பலவாந்ஸுகீ ।। 16 - 14 ।।

பதவுரை

அஸௌ - அந்த, **ஶத்ரு:** - பகைவன், **மயா** - என்னால், **ஹத:** - அழிக்கப்பட்டான், **ச** - மேலும், **அபராந் அபி** - மற்றவர்களையும், **ஹநிஷ்யே** - அழிப்பேன். **அஹம்** - நான், **ஈஶ்வர:** - ஆள்பவன் (தலைவன்). **அஹம்** - நான், **போகீ** - அனுபவிப்பவன், **ஸித்த:** - வெற்றி அடைந்தவன் (அடைய வேண்டியதை அடைந்துவிட்டேன்). **பலவாந்** - பலசாலியும், **ஸுகீ** - இன்பத்தை அனுபவிப்பவனும், **அஹம்** - நானே.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

அந்தப் பகைவன் என்னால் அழிக்கப்பட்டான். மேலும், மற்றவர்களையும் அழிப்பேன். நான் ஆள்பவன், தலைவன். நான் அனைத்தையும் அனுபவிப்பவன். வாழ்வில் வெற்றி அடைந்துவிட்டேன். நான் பலசாலி, இன்பத்தை அனுபவிப்பவன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அஸுர இயல்புடையவன் எவ்வாறு பேசுவான் என்பதைத் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறார்.

என்னுடைய செயல்களுக்கு இடைஞ்சலாக உள்ள, என்னுடைய புகழ், செல்வத்தை அபகரிக்கின்ற பகைவனை இன்று நான் கொன்றுவிட்டேன் என்று மார்தட்டிக் கொள்வான்.

இன்னும் யாரெல்லாம் எனக்கு இடைஞ்சல் செய்கிறார்களோ, அவர்களையும் கொன்றுவிடுவேன் என்று கூறுவான். தனக்குப் போட்டியாக யாரும் இருக்கக்கூடாது என்று இவன் நினைக்கிறான்.

என்னால் எது வேண்டுமானாலும் செய்ய முடியும், எனக்கு நிகராக ஒருவரும் இல்லை. நானே பெரிய ஆள் என்று தன்னைத் தானே பெரிதாக நினைத்துக்கொள்கிறான்.

தன்னால் எல்லாவற்றையும் அனுபவிக்க முடியும் என்று எண்ணுகிறான். உடலில் நிறைய சக்தி இருப்பதாகவும், அந்த

Downloaded from **www.omkaravidya.com**

சக்தி எப்பொழுதும் இருக்கப்போவதாகவும் நினைக்கிறான். வாழ்க்கையின் நிலையாமை அவனுக்குப் புரிவதில்லை.

நான் வாழ்க்கையில் வெற்றி அடைந்திருக்கிறேன், ஆள்பலம் இருக்கிறது, குடும்பத்தினர் இருக்கின்றனர், என்னை யாரும் அசைக்க முடியாது என்று எண்ணுகிறான்.

நான் மிகுந்த பலசாலி என்கிறான். அது மட்டுமல்ல, தன்னிடம் இருக்கின்ற வலிமையைத் தவறான செயல்களுக்குப் பயன்படுத்துகிறான்.

எல்லோரும் பூமிக்கு பாரமாகப் பிறந்திருக்கின்றனர் என்றும், தான் ஒருவனே வாழத் தகுந்தவன் என்றும் எண்ணுகிறான்.

இந்த அஸுர பண்புகள் நம்மிடத்தில் இருக்கக் கூடாது. யாரையும் அழிக்க நினைக்கக் கூடாது. யாரையும் அழித்துவிடுவேன் என்று சொல்லவும் கூடாது, செய்யவும் கூடாது.

எப்படியிருந்தாலும் ஒரு நாள் இந்த உடலை விட்டு, வாழ்க்கையை விட்டு நாம் கிளம்பியாக வேண்டும். அந்த எண்ணம் எப்போதும் நம் மனதில் இருக்க வேண்டும்.

நம்மால் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. கடவுள் கொடுத்த வாய்ப்பை, நாம் நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும், நாமே அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது. பணம், இளமை, ஆள்பலம் குறித்து கர்வப்படக் கூடாது.

எல்லோரும் சமூகத்தில் முக்கியமானவர்கள் என்று நினைக்க வேண்டும். தவறு செய்பவர்களைத் தண்டிப்பதற்கு, அரசாங்கத்திற்குத்தான் உரிமை இருக்கிறதே தவிர, தனிப்பட்ட முறையில் குழுக்களாகச் சேர்ந்து, பிறரைத் தாக்க முற்படுவது அஸுர குணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

आढ्योऽभिजनवानस्मि कोऽन्योऽस्ति सदृशो मया ।

यक्ष्ये दास्यामि मोदिष्य इत्यज्ञानविमोहिताः ।। १६ - १५ ।।

ஆட்யோऽபிஜநவாநஸ்மி கோऽந்யோऽஸ்தி ஸத்ருஶோ மயா ।

யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞாந-

விமோஹிதா: ।। 16 - 15 ।।

பதவுரை

ஆட்ய: - நிறைய செல்வமுடையவனாகவும், **அபிஜநவாந்** - உயர்குலத்தில் உதித்தவனாகவும் (நிறைய ஆள்பலம் உடையவனாகவும்), **அஸ்மி** - இருக்கிறேன். **மயா** - எனக்கு, **ஸத்ருஶ:** - நிகரானவன், **க: அந்ய:** - வேறு எவன், **அஸ்தி** - இருக்கிறான். **யக்ஷ்யே** - வேள்விகள் (வழிபாடுகள்) செய்வேன், **தாஸ்யாமி** - தானம் அளிப்பேன், **மோதிஷ்யே** - மகிழ்வேன், **இதி** - இவ்வாறு, **அஜ்ஞாநவிமோஹிதா:** - அறியாமையினால் கலங்கியவர்கள் (**கதயந்தி** - கூறுகிறார்கள்).

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

நான் நிறைய செல்வமுடையவன், உயர்குலத்தில் உதித்தவன், ஆள்பலம் உடையவன். எனக்கு நிகராக யார் இருக்கிறார்கள்? நிறைய வேள்விகள் செய்வேன், தானம் அளிப்பேன், மகிழ்வேன் என்று இவ்வாறு அறியாமையினால் கலங்கியவர்கள் கூறுகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் பகுத்தறிவைப் பயன்படுத்தாதவர்கள் எவ்வாறு பேசுவார்கள் என்று கூறுகிறார்.

நான் பணக்காரனாக இருக்கிறேன் என்று தன்னைப் பற்றி எண்ணிக்கொள்வான். கொஞ்சம் பணம் இருந்தாலும், தன்னைப் பெரிய ஆளாகக் காட்டிக்கொள்வான். அதற்காக பொய்கூட சொல்வான். மிகுந்த திமிருடன் இருப்பான்.

அதிகம் படிக்காமல், தன்னை அதிகம் படித்தவனாகக் காட்டிக்கொள்வான். தன்னுடைய முன்னோர்கள் அப்படிப்பட்டவர்கள் என்று கூறிக்கொண்டு, பணிவில்லாமல் பேசுவான்.

தனக்கு நிறைய ஆள்பலம் இருக்கிறது. தனக்கு நிகர் தான்தான். தனக்கு நிகராக யாரும் இல்லை, இருக்கவும் கூடாது என்று எண்ணுவான்.

பெரிய யாகங்களைச் செய்யப் போகிறேன், கோவில் கட்டி பெரிய பூஜை செய்யப் போகிறேன் என்று சொல்வான்.

Downloaded from **www.omkaravidya.com**

இவற்றையெல்லாம் செய்யலாம், ஆனால் அஹங்காரத்துடன் இவ்வாறு சொல்லுதல் அஸுர குணமாகும்.

சிலர் செய்யாமல், வாயினால் இவ்வாறெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு என்ன வேண்டுமானாலும் பேசுகின்ற அஸுர குணம் படைத்தவர்களை, நாம் சமூகத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பொருளியல் ரீதியாக, நான் மிக இன்பமாக இருக்கப் போகிறேன் என்று சொல்கிறான்.

இவ்வாறு அறியாமையினால் ஏற்பட்ட பலவிதமான மயக்கங்களுக்கு ஆளானவர்கள் பேசுகிறார்கள். எல்லா நேரமும், அப்படி ஆக வேண்டும், இப்படி ஆக வேண்டும் என்று மனக்கோட்டை கட்டுகிறார்கள்.

இந்தப் பண்புகள் ஆன்மிக ஸாதகனிடத்தில் இருக்கக் கூடாது. எப்பொழுதும் அன்பு, அமைதி, எளிமை ஆகியவையே வடிவெடுத்தவனாக அவன் இருக்க வேண்டும்.

अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः ।

प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ ।। १६ - १६ ।।

அநேகசித்தவிப்ராந்தா மோஹஜாலஸமாவ்ருதா: ।

ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேऽஶுசௌ ।। 16 - 16 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

அநேக-சித்த-விப்ராந்தா: - பலவிதமான எண்ணங்களால் குழம்பியவராய், **மோஹ-ஜால-ஸமாவ்ருதா:** - மதிமயக்கம் (பகுத்தறிவின்மை) என்னும் வலையால் மூடப் பெற்றவராய், **காமபோகேஷு** - புலனின்ப அனுபவங்களில், **ப்ரஸக்தா:** - பற்றுள்ளவராய், **அஶுசௌ** - அசுத்தமான, **நரகே** - நரகத்தில், **பதந்தி** - இவர்கள் வீழ்கிறார்கள்.

பொழிப்புரை

இவர்கள் பலவிதமான எண்ணங்களால் குழம்பியவர்களாக, மதிமயக்கம் என்னும் வலையால் மூடப் பெற்றவர்களாக, புலனின்ப அனுபவங்களில் பற்றுள்ளவர்களாக, அசுத்தமான நரகத்தில் வீழ்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அஸுர குணம் உடையவர்கள் என்ன பலனை அடைகிறார்கள் என்பதைக் கூறுகிறார்.

அவர்கள் மனதில் எப்பொழுதும் பலவிதமான சிந்தனைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மனதிற்குள் ஏகப்பட்ட பேராசைகள், எதிர்பார்ப்புகள், குழப்பங்கள் இருக்கின்றன.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (திருக்குறள் -337)

வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் மனதில் ஆசைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் பஞ்சமில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

கோடிக்கும் அதிகமான எண்ணங்கள், மனதில் ஓடிக் கொண்டிருக்கின்றன என்கிறார் திருவள்ளுவர்.

எதனால் நாம் பிறந்திருக்கிறோம் என்பது நமக்குத் தெரியாது. நிச்சயம் ஒரு நாள் இறக்கப் போகிறோம். அப்படி இறக்கும்போது, எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்து மகிழ்ச்சியுடன் நிறைவு செய்யப் போகிறோம் என்பதை உணர்ந்து, அப்படி வாழ்ந்து நிறைவு செய்ய வேண்டும்.

அஸுர குணம் படைத்தவர்கள், ஏராளமான விஷயங்களால் குழம்பிப் போயிருக்கிறார்கள். அதாவது, அவர்கள் விஷயங்களுக்கு அடிமையாகிவிடுகிறார்கள்.

அவிவேகம், பகுத்தறிவின்மையாகிய வலையில் அவர்கள் சிக்கிக் கொள்கிறார்கள்.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர் (திருக்குறள் -348)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

உண்மையை உணர்ந்தவர்கள், நன்கு பற்றற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். உண்மையை உணராதவர்கள் மயங்கி, வெளியில் வர முடியாமல் மாட்டிக்கொள்கிறார்கள்.

அமைதியாக அமர்ந்து, ஜபமோ த்யானமோ அவர்களால் செய்ய முடியாது. வாய் வழியாகத்தானே உணவை உட்கொள்ள முடியும், வேறு வழியில்லையே! அதுபோல, மன அமைதிக்கு, ஆன்மிக வாழ்க்கை ஒன்றுதான் வழி.

Downloaded from **www.omkaravidya.com**

வாழ்க்கையில் மற்ற விஷயங்களில் அவர்களுக்கு ஈடுபாடு இருக்கிறது. ஆனால், மன அமைதிக்காக முயற்சிக்க வேண்டும் என்பதில் ஈடுபாடு வருவதில்லை. அதன் பயனைத் தெரிந்துகொண்டு, ஈடுபாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

Fake it and make it - செயற்கையாகவாவது செய்து, அதனை இயல்பாக மாற்றிக் கொள்ள வேண்டும். பிடிக்காவிட்டாலும் முயன்று செய்ய வேண்டும்.

நமக்குப் பிடித்திருந்தாலும் பிடிக்காவிட்டாலும் உடற்பயிற்சி செய்தாக வேண்டும், உணவு அருந்தித்தான் ஆக வேண்டும். உடலுக்கு சக்தியைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். எப்படி உடல்நலத்திற்கு இது முக்கியம் என்று நினைக்கிறோமோ, அதுபோல மனநலத்தின்பொருட்டு, ஆன்மிக ஸாதனைகளைச் செய்துதான் ஆக வேண்டும்.

அஸுர குணம் படைத்தவர்கள் வயதானாலும் அங்குமிங்கும் சுற்றி புலனின்பங்களை அனுபவிப்பதிலேயே ஆழ்ந்திருப்பார்கள். ஆழ்ந்த பற்றினால் வாழ்க்கையின்

இறுதிக்காலத்தில் துன்பத்தில் உழல்வார்கள். நரகத்திற்குச் சென்று, மிகுந்த துன்பத்தை அனுபவிப்பார்கள்.

அஸுர குணம் படைத்தவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற்றத்திற்குப் பதிலாக, பிற்போக்கு நிலைதான் ஏற்படும்.

Downloaded from **www.omkaravidya.com**

आत्मसम्भाविताः स्तब्धा धनमानमदान्विताः ।

यजन्ते नामयज्ञैस्ते दम्भेनाविधिपूर्वकम् ।। १६ - १७ ।।

ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா தநமாநமதாந்விதா: ।
யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம் ।। 16 - 17 ।।

பதவுரை

ஆத்மஸம்பாவிதா: - தன்னைத் தானே உயர்வாக எண்ணிக்கொள்பவர்களும், **ஸ்தப்தா:** - பணிவு அற்றவர்களும், **தந-மாந-மத-அந்விதா:** - செல்வம், தற்பெருமை (தற்புகழ்ச்சி), செருக்குடன் கூடியவர்களும் ஆன, **தே** - அவர்கள், **தம்பேந** - டம்பத்துடன், **நாமயஜ்ஞை:** - பெயர் மட்டிலுமான யஜ்ஞங்களால், **அவிதிபூர்வகம்** - விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் (சாஸ்த்ர விதிகளை மீறி), **யஜந்தே** - வழிபடுகிறார்கள்.

பொழிப்புரை

தங்களைத் தாங்களே உயர்வாக எண்ணிக்கொள்பவர்கள், பணிவு அற்றவர்கள், செல்வம், தற்பெருமை, செருக்கு ஆகியவற்றுடன் கூடியவர்களான அவர்கள் டம்பத்துடன், சாஸ்த்ர விதிகளை முறைப்படி கடைப்பிடிக்காமல், பெயருக்கு வழிபாடுகளைச் செய்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அஸுர இயல்பு படைத்தவர்கள் எவ்வாறு வழிபாடுகளைச் செய்வார்கள் என்பதை இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

சில அஸுரர்கள் வைதிக கர்மங்களைச் செய்ததாக புராணங்களில் படிக்கிறோம். அப்படியிருக்கும்போது, அவர்கள் எப்படி நரகத்திற்குச் செல்வார்கள் என்ற கேள்வி எழலாம்.

அஸுர இயல்பு படைத்தவர்கள் தங்களைப் பற்றிப் பெரிதாக எண்ணிக்கொள்வார்கள். இவர்கள் உண்மையான ச்ரத்தாபக்தியுடன் சமூகத்திற்கு சேவை செய்ய மாட்டார்கள்.

ஒரு காலத்தில் ஒட்டுமொத்த சமூகமே, தர்மத்தில் மிகுந்த ருசியுடன் இருந்தது. அதில் சிலர் நாங்களும் செய்கிறோம் என்று காண்பித்துக்கொள்வார்கள். ஆனால் உடல் அபிமானமும், பொருளியல் புலனின்ப நாட்டமும்தான் அவர்களின் மனங்களில் பலமாக இருக்கும்.

அவர்கள் யாரையும் வணங்க மாட்டார்கள், அவர்களிடத்தில் பணிவு என்பது இருக்காது.

பணத்தினால் வருகின்ற தற்பெருமையும் கர்வமும் இவர்களிடத்தில் இருக்கும். பெயருக்கு அவர்கள் வேள்விகள், வழிபாடுகளைச் செய்வார்கள். புகழுக்காகச் செய்வார்கள். ஆழ்ந்த ஈடுபாட்டுடன் ஒழுங்காகச் செய்ய மாட்டார்கள். பூஜை

Downloaded from **www.omkaravidya.com**

செய்கின்றவர்களைத் துன்புறுத்தி, அந்த வழிபாட்டின் மஹிமையையே கெடுத்து விடுவார்கள்.

வெளியில் தாங்கள் பெரிய புண்ய கர்மாக்களைச் செய்து வழிபடுவதாகக் காட்டிக்கொள்வார்கள். கர்மங்களில் நிறைய அங்கங்கள் இருக்கும். கோதானம் செய்ய வேண்டும் என்று சில இடங்களில் பூர்வாங்கத்தில் இருக்கும். இவர்களிடத்தில் பணம் இருந்தாலும் செய்வதற்கு மனம் வராது. குறுக்கு வழிகளைத் தேடுவார்கள்.

சடங்குகளை முறைப்படிச் செய்ய மாட்டார்கள். எவற்றையெல்லாம் வெளியில் பிறருக்கு டம்பமாகக் காட்டிக்கொள்ள முடியுமோ, அவற்றில் மட்டுமே கவனம் செலுத்துவார்கள்.

இன்று சாஸ்த்ரம் தெரியாதவர்கள் பலர், கோயில்களில் அதிகாரிகளாக பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். கோவில் வழிபாட்டு முறைகளில் தலையிடுகிறார்கள். லாப நஷ்ட நோக்கில் எல்லாவற்றையும் பார்க்கிறார்கள். இது இன்று தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இது வருத்தத்திற்குரியது.

கோயில் என்பது வருவாய் ஈட்டக்கூடிய இடமல்ல. மக்கள் நன்கு பொருளீட்டி, இறைவனுக்கு அதனை ஸமர்ப்பணம் செய்கின்ற இடம். மக்கள் காணிக்கையாக அளிக்கும் பணத்தை, நன்கு செலவு செய்து, எல்லா மக்களுக்கும் புண்யத்தை ஈட்டுவதற்கு, உதவ வேண்டிய இடம்.

Downloaded from **www.omkaravidya.com**

கோயில் சொத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் பெருகி வருகிறார்கள். இதனால் பாரத தேசத்தின் உயர்ந்த பண்புகள் காற்றில் பறக்கின்றன.

இந்த நிலை மாற வேண்டும் என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணரிடம் ப்ரார்த்தனை செய்வோம். மாறுவதற்கு நம்மாலான முயற்சிகளில் ஈடுபடுவோம்!

अहङ्कारं बलं दर्पं कामं क्रोधं च संश्रिताः ।

मामात्मपरदेहेषु प्रद्विषन्तोऽभ्यसूयकाः ।। १६ - १८ ।।

अहङ्कारम् बलम् दर्प्पम् कामम् क्रोधम् च संश्रिताः ।

मामात्मपरदेहेषू प्रत्विषन्तोऽप्यसूयकाः ।। 16 - 18 ।।

பதவுரை

அஹங்காரம் - அஹங்காரம், **பலம்** - பலம், **தர்ப்பம்** - கர்வம், **காமம்** - பேராசை, **க்ரோதம் ச** - பெருங்கோபம் முதலியவற்றுடன், **ஸம்ஸ்ரிதா:** - கூடியவர்கள், **ஆத்ம-பர-தேஹேஷு** - தனது உடலிலும் மற்றவர்களின் உடல்களிலும் உள்ள, **மாம்** - என்னை, **ப்ரத்விஷந்த:** - வெறுப்பவர்கள் (குறைகூறுபவர்கள்), **அப்யஸூயகா:** - பிறரை இகழ்பவர்கள்.

பொழிப்புரை

அஹங்காரம், பலம், கர்வம், பேராசை, பெருங்கோபம் முதலியவற்றுடன் கூடியவர்கள், தனது உடலிலும் மற்றவர்களின் உடல்களிலும் உள்ள என்னை

Downloaded from **www.omkaravidya.com**

வெறுப்பவர்களாக, குறைகூறுபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிறரையும் இகழ்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அஸுர குணங்களை இந்த ச்லோகத்துடன் நிறைவு செய்கிறார்.

அஹங்காரம் என்றால் தன்னை மிகச் சிறந்தவன் என்று எண்ணுகின்ற எண்ணம். இருக்கின்ற, இல்லாத குணங்களையெல்லாம் தன் மீது கற்பனை செய்துகொள்கின்ற, பணிவில்லாத ஒரு பண்பு.

நான் என்ற தன்னுணர்வு எல்லோரிடத்திலும் இருக்கிறது. அதனை விலக்க முடியாது. விழித்தவுடன் நமக்கு, தன்னுணர்வு வந்துவிடுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் தன்னுணர்வு இல்லை.

தன்னுணர்வு இருப்பதில் தவறில்லை. ஆனால், நான் செயல்புரிகிறேன். என்னால்தான் எல்லாம் நடக்கின்றன என்று எண்ணிக்கொள்ளக் கூடாது.

அஸுர இயல்பு படைத்தவன், பக்குவமும், ஞானமும் இல்லாததால், நான் அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்று பொய்யையும் கலந்துகூடச் சொல்வான்.

அஹங்காரமே உண்மையில் ஒரு கற்பனை. அஜ்ஞானி அதனை உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கிறான். எல்லா குறைகளுக்கும், நாம் செய்யக்கூடிய எல்லாத் தவறுகளுக்கும்

Downloaded from **www.omkaravidya.com**

இதுதான் மூல காரணம். துன்பங்கள் அதிகமாவதற்கு, இந்த அஹங்காரம்தான் காரணம். அஹங்காரம் என்பது அறியாமையின் வெளிப்பாடாகும்.

அஸுர இயல்பு படைத்தவர்கள், அஹங்காரத்தைச் சார்ந்திருக்கிறார்கள். அஹங்காரமயமாகி விடுகிறார்கள். தத்துவ ஞானம் ஏற்பட்டால்தான், அஹங்காரத்தைப் புறப்பொருளாக வேறுபடுத்திப் பார்க்க முடியும்.

பலம் என்றால் உடலில் இருக்கின்ற பலம், பணபலம், ஆள்பலம் முதலியவை. இன்னொருவர் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற இயல்பையும் அது குறிக்கும். ஆசை, பற்று ஆகியவற்றுடன் கூடிய பலம் இது. நமக்கு மேல் யாரும் இருக்கக்கூடாது என்று நினைப்பார்கள்.

தர்ப்பம் என்றால் அளவுக்கு மீறிய திமிர். மற்றவர்களெல்லாம் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும், நான் சட்டத்திற்குக் கட்டுப்பட மாட்டேன் என்ற எண்ணம். தர்மத்தை மீறுகின்ற தன்மையாகிய இது மனதில் இருக்கக்கூடிய ஒரு குற்றமாகும்.

இந்தப் பண்புள்ளவன், தர்மத்தை மீறி, வாழ்க்கையின் குறிக்கோளை அடையாமல், பிறவியை வீணாக்கி விடுவான்.

அஹங்காரம் தடித்துப்போகும்போது தர்ப்பமாக, அதாவது தர்மத்தை மீறுகின்ற தன்மையாக மாறுகிறது என்று ஓர் உரையாசிரியர் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

காமம் என்றால் இனக்கவர்ச்சி. இதில் தர்மமாக இல்லாமல், அளவுக்கு மீறிச் செல்லுதல். இதற்குத்தான் கணவன்-மனைவி என்று திருமண வாழ்க்கை வகுக்கப்பட்டிருக்கிறது. அதை மீறிச் செல்லுதல் காமம் எனப்படும்.

க்ரோதம் என்றால் நாம் செய்கின்ற செயலுக்கு இடைஞ்சல் வரும்போது, நாம் விரும்பியது கிடைக்காதபோது எரிந்து விழுதல், வெறுப்புடன் பேசுதல்.

ச்லோகத்தில் உள்ள **ச** என்பது விட்டுப்போன பிற குறைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

இந்த அஸுர இயல்பு படைத்தவனிடத்திலும் பகவான் இருக்கிறார். இறைவன் எல்லோருடைய உள்ளங்களிலும் இருக்கிறார்.

அஸுர இயல்பு படைத்தவர்கள், தன்னுடைய உடலிலும் பிறருடைய உடல்களிலும் இருக்கின்ற இறைவனை வெறுக்கிறார்கள்.

ஒரு மனிதனை வெறுக்கிறோம் என்று சொல்லும்போது, அவனுக்குள் இருக்கின்ற இறைவனை வெறுக்கிறோம் என்று பொருள். வெறுத்தல் என்பது சாஸ்த்ரங்களை மீறி செயல்படுவதைக் குறிக்கிறது.

இறைவனுடைய ஆணையை மீறி நடப்பதே வெறுப்பதாகும். நம் அனைவருடைய உள்ளங்களிலும் இறைவன்

Downloaded from **www.omkaravidya.com**

மனஸாக்ஷியாக இருக்கிறார். இறைவனே சாஸ்த்ர வடிவமாகவும் இருக்கிறார்.

அஸுர இயல்பு படைத்தவர்கள் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளவற்றைத் தெரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை, சாஸ்த்ரத்தின் உபதேசங்களை மீறுகிறார்கள்.

திருக்குறள் முதலான சாஸ்த்ரங்கள் வாழ்க்கைக்கு உதவாது என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு மன அமைதி எங்கே கிடைக்கப் போகிறது?

சாஸ்த்ரங்களைக் கற்பதால் உடனே பயன் கிடைக்காது. ஆனால் காலப்போக்கில் நிச்சயமாகப் பலன் கிடைக்கும். அக்ரமம், அந்யாயம் செய்தால், உடனே இன்பம் கிடைக்கும். ஆனால் பிற்காலத்தில் பெரிய துன்பம் வரும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

தாற்காலிக இன்பத்திற்குத்தான் அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

அது மட்டுமல்ல, நல்ல வழியில் செல்பவர்களைப் பொறுக்க முடியாமல் குறைகூறுவார்கள். அவர்களுடைய நல்ல பண்புகளையே மோசமாகத் திரித்துச் சொல்வார்கள், பொய்யைப் பரப்புவார்கள்.

तानहं द्विषतः क्रूरान्संसारेषु नराधमान् ।

क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ।। १६ - १९ ।।

Downloaded from **www.omkaravidya.com**

தாநஹம் த்விஷத: க்ரூராந்ஸம்ஸாரேஷு நராதமாந் ।
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு ।। 16 - 19 ।।

பதவுரை

த்விஷத: - (அனைவருள்ளும் இருக்கின்ற பரம்பொருளை அறியாமல்) வெறுப்பவர்களும், **க்ரூராந்** - கொடூரமானவர்களும், **அஶுபாந்** - பாப கார்யங்களைச் செய்பவர்களும், **நர-அதமாந்** - மனிதர்களில் கடையர்களும் ஆன, **தாந்** - அவர்களை, **ஸம்ஸாரேஷு** - பிறந்து இறந்து உழலும், **ஆஸுரீஷு** - அஸுர, **யோநிஷு ஏவ** - பிறவிகளிலேயே, **அஜஸ்ரம்** - மீண்டும், மீண்டும், **அஹம்** - நான், **க்ஷிபாமி** - தள்ளுகிறேன்.

பொழிப்புரை

அனைவருள்ளும் இருக்கின்ற பரம்பொருளை அறியாமல் வெறுப்பவர்களும், கொடூரமானவர்களும், பாப காரியங்களைச் செய்பவர்களும், மனிதர்களுள் கடையர்களும் ஆன அவர்களை, பிறந்து இறந்து உழலும் அஸுர பிறவிகளிலேயே மீண்டும் மீண்டும் நான் தள்ளுகிறேன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அஸுர குணம் படைத்தவர்கள் அடைகின்ற பலனைக் கூறுகிறார்.

பகவான் விருப்பு வெறுப்பு அற்றவர். நாம் செய்கின்ற புண்ய பாபங்களுக்கேற்ற பலன்களைக் கொடுக்கிறார். அவர்

Downloaded from **www.omkaravidya.com**

நமக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். அதனை நாம் தவறாகப் பயன்படுத்தினால், இயற்கையின் நியதியை வழிநடத்தக்கூடிய இறைவன், அந்த நியதிப்படி நமக்கு பலனைக் கொடுப்பார்.

அஸுர இயல்பு படைத்தவர்கள், நல்ல வழியில் செல்வதற்கு நேர்மாறான வழியில் செல்லக் கூடியவர்கள்.

வாழ்க்கையின் உண்மையை அறியாமல், எல்லோருக்குள்ளும் இருக்கின்ற இறைவனை அவர்கள் வெறுக்கிறார்கள்.

எல்லோரையும் இகழ்ந்து பேசி, எல்லோரிடத்திலும் கடுமையாக நடந்துகொள்கிறார்கள். விலங்கு இயல்புடன் நடந்துகொள்கின்ற இவர்கள், மக்களுள் கீழானவர்கள். அவர்கள் தங்களது செயல்களால் மிகவும் தாழ்ந்து போகிறார்கள்.

மனித உடல் கிடைத்தும்கூட, அதனை அவர்கள் தாழ்த்திக் கொள்கிறார்கள்.

அத்தகையவர்களை, பகவான் மிகவும் துன்பம் நிறைந்த தன்மை உடைய உடல்களில், கீழான பிறவிகளில், கொடுமையான காரியங்களைச் செய்யக்கூடிய உடல்களில் தள்ளுகிறார்.

மனித உடலில் வாழ்ந்துகொண்டு, மிருகத்தனமாக நடந்துகொண்டதால், மிருக உடலுக்குள் அவர்களை வாழும்படி செய்துவிடுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்தப் பிறவிப் பெருஞ்சுழலில் கொடுஞ்செயல்களைச் செய்யக்கூடிய மிருகங்களின் உடல்களில் அவர்கள் வாழும்படி செய்கிறார். அது அவர்களுக்கும் துன்பம், மற்றவர்களுக்கும் துன்பம்.

கடவுளுக்கு கருணை இல்லையா? என்று கேட்கக் கூடாது. கடவுள் கொடுத்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால், அதற்குரிய பலன்களை நாம் அனுபவிக்கத்தான் வேண்டும்.

தவறு செய்பவர்களுக்கு அரசாங்கம் தண்டனை கொடுக்கவில்லையெனில், நல்லவன் எப்படி வாழ முடியும்?

இயற்கையின் நியதியைப் புரிந்துகொண்டு, இந்தக் கருத்தை நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

மனித உடலில் வாழும்போது, தீய குணங்களை விட்டு, நல்ல குணங்களைக் கடைப்பிடித்து, சமூகத்திற்கு நன்மை செய்து, வாழ்நாளில் நல்லனவற்றைச் செய்துவிட்டு, உடலை விட்டுக் கிளம்ப வேண்டும்.

எவர்கள் தெய்வீகமான குணங்களைக் கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களுக்கு பகவான் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அளிக்கிறார். பகவான் அவர்களுக்கு உயர்ந்த உடலைக் கொடுக்கிறார் என்று கூட சொல்வதில்லை, பிறவியே இல்லாமல் செய்துவிடுகிறார் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

எதை முன்னிட்டு எந்தச் செயலைச் செய்கிறோமோ, அந்த வினைக்கேற்ற விளைவை நாம் நுகர்ந்துதான் ஆக வேண்டும்.

आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि ।

मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ।। १६ - २० ।।

ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி ।
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம்
கதிம் ।। 16 - 20 ।।

பதவுரை

ஹே கௌந்தேய - ஓ அர்ஜுனா! **ஆஸுரீம்** - அஸுர (கீழான), **யோநிம்** - யோனியை (உடலை), **ஆபந்நா:** - அடைந்தவர்கள், **ஜந்மநி ஜந்மநி** - ஒவ்வொரு பிறப்பிலும், **மூடா:** - விவேகம் அற்றவராய், **மாம்** - என்னை, **அப்ராப்ய ஏவ** - அடையாமலேயே, **தத:** - அதைவிட, **அதமாம்** - கீழான, **கதிம்** - கதியை, **யாந்தி** - அடைகின்றனர்.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! கீழான உடலை அடைந்தவர்கள், ஒவ்வொரு பிறப்பிலும் விவேகம் அற்றவராய், என்னை அடையாமலேயே, அதை விட கீழான கதியை அடைகின்றனர்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், கீழான உடல்களில் பிறந்தவர்கள் மேலும் அடையும் கதியைப் பற்றிக் கூறுகிறார்.

அஸுர குணத்துடன் மனித உடல்களில் வாழ்ந்த உயிர்கள், கீழான, மிருக உடல்களை எடுத்து, பிறரைத் துன்புறுத்தக்கூடிய உடல்களில் வாழ்கின்றனர் என்று கூறினார். அத்தகைய பலனைத் தர வேண்டிய நிர்பந்தத்தை அவர்கள் ஏற்படுத்துகிறார்கள்.

நாம் வேலை செய்யும் இடத்தில் சரியானபடி வேலை செய்தால், நமக்குப் பதவி உயர்வு கிடைக்கும். சரியாக வேலை செய்யவில்லை என்றால் கீழான நிலைதான் கிடைக்கும். அதைப் போன்று இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால், அதற்குரிய செயல்களை நாம் செய்ய வேண்டும். இல்லையென்றால், வாழ்வின் பிற்பகுதியில் வருந்த வேண்டியிருக்கும்.

அறிவைப் பயன்படுத்தி, பெரியோர்கள் சொல்படி கேட்டு வாழ முயற்சிக்க வேண்டும்.

கொடூரமான மிருக உடல்களை எடுத்த அந்த அஸுர பிறவிகள், மனித உடலில் அறிவையும் ஒழுக்கத்தையும் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தினால், இன்பமே வடிவமாகிய இறைவனை அடையாமல், கீழான பிறவிகளையே மீண்டும் அடைகிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

அவர்களுக்கு இறைவனை அடைய வேண்டும் என்ற நோக்கமே இருப்பதில்லை. இறைவனை அடைவதும் நிலையான பேரின்பத்தை அடைவதும் ஒன்றே.

நிலையான இன்பத்தை அடைவதற்கான வழியை, மஹான்கள் சாஸ்த்ரங்களின் வாயிலாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் முயன்று தோற்றாலும் பரவாயில்லை. ஆனால், அவர்கள் அதற்கு முயற்சி செய்யவே மாட்டார்கள்.

எப்பொழுதும் பொருள், புலனின்பங்களில் மூழ்கி, தீய குணங்களை வளர்த்த காரணத்தால் அவர்களுக்கு ஒரு நாளும் நிம்மதி, அமைதி என்பது கிடைக்கவே கிடைக்காது.

ஒவ்வொரு பிறவியிலும் இறைவனை அடையாமலேயே என்றால், மனித உடலில் வாழ்ந்து, இறைவனை, பேரின்பத்தை அடையக்கூடிய தெய்வீக குணங்களைப் பின்பற்றாமல், பிறவியற்ற நிலையை அடையாமல், மீண்டும் மீண்டும் கீழான கதியை அடைகிறார்கள் என்று பொருள். மேலும் கீழான பிறவியையே தொடர்ந்து எடுக்கிறார்கள். இதன் மூலம் பகவான் எச்சரிக்கை செய்கிறார்.

இந்த உடலில் நாம் வாழும்போதே பயனுள்ள வகையில் வாழ வேண்டும். இதனை உணர்த்துவதற்காக, பகவான் இவ்வாறு ஆழமாக இங்கு உபதேசிக்கிறார்.

அஸுர குணம் எல்லா வகையிலும் நம்முடைய அமைதியைப் பறிக்கக் கூடியது. அது எல்லோருடைய அமைதி, ஆனந்தத்தையும் நீக்கிவிடும்.

Downloaded from **www.omkaravidya.com**

உயர்ந்த மேலான வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கின்ற இந்தத் தீய பண்புகளை நிச்சயமாக நாம் விட்டுவிட வேண்டும் என்பதில்தான் இங்கு தாத்பர்யம்.

இங்கு பகவான் கூறியிருப்பவை அனைத்தும் உண்மைதான், பொய் கிடையாது. இதில் கருத்தைச் செலுத்துவதைக்காட்டிலும், அஸுர குணத்தை விட்டு, தெய்வீக குணத்தைக் கடைப்பிடிப்பதில் நாம் கருத்தைச் செலுத்த வேண்டும்.

நரக வ்யாதிக்கு உள்ள வைத்யத்தை, மருந்து கிடைக்கக்கூடிய இந்த இடத்திலேயே செய்யவில்லை என்று சொன்னால், மருந்து கிடைக்காத இடத்தில் ஒரு நோயாளி என்ன செய்ய முடியும்?

இந்த உலகில்தான், பிறவிப்பிணிக்கு மருந்து இருக்கிறது. இந்த மருந்தை இங்கு உண்ணவில்லையென்றால், வேறு எந்தப் பிறவியிலும் இதற்கு மருந்து கிடையாது.

மனித உடல் வாழ்க்கையில்தான், இதற்கு மருந்து இருக்கிறது.

முதுமை, நோய் முதலியவை வருவதற்கு முன்னால், இளமையிலேயே இந்த உடலில் இந்த்ரியங்களில் ஆற்றல் நன்றாக இருக்கும்போதே, நம்முடைய ஆத்மக்ஷேமத்திற்குரிய வழியை முயற்சித்து அடைய வேண்டும். இல்லையெனில், வீடு தீப்பற்றி எரிகிறபோது, கிணறு வெட்டக் கிளம்புவதுபோல் ஆகிவிடும்.

கண் கெட்ட பிறகு ஸூர்ய நமஸ்காரம் செய்து என்ன பயன்?

Downloaded from **www.omkaravidya.com**

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।

कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ।। १६ - २१ ।।

त்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஶநமாத்மந: ।

காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மாதேதத்த்ரயம்

த்யஜேத் ।। 16 - 21 ।।

பதவுரை

நரகஸ்ய - நரகத்தின், **இதம்** - இந்த, **த்வாரம்** - வாயில்கள், **ஆத்மந:** - தன்னை (உள்ளத்தை), **நாஶநம்** - வீணடிக்கின்ற, **காம:** - பேராசை, **க்ரோத:** - பெருங்கோபம், **ததா** - அவ்வாறே, **லோப:** - பொருட்பற்று, **(இதி) த்ரிவிதம்** - (என்று) மூன்று வகைப்படும். **தஸ்மாத்** - ஆதலால், **ஏதத்** - இந்த, **த்ரயம்** - மூன்றையும், **த்யஜேத்** - விட்டுவிட வேண்டும்.

பொழிப்புரை

நரகத்தின் வாயில்கள் மூன்று - அவை பேராசை, பெருங்கோபம், பொருட்பற்று. அவை உள்ளத்தை வீணடித்து, மனிதனின் வாழ்க்கையை அழிக்கக் கூடியவை. ஆகவே, இந்த மூன்றையும் விட்டுவிட வேண்டும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த அத்யாயத்தின் ஸாரத்தை இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

எல்லா தீய குணங்களுக்கும் மூல காரணத்தை இங்கு கூறுகிறார்.

இந்த மூன்று குணங்கள், துன்பத்திற்குக் காரணமாக, நரகத்திற்கு வாயில்களாக இருக்கின்றன. அது மட்டுமல்ல, அவை மனதை வீணடிக்கக் கூடியவை.

மனித உடலில்தான் உள்ளம் நன்கு செயல்படுகிறது. உள்ளத்தைக்கொண்டு, உயர்ந்த எண்ணங்களை வளர்த்து, உலகிற்கு நன்மை செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு, உயிருக்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பை வீணடிக்கிறோம்.

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?

என்று மஹாகவி பாரதியார் பாடுகிறார்.

இறைவன் உள்ளம், உடல், மனிதர்கள், சாஸ்த்ரங்கள், நல்ல வாய்ப்புகள் எல்லாவற்றையும் அருளியிருக்கிறார். இந்த மூன்று தீய பண்புகளால் மனிதன் மனதை வீணடித்து, வாழ்க்கையையே அழித்துக்கொள்கிறான்.

துன்பமில்லாத, உயர்ந்த, மேலான எண்ணங்களுடன் கூடிய மனம் கிடைத்திருக்கிறது, அதனைக் கெடுத்துவிடக் கூடாது.

உயிர்களை, மீண்டும் மீண்டும் துன்பத்தைத் தரக்கூடிய உடல்களில் புகுத்தக் கூடியவையாக, பேராசை, பெருங்கோபம், பொருட்பற்று - இந்த மூன்று குணங்கள் இருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

லோப: என்றால் பொருட்பற்று. எல்லோருடையதையும் தானே எடுத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று ஆசையை மூன்றுவிதமாகக் கூறுவதுண்டு. காமம் நிறைவேறினால், அது லோபமாகிவிடும். நிறைவேறவில்லையெனில் க்ரோதமாகிவிடும்.

இந்த மூன்றிலும் காமம்தான் மிக முக்கியமானது. ஆசை நிறைவேறிவிட்டால், அதனை தக்கவைத்துக் கொள்ள விரும்புவோம். பதவியை அடைந்தவர், அதிலேயே தொடர்ந்து இருக்க விரும்புகிறார், அது லோபம். அடுத்தவருடைய பதவிகளும் தனக்கு வேண்டும் என்று நினைக்கிறார்.

ஆசை நிறைவேறவில்லையெனில், கடுமையாகப் பேசுவது, எதிர்ப்பவரை அழிக்கவும் முற்படுவது என கோபமாக வடிவெடுக்கிறது. இவை மூன்றாவது அத்யாயத்தில் கூறப்பட்டன.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: ।
மஹாஶனோ மஹாபாப்மா வித்யேநமிஹ வைரிணம் ।। 3 - 37

ரஜோ குணத்தினின்று தோன்றிய இந்த ஆசைதான், இந்தக் கோபம்தான், பெரும்பாபத்தைச் செய்யத் தூண்டுவது, எவ்வளவு அனுபவித்தாலும் நிறையாத தன்மை உடையது, இதனை எதிரி என்று அறிந்துகொள் என்று கூறினார் பகவான்.

ஆன்மிக வாழ்வில் முன்னேறி, உயர்ந்த அமைதியையும் ஆனந்தத்தையும் உணர விரும்புபவன், பேராசை,

Downloaded from **www.omkaravidya.com**

பெருங்கோபம், பொருட்பற்று ஆகிய இந்த மூன்றையும் நன்றாக விட்டுவிட வேண்டும்.

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (திருக்குறள் - 360)

பேராசை, பெருங்கோபம், அறியாமை ஆகிய மூன்றும் பெயரளவிற்குக்கூட இல்லாமல் நீங்குமானால், பிறவி நோய் நீங்கும் என்பது திருவள்ளுவர் வாக்கு.

ஆசை, கோபம், லோபம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஸத்ஸங்கத்தில் இருந்து, இறைவனிடத்தில் ப்ரார்த்தனை செய்ய வேண்டும்.

தீய குணங்கள் இருப்பவர்களுடன் நாம் சேரக்கூடாது. நல்ல குணங்கள் நிறைந்தவர்களுடன் பழக வேண்டும், அதன் மூலம்தான் இவற்றை விட முடியும்.

एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः ।
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ।। १६-२२ ।।

ஏதைர்விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ்த்ரிபிர்நர: ।
ஆசரத்யாத்மந: ஶ்ரேயஸ்ததோ யாதி பராம் கதிம் ।। 16 - 22 ।।

பதவுரை

ஹே கௌந்தேய - ஓ அர்ஜுனா! **தமோத்வாரை:** - துன்பத்திற்கு வாயில்களான, **ஏதை:** - இந்த, **த்ரிபி:** - மூன்றிலிருந்து, **விமுக்த:** - விடுபட்ட, **நர:** - மனிதன், **ஆத்மந:** - தனக்கு, **ஶ்ரேய:** -

Downloaded from **www.omkaravidya.com**

நன்மையானவற்றை, **ஆசரதி** - கடைப்பிடிக்கிறான். **தத:** - அதனால், **பராம்** - மேலான, **கதிம்** - நிலையை (முக்தியை), **யாதி** - அடைகிறான்.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! துன்பத்திற்கு வாயில்களான, இந்த மூன்றிலிருந்தும் விடுபட்ட மனிதன், தனக்கு நன்மையானவற்றைக் கடைப்பிடிக்கிறான். அதனால் மேலான நிலையை அடைகிறான், முக்தியை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மூன்று தீய குணங்களிலிருந்தும் விடுபட்டவன் அடைகின்ற நிலையை இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

உயிர்களாகிய நாம், தாற்காலிகமாக மனித உடலில் வாழ்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்பதை மறக்கவே கூடாது.

நரகத்திற்கு வாயில்களாக விளங்கக் கூடிய இந்த மூன்று தீய குணங்களையும் தெய்வீக குணங்களால் வெற்றிகொள்ள வேண்டும்.

தமோத்வாரை: என்றால் துன்பம், குழப்பம், மயக்கம் ஆகியவற்றை உண்டுபண்ணக்கூடிய பேராசை, பெருங்கோபம், பொருட்பற்று என்று பொருள்.

நல்லதைச் செய்துகொண்டே இருந்தால், தீயவை தானாக விலகிச் சென்றுவிடும். தீயதை விலக்குவதில்

Downloaded from **www.omkaravidya.com**

கவனம் செலுத்துவதைக்காட்டிலும், உயர்ந்தவற்றை நாம் கடைப்பிடிக்க முயல வேண்டும்.

வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ளுங்கள் என்று மருத்துவர்கள்கூட கூறுகிறார்கள். நம் முன்னோர்கள் கற்றுத் தந்த வழியில் காலை முதல் இரவு வரை வாழ்ந்தாலே, பல விஷயங்கள் சரியாகிவிடும். அதற்கு முயற்சிக்க வேண்டும்.

வாழ்க்கையின் குறிக்கோள் என்ன, அதன் முக்கியத்துவம் என்ன என்பது புரிந்தால்தான் இதில் ஈடுபட முடியும்.

ஶ்ரேய: என்பது அமைதி, ஆனந்தம், எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கின்ற உணர்வு ஆகியவற்றைக் குறிக்கும். நல்ல குணங்களைக் கடைப்பிடித்தால்தான் அது வரும். நமக்குள்ளிருந்து ஒரு சக்தி நம்மைப் பாதுகாக்கிறது என்பதை நாம் நன்றாக உணர்வோம்.

ஶ்ரேயஸ் என்பது கடவுளை வழிபடுதல், நல்லோருடன் சேர்ந்துவாழ்தல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றைக் குறிக்கும்.

தீயவற்றிலிருந்து விலகி, வேதங்களில் தனக்கும் சமூகத்திற்கும் எது நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அதனைக் கடைப்பிடிப்பவன், இந்த உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே மேலான கதியாகிய மோக்ஷத்தை உணர்கிறான், உயர்ந்த நன்மையை அடைகிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

மோக்ஷமே கிடைக்கும் என்று சொல்லும்போது, இந்த உலக வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (திருக்குறள் - 31)

அறத்தைக் கடைப்பிடித்தால் மோக்ஷம் கிடைக்கும், அத்துடன் இந்த வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் கிடைக்கும் என்பது திருவள்ளுவர் வாக்கு.

यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।

न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ।। १६ - २३ ।।

यः शास्त्रविधिमुत्सृज्य वर्त्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ।। 16 - 23 ।।

பதவுரை

यः - எவன், **कामकारतः** - ஆசைக்கு அடிமையாகி (மனம் போன போக்கில்), **शास्त्रविधिम்** - சாஸ்த்ர விதியை, **उत्सृज्य** - விட்டுவிட்டு, **वर्त्तते** - நடக்கிறானோ, **सः** - அவன், **सिद्धिम்** - மனத்தூய்மையை, **न अवाप्नोति** - பெறுவதில்லை, **न सुखम்** - இன்பமும் இல்லை, **न परां** - மேலான, **गतिम்** - நிலையும் இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

எவன் ஆசைக்கு அடிமையாகி, மனம் போன போக்கில், சாஸ்த்ர விதியை மீறி நடக்கிறானோ, அவன் மனத்தூய்மையைப் பெறுவதில்லை. அவனுக்கு இன்பமோ, மேலான நிலையோ கிடைப்பதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், சாஸ்த்ர விதிகளை மீறி, தன் விருப்பப்படி நடந்துகொள்பவன் என்ன கதியை அடைகிறான் என்பதைக் கூறுகிறார்.

சாஸ்த்ர விதியை மீறக் கூடாது. அவ்வாறு மீறினால், வாழ்க்கை இன்பமாக இருக்காது. சாஸ்த்ரத்தைக் கடைப்பிடித்தால், வாழ்க்கையில் நிலையான அமைதியை நாம் உணர முடியும்.

கர்த்தவ்ய-அகர்த்தவ்ய-ஜ்ஞாநகாரணம் ஶாஸ்த்ரம் ।

எண்ணங்கள், சொற்கள், செயல்களில், எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதைப் பற்றிய அறிவை சாஸ்த்ரங்கள் நமக்குக் கூறுகின்றன.

தமிழில் ஆசார கோவை என்ற நூல் இது பற்றி நன்றாகக் கூறுகிறது. ஸாமான்ய தர்மம், விசேஷ தர்மம் எல்லாவற்றிலும் சாஸ்த்ரம்தான் நமக்கு ப்ரமாணம் - அறிவைத் தரும் கருவி.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிமுறையை சாஸ்த்ரம்தான் நமக்கு உபதேசிக்கிறது. தமிழில் திருக்குறள்

Downloaded from **www.omkaravidya.com**

போன்ற நூல்களைக் கற்று, எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

சாஸ்த்ர விதிகளைப் பொருட்படுத்தாமல், மனம் போனபடி, ஆசையின் தூண்டுதலால் எவன் செயல்படுகிறானோ, அவன் ஸித்தியை அடைவதில்லை. இந்த இடத்தில் **ஸித்தி:** என்றால், வாழ்க்கையின் மேலான குறிக்கோளாகிய அமைதியான ஆனந்தத்தை உணர்வதற்குரிய மனத்தூய்மை என்று பொருள். அவன் உள்ளத் தூய்மையை அடைய மாட்டான் என்று அர்த்தம்.

இந்த உலகியல் புலனின்பங்களையும் அவனால் நிம்மதியாக அனுபவிக்க முடியாது. ஸ்வர்கம் முதலான மேலான உலகங்களோ அல்லது முக்தியோ அவனுக்குக் கிடைக்காது.

முன்பு மூன்று தீய குணங்களைக் கூறினாலும், அதில் மிக முக்கியம் காமம் என்று இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. இனக்கவர்ச்சி அல்லது பாலுணர்ச்சியால் மனிதர்கள் செய்யக்கூடிய தவறுகளுக்கு எல்லையே இல்லை.

அனைத்துவிதமான ஆசைகளையும் இங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சாஸ்த்ரப்படி வாழ வேண்டும் என்ற ஆசை நல்லது. அதனை மீறி, மனம் போன போக்கில் செய்வதுதான் தவறு.

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।

ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ।। १६ - २४ ।।

Downloaded from **www.omkaravidya.com**

தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்த்திதௌ ।
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்த்து-
மிஹார்ஹஸி ।। 16 - 24 ।।

பதவுரை

தஸ்மாத் - எனவே, **கார்ய-அகார்ய-வ்யவஸ்த்திதௌ** - செய்யத் தக்கது எது, தகாதது எது என்பதை முடிவு செய்வதில், **தே** - உனக்கு, **ஶாஸ்த்ரம்** - சாஸ்த்ரமே, **ப்ரமாணம்** - ப்ரமாணம். **ஶாஸ்த்ர-விதான-உக்தம்** - சாஸ்த்ர விதிகளால் கூறப்பட்ட, **கர்ம** - நெறியை, **ஜ்ஞாத்வா** - அறிந்து, **இஹ** - இவ்வுலக வாழ்க்கையில், **கர்த்தும்** - கடமையை ஆற்ற, **அர்ஹஸி** - தகுதி உடையவனாக இருக்கிறாய்.

பொழிப்புரை

எனவே, செய்யத் தக்கது எது, தகாதது எது என்பதை முடிவு செய்வதில், சாஸ்த்ரமே உனக்கு ப்ரமாணம். சாஸ்த்ர விதிகளால் கூறப்பட்ட நெறியை அறிந்து, இவ்வுலக வாழ்க்கையில் கடமையை ஆற்றுவதற்குத் தகுதி உடையவனாக இருக்கிறாய்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார்.

எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற விஷயத்தில் நமக்கு அறிவைக் கொடுப்பவை தர்ம

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ரங்கள். அவற்றில் என்ன கூறப்பட்டுள்ளதோ, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஸத்யம் வத। தர்மம் சர । ... ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம் ।
தர்மாந்ந ப்ரமதிதவ்யம் । (தைத்திரீய உபநிஷதம் - ஶீக்ஷாவல்லீ)

என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. தர்மத்தை விட்டு ஒருபொழுதும் விலகக்கூடாது.

இடம், பொருள், ஏவலைப் பொருத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்ற அறிவை, சாஸ்த்ரம்தான் நமக்குக் கொடுக்கிறது.

இந்த நாட்டில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை இந்த நாட்டின் சட்டதிட்டங்கள் கூறுகின்றன. எந்த நாட்டிற்குச் சென்றாலும், அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நாம் செயல்பட முடியும்.

அதுபோன்று, ஸநாதன தர்மத்தின் வேத சாஸ்த்ரங்கள்தான் நமக்கு ப்ரமாணம். நாம் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும், எவற்றைச் செய்யக்கூடாது என்பதை சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யாலும் கெடும் (திருக்குறள் - 466)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

Downloaded from **www.omkaravidya.com**

அதாவது, செய்யக் கூடாத செயல்களைச் செய்வதால் ஒருவன் கெடுவான். செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாததாலும் கெடுவான்.

சாஸ்த்ரத்தில், இதைச் செய், இதைச் செய்யாதே என்று கூறப்பட்டிருக்கின்ற விஷயங்களை அறிந்து, இந்த உலக வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டும்.

மனித உடலில் வாழ்கின்ற உயிருக்குத்தான், அறிந்துகொள்ளவும் செயல்படவும் அனுபவிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. பிற உடல்களில் இருக்கின்ற உயிர்களால் அனுபவிக்க மட்டும்தான் முடியும். அறியவோ, செயல்படவோ முடியாது.

எனவே, தீய குணங்களை விட்டுவிட்டு, மனம் போன போக்கில் செயல்படாமல், சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளபடி வாழ்ந்து, தெய்வீக குணங்களை வளர்த்து, இப்பிறவியிலேயே ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு, இங்கேயே இப்பொழுதே உடல்பற்று, உயிர் பற்று, உலகப் பற்று ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, மெய்யறிவில் நிலைத்திருக்க வேண்டும்.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे

श्रीकृष्णार्जुनसंवादे दैवासुरसम्पद्विभागयोगो नाम षोडशोऽध्यायः ।। १६ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகஸாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே தைவாஸுர-
ஸம்பத்விபாகயோகோ நாம ஷோடஸோऽத்யாய: ।। 16 ।।

சொற்குற்றம், பொருட்குற்றம் நீங்குவதற்கு, ஓம் தத் ஸத் என்று கூறி, உபநிஷதங்களின் பரமதாத்பர்யத்தை விளக்கிக் கூறுகின்ற, ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கின்ற, மனதைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்-அர்ஜுனன் ஆகியோரின் அருள் உரையாடல் வடிவிலிருக்கும் இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்தில் தைவாஸுரஸம்பத்விபாகம் என்ற தலைப்பிலான இந்த பதினாறாவது அத்யாயம் நிறைவுபெறுகிறது.

ॐ श्रीकृष्णार्पणमस्तु। ஓம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து।

Downloaded from **www.omkaravidya.com**

பதினேழாவது அத்யாயம்

ओं श्रीकृष्णाय परमात्मने नमः **ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம:**

अथ सप्तदशोऽध्यायः **அத ஸப்ததஶோऽத்யாய:**

श्रद्धात्रयविभागयोगः **ஶ்ரத்தாத்ரயவிபாகயோக:**

முகவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், சென்ற அத்யாயத்தின் கடைசியில், சாஸ்த்ர விதியை விட்டுவிட்டு, மனம் போனபடி செயல்புரிபவனைப் பற்றிக் கூறிவிட்டு, சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டு செயல்புரிய வேண்டும் என்று கூறியருளினார்.

இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துவதற்காக வேண்டி, இந்த அத்யாயம் எழுந்துள்ளது.

சாஸ்த்ர விதியை மீறி, மனம் போனபடி செயலாற்றுபவனுக்கு, ஸித்தியோ ஸுகமோ மேலான கதியோ கிடைக்காது (16-23) என்று பகவான் கூறினார்.

எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதைப் பற்றிய அறிவை, சாஸ்த்ரத்தைக் கொண்டுதான் பெற முடியும்.

ஆனால், சாஸ்த்ரங்களை முறையாகக் கற்காமல், பெரியோர்கள் செய்வதைப் பார்த்தே செய்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மனம் போன போக்கில் செயல்படுவதில்லை. ஆனால் நேரடியான சாஸ்த்ர அறிவும் அவர்களுக்கு இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

பெரியவர்கள் செய்வது சரியாகத்தான் இருக்கும் என்ற நியாயமான சிரத்தையுடன் செயல்புரிகிறார்கள். அவர்களுடைய சிரத்தையானது எப்படிப்பட்டது என்ற அர்ஜுனனின் கேள்வியுடன் இந்த அத்யாயம் தொடங்குகிறது.

அதனால்தான் இந்த அத்யாயத்திற்கு **சிரத்தாத்ரயவிபாகயோகம்** என்று பெயர்.

சிரத்தையைத் தொடர்ந்து, பல விஷயங்களை பகவான் இங்கு உபதேசிக்கப் போகிறார்.

अर्जुन उवाच

ये शास्त्रविधिमुत्सृज्य यजन्ते श्रद्धयान्विताः ।

तेषां निष्ठा तु का कृष्ण सत्त्वमाहो रजस्तमः ।। १७ - १ ।।

அர்ஜுந உவாச

யே ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: ।

தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்த்வமாஹோ

ரஜஸ்தம: ।। 17 - 1 ।।

பதவுரை

அர்ஜுந: - அர்ஜுனன், **உவாச** - கூறினான்.

ஹே க்ருஷ்ண! - ஓ உள்ளத்தைப் பண்படுத்துபவரே! பேரின்ப வடிவானவரே! **யே** - எவர்கள், **ஶாஸ்த்ரவிதிம்** - சாஸ்த்ர விதியை, **உத்ஸ்ருஜ்ய** - அறியாமல் (பெரியோர்களின் பழக்கவழக்கங்களை மட்டும் பார்த்துக்

Downloaded from **www.omkaravidya.com**

கடைப்பிடிப்பவர்களாய்), **து** - ஆனால், **ஸ்ரத்தயான்விதா:** - ச்ரத்தையோடு கூடியவர்களாய், **யஜந்தே** - வழிபடுகிறார்களோ, **தேஷாம்** - அவர்களுடைய, **நிஷ்டா** - செயல்புரிகின்ற தன்மையானது, **கா?** - எத்தகையது? **ஸத்வம்** - ஸாத்விகமா? **ஆஹோ** - அல்லது, **ரஜ:** - ராஜஸமா? **தம:** - தாமஸமா?

பொழிப்புரை

அர்ஜுனன் கூறினான்.

ஓ உள்ளத்தைப் பண்படுத்துபவரே! ஓ பேரின்ப வடிவானவரே! எவர்கள் சாஸ்த்ர விதியை அறியாமல், பெரியோர்களின் பழக்கவழக்கங்களை மட்டும் பார்த்துக் கடைப்பிடிப்பவர்களாய், ஆனால் ச்ரத்தையுடன் வழிபடுகிறார்களோ, அவர்களுடைய செயல்புரிகின்ற தன்மையானது எத்தகையது - ஸாத்விகமா, ராஜஸமா, தாமஸமா?

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணரிடத்தில் அர்ஜுனன் கேட்கின்ற கேள்வியுடன், இந்த அத்யாயம் தொடங்குகிறது.

சிலர் சாஸ்த்ர விதிகளைப் பின்பற்றாமல் வழிபடுகிறார்கள். சாஸ்த்ர விதிகளைப் பின்பற்றாததற்குக் காரணம், சாஸ்த்ரங்களை முறையாகக் கற்காமல் இருத்தலாகும்.

ஆனால் அவர்கள் ச்ரத்தையுடன் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் **வ்ருத்தவ்யவஹார:** - பெரியோர்கள் எத்தகைய

Downloaded from **www.omkaravidya.com**

கர்மாக்களைச் செய்கிறார்களோ, அதைப் பார்த்து, அதில் நம்பிக்கையுடன் செய்கிறார்கள்.

அவர்கள் சாஸ்த்ர விதியை அவர்கள் முறையாகக் கற்காவிட்டாலும் பெரியோர்களின் நடவடிக்கைகளைப் பார்த்து, ச்ரத்தையுடன் செய்கிறார்கள்.

இவர்களிடத்தில் ஆஸ்திக்ய புத்தி இருக்கிறது. ஸ்வர்க நரகங்கள், புண்ய பாபங்கள் இருக்கின்றன, மறுபிறவி இருக்கிறது என்ற ச்ரத்தை இவர்களுக்கு இருக்கிறது.

பெரியோர்கள் செய்வதைப் பார்த்து ச்ரத்தையுடன் கர்மாக்களைச் செய்கிறார்கள். ஆனால், அதில் அவர்களுக்கு ஒரு தெளிவு இருக்கிறது என்று சொல்ல முடியாது.

ஒரு கர்மாவை ஏன் செய்ய வேண்டும் என்று சாஸ்த்ர விதிகளைப் பற்றிக் கேட்டால், அவர்களால் பதில் சொல்ல முடியாது.

ஆனால், அவர்கள் ஒழுங்காக கர்மாக்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது, சாஸ்த்ர விதிகளைக் கற்பதில் அவர்களுக்கு சோம்பேறித்தனம் இருந்தாலும், செயல்புரிவதில் சோம்பேறித்தனம் இல்லை.

அவர்களின் நிஷ்டை - அதாவது, செயல்புரிகின்ற தன்மையானது எத்தகையது என்று அர்ஜுனன் கேட்கிறான். ஸத்வமா அல்லது ராஜஸமா அல்லது தாமஸமா?

Downloaded from **www.omkaravidya.com**

श्रीभगवानुवाच

त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा ।

सात्त्विकी राजसी चैव तामसी चेति तां शृणु ।। १७ - २ ।।

ஸ்ரீபகவாநுவாச

த்ரிவிதா பவதி ஶ்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா ।

ஸாத்த்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஶ்ருணு ।। 17 - 2 ।।

பதவுரை

ஸ்ரீபகவாந் - பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், **உவாச** - கூறினார்.

தேஹிநாம் - உடலை உடைய உயிர்களுக்கு, **ஸ்வபாவஜா** - (அந்தந்த உயிர்கள் முன்பு செய்த புண்ய பாபங்களுக்கேற்ப) இயல்பாக இருக்கின்ற, **ஸா ஶ்ரத்தை** - அந்த ச்ரத்தையானது, **ஸாத்த்விகீ** - ஸாத்விக ச்ரத்தை, **ராஜஸீ** - ராஜஸ ச்ரத்தை, **தாமஸீ ச ஏவ** - தாமஸ ச்ரத்தை, **இதி ச** - என்றே, **த்ரிவிதா** - மூன்று வகையாக, **பவதி** - இருக்கின்றது. **தாம்** - அதனை, **ஶ்ருணு** - கேட்பாயாக.

பொழிப்புரை

உடலை உடைய உயிர்களுக்கு, அவை முன்பு செய்த புண்ய பாபங்களுக்கேற்ப இயல்பாக இருக்கின்ற ச்ரத்தையானது, ஸாத்விக ச்ரத்தை, ராஜஸ ச்ரத்தை, தாமஸ ச்ரத்தை என்று மூன்று வகையாக இருக்கின்றது. அதனை என்னிடமிருந்து கேட்பாயாக.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அர்ஜுனனின் கேள்விக்குப் பதிலைக் கூறத் தொடங்குகிறார்.

ஒரு மனிதனுக்கு சாஸ்த்ர விதி, நிஷேதங்கள் தெரியவில்லை, அவற்றைத் தெரிந்துகொள்வதிலும் பெரிதாக ஆர்வமில்லை. ஆனால் பெரியோர்கள் செய்வதைப் பார்த்து, ச்ரத்தையுடன் செய்கிறான். அவனது நிஷ்டை எப்படிப்பட்டது என்பதே அர்ஜுனனின் கேள்வி.

ஒருவர் பெரியவர்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளலாம். ஆனால் சாஸ்த்ர ஞானம் இருந்தால்தான் அடுத்தத் தலைமுறைக்குக் கற்றுத் தர முடியும். நாம் செய்கின்ற செயல்கள் அறிவுபூர்வமானவைதான் என்று அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

ச்ரத்தை என்பதற்கு வெறும் நம்பிக்கை என்று பொருள்கொள்ளக்கூடாது. மூடநம்பிக்கை, குருட்டு நம்பிக்கை, அறிவுபூர்வமான நம்பிக்கை என நம்பிக்கைகளில் பலவிதங்கள் இருக்கின்றன. ச்ரத்தை என்பது அறிவுபூர்வமான நம்பிக்கை.

கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத, வாழ்க்கைக்குப் பயனுள்ள விஷயங்களில், அவற்றைப் பற்றிக் கூறுகின்ற நூல்களிலும், விளக்கிக் கூறுகின்ற ஆசார்யர்களிடமும் இந்தக் கருத்துகள்

Downloaded from **www.omkaravidya.com**

பொய்யில்லை என்ற ஆழ்ந்த எண்ணத்திற்குத்தான் ச்ரத்தை என்று பெயர்.

பகவானின் பதில் இவ்விதம் அமைந்திருக்கிறது. ச்ரத்தை என்பது மூன்றுவகையாக இருக்கிறது. அந்த ச்ரத்தை, உடலை உடையவர்களுக்கு, ஸ்வபாவமானது. ஏற்கெனவே செய்த புண்ய பாபங்களின் அடிப்படையில் ஏற்படுவது என்று ஆதிசங்கரர் பொருள் கூறுகிறார்.

ஒரு காலத்தில் நாம் பயிற்சி செய்ததுதான், இன்று பழக்கமாக மாறியிருக்கிறது. நம் தாய் தந்தையர் நமக்குக் கற்றுக் கொடுத்த, தினசரி நடைமுறையின் அடிப்படையில்தான் நம்முடைய பழக்கங்கள் அமைகின்றன.

சிலருக்கு ஆரம்ப காலத்தில் நம்பிக்கை இருப்பதில்லை, பிறகு நம்பிக்கை கூடுகிறது. அது அறிவுபூர்வமாக இல்லையெனில், மாறவும் செய்கிறது.

நம்பிக்கையைப் பற்றிய அறிவு சரியாக இல்லாததுதான் மதமாற்றத்திற்குக் காரணம். **தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் திருக்குறளையாவது மக்கள் நன்றாகக் கற்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு அறிவுபூர்வமான நம்பிக்கை ஏற்படும்.**

ஸ்வர்கம், நரகம், புண்யம், பாபம், மறுபிறவி - இவற்றைப் பற்றியெல்லாம் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதனைப் பலர் திரித்துப் பேசுகிறார்கள். மக்கள் இந்த விஷயத்தில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

ச்ரத்தை என்பது ஸாத்விகமாகவோ, ராஜஸமாகவோ அல்லது தாமஸமாகவோ இருக்கும் என்று பகவான் கூறுகிறார். ஆனால், எதுவும் நூற்றுக்கு நூறு ஒரு குணத்தை மட்டும் சார்ந்து இருக்காது. இதில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

सत्त्वानुरूपा सर्वस्य श्रद्धा भवति भारत ।

श्रद्धामयोऽयं पुरुषो यो यच्छ्रद्धः स एव सः ।। १७ - ३ ।।

ஸத்த்வாநுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத ।

ஶ்ரத்தாமயோऽயம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ: ।। 17 - 3 ।।

பதவுரை

ஹே பாரத! - ஓ பரத குலத்தோனே! **ஸர்வஸ்ய** - எல்லோருடைய, **ஶ்ரத்தா** - ச்ரத்தையானது, **ஸத்த்வாநுரூபா** - அவரவர்களின் மனப்பக்குவத்தைப் பொருத்து, **பவதி** - இருக்கின்றது. **அயம் புருஷ:** - இந்த ஜீவனானவன் (உயிரானவன்), **ஶ்ரத்தாமய:** - ச்ரத்தை வடிவானவன், (மனதில் நம்பிக்கையைப் பற்றிக்கொண்டு வாழக்கூடியவன்). **ய:** - எவனொருவன், **யத்-ஶ்ரத்த:** - எத்தகைய நம்பிக்கையை உடையவனாக இருக்கிறானோ, **ஸ:** - அவன், **ஸ: ஏவ (பவதி)** - அதுவாகவே இருக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ பரத குலத்தோனே! எல்லோருக்கும் ச்ரத்தை என்பது, அவரவர்களின் மனப்பக்குவத்தைப் பொருத்து இருக்கின்றது. இந்த ஜீவனானவன், ச்ரத்தை வடிவானவன். அதாவது, மனதில் நம்பிக்கையைப் பற்றிக்கொண்டு வாழக்கூடியவன். எவனொருவன், எத்தகைய நம்பிக்கையை உடையவனாக இருக்கிறானோ, அவன் அதுவாகவே இருக்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ச்ரத்தையின் தன்மையைப் பற்றிக் கூறுகிறார்.

பொதுவாக ஒரு கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். கடவுள், புண்யம், பாபம் முதலிய விஷயங்கள் கண்ணுக்குத் தெரியாதவை. அவற்றைப் பற்றி சாஸ்த்ரத்தின் வாயிலாகத்தான் அறிந்துகொள்கிறோம். சாஸ்த்ரத்தில் நமக்கு ச்ரத்தை வேண்டும்.

பல விஷயங்களைக் கடைப்பிடித்துப் பார்த்துத்தான் புரிந்துகொள்ள முடியும். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள்கூட கண்ணுக்குத் தெரியாதவைதான். நடந்துகொள்கின்ற முறையை வைத்து, ஒருவரிடம் இந்த குணம் மேலோங்கியிருக்கிறது என்று அனுமானம் செய்யலாம்.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என ச்ரத்தை மூன்றுவிதமாக இருக்கிறது. எல்லோருக்குமே ச்ரத்தை என்பது அவரவர் மனப்பக்குவத்தைப் பொருத்திருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

ஒருவர் எந்தச் சூழ்நிலையில் பிறந்திருக்கிறாரோ, யாருடன் பழகுகிறாரோ, அவரது உள்ளம் பல பிறவிகளில் எதை ஸம்பாதித்திருக்கிறதோ, அதைப் பொருத்துத்தான் ச்ரத்தை என்பது அமைகிறது.

ஸத்த்வானுரூபா என்றால் மனதைப் பொருத்தது என்று பொருள். ஸம்ஸ்காரங்கள், அதாவது பல பிறவிகளில் பெற்ற பதிவுகளுடன் கூடிய அந்தக்கரணத்தின் தன்மைக்கு ஏற்றபடி, ஒவ்வொரு ஜீவனும் ஏதோ ஒரு நம்பிக்கையுடன்தான் இருக்கிறான். அதிலிருந்து அவனைப் பிரிக்க முடியாது.

Sentiment போன்றவற்றையெல்லாம் நம்மால் ந்யாயபூர்வமாக நிரூபிக்க முடியாது. இதுபோன்று கண்ணுக்குத் தெரியாத பல தொடர்புகளில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

அவரவர் நம்பிக்கைகளின் அடிப்படையில்தான், கடவுள் இருக்கிறார் என்றும் இல்லை என்றும் சொல்கிறார்கள். கடவுளை நம்பாமல் இருப்பதும் ஒருவித நம்பிக்கைதானே.

யார் எந்த வகையான ச்ரத்தையுடையவனாக இருக்கிறானோ, அவன் அதுவாகவே ஆகிறான். எந்த நம்பிக்கை உடையவனாக இருக்கிறானோ, அதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறான்.

ஸாத்விக ச்ரத்தையுடையவன் ஸத்வநிஷ்டன். ராஜஸ ச்ரத்தையுடையவன் ராஜஸநிஷ்டன். தாமஸ ச்ரத்தையுடையவன் தமோநிஷ்டன்.

Downloaded from **www.omkaravidya.com**

மத நம்பிக்கைகள்கூட இப்படிப்பட்டவைதான். தன்னுடைய மதத்தில் நம்பிக்கை இருப்பதுபோல், பிற மதங்கள் கூறுவது பொய் என்ற எண்ணமும் ஒருவனுக்கு இருக்கிறது.

மனிதர்கள் கண்ணுக்குத் தெரியாத விஷயங்களில் கருத்து வேறுபாடு உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஹிந்து மதத்தில் ஒரு முக்கியமான, குறிப்பிடத் தகுந்த விஷயம் என்னவென்றால், நாம் எல்லாவிதமான நம்பிக்கைகளையும் ஆராய்ச்சி செய்கிறோம். பிற மதங்களில் அப்படி ஆராய்ச்சி செய்கிறார்களா என்று தெரியாது.

ஹிந்து மதத்தில் மனிதநேயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஹிந்து மதத்திலுள்ள அனைத்து நம்பிக்கைகளும் தனிமனித நன்மை, சமூக நன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே அமைந்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் மதத்தைக் கடைப்பிடித்து, மதத்தைக் கடந்தவர்களாக ஆக வேண்டும். பிற மதங்களை நிந்திக்க வேண்டிய அவசியமில்லை. யாரையும் மாற்ற வேண்டிய அவசியமும் இல்லை.

மதமாற்றம் செய்பவர்கள் அறிவுபூர்வமான நம்பிக்கையை உடையவர்களாக இருப்பதில்லை. அறிவுபூர்வமான நம்பிக்கையைப் புரிந்துகொண்டு, அறிவுக்குப் புறம்பான நம்பிக்கைகளை ஸாம, தான, பேத, தண்டங்களால் சீர்செய்து, ஒழுங்குபடுத்திக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

यजन्ते सात्त्विका देवान्यक्षरक्षांसि राजसाः ।

प्रेतान्भूतगणांश्चान्ये यजन्ते तामसा जनाः ।। १७ - ४ ।।

यजन्ते सात्त्विका देवान्यक्षरक्षाम्सि राजसाः ।
प्रेतान्भूतगणाम्श्चान्ये यजन्ते तामसा जनाः ।। 17 - 4 ।।

பதவுரை

सात्त्विकाः जनाः - ஸாத்விகமான ஜீவர்கள், **देवान्** - தெய்வங்களையும், **राजसाः** - ராஜஸ நிஷ்டர்கள், **यक्षरक्षाम्सि** - (தேவர்களுக்குக் கீழ்நிலையில் உள்ள) யக்ஷர்கள், ரக்ஷர்கள் முதலியவர்களையும், **यजन्ते** - வழிபடுகிறார்கள். **अन्ये** - மற்றும், **तामसाः च** - தாமஸ நிஷ்டர்கள், **प्रेतान्** - ப்ரேதங்களையும், **भूतगणाम् च** - பூதங்களையும் (**यजन्ते** - வழிபடுகிறார்கள்).

பொழிப்புரை

ஸாத்விகமான ஜீவர்கள், தெய்வங்களை வழிபடுகிறார்கள். ராஜஸ நிஷ்டர்கள், தேவர்களுக்குக் கீழ்நிலையில் உள்ள யக்ஷர்கள், ரக்ஷர்கள் முதலியவர்களை வழிபடுகிறார்கள். தாமஸ நிஷ்டர்கள் ப்ரேதங்களையும், பூதங்களையும் வழிபடுகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஒவ்வொரு குணமுடையவர்களும் எத்தகைய தேவதைகளை வழிபடுகிறார்கள் என்று கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஒருவன் எத்தகைய நிஷ்டையை உடையவன் என்பதை இதை வைத்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஸாத்விக நிஷ்டை உடையவர்கள் விஷ்ணு, சிவன், இந்த்ரன், அக்னி முதலான தெய்வங்களை வழிபடுகிறார்கள். வடிவங்களை வழிபடுவதில்லை, வடிவங்களின் மூலம் அந்த தெய்வங்களை வழிபடுகிறார்கள்.

ஸாத்விகர்கள், மேலான அறவழியில், **இந்த்ராய ஸ்வாஹா। அக்நயே ஸ்வாஹா।** போன்ற மந்த்ரங்களால் தேவர்களை வழிபடுகிறார்கள்.

ராஜஸ நிஷ்டை உடையவர்கள், தேவர்களை விட கீழ்நிலையில் உள்ள யக்ஷர்களையும், ரக்ஷர்களையும் வழிபடுகிறார்கள். இவர்கள் பரபரப்புடன் கூடியவர்கள், செல்வத்தில் நாட்டம் மிக்கவர்கள் இவர்கள்.

தமோ நிஷ்டை உடையவர்கள் ப்ரேதங்களையும் பூத கணங்களையும் வழிபடுகிறார்கள். தன்னுடைய தர்மத்திலிருந்து வழுவிய அந்தணர்கள் முதலானவர்கள், உடலை விட்டுச் சென்ற பிறகு, ஒரு காற்று தேஹத்தை எடுக்கிறார்கள். அவர்களுக்கு ப்ரேதம் என்று பெயர். அவர்களை தாமஸ குணமுடையவர்கள் வழிபடுகிறார்கள். மாத்ரு கணங்கள் போன்ற தேவதைக் கூட்டங்கள் பூத கணங்கள் ஆவர்.

எல்லாவற்றிலும் விநாயகர் பூஜை முதலியவை உண்டு. ஒவ்வொரு நிஷ்டை உடையவர்களும், ப்ரதானமாக எத்தகைய

Downloaded from **www.omkaravidya.com**

தெய்வங்களை வழிபடுகிறார்கள் என்பது இங்குக் கூறப்பட்டுள்ளது.

மனத்தூய்மையின் பொருட்டு இறைவனை வழிபடுபவர்கள்; பொருள், இன்பம் வேண்டி இறைவனை வழிபடுபவர்கள்; தனது சுயநலத்திற்காக, பிறருடைய அழிவின்பொருட்டு இறைவனை வழிபடுபவர்கள் என மூன்று வகையினர் இருக்கின்றனர்.

ஸாத்விகர்கள் ஈச்வர ஞானத்துடன் வழிபடுகிறார்கள். ராஜஸர்களும் தாமஸர்களும் ஈச்வர ஞானமோ, ஆத்ம ஞானமோ இல்லாமல், ஏதோ ஒரு நம்பிக்கையில் வழிபடுகிறார்கள்.

ஒருவர் செய்கின்ற பூஜையை வைத்து, அவருடைய நம்பிக்கை எத்தகையது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

अशास्त्रविहितं घोरं तप्यन्ते ये तपो जनाः ।

दम्भाहङ्कारसंयुक्ताः कामरागबलान्विताः ।। १७ - ५ ।।

कर्शयन्तः शरीरस्थं भूतग्राममचेतसः।

मां चैवान्तःशरीरस्थं तान्विद्ध्यासुरनिश्चयान् ।। १७ - ६ ।।

அஶாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜநா: ।
தம்பாஹங்காரஸம்யுக்தா: காமராகபலாந்விதா: ।। 17 - 5 ।।

Downloaded from **www.omkaravidya.com**

கர்ஶயந்த: ஶரீரஸ்த்தம் பூதக்ராமமசேதஸ: ।

மாம் சைவாந்த:ஶரீரஸ்த்தம் தாந்வித்த்யாஸுர-

நிஶ்சயாந் ।। 17 - 6 ।।

பதவுரை

யே ஜநா: - எந்த மக்கள், **அஶாஸ்த்ரவிஹிதம்** - சாஸ்த்ரத்தில் சொல்லப்படாத, விதிக்கப்படாத, **கோரம்** - தனக்கும், மற்ற உயிர்களுக்கும் துன்பம் தரக்கூடிய, கோரமான, **தப:** - தவங்களை, **தப்யந்தே** - செய்கிறார்களோ, **தம்ப-அஹங்கார-ஸம்யுக்தா:** - ஆடம்பரம், தற்பெருமை உடையவர்களாகவும், **காமராகபலாந்விதா:** - அடையப்படாத பொருளை அடைய வேண்டும் என்கிற எண்ணம் (பேராசை), அடைந்த பொருட்களின்மீது அதீத பற்று ஆகியவற்றால் அழிவைத் தரக்கூடிய வலிமை உடையவர்களாகவும், **ஶரீரஸ்த்தம்** - சரீரத்தில் இருக்கக்கூடிய, **பூதக்ராமம்** - ஐம்பூதங்களால் ஆன இந்த்ரியக்கூட்டத்தையும், **அந்த: ஶரீரஸ்த்தம்** - உள்ளத்தில் உறைந்து கொண்டிருக்கும் இறைவனான, ஈச்வர தத்துவமான, **மாம் ச ஏவ** - என்னையும், **கர்ஶயந்த:** - வருத்தியும், **அசேதஸ:** - பகுத்தறிவில்லாத, **தாந்** - (சாஸ்த்ர விதிகளை மீறி வாழும்) அவர்களை, **அஸுரநிஶ்சயாந்** - அஸுர குணங்களை உடையவர்கள் என்று நிச்சயமாக, **வித்தி** - தெரிந்துகொள்வாயாக.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

தனக்கும் மற்ற உயிர்களுக்கும் துன்பம் தரக்கூடிய, சாஸ்த்ரத்தில் சொல்லப்படாத, விதிக்கப்படாத கோரமான தவங்களைச் செய்பவர்கள், ஆடம்பரம், தற்பெருமை உடையவர்கள், பேராசை, பற்று ஆகியவற்றால் அழிவை ஏற்படுத்தும் வலிமை உடையவர்கள், உடலில் இருக்கக்கூடிய ஐம்பூதங்களால் ஆன இந்த்ரியக்கூட்டத்தையும், உள்ளத்தில் உறையும் இறைவனையும் வருத்துபவர்கள், பகுத்தறிவில்லாதவர்கள் - இத்தகையவர்கள் அஸுர குணமுடையவர்கள் என்று அறிந்துகொள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ராஜஸ நிஷ்டர்களைப் பற்றியும், தாமஸ நிஷ்டர்களைப் பற்றியும் இந்த ச்லோகங்களில் கூறுகிறார்.

இவர்கள் கோரமான தவம் செய்து, தங்களையும் பிறரையும் வருத்திக்கொள்வார்கள். பிற உடல்களில் வாழ்கின்ற உயிர்களைத் துன்புறுத்துதல், பிற உயிர்களை பலி கொடுத்தல் போன்றவற்றை இவர்கள் செய்கிறார்கள்.

இவர்கள் செய்கின்ற தவங்களால், விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மற்ற மனிதர்களுக்கும் தங்களுக்கும் துன்பத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ச்ருதியிலோ ஸ்ம்ருதியிலோ சொல்லப்படாத, சாஸ்த்ரத்தில் விதிக்கப்படாத வகையில் தவத்தைச் செய்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

கடுமையான வெய்யிலில், கல் மீது ஏறி நின்று தவம் செய்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது என்று சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது.

சிலர், தனது உடலில் இருக்கக்கூடிய மாம்ஸத்தை எடுத்து ஹோமம் செய்கிறார்கள் போன்ற குறிப்புகள் சில இடங்களில் காணப்படுகின்றன. அந்தணர்களுடைய ரத்தத்தை எடுத்து ஹோமம் செய்தல் போன்றவற்றைக் கூறும், சில நூல்கள்கூட எழுதப்பட்டுள்ளன. அவை முக்கியமான சாஸ்த்ரங்களுக்கு விரோதமானவை.

அது மட்டுமல்ல, தங்களைப் போன்று புண்யம் செய்பவர்கள் யாருமில்லை என்று பொய் சொல்வார்கள். ஆடம்பரம், தற்பெருமை மிக்கவர்கள் இவர்கள்.

இவர்கள், அடைய வேண்டிய பொருளில் ஆசையும், அடைந்த பொருளில் பற்றும் உடையவர்கள். பேராசையினாலும் பெரும்பற்றினாலும் உடலிலும் மனதிலும் இவர்களுக்கு ஒரு வெறி ஏற்படுகிறது. அந்த வெறி அவர்களையும் அழிக்கும், பிறரையும் அழிக்கும்.

தடித்துப் போன அஹங்காரத்துடன் அவர்கள் சாஸ்த்ரத்தினால் விதிக்கப்படாத தவங்களைச் செய்கிறார்கள்.

அது மட்டுமல்ல, தவம் செய்கிறேன் என்ற பெயரில், மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இந்த்ரியங்களை அவர்கள் வருத்திக் கொள்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

தோன்றியபடி, அளவுக்கு மீறி உபவாஸம் இருப்பார்கள். அறிவுபூர்வமாக இல்லாமல், மனம் போனபடி செய்கின்ற தவங்களால் தங்களை வருத்திக்கொள்கிறார்கள்.

இது போன்ற தவங்களை, பெரியோர்களிடம் ஆசி பெற்றுக்கொண்டு, முறையாகச் செய்ய வேண்டும். இல்லையெனில், அவை நல்ல பலன்களைக் கொடுக்காது.

உடலை வருத்தி இளைக்கும்படி செய்தல், பேசாமல் இருத்தல் - இப்படியெல்லாம் அளவுக்கு மீறிச் செய்தல் மனநோயா, அதர்மமா என்று யாராலும் வரையறுத்துக் கூற முடியாது.

இவர்கள் உடலில் இருக்கின்ற, ஐம்பூதங்களால் உருவான இந்த்ரியக் கூட்டங்களைச் சுருங்கும்படி, செயலிழக்கும்படி செய்கிறார்கள். கடவுள் ஸூக்ஷ்ம சரீரத்திலுள்ள இந்த்ரியங்களின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்காகத்தான் கொடுத்திருக்கிறார். அவற்றை அறவழியில் பயன்படுத்த வேண்டும்.

அறவழியிலும் பயன்படுத்தாமல், வெறுமனே அவற்றை வாட்டி வதைத்தப்பதற்குக் காரணம், சாஸ்த்ர ஞானம் இல்லாததே ஆகும்.

அவர்கள் உடலையும் இந்த்ரியங்களையும் மட்டும் வருத்துவதில்லை. உள்ளத்திற்குள் உறைந்திருக்கும் ஈச்வர தத்துவத்தையும் கஷ்டப்படுத்துகிறார்கள்.

உண்மையில் நாம் ஒவ்வொருவரும் ஆனந்த வடிவமாகத்தான் இருக்கிறோம். இறைவன் நம்முள் ஆனந்த வடிவமாக

Downloaded from **www.omkaravidya.com**

இருக்கும்பொழுது, எதற்கு நம்மை நாம் துன்பப்படுத்திக்கொள்ள வேண்டும்?

இதில் ஒரு நுணுக்கம் இருக்கிறது. இறைவனை வருத்துவதும் தன்னை வருத்திக்கொள்வதும் ஒன்று என்ற ஐக்ய கருத்து இங்கு அழகாகக் கூறப்பட்டுள்ளது. நம்மை வருத்திக்கொள்வது, இறைவனையே வருத்துவதற்கு நிகராகும்.

ஆக, அறவழியில் வாழ்க்கையை வாழ வேண்டும், சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளபடி தவத்தைச் செய்ய வேண்டும்.

சாஸ்த்ரம், ஒரேயடியாக உணவு உட்கொள்ளக்கூடாது என்று சொல்லாது. உணவுப்பொருட்கள் சிலவற்றைக் குறைக்கச் சொல்லும், அவ்வளவுதான். அப்படி உணவு உண்ணாமலேயே இருக்க வேண்டுமென்றாலும், அதற்கென்று குறிப்பிட்ட நேரத்தைத்தான் சொல்லும்.

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்த்தித: । 10 - 20

ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உறைகின்ற ஆத்மா நான் என்று பகவான் ஏற்கெனவே கூறினார்.

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத । 13 - 2

இந்த உடலுக்குள் இருந்துகொண்டு, இதனை அறிகின்ற க்ஷேத்ரஜ்ஞன் நானே என்று பகவான் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆக, முறையில்லாமல் தவம் செய்பவர்கள் தங்களை மட்டும் வருத்திக்கொள்வதில்லை, இந்த உடலிலுள்ள இறைத் தத்துவத்தை வருத்துகிறார்கள்.

பகவானை வாட்டுவது என்றால் என்ன?

பகவான் விதித்துள்ள சாஸ்த்ர விதிகளை மீறுவதுதான் இறைவனை வருத்தப்படுத்துவது ஆகும்.

இந்த சமூகத்தில் யாருமே நல்லவரில்லை, எல்லோருமே வேஷம் போடுகிறார்கள் என்ற எண்ணத்திற்கு அஸுர குணம் என்று பெயர். அஸுர குணத்தினால் தமோகுணம் மேலோங்கி, இவர்கள் சாஸ்த்ர விதிகளை அவமதிக்கிறார்கள்.

பொதுவாக, அதர்மமாக புலனின்பங்களில் உழல்பவர்களுக்குத்தான் அஸுரர்கள் என்று பெயர். சாஸ்த்ர விதியை மீறி வாழ்பவன் என்ற பொருளில் இங்கு கூறியிருக்கிறார்.

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே

என்பது திருமூலர் வாக்கு.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்

Downloaded from **www.omkaravidya.com**

தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

என திருமூலர் ஜீவாத்மாவையே சிவமயமாகக் கூறியிருக்கிறார். உடலுக்குள் இறைவன் வாழ்கிறார் என்பதற்கு இவையெல்லாம் ப்ரமாணங்கள்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

என்பதும் திருமூலர் வாக்கு.

அதாவது, உடல் என்பது இறைவன் வாழ்கின்ற இடம். அதனை தர்மமான முறையில் நாம் பயன்படுத்த வேண்டுமே தவிர, அளவுக்கு மீறி அதனைத் துன்பப்படுத்தி, பெறுதற்கரிய இந்த மனித உடலை நாம் வீணடித்துவிடக் கூடாது.

பகவானை யாரும் கஷ்டப்படுத்த முடியாது என்பதே உண்மை. இருப்பினும், சாஸ்த்ர விதிகளை மீறிச் செயல்படுபவன், உடலுக்குள் வாழ்கின்ற பகவானைக் கஷ்டப்படுத்துகிறான் என்று புரிந்துகொள்கிறோம்.

இறைவனைத் துன்புறுத்துவதும் தன்னைத் துன்புறுத்திக்கொள்வதும் வேறு வேறல்ல என்ற தத்துவமும் இதில் அடங்கியிருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

மலர்மிசை ஏகினான் (திருக்குறள் – 3)

இறைவன் உள்ளத் தாமரையில் உணர்வாக வீற்றிருக்கிறார் என்பது திருவள்ளுவர் வாக்கு.

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

என்றும்,

ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே

என்றும் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

இறைவனை உணராதவர்களின் உள்ளங்களிலும் இறைவன் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே

என்பது தாயுமானவர் வாக்கு.

இறைவன் நம்முடைய உள்ளங்களில் இருக்கிறார் என்று எல்லா மஹான்களும் கூறியிருக்கிறார்கள். இறைவன்தான் மனிதனாக விளங்குகிறார் என்றும் கூறியிருக்கிறார்கள்.

Perfect man is God, Imperfect God is man

என்பார் ஸ்வாமி விவேகானந்தர்.

இறையனுபூதியைப் பெற விரும்புகின்ற, சாதாரண மனிதன் நான் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், நீ உண்மையில் இறைவனாகத்தான் இருக்கிறாய், தாற்காலிகமாக மனித

Downloaded from **www.omkaravidya.com**

அனுபவத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய் என்று உபநிஷதங்கள் கூறுகின்றன.

உடலை அளவான முறையில் தவம் செய்ய வைத்து, நன்கு பாதுகாத்து, உடலுக்குள் விளங்கிக் கொண்டிருக்கின்ற இறைத் தத்துவத்தை உணர்ந்து, வாழ்க்கையில், பிறவிப் பயனை அடைவோமாக!

आहारस्त्वपि सर्वस्य त्रिविधो भवति प्रियः ।

यज्ञस्तपस्तथा दानं तेषां भेदमिमं शृणु ।। १७ - ७ ।।

ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரிய: ।
யஜ்ஞஸ்தபஸ்ததா தாநம் தேஷாம் பேதமிமம் ஶ்ருணு ।। 17 - 7)

பதவுரை

து - மேலும், **ஸர்வஸ்ய** - எல்லோருடைய, **ப்ரிய:** - விருப்பமான, **ஆஹார: அபி** - உணவும் கூட, **த்ரிவித:** - (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று) மூன்றுவிதமாக, **பவதி** - இருக்கிறது. **ததா** - அவ்வாறே, **யஜ்ஞ:** - வழிபாடு, **தப:** - தவம், **தாநம்** - தானம், **தேஷாம்** - அவற்றின், **இமம்** - இந்த, **பேதம்** - வேற்றுமை ஆகியவற்றை, **ஶ்ருணு** - (பொறுமையுடன், மன ஒருமுகப்பாட்டுடன்) கேட்பாயாக.

பொழிப்புரை

எல்லோருடைய விருப்பமான உணவும்கூட ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று விதமாக இருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

அவ்வாறே வழிபாடு, தவம், தானம் ஆகியவையும் மூன்று விதங்களில் இருக்கின்றன. அவற்றைப் பொறுமையுடன், மன ஒருமுகப்பாட்டுடன் கேட்பாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மூன்றுவிதமான உணவு, வழிபாடு, தானம், தவம் ஆகியவற்றைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார்.

அர்ஜுனன், சாஸ்த்ர விதியை மீறி, பெரியோர்களைப் பார்த்து மட்டும் வழிபாடுகளைச் செய்யலாமா என்று கேட்ட கேள்விக்கு, மறைமுகமாக பதில் கூறுகிறார். அவரே அவற்றை உபதேசிக்கிறார். இதுவே சாஸ்த்ர ஞானம்தான்.

அனைவருக்கும் விருப்பமான உணவும்கூட, மூன்றுவிதமாக இருக்கிறது. ஸாத்விகர்கள் விரும்பும் உணவு, ராஜஸர்கள் விரும்பும் உணவு, தாமஸர்கள் விரும்பும் உணவு என மூன்று விதங்களில் இருக்கின்றன.

வழிபாடு, தவம், தானம் ஆகியவற்றிலும் இந்த மூன்று விதங்கள் இருக்கின்றன. இவற்றில் பெரியவர்களைப் பார்த்து நாம் செய்தாலும், சாஸ்த்ர ஞானத்துடன் செய்வது மிக முக்கியம். அப்பொழுதுதான் நம்மால் சிறப்பாகச் செய்ய முடியும். அடுத்தத் தலைமுறைக்கும் அதன் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறி, அவர்களைக் கடைப்பிடிக்கும்படி செய்ய முடியும்.

Downloaded from **www.omkaravidya.com**

आयु:सत्त्वबलारोग्यसुखप्रीतिविवर्धना: ।

रस्या: स्निग्धा: स्थिरा हृद्या: आहारा: सात्त्विकप्रिया: ।। १७ - ८ ।।

ஆயு:ஸத்த்வபலாரோக்யஸுகப்ரீத்திவிவர்தநா: ।

ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருத்யா: ஆஹாரா:

ஸாத்த்விகப்ரியா: ।। 17 - 8 ।।

பதவுரை

ஆயு:-ஸத்த்வ-பல-ஆரோக்ய-ஸுக-ப்ரீத்தி-விவர்தநா: - ஆயுள், உற்சாகம், வலிமை, ஆரோக்யம், தெளிவு, மன உவகை ஆகியவற்றை நன்கு வளர்க்கக்கூடியவையும், **ரஸ்யா:** - (இனிப்புச் சுவையுடன் கூடிய) ரஸமுள்ளவையும், **ஸ்நிக்தா:** - உடலில் ஒட்டக்கூடிய உணவு வகைகளும், **ஸ்திரா:** - நீண்ட நேரம் உடலில் தங்கக் கூடியவையும், **ஹ்ருத்யா:** - உள்ளத்திற்கு நிறைவை வழங்கக் கூடியவையும் (மனதைக் கவரக் கூடியவையும்) ஆன, **ஆஹாரா:** - உணவுகள், **ஸாத்த்விகப்ரியா:** - ஸாத்விகர்களுக்கு விருப்பமானவையாகும்.

பொழிப்புரை

ஆயுள், உற்சாகம், வலிமை, ஆரோக்யம், தெளிவு, மன உவகை ஆகியவற்றை நன்கு வளர்க்கக் கூடியவையும், இனிப்புச் சுவையுடன் கூடிய ரஸமுள்ளவையும், உடலில் ஒட்டக்கூடிய உணவு வகைகளும், நீண்ட நேரம் உடலில் தங்கக் கூடியவையும், உள்ளத்திற்கு நிறைவை வழங்கக்

Downloaded from **www.omkaravidya.com**

கூடியவையுமான உணவுகள் ஸாத்விகர்களுக்கு விருப்பமானவையாகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஸாத்விகர்களுக்கு விருப்பமான உணவைப் பற்றிக் கூறுகிறார்.

உள்ளத்தில் ஸத்வ குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புபவர்கள் இத்தகைய உணவை விரும்பி ஏற்பார்கள்.

நீண்ட காலம் வாழ்வதற்கு உகந்த உணவைப் பற்றி ஆயுர்வேத நூல்கள் கூறுகின்றன. இது பற்றி ஸ்ரீ எஸ்.வி.ராதாக்ருஷ்ண சாஸ்த்ரிகள் எழுதியுள்ள **உணவும் பானமும்** என்ற நூல் மிகச் சிறந்தது.

பகலில் மோர், இரவில் பால் போன்ற உணவுகள், பொதுவாக ஆயுளை வளர்க்கும் என்று கூறுவர். எத்தகைய உணவு, நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து, சோம்பேறித்தனத்தைப் போக்குமோ அந்த உணவுக்கு **ஸத்த்வம்** என்று பெயர்.

உடலுக்கு ஆற்றலைத் தரக்கூடிய உணவுகள் தேவை. உடலில் ஆற்றல் இல்லையெனில், மனதில் வலிமை இருந்தாலும், அதனை வெளிப்படுத்த முடியாது.

அடுத்து, உடலுக்கு நோய் வராமல் தடுக்கக்கூடிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். இருக்கின்ற நோயை

Downloaded from **www.omkaravidya.com**

நீக்கி, இனி நோய்கள் வராமல் தடுக்கக்கூடிய உணவுகள் சிறந்தவை.

உணவை உண்ணும்போது மனதிற்கு ஒரு தெளிவு ஏற்பட வேண்டும். அதைத்தான் **ஸுகம்** என்ற சொல் குறிக்கிறது. அதனால்தான் உணவு உட்கொள்வதை ஒரு வழிபாடாகவே நம்முடைய முன்னோர்கள் வைத்திருக்கிறார்கள்.

உணவைச் சமைப்பதும் ஒரு பூஜை, அதனை உண்பதும் ஒரு பூஜையாகவே சாஸ்த்ரங்களில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

உணவு உண்பதற்கு **ப்ராணாக்நிஹோத்ரம்** என்று பெயர். அது மனதிற்குத் தெளிவையும் அமைதியையும் தர வேண்டும். உணவு உண்ணும்போது மனதைக் கவனித்தால், உணவு மனதிற்கு மிகவும் உபகாரமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ப்ரீத்தி: - உணவில் ஒரு ருசி, ஆசை இருக்க வேண்டும். ருசியைக் காட்டிலும் மனதில் ஸந்தோஷத்துடன் சாப்பிட வேண்டும்.

ரஸ்யா: - இனிப்புச் சுவை, ஸத்வ குணத்தை வளர்க்கும் என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது.

ஸ்நிக்தா: - பால், தயிர், நெய் முதலானவை. அவை உடலில் சென்று ஒட்டக் கூடியவையாக இருக்க வேண்டும்.

ஸ்திரா: - நீண்ட நேரம் உடலில் இருந்து, சக்தியைக் கொடுக்கக்கூடிய ஆஹாரங்களாக இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலுக்கு போஷாக்கைத் தர வேண்டும். இடையில் எதுவும் சாப்பிட வேண்டிய தேவையில்லாமல், நல்ல முறையில் சக்தியைத் தர வேண்டும்.

நாத்யஶ்நதஸ்து யோகோ'ஸ்தி ந சைகாந்தமநஶ்நத: । 6 - 16

அதிகமாக உண்பவனுக்கும் த்யானம் கைகூடாது. சாப்பிடாமல் இருப்பவனுக்கும் த்யானம் கைகூடாது என்று பகவான் முன்பு உபதேசித்தார்.

ஹ்ருத்யா: - பார்த்தாலே சாப்பிட வேண்டும் என்று தோன்ற வேண்டும். மனதைக் கவர்வதாக இருக்க வேண்டும்.

கடித்து உண்பது, உறிஞ்சி உண்பது, நக்கி உண்பது, பருகுவது போன்று உணவு உண்பதில் பல விதங்கள் உள்ளன.

சாஸ்த்ரப்படி பால், நெய் முதலியவை ஸாத்விகமானவை. ஆனால், இன்றைய இயற்கை மருத்துவத்தில் அது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி: ஸத்த்வஶுத்தௌ
த்ருவா ஸ்ம்ருதி: । (சாந்தோக்ய உபநிஷதம் : 7 - 26 - 2)

'தூய்மையான உணவால் உள்ளம் தூய்மை பெறுகிறது, தெளிந்த உள்ளத்தில் உறுதியான அறிவு நிலைபெறுகிறது' என்று உணவுக்கும் மனதுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி உபநிஷதம் மிக அற்புதமாகச் சொல்லியிருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

கீதை கூறுகின்ற இந்த வாழ்க்கைமுறையைக் கடைப்பிடிப்பதால், நம் உடல் வலிமையும் மன வலிமையும் அறிவாற்றலும் கூடும் என்பதில் ஐயமில்லை.

कट्वम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।

आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ।। १७ - ९ ।।

கட்வம்லலவணாத்யுஷ்ணதீக்ஷ்ணரூக்ஷவிதாஹிநः ।
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா துः க்கஶோகாமயப்ரதாः ।। 17 - 9 ।।

பதவுரை

(அதி)கடுः - மிகவும் கசப்பான, **(அதி) அம்லः** - மிகவும் புளிப்பான, **(அதி)லவணः** - மிகவும் உப்பான, **(அதி) உஷ்ணः** - மிகவும் சூடான, **(அதி)தீக்ஷ்ணः** - மிகவும் காரமான, **(அதி) ரூக்ஷः** - கடித்து உண்பதற்கு மிகவும் கடினமான, **(அதி) விதாஹிநः** - வயிற்றில் எரிச்சலை ஏற்படுத்தக்கூடிய, **துः க்க-ஶோக-ஆமய-ப்ரதாः** - உண்ணும்போது மனதிற்குத் துன்பத்தைக் கொடுத்து, மனதில் நல்ல எண்ணங்களை வளரவிடாமல் தீய எண்ணங்களை வளர்த்து, நோயைக் கொடுக்கக்கூடிய, **ஆஹாராः** - உணவுகள், **ராஜஸஸ்ய** - ரஜோகுணத்தை உடையவர்களுக்கு, **இஷ்டாः** - விருப்பமானவை.

பொழிப்புரை

மிகவும் கசப்பான, மிகவும் புளிப்பான, மிகவும் உப்பான, மிகவும் சூடான, மிகவும் காரமான, கடித்து உண்பதற்கு மிகவும்

Downloaded from **www.omkaravidya.com**

கடினமான, வயிற்றில் எரிச்சலை ஏற்படுத்தக்கூடிய, உண்ணும்போது மனதிற்குத் துன்பத்தைக் கொடுத்து, மனதில் நல்ல எண்ணங்களை வளரவிடாமல் தீய எண்ணங்களை வளர்த்து, நோயைக் கொடுக்கக்கூடிய உணவுகள் ரஜோகுணத்தை உடையவர்களுக்கு விருப்பமானவை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ராஜஸ குணமுடையவர்கள் விரும்பி உண்ணும் உணவைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

நம்முடைய உணவில், கசப்பு, புளிப்பு முதலான அறுசுவையும் இருக்க வேண்டும். ஆனால் அவை அளவாக இருக்க வேண்டும்.

ராஜஸர்கள் அளவுக்கு மீறிய கசப்பு, புளிப்பு, உப்பு, சூடு, காரம், கடினத்தன்மை மிக்க உணவுகளையும், வயிற்றில் எரிச்சலைத் தரக்கூடிய உணவுகளையும் விரும்பி உண்பார்கள்.

ரத்த அழுத்தம், சிறுநீரகம் தொடர்பான ப்ரச்சினைகளுக்கு, உப்பைக் குறைவாக உண்ண வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். மலைவாசி மக்கள், உணவில் தனியாக உப்பையே சேர்த்துக் கொள்வதில்லை என்று கூறுகிறார்கள். அவர்கள் நல்ல உடல் வலிமையுடன் உற்சாகமாக இருக்கிறார்கள்.

ரஜோகுணமுடையவர்கள், ஸத்வகுணத்தை விரும்பினால், இந்த உணவுகளை விட்டுவிட்டு, ஸத்வகுணத்திற்கேற்ற உணவுகளை உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

பொறுமையாக இதனைக் கடைப்பிடிக்க 45 நாட்கள் கூட ஆகலாம்.

அப்பொழுதுதான் தெளிந்த அறிவு, அமைதி, பரந்த மனம், நல்ல குணங்கள் ஆகியவற்றை நாம் பெற முடியும்.

ரஜோகுணமுடையவர்கள் உண்கின்ற உணவு, அந்த நேரத்திற்குத் துன்பத்தைத் தரும், வாய் எரியும், ஆனாலும் அதில் அவர்கள் இன்பம் காண்பார்கள். பின்னாலும் அது மனதைக் கெடுக்கும். உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் ஏற்படாது, எதிர்மறை எண்ணங்கள் ஓங்கும், நோயைக் கொடுக்கும்.

ராஜஸ உணவை உண்பதால், வயிற்றில் சங்கடம் உருவாகும், உடல் அசந்து போகும். உடல்நிலை சரியில்லாததால் மனதிற்கு ஏற்படும் துன்பம், மனதில் தவறான எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் ஏற்படும் துன்பம், உடலை சரிசெய்துகொள்ளவே முடியாதபடி நோயால் ஏற்படும் துன்பம் என இத்தனைத் துன்பங்களை ராஜஸ உணவுகள் கொடுக்கும் என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

ஆன்மிக ஸாதகர்கள் இத்தகைய உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்பது கருத்து.

यातयामं गतरसं पूति पर्युषितं च यत् ।

उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामसप्रियम् ।। १७ - १० ।।

Downloaded from **www.omkaravidya.com**

யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் ।
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜநம் தாமஸப்ரியம் ।। 17 - 10 ।।

பதவுரை

யத் போஜநம் - எந்த உணவானது, **யாதயாமம்** - சரியாகப் பக்குவப்படுத்தப்படாததும், **கதரஸம்** - சமைத்து வெகு நேரமாகி சத்துகள் இல்லாததும், **பூதி** - ஊசிப் போய் துர்நாற்றம் வீசுவதும், **பர்யுஷிதம்** - இரவைக் கடந்த உணவும், **உச்சிஷ்டம் அபி** - எல்லோரும் உண்ட பின்னர் மீதம் உள்ள உணவும், **அமேத்யம் ச** - நைவேத்யத்திற்கு உகந்தது அல்லாதவையோ (**தாநி** - அவை), **தாமஸப்ரியம்** - தாமஸ குணம் உடையவர்களுக்கு விருப்பமானவை.

பொழிப்புரை

சரியாகப் பக்குவப்படுத்தப்படாத உணவு, சமைத்து வெகு நேரமாகி சத்துகள் இல்லாத உணவு, ஊசிப் போய் துர்நாற்றம் வீசக்கூடிய உணவு, இரவைக் கடந்த உணவு, எல்லோரும் உண்ட பின்னர் மீதம் உள்ள உணவு, நைவேத்யத்திற்கு உகந்ததாக இல்லாத உணவு - இத்தகைய உணவுகள், தாமஸ குணம் உடையவர்களுக்கு விருப்பமானவை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தமோகுணம் உடையவர்கள் எத்தகைய உணவுகளை விரும்பி உண்பார்கள் என்று இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆன்மிக ஸாதகர்களாகிய நாம், ரஜோகுண உணவுகளையும் தமோகுண உணவுகளையும் விட்டுவிட வேண்டும் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

யாதயாமம் என்பதற்கு **மந்தபக்வம்** என்று ஆதிசங்கரர் பொருள் கூறுகிறார். சரியாகப் பக்குவப்படுத்துவதற்குரிய நேரத்தைக் கொடுக்காமல், சீக்கிரமே எடுத்துவிடுகின்ற உணவு - வேகாத அரிசி போன்றவை. வெந்ததோ வேகவில்லையோ, தமோகுணம் படைத்தவன் அதனை வேக வேகமாக உண்பான்.

ஒவ்வோர் உணவும் பக்குவமாவதற்கு, சமைப்பதற்கு உரிய காலத்தைக் கொடுக்க வேண்டும்.

கதரஸம் - அதிலுள்ள சத்தெல்லாம் நீங்கிவிட்டது என்று பொருள். சமைத்து நான்கு மணி நேரத்திற்குள் சாப்பிட வேண்டும் என்று சொல்வர்.

பூதி - துர்நாற்றத்துடன் கூடிய, ஊசிப் போன உணவுகள்.

பர்யுஷிதம் - முந்தைய நாள் சமைத்த உணவை இரவு வைத்திருந்து, அடுத்த நாள் உண்பது. இரவைக் கடந்த உணவை உண்பது தமோகுணத்தை வளர்க்கும்.

உச்சிஷ்டம் - எல்லோரும் உண்ட பிறகு மீதமுள்ள உணவு. இலையில் மீதமுள்ள உணவை உண்ணுதல் தமோகுணத்தை வளர்க்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

இன்று நம் நாட்டில் உணவில்லாமல் தவிப்பவர்கள் பலர், உணவை வீணாக்குபவர்களும் பலர். இது ஒரு சமூக ப்ரச்சினை.

யாருக்கும் கொடுக்க முடியாமல் மீந்து போன உணவைப் புழு பூச்சிகள் உண்ணும். அவற்றுக்குக் கொடுக்கலாம். அந்தக் காலத்தில் விவசாயம் சார்ந்த வாழ்க்கைமுறையில், உணவை ஏதோ ஒரு ஜீவனுக்குக் கொடுத்துவிடுவார்கள்.

உணவை வீணாக்கக் கூடாது என்று வேதம் சொல்கிறது. அதே நேரத்தில் வீணான உணவை உண்டு, நம் உடலையும் நாம் வீணாக்கிக் கொள்ளக்கூடாது.

சில ஸம்ப்ரதாயங்களில் குரு உண்ட உணவை உட்கொள்ளும் பழக்கம் இருக்கிறது. ஸ்மார்த்த ஸம்ப்ரதாயங்களில் அப்படி இல்லை என்று ஸ்ரீபெல்லமகொண்ட ராமராயகவி என்ற உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

ஒருவர் உண்ட மிச்சத்தை உண்பது தவறு என்றே அவர் கூறுகிறார். சிலர், சில யோகி, மஹான்களின் உச்சிஷ்டத்தை உண்கிறார்கள். அது கொடுப்பவருக்கும் உண்பவருக்கும் பாபத்தைத் தரும் என்று ஸ்ரீராமராய கவி கூறுகிறார்.

கணவன் சாப்பிட்ட தட்டிலேயே மனைவி சாப்பிடுவது என்ற பழக்கம் சில வீடுகளில் காணப்படுகிறது. இப்பொழுது அது குறைந்துவிட்டது.

Downloaded from **www.omkaravidya.com**

கணவன் உணவை இறைவனுக்கு ஸமர்ப்பணம் செய்த பிறகு, அதில் சில பகுதிகளை எடுத்து மனைவிக்கு வைத்துவிட்டு, அதன் பின்னர் உணவை எச்சில் செய்து உண்பார்.

கணவன் உண்ட எச்சில் உணவை, மனைவி உண்ண வேண்டும் என்று சாஸ்த்ரத்தில் சொல்லப்படவில்லை. ப்ராணாக்னிஹோத்ரம் செய்த ப்ரஸாதத்தை மனைவிக்கு, தனியாக ஒரு பாத்திரத்தில் எடுத்து வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருவர் உண்ட மீதத்தை உண்பது, ஊட்டுவது போன்றவை தமோகுணத்தை வளர்க்கும். நம்முடைய விருப்பு வெறுப்புகளை வாழ்க்கையில் நுழைப்பதால், சாஸ்த்ர விதிகளையும் தர்மத்தையும் மீற வேண்டியிருக்கிறது. இவையெல்லாம் தவறு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அமேத்யம் - நைவேத்யத்திற்குத் தகுதி இல்லாதது. வழிபாட்டிற்கு உகந்ததாக இல்லாத உணவை, தமோகுணம் மிக்கவர்கள் விரும்பி உண்பார்கள்.

பூண்டு, வெங்காயம், மாம்ஸம் போன்றவை நைவேத்யத்திற்கு உகந்ததல்ல என்று கூறப்பட்டுள்ளது.

தமோகுணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட விரும்புபவர்கள் இத்தகைய உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்பது கருத்து.

Downloaded from **www.omkaravidya.com**

अफलाकाङ्क्षिभिर्यज्ञो विधिदृष्टो य इज्यते ।

यष्टव्यमेवेति मन: समाधाय स सात्त्विक: ।। १७ - ११ ।।

அபலாகாங்க்ஷிபிர்யஜ்ஞோ விதித்ருஷ்டோ ய இஜ்யதே ।
யஷ்டவ்யமேவேதி மந: ஸமாதாய ஸ ஸாத்த்விக: ।। 17 - 11 ।।

பதவுரை

அபலாகாங்க்ஷிபி: - பலனை விரும்பாதவர்களால், **விதித்ருஷ்ட:** - சாஸ்த்ரங்களிலிருந்து அறிந்தபடி (சாஸ்த்ர விதிமுறைகளின்படி), **மந:** - மனதை, **ஸமாதாய** - ஒருமுகப்படுத்தி, **ய: யஜ்ஞ:** - யாதொரு யஜ்ஞமானது, **யஷ்டவ்யம் ஏவ** - இந்த வேள்விகளைச் செய்யத்தான் வேண்டும், **இதி** - என்ற (உறுதியுடன்), **இஜ்யதே** - செய்யப்படுகிறதோ, **ஸ:** - அது, **ஸாத்த்விக: (யஜ்ஞ:)** - ஸாத்விக யஜ்ஞமாகும்.

பொழிப்புரை

பலனை விரும்பாமல், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள நெறிப்படி, மன ஒருமுகப்பாட்டுடன், சமூக நன்மையின்பொருட்டு, செய்துதான் ஆக வேண்டும் என்ற உறுதியுடன் செய்யப்படுவது ஸாத்விக யஜ்ஞமாகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸாத்விக யஜ்ஞத்தைப் பற்றி இந்த ச்லோகத்தில் உபதேசிக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

விதித்ருஷ்ட: - சாஸ்த்ர விதிகளைப் பார்த்துச் செய்தல்.

சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ள விதிகளைக் கடைப்பிடித்துச் செய்யப்படும் வேள்விகள் ஸாத்விகமானவை. நியமங்களைக் கடைப்பிடித்தால்தான் அவை உரிய பலனைத் தரும்.

இந்த வேள்விகள் தனி மனிதனுக்கானவை அல்ல, சமூகத்தின் நன்மையை முன்னிட்டுச் செய்யப்படுபவை. அவற்றின் பயன்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாதவை, ஆனால் சமூகத்திற்கு நன்மை பயப்பவை.

வேதங்களில், **ஸத்யம் வத। தர்மம் சர।** போன்ற விதி வாக்யங்கள் உள்ளன. இதைச் செய் என்று சொல்கின்ற விதி வாக்யங்களும், இதைச் செய்யாதே என்று கூறுகின்ற நிஷேத வாக்யங்களும் வேதங்களில் ஏராளமாக உள்ளன.

சாஸ்த்ர ப்ரமாணத்தின் வாயிலாக, தர்மத்தை அறிந்து செய்ய வேண்டும் என்பது கருத்து.

யஷ்டவ்யம் ஏவ - சமூக நன்மையை முன்னிட்டு, இந்த வேள்வியைச் செய்துதான் ஆக வேண்டும். இதைச் செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்ய வேண்டும். பொறுப்புணர்வுடன் செய்யப்படுகின்ற யஜ்ஞும் ஸாத்விக யஜ்ஞும்.

இதைச் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும் என்று எண்ணக் கூடாது. 'நாடு உனக்கு என்ன செய்தது என்று பார்க்காதே, நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்று பார்' என்று கூறுகிறார்கள். அதைப்போன்று, சமூகம் நம்மை மதித்தாலும்

Downloaded from **www.omkaravidya.com**

மதிக்காவிட்டாலும் சமூகத்திற்குச் செய்ய வேண்டியது நம் கடமை என்ற எண்ணத்துடன் செய்ய வேண்டும்.

மன ஒருமுகப்பாட்டுடன் செய்ய வேண்டும். இதைச் செய்வதால் என் மனம் அமைதி பெறும், தூய்மை பெறும், பரந்து விரியும், நல்ல பண்புகளைப் பெறும் என்ற எண்ணத்துடன் செய்ய வேண்டும்.

பலனை விரும்புபவனின் மனம் அலைபாயும், பலனிலேயே கவனம் செல்லும். பலனை விரும்பாதவர்களால்தான் மன ஒருமுகப்பாட்டுடன் வேள்வியைச் செய்ய முடியும்.

अभिसन्धाय तु फलं दम्भार्थमपि चैव यत् ।

इज्यते भरतश्रेष्ठ तं यज्ञं विद्धि राजसम् ।। १७ - १२ ।।

அபிஸந்தாய து பலம் தம்பார்த்தமபி சைவ யத் ।
இஜ்யதே பரதஸ்ரேஷ்ட தம் யஜ்ஞம் வித்தி ராஜஸம் ।। 17 - 12 ।।

பதவுரை

ஹே பரதஸ்ரேஷ்ட! - ஓ பரத வம்சத்தில் தலைசிறந்தவனே! **து** - மாறாக, **யத் (யஜ்ஞ:)** - எந்த (யஜ்ஞமானது), **பலம் அபிஸந்தாய** - உலகியல் பலனை முன்னிட்டு, **தம்பார்த்தம் அபி ச ஏவ** - தற்பெருமைக்காக (ஆடம்பரமாக, புகழை விரும்பி), **இஜ்யதே** - செய்யப்படுகிறதோ, **தம் யஜ்ஞம்** - அந்த யஜ்ஞமானது, **ராஜஸம்** - ராஜஸ யஜ்ஞம், (ரஜோ குணத்தை வளர்க்கும் யஜ்ஞம்), **(இதி) வித்தி** - என்று தெரிந்துகொள்வாயாக.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ பரத வம்சத்தில் தலைசிறந்தவனே! உலகியல் பலனை முன்னிட்டுச் செய்யப்படுவது, தற்பெருமைக்காக, புகழை விரும்பி ஆடம்பரமாகச் செய்யப்படுவது ராஜஸ யஜ்ஞும் என்று தெரிந்துகொள்வாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ராஜஸ வேள்வியைப் பற்றிக் கூறுகிறார்.

உலகியல் பலன்களான பணம், வசதி, வாகனங்கள், எடுபிடி ஆட்கள் போன்றவற்றை விரும்பியும், இறந்த பிறகு ஸ்வர்கத்தில் நல்ல இன்பமான வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் செய்யப்படுவது ராஜஸ யஜ்ஞும்.

தற்பெருமையுடனும் ஆடம்பரத்துடனும் செய்தல், தான் தர்மத்தைச் செய்கிறோம் என்று பலருக்கும் தம்பட்டம் அடித்துக்கொண்டு செய்தல் ஆகியவை ராஜஸ யஜ்ஞும்.

பொதுவாக, இது போன்ற யஜ்ஞத்தின் மூலம் புகழைத் தேடுகிறார்கள். ஆனால் இவ்வாறு பெயர், புகழுக்காகச் செய்தால், செய்யப்படும் புண்யங்கள் போய்விடும் என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது.

புண்யம் நஶ்யதி கீர்த்தநாத் ।

செய்த புண்யத்தை வெளியில் சொன்னால், அந்த புண்யம் போய்விடும் என்று சொல்வர்.

Downloaded from **www.omkaravidya.com**

பாபத்தை மறைத்து, செய்த புண்யத்தை விளம்பரப்படுத்துவது, ராஜஸ குணம் படைத்தவர்களின் இயல்பு.

எந்த மனிதனாவது, தான் செய்த பாபத்தை விளம்பரப்படுத்துவானா? பாபத்தை விளம்பரப்படுத்தினால், பலர் அறிய கூறினால், பாபமும் போய்விடும் என்று சாஸ்த்ரம் கூறியிருக்கிறது.

ரஜோகுணம், ஆன்மிக முன்னேற்றத்திற்குப் பயன்படாது. ஆன்மிக வாழ்வில் முன்னேற விரும்புபவன், ரஜோகுண தன்மையுள்ள யஜ்ஞங்களைச் செய்யக்கூடாது.

அதாவது, யஜ்ஞங்களை பலன்களை விரும்பிச் செய்யக்கூடாது, ஆடம்பரமாகச் செய்யக்கூடாது. அமைதியாக, பொறுமையாகச் செய்ய வேண்டும்.

புகழை விரும்பிச் செய்யக்கூடாது, சமூகத்தின் நன்மையைக் கருதிச் செய்ய வேண்டும்.

विधिहीनमसृष्टान्नं मन्त्रहीनमदक्षिणम् ।

श्रद्धाविरहितं यज्ञं तामसं परिचक्षते ।। १७ - १३ ।।

விதிஹீநமஸ்ருஷ்டாந்நம் மந்த்ரஹீநமதக்ஷிணம் ।
ஶ்ரத்தாவிரஹிதம் யஜ்ஞம் தாமஸம் பரிசக்ஷதே ।। 17 - 13 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

விதிஹீநம் - விதியை மீறியது, **அஸ்ருஷ்டாந்நம்** - அன்னதானம் இல்லாமல் செய்யப்படுவது, **மந்த்ரஹீநம்** - மந்த்ரங்களில் குறைபாடுகளுடன் செய்யப்படுவது, **அதக்ஷிணம்** - சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட தக்ஷிணை இல்லாமல் செய்யப்படுவது, **ஶ்ரத்தாவிரஹிதம்** - ச்ரத்தை குறைவுடன் (நம்பிக்கையின்றி) செய்யப்படுவதுமான, **யஜ்ஞம்** - யஜ்ஞமானது, **தாமஸம்** - தாமஸ யஜ்ஞம், **(இதி) பரிசக்ஷதே** - (என்று) சொல்லப்படுகிறது.

பொழிப்புரை

விதியை மீறிச் செய்யப்படுவது, அன்னதானம் இல்லாமல் செய்யப்படுவது, மந்த்ரங்களில் குறைபாடுகளுடன் செய்யப்படுவது, சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி தக்ஷிணை இல்லாமல் செய்யப்படுவது, ச்ரத்தை குறைவுடன், நம்பிக்கையின்றி செய்யப்படுவது தாமஸ யஜ்ஞம் என்று சொல்லப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தாமஸ யஜ்ஞத்தைப் பற்றிக் கூறுகிறார். இத்தகைய யஜ்ஞத்தை நாம் செய்யக் கூடாது என்ற அறிவை நாம் பெறுவதற்காக, இந்த உபதேசத்தைச் செய்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ர விதியைக் கடைப்பிடிக்காமல், விதியை மீறி, மனம் போன போக்கில், அவரவர் விருப்பு வெறுப்புப்படி செய்கின்ற யஜ்ஞங்கள் தாமஸ யஜ்ஞங்களாகும்.

எந்த வேள்வியைச் செய்தாலும், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த பெரியோர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். அத்தகைய அன்னதானமில்லாமல் செய்யப்படுவது தாமஸ யஜ்ஞம்.

அந்தக் காலத்தில், அறிவிலும் ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறந்து விளங்குபவர்களைப் பார்த்துக்கொள்வது சமூகத்தின் பொறுப்பாக இருந்தது.

மந்த்ரங்களைக் குறைத்துச்சொல்லுதல், மந்த்ரங்களைத் தவறாக உச்சரித்தல் தாமஸ யஜ்ஞமாகும். ஸ்வரங்கள், எழுத்துகள் முதலியவற்றில் குறையுடன் மந்த்ரங்களை உச்சரித்தால், மந்த்ரங்கள் பலிக்காது, உரிய பலனைத் தராது.

மேலும், மந்த்ரத்தைச் சொல்கின்றவர்களின் வாழ்க்கைமுறை சரியாக இருந்தால்தான் மந்த்ரம் பலிக்கும்.

சாஸ்த்ரத்தில் என்ன தக்ஷிணை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அதனை முறையாகக் கொடுக்க வேண்டும்.

பத்து ரூபாய் வைத்திருப்பவன் ஒரு ரூபாயை தானம் செய்வதும், பத்து கோடி வைத்திருப்பவன், ஒரு கோடி தானம் செய்வதும் ஸமமாகவே கருதப்படும்.

Downloaded from **www.omkaravidya.com**

யாகசாலைக்குள் கொடுக்கப்படுவதற்கு, தக்ஷிணை என்று பெயர். யாகசாலைக்கு வெளியே கொடுக்கப்படுவதற்கு, தானம் என்று பெயர். சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளபடி தக்ஷிணை கொடுக்காமல் செய்யப்படும் யஜ்ஞும், தாமஸ யஜ்ஞும் என்று பகவான் கூறுகிறார்.

எல்லோரும் செய்கிறார்களே என்று ச்ரத்தையில்லாமல் செய்வது தாமஸ யஜ்ஞமாகும். சாஸ்த்ரத்தைத் தெரிந்து, எதற்காகச் செய்கிறோம் என்பதைத் தெரிந்து, நடக்கும் என்ற ச்ரத்தையுடன் செய்ய வேண்டும்.

ச்ரத்தையில்லாமல், வீட்டிலிருப்பவர்களின் வற்புறுத்தலாலோ, சமூகத்தின் அழுத்தத்தினாலோ செய்தல் தாமஸ யஜ்ஞமாகும். அப்படிச் செய்தால், அந்த கர்மா பலிக்காது. தமோகுணத்துடன் இருப்பவர்கள் இப்படிப்பட்ட வேள்விகளைச் செய்கிறார்கள்.

நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு என்று பாடினார் மஹாகவி பாரதியார்.

விதியை மீறி, அன்னதானமில்லாமல், மந்த்ரங்களில் குறைபாட்டுடன், தக்ஷிணையில்லாமல், நம்பிக்கையில்லாமல் - இப்படிப்பட்ட மனப்பான்மையுடன் வேள்விகளைச் செய்வதால், தமோகுணம் வளரும்.

பகவான் கூறுகின்றவற்றில் ரஜோகுணம், தமோகுணங்களை வளர்க்கின்றவற்றை விட்டுவிட வேண்டும். ஸத்வ குணத்தை வளர்த்துக் கொள்ளக்கூடியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

देवद्विजगुरुप्राज्ञपूजनं शौचमार्जवम् ।

ब्रह्मचर्यमहिंसा च शारीरं तप उच्यते ।। १७ - १४ ।।

तेवத்விஜகுருப்ராஜ்ஞபூஜநம் ஶௌசமார்ஜவம் ।
ப்ரஹ்மசர்யமஹிம்ஸா ச ஶாரீரம் தப உச்யதே ।। 17 - 14 ।।

பதவுரை

தேவ-த்விஜ-குரு-ப்ராஜ்ஞ-பூஜநம் - இறைவடிவங்கள், இருபிறப்பாளர்கள், வீட்டு புரோஹிதர், பெரியோர்கள் ஆகியோரை வழிபடுதல், **ஶௌசம்** - உடல் தூய்மை, **ஆர்ஜவம்** - நேர்மையாக இருத்தல் (நேராக அமர்தல்), **ப்ரஹ்மசர்யம்** - பாலுணர்ச்சியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் (புலனடக்கத்துடன் இருத்தல்), **அஹிம்ஸா ச** - பிறரைத் துன்புறுத்தாமலிருத்தல், **ஶாரீரம்** - உடலால் செய்யப்படும், **தப:** - தவம், **(இதி) உச்யதே** - (என்று) சொல்லப்படுகிறது.

பொழிப்புரை

இறைவடிவங்கள், இருபிறப்பாளர்கள், வீட்டு புரோஹிதர், பெரியோர்கள் ஆகியோரை வழிபடுதல், உடல் தூய்மை, நேர்மையாக இருத்தல், நேராக அமர்தல், பாலுணர்ச்சியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், அதாவது புலனடக்கத்துடன் இருத்தல், பிறரைத் துன்புறுத்தாமல் இருத்தல் ஆகியவை உடலால் செய்யப்படும் தவம் என்று சொல்லப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் உடலால் செய்கின்ற தவத்தைப் பற்றிக் கூறுகிறார். சரீர ப்ரதானமான செயல்கள் இங்கு கூறப்படுகின்றன.

கோயில்களிலும் வீடுகளிலும் சிவன், விஷ்ணு முதலான இறைவடிவங்களை வலம் வந்து நமஸ்காரம் செய்து, உடலால் நம்முடைய பக்தியை, பணிவை, மரியாதையை வெளிப்படுத்த வேண்டும்.

கோளில் பொறிஇல் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (திருக்குறள் – ୨)

இறைவனை வழிபடாத உடல் பயனற்றது என்கிறார் திருவள்ளுவர். உடலால் இறைவனைப் போற்றி வணங்குவதால், உடல் புனிதம் பெறும், உடலுக்குத் தெய்வீகத்தன்மை வரும். உடலில் நோய்கள் குறையும்.

இறைவனை உடலால் போற்றி வழிபடுவதால், உடலுக்கு இவ்வாறு பல நன்மைகள் ஏற்படும். அத்ருஷ்ட சக்திகளால் ஏற்படும் பயன்கள் நமக்கு ப்ரத்யக்ஷமாக விளங்கும்.

பூஜநம் என்றால் நமஸ்காரம் செய்வது மட்டுமல்ல, மலர்களைப் பறித்தல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல் போன்ற நம்மால் இயன்ற சேவைகளை உடலால் செய்தலும் இதில் அடங்கும்.

உடலால் நாம் தவம் செய்வதற்குத்தான், இத்தகைய சேவைகளைச் செய்வதற்குத்தான் பெரிய கோயில்களைக்

Downloaded from **www.omkaravidya.com**

கட்டி, நந்தவனங்களை அமைத்து, கூட்டி சுத்தம் செய்வது, மணி அடிப்பது முதலான எத்தனையோ புண்ய காரியங்களைச் செய்வதற்கு நம் முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கோயிலை மையமாக வைத்தே, ஒட்டுமொத்த சமூகத்தின் வாழ்க்கையும் அமைந்திருக்கிறது. கோயில், நதிக்கரைகள், கால்நடைகள், விவசாயம் - இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் நம்முடைய பண்பாடும் கலாச்சாரமும் இருந்திருக்கின்றன.

த்விஜ: - வேதங்களை ஓதி, வேத மந்த்ரங்கள் பலிக்கும் வண்ணம் வாழும் இருபிறப்பாளர்கள் என்று பொருள். தாயின் வயிற்றில் பிறப்பது ஒன்று, உபநயன ஸம்ஸ்காரம் செய்து, வேதங்களைக் கற்கத் தொடங்குவது மேலும் ஒரு பிறப்பாகிறது. ஆகவே இருபிறப்பாளர்கள்.

குரு: - வீட்டு புரோஹிதர், சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள கர்மங்களை நமக்குச் செய்துவைக்கக் கூடியவர் என்று பொருள். குரு என்ற சொல்லுக்கு இப்படியொரு அர்த்தம், மநு ஸ்ம்ருதியில் கூறப்பட்டுள்ளது.

பொதுவாக, குரு என்ற சொல்லுக்கு, நமக்கு அறிவைக் கொடுத்து அறியாமையை நீக்குபவர் என்று பொருள். அறிவிலும் பண்பிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்த பெரியவர் என்றும் பொருள் கொள்ளலாம்.

ப்ராஜ்ஞ: - நாம் நேரடியாக ஒருவரிடம் சாஸ்த்ரங்களைப் படிப்போம். ஆனால், எத்தனையோ மஹான்கள், பண்டிதர்கள்

Downloaded from **www.omkaravidya.com**

இருப்பார்கள். அவர்கள் நமக்கு நேரடியாகப் பாடம் கற்றுத் தரவில்லையென்றாலும், அவர்களையும் மதிக்க வேண்டும்.

கோயில்கள், அந்தணர்கள், குருமார்கள், பெரியோர்கள் ஆகியோரை உடலால் வீழ்ந்து வணங்கி, அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

ஶௌசம் - முற்காலங்களில் மண்ணையும் தண்ணீரையும் கொண்டு உடலை அடிக்கடி சுத்தப்படுத்திக்கொள்வார்கள். உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல், உடலால் செய்கின்ற தவமாகும்.

ஆர்ஜவம் - எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் நேர்க்கோட்டில் இருத்தல், நேராக அமர்தல் என்றும் பொருள் கொள்ளலாம். தேவையில்லாமல் உடலை அடிக்கடி அசைக்கக் கூடாது. **அசாபலம் (16-2)** உடலை அடிக்கடி அசைக்காமல் இருத்தல் ஒரு தெய்வீக குணம் என்று பகவான் ஏற்கெனவே கூறினார்.

மிக விறைப்பாகவோ, மிகத் தொய்வாகவோ உடலை வைத்துக்கொள்ளக்கூடாது.

ப்ரஹ்மசர்யம் - பாலுணர்ச்சியை ஒழுங்குப்பாட்டில் வைத்திருத்தல். இனக்கவர்ச்சியின் காரணமாக, இந்த உடலில் இருக்கின்ற ஆற்றலை இழக்காமல் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுதல்.

க்ருஹஸ்தர்கள் இந்த விஷயத்தில் தர்மமான முறையில் அனுபவிக்கலாம். ஆனால் வானப்ரஸ்தர்களும் துறவிகளும்

Downloaded from **www.omkaravidya.com**

இதில் முற்றிலுமாக விலகியிருக்க வேண்டும். உடலை மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும், புலனடக்கத்துடன் இருக்க வேண்டும்.

அஹிம்ஸா - எந்த உயிரையும் உடலால் துன்புறுத்தாமல் இருத்தல்.

இது உடலால் செய்கின்ற தவம் என்று கூறப்பட்டாலும், இதில் மனமும் பேச்சும் அடங்கியிருக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உடலை ப்ரதானமாக உடைய நாம், காயிக கர்மங்களை, உடலால் செய்கின்ற செயல்களை முறையாகச் செய்ய வேண்டும்.

அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம் ।
விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா: தைவம் சைவாத்ர
பஞ்சமம் ।। 18 - 14 ।।

ஸரீரவாங்மநோபிர்யத்கர்ம ப்ராரபதே நர: ।
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய
ஹேதவ: ।। 18 - 15 ।।

உடல், மனம், வாக்கால்தான் நாம் செய்ய வேண்டிய அனைத்துச் செயல்களையும் செய்கிறோம். அவற்றை தர்மமாகச் செய்தாலும், அதர்மமாகச் செய்தாலும், செயலைச் செய்வதற்கு இடம், கருவி, செய்பவன், விதவிதமான செயல்கள், அதற்கு அருள்புரிகின்ற சக்தி என இவையெல்லாம்

Downloaded from **www.omkaravidya.com**

சேர்ந்துதான் ஒரு செயல் நிகழ்கிறது என்று பகவான் பின்னால் கூறுவார்.

தபஸ் என்றால் ஒழுங்குபடுத்திக்கொள்ளுதல் என்று பொருள். நாமாக விரும்பி, தர்மமான முறையில் நம்மை வருத்திக்கொள்ளுதல். கஷ்டமாக இருந்தாலும், அது நல்லது என்ற எண்ணத்துடன், இந்த உடலை பகவான் எதற்காகக் கொடுத்திருக்கிறாரோ, அதற்குப் பயன்படுத்த வேண்டும்.

இந்த உடல் தெய்வீகமாக, புனிதமானதாக ஆக வேண்டும். வருங்காலத் தலைமுறைக்கு இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைமுறையைக் கற்றுக்கொடுக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत् ।

स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते ।। १७ - १५ ।।

அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் ।
ஸ்வாத்யாயாப்யஸநம் சைவ வாங்மயம் தப உச்யதே ।। 17 - 15 ।।

பதவுரை

யத் - யாதொரு, **வாக்யம்** - சொல்லானது, **அநுத்வேககரம்** - பிறருடைய உணர்ச்சியைப் புண்படுத்தாததாகவும், எவருக்கும் துன்பம் தராததாகவும், **ஸத்யம்** - பொய் கலவாததாகவும், **ப்ரியம்** - கேட்பவர்களுக்கு இன்பம் தருவதாகவும், **ஹிதம் ச** - காலப்போக்கில் இன்பத்தை

Downloaded from **www.omkaravidya.com**

அதிகப்படுத்தி, நன்மையைச் செய்வதாக இருப்பதும், **ஸ்வாத்யாய அப்யஸநம் ச ஏவ** - (கற்ற மந்த்ரங்களையும், ச்லோகங்களையும் மறக்காமல் இருக்கும்பொருட்டு)த், திரும்பத் திரும்பச் சொல்லும் பயிற்சியும், **வாங்மயம் தப:** - வாக்கினால் செய்யப்படும் தவம், **(இதி) உச்யதே** - (என்று) சொல்லப்படுகிறது.

பொழிப்புரை

பிறரது உணர்ச்சியைப் புண்படுத்தாத சொற்கள், எவருக்கும் துன்பம் தராத சொற்கள், பொய் கலவாத சொற்கள், கேட்பவர்களுக்கு இன்பத்தைத் தரும் சொற்கள், காலப்போக்கில் இன்பத்தை அதிகப்படுத்தி, நன்மையைத் தரும் சொற்கள் ஆகியவற்றைச் சொல்லுதல், கற்ற மந்த்ரங்கள், ச்லோகங்கள் ஆகியவை மறக்காமல் இருக்கும்பொருட்டுத் திரும்பத் திரும்பச் சொல்லும் பயிற்சி ஆகியவை, வாக்கினால் செய்யப்படும் தவம் என்று சொல்லப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் வாக்கால் செய்கின்ற தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

பகவான் நமக்குப் பேசுகின்ற ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். அதனை நாம் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

யாகாவா ராயினும் நா காக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (திருக்குறள் - 127)

என்பார் திருவள்ளுவர்.

எதைக் கட்டுப்படுத்தவில்லை என்றாலும், நாக்கைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையெனில், நாம் பேசிய சொற்களால் துன்பப்பட நேரிடும் என்பது இதன் பொருள்.

இங்கு, கர்மேந்த்ரியமாகச் செயல்படுகின்ற நாக்கைப் பற்றி பகவான் கூறுகிறார். நாம் என்ன பேச வேண்டும் என்பதை முடிவு செய்யும் சக்தி நம்மிடம் இருக்கிறது. நம்மால் பேசவும் முடியும், பேசாமல் இருக்கவும் முடியும். அந்த சக்தியை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

எப்படிப் பேச வேண்டும், யாரிடம் பேச வேண்டும், எங்கு பேச வேண்டும், எவ்வளவு பேச வேண்டும், ஏன் பேச வேண்டும் என்றெல்லாம் முறை இருக்கிறது.

Communication skill என்று சொல்கிறார்கள். அது சரியாக இருக்க வேண்டும். உலகியல் சார்ந்த விஷயங்களுக்கு அதைப் பயன்படுத்துகிறோம்.

ஆனால், இங்குச் சொல்லப்படுவது ஆன்மிக முன்னேற்றத்திற்கு, மன அமைதியைப் பெறுவதற்கு, நாம் பேச்சில் கவனமாக இருக்க வேண்டும் என்பதாகும்.

நாக்கினால்தான் பலர் துன்பப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் புராணங்களில் படிக்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

பிறருடைய உணர்ச்சியைத் தூண்டாத வகையில் பேச வேண்டும். இது வாக்கினால் செய்கின்ற தவமாகும்.

அரசியல் விவாத மேடைகளில் உணர்ச்சிவசப்பட்டு, ஒருவரை ஒருவர் சொற்களால் தாக்கிக்கொள்வதைப் பார்க்கிறோம். தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுதல், ஒருவர் செய்கின்ற நல்ல காரியங்களைப் பற்றிக்கூட தவறாகப் பேசுதல் - இவற்றையெல்லாம் நாம் சமூகத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பிற உயிர்களுக்குத் துன்பம் தராத சொற்களைச் சொல்ல வேண்டும். **அநுத்வேககரம்** என்பதற்கு **ப்ராணிநாம் அது:க்ககரம்** என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுகிறார்கள்.

அதாவது, யாருக்கும் துன்பம் தராத சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

பண்பாட்டுடன் பேச வேண்டும், நேர்மறையான சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டும். எதிர்மறையான எண்ணங்களைத் தவிர்த்து, கவனமாகப் பேச வேண்டும்.

இது போன்ற சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பது நமக்குத் தெரிய வேண்டும். திருக்குறளில் **சொல்வன்மை** என்றே ஓர் அதிகாரம் இருக்கிறது.

நம்முடைய சொற்கள் புனிதமானவையாக இருக்க வேண்டும். சொற்களை, தெய்வீகமாக, ஸரஸ்வதியின் ஸ்வரூபமாக நாம் வழிபடுகிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸத்யம் - எப்படி அறிந்தோமோ, அப்படியே சொல்லுதல். ஒருவர் என்ன சொன்னாரோ, அதை அப்படியே சொல்ல வேண்டும். நாமாக சில வார்த்தைகளைச் சேர்த்துச் சொல்லக்கூடாது. உள்ளதை உள்ளவாறு சொல்லிப் பழக வேண்டும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (திருக்குறள் - 291)

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (திருக்குறள் - 300)

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

பொய் பேசினால், நம்முடைய ஆளுமையே சிதைந்துவிடும். அதனால் நிறைய மனநோய்கள் ஏற்படும். மருத்துவர்களால்கூட அதனைச் சரி செய்ய முடியாமல் போய்விடலாம்.

ஆகவே, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற பழக்கத்தை விட்டுவிட வேண்டும். பேசாமல்கூட இருக்கலாம், அந்த இடத்தை விட்டுக்கூட நகர்ந்துவிடலாம்.

ப்ரியம் - நம்முடைய சொற்கள், கேட்பவர்களுக்கு இன்பம் தருவதாக இருக்க வேண்டும். நாம் பேசுவது நமக்கும் பிடிக்க வேண்டும், கேட்பவர்களுக்கும் இன்பமாக இருக்க வேண்டும்.

ஹிதம் - நாம் பேசுகின்ற சொற்கள் பிற்காலத்திலும், காலப்போக்கிலும் இன்பத்தைத் தருவதாக இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரியம் என்பது அப்பொழுதே இன்பத்தைத் தருவது, **ஹிதம்** என்பது அப்பொழுது தெரியாது, காலப்போக்கில் இன்பத்தைத் தருவது.

சிலருக்கு நாம் பேசுவது அப்பொழுது பிடிக்காது, ஆனால் காலப்போக்கில் அதன் பயனை அவர்கள் உணர்வார்கள்.

சாஸ்த்ரம் என்ற சொல்லுக்கே இப்படிப் பொருள் கூறுவார்கள் –

ஹிதம் ஶாஸ்தி து:க்காத் த்ராயதே இதி ஶாஸ்த்ரம் ।

நல்ல விஷயங்களைக் கற்றுக்கொடுத்து, துன்பம் வராமல் பாதுகாக்கின்ற அறிவைத் தரக்கூடிய நூலுக்குத்தான் சாஸ்த்ரம் என்று பெயர்.

சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருப்பது, அந்த நேரம் ப்ரியமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் அதன் பயனை அனுபவிக்கும்போது, எவ்வளவு பொறுப்பு இருந்தால், எவ்வளவு அன்பு இருந்தால், நம்மிடத்தில் இதைச் சொல்லியிருப்பார்கள் என்று நாம் உணர்வோம்.

ஒரு வேளை ப்ரியமாக இல்லையென்றாலும், ஹிதத்தைச் சொல்லியாக வேண்டும் என்ற கருத்தும் இங்கு இருக்கிறது.

பேசுவதையே ஒரு விழிப்புணர்வுடன் நாம் செய்கின்றபோதுதான், இந்த உண்மை நமக்கு நன்றாக விளங்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

ச என்று சொல்லப்பட்டிருப்பதால், **அநுத்வேககரம் வாக்யம், ஸத்யம் வாக்யம், ப்ரியம் வாக்யம், ஹிதம் வாக்யம்** என்று இவற்றில் அதனைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவற்றில் ஒன்றுகூடக் குறையக்கூடாது. ஒன்று குறைந்தாலும், அது வாக்கினால் செய்யும் தவமாக ஆகாது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்வாத்யாய-அப்யஸநம் - சாஸ்த்ர விதிப்படி, அதற்கென்று நேரம் கொடுத்து, எப்படி உச்சரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அப்படி தனக்குப் பெரியோர்கள் கற்றுக் கொடுத்த மந்த்ரங்கள், ச்லோகங்கள் ஆகியவற்றை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

தான் கற்றவற்றை மறக்காமல் இருப்பதற்கான பயிற்சி இது. அதையும் தெய்வீகமாகச் செய்ய வேண்டும்.

இந்த மந்த்ரங்கள், ச்லோகங்கள் முதலானவை, கண்ணுக்குத் தெரியாத சக்தியின் மூலம் நம்முடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தக் கூடிய ஆற்றல் படைத்தவை.

நாம் அவற்றின் மதிப்பை உணர்ந்து, முறையாக ஓத வேண்டும். இப்படி நாள்தோறும் ஓதி, உருப்போட்டு மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்தால்தான், முன்பு கூறப்பட்ட நான்கு விஷயங்களை, அதாவது பிறரது உணர்ச்சிகளைத் தூண்டாமல் பேசுதல், பொய் கலவாமல் பேசுதல், இனிமையாகப் பேசுதல், ஹிதமாகப் பேசுதல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க முடியும்.

Downloaded from **www.omkaravidya.com**

मन:प्रसाद: सौम्यत्वं मौनमात्मविनिग्रह: ।

भावसंशुद्धिरित्येतत्तपो मानसमुच्यते ।। १७ - १६ ।।

मन:प्रसाद: सौम्यत्वं मौनमात्मविनिग्रह: ।
भावसंशुद्धिरित्येतत्तपो मानसमुच्यते ।। 17 - 16 ।।

பதவுரை

மந: ப்ரஸாத: - மனதின் தெளிவு, **ஸௌம்யத்வம்** - அகமலர்ச்சியை அன்பால் வளர்த்து, முகமலர்ச்சியின் மூலம் வெளிப்படுத்துதல், **மௌநம்** - தரமான, அளவான, நெறிப்படுத்தப்பட்ட எண்ணங்களை மனதில் வளர்த்தல், **ஆத்மவிநிக்ரஹ:** - உடல், மனம், புத்தி, பொறிகள் ஆகியவற்றை நெறிப்படுத்துதல், **பாவஸம்ஶுத்தி:** - (மனதில் வஞ்சனையின்றி) எல்லோருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற மனத்தூய்மையுடன் இருத்தல், **ஏதத்** - இவை, **மாநஸம் தப:** - மனதால் செய்யப்படும் தவம், **(இதி) உச்யதே** - (என்று) சொல்லப்படுகின்றது.

பொழிப்புரை

மனதின் தெளிவு, அகமலர்ச்சியை அன்பால் வளர்த்து, முகமலர்ச்சியின் மூலம் வெளிப்படுத்துதல், தரமான, அளவான, நெறிப்படுத்தப்பட்ட எண்ணங்களை மனதில் வளர்த்தல், உடல், மனம், புத்தி, பொறிகள் ஆகியவற்றை நெறிப்படுத்துதல், மனதில் வஞ்சனையின்றி, எல்லோருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற மனத்தூய்மையுடன்

Downloaded from **www.omkaravidya.com**

இருத்தல் - இவை மனதால் செய்யப்படும் தவம் என்று சொல்லப்படுகின்றது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் மனதால் செய்கின்ற தவத்தை அருளிச் செய்துள்ளார்.

மந: ப்ரஸாத: - மனதை அமைதியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுதல் ஒரு தவமாகும். தூய்மையாகவும் கவலைகள் இல்லாமலும் மனதை வைத்துக்கொள்ள வேண்டும். மனதில் பேராசையும் கோபமும் இருந்தால் தெளிவு இருக்காது.

ப்ரஸாத: என்றால், காற்றினால் அசைக்கப்படாத தடாக நீர் எப்படித் தெளிவாக இருக்குமோ, அப்படி மனதை வைத்துக்கொள்ளுதல். அதனை நாம் முயற்சிசெய்து ஸம்பாதிக்க வேண்டும். அதனால் அது தவமாகிறது.

மனதைத் தூய்மையாக, கவலையில்லாமல், அமைதியாக எப்பொழுதும் பாதுகாத்தல் ஒரு தவம். அது தானாக வராது, அதற்கு நம்முடைய முயற்சி தேவை.

ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையும் குறைப்பதன் மூலம்தான், நம்மால் அதனை ஸம்பாதிக்க முடியும். ஆசைகளைக் குறைப்பதற்கு, அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி, பகுத்தறிவு ஆகியவை வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (திருக்குறள் - 35)

என்று திருவள்ளுவர் கூறுவதுபோல், மனதில் பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொற்கள் ஆகியவை இல்லாமல் இருந்தால்தான் மனம் தூய்மையாக இருக்கிறது என்று பொருள்.

மனதை அமைதியாக வைத்துக்கொள்வதற்கு, மனத் தெளிவுடன், அமைதியுடன் இருக்கின்ற மக்களுடன் பழக வேண்டும்.

ஸௌம்யத்வம் - நல்ல மனதுடன் இருப்பது. மனதில் இருக்கின்ற அகமலர்ச்சியானது, முகத்தின் மூலம் வெளிப்பட வேண்டும். முகத்தில் தெளிவு, அமைதி, மலர்ச்சி, தூய்மை ஆகியவை வெளிப்படுகின்ற வண்ணம், மனமானது அன்பால் வ்யாபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அகத்திலே அன்பினோர் வெள்ளம்

என்று பாடினார் மஹாகவி பாரதியார்.

மனம் அன்பால் நிறைந்திருந்திருந்தால், நாம் எல்லோரிடமும் முகமலர்ச்சியுடன், அன்பாகப் பழகுவோம்.

அகமலர்ச்சியை வளர்த்து, அதனை முகமலர்ச்சியாக வெளிப்படுத்துதல் தவம். அதனை நாம் செயற்கையாகச் செய்தாலும் தவறில்லை. காலப்போக்கில் அது இயற்கையாக மாறும்.

Downloaded from **www.omkaravidya.com**

புறநோக்குடையவர்களாக, அலைபாய்ந்து அமைதியின்மையை உருவாக்கிக் கொள்வதற்கு மாறாக, அகநோக்குடையவர்களாக மன அமைதியை வளர்த்துக் கொள்ளுதலே **ஸௌம்யத்வம்** எனப்படும்.

மௌநம் - மனதில் எண்ணங்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுதல். தரமான, அளவான, நெறிப்படுத்தப்பட்ட எண்ணங்களை மனதில் வளர்க்க வேண்டும்.

சொற்களில் கட்டுப்பாடு இருக்க வேண்டுமெனில், மனதின் எண்ணங்களில் கட்டுப்பாடு இருக்க வேண்டும். அதனை முயற்சித்துத்தான் அடைய வேண்டும்.

எண்ணங்களைப் பொருத்தே நம் சொற்களும் செயல்களும், அவற்றின் விளைவுகளும், காலப்போக்கில் நம்முடைய முன்னேற்றமும் நடத்தையும் அமைகின்றன.

மனதில் எண்ணங்கள் இல்லாமலிருப்பது மௌனமல்ல. எண்ணங்கள் குறைவாக இருக்க வேண்டுமெனில், தெளிந்த மெய்யுணர்வைப் பெற வேண்டும். அப்பொழுது மனம் தானாகவே எண்ணங்களிலிருந்து விடுபட்டு அமைதியடையும்.

ஆத்மவிநிக்ரஹ: என்றால் மனதை நன்கு ஒருமுகப்படுத்துதல். புலனடக்கம், எண்ணங்களில் கட்டுப்பாடு, ஆழ்ந்து த்யானித்தல், மன ஒருமுகப்பாடு அனைத்தும் இதில் அடங்கும். இந்தத் தவம் அமைதியை வளர்க்கக் கூடியது.

Downloaded from **www.omkaravidya.com**

இவ்வாறு மனதை அமைதியாக வைத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இறைவனிடத்தில் ப்ரார்த்தனை செய்ய வேண்டும், நல்லோருடன் பழக வேண்டும்.

உயர்ந்த குறிக்கோளை அடைய முயற்சிப்பதற்கு, புறநோக்கு ஒரு தடைதான். இந்தக் காலத்தில் எல்லோருமே பெரிய படிப்பு படிக்க வேண்டும், பணம் ஸம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அது தவறல்ல. ஆனால் அதற்காக மன அமைதியை இழக்க வேண்டிய அவசியமில்லை.

ஆசைகள் அறவழியில் செல்லக்கூடியவையாக இருக்க வேண்டும். அவை மன அமைதியைக் கெடுக்கக்கூடாது.

மன அமைதிக்கென்று நாம் நேரடியாக உழைத்தால், நிச்சயமாக அது கிடைத்தே தீரும். உலகியல் கல்வி, பணம், பதவி, உறவுகள் ஆகியவற்றில் மறைமுகமாக மன அமைதியைத் தேடுகிறோம். ஆனால், மன அமைதிக்காக நேரடியாகத் தவம் செய்தால், அது நிச்சயமாகக் கிடைக்கும்.

மன அமைதி, மனத்தூய்மை ஆகியவற்றைப் பணத்தால் ஸம்பாதிக்கவே முடியாது. பணம் வேண்டாம் என்று பொருளல்ல, இதனைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

மன அமைதியை ஸம்பாதித்துவிட்டு நாம் செயல்புரிந்தால், செல்வம் தானாக நம்மைத் தேடி வரும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆத்மவிநிக்ரஹ: என்பதில் உள்ள **ஆத்மா** என்பது உடல், மனம், புத்தி ஆகியவற்றைக் குறிக்கும். தூய உணர்வு என்ற அர்த்தத்தில் இங்கு சொல்லப்படவில்லை.

மனதை தெய்வீக சக்தியுடன், ஆழ்ந்த ஆர்வத்துடன் நெறிப்படுத்தி, ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இறைவன் இந்த மனித உடலில் வாழும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்தக் குறுகிய கால வாழ்க்கைக்குள் எதை ஈட்ட வேண்டுமோ, அதை ஈட்ட வேண்டும். இவ்வாறு நாம் வாழ்ந்தால், நம்முடைய வருங்காலத் தலைமுறை, உண்மையான அமைதியை, ஆனந்தத்தை உணர்வார்கள்.

உடலை மட்டும் நன்கு கவனித்துக் கொள்வதோ அல்லது பொருளாதார வளர்ச்சியோ உண்மையிலேயே சமூகத்திற்கு நன்மையைச் செய்யுமா என்று நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பாவஸம்ஶுத்தி: என்பதற்கு **பரை: வ்யவஹாரகாலே அமாயாவித்வம் பாவஸம்ஶுத்தி:।** என்று ஆதிசங்கரர் உரை செய்துள்ளார். இதன் பொருள் - பிறருடன் நாம் பேசி, செயல்புரிகின்றபோது வஞ்சனையில்லாமல் இருக்க வேண்டும் என்பதாகும்.

பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணமில்லாமல், எல்லோருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டும். நேர்மையாக,

Downloaded from **www.omkaravidya.com**

பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். போலி வேஷம் போடாமலிருக்க வேண்டும்.

மனதில் நல்ல எண்ணத்துடன், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் இருக்க வேண்டும். நம்முடன் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும். நம்மைச் சார்ந்துள்ள சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும்.

சிலர் முகத்துக்கு நேராக மரியாதையுடன் பேசுவர். அவர்கள் விலகிச் சென்ற பிறகு, நிந்தித்துப் பேசுவர். அதற்கு நேர்மாறாக, எப்பொழுதும் தூய்மையான அன்புடன், மரியாதையுடன் சிந்திக்க வேண்டும், பேச வேண்டும்.

மனதில் இந்தப் பண்புகளை முயற்சிசெய்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.

श्रद्धया परया तप्तं तपस्तत्त्रिविधं नरैः ।

अफलाकाङ्क्षिभिर्युक्तैः सात्त्विकं परिचक्षते ।। १७ - १७ ।।

ஶ்ரத்தயா பரயா தப்தம் தபஸ்தத்த்ரிவிதம் நரை: ।

அபலாகாங்க்ஷிபிர்யுக்தை: ஸாத்த்விகம் பரிசக்ஷதே ।। 17 - 17 ।।

பதவுரை

பரயா ஶ்ரத்தயா - மேலான ஆழ்ந்த நம்பிக்கையுடன், **அபலாகாங்க்ஷிபி:** - நிலையற்ற உலகியல் பலன்களை விரும்பாமல், **யுக்தை:** - ஒருமுகப்பட்ட மனதுடன் கூடிய, **நரை:** - மனிதர்களால், **தப்தம்** - செய்யப்படும், **தத்** -

Downloaded from **www.omkaravidya.com**

அந்த, **த்ரிவிதம் தப:** - மூன்றுவிதமான (உடலாலும், சொற்களாலும், மனதாலும் செய்யக்கூடிய) தவமானது, **ஸாத்த்விகம்** - ஸாத்விக தவம், **(இதி) பரிசக்ஷதே** - (என்று) பெரியோர்களால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

பொழிப்புரை

மேலான ஆழ்ந்த நம்பிக்கையுடன், நிலையற்ற உலகியல் பலன்களை விரும்பாமல், ஒருமுகப்பட்ட மனதுடன் கூடிய மனிதர்களால், உடல், சொற்கள், மனம் ஆகிய மூன்றினாலும் மேற்கொள்ளப்படும் தவமானது, ஸாத்விகமான தவம் என்று பெரியோர்களால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தவத்தை மேலும் மூன்றாகப் பிரித்து, இந்த ச்லோகத்தில் ஸாத்விகமான தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

உடலாலும் வாக்காலும் மனதாலும் செய்யக்கூடிய அந்தத் தவமானது, ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று வகைப்படும்.

ச்ரத்தை என்பதற்கு ஆழ்ந்த நம்பிக்கை, ஆஸ்திக்ய புத்தி என்று பொருள். உடல் வேறு, உயிர் வேறு. நான் உயிராகத்தான் இருக்கிறேன், இறைவன் இருக்கிறார், என்னுடைய செயல்களுக்கேற்ற பலன்களை வழங்குகிறார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உயிர்களாகிய நமக்கு, இதற்கு முன்னர் பல பிறவிகள் இருந்திருக்கின்றன என்பதில் ச்ரத்தை வேண்டும். சமூகத்திற்கு நன்மை செய்து, இனி வரக்கூடிய பிறவிகளிலும் நல்லபடியாக வாழ வேண்டும் அல்லது இங்கேயே இப்பொழுதே மெய்ப்பொருளை உணர்ந்து, பிறவாப் பெருநிலையை உணர வேண்டும். இத்தகைய எண்ணத்துடன் தவத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் இவையெல்லாம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத விஷயங்கள். ஆனால் இவற்றை ஏற்றுக்கொண்டால், நமக்கும் சமூகத்திற்கும் பெரிய நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்துடன் தவத்தை மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதார மேம்பாடு, உறவுகள் போன்ற உலகியல் பலன்களை விரும்பாமல் மேற்கொள்ளப்படுவது ஸாத்விக தவமாகும். இத்தகைய தவத்தைச் செய்பவன், அறவழியில் கிடைக்கும் பொருள் இன்பங்களிலும்கூட நாட்டத்தை விட்டுவிடுகிறான்.

இவ்வுலகிலும் மேலுலகிலும் கிடைக்கக்கூடிய நிலையற்ற பலன்கள் வேண்டாம் என்று நினைக்கிறான். அவன் வேண்டுவது புண்யம், அமைதி, மனத்தூய்மை, தெளிந்த மெய்யறிவு, பேரின்பம் ஆகியவையே.

இது ஒருமுகப்பட்ட மனதுடன் செய்யப்படுகின்ற தவமாகும். யார் எவ்வளவு கவனச்சிதறல்களை ஏற்படுத்தினாலும்,

Downloaded from **www.omkaravidya.com**

அவற்றினால் மயங்காமல் மனதை ஒருமுகப்படுத்தி, தவத்தைச் செய்ய வேண்டும்.

सत्कारमानपूजार्थं तपो दम्भेन चैव यत् ।

क्रियते तदिह प्रोक्तं राजसं चलमध्रुवम् ।। १७ - १८ ।।

ஸத்காரமாநபூஜார்த்தம் தபோ தம்பேந சைவ யத் ।
க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸம் சலமத்ருவம் ।। 17 - 18 ।।

பதவுரை

ஸத்காரமாநபூஜார்த்தம் - பிறருடைய பாராட்டைப் பெறுவதன்பொருட்டும், **ச ஏவ** - மேலும், **தம்பேந ச** - (ஆஸ்திக புத்தியின்றி, தான் தர்மத்தைக் கடைப்பிடிப்பதை மற்றவர்களிடம் காட்டிக்கொள்ளும்பொருட்டு) டம்பத்துடனும், **யத்** - யாதொரு, **தப:** - தவமானது, **க்ரியதே** - செய்யப்படுகிறதோ, **தத்** - அது, **இஹ** - இந்த உலக வாழ்க்கையில், **ராஜஸம் (தப:)** - ரஜோ குணத்தை வளர்க்கும் தவம், **சலம்** - மிகக் குறைந்த நிலையற்ற பலனைக் கொடுப்பது, **அத்ருவம்** - நிச்சயமற்றது (புண்யத்தைத் தராதது), **(இதி) ப்ரோக்தம்** - (என்று) உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

பொழிப்புரை

ஆஸ்திக புத்தியின்றி, பிறருடைய பாராட்டைப் பெறுவதன்பொருட்டும், தான் தர்மத்தைக் கடைப்பிடிப்பதை மற்றவர்களிடம் காட்டிக்கொள்ளும்பொருட்டு டம்பத்துடனும்

Downloaded from **www.omkaravidya.com**

செய்யப்படும் தவம் ராஜஸமானது. அது, மிகக் குறைந்த நிலையற்ற பலனைக் கொடுப்பது, நிச்சயமற்றது, புண்யத்தைத் தராதது என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ரஜோகுணம் உடையவர்கள் செய்கின்ற தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

எல்லோரும் தன்னை நல்லவன் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக, பிறருடைய பாராட்டைப் பெறுவதற்காகச் செய்யப்படும் தவம் ராஜஸமானது.

மாநம் என்பது பாராட்டின் வெளிப்பாடு, பிறர் எழுந்து நின்று வணங்குதல் போன்றவை.

பாதத்தைப் புனித நீராட்டி, அர்ச்சனை செய்து, உணவு முதலானவை கொடுத்துத் தன்னை வழிபட வேண்டும் என்பதற்காகவும் சிலர் தவம் செய்கிறார்கள்.

நான் தர்மத்தைக் கடைப்பிடிக்கிறேன் என்று பிறருக்குக் காட்டிக்கொள்வதற்காகச் செய்கிறார்கள். அடுத்தடுத்து பிறவிகள் வருமே, அதில் நல்ல கதியைப் பெறுவது எப்படி அல்லது பிறவாப் பெருநிலையை அடைவது எப்படி என்றெல்லாம் இவர்கள் சிந்திப்பதில்லை.

உடல் வேறு, உயிர் வேறு. இந்த உயிர் உய்வு பெற வேண்டும். இந்த உடல் வாழ்க்கை இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற எண்ணங்கள்

Downloaded from **www.omkaravidya.com**

அவர்களுக்கு இருப்பதில்லை. ஆஸ்திக்ய புத்தி இல்லாமல் அவர்கள் தவம் செய்கிறார்கள்.

இத்தகைய தவம் தேஹாத்ம புத்தியைத்தான் பலப்படுத்தும், ஜீவாத்ம புத்தியை பலப்படுத்தாது.

இத்தகைய தவத்தை ரஜோகுணத்தை உடையவர்கள் செய்கிறார்கள். அல்லது இப்படித் தவம் செய்தால், ரஜோகுணம் வளரும் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

சலம் என்றால் மிகச் சிறிய அளவில்தான் இந்தத் தவம் பலன் அளிக்கும் என்று பொருள். வேஷதாரிகளின் தவத்தை, பெரியோர்கள் எளிதில் கண்டுபிடித்து விடுவார்கள்.

இத்தகைய தவத்திற்கு நிலையற்ற பலன்தான் கிடைக்கும். வேஷம் போடுவதால், இந்த உலகில் சிறிது மரியாதை கிடைக்கலாம். ஆனால் புண்யம் கிடைக்காது. அடுத்த பிறவி நல்லதாக அமையும் என்றெல்லாம் சொல்ல முடியாது. இது ஒரு பாபமாகக் கருதப்பட்டு, கீழான பிறவிகளைத் தரக்கூடும்.

வெளிவேஷத்திற்குப் பின்னால், உள்ளே ஓர் அமைதி இருக்க வேண்டும். இல்லையெனில் இத்தகைய தவத்தால் பயனில்லை. வெளிவேஷம் அகத்தைப் பண்படுத்துவதற்குப் பயன்பட வேண்டும்.

இத்தகைய தவம் செய்பவர்கள், சிறிது சிறிதாக ஸத்வகுணத்திற்கு மாற வேண்டும். ஸாத்விக தவம்

Downloaded from **www.omkaravidya.com**

நிச்சயமாகப் பலன் கொடுக்கும். அதன் பலன் நிலைத்திருக்கும்.

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।

परस्योत्सादनार्थं वा तत्तामसमुदाहृतम् ।। १७ - १९ ।।

மூடக்ராஹேணாத்மநோ யத்பீடயா க்ரியதே தப: ।
பரஸ்யோத்ஸாதநார்த்தம் வா தத்தாமஸமுதாஹ்ருதம் ।। 17 - 19 ।।

பதவுரை

மூடக்ராஹேண - (சாஸ்த்ர நெறியை மீறி பிடிவாதத்துடன், முட்டாள்தனமாக) அறிவின்றி, **ஆத்மந: பீடயா** - தனக்குத் துன்பத்தை ஏற்படுத்திக்கொண்டோ, **வா** - அல்லது, **பரஸ்ய** - பிறருடைய, **உத்ஸாதநார்த்தம்** - அழிவின்பொருட்டோ, **யத்** - யாதொரு (தவமானது), **க்ரியதே** - செய்யப்படுகிறதோ, **தத்** - அந்தத் தவமானது, **தாமஸம் தப:** - தாமஸ தவம், **(இதி) உதாஹ்ருதம்** - (என்று) சொல்லப்படுகிறது.

பொழிப்புரை

சாஸ்த்ர நெறியை மீறி பிடிவாதத்துடன், முட்டாள்தனமாக, அறிவின்றி, தனக்குத் துன்பத்தை ஏற்படுத்திக்கொண்டோ அல்லது பிறருடைய அழிவின்பொருட்டோ செய்யப்படும் தவம் தாமஸமானது என்று சொல்லப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தாமஸ தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

விவேகமில்லாதவர்களால் செய்யப்படும் தவம் இது. சரியான திட்டமிடல் இன்றி, முட்டாள்தனமாகச் செய்யப்படுவது.

சாஸ்த்ரங்களைச் சரியாகப் படிக்காமல், எல்லாவற்றையும் தவறாகப் புரிந்துகொள்பவர்களால், சிறிதளவுகூட பகுத்தறிவின்றி செய்யப்படும் தவம், தாமஸ தவமாகும்.

முற்காலங்களில் ஆன்மிகத்தை மையமாகக் கொண்ட உலகியல் வாழ்க்கை இருந்தது. இக்காலத்தில் உலகியல் வாழ்க்கையில் எங்கோ ஒரு மூலையில் ஆன்மிகம் இருக்கிறது.

முற்காலங்களிலும் விவரமில்லாதவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை இந்த ச்லோகம் காட்டுகிறது.

இவ்வாறு சிலர் அறிவில்லாமல், உடலை வருத்திக்கொண்டு தவம் செய்வார்கள். உடலை வருத்திக்கொள்பவன், உடலுக்குள் இருக்கின்ற என்னையும் கஷ்டப்படுத்துகிறான் (17-6) என்று பகவான் முன்பு கூறினார்.

தாமஸ ச்ரத்தையைப் பற்றிக் கூறும்பொழுது, பகவான் இதே விஷயத்தைத்தான் கூறினார்.

சாஸ்த்ரத்தில் சொல்லப்படாத விஷயங்களை இவர்களாகவே செய்வார்கள். இத்தகையவர்கள், பிறருடைய அழிவுக்காகவும் தவத்தை மேற்கொள்வார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।

देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम् ।। १७ - २० ।।

தாதவ்யமிதி யத்தாநம் தீயதேऽநுபகாரிணே ।

தேஶே காலே ச பாத்ரே ச தத்தாநம் ஸாத்த்விகம்

ஸ்ம்ருதம் ।। 17 - 20 ।।

பதவுரை

யத் தாநம் - யாதொரு தானமானது, **தாதவ்யம் இதி** - பிறருக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடன், **அநுபகாரிணே** - பயன் கருதாமல், **தேஶே** - தகுந்த (புண்ய) க்ஷேத்ரங்களிலும், **காலே ச** - தகுந்த (புண்ய) காலங்களிலும், **பாத்ரே ச** - கல்வி, ஒழுக்கம் முதலான தகுதி உடையவருக்கு, **தீயதே** - வழங்கப்படுகின்றதோ, **தத் தாநம்** - அந்த தானமானது, **ஸாத்த்விகம்** - ஸாத்விக தானம், **(இதி) ஸ்ம்ருதம்** - (என்று பெரியோர்களால்) கருதப்படுகிறது.

பொழிப்புரை

பிறருக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடன், பயன் கருதாமல், தகுந்த புண்ய க்ஷேத்ரங்களிலும், தகுந்த புண்ய காலங்களிலும், கல்வி, ஒழுக்கம் முதலான தகுதி உடையவருக்கு வழங்கப்படுவது ஸாத்விக தானம் என்று பெரியோர்களால் கருதப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஸாத்விக தானத்தைப் பற்றிக் கூறுகிறார்.

கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தானம் செய்ய வேண்டும். நாம் பிறந்திருப்பதே, பிறருக்கு வழங்குவதற்காகத்தான். இந்த தானத்தால் என்னென்ன பலன் கிடைக்கும் என்ற எண்ணமில்லாமல் தானம் செய்ய வேண்டும்.

கொடுக்க வேண்டும் என்பதை வேதமே சொல்கிறது.

ஶ்ரத்தயா தேயம் । அஶ்ரத்தயாऽதேயம்। ஶ்ரியா தேயம் ।

ஹ்ரியா தேயம் । பியா தேயம் । ஸம்விதா தேயம் ।

(தைத்திரீயோபநிஷத் - ஶீக்ஷாவல்லீ)

நமக்கும் சமூகத்திற்கும் நன்மை ஏற்படும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் கொடுக்க வேண்டும். நம்பிக்கையில்லாமல் கொடுக்கக்கூடாது.

நம்பிக்கையில்லாவிட்டாலும் கொடுத்துப் பழக வேண்டும். காலப்போக்கில் நம்பிக்கை வரும் என்று ஓர் உரையாசிரியர் கூறுகிறார். கொடுப்பதால் நம்மிடத்தில் செல்வம் வளரும், செல்வம் ஒன்றும் குறைந்துவிடாது என்ற எண்ணத்துடன் கொடுக்க வேண்டும். மகிழ்ச்சியுடன் கொடுக்க வேண்டும். நாம் கொடுப்பது குறைவுதான் என்ற எண்ணத்துடன் கொடுக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

கொடுக்கவில்லையென்றால், பின்னால் பெரிய துன்பம் வரும். ஏனெனில் சமூகத்திலிருந்து நாம் நிறைய பெற்றுக்கொண்டிருக்கிறோம். பெற்றதை விட அதிகமாக நாம் வழங்க வேண்டும். அறிவுபூர்வமாக, தகுதி அறிந்து தானம் செய்ய வேண்டும்.

வழங்குதல் என்பது செல்வத்தை மட்டுமல்ல, நம்மிடமுள்ள அறிவு, திறமை, நேரம், உழைப்பு என எல்லாவற்றையுமே தானம் செய்யலாம்.

நம்முடைய உடலையே சமூகத்திற்காகக் கொடுக்கலாம்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. (திருக்குறள் - 231)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

தானம் செய்ய வேண்டும், பெரியோர்கள் புகழும்படி வாழ வேண்டும். இதைத் தவிர, உலகில் வேறு ஊதியம் இல்லை.

பிறருக்கு வழங்குவதற்கும் அறநெறிப்படி வாழ்வதற்கும்தான் இறைவன் உயிருக்கு இந்த உடலைக் கொடுத்திருக்கிறார். உடலைப் பெற்றதன் பயனை அடைய வேண்டும்.

கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், பயன் கருதாமல் தரப்படுவது ஸாத்விக தானமாகும்.

கொடுத்தால், இவர் எனக்கு என்ன பதிலுக்குக் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்புடன் கொடுக்கக்கூடாது. அவ்வாறு

Downloaded from **www.omkaravidya.com**

எதிர்பார்ப்பில்லாமல் கொடுக்கப்படுவதுதான் ஸாத்விக தானம்.

ஓர் ஆசிரியர், மாணவர்களுக்கு அறிவை வழங்கும்போதுகூட, நீ எனக்கு எதுவும் செய்ய வேண்டாம், சமூகத்திற்குப் பிற்காலத்தில் நன்மை செய் என்று சொல்லி அறிவுறுத்த வேண்டும்.

எதிர்பார்ப்பின்றி தானம் செய்வதால், உயர்ந்த புண்யங்கள் கிடைக்கும், அதில் சந்தேகமில்லை. தானம் செய்வதன் நோக்கம் நம் கையில்தான் இருக்கிறது.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை (திருக்குறள் - 221)

என்றார் திருவள்ளுவர். வறியவராக இல்லாவிட்டாலும், சிலர் உயர்ந்த நோக்கத்திற்காகப் பொருளீட்டாமல் இருப்பார்கள். அத்தகையவர்களைக் கவனித்துக்கொள்வது நமது கடமை. அவர்கள் நமக்கு ப்ரதி உபகாரம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

சமூகத்தின் தேவைகளை அறிந்து, உரிய காலத்தில் தானம் செய்ய வேண்டும்.

புண்ய க்ஷேத்ரங்களுக்குச் சென்று தானம் செய்வது மிகவும் சிறப்பானது. மாதப் பிறப்பு, அமாவாஸ்யை, க்ரஹணம் போன்ற புண்ய காலங்களில் தானம் செய்வதும் சிறப்பானது. தானம் கொடுக்கும்போது சொல்லக்கூடிய ச்லோகங்கள் இருக்கின்றன. அவற்றைச் சொல்லி தானம் செய்வதும் சிறந்தது. உதாரணத்திற்கு,

Downloaded from **www.omkaravidya.com**

சத்ரம் வர்ஷாதபத்ராணம் வ்ரதகாலே ஸுகப்ரதம் ।
அஸ்மாத் அஸ்ய ப்ரதானேந அத: ஶாந்திம் ப்ரயச்ச மே ।।

'மழை பெய்தாலும் வெய்யில் அடித்தாலும் உடலைக் காப்பாற்றக்கூடிய ஸாதனமாக இருப்பது, வ்ரத காலத்தில் பயன்படக்கூடியது இந்தக் குடை, இதனை வழங்குவதன் மூலம் நான் மன அமைதியை விரும்புகிறேன்' என்று சொல்லி, தானம் கொடுப்பார்கள்.

படிப்பு, ஒழுக்கம், தகுதி ஆகியவற்றைப் பார்த்து, தானம் கொடுக்க வேண்டும். தானம் பெறுபவரை, கடவுளின் வடிவமாகவே கருதி தானம் கொடுக்க வேண்டும்.

விஷ்ணுவின் வடிவமாக விளங்கும் இவருக்கு, இந்தக் குடையை வழங்குகிறேன் என்று சொல்வார்கள்.

இது போன்று 64 தானங்கள், நம்முடைய சாஸ்த்ரங்களில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

यत्तु प्रत्युपकारार्थं फलमुद्दिश्य वा पुनः ।

दीयते च परिक्लिष्टं तद्दानं राजसं स्मृतम् ।। १७ - २१ ।।

யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திஶ்ய வா புந: ।
தீயதே ச பரிக்லிஷ்டம் தத்தாநம் ராஜஸம் ஸ்ம்ருதம் ।। 17 - 21 ।।

பதவுரை

து - மாறாக, **யத் (தாநம்)** - எந்த தானமானது, **ப்ரத்யுபகாரார்த்தம்** - இதனைக் கொடுத்தால், வேறு வகையில் அது தனக்குத்

Downloaded from **www.omkaravidya.com**

திரும்பி வரும் என்ற எண்ணத்துடன், **வா புந:** - அல்லது, **பலம்** - பலனை, **உத்திஶ்ய வா** - எதிர்நோக்கியோ (புண்யத்தை விரும்பியோ), **பரிக்லிஷ்டம் ச** - துன்பப்பட்டுக்கொண்டும் (நம்பிக்கையின்றி, விருப்பமின்றி, வருத்தத்துடன்), **தீயதே** - கொடுக்கப்படுகிறதோ, **தத் தானம்** - அந்த தானமானது, **ராஜஸம்** - ராஜஸ குணத்தை வளர்க்கும் தானம், **(இதி) ஸ்ம்ருதம்** - என்று கருதப்படுகிறது.

பொழிப்புரை

இதனைக் கொடுத்தால், வேறு வகையில் அது தனக்குத் திரும்பி வரும் என்ற எண்ணத்துடன் அல்லது புண்ய பலனை விரும்பி, துன்பப்பட்டுக்கொண்டு, நம்பிக்கையின்றி, விருப்பமின்றி, வருத்தத்துடன் செய்யப்படுகின்ற தானமானது, ராஜஸ குணத்தை வளர்க்கும் தானம் என்று கருதப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ராஜஸ தானத்தைப் பற்றிக் கூறுகிறார்.

ப்ரதிபலனை எதிர்பார்த்துச் செய்யப்படுகின்ற தானம் ராஜஸமானது. வேறு ஏதாவது பலனை விரும்பி தானம் செய்தலும் இதில் அடங்கும். இந்த தானத்தால் நான் புண்யத்தை அடைவேன், அதன் மூலம் பல நன்மைகளைப் பெறுவேன் என்ற எண்ணத்துடன் இவன் தானம் செய்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரத்யுபகாரார்த்தம் என்பது லௌகிக பலனைக் குறிக்கிறது. **பலம் உத்திஶ்ய** என்பது வைதிக, அத்ருஷ்ட பலனாகிய புண்யம் கிடைக்கும், அதனால் மேலான உலகங்கள், இன்பங்கள் கிடைக்கும் என்ற எண்ணம் இவனுக்கு இருப்பதைக் குறிக்கிறது. அல்லது இந்தப் பிறவியிலேயே நிறைய இன்பங்கள் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் தானம் செய்கிறான்.

ஸாத்விக தானமானது, புண்யத்தை விரும்பியும் செய்யப்படுவதில்லை. அங்கு மனத்தூய்மை, ஞானம், மோக்ஷம் மட்டுமே குறிக்கோள்.

ராஜஸ குணமுடையவன், கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று கஷ்டப்பட்டுக் கொண்டு கொடுக்கிறான். அதிகமாக செலவாகிறதே என்று மனதிற்குள் இவனுக்கு ஒரு வருத்தம் இருக்கிறது.

சாஸ்த்ரமும் சமூகமும் இதைச் செய்யச் சொல்லி நம்மை வற்புறுத்துகிறார்களே என்ற எண்ணம் இவனுக்கு இருக்கிறது.

இவையெல்லாம் உண்மையிலேயே பலனைக் கொடுக்குமா என்ற லேசான சந்தேகமும் ஒரு பக்கம் இருக்கும். இவனுக்கு அரைகுறையான ச்ரத்தைதான் இருக்கும்.

உலகியல் பலன் கிடைக்குமா, மேலுலக இன்பமாகிய வைதிக பலன் கிடைக்குமா என்றெல்லாம் இவன் பார்க்கிறான். செய்ய வேண்டியிருக்கிறதே என்று வருத்தத்துடன் கொடுக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

இது போன்ற எண்ணத்துடன் தானம் செய்தால், ரஜோகுணம்தான் வளரும். இப்படிப்பட்ட தானத்தைச் செய்யக்கூடாது என்பதற்காக பகவான் இதனைக் கூறுகிறார்.

अदेशकाले यद्दानमपात्रेभ्यश्च दीयते ।

असत्कृतमवज्ञातं तत्तामसमुदाहृतम् ।। १७ - २२ ।।

अदेशकाले यत्दानमपात्रेभ्यश्च दीयते ।

असत्क्रुतमवज्ञातं तत्तामसमुदाहृतम ।। 17 - 22 ।।

பதவுரை

யத் தாநம் - யாதொரு தானமானது, **அதேஶ-காலே** - தகுதியற்ற, புண்யமில்லாத, பண்பில்லாத மக்கள் வாழ்கின்ற இடத்திலும், சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட நேரத்தில் அல்லாமல், தானம் செய்யக்கூடாத காலங்களிலும், **அபாத்ரேப்ய: ச** - தகுதி இல்லாதவர்களுக்கும், **அஸத்க்ருதம்** - உபசரிப்பு இன்றியும், **அவஜ்ஞாதம்** - அவமதிப்புடனும், **தீயதே** - கொடுக்கப்படுகிறதோ, **தத் -** அது, **தாமஸம்** - தாமஸ தானம், **உதாஹ்ருதம்** - எனப்படுகிறது.

பொழிப்புரை

தகுதியற்ற, புண்யமில்லாத, பண்பில்லாத மக்கள் வாழ்கின்ற இடத்திலும், சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட நேரத்தில் அல்லாமல், தானம் செய்யக்கூடாத காலங்களில், தகுதி இல்லாதவர்களுக்கு, உபசரிப்பு இன்றி, அவமதிப்புடன் கொடுக்கப்படுவது தாமஸ தானம் எனப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தமோகுணம் மேலோங்கியிருப்பவர்களால் செய்யப்படும் தானத்தைப் பற்றிக் கூறுகிறார்.

நாம் இப்படியெல்லாம் தானம் செய்யக்கூடாது என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

தானம் கொடுக்கும்பொழுது எப்படிப்பட்ட மனநிலையுடன் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

புண்யஸ்தலம் அல்லாத இடங்களில் தானம் செய்யக் கூடாது. புண்யத்தை வளர்க்கின்ற ஸ்தலங்களில், புண்ய காரியங்களைச் செய்பவர்களுக்கு தானம் கொடுக்க வேண்டும்.

பண்பில்லாத மக்கள் வாழக்கூடிய இடத்தில் தானம் செய்யக் கூடாது. பண்புள்ளவர்கள் வாழ்கின்ற இடங்களில் செய்யப்படும் தானமே சிறந்த பயனைத் தரும்.

நாம் செய்கின்ற தானம், சமூகத்திற்கும் வருங்காலத் தலைமுறைக்கும் பயன்பட வேண்டுமானால், நல்ல இடத்தில் தானம் கொடுக்க வேண்டும்.

தமோகுணம் மிக்கவர்கள், இந்த சாஸ்த்ர விதியை மீறி, முறையில்லாத இடத்தில் தானம் செய்வர். சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட நேரத்தில் அல்லாமல், தோன்றியபோது தானம் செய்வது நல்லதல்ல.

Downloaded from **www.omkaravidya.com**

நல்ல காரியங்களுக்கு தானம் செய்வதற்கு, சில சமயங்களில் விதிவிலக்குகள் இருக்கலாம். தானத்தின் முக்கியமான நோக்கம், சமூகத்தின் நன்மை, அதன் மூலமாக நாம் பெறுகின்ற மனத்தூய்மை.

முறையில்லாத இடத்தில், முறையில்லாத காலத்தில், தகுதியில்லாதவர்களுக்கு தானம் செய்வதால், மேற்கூறிய பலன்கள் கிடைக்காது.

அறிவிலிகள், திருடர்கள், கூத்தாடிகள் போன்றோருக்குக் கொடுக்கப்படுகின்ற தானம் பயனற்றுப் போகும். அது மட்டுமல்ல, சரியான இடத்தில், சரியான காலத்தில், சரியானவர்களுக்குக் கொடுத்தால்கூட, மரியாதையில்லாமல் தானம் கொடுக்கக்கூடாது.

பகவான் அதனை **அஸத்க்ருதம்** என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். அதாவது, அவர்களிடத்தில் அன்புடனும் மரியாதையுடனும் பேசி, அவர்களுடைய திருவடிகளை நீராட்டி, பூஜித்து, நமஸ்கரித்து தானம் செய்ய வேண்டும். அவ்வாறு சரியான உபசரிப்பின்றி, முறையில்லாமல் கொடுக்கக்கூடாது.

யாருக்கு நாம் தானம் வழங்குகிறோமோ, அவரை வணங்கி வழங்க வேண்டும் என்று சாஸ்த்ரம் உபதேசித்திருக்கிறது.

பெறுபவர் அமர்ந்திருந்து பெற வேண்டும். தானம் கொடுப்பவர் நின்றுகொண்டு கொடுக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

எந்தத் திசையை நோக்கியவாறு தானம் கொடுக்க வேண்டும் என்பதற்கெல்லாம் சாஸ்த்ர விதிகள் இருக்கின்றன. தானம் பெறுபவர், கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமர்ந்திருக்க வேண்டும். தெற்கு நோக்கி அமர்ந்திருப்பது சிறந்ததன்று.

தானம் பெறுபவர் யாராக இருந்தாலும், அவர் இறைவனுடைய வடிவம் என்ற எண்ணத்துடன் வழங்க வேண்டும்.

காமோ தாதா। காம: ப்ரதிக்ரஹீதா ।

என்று வேதத்தில் ஒரு வாக்யம் இருக்கிறது. கொடுப்பவன், கொடுப்பதால் எனக்கு புண்யம் அல்லது மனத்தூய்மை ஏற்படும் என்ற எண்ணத்துடன் கொடுக்க வேண்டும்.

பெறுபவனும், இந்தப் பொருளைக்கொண்டு, நான் புண்யச் செயல்களைச் செய்வேன், அதன் வாயிலாக மனத்தூய்மையைப் பெறுவேன் என்ற எண்ணத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்த மந்த்ரம் கூறுகிறது.

காம: என்ற சொல்லுக்கு, இந்த இடத்தில் புண்யத்தை, மனத்தூய்மையை விரும்புபவன் என்று பொருள். தானம் முதலான செயல்கள், இவ்வாறு உயர்ந்த எண்ணங்களுடன்தான் நிகழ வேண்டும்.

தானம் பெறுபவரை கேலி செய்வது, அவமரியாதை செய்வது போன்றவற்றைச் செய்யக்கூடாது என்றும் பகவான் இங்கு கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

பெறுபவரை இறைவனின் வடிவமாக நினைக்காமல், இளக்காரமாக நினைத்தல் தவறு. எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தி தானம் கொடுக்கக் கூடாது.

முதலில் மரியாதையில்லாமல் கொடுப்பது தவறு என்று சொல்லப்பட்டது. மரியாதை செய்யாவிட்டாலும் பரவாயில்லை, அவமரியாதை செய்யாமல் இருக்கலாமே!

ஸாத்விக தானத்தைத்தான் நாம் செய்ய வேண்டும். சரியான இடத்தில், சரியான காலத்தில், சரியான நபருக்கு, மரியாதையுடன் தானம் செய்ய வேண்டும். அதுவே ஞானத்திற்குரிய தகுதியைக் கொடுத்து, மோக்ஷத்திற்கு ஸாதனமாக அமையும் என்பது கருத்து.

ॐ तत्सदिति निर्देशो ब्रह्मणस्त्रिविधः स्मृतः ।

ब्राह्मणास्तेन वेदाश्च यज्ञाश्च विहिताः पुरा ।। १७ - २३ ।।

ஓம் தத்ஸதிதி நிர்தேஶோ ப்ரஹ்மணஸ்த்ரிவித: ஸ்ம்ருத: ।
ப்ராஹ்மணாஸ்தேந வேதாஶ்ச யஜ்ஞாஶ்ச விஹிதா:
புரா ।। 17 - 23 ।।

பதவுரை

ஓம் தத் ஸத் இதி - ஓம் தத் ஸத் ஆகியவை, **ப்ரஹ்மண:** - பரம்பொருளினுடைய, **த்ரிவித:** - மூன்று வகையான, **நிர்தேஶ:** - குறிப்புப்பெயர்களாக, **ஸ்ம்ருத:** - கருதப்படுகின்றன. **தேந** - இந்த மந்த்ரத்தால், **வேதா: ச** - வேதங்களும், **யஜ்ஞா: ச** - வேள்விகளும், **ப்ராஹ்மணா:** - அந்தணர்களும், **புரா** -

Downloaded from **www.omkaravidya.com**

படைப்பின் துவக்கத்தில், **விஹிதா:** - (ப்ரஹ்மதேவரால், இந்த படைப்பில் நாம் முறையாக வாழும்பொருட்டு) படைக்கப்பட்டிருக்கின்றனர்.

பொழிப்புரை

ஓம் தத் ஸத் ஆகியவை பரம்பொருளினுடைய மூன்று வகையான குறிப்புப்பெயர்களாகக் கருதப்படுகின்றன. இந்தப் படைப்பில் நாம் முறையாக வாழும்பொருட்டு, இந்த மந்த்ரத்தால் வேதங்களும், வேள்விகளும், அந்தணர்களும் படைப்பின் துவக்கத்தில் ப்ரஹ்மதேவரால், படைக்கப்பட்டிருக்கின்றனர்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், 23 முதல் 27 வரையுள்ள ச்லோகங்களில், நாம் சடங்குகளில் பயன்படுத்துகின்ற, **ஓம் தத் ஸத்** என்பதன் பொருளைக் கூறுகிறார்.

இதுவரை யஜ்ஞும், தவம், தானம் ஆகியவற்றைப் பற்றி பகவான் கூறினார். ஒருவேளை இவற்றை நாம் குறைபாட்டுடன் செய்தாலும்கூட, அந்தக் குறைகள் நீங்கி, அவை சிறந்து விளங்குவதற்காக, ஒரு விஷயத்தை இங்கு உபதேசிக்கிறார்.

விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யும்பொழுது, கவனக்குறைவால் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால், அதற்கு பரிஹாரம் செய்வது எப்படி? என்ற கேள்விக்கு விடையாக இந்த ச்லோகம் உபதேசிக்கப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

யஜ்ஞம், தானம், தவம் ஆகியவை நிறைவானதாக ஆகும்பொருட்டு இது சொல்லப்படுகிறது என்று ஆதிசங்கரர் உரை செய்துள்ளார்.

ஓம் தத் ஸத் என்ற மூன்று நாமங்கள், கவனக்குறைவால் நாம் செய்த தவறுகள் நீங்குவதற்காக, ப்ராயச்சித்தமாக பகவானால் இங்கு உபதேசிக்கப்படுகின்றன.

ஓம் தத் ஸத் என்று பரம்பொருளின் மூன்று வகையான பெயர்கள், நினைக்கப்பட்டிருக்கின்றன. இவை பரம்பொருளைக் குறிப்பவையாக, வேதாந்த சாஸ்த்ரங்களில் பெரியோர்களால் கூறப்பட்டுள்ளன.

ஓம் இதி ப்ரஹ்ம ।

என்று தைத்திரீய உபநிஷதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தத் த்வம் அஸி ।

என்று சாந்தோக்ய உபநிஷதத்தில் ச்வேதகேதுவுக்கு உத்தாலக ரிஷியால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத் । ஏகமேவாத்விதீயம் ।

என்றும் அதே பகுதியில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

யஜ்ஞம் முதலானவை சிறந்து விளங்குவதற்காக, யஜ்ஞத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் இந்த மூன்று பெயர்களும் நிச்சயமாக உச்சரிக்கப்பட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த மந்த்ரத்தால், வேதங்களும் யஜ்ஞங்களும் ப்ராஹ்மணர்களும் ப்ரஹ்மதேவரால் படைப்பின் தொடக்கத்தில் அருளப்பட்டிருக்கின்றனர்.

மனதால், வாக்கால், உடலால் செய்கின்ற எத்தகைய யஜ்ஞமாக இருந்தாலும், யஜ்ஞத்தின் முடிவில், **ஓம் தத் ஸத்** என்று சொல்லித்தான் நிறைவுசெய்ய வேண்டும்.

ஓம் தத் ஸத் என்ற திருநாமங்களைச் சொல்லித்தான் ப்ரஹ்மதேவர் வேதங்களையும் அந்தணர்களையும் வேள்விகளையும் படைத்தார். எனவே இந்த திருநாமச் சொற்களின் மஹிமையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இது, அறிந்தும் அறியாமலும் நாம் செய்த தவறுகளை நீக்கி அருள்கிறது.

तस्मादोमित्युदाहृत्य यज्ञदानतपःक्रियाः ।

प्रवर्तन्ते विधानोक्ताः सततं ब्रह्मवादिनाम् ।। १७ - २४ ।।

தஸ்மாதோமித்யுதாஹ்ருத்ய யஜ்ஞதாநதப:க்ரியா: ।
ப்ரவர்த்தந்தே விதாநோக்தா: ஸததம் ப்ரஹ்ம-
வாதிநாம் ।। 17 - 24 ।।

பதவுரை

தஸ்மாத் - எனவே, **ப்ரஹ்மவாதிநாம்** - வேதத்தை நன்கு அறிந்தவர்களுடைய, **விதாநோக்தா:** - சாஸ்த்ரத்தினால் உபதேசிக்கப்பட்ட அறமான, **யஜ்ஞதாநதப:க்ரியா:** - யஜ்ஞும்,

Downloaded from **www.omkaravidya.com**

தானம், தவம் போன்ற செயல்கள், **ஸததம்** - எப்பொழுதும், **ஓம் இதி** - ஓம் என்று, **உதாஹ்ருத்ய** - உச்சரித்து, **ப்ரவர்த்தந்தே** - தொடங்கப்படுகின்றன (நிகழ்த்தப்படுகின்றன).

பொழிப்புரை

எனவே, வேதத்தை நன்கு அறிந்தவர்கள் செய்யக்கூடிய, சாஸ்த்ரத்தினால் உபதேசிக்கப்பட்ட அறங்களான யஜ்ஞும், தானம், தவம் போன்ற செயல்கள், எப்பொழுதும் ஓம் என்று உச்சரித்துத் தொடங்கப்படுகின்றன, நிகழ்த்தப்படுகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஓங்காரத்தின் மஹிமையைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

ப்ரஹ்மதேவர் இந்தப் படைப்பின் தொடக்கத்தில் **ஓம் தத் ஸத்** என்று கூறி, வேதங்களையும் வேள்விகளையும் அந்தணர்களையும் படைத்திருக்கின்ற காரணத்தால், நாமும் எச்செயலைத் தொடங்கும் முன்னரும் **ஓம்** என்று சொல்ல வேண்டும்.

சாஸ்த்ரத்தினால் உபதேசிக்கப்பட்டுள்ள யஜ்ஞும், தானம், தவம் முதலான தர்மமான செயல்கள் ஓம் என்ற கூறியே தொடங்கப்படுகின்றன.

ஓம் என்று சொல்லும்போது, சாஸ்த்ர விதி தெரியாமல் நாம் செய்வதில் ஏதாவது குறையிருந்தால் அது நீங்கிவிடும்.

ஸுநிபுணாநாமபி ஸூக்ஷ்மாபராததர்ஶநாத் ।

Downloaded from **www.omkaravidya.com**

எப்பேர்ப்பட்ட நிபுணரானாலும் செயலை நூற்றுக்கு நூறு சரியாக, ஒழுங்காகச் செய்ய முடியாது என்று ஆதிசங்கரர் ப்ரஹ்மஸூத்ர உரையில் கடைசியில் ஓரிடத்தில் கூறுகிறார்.

கர்மத்தினால் மோக்ஷமில்லை என்ற கருத்தை விசாரம் செய்கின்றபொழுது, இதனைக் கூறுகிறார்.

ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிரிவாவ்ருதா: 18 - 48

எந்தச் செயலிலும் சிறு குறைபாடுகள் நிகழத்தான் செய்யும் என்று பகவான் அடுத்த அத்யாயத்தில் கூறுவார்.

ஓம் என்று சொல்லித் தொடங்கும்போது, அதில் குற்றங்கள் இருந்தாலும், அது குணமாக மாறிவிடும். சாஸ்த்ர விதிகளைக் கடைப்பிடிப்பதில் ஏதாவது குற்றங்கள் இருந்தாலும், நாம் செய்கின்ற யஜ்ஞும், தானம், தவம் ஆகியவை நல்லதாகவே ஆகிவிடும் என்று பொருள்.

இங்கு, ச்ரத்தை முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வேதத்தையும் வேதத்தில் கூறப்பட்டுள்ள கடவுளைப் பற்றியும் நன்கு அறிந்து சொல்கின்ற பெரியோர்கள், எப்பொழுதும் **ஓம்** என்று சொல்லித்தான் எல்லாச் செயல்களையும் தொடங்குகிறார்கள்.

ஓம் இதி இதம் ஸர்வம் । ஓம் இதி ஸாமாநி காயந்தி ।

என்று ஓங்கார மஹிமையைப் பற்றி தைத்திரீயோபநிஷதம் கூறுகிறது. மாண்டூக்ய உபநிஷதமும், ஓங்கார தத்துவத்தை நன்கு விளக்குகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

तदित्यनभिसन्धाय फलं यज्ञतप:क्रिया: ।

दानक्रियाश्च विविधा: क्रियन्ते मोक्षकाङ्क्षिभि: ।। १७ - २५ ।।

ததித்யநபிஸந்தாய பலம் யஜ்ஞதப:க்ரியா: ।
தாநக்ரியாஶ்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி: ।। 17 - 25 ।।

பதவுரை

தத் இதி - தத் என்று, **(உதாஹ்ருத்ய)** - (சொல்லியே), **மோக்ஷகாங்க்ஷிபி:** - மோக்ஷத்தை விரும்புகின்றவர்களால், **பலம்** - (பொருளின்பப்) பலனை, **அநபிஸந்தாய** - எதிர்பாராமல், **விவிதா:** - பலவிதமான, **யஜ்ஞதப:க்ரியா:** - வேள்விகள், தவங்கள் ஆகிய செயல்களும், **தாநக்ரியா: ச** - தானங்களும், **க்ரியந்தே** - செய்யப்படுகின்றன.

பொழிப்புரை

தத் என்று சொல்லியே மோக்ஷத்தை விரும்புகின்றவர்களால், பொருளின்பப் பலனை எதிர்பாராமல், பலவிதமான வேள்விகள், தவங்கள், தானங்கள் ஆகியவை செய்யப்படுகின்றன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், **தத்** என்ற சொல்லின் சிறப்பைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

மோக்ஷத்தை விரும்புபவர்களால், மனத்தூய்மையின்பொருட்டு, மீண்டும் மீண்டும்

Downloaded from **www.omkaravidya.com**

ஸம்ஸாரத்தில் ஆழ்த்தக்கூடிய உலகியல் பலன்களை விரும்பாமல், யஜ்ஞங்கள், தானங்கள், தவங்கள் ஆகிய செயல்கள், **தத்** என்று சொல்லியே தொடங்கப்படுகின்றன.

தத் என்ற சொல்லிலிருந்து வந்ததுதான் தத்துவம். **தத்** என்ற சொல்லுக்கு, ஆதிசங்கரர் (2-16) ச்லோகத்தில் உரை செய்திருக்கிறார்.

தத் இதி ஸர்வநாம । ஸர்வம் ச ப்ரஹ்ம ।
தஸ்ய நாம தத் । ப்ரஹ்மண: யாதாத்ம்யம் ।
ஓம் தத் ஸத் இதி நிர்தேஶ: ப்ரஹ்மண: த்ரிவித: ஸ்ம்ருத: ।

என்று (17-23) ச்லோகத்தை அங்கேயே மேற்கோள் காட்டியிருக்கிறார்.

தத் என்ற சொல், எல்லாப் பொருள்களையும் குறிக்கக்கூடியது. இருக்கின்ற பொருளைத்தான் **தத்** என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம். அது ப்ரதிபெயர்ச்சொல்.

தத் என்பது இறைவனைக் குறிக்கின்ற சொல்.

யஜ்ஞம், தானம், தவம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி, பகவான் அடுத்த அத்யாயத்தில் கூறுவார்.

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா: விவிதிஷந்தி
யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந ।

(ப்ருஹதாரண்யக உபநிஷதம் : 4 - 4 - 22)

Downloaded from **www.omkaravidya.com**

வாழ்க்கையைப் பற்றிய பெரிய உண்மையாகிய, இந்த மெய்ப்பொருளை அறிவதற்காகத்தான் வேதம் ஓதுதல், வேள்விகளைச் செய்தல், தானம் செய்தல், தன்னை அழித்துக்கொள்ளாமல் தவத்தை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை பண்புள்ள மக்கள், சமூக நன்மையின்பொருட்டுச் செய்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

सद्भावे साधुभावे च सदित्येतत्प्रयुज्यते ।

प्रशस्ते कर्मणि तथा सच्छब्दः पार्थ युज्यते ।। १७ - २६ ।।

सद्भावे साधुभावे च सदित्येतत्प्रयुज्यते ।
प्रशस्ते कर्मणि तथा सच्छब्दः पार्थ युज्यते ।। 17 - 26 ।।

பதவுரை

ஹே பார்த்த - ஓ அர்ஜுனா! **ஸத்பாவே** - ஒரு பொருள் (இருக்கிறது), நன்றாக இருக்கிறது என்று அதன் நன்மையைக் குறிக்கும்பொழுதும் (ஸத்வஸ்து என்றும்), **ஸாதுபாவே ச** - ஒருவன் தர்மத்தைக் கடைப்பிடிப்பவன், நல்லவன் என்பதைக் குறிக்கும்பொழுதும் (ஸத்புருஷன் என்றும்), **ஸத் இதி** - ஸத் என்ற, **ஏதத்** - இந்தச் சொல், **ப்ரயுஜ்யதே** - பயன்படுத்தப்படுகிறது. **ததா** - மேலும், **ப்ரஶஸ்தே கர்மணி** - திருமணம் முதலான உயர்ந்த (மங்களகரமான) கர்மங்களிலும், **ஸத் ஶப்தः** - ஸத் என்ற சொல்லானது, **யுஜ்யதே** - பயன்படுத்தப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! ஒரு பொருள் இருக்கிறது என்று சொல்லும்பொழுதும், ஸத்வஸ்து - அது நன்றாக இருக்கிறது என்று சொல்லும்பொழுதும், ஒருவன் தர்மத்தைக் கடைப்பிடிப்பவன், ஸத்புருஷன் - நல்லவன் என்பதைக் குறிக்கும்பொழுதும் ஸத் என்ற சொல்லானது பயன்படுத்தப்படுகிறது. மேலும், திருமணம் முதலான உயர்ந்த, மங்களகரமான கர்மங்களிலும் ஸத் என்ற சொல்லானது பயன்படுத்தப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் **ஸத்** என்ற சொல்லின் சிறப்பைக் கூறுகிறார்.

ஸத் என்ற சொல்லை எங்கெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதை பகவான் கூறுகிறார்.

ஒன்று, நன்றாக இருக்கிறது என்று சொல்வதற்குப் பயன்படுத்துகிறோம். ஸத்விஷயம், ஸத்தான பொருள் என ஒரு பொருளின் நன்மையை நினைத்து **ஸத்** என்று சொல்கிறோம்.

நல்லவனாக வாழ்கின்ற ஒருவனை ஸாது என்று சொல்கிறோம். தர்மத்தைக் கடைப்பிடிப்பவன் என்று பொருள். ஸத்புருஷன், ஸத்புத்ரன் போன்ற சொற்களை நடைமுறையில் பெரியோர்கள் பயன்படுத்துகிறார்கள். அப்படி வாழ்வதுதான் நல்லது என்று கூறுகிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

வேதமும் **ஸத்** என்ற சொல்லை, பரம்பொருளைக் குறிக்கப் பயன்படுத்துகிறது.

நாஸதோ வித்யதே பாவ: நாபாவோ வித்யதே ஸத: । 2 - 16

இல்லாததற்கு இருப்பு இல்லை. இருப்பது இல்லாமல் போவதில்லை என்று கூறும்போது **ஸத்** என்ற சொல்லுக்கு, மெய்ப்பொருள், தூய இருப்பு என்றுதான் அர்த்தம்.

ஓம் தத் ஸத் ஆகிய மூன்று சொற்களும் விசேஷமாக அமைந்திருக்கின்றன. அவை இறைவனைக் குறிக்கக்கூடிய உயர்ந்த சொற்கள்.

திருமணம் முதலான உயர்ந்த கர்மங்களில் **ஸத்** என்ற சொல்லானது பயன்படுத்தப்படுகிறது. குழந்தையை உண்டுபண்ணுவதே ஓர் உயர்ந்த கர்மம். அதற்கான திருமணச் சடங்குகள் உயர்ந்த கர்மங்கள். வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் நாம் செய்யக்கூடிய சடங்குகள் உயர்ந்தவை.

குழந்தையைத் தோற்றுவிப்பது முதல், மனித உடலில் வாழ்கின்ற அந்த உயிர் தனது வாழ்க்கையை நிறைவு செய்வது வரை, பல உயர்ந்த கர்மங்கள் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் திருமணம், வாஜபேய யாகம் போன்றவை மிக உயர்ந்த கர்மங்களாகும். அவற்றில் குறைபாடுகள் இருந்தால், அவற்றை நீக்கும்பொருட்டு இந்தச் சொற்களைச் சொல்ல வேண்டும் என்பது கருத்து.

Downloaded from **www.omkaravidya.com**

यज्ञे तपसि दाने च स्थितिः सदिति चोच्यते ।

कर्म चैव तदर्थीयं सदित्येवाभिधीयते ।। १७ - २७ ।।

யஜ்ஞே தபஸி தாநே ச ஸ்திதி: ஸதிதி சோச்யதே ।
கர்ம சைவ ததர்த்தீயம் ஸதித்யேவாபிதீயதே ।। 17 - 27

பதவுரை

யஜ்ஞே தபஸி தாநே ச - வேள்வியிலும் தவத்திலும் தானத்திலும், **ஸ்திதி:** - நிலைபெற்றிருக்கும் தன்மையானது, **ஸத் இதி ச** - ஸத் என்றே, **உச்யதே** - (பெரியோர்களால்) சொல்லப்படுகிறது. **ச ஏவ** - மேலும், **ததர்த்தீயம்** - ஸத்தின் பொருட்டு, (யாண்டும் உள்ள இருப்பாகிய மெய்ப்பொருளை உணர வேண்டும் என்பதற்காக) செய்யப்படும், **கர்ம** - யாதொரு கர்மமும், **ஸத் இதி ஏவ** - ஸத் என்றே, **அபிதீயதே** - அழைக்கப்படுகிறது.

பொழிப்புரை

வேள்வியிலும் தவத்திலும் தானத்திலும் நிலைபெற்றிருக்கும் தன்மையானது, ஸத் என்றே பெரியோர்களால் சொல்லப்படுகிறது. ஸத்தின் பொருட்டு, யாண்டும் உள்ள இருப்பாகிய மெய்ப்பொருளை உணர வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் யாதொரு கர்மமும் ஸத் என்றே அழைக்கப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்திலும் **ஸத்** என்ற சொல்லைப் பற்றிக் கூறுகிறார்.

யஜ்ஞம், தானம், தவம் ஆகியவற்றில், எப்பொழுதும் அவற்றிலேயே நிலைத்து நிற்பதற்கு **ஸத்** என்று பெயர். அவன் ஸத்தாக இருக்கிறான் என்று சொல்வார்கள். தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்கிறான் என்பதை அது குறிக்கிறது. அவ்வாறு நிலைத்து நிற்றலுக்கு **நிஷ்டா** என்று பெயர்.

ததர்த்தீயம் என்பதில் **தத்** என்ற சொல் வந்திருக்கிறது. அதற்காக என்று பொருள். யாண்டுமுள்ள மெய்ப்பொருளை உணர வேண்டும் என்பதற்காகத்தான் யஜ்ஞ, தான, தவங்களைச் செய்கிறான் என்று பொருள்.

அது மட்டுமல்ல, நாம் செய்யக்கூடிய கர்மங்களான, பூஜைக்குரிய இடத்தையும் பொருட்களையும் தூய்மைப்படுத்துதல், கோலமிட்டு அலங்கரித்தல் போன்ற செயல்களும் **ஸத்** என்று சொல்லப்படுகின்றன.

பார்ப்பதற்கே அவை மங்களகரமாக இருக்கின்றன. அவை அனைத்துமே யஜ்ஞ, தான, தவங்களைச் செய்வதற்காகத்தான். நாம் பணம் ஸம்பாதிப்பதுகூட புண்ய கர்மங்களைச் செய்வதற்குத்தான்.

யஜ்ஞ, தான, தவங்களில் ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும், ச்ரத்தையுடன் இறைவனின் இந்த மூன்று

Downloaded from **www.omkaravidya.com**

திருநாமங்களைச் சொல்லும்பொழுது, அது நல்ல குணமுடையதாக, ஸாத்விகமானதாக ஆகிவிடுகிறது.

இவ்வாறு இந்த மூன்று சொற்கள் சிறப்புடையவையாக விளங்குவதால், எப்பொழுதும் எந்தச் செயல்களைச் செய்தாலும் இந்த மூன்று சொற்களையும் சொல்ல வேண்டும் என்பது தாத்பர்யம் என்று ஸ்ரீதர ஸ்வாமீ என்ற உரையாசிரியர் கூறுகிறார்.

சிறிதாக விக்நேச்வர பூஜை செய்தால்கூட, **ஓம் தத் ஸத்** என்று சொல்ல வேண்டும்.

अश्रद्धया हुतं दत्तं तपस्तप्तं कृतं च यत् ।

असदित्युच्यते पार्थ न च तत्प्रेत्य नो इह ।। १७ - २८ ।।

அஶ்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் ச யத் ।
அஸதித்யுச்யதே பார்த்த ந ச தத்ப்ரேத்ய நோ இஹ ।। 17 - 28 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **அஶ்ரத்தயா** - ச்ரத்தையில்லாமல், (ஆழ்ந்த நம்பிக்கையின்றி), **யத் ஹுதம்** - யாதொரு வேள்வி செய்யப்படுகின்றதோ, **(யத்) தத்தம்** - யாதொரு தானம் கொடுக்கப்படுகின்றதோ, **(யத்) தப: தப்தம்** - யாதொரு தவம் செய்யப்படுகின்றதோ, **(யத்) க்ருதம் ச** - இவற்றுக்கு வேண்டிய (தூய்மைப்படுத்துதல் போன்ற) யாதொரு கர்மாக்கள் செய்யப்படுகின்றனவோ, **(தத் ஸர்வம்)** - (அவை அனைத்தும்), **அஸத் இதி** - பலனற்றவை என்று, **உச்யதே**

Downloaded from **www.omkaravidya.com**

- கூறப்படுகிறது. **தத்** - அது, **ந உ இஹ** - இவ்வுலக வாழ்விலும், **ந ச ப்ரேத்ய** - இறந்த பின்னர் அடுத்த வாழ்விலும் (பலனைத் தராது).

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! ச்ரத்தையில்லாமல், அதாவது ஆழ்ந்த நம்பிக்கையின்றி, செய்யப்படும் வேள்வி, தானம், தவம், அதன்பொருட்டுச் செய்யப்படும் கர்மங்கள் அனைத்தும் பயனற்றவை என்று கூறப்படுகிறது. அது இவ்வுலக வாழ்விலும் பலனைத் தராது, இறந்த பிறகு, அடுத்த வாழ்விலும் பலனைத் தராது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ச்ரத்தையின் முக்கியத்துவத்தைக் கூறி, இந்த அத்யாயத்தை நிறைவு செய்கிறார்.

சாஸ்த்ர விதி தெரிகிறதோ இல்லையோ, ச்ரத்தையில்லாமல் எந்த கர்மாக்களையும் செய்யக் கூடாது.

பெரியோர்கள் செய்வதைப் பார்த்து, முழுமையான ச்ரத்தையுடன் கர்மாக்களைச் செய்தால், அந்தக் கர்மாக்களில் தோஷங்கள் இருந்தால், **ஓம் தத் ஸத்** என்று சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லிவிட்டால், சாஸ்த்ரவிதியை அறியாமல் செய்த தோஷங்கள் நீங்கிவிடும்.

Downloaded from **www.omkaravidya.com**

மனம் போன போக்கில் செயல்படக் கூடாது. சாஸ்த்ர ப்ரமாணத்தை அறிந்து, அதன்படி செயல்புரிய வேண்டும். சாஸ்த்ரங்களைக் கற்கவில்லையெனினும் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு, அவர்கள் கடைப்பிடிக்கின்ற தர்மங்களைக் கடைப்பிடிக்கலாம். எப்படியிருந்தாலும், ச்ரத்தை என்பது மிக மிக முக்கியம் என்பது தெளிவாக உபதேசிக்கப்படுகிறது.

ச்ரத்தையில்லாமல் செய்யக்கூடிய வேள்வி, தானம், தவம், இவை மூன்றின்பொருட்டு செய்யப்படும் பிற கர்மாக்கள், பொருளீட்டுதல் - இவை அனைத்துமே **அஸத்** என்கிறார் பகவான். அவை பயனற்றவை என்று பொருள்.

இந்த உலகிலும் உரிய பலன் கிடைக்காது. இந்த உடலை விட்டுக் கிளம்பிய பிறகும் பலன் கிடைக்காது.

அறியாமையினால், ச்ரத்தையில்லாமல் செய்வதால் சிறு புண்யம் கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனாலும் நாம் ச்ரத்தையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பகவான் இங்கு கூறுகிறார்.

நெருப்பைத் தெரிந்து தொட்டாலும் சுடும், தெரியாமல் தொட்டாலும் சுடும் என்ற ந்யாயத்தின்படி, ஒரு கர்மாவை நாம் ச்ரத்தையுடன் செய்தாலும், ச்ரத்தையில்லாமல் செய்தாலும் ஓரளவிற்குப் பலன் கிடைக்கும். ஆனால் ச்ரத்தையுடன் செய்தால்தான் முழுமையான பலன் கிடைக்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

இங்கு பகவான் வலியுறுத்திக் கூறுகின்ற விஷயம் - நாம் அச்ரத்தையுடன் செய்யக் கூடாது என்பதே ஆகும். ச்ரத்தையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதன்பொருட்டு, ச்ரத்தை மிக்கவர்களுடன் பழக வேண்டும்.

பாஷ்யங்களைத் தொகுத்துக் கூறக்கூடிய ஓர் உரையாசிரியரான ஸ்ரீவம்சீதர மிச்ரா பின்வருமாறு கூறுகிறார்.

இந்த பதினேழாவது அத்யாயத்தில் கூறப்பட்ட விஷயம் - கர்மகாண்டத்தை சாஸ்த்ர ப்ரமாணத்தினால் தெரிந்துகொள்ளாவிட்டாலும்கூட, ஸாத்விக ச்ரத்தையுடன் பெரியோர்கள் நடந்துகொள்கின்ற முறைகளைப் பார்த்து, அவர்கள் கடைப்பிடிக்கின்ற ஞானத்தை வைத்துக்கொண்டு, ஸாத்விகமான ஆஹாரம் முதலியவைகளை ஏற்று, ஸாத்விகமான யஜ்ஞ, தான, தவங்களைச் செய்கின்றவனுக்கு, **ஓம் தத் ஸத்** என்று சொல்லி, குறைகளை நீக்கிக்கொண்டு, அந்த கர்மங்களால் புத்தியைத் தூய்மைப்படுத்திக் கொண்டவனுக்கு, கர்மகாண்டத்தைத் துறந்து, ஞானகாண்ட சாஸ்த்ரத்தை குருமுகமாக ச்ரவண, மனன, நிதித்யாஸனங்களைச் செய்து, பரம்பொருளே உண்மை, ஆத்மாவும் பரம்பொருளும் ஒன்றே என்ற ஞானத்தை அடைந்து, அதன் மூலம் மோக்ஷம் ஸித்திக்கும் என்பது உபதேசிக்கப்பட்டது.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे

श्रीकृष्णार्जुनसंवादे श्रद्धात्रयविभागयोगो नाम सप्तदशोऽध्यायः ।। १७ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகஸாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
ஶ்ரத்தாத்ரயவிபாகயோகோ நாம ஸப்ததஶோऽத்யாய: ।। 17 ।।

சொற்குற்றம், பொருட்குற்றம் நீங்குவதற்கு, ஓம் தத் ஸத் என்று கூறி, உபநிஷதங்களின் பரமதாத்பர்யத்தை விளக்கிக் கூறுகின்ற, ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கின்ற, மனதைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்-அர்ஜுனன் ஆகியோரின் அருள் உரையாடல் வடிவிலிருக்கும் இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்தில் ஶ்ரத்தாத்ரயவிபாகம் என்ற தலைப்பிலான இந்த பதினேழாவது அத்யாயம் நிறைவுபெறுகிறது.

ॐ श्रीकृष्णार्पणमस्तु। ஓம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து।

Downloaded from **www.omkaravidya.com**

பதினெட்டாவது அத்யாயம்

ओं श्रीकृष्णाय परमात्मने नमः ஓம் ஸ்ரீக்ருஷ்ணாய பரமாத்மநே நம:

अथ अष्टादशोऽध्यायः அத அஷ்டாதஶோऽத்யாய:

मोक्षसन्न्यासयोगः மோக்ஷஸந்ந்யாஸயோக:

முகவுரை

மோக்ஷஸந்ந்யாஸ யோகம் என்றால், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய ஸந்ந்யாஸம் என்று பொருள். நான்காவது அத்யாயத்தில் ஞானகர்ம ஸந்ந்யாஸம் என்ற விஷயம் கூறப்பட்டது. ஐந்தாவது அத்யாயத்திற்கும் பெயர் ஸந்ந்யாஸ யோகம் என்றே அமைந்துள்ளது.

ஸந்ந்யாஸம் என்பதை கர்மஸந்ந்யாஸம், ஞானஸந்ந்யாஸம் என்று இரண்டாகப் பிரித்துள்ளோம்.

கர்மங்களைத் துறந்துவிட்டு, வேதாந்தம் கற்று ஞானத்தில் நிலைத்திருத்தல் என்பது கர்மஸந்ந்யாஸம். புறத்தில் கர்மங்களைத் துறந்தாலும் துறக்காவிட்டாலும், அறிவால் தன்னுணர்வை நீக்குவதற்கு ஞானகர்ம ஸந்ந்யாஸம் என்று பெயர்.

வேதாந்த சாஸ்த்ரங்களைக் கற்று, நான் மெய்ப்பொருளாக இருக்கிறேன் என்ற ஞானத்தைப் பெற்று, நான் ஜீவனாக இருக்கிறேன் என்ற எண்ணத்தை அடியோடு நீக்கிவிடுதல்

Downloaded from **www.omkaravidya.com**

ஞானகர்ம ஸந்ந்யாஸம் ஆகும். துறப்பதற்கு எவருமில்லை, எதுவுமில்லை என்று புரிந்துகொள்வதே அது.

பல அத்யாயங்களில் இந்த விஷயம் கூறப்பட்டிருந்தாலும், இந்த அத்யாயத்தில் அவற்றைச் சுருக்கி, தொகுத்து, பகவான் உபதேசிக்கப் போகிறார்.

ஸமஸ்த-வேதார்த்தம் - அனைத்து வேதங்களின் ஸாரமாக அமைந்திருப்பதுதான் கீதா சாஸ்த்ரம். இதனை ஆதிசங்கரர் கீதை உரையின் தொடக்கத்திலேயே கூறியிருக்கிறார்.

எல்லோரும் எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பதற்குத்தான் இந்த சாஸ்த்ரோபதேசம் செய்யப்படுகிறது.

அர்ஜுனனின் துயரத்தை, பகவான் இந்த ஞானோபதேசத்தினால் போக்கியிருக்கிறார். நம்முடைய துன்பங்களுக்குக் காரணமான அறியாமையையும் நீக்கக்கூடியதாக, இந்த கீதா சாஸ்த்ரம் அமைந்திருக்கிறது.

இந்த பதினெட்டாவது அத்யாயத்தில், விட்டுப்போன விஷயங்கள் ஏதாவது இருந்தால், அவற்றையும் கூறி, பகவான் நிறைவு செய்கிறார். ஏற்கெனவே நாம் கற்ற மற்ற அத்யாயங்களின் ஸாரமும் இதில் அடங்கியுள்ளது.

பதினேழாவது அத்யாயத்தில் பகவான் மூன்றுவிதமான ச்ரத்தை, ஆஹாரம், தவம், தானம், யஜ்ஞம் ஆகியவற்றைப் பற்றிக் கூறினார். அவற்றுள் ராஜஸ, தாமஸமானவற்றை விட்டுவிட்டு, ஸாத்விகமானவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் பகவான் உபதேசித்தார்.

Downloaded from **www.omkaravidya.com**

த்யாகம், ஞானம், கர்மம், உறுதி, புத்தி, கர்த்தா, ஸுகம் போன்றவற்றையும் பகவான் மூன்றாகப் பிரித்துக் கூறப் போகிறார். மேலும் மோக்ஷத்தை உணர விரும்புபவனுக்கு, சொல்ல வேண்டிய விஷயங்களைச் சுருக்கமாகக் கூறி நிறைவு செய்கிறார்.

अर्जुन उवाच

सन्यासस्य महाबाहो तत्त्वमिच्छामि वेदितुम् ।

त्यागस्य च हृषीकेश पृथक्केशिनिषूदन ।। १८ - १ ।।

அர்ஜுந உவாச
ஸந்ந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்த்வமிச்சாமி வேதிதும் ।
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேஶ ப்ருதக்கேஶிநிஷூதந ।। 18 - 1 ।।

பதவுரை

அர்ஜுந: - அர்ஜுனன், **உவாச** - கூறினான்.

ஹே மஹாபாஹோ! - ஓ பெருந்தோளுடையாய்! **ஹே ஹ்ருஷீகேஶ!** - ஓ பொறிகளை வென்றவரே! **ஹே கேஶிநிஷூதந!** - ஓ கேசி என்ற அரக்கனைக் கொன்றவரே! **ஸந்ந்யாஸஸ்ய** - ஸந்ந்யாஸத்தினுடைய, **த்யாகஸ்ய ச** - த்யாகத்தினுடைய, **தத்த்வம்** - தத்துவத்தை (உள்ளார்ந்த பொருளை), **ப்ருதக்** - தனித்தனியே, **வேதிதும்** - அறிவதற்கு, **இச்சாமி** - விரும்புகிறேன்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

அர்ஜுனன் கூறினான்.

ஓ பெருந்தோளுடையாய்! ஓ பொறிகளை வென்றவரே! ஓ கேசி என்ற அரக்கனைக் கொன்றவரே! ஸந்ந்யாஸம், த்யாகம் - இவற்றின் உள்ளார்ந்த பொருளைத் தனித்தனியே அறிய விரும்புகிறேன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணரின் அருளால் கீதா சாஸ்த்ரத்தைத் தொடர்ந்து கற்கிறோம். இந்த ச்லோகமானது, அர்ஜுனனுடைய கேள்வியாக அமைந்துள்ளது.

மூன்றாவது அத்யாயத்தின் தொடக்கத்தில் அர்ஜுனன், கர்மத்தைக்தகாட்டிலும் ஞானம் சிறந்ததென்றால், என்னை ஏன் இந்த கோரமான கர்மத்தில் ஈடுபடுத்துகிறீர்கள்? என்று கேள்வி கேட்டான்.

அங்கு பகவான், **ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்।** (3-3) இரண்டுவிதமான வாழ்க்கைமுறைகளைப் பற்றிக் கூறினார். மேலும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்காக, ஞானகர்ம ஸந்ந்யாஸத்தையும் உபதேசித்தார்.

ஐந்தாவது அத்யாயத்திலும், **ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புநர்யோகம் ச ஶம்ஸஸி।** (5-1) கர்மயோகம், ஸந்ந்யாஸம் இரண்டையும் புகழ்கிறீர்கள், இவற்றுள் எது சிறந்தது என்று அர்ஜுனன் கேள்வி கேட்டான்.

Downloaded from **www.omkaravidya.com**

பகவான் பலவிடங்களில் விளக்கம் கூறியிருந்தாலும், இந்த விஷயத்தில் அர்ஜுனனுக்கு மேலும் தெளிவு தேவைப்படுகிறது.

பொதுவாக, த்யாகம் என்ற சொல், கர்மபலனை த்யாகம் செய்வதைக் குறிக்கும். ஸந்ந்யாஸம் என்பது கர்மத்தையே த்யாகம் செய்தல். இவ்வாறுதான் பொதுவாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

श्रीभगवानुवाच

काम्यानां कर्मणां न्यासं सन्न्यासं कवयो विदुः ।

सर्वकर्मफलत्यागं प्राहुस्त्यागं विचक्षणाः ।। १८ - २ ।।

ஸ்ரீபகவாநுவாச

காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்ந்யாஸம் கவயோ விது: ।

ஸர்வகர்மபலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணா: ।। 18 - 2 ।।

பதவுரை

ஸ்ரீபகவான் - ஸ்ரீபகவான், **உவாச** - கூறினார்.

கவய: - சாஸ்த்ரத்தின் உட்பொருளை ஆராய்கின்ற பெரியோர், **காம்யாநாம்** - பலனை விரும்பிச் செய்யும், **கர்மணாம்** - செயல்களை (காம்ய, ப்ராயச்சித்த கர்மங்களை), **ந்யாஸம்** - துறத்தலை, **ஸந்ந்யாஸம்** - ஸந்ந்யாஸம், **விது:** - (என்று) அறிகிறார்கள். **விசக்ஷணா:** - சாஸ்த்ரத்தின் உட்பொருளை ஆராய்கின்ற வேறு சில பெரியோர்கள், **ஸர்வகர்மபலத்யாகம்** -

Downloaded from **www.omkaravidya.com**

(உடலால், மனதால், வாக்கால் செய்யும்) அனைத்துச் செயல்களின் பலன்களையும் துறத்தலை, **த்யாகம்** - த்யாகம், **ப்ராஹு:** - என்கிறார்கள்.

பொழிப்புரை

ஸ்ரீபகவான் கூறினார்.

சாஸ்த்ரத்தின் உட்பொருளை ஆராய்கின்ற பெரியோர், பலனை விரும்பிச் செய்யக்கூடிய காம்ய, ப்ராயச்சித்த கர்மங்களைத் துறத்தலை, ஸந்ந்யாஸம் என்று கூறுகிறார்கள். சாஸ்த்ரத்தின் உட்பொருளை ஆராய்கின்ற வேறு சில பெரியோர்கள், உடல், மனம் வாக்கால் செய்யும் அனைத்துச் செயல்களின் பலன்களையும் துறத்தலை த்யாகம் என்கிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸந்ந்யாஸம், த்யாகம் ஆகியவற்றின் ஸ்வரூபத்தைக் கூறத் தொடங்குகிறார்.

பகவான் பொதுவாகத்தான் பதில் கூறப் போகிறார். நாம் இவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும். கர்மங்களை முற்றிலும் துறப்பது ஸந்ந்யாஸம் எனப்படும்.

ஆத்மஸுகத்தை உணரும்பொருட்டு, உலகியல் இன்பங்களாகிய கர்மபலன்களை மட்டும் துறப்பதற்கு த்யாகம் என்று பெயர்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆனால், பலவிடங்களில் ஸந்ந்யாஸம், த்யாகம் ஆகிய இந்த இரண்டு சொற்களும் மாற்றி மாற்றி இடத்திற்குத் தகுந்தாற்போல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

த்யாகேநைகே, ஸந்ந்யாஸயோகாத் போன்ற சொற்களை வேத மந்த்ரங்களில் காண முடிகிறது.

ஸந்ந்யாஸம் என்பது ஆச்ரம ஸந்ந்யாஸத்தைக் குறிக்கிறது, த்யாகம் என்பது கர்மயோகத்தைக் குறிக்கிறது.

இல்லறத்திலிருந்து கர்மயோகம் செய்தல், துறவறமேற்று கர்மங்களைத் துறத்தல் - இவற்றைப் பற்றி பகவான் முன்பே கூறியிருக்கிறார்.

கவய: என்ற சொல், சாஸ்த்ரங்களை நன்கு ஆராய்ச்சி செய்த பெரியோர்களைக் குறிக்கும். அவர்கள் காம்ய கர்மங்களை விட்டுவிடுவதுதான் ஸந்ந்யாஸம் என்று கூறுகிறார்கள். மோக்ஷத்தை விரும்புபவர்கள் காம்ய கர்மங்களை விட்டுவிட வேண்டும் என்று சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது.

விசக்ஷணா: என்ற சொல்லும், சாஸ்த்ரத்தின் உட்பொருளை நன்கறிந்த பெரியோர்களைக் குறிக்கும். **கவய:, விசக்ஷணா:** ஆகிய இரண்டு சொற்களுக்கும் பொருள் ஒன்றுதான்.

சாஸ்த்ரங்களில் நித்ய, நைமித்திக கர்மங்களை விடக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய கர்மங்களை விடாமல், அவற்றின் உலகியல் பலன்களை விரும்பாமல், மனத்தூய்மையின் பொருட்டுச் செய்வதற்கு த்யாகம் என்று பெயர்.

Downloaded from **www.omkaravidya.com**

பொதுவாக, கர்மங்கள் ஐந்து வகைப்படும். செய்யக்கூடாத கர்மங்களுக்கு நிஷித்த கர்மம் அல்லது ப்ரதிஷித்த கர்மம் என்று பெயர். பொய் பேசக் கூடாது, பிறரைத் துன்புறுத்தக் கூடாது, சாஸ்த்ரத்தில் பாப கர்மம் என்று சொல்லப்பட்டவைகளைச் செய்யக்கூடாது முதலியவை.

காம்ய கர்மம், ப்ராயச்சித்த கர்மம் ஆகியவற்றைத் தேவைப்பட்டால் செய்யலாம். ஒரு குறிப்பிட்ட பலனை விரும்பிச் செய்யக்கூடிய வைதிக கர்மத்திற்கு காம்ய கர்மம் என்று பெயர். இது உலகியல் கர்மம் அல்ல. இவற்றைப் பற்றி வேதங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன.

நாம் அறிந்தும் அறியாமலும் செய்த பாபங்கள் நீங்குவதற்காக நாம் செய்யக்கூடிய கர்மங்கள், ப்ராயச்சித்த கர்மங்கள் எனப்படும். குற்றவுணர்ச்சி நீங்குவதன்பொருட்டு ப்ராயச்சித்த கர்மங்கள் செய்யப்படுகின்றன.

நாம் செய்கின்ற நல்ல செயல்களும், தீய செயல்களும் கண்ணுக்குத் தெரியாத புண்ய பாபங்களாக மாறி, காலப்போக்கில் அவற்றிற்குரிய பலன்களான இன்ப துன்பங்களைக் கொடுத்தே தீரும். இது நமது ஆழ்ந்த, அறிவுபூர்வமான ச்ரத்தை.

செயலுக்கும் பலனுக்கும் இடையில் இருக்கும் புண்ய பாபமாகிய தொடர்பைத்தான் **அத்ருஷ்டம்** என்ற சொல்லால் அழைக்கிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

காம்ய, ப்ராயச்சித்த கர்மங்களைத் தேவைப்பட்டால் செய்யலாம். செய்துதான் ஆக வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் நித்ய, நைமித்திக கர்மங்களைச் செய்துதான் ஆக வேண்டும்.

ஸந்ந்யாஸம் என்ற சடங்கைச் செய்யும் வரை, நித்ய நைமித்திக கர்மங்களை விடக்கூடாது. நாள்தோறும் செய்வது, மாதந்தோறும் செய்வது, வருடத்திற்கொரு முறை செய்வது - அனைத்தும் நித்ய கர்மத்தில்தான் அடங்கும்.

நைமித்திகம் என்பது குழந்தைப் பிறப்பு முதலான நிகழ்வுகளின்போது செய்வது. அந்தந்த காரணங்களை ஒட்டி, அந்தந்த நேரங்களில் செய்ய வேண்டிய கர்மங்களையும் விடாமல் செய்ய வேண்டும்.

சாஸ்த்ரப்படி ஸந்ந்யாஸம் மேற்கொள்ளும்போதுதான், நித்ய நைமித்திக கர்மங்களை விட வேண்டும். சோம்பேறித்தனத்தாலோ ச்ரத்தை குறைபாட்டாலோ அவற்றை விடக்கூடாது. செய்துதான் ஆக வேண்டும் என்பது வேதத்தின் சட்டம். வேதத்தில் ச்ரத்தை கொண்டவர்கள், நிச்சயமாக அவற்றைச் செய்வார்கள்.

ஸர்வகர்மபலத்யாக: என்பதில் **ஸர்வகர்ம** என்பது நித்ய, நைமித்திக கர்மங்களைத்தான் குறிக்கும். நித்ய, நைமித்திக கர்மங்களைச் செய்து, அவற்றின் உலகியல் இன்பப் பலன்களை வேண்டாம் என்று துறத்தல் த்யாகம் எனப்படும்.

பகவான் இந்த அத்யாயத்தில் இவ்வாறு கூறுவார் -

Downloaded from **www.omkaravidya.com**

அநிஷ்டமிஷ்டம் மிஶ்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம் ।
பவத்யத்த்யாகிநாம் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸிநாம்
க்வசித் ।। 18 - 12 ।।

இன்பம், துன்பம், இரண்டும் கலந்தது என கர்மபலன்கள் மூன்று வகையாக இருக்கின்றன. கர்மபலன்களை த்யாகம் செய்கின்றவனை அவை ஒட்டாது. கர்மபலன்களை த்யாகம் செய்யாதவனைத்தான் அவை ஒட்டும் என்று கூறியிருக்கிறார். கர்மபலனை த்யாகம் செய்பவனையும் ஸந்ந்யாஸியையும் பகவான் அங்கு பிரித்துக் காட்டியிருக்கிறார்.

கர்மபலன்களை த்யாகம் செய்வது என்பது மோக்ஷத்தை விரும்புகின்ற கர்மயோகிக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

த்யாகம், ஸந்ந்யாஸம் என்பவை இருவேறு பொருட்களைக் குறிக்கக்கூடிய சொற்கள் அல்ல. அவற்றின் பொருள் ஒன்றுதான்.

त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुर्मनीषिणः ।
यज्ञदानतपःकर्म न त्याज्यमिति चापरे ।। १८ - ३ ।।

த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர்மநீஷிண: ।
யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யமிதி சாபரே ।। 18 - 3 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

மநீஷிண: - (சில) அறிஞர்கள், **தோஷவத்** - குறைபாடுடைய, **கர்ம** - (லௌகிக, வைதிக) கர்மங்களை, **ஏகே** - ஒருசேர, **த்யாஜ்யம்** - விட்டுவிட வேண்டும், **(இதி** - என்று), **ப்ராஹு:** - கூறுகிறார்கள். **அபரே** - வேறு சில அறிஞர்கள், **யஜ்ஞ-தாந-தப: கர்ம** - யஜ்ஞம், தானம், தவம் ஆகிய கர்மங்களை, **ந த்யாஜ்யம்** - விட்டுவிடக் கூடாது, **இதி ச** - என்றும், (**ப்ராஹு: -** கூறுகிறார்கள்).

பொழிப்புரை

சில அறிஞர்கள், லௌகிக, வைதிக கர்மங்கள் குறைபாடுடையவை, அவற்றை ஒருசேர விட்டுவிட வேண்டும் என்று கூறுகிறார்கள். வேறு சில அறிஞர்கள், யஜ்ஞம், தானம், தவம் ஆகிய கர்மங்களை விட்டுவிடக் கூடாது என்று கூறுகிறார்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் த்யாகத்தைக் குறித்து அறிஞர்களின் கருத்துகளை மேலும் கூறுகிறார்.

இந்த ச்லோகத்தில், **மநீஷிண:** என்ற சொல்லுக்கு, ஸந்ந்யாஸ த்ருஷ்டிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகின்ற பண்டிதர்கள் என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த கர்மங்கள் அனைத்தும் குற்றமுடையவையாக இருக்கின்றன. ஏனெனில் அவை பந்தத்தை உண்டு பண்ணுகின்றன என்பது அவர்களுடைய கருத்து.

பொதுவாக, வைதிக கர்மங்களை ச்ரத்தையுடன் செய்தால், அவை விக்ஷேபத்தைக் கொடுக்காது. எப்படியிருந்தாலும், அவற்றின் அத்ருஷ்ட பலன், மீண்டும் பிறவியைக் கொடுக்கும். பந்தத்தையும், உடல் மீது அபிமானத்தையும் உண்டு பண்ணுகின்ற காரணத்தினால், கர்மம் குற்றம் உடையதுதான் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

கர்மம் குற்றமுடையது என்று ஒரு பொருள். கர்மம் செய்தாலே குற்றம்தான் என்பது மற்றொரு பொருள். ஏனெனில் ஆத்மாவிற்கு கர்மம் கிடையாது. நாம் கர்மம் செய்தால், **ஆத்மா அகர்த்தா** என்ற ஞானத்திற்குத் தடை ஏற்படும் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வேறு சில அறிஞர்கள், யஜ்ஞம், தானம், தவம் ஆகிய கர்மங்களை விடவே கூடாது என்று கூறுகின்றனர். இது மனப்பக்குவத்தை அடைய வேண்டியவர்களுக்குச் சொல்லப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இது அஜ்ஞானிகளுக்குச் சொல்லப்பட்டது, ஞானத்தை விரும்புகின்ற முமுக்ஷுக்களுக்குச் சொல்லப்பட்டதல்ல என்று ஆதிசங்கரர் தமது உரையில் குறிப்பிடுகிறார்.

மனப்பக்குவத்தை அடைந்தாலும், கர்மஸந்ந்யாஸம் செய்யும் வரையில் யஜ்ஞ, தான, தவங்களைச் செய்யத்தான் வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆனால் அவற்றின் உலகியல் பலன்களைத் துறந்துவிட வேண்டும்.

யஜ்ஞ, தான, தவங்களுக்கு மனப்பக்குவம், மன ஒருமுகப்பாடு ஆகியவற்றைத் தரக்கூடிய சக்தி இருக்கிறது.

निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम ।

त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधः सम्प्रकीर्तितः ।। १८ - ४ ।।

நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம ।
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவித: ஸம்ப்ரகீர்த்தித: ।। 18 - 4 ।।

பதவுரை

ஹே பரதஸத்தம! - ஓ பரதகுலத்தில் தோன்றிய நல்லவர்களுள் சிறந்தவனே! **ஹே புருஷவ்யாக்ர!** - ஓ மனிதர்களுள் புலி போன்றவனே! **தத்ர** - இங்கு, **த்யாகே** - த்யாகத்தைப் பற்றிய விஷயத்தில், **மே** - என்னுடைய, **நிஶ்சயம்** - உறுதியான அபிப்ராயத்தை, **ஶ்ருணு** - கேட்பாயாக! **த்யாக: ஹி** - த்யாகமானது, **த்ரிவித:** - மூன்றுவகையாக, **ஸம்ப்ரகீர்த்தித:** - கூறப்பட்டுள்ளது.

பொழிப்புரை

ஓ பரதகுலத்தில் தோன்றிய நல்லவர்களுள் சிறந்தவனே! ஓ மனிதர்களுள் புலி போன்றவனே! த்யாகத்தைப் பற்றிய விஷயத்தில், என்னுடைய உறுதியான அபிப்ராயத்தைக்

Downloaded from **www.omkaravidya.com**

கேட்பாயாக! த்யாகமானது, மூன்றுவகையாகக் கூறப்பட்டுள்ளது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் த்யாகத்தைப் பற்றிய தமது கருத்தைக் கூறப் போவதாக ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

பரத வம்சத்தில் தோன்றிய நல்லவர்களுள் சிறந்தவனே! மனிதர்களுள் புலி போன்றவனே! என்றெல்லாம் அர்ஜுனனைப் புகழ்கிறார்.

மூன்று வகையான த்யாகங்கள் பெரியோர்களால் நன்கு உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

यज्ञदानतपःकर्म न त्याज्यं कार्यमेव तत् ।

यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ।। १८ - ५ ।।

யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் ।
யஜ்ஞோ தாநம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம் ।। 18 - 5 ।।

பதவுரை

யஜ்ஞதாநதப:கர்ம - (உள்ளத்தில் பக்குவம் ஏற்படும் வரை) யஜ்ஞ-தான-தவம் ஆகிய கர்மங்களை, **ந த்யாஜ்யம்** - விட்டுவிடக் கூடாது. **தத்** - அவை, **கார்யம் ஏவ** - நிச்சயமாகச் செய்ய வேண்டியவையே ஆகும். **யஜ்ஞ: தாநம் தப: ச ஏவ** - யஜ்ஞும், தானம், தவம் ஆகிய கர்மங்களே, **மநீஷிணாம்**

Downloaded from **www.omkaravidya.com**

- பலனை விரும்பாதவர்களுக்கு, **பாவநாநி** - உள்ளத்தைத் தூய்மைப்படுத்தக் கூடியவை.

பொழிப்புரை

உள்ளத்தில் பக்குவம் ஏற்படும் வரை, யஜ்ஞும், தானம், தவம் ஆகிய கர்மங்களை விட்டுவிடக் கூடாது. அவை நிச்சயமாகச் செய்ய வேண்டியவையே ஆகும். யஜ்ஞும், தானம், தவம் ஆகிய கர்மங்களே, பலனை விரும்பாதவர்களுக்கு, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தக் கூடியவை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் யஜ்ஞும், தானம், தவம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார்.

யஜ்ஞ, தான, தவங்களை விடக்கூடாது என்று கூறுகிறார். அஜ்ஞானிகள், மனத்தூய்மையைப் பெற விரும்புபவர்கள், அதனைப் பெறும்பொருட்டு, அதன் மூலம் ஞானத்தைப் பெறுவதற்குரிய தகுதியைப் பெறுவதற்காக, இதனைச் செய்ய வேண்டும்.

யஜ்ஞும் என்று சொல்லபடுவது - ஈச்வர பூஜை அல்லது ஆராதனை, வேள்வி போன்ற வழிபாடுகள். சுருக்கமாக தேவயஜ்ஞும், பித்ருயஜ்ஞும், மநுஷ்யயஜ்ஞும், பூதயஜ்ஞும், ப்ரஹ்மயஜ்ஞும் ஆகிய பஞ்ச மஹாயஜ்ஞங்கள் என்று புரிந்துகொள்ளலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

மூன்று வகையான யஜ்ஞ, தான, தவங்களைப் பற்றி, பகவான் பதினேழாவது அத்யாயத்தில் கூறினார். உடல், மனம், வாக்கால் செய்கின்ற தவத்தைப் பற்றியும் அங்கு கூறினார்.

யஜ்ஞ, தான, தவங்களை விடாமல் செய்ய வேண்டும். ஏன் விடாமல் செய்ய வேண்டுமெனில், மோக்ஷத்தை விரும்புபவனுக்கு, அவை மனதைத் தூய்மைப்படுத்தக் கூடியவை, பக்குவப்படுத்தக் கூடியவை.

மநீஷிணாம் என்ற சொல், உலகியல் பலன்களை விரும்பாமல், உள்ளத் தூய்மையை விரும்புபவர்களைக் குறிக்கிறது. உலகியல் பலன்களை விரும்புவது தூய்மையாகாது.

உலகியல் பலன்களை விரும்பாத மனப்பக்குவமே மனத்தூய்மையின் அடையாளம்தான். அவற்றை நன்கு வளர்த்துக் கொள்வதற்குத்தான் யஜ்ஞ தான தவங்களைச் செய்ய வேண்டும்.

एतान्यपि तु कर्माणि सङ्गं त्यक्त्वा फलानि च ।

कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ।। १८ - ६ ।।

ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநி ச ।

கர்த்தவ்யாநீதி மே பார்த்த நிஶ்சிதம் மதமுத்தமம் ।। 18 - 6 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **து** - ஆனால், **ஏதாநி** - (யஜ்ஞ-தான-தவமாகிய) இந்த, **கர்மாணி அபி** - செயல்களும்,

Downloaded from **www.omkaravidya.com**

ஸங்கம் - பற்றை, **த்யக்த்வா** - துறந்து, **பலாநி ச** - பலனை, **(த்யக்த்வா** - துறந்து), **கர்த்தவ்யாநி** - (இறை உணர்ச்சியுடன், கடமை உணர்ச்சியுடன்) செய்யப்பட வேண்டியவை, **இதி** - என்பது, **மே** - என்னுடைய, **நிஶ்சிதம்** - உறுதியான, **உத்தமம்** - மேலான, **மதம்** - கருத்து.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! யஜ்ஞ, தான, தவமாகிய இந்தச் செயல்கள், பற்றைத் துறந்து, பலனையும் துறந்து, இறை உணர்ச்சியுடன், கடமை உணர்ச்சியுடன் செய்யப்பட வேண்டியவை என்பது என்னுடைய மேலான, உறுதியான கருத்து.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில் யஜ்ஞ, தான, தவங்களை எத்தகைய மனோபாவனையுடன் செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறார்.

யஜ்ஞ, தான, தவங்கள், நித்ய நைமித்திக கர்மங்களுக்குள் வரக்கூடியவை. மோக்ஷத்தை உணர விரும்புபவர்களுக்கு, உள்ளத்தூய்மையைக் கொடுக்கக் கூடியவை இவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் அவற்றை விடக்கூடாது என்று பகவான் கூறினார்.

யஜ்ஞ, தான, தவங்களைச் செய்யும்போது, அந்தச் செயல்களிலும் அவற்றின் பலன்களிலும் பற்றில்லாமல் செய்ய வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

நான் செய்கிறேன் என்ற எண்ணமில்லாமல், இது பகவானின் கட்டளை என்ற எண்ணத்துடன், இது தன்பொருட்டு அல்ல, சமூக நன்மையின் பொருட்டுச் செய்யப்படுவது என்ற எண்ணத்துடன் செய்ய வேண்டும்.

எல்லோருடைய நன்மையின் பொருட்டுத்தான், வேதங்களில் கர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சுயநலமில்லாமல் இந்தச் செயல்களைச் செய்ய வேண்டும்.

செயல்களில் பற்றில்லாமல், நான் செய்கிறேன் என்ற எண்ணமில்லாமல், படபடப்பில்லாமல், பரபரப்பில்லாமல், பொறுப்புணர்ச்சியுடன் செய்ய வேண்டும். அதே போன்று, செயல்களின் பலன்களிலும், ஸ்வர்கம் முதலான உலக இன்பங்கள் தனக்கு வேண்டாம் என்ற எண்ணத்துடன் செய்ய வேண்டும்.

இவ்வாறு செயல்களிலும் செயல்களின் பலன்களிலும் பற்றில்லாமல் செய்தால், அவை மனத்தூய்மையைக் கொடுக்கும்.

இது தமது மேலான, உறுதியான கருத்து என்கிறார் பகவான்.

नियतस्य तु सन्यासः कर्मणो नोपपद्यते ।

मोहात्तस्य परित्यागस्तामसः परिकीर्तितः ।। १८ - ७ ।।

நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே ।
மோஹாத்தஸ்ய பரித்யாகஸ்தாமஸ: பரிகீர்த்தித: ।। 18 - 7 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

து - மேலும், **நியதஸ்ய** - விதிக்கப்பட்ட, **கர்மண:** - கர்மத்தின் (கர்மங்களை), **ஸந்ந்யாஸ:** - விடுதல் (என்பது), **ந உபபத்யதே।** - பொருந்தாது (தகாது). **மோஹாத்** - அறியாமையினால் (கவனக்குறைவால்), **தஸ்ய** - அதன் (அதனை), **பரித்யாக:** - விடுதலானது, **தாமஸ:** - தாமஸம் என்று, **பரிகீர்த்தித:** - கூறப்படுகிறது.

பொழிப்புரை

விதிக்கப்பட்ட கர்மங்களை விடுதல் என்பது பொருந்தாது, தகாது. அறியாமையினால், கவனக்குறைவால், அவற்றை விடுதல், தாமஸ த்யாகம் என்று கூறப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில் தாமஸ த்யாகத்தைப் பற்றிக் கூறுகிறார்.

இதைச் செய்துதான் ஆக வேண்டும் என்று எந்த கர்மங்களை, சாஸ்த்ரங்கள் ஒருவனுக்கு விதித்திருக்கின்றனவோ, அவற்றை விடக்கூடாது. இது ஞானமில்லாதவனுக்குச் சொல்லப்பட்ட விஷயம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நான் யாண்டும் செயல்புரியாத மெய்ப்பொருள் என்ற ஞானம் இல்லாதவன், அந்த ஞானத்தைப் பெறும் வரை, மனத்தூய்மையின் பொருட்டு, கர்மங்களைச் செய்துதான் ஆக வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

இங்கு, விதிக்கப்பட்டுள்ள கர்மங்கள் என்பது நித்ய, நைமித்திக கர்மங்களைக் குறிக்கும். காம்ய, ப்ராயச்சித்த கர்மங்களைப் பற்றி பகவான் இங்கு கூறவில்லை.

செய்யக்கூடாது என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கர்மங்கள், குறிப்பிட்ட ஒரு பலனை விரும்பிச் செய்யும் காம்ய கர்மங்கள், பாபங்களிலிருந்து விடுதலை என்ற மறைமுகமான பலனை விரும்பிச் செய்யும் ப்ராயச்சித்த கர்மங்கள் ஆகியவற்றை விட்டுவிடலாம்.

ஆனால் மனத்தூய்மையைக் கொடுக்கக்கூடிய வல்லமை படைத்த நித்ய, நைமித்திக கர்மங்களை விடக்கூடாது.

மனத்தூய்மையைப் பெற்று, வேதாந்தத்திற்குத் தகுதிபெறும் வரை, இதைச் செய்துதான் ஆக வேண்டும் என்று சாஸ்த்ரம் கட்டளையிட்டுள்ள கர்மங்களைத் துறப்பது பொருந்தாது.

ஆனால் இந்தக் கர்மங்களைச் செய்யாமல் விட்டால் என்ன ஆகிவிடும்? என்று பகுத்தறிவில்லாமல், வாழ்க்கையைப் பற்றிய உண்மையை அறியாமல், கவனக்குறைவுடன், விதிக்கப்பட்ட கடமைகளை விடுதல் தாமஸ த்யாகம் என்கிறார் பகவான்.

இந்த ச்லோகத்தில், முதல் வரியில் **ஸந்ந்யாஸ:** என்ற சொல்லையும் இரண்டாவது வரியில் **பரித்யாக:** என்ற சொல்லையும் பகவான் பயன்படுத்தியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸந்ந்யாஸத்திற்கும் த்யாகத்திற்கும் உண்மையிலேயே வேற்றுமையில்லை என்ற பகவானின் அபிப்ராயத்தைப் புரிந்துகொள்ளலாம். இரண்டு சொற்களுக்கும் விடுதல் என்றே பொருள்.

பக்குவமில்லாமல் செய்யப்படும் துறவு பொருந்தாது, அது தாமஸமானது.

மயக்கத்தினாலும், கவனக்குறைவாலும் தனக்கென்று விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யாமல் விடுவதால், தனிமனிதனுக்குப் பாபம் வரும், சமூகத்திற்கும் அது கேட்டை விளைவிக்கும்.

இவை பொருளியல் நோக்கத்தில் பேசப்படுகின்ற விஷயங்கள் அல்ல, ஆன்மிக நோக்கில், அருளியல் நோக்கில் சொல்லப்படுபவை.

दुःखमित्येव यत्कर्म कायक्लेशभयात्त्यजेत् ।

सः कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ।। १८ - ८ ।।

दु:க்கமித்யேவ யத்கர்ம காயக்லேஶபயாத்த்யஜேத் ।

ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத் ।। 18 - 8 ।।

பதவுரை

யத் - எந்த, **கர்ம** - செயலை, **காய-க்லேஶ-பயாத்** - உடல் வருத்தத்திற்கு பயந்து, **து:க்கம் இதி ஏவ** - துன்பம் என்று கருதியே, **த்யஜேத் -** விடுகிறானோ, **ஸ:** - அவன், **ராஜஸம்** -

Downloaded from **www.omkaravidya.com**

ராஜஸமான, **த்யாகம் –** த்யாகத்தை, **க்ருத்வா** – செய்து, **த்யாகபலம்** – த்யாகத்தின் பலனை, **ந ஏவ லபேத்** – அடைவதே இல்லை.

பொழிப்புரை

உடல் வருத்தத்திற்கு பயந்து, துன்பம் என்று கருதி செயலை விட்டுவிடுதல் ராஜஸ த்யாகமாகும். இத்தகைய த்யாகத்தினால், ஒருவன் த்யாகத்தின் பலனை அடையாமல் போகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ராஜஸ த்யாகத்தைப் பற்றிக் கூறுகிறார்.

கர்மம் செய்வது கஷ்டமாக இருக்கிறது என்ற எண்ணம் பலருக்கு இருக்கிறது. கர்மத்தை விட வேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும்கூட, கர்மம் செய்வதால் உடலுக்கு ச்ரமம் ஏற்படும், துன்பத்தைத் தரும் என்று சிலர் நினைக்கிறார்கள்.

இவ்வாறு உடல் வருத்தத்தை எண்ணி பயந்து பின்வாங்கி, கர்மங்களைச் செய்யாமல் விடுதல் ராஜஸ த்யாகமாகும். அவ்வாறு செய்யப்படும் த்யாகமானது பலனைத் தராது என்கிறார் பகவான். மோக்ஷமாகிய பலனை அவன் அடைய மாட்டான் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

மனத்தூய்மை, ஞானம், மோக்ஷம் இவையெல்லாம் வேண்டுமென்றால், பக்குவமில்லாதவன் முதலில் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்துதான் ஆக வேண்டும்.

அறியாமையால் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் விடுவது தாமஸ த்யாகம். தெரிந்தாலும், கஷ்டமாக இருக்கிறது என்று கடமைகளை விடுதல் ராஜஸ த்யாகம்.

இப்பொழுது கஷ்டப்பட்டாலும் பின்னால் நன்றாக இருப்போம் என்ற எண்ணம் வேண்டும்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (திருக்குறள் - 466)

என்பது திருவள்ளுவர் வாக்கு. அதாவது செய்யக் கூடாதவற்றைச் செய்தாலும் துன்பம் வரும், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் விட்டாலும் துன்பம் வரும் என்பது கருத்து.

कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।

सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ।। १८ - ९ ।।

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுந ।

ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக:

ஸாத்த்விகோ மத: ।। 18 - 9 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஹே அர்ஜுந! - ஓ அர்ஜுனா! **கார்யம்** - செய்யத்தான் வேண்டும், **இதி ஏவ** - என்று, **யத்** - எந்த, **நியதம் கர்ம** - விஹித கர்மமானது (சாஸ்த்ரங்களால் தனக்கென்று விதிக்கப்பட்ட செயலானது), **ஸங்கம்** - பற்றையும், **பலம் ச ஏவ** - பலனையும், **த்யக்த்வா** - துறந்து, **க்ரியதே** - செய்யப்படுகிறதோ, **ஸ: த்யாக:** - அந்த த்யாகமானது, **ஸாத்த்விகம்** - ஸாத்விகமானது, **மத:** - என்று கருதப்படுகிறது.

பொழிப்புரை

சாஸ்த்ரங்களால் தனக்கென்று விதிக்கப்பட்ட செயல்களை, செய்யத்தான் வேண்டும் என்ற எண்ணத்துடன், பற்றையும் பலனையும் துறந்து செய்வது, ஸாத்விகமான த்யாகமாகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஸாத்விகமான த்யாகத்தைப் பற்றி உபதேசிக்கிறார்.

சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டுள்ள நித்ய நைமித்திக கர்மங்களை அவசியம் செய்துதான் ஆக வேண்டும். இவ்வாறு எந்த ஒரு செயலானது, சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அவற்றைச் செய்துதான் ஆக வேண்டும், அது என்னுடைய கடமை என்ற பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அதைச் செய்தால்தான் ஜீவாத்மாக்களாகிய நமக்கு நன்மையும் மேன்மையும் ஏற்படும்.

நான் செய்கிறேன் என்ற எண்ணமில்லாமல், பகவானுடைய ஆணைக்கேற்ப நான் செயலாற்றுகிறேன் என்ற எண்ணத்துடன் செயலாற்ற வேண்டும்.

இது பகவானுடைய கட்டளை, சமூகத்தில் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு என்ற எண்ணம் மிக முக்கியம்.

செயலில் பற்றைத் துறந்து, செயலின் பலன்களாகிய உலகியல் இன்பங்கள், மேலுலக இன்பங்கள் ஆகியவற்றையும் துறந்து, செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன், தனக்கென்று சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள வைதிக கர்மங்களை ச்ரத்தா பக்தியுடன் செய்ய வேண்டும்.

இவ்வாறு செயலில் பற்றையும், செயலின் பலனையும் த்யாகம் செய்வதால், அத்தகைய த்யாகமானது ஸாத்விக த்யாகம் என்று பெரியோர்களால் கருதப்படுகிறது.

ஒருவன் தனது கடமையைச் செய்கிறான். ஆனால், நான் செய்கிறேன் என்ற அபிமானத்தையும் பலனையும் துறக்கிறான். அந்த த்யாகமானது, உயர்ந்தது, ஸாத்விகமானது.

न द्वेष्ट्यकुशलं कर्म कुशले नानुषज्जते ।

त्यागी सत्त्वसमाविष्टो मेधावी छिन्नसंशयः ।। १८ - १० ।।

Downloaded from **www.omkaravidya.com**

ந த்வேஷ்ட்யகுஶலம் கர்ம குஶலே நாநுஷஜ்ஜதே ।
த்யாகீ ஸத்த்வஸமாவிஷ்டோ மேதாவீ சிந்நஸம்ஶய: ।। 18 - 10 ।।

பதவுரை

ஸத்த்வ-ஸமாவிஷ்ட: - ஸத்வ குணம் நிறைந்தவரும், **மேதாவீ** - தர்ம சாஸ்த்ரத்தை நன்கு அறிந்தவரும், **சிந்ந-ஸம்ஶய:** - ஐயங்கள் நீங்கப் பெற்றவருமான, **த்யாகீ** - த்யாகியானவர், **அகுஶலே** - விருப்பமில்லாத (அதர்மமாகத் தோன்றுகின்ற), **கர்ம** - செயலை, **ந த்வேஷ்டி** - வெறுப்பதில்லை, **குஶலே** - விருப்பமான (தர்மமாகத் தோன்றுகின்ற செயலில்), **ந அநுஷஜ்ஜதே** - பற்று வைப்பதில்லை.

பொழிப்புரை

ஸத்வ குணம் நிறைந்தவரும், தர்ம சாஸ்த்ரத்தை நன்கு அறிந்தவரும், ஐயங்கள் நீங்கப் பெற்றவருமான த்யாகியானவர், விருப்பமில்லாத, அதர்மமாகத் தோன்றுகின்ற செயலை வெறுப்பதில்லை. விருப்பமான, தர்மமாகத் தோன்றுகின்ற செயலிலும் பற்று வைப்பதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஸாத்விக த்யாகியைப் புகழ்ந்து பேசுகிறார்.

ஸாத்விகமான த்யாகி, செயல்களில் விருப்பு வெறுப்பில்லாதவராக இருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

அகுஶலம் என்பது செய்யக்கூடாத செயல்கள், பலனை விரும்பிச் செய்கின்ற காம்ய கர்மங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். இத்தகைய செயல்களை இவன் வெறுப்பதில்லை.

இதனைப் பற்றி பகவான் ஏற்கெனவே கூறியிருக்கிறார். இது மிக நுணுக்கமான விஷயம். ஒருவன், பிறருடைய கர்மங்களைச் சிறப்பாகச் செய்தாலும், அது அவனுக்கு நல்லதல்ல. தனக்கென்று விதிக்கப்பட்ட கர்மங்களில், தோஷமிருப்பதாக நினைத்தாலும் அதைத்தான் ஒருவன் செய்ய வேண்டும் (3-35) என்று கூறினார்.

பொதுவாக, மற்றவர்களைக் கொல்வது என்பது தோஷமுடைய கர்மம்தான். ஸாமான்ய தர்மம் எனப்படும் பொது அறத்தின்படி, பிறரைத் துன்புறுத்துவது என்பது அதர்மம்தான். ஆனால் யுத்தத்தில் அதர்மத்தின் பக்கம் இருப்பவர்களைக் கொல்வது தர்மமாகிவிடுகிறது.

அகுஶலம் என்பது தோஷமுள்ள கர்மங்களான கொல்லுதல் முதலானவை. **குஶலம்** என்பது துன்புறுத்துதல் முதலியவை இல்லாத, மற்றவர்களுடைய தர்மங்கள்.

நான் இப்படிப்பட்ட கர்மம் செய்ய வேண்டியிருக்கிறதே என்று, அந்த கர்மத்தை, ஸாத்விக த்யாகியானவர் வெறுப்பதில்லை. என்னுடைய வாழ்க்கை இப்படி அமைந்துவிட்டதே என்று நொந்துகொள்வதில்லை. நல்ல செயலைச் செய்கிறோம் என்று அதில் ஒட்டிக் கொள்வதுமில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ரங்களில் இடம், பொருள், சூழலுக்குத் தகுந்தவாறு கூறப்பட்டுள்ள கர்மங்களைக் குறித்து, ஸந்தோஷப்படுவதுமில்லை, வருத்தப்படுவதுமில்லை.

ஆனால் மிகுந்த பொறுப்புணர்வுடன், செய்துதான் ஆக வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்கிறார். ஸத்வ குணத்தில் மேலோங்கியிருப்பவரால்தான் அப்படி இருக்க முடியும்.

சாஸ்த்ர அறிவை நன்கு பெற்ற மேதாவியாக அவர் இருக்கிறார். வாழ்க்கையில் எந்த விஷயத்தைக் குறித்தும் அவருக்கு சந்தேகம் இருப்பதில்லை. தர்ம விஷயத்திலும் தத்துவ விஷயத்திலும் அவருக்கு சந்தேகம் வருவதற்கு வாய்ப்பில்லை.

மேதாவி என்ற சொல், அவர் ஞானத்தில் நிலைபெற்றிருப்பவர் என்பதைக் குறிக்கிறது. இவர் லோக ஸங்க்ரஹம் செய்யக்கூடியவர் என்று புரிந்துகொள்ளலாம்.

தர்ம, அதர்மங்களை நிர்ணயம் செய்வது மிகக் கடினம். யார், எந்த இடத்தில், எந்தச் செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்ற தர்மங்கள் மாறுகின்றன.

எந்த இடத்திலும், தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மங்களை, விருப்பு வெறுப்பில்லாமல் செய்பவர் அறிவாளி, குழப்பமில்லாதவர், ஸத்வ குணத்தில் மேலோங்கியிருப்பவர். அவருடைய த்யாகம், பொறுப்புணர்ச்சி, செயலிலும் செயலின்

Downloaded from **www.omkaravidya.com**

பலனிலும் பற்றில்லாமல் இருக்கும் தன்மை ஆகியவை மிகச் சிறந்தவை.

பகவான் இந்த ச்லோகத்தில், கர்மயோகியை இவ்வாறு சிறப்பித்துப் போற்றுகிறார்.

न हि देहभृता शक्यं त्यक्तुं कर्माण्यशेषतः ।

यस्तु कर्मफलत्यागी स त्यागीत्यभिधीयते ।। १८ - ११ ।।

ந ஹி தேஹப்ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத: ।
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீத்யபிதீயதே ।। 18 - 11 ।।

பதவுரை

ஹி - ஏனெனில், **தேஹப்ருதா** - உடலை உடையவனால் (ஜீவாத்மாவால்), **அஶேஷத:** - அனைத்து, **கர்மாணி** - செயல்களையும், **த்யக்தும்** - (முற்றிலும்) விடுவதற்கு, **ந ஶக்யம்** - இயலாது. **து -** ஆனால், **ய:** - எவன், **கர்மபல-த்யாகீ** - செயலின் பலனை த்யாகம் செய்கிறானோ, **ஸ:** - அவன், **த்யாகீ** - த்யாகி, **(இதி** - என்று), **அபிதீயதே** - கூறப்படுகிறான்.

பொழிப்புரை

உடலை உடைய ஜீவாத்மாவால், அனைத்துச் செயல்களையும் முற்றிலும் விடுவதற்கு இயலாது. செயலின் பலனை த்யாகம் செய்பவனே த்யாகி என்று கூறப்படுகிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஒரு முக்கியமான கருத்தைக் கூறுகிறார்.

அதாவது, உடலை உடையவன், முற்றிலும் கர்மத்தைத் துறப்பது என்பது நடக்கவே நடக்காது. இதே கருத்தை பகவான் முன்பே கூறியிருக்கிறார்.

ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை: ।। 3 - 5 ।।

அறிவிலியால் செயல்புரியாமல் கணநேரம்கூட இருக்க முடியாது. அவன் வசமில்லாமலேயே ப்ரக்ருதியின் குணங்கள் அவனைச் செயலில் தூண்டும்.

ஞானமடைந்து மனம் அமைதியாகும் வரையில், எவராலும் செயல்புரியாமல் இருக்க முடியாது. ஞானியால் எதுவும் செய்யாமல், அமைதியாக இருக்க முடியும். **தஸ்ய கார்யம் ந வித்யதே।** (3-17) அவருக்குச் செய்ய வேண்டியது எதுவுமில்லை என்று கூறினார் பகவான்.

செயல்புரிவதாலோ, செயலை விடுவதாலோ அவருக்கு எந்த ஒரு லாப நஷ்டமும் இல்லை. அவர் யாரையும் சார்ந்திருப்பதுமில்லை. ஆனால் அறிவிலியாக இருக்கின்ற ஒருவனால், செயல்புரியாமல் இருக்க முடியாது.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த ச்லோகத்தில் கூறப்படும் கர்மயோகி, நித்ய நைமித்திக கர்மங்களைப் பொறுப்பாகச் செய்துவிட்டு, பலனை த்யாகம் செய்கிறான்.

இவ்வாறு கர்மத்தைச் செய்துவிட்டு, கர்மபலனை த்யாகம் செய்பவனைத்தான் பகவான் த்யாகீ என்றே கூறுகிறார்.

ஆக, மனம் பக்குவமடையும் வரையில், கர்மத்தை த்யாகம் செய்யக்கூடாது. கர்மபலனை த்யாகம் செய்வதே உயர்ந்த த்யாகம்.

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।

भवत्यत्यागिनां प्रेत्य न तु सन्न्यासिनां क्वचित् ।। १८ - १२ ।।

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।

भवत्यत्यागिनां प्रेत्य न तु सन्न्यासिनां

क्वचित् ।। 18 - 12 ।।

பதவுரை

அத்யாகிநாம் - கர்மபலனைத் துறக்காதவருக்கு, **ப்ரேத்ய** - (இவ்வுடலை) விட்டபின், **அநிஷ்டம்** - விருப்பமில்லாதது (துன்பகரமானது), **இஷ்டம்** - விருப்பமானது (இன்பகரமானது), **மிஶ்ரம் ச** - இரண்டும் கலந்தது என்று, **கர்மண:** - செயலின், **பலம்** - பலன், **த்ரிவிதம்** - மூன்றுவிதமாக, **பவதி** - ஏற்படுகிறது. **ஸந்ந்யாஸிநாம் து** - கர்மபலன்களையும் கர்மங்களையும்

Downloaded from **www.omkaravidya.com**

துறந்தவர்களுக்கோ எனில், **க்வசித்** - ஒருபொழுதும், **ந** - இல்லை.

பொழிப்புரை

கர்மபலனைத் துறக்காதவருக்கு, இவ்வுடலை விட்ட பிறகு, துன்பகரமானது, இன்பகரமானது, இரண்டும் கலந்தது என்று செயல்களின் பலன்கள், மூன்று விதமாக ஏற்படுகின்றன. கர்மங்களையும் கர்மபலன்களையும் துறந்தவர்களுக்கோ எனில், அவை ஒருபொழுதும் ஏற்படுவதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், கர்மயோக விஷயமாகவே உபதேசித்துக் கொண்டிருக்கிறார். கர்மத்தின் பலன்கள் மூன்று வகைப்படும். நமக்குப் பிடிக்காதது (துன்பம்), நமக்குப் பிடித்தது (இன்பம்), இரண்டும் கலந்தது என்பவையே அவை.

அநிஷ்டம் என்பது நரகத்தை, கீழான பிறவிகளைக் கொடுக்கக்கூடிய பலன்களைக் குறிக்கும். **இஷ்டம்** என்பது தேவசரீரம், உயர்ந்த இன்பங்கள் ஆகியவற்றைக் கொடுக்கக்கூடிய பலன். **மிஶ்ரம்** என்பது இன்ப துன்பங்கள் கலந்ததான மனித உலகில் வாழ்வதைக் குறிக்கும். இவை கர்மபலன்களைத் துறக்காதவருக்குக் கிடைக்கின்ற பலன்களாகும்.

கர்மபலன்களைத் துறக்காதவர்களுக்கு மிருக உடல் கிடைக்கலாம், உயர்ந்த உடல்கள் கிடைக்கலாம் அல்லது மனித உடல் கிடைக்கலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆனால் கர்மபலன்களைத் துறந்தவர்களுக்கு அல்லது கர்மத்தையே விட்டவர்களுக்கு இவை இல்லை. கர்மபலனைத் துறந்து, மனப்பக்குவம் மனத்தூய்மை ஆகியவற்றைப் பெற்றவர், **யோகாரூடஸ்ய தஸ்யைவ ஶம: காரணமுச்யதே। (6-3)** என்று பகவான் கூறியதற்கிணங்க, கர்மங்களைத் துறக்கலாம்.

முதலில் கர்மபல ஸந்ந்யாஸம், பிறகு கர்மஸந்ந்யாஸம். இவ்வாறு செய்தவருக்கு, இறந்த பிறகு, மேற்கூறிய மூன்று பலன்களும் வராது.

கர்மயோகியாக இருந்துகொண்டு, கர்மபலனை த்யாகம் செய்பவராக இருந்தாலும் சரி, அவ்வாறு செய்த பிறகு, கர்மத்தையே த்யாகம் செய்பவராக இருந்தாலும் சரி, அவருக்குக் கீழான பிறவிகளோ, மேலான பிறவிகளோ, இடைப்பட்ட மனிதப் பிறவியோ நிச்சயமாக ஏற்படாது.

சுருக்கமாகக் கூறினால், அவருக்குப் பிறவியே இருக்காது. இன்ப துன்பங்களைக் கொடுக்கக்கூடிய பிறவியே அவருக்கு அமையாது. அவர் ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தை உணர்ந்துவிடுவார் என்பது கருத்து.

पञ्चैतानि महाबाहो कारणानि निबोध मे ।

साङ्ख्ये कृतान्ते प्रोक्तानि सिद्धये सर्वकर्मणाम् ।। १८ - १३ ।।

பஞ்சைதாநி மஹாபாஹோ காரணாநி நிபோத மே ।

ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே

ஸர்வகர்மணாம் ।। 18 - 13 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஹே மஹாபாஹோ! - ஓ பெருந்தோளுடையாய்! **ஸர்வ-கர்மணாம்** - அனைத்து கர்மங்களின், **ஸித்தயே** - நிறைவேறுதல்பொருட்டு, **க்ருதாந்தே** - கர்ம காண்டத்தின் முடிவில் உள்ள, **ஸாங்க்யே** - ஸாங்க்ய சாஸ்த்ரத்தில், **ப்ரோக்தாநி** - கூறப்பட்டுள்ள, **ஏதாநி** - இந்த, **பஞ்ச** - ஐந்து, **காரணாநி** - காரணங்களை (விஷயங்களை), **மே** - என்னிடமிருந்து, **நிபோத** - அறிந்துகொள்வாயாக!

பொழிப்புரை

ஓ பெருந்தோளுடையாய்! அனைத்து கர்மங்களும் ஞானத்திற்குரிய தகுதியைத் தரும்பொருட்டு, கர்மகாண்டத்தின் முடிவில், ஞான காண்டத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள, இந்த ஐந்து விஷயங்களை என்னிடமிருந்து அறிந்துகொள்வாயாக!

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் செயலுக்கு, ஐந்து காரணங்கள் இருக்கின்றன என்று உபதேசிக்கிறார்.

தான் சொல்லப் போகின்ற விஷயத்தை ஒருமுகப்பட்ட மனதுடன் கேட்டு, மனதில் வாங்கிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

ஒரு செயலைச் செய்யும்போது, அதில் என்னென்ன அம்சங்கள் இருக்கின்றன என்பதை நாம் தெரிந்துகொள்ளத்தான்

Downloaded from **www.omkaravidya.com**

வேண்டும். ஒவ்வொரு ஸாதகனும் இதனை உணர்ந்திருக்க வேண்டும்.

இந்த ஐந்து காரணங்களையும் பகவான் புதிதாகக் கூறவில்லை. ஏற்கெனவே சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள கருத்தைத்தான் கூறுகிறார்.

ஆத்ம ஞானத்தை உபதேசிக்கக்கூடியது ஸாங்க்ய சாஸ்த்ரம் அல்லது வேதாந்தம். ப்ரஹ்மனும் ஆத்மாவும் ஒன்று என்ற ஞானத்தைப் பெறுவதற்குத் தேவையான மனக்கட்டுப்பாடு, புலனடக்கம் முதலான ஸாதனைகளை, முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆத்ம ஞானத்தையும், அதனைப் பெறுவதற்குத் தேவையான தகுதிகளையும் வேதாந்த சாஸ்த்ரம் நமக்கு உபதேசிக்கிறது.

வேதாந்த சாஸ்த்ரத்தில் கர்மங்களுக்கான காரணங்கள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா கர்மங்களும் ஞானத்தைப் பெறுவதற்குரிய தகுதியாகிய பலனைத் தர வேண்டும் என்பதற்காக இவை கூறப்பட்டிருக்கின்றன.

ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே । 4 - 33

அனைத்து கர்மங்களும் ஞானத்தில் முற்றுப்பெறுகின்றன என்று பகவான் கூறினார்.

பரந்த நீர்ப்பரப்பு உள்ள இடத்தில் கிணற்று நீரால் எவ்வளவு பயன் ஏற்படுமோ, ஆத்மஞானத்தைப் பெற்ற அறிஞனுக்கு, கர்மகாண்ட சாஸ்த்ரங்களால் அவ்வளவு பயன்தான் ஏற்படும் (2-46) என்றும் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

கர்மத்தின் தன்மையை அறிந்து கர்மத்தைச் செய்தால், மனத்தூய்மை பெற்று, ஞானத்தைப் பெற்று, முக்தியை உணரலாம் என்பது கருத்து.

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।

विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ।। १८ - १४ ।।

अधिष्ठानं तथा कर्त्ता करणं च पृथग्विधम् ।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र
पञ्चमम् ।। 18 - 14 ।।

பதவுரை

அதிஷ்டானம் - இருப்பிடமாகிய உடல், **ததா** - அவ்வாறே, **கர்த்தா** - கர்த்தா (செயல்புரிபவன்), **ப்ருதக்விதம்** - வெவ்வேறான, **கரணம் ச** - கரணங்கள், **விவிதா: ச** - பலவிதமானதும், **ப்ருதக்சேஷ்டா** - வெவ்வேறானதுமான ப்ராணன்களும், **அத்ர** - இங்கு, **தைவம் ச ஏவ** - அவற்றுக்கு அருள்புரிகின்ற தேவதைகள், **பஞ்சமம்** - ஐந்தாவது (காரணமாகும்).

பொழிப்புரை

இருப்பிடமாகிய உடல், செயல்புரிபவன், பல்வேறு கரணங்கள், பல்வேறுவிதமான ப்ராணன்கள், ஐந்தாவதாக இவற்றுக்கு அருள்புகின்ற தேவதைகள் என இவை ஐந்தும் செயலுக்குக் காரணமாகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், கர்மத்திற்குக் காரணமான ஐந்து அம்சங்களை இங்குக் கூறுகிறார்.

அதிஷ்டாநம் - செயல்புரிவதற்கான இருப்பிடமாகிய உடல் என்று பொருள். தத்வபோதத்தில், **ஸுகது:க்கபோக ஆயதநம்।** என்று கூறப்பட்டது. அதாவது, நம்முடைய ஸ்தூல சரீரம், இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கு இருப்பிடமாக இருக்கிறது என்று அங்கு சொல்லப்பட்டது.

அதுபோல, கர்மத்தைச் செய்வதற்கு இருப்பிடமாக இருப்பது நம் உடல்தான். இந்த உடலில்தான் நம்முடைய ஆசைகள், வெறுப்புகள், இன்ப துன்பங்கள் அனைத்தும் வெளிப்படுகின்றன.

கர்த்தா என்பது இந்த உடலுக்குள் இருக்கின்ற விஜ்ஞானமய புருஷன். புத்தியில் ப்ரதிபிம்பிக்கின்ற சைதன்யம், அஹங்காரம், ஜீவாத்மாதான் கர்த்தா - செயல்புரிபவன்.

கரணம் ச ப்ருதக்விதம் - ஞானேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, மனம், புத்தி - இவை பன்னிரெண்டும் கரணங்கள் எனப்படும். இவை ஒரே நேரத்தில் சேர்ந்தும் தனித்தனியே பிரிந்தும் இருக்கின்றன. மனதுடன் சேர்ந்துதான் செயல்புரிய வேண்டும். ஆனால், கண், காது, மூக்கு முதலியவை வெவ்வேறாக இருக்கின்றன. அவைகளால் கிடைக்கின்ற விஷயங்களும் வேறு.

Downloaded from **www.omkaravidya.com**

விவிதா: ச ப்ருதக்சேஷ்டா: - நம் உடலுக்குள் இருக்கின்ற ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன் என்ற ஐந்துவிதமான காற்றுகள்.

ப்ராணனில்லாமல் நம்மால் செயல்பட முடியாது. இவ்வாறு, மனதாலும் வாக்காலும் உடலாலும் நாம் பலவிதமான செயல்களைச் செய்கிறோம்.

இவை அனைத்திற்கும் அருள்புரிகின்ற தெய்வங்கள் இருக்கின்றன. கண்ணுக்கு ஸூர்யன், காதுக்கு திக்தேவதைகள் என ஒவ்வோர் உறுப்புக்கும், நம் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத தேவதைகள் அருள்புரிகின்றன. இது, நாம் சாஸ்த்ர ப்ரமாணத்தால் தெரிந்துகொள்ளக் கூடிய ஆழமான ஞானம்.

ஆக, நாம் செயல்புரிவதற்கு உடல், உடலுக்குள் இருந்து செயல்புரிபவன், கரணங்கள், ப்ராணன்கள், தெய்வங்களின் அருள் என ஐந்து விஷயங்கள் தேவைப்படுகின்றன.

शरीरवाङ्मनोभिर्यत्कर्म प्रारभते नरः ।

न्याय्यं वा विपरीतं वा पञ्चैते तस्य हेतवः ।। १८ - १५ ।।

ஶரீரவாங்மநோபிர்யத்கர்ம ப்ராரபதே நர: ।

ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ: ।। 18 - 15 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

நர: - மனிதன், **ஸரீர-வாங்-மநோபி:** - உடல், வாக்கு, மனம் ஆகியவற்றால், **யத்** - எந்த, **கர்ம** - செயலை, **ப்ராரபதே** - துவங்குகிறானோ, **ந்யாய்யம் வா** - அறத்திற்கு (சாஸ்த்ர உபதேசத்திற்கு) உட்பட்டதோ (அல்லது), **விபரீதம் வா** - அறத்திற்குப் புறம்பானதோ, **தஸ்ய** - அவற்றுக்கு, **ஏதே** - இவை, **பஞ்ச** - ஐந்தும், **ஹேதவ:** - காரணங்கள்.

பொழிப்புரை

மனிதன் உடல், மனம், வாக்கினால் எந்தச் செயலைத் தொடங்கினாலும், அது அறத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும், அறத்திற்குப் புறம்பானதாக இருந்தாலும், இவை ஐந்துமே அவற்றுக்குக் காரணங்கள்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் கர்மத்தின் ஸ்வரூபத்தைக் கூறி, ஒரு செயல் நிகழ்வதில் ஐந்து அம்சங்கள் இருக்கின்றன என்று கூறினார்.

மனித உடலில் வாழ்கின்ற உயிருக்குத்தான், இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யக்கூடாது என்ற சாஸ்த்ர விதிகளெல்லாம் பொருந்தும்.

மனிதன் உடலாலோ வாக்காலோ மனதாலோ எந்தவொரு செயலைத் தொடங்கினாலும், அவற்றில் முன்பு கூறப்பட்ட இந்த ஐந்து அம்சங்களும் இருக்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஓரிடத்தில் அமர்ந்து திட்டமிட்டு சில எண்ணங்களை எண்ணுவதும் செயலாகவே கருதப்படும். மனதால் செய்யப்படும் ஜபம், த்யானம் முதலியவை, வாக்கால் செய்யப்படுகின்ற பாராயணங்கள் அல்லது உலகியல் பேச்சுகள், உடலால் கை கால்களை அசைத்துச் செய்கின்ற செயல்கள் என இவ்வாறு செயல்கள் அமைந்திருக்கின்றன.

மனிதன் உடலாலும் உரையாலும் உள்ளத்தாலும் செயல்புரிகிறான். அவை சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கலாம், சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்படாதவையாக இருக்கலாம். அந்தச் செயல்கள் தர்மமாக இருந்தாலும், அதர்மமாக இருந்தாலும், இவை ஐந்தும்தான் செயல்களுக்குக் காரணங்கள் என்று கூறுகிறார் பகவான்.

இந்த ஐந்தும் இல்லாமல் தர்மத்தையும் கடைப்பிடிக்க முடியாது, அதர்மத்தையும் செய்ய முடியாது. தனக்கும் சமூகத்திற்கும் நன்மையை உண்டுபண்ணுகின்ற செயல்கள், தனக்கும் சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கின்ற செயல்கள் - என எச்செயலாக இருந்தாலும், இந்த ஐந்து அம்சங்களும் அவற்றுக்குப் பொதுவானவை.

तत्रैवं सति कर्तारमात्मानं केवलं तु यः ।

पश्यत्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ।। १८ - १६ ।।

தத்ரைவம் ஸதி கர்த்தாரமாத்மாநம் கேவலம் து ய: ।
பஶ்யத்யக்ருதபுத்தித்வாந்ந ஸ பஶ்யதி துர்மதி: ।। 18 - 16 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

து - ஆனால், **ஏவம்** - இவ்வாறு, **ஸதி** - இருக்கும்பொழுது, **தத்ர** - இவ்விஷயத்தில், **ய:** - எவனொருவன், **அக்ருத-புத்தித்வாத்** - பண்படாத மனதை உடைய காரணத்தால், **கேவலம்** - தூய்மையான, **ஆத்மானம்** - ஆத்மாவை, **கர்த்தாரம்** - செயல்புரிபவனாக, **பஶ்யதி** - காண்கிறானோ, **ஸ: துர்மதி:** - அந்த அறிவைச் சரியாகப் பயன்படுத்தாதவன், **(ஆத்மானம்** - ஆத்மாவை**), ந பஶ்யதி** - காண்பதில்லை.

பொழிப்புரை

பண்படாத மனதை உடையவன், தூய ஆத்மாவைச் செயல்புரிபவனாகக் காண்கிறான். அறிவைச் சரியாகப் பயன்படுத்தாத அவன், ஆத்மாவைக் காண்பதில்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ஒரு முக்கியமான கருத்தைக் கூறுகிறார். அதாவது, ஆத்மாவை **கர்த்தா** - செயல்புரிபவன் என்று நினைப்பது அறியாமை என்கிறார்.

நாம் எல்லோருமே, நான்தான் செயல்புரிகிறேன் என்று நினைக்கிறோம். **ஆத்மா நித்ய அகர்த்தா।** ஆத்மா (நான்) ஒருபொழுதும் செயல்புரியாதவன் என்ற கருத்து, கீதையின் 4, 5 அத்யாயங்களில் கூறப்பட்டது.

Downloaded from **www.omkaravidya.com**

அதே விஷயத்தை இங்கு மீண்டும் உபதேசிக்கிறார் பகவான். ஆத்மாவை கர்த்தா என்று நினைப்பவனை, **துர்மதி:** அறிவைச் சரியாகப் பயன்படுத்தாதவன் என்கிறார் பகவான்.

நாம் செய்கின்ற செயல்கள் தர்மமாக, அதர்மமாக எப்படிப்பட்டவையாக இருந்தாலும் சரி, இந்த ஐந்து விஷயங்கள்தான் செயலுக்குக் காரணம் என்று கூறினார் பகவான்.

ஆனால், ஒருவன் தன்னை கர்த்தாவாக, அதாவது செயல்புரிபவனாக நினைக்கிறான். தான் செயல்புரிபவன் என்பது வ்யாவஹாரிக த்ருஷ்டியில் உண்மையாக இருக்கலாம். ஆனால் பாரமார்த்திக த்ருஷ்டியில், ஆத்மாவாகிய நான் அகர்த்தா என்று பகவான் முன்பே உபதேசித்திருக்கிறார்.

தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்யகர்த்தாரமவ்யயம்। (4-13) நான் இந்தப் படைப்பிற்கு கர்த்தா எனினும், அகர்த்தா என்று தெரிந்துகொள் என்று தன்னைப் பற்றியும் பகவான் கூறினார்.

ஆனால், ஒருவன் ஆத்மாவை, அதாவது தன்னை கர்த்தா என்று நினைக்கிறான். அவன் அவ்வாறு நினைப்பதற்குக் காரணம் **அஸம்ஸ்க்ருதபுத்தி:** - அதாவது குரு, சாஸ்த்ரங்களின் உபதேசத்தினால் அவனுடைய புத்தி பண்படவில்லை.

குரு சாஸ்த்ர உபதேசத்தைப் பெறாதவன், தன்னை கர்த்தா என்றே நினைத்துக்கொள்கிறான். மற்றொரு கோணத்தில் சொல்ல வேண்டுமெனில், அத்வைத ஸித்தாந்தத்தைத்

Downloaded from **www.omkaravidya.com**

தெரிந்துகொள்ளாதவன், கேட்டு அறியாதவன் என்று எடுத்துக்கொள்ளலாம்.

ஏனெனில், நியாய சாஸ்த்ரம் முதலானவற்றைச் சேர்ந்தவர்கள், உடலுக்கு வேறாக ஆத்மா இருக்கிறது என்று சொன்னாலும்கூட, ஆத்மா அகர்த்தா என்பதைச் சொல்வதில்லை. அவர்களும் ஆத்மா கர்த்தா என்றே நினைக்கிறார்கள்.

பக்குவப்படாத மனதை உடையவன், **ஆத்மா அகர்த்தா** - அதாவது நான் செயல்புரியாதவன் என்ற உண்மையை அறிவதில்லை.

பஶ்யந்நபி ச ந பஶ்யதி மூட:

என்று ஆதிசங்கரர் பஜ கோவிந்தத்தில் கூறுகிறார். இந்த உண்மை, இவ்வளவு தெளிவாக இருந்தும்கூட, அறிவிலியின் மனதுக்கு, அது புலப்படுவதில்லை.

தன்னை கர்த்தாவாக, துன்பத்தில் உழல்பவனாகவே எண்ணிக்கொள்கிறான். கர்மகாண்ட சாஸ்த்ரத்தைக் கற்றவரையும்கூட பகவான் இங்கு கண்டனம் செய்கிறார்.

உண்மையில் நாம் கர்த்தா அல்ல, அகர்த்தா என்பதே இதில் மறைந்துள்ள விஷயம்.

यस्य नाहङ्कृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते ।

हत्वाऽपि स इमाँल्लोकान्न हन्ति न निबध्यते ।। १८ - १७ ।।

Downloaded from **www.omkaravidya.com**

யஸ்ய நாஹங்க்ருதோ பாவோ புத்திர்யஸ்ய ந லிப்யதே ।
ஹத்வாऽபி ஸ இமால்லோகாந்ந ஹந்தி ந நிபத்யதே ।। 18 - 17 ।।

பதவுரை

யஸ்ய - எவனுக்கு, **அஹங்க்ருத: பாவ:** - நான் செயல்புரிபவன் என்ற எண்ணம், **ந** - இல்லையோ, **யஸ்ய** - எவனுடைய, **புத்தி:** - புத்தியானது, **ந லிப்யதே** - செயல்களிலும் அதன் பலன்களிலும் ஒட்டுவதில்லையோ (பற்று வைப்பதில்லையோ), **ஸ:** - அவன், **இமாந்** - இந்த, **லோகாந்** - போர்க்களத்தில் இருக்கின்ற அனைத்து வீரர்களின் உடல்களையும், **ஹந்தி அபி** - கொன்றாலும், **ந ஹந்தி** - கொல்வதில்லை, **ந நிபத்யதே -** அந்தக் கொலையினால் பாதிக்கப்படுவதில்லை (பந்தப்படுவதுமில்லை).

பொழிப்புரை

எவனுக்கு நான் செயல்புரிபவன் என்ற எண்ணம் இல்லையோ, எவனுடைய புத்தியானது செயல்களிலும் அவற்றின் பலன்களிலும் ஒட்டிக்கொள்வதில்லையோ, அதாவது பற்று வைப்பதில்லையோ, அவன் இந்தப் போர்க்களத்தில் இருக்கின்ற அனைத்து வீரர்களின் உடல்களையும் கொன்றாலும், அவன் கொல்வதில்லை, அந்தக் கொலையினால் பாதிக்கப்படுவதும் இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், சாஸ்த்ரம், குருவினுடைய உபதேசம் ஆகியவற்றைப் பெற்று, அவற்றை தர்க்கபூர்வமாகப் புரிந்துகொள்ளக்கூடிய பக்குவப்பட்ட மனதை உடையவனைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

நான் செயலைச் செய்கிறேன் என்ற எண்ணத்திற்குத்தான் அஹங்காரம் என்று பெயர். குரு, சாஸ்த்ர உபதேசத்தினால் பண்பட்ட மனதை உடையவன், அஹங்காரமில்லாமல் இருக்கிறான்.

அஹம் கர்த்தா। - நான் செயல்புரிபவன் - இந்த எண்ணம் அவனுக்கு இல்லை.

ஆத்மா அகர்த்தா அபோக்தா। நான் செயல்புரியாதவன், செயலின் பலனை அனுபவிக்காதவன் என்ற கருத்தானது, இரண்டாவது அத்யாயத்திலிருந்தே கூறப்பட்டு வருகிறது.

நான் செயல்புரியாதவன் என்ற எண்ணத்தை உடையவனுடைய புத்தியானது, கர்மபலனில் ஒட்டிக்கொள்வதில்லை.

உடல், மனம், அதிலுள்ள நிழல் உணர்வு ஆகியவற்றுக்குத்தான் செயல்புரிதல், செயலின் பலனை அனுபவித்தல், ஸம்ஸாரம் எல்லாம். அவை ஆத்மாவிற்குக் கிடையாது என்ற ஞானபலத்துடன் இருப்பதால், அவன் செய்யக்கூடிய செயலிலோ, செயலின் பலனிலோ ஒட்டிக்கொள்வதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

அத்தகையவன், இந்த ப்ரபஞ்சத்திலுள்ள எதைக் கொன்றாலும், எதை அழித்தாலும் அவன் கொன்றவனாகக் கருதப்பட மாட்டான். அவன் செயல்புரிந்தாலும், செயல்புரிந்தவனாகக் கருதப்பட மாட்டான்.

ச்லோகத்திலுள்ள **இமாந் லோகாந்** என்பது போரில் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த வீரர்களைக் குறிக்கிறது.

ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைநம் மந்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீத: நாயம் ஹந்தி ந ஹந்யதே ।। 2 - 19

இவன் யாரையும் கொலை செய்வதுமில்லை. இவனை யாரும் கொல்வதுமில்லை என்ற கருத்தை பகவான் முன்பே கூறியுள்ளதை நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

பாரமார்த்திக த்ருஷ்டியில், ஒருவன் கொல்பவனாகவோ கொலையுண்டவனாகவோ கருதப்பட மாட்டான்.

வ்யாவஹாரிக த்ருஷ்டியில் கொலை செய்வது என்பது பாபகர்மம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், ஒரு க்ஷத்ரியனுக்கு, தர்மயுத்தம் செய்தல் புண்யம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

தர்மம் என்பது எப்பொழுதுமே சார்புடையது. இடம், பொருள், ஏவலைப் பொருத்துதான் தர்மத்தை நிர்ணயம் செய்ய முடியும்.

ஸுகது:க்கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயா ஜயௌ ।
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி ।। 2 - 38

Downloaded from **www.omkaravidya.com**

தர்மமான யுத்தத்தில் ஈடுபடுபவனுக்கு பாபம் வராது என்று பகவான் முன்பே கூறினார். அவனை கர்மபலன் ஒன்றும் செய்யாது என்று அர்த்தம்.

இதற்கு முந்தைய ச்லோகத்தில் **துர்மதி:** என்ற சொல் வந்தது. நான் செயல்புரியாதவன், செயலின் பலனை அனுபவிக்காதவன் என்ற ஞானத்தை உடையவனை **ஸுமதி:** அதாவது பண்பட்ட புத்தியை உடையவன், முக்தன் என்று உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

ज्ञानं ज्ञेयं परिज्ञाता त्रिविधा कर्मचोदना ।

करणं कर्म कर्तेति त्रिविधः कर्मसङ्ग्रहः ।। १८ - १८ ।।

ஜ்ஞாநம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதநா ।
கரணம் கர்ம கர்த்தேதி த்ரிவித: கர்மஸங்க்ரஹ: ।। 18 - 18 ।।

பதவுரை

ஜ்ஞாநம் - அறிவு, **ஜ்ஞேயம்** - செயலால் அறியப்படும் பொருள், **பரிஜ்ஞாதா** - அறிபவர் அல்லது செயலின் பலனை அனுபவிப்பவர் **(இதி** - என்று**), கர்மசோதநா** - செயலின் தூண்டுதல், **த்ரிவிதா** - மூன்று வகைப்படும். **கர்த்தா** - செயல்புரிபவன், **கரணம்** - கரணங்கள், **கர்ம** - செயல், **(இதி** - என்று**), கர்மஸங்க்ரஹ:** - செயலின் தொகுப்பு, **த்ரிவித:** - மூன்று வகைப்படும்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

அறிவு, அறியப்படும் பொருள், அறிபவர் அல்லது செயலின் பலனை அனுபவிப்பவர் என்று செயலின் தூண்டுதல் மூன்று வகைப்படும். செயல்புரிபவன், கரணங்கள், செயல் என்று செயலின் தொகுப்பு மூன்று வகைப்படும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில், செயல்களைத் தூண்டி, செயல்களில் ஈடுபடுத்துகின்ற தன்மையைப் பற்றி, பொதுவாகக் கூறுகிறார்.

கர்மயோகத்தைப் பற்றிய உபதேசத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக, பகவான் இந்த கருத்துகளைக் கூறத் தொடங்கியிருக்கிறார்.

செயலில் தூண்டுவது, செயலின் தொகுப்பு என்ற இரண்டு விஷயங்களை பகவான் கூறுகிறார்.

செயலைத் தூண்டுபவை மூன்று அம்சங்கள், செயல்புரிபவை மூன்று அம்சங்கள் என்று இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளன.

ஜ்ஞானம் (அறிவு), **ஜ்ஞேயம்** (அறியப்பட வேண்டியது), **பரிஜ்ஞாதா** என்றால் பொதுவாக நன்றாக அறிபவன் என்று பொருள், இந்த இடத்தில் **போக்தா** என்று பொருள்.

மனதிற்கு அறியக்கூடிய தன்மை இருக்கிறது, அறிந்துகொள்வதற்கு விஷயம் இருக்கிறது, அறியப்படுகின்ற

Downloaded from **www.omkaravidya.com**

விஷயத்தை அனுபவிக்க வேண்டும் என்ற தன்மையும் இருக்கிறது.

அறிகின்ற சக்தி, அறிவதற்குரிய பொருள், அறிந்ததை அனுபவிக்க வேண்டும் என்ற ஞானம் - இவை மூன்றும்தான் கர்மத்தைத் தூண்டுகின்றன.

மனதில் அறிந்துகொள்வது என்பது ஓர் அம்சம், திட்டமிட்டுச் செயல்புரிவது என்பது மற்றோர் அம்சம்.

செயல்புரிவதற்கு, **கர்த்தா** செயல்புரிபவன் என்று ஒருவன் இருக்க வேண்டும். உடலுடன் தன்னை இணைத்துக் கொண்டவன், பற்றுடையவன் கர்த்தா என்று சொல்லப்படுகிறான். இவன் ஆத்மா வேறு, அநாத்மாவாகிய உடல் வேறு என்ற பகுத்தறிவு இல்லாதவன்.

கர்த்தா, செயல்புரிவதற்கு கரணங்கள் தேவைப்படுகின்றன. ஞானேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, மனம் - இவை அனைத்தும் சேர்ந்து கரணங்கள் எனப்படும். அவற்றைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

கர்த்தாவானவன், கரணங்களைப் பயன்படுத்தி, **கர்ம** எனப்படும் செயல்களைச் செய்கிறான். இது கர்மத்தின் தொகுப்பாக இருக்கிறது என்று தெரிந்துகொள்கிறோம்.

இந்த ச்லோகத்தில் ஞானம் என்பது பொதுவாக, அறிவு என்ற பொருளில் வந்துள்ளது. அறிவதற்குரிய விஷயம் ப்ரஹ்மனாக இருந்தால், ப்ரஹ்மஞானம் என்று சொல்லலாம்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆனால், இங்கு பொதுவாக, அறிவு என்ற அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது.

ज्ञानं कर्म च कर्ता च त्रिधैव गुणभेदतः ।

प्रोच्यते गुणसङ्ख्याने यथावच्छृणु तान्यपि ।। १८ - १९ ।।

ஜ்ஞானம் கர்ம ச கர்த்தா ச த்ரிதைவ குணபேதத: ।
ப்ரோச்யதே குணஸங்க்யானே யதாவச்ச்ருணு
தாந்யபி ।। 18 - 19 ।।

பதவுரை

ஜ்ஞானம் - அறிவும், **கர்ம ச** - செயலும், **கர்த்தா ச** - செயல்புரிபவனும், **குணபேதத:** - குணங்களின் வேற்றுமையை ஒட்டி, **த்ரிதா ஏவ** - மூன்று வகை மட்டுமே, **(இதி** - என), **குணஸங்க்யானே** - குண பேதங்களைக் கூறும் (கபிலரின்) ஸாங்க்ய சாஸ்த்ரத்தில், **ப்ரோச்யதே** - கூறப்படுகிறது. **தாநி அபி** - அவைகளையும், **யதாவத்** - உள்ளவாறே, **ஸ்ருணு** - கவனத்துடன் கேட்பாயாக!

பொழிப்புரை

அறிவு, செயல், செயல்புரிபவன் ஆகிய மூன்றும், குணங்களின் வேற்றுமையை ஒட்டி, மூன்று வகை மட்டுமே என்று குண பேதங்களைக் கூறும் கபில முனிவரின் ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது. அவைகளையும் உள்ளவாறே கவனத்துடன் கேட்பாயாக!

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஞானம், கர்மம், கர்த்தா ஆகியவற்றை, ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களின் அடிப்படையில் கூறப் போவதாக இந்த ச்லோகத்தில் ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

ஸாத்விக ஞானம், ராஜஸ ஞானம், தாமஸ ஞானம், ஸாத்விக கர்மம், ராஜஸ கர்மம், தாமஸ கர்மம், ஸாத்விக கர்த்தா, ராஜஸ கர்த்தா, தாமஸ கர்த்தா ஆகியவற்றைப் பற்றி பகவான் கூறப் போகிறார்.

இவை குணங்களைப் பற்றித் தெளிவாக உபதேசிக்கக்கூடிய ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளன. அவற்றில் கூறப்பட்டுள்ளவாறே தாம் கூறப் போவதாக பகவான் கூறுகிறார்.

பகவான் நமக்குப் புரிகின்ற முறையில் கூறப் போகிறார். அவற்றைக் கேட்டு நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

सर्वभूतेषु येनैकं भावमव्ययमीक्षते ।

अविभक्तं विभक्तेषु तज्ज्ञानं विद्धि सात्त्विकम् ।। १८ - २० ।।

ஸர்வபூதேஷு யேநைகம் பாவமவ்யயமீக்ஷதே ।
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி
ஸாத்த்விகம் ।। 18 - 20 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

விபக்தேஷு - வேறு வேறாக உள்ள, **ஸர்வபூதேஷு** - எல்லா உடல்களிலும் (உயிர்களிலும்), **அவிபக்தம்** - பிரிக்கப்பட முடியாததும், **அவ்யயம்** - மாறுதலற்றதுமான, **ஏகம் பாவம்** - ஒன்றேயான பரம்பொருளை, **யேந (ஜ்ஞானேந)** - எதனால் (எந்த அறிவால்), **ஈக்ஷதே** - காண்கிறானோ, **தத்** - அந்த, **ஜ்ஞானம்** - அறிவை, **ஸாத்த்விகம்** - ஸாத்விகம் என்று, **வித்தி** - தெரிந்துகொள்வாயாக!

பொழிப்புரை

வேறு வேறாக உள்ள எல்லா உடல்களிலும், எல்லா உயிர்களிலும் பிரிக்கப்பட முடியாததும், மாறுதல் அற்றதுமான ஒன்றேயான பரம்பொருளைக் காண்கின்ற அறிவை, ஸாத்விகமான அறிவு என்று தெரிந்துகொள்வாயாக!

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில் ஸாத்விக ஞானத்தைப் பற்றி உபதேசிக்கிறார்.

புத்தியில் இருக்கக்கூடிய எண்ணங்களின் துணைகொண்டுதான் பொருட்களை அறிகிறோம்.

அறிவு என்பது புத்தியில், எண்ணங்கள் வடிவமாக இருக்கிறது. எந்த ஓர் அறிவால், அனைத்து ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களிலும் இருக்கக்கூடிய ஒரே பொருளாகிய அத்வைத ஆத்ம

Downloaded from **www.omkaravidya.com**

சைதன்யத்தை, தூய உணர்வைக் காண்கிறோமோ, அது ஸாத்விகமான அறிவாகும்.

இங்கு உடல் வேற்றுமை, மன வேற்றுமை, உயிர் வேற்றுமை முதலிய எந்த வேற்றுமையும் இல்லை.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் - 355)

என்று திருவள்ளுவர் கூறுவது இந்த ஸாத்விக அறிவைத்தான்.

எந்த ஓர் அறிவால், அனைத்து உடல்களிலும் உயிர்களிலும் இருக்கின்ற ஒரே மெய்ப்பொருளைக் காண்கிறோமோ, அது ஸாத்விக அறிவு.

உடல்கள், உள்ளங்கள், உயிர்கள் அனைத்தும் மாயத்தோற்றங்கள், அவை கற்பிக்கப்பட்டவை, உண்மையல்ல. அவை அனைத்திலும் அடிப்படையாக இருக்கக்கூடிய அத்வைத பரமார்த்த ப்ரஹ்ம தத்துவத்தைக் கவனிக்க வேண்டும்.

எந்த ஒரு ஞானத்தினால், எல்லா உடல்களிலும் அத்வைத தத்துவத்தை ஒருவன் பார்க்கிறானோ, உணர்கிறானோ, அது ஸாத்விக ஞானம்.

அசைகின்ற அசையாத ப்ரபஞ்சமனைத்திலும், பல்வேறு உபாதிகளிலும் அந்த ஒரே மெய்ப்பொருள்தான் இருக்கிறது, எல்லாவற்றிலும் ஆகாசம்போல வ்யாபித்திருக்கிறது என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

மெய்ப்பொருள் மாறாதது, பிரிக்கப்பட முடியாதது. வேறு வேறாகக் காணப்படுபவைகளுள், வேற்றுமைப்படுத்தப்படாத அந்த மெய்ப்பொருளைக் காணுதல், அத்வைதத்தை உணர்தல் ஸாத்விக ஞானம்.

ஆக, உள்ளத்திலுள்ள புத்திசக்தியைக்கொண்டு, குரு சாஸ்த்ர உபதேசத்தினால் பெறக்கூடிய அத்வைத ஞானம், ப்ரஹ்மாத்ம-ஐக்ய-ஞானம், ஸாத்விக ஞானம் எனப்படும்.

पृथक्त्वेन तु यज्ज्ञानं नानाभावान्पृथग्विधान् ।

वेत्ति सर्वेषु भूतेषु तज्ज्ञानं विद्धि राजसम् ।। १८ - २१ ।।

ப்ருதக்த்வேந து யஜ்ஜ்ஞானம் நாநாபாவாந்ப்ருதக்விதாந் ।
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஜ்ஞானம் வித்தி
ராஜஸம் ।। (18 - 21)

பதவுரை

து - மாறாக, **யத்** - எந்த, **ஜ்ஞாநம்** - அறிவினால், **ஸர்வேஷு** - அனைத்து, **பூதேஷு** - உடல்களிலும் (உயிர்களிலும்), **ப்ருதக்-விதாந்** - வெவ்வேறு விதமான, **நாநா-பாவாந்** - பல ஆத்மாக்களை, **ப்ருதக்த்வேந** - தனித்தனியாக, **வேத்தி** - அறிகிறானோ, **தத்** - அந்த, **ஜ்ஞாநம்** - அறிவை, **ராஜஸம்** - ராஜஸம், **(இதி** - என்று**), வித்தி** - தெரிந்துகொள்வாயாக!

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

எல்லா உடல்களிலும், உயிர்களிலும், வெவ்வேறு விதமான பல ஆத்மாக்களை, தனித்தனியாக அறிதல் ராஜஸ அறிவாகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ராஜஸ ஞானத்தைப் பற்றிக் கூறுகிறார்.

எல்லா சரீரங்களிலும் இருப்பது ஒரே ஆத்ம சைதன்யம்தான் என்று அறிவது ஸாத்விக ஞானம் என்று இதற்கு முந்தைய ச்லோகத்தில் கூறினார்.

ஒவ்வொரு சரீரத்திலும் தனித்தனியாக ஆத்மா இருக்கிறது என்று எண்ணுவது ராஜஸ ஞானமாகும். இதற்கு **நாநாத்மவாதம்** என்று பெயர்.

பொதுவாக, ஒவ்வோர் உடலிலும் தனித்தனியே ஒரு ஜீவாத்மா இருக்கிறது என்று சொல்வது, வழக்கமாகப் பாடத்தில் இருக்கிறது. ஜீவாத்மாவை நீக்கிவிட்டு, உண்மையிலேயே ஜீவாத்மாவிற்கு ஆதாரமாக உள்ள பரமாத்ம தத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜீவாத்மத்வம் - உயிராக இருக்கும் தன்மை என்பது அத்வைத ஸித்தாந்தப்படி உண்மையல்ல.

தனித்தனியே ஜீவாத்மா இருக்கிறது என்று ஆரம்பத்தில் கர்மகாண்ட த்ருஷ்டியில் சொல்லப்படுகிறது. ஆனால் அது

Downloaded from **www.omkaravidya.com**

அறுதி உண்மை அல்ல என்பதை இந்த ச்லோகத்திலிருந்து தெரிந்துகொள்கிறோம்.

உடலுக்கு வேறாக ஆத்மா இருப்பதைப் புரிந்துகொண்டாலும், தனித்தனியே பல ஆத்மாக்கள் இருக்கின்றன, அவற்றுக்குத் தனித்தனியே குணங்கள் இருக்கின்றன என்று தவறாகப் புரிந்துகொள்வது ராஜஸ ஞானம்.

உடல்கள் வேறு, ஆத்மா வேறு என்ற ஞானம் நல்லதுதான். தர்மத்தைக் கடைப்பிடிப்பதற்கும் ஈச்வர பக்தியை வளர்ப்பதற்கும் இந்த ஞானம் முக்கியம். ஆனால், இந்த ஞானத்தை கடைசி வரை நாம் வைத்துக்கொண்டிருந்தால், மோக்ஷம் ஸித்திக்காது என்பது அத்வைத ஸித்தாந்தத்தின் முக்கியமான உபதேசம்.

உடலுக்கு வேறாக ஆத்மா இருக்கிறது என்று கூறினாலும், கர்மகாண்டத்தில் உபதேசிக்கப்பட்டுள்ளபடி, தனித்தனியே ஒவ்வொரு சரீரத்திலும் ஓர் ஆத்மா இருக்கிறது என்று கூறுவது ராஜஸ ஞானம்.

ஞான காண்டத்தில், அத்வைத ஸித்தாந்தப்படி உபதேசிக்கப்பட்டிருக்கின்ற ஞானம் இது - பல சேதன பொருட்களிலும், பல ஜடப்பொருட்களிலும், உயிருள்ள, உயிரற்ற அனைத்திலும் ஒரே ஆத்ம சைதன்யம்தான் விளங்கிக்கொண்டிருக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

ஜடப் பொருட்கள், சேதனப் பொருட்கள் அனைத்தும் பாரமார்த்திக த்ருஷ்டியில் மித்யா என்று புரிந்துகொள்ள வேண்டும்.

எல்லோரும் வேறு வேறு என்று பார்ப்பது ராஜஸ ஞானம் என்பதுதான் இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ள விஷயம்.

यत्तु कृत्स्नवदेकस्मिन्कार्ये सक्तमहैतुकम् ।

अतत्त्वार्थवदल्पं च तत्तामसमुदाहृतम् ।। १८ - २२ ।।

यत्तु क्रुत्स्नवदेकस्मिंकार्ये सक्तमहैतुकं ।
अतत्त्वार्तवदल्पं च तत्तामसमुदाहृतं ।। 18 - 22 ।।

பதவுரை

து - மாறாக, **யத்** - எது, **ஏகஸ்மிந்** - ஒரே, **கார்யே** - விஷயத்தில் (குறிப்பிட்ட வடிவத்தில்), **க்ருத்ஸ்நவத்** - அதுதான் எல்லாம் என்பதாக, **ஸக்தம்** - பற்றியுள்ளதோ, **அஹைதுகம்** - யுக்தியில்லாததும், **அதத்த்வார்தவத்** - உள்ளதை உள்ளவாறு அறியாததும், **அல்பம் ச** - அல்பமும் ஆனதோ, **தத்** - அது, **தாமஸம்** - தாமஸம் (தாமஸ அறிவு), **(இதி** - என்று**),** **உதாஹ்ருதம்** - சொல்லப்படுகிறது.

பொழிப்புரை

ஒரு விஷயத்தில் அல்லது குறிப்பிட்ட வடிவத்தில், அதுதான் எல்லாம் என்பதுபோன்ற பற்றுடன், யுக்தியில்லாமல்,

Downloaded from **www.omkaravidya.com**

உள்ளதை உள்ளவாறு அறியாமல், அல்பமாக இருக்கக்கூடிய அறிவு தாமஸ அறிவாகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தாமஸ ஞானத்தைப் பற்றிக் கூறுகிறார்.

ஒன்றையே முழுமையாகப் பற்றிக்கொண்டிருப்பது தாமஸ ஞானமாகும். உடலையே ஆத்மா என்று நினைப்பது அல்லது விக்ரஹத்தையே கடவுள் என்று நினைப்பது போன்றவை இதில் அடங்கும்.

விக்ரஹத்தின் மூலமாகக் கடவுளை வழிபடுதல் என்பது ஒன்று. விக்ரஹத்தையே, அதை மட்டுமே கடவுளாகப் பார்ப்பது என்பது மற்றொன்று.

உடலைப் பயன்படுத்துகிறோம், விக்ரஹத்தை வழிபடுகிறோம். உடல் மூலமாக ஆத்மாவைப் புரிந்துகொள்கிறோம். விக்ரஹத்தின் மூலமாகக் கடவுளைத் தெரிந்துகொள்றோம்.

ஆனால் அவ்வாறு செய்யாமல், உடலையே ஆத்மா என்று நினைப்பது எவ்வளவு தவறோ அவ்வளவு தவறுதான், விக்ரஹத்தில் மட்டுமே கடவுள் இருக்கிறார் என்று நினைத்தல்.

விக்ரஹமும் கடவுள். கடவுளை விக்ரஹத்தின் மூலம் பார்க்கிறோம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலின் அளவுக்கு ஆத்மா இருக்கிறது என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். உடலுக்குத் தகுந்தாற்போல், ஆத்மா பரிணாமம் எடுக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

விக்ரஹமாகக் காட்சியளிக்கும் கல், மண், மரம், பொன் ஆகியவைதான் கடவுள் என்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் சிறிதுகூட யுக்திபூர்வமாகச் சிந்திப்பதில்லை.

உண்மையில் கடவுள் ஒரு வடிவத்தில் மட்டும் இருப்பவர் அல்ல. ஆத்மா என்பது உடம்பு மட்டும் அல்ல. உண்மையை அறியாதவர்கள், குறுகிய மனப்பான்மையுடன் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உள்ளதை உள்ளவாறு தெரிந்துகொள்வதற்கு முயற்சி செய்வதில்லை.

அல்பம் என்பதற்கு அல்பமான ஞானம் என்றும், அல்பமான பலனைக் கொடுக்கக்கூடிய ஞானம் என்றும் பொருள்கொள்ளலாம்.

தமோகுணம் மேலோங்கியிருக்கக்கூடிய அவிவேகிகளுக்கு, இந்த அளவிற்குத்தான் ஞானம் இருக்கிறது. கண்மூடித்தனமான, குருட்டு நம்பிக்கையுடன் கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

உருவ வழிபாட்டின் பின்னால் உள்ள தத்துவத்தை, அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அந்த வடிவத்திலேயே பற்று கொள்கிறார்கள்.

இறையருளால், காலப்போக்கில் அவர்களும் மாறுவார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

नियतं सङ्गरहितमरागद्वेषतः कृतम् ।

अफलप्रेप्सुना कर्म यत्तत्सात्त्विकमुच्यते ।। १८ - २३ ।।

நியதம் ஸங்கரஹிதமராகத்வேஷத: க்ருதம் ।
அபலப்ரேப்ஸுநா கர்ம யத்தத்ஸாத்த்விகமுச்யதே ।। 18 - 23 ।।

பதவுரை

நியதம் - விதிக்கப்பட்டதான, **யத்** - எந்த, **கர்ம** - செயல், **அபல-ப்ரேப்ஸுநா** - பலனை அடைய வேண்டும் என்ற ஆசை இல்லாதவனால், **ஸங்க-ரஹிதம்** - பற்று இன்றியும், **அராக-த்வேஷத:** - விருப்பு வெறுப்புகள் இன்றியும், **க்ருதம்** - செய்யப்படுகிறதோ, **தத்** - அது, **ஸாத்த்விகம்** - ஸாத்விகமானது, **உச்யதே** - எனப்படுகிறது.

பொழிப்புரை

விருப்பு வெறுப்பு இல்லாமல், பலனை விரும்பாமல், பற்று இல்லாமல் செய்யப்படுகின்ற, சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட செயல், ஸாத்விகமான செயல் எனப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸாத்விக கர்மத்தைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

கர்ம என்ற சொல்லுக்கு, வினை, செயல் என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

நியதம் என்ற சொல், செய்ய வேண்டிய செயல்களைக் குறிக்கின்றன. அதாவது, சாஸ்த்ரத்தினால் விதிக்கப்பட்ட நித்ய, நைமித்திக கர்மங்கள் என்று பொருள். காம்ய, ப்ராயச்சித்த, ப்ரதிஷித்த கர்மங்கள் அல்ல என்று புரிந்துகொள்ள வேண்டும்.

பற்றுணர்ச்சியுடன் செய்யாமல், கடவுள் எனக்குக் கொடுத்திருக்கின்ற வாய்ப்பு என்ற எண்ணத்துடன் பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும்.

சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளவற்றை அறிந்து, அவற்றை விருப்பு, வெறுப்பில்லாமல் செய்ய வேண்டும்.

தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்த்திதௌ ।
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்த்துமி-

ஹார்ஹஸி ।। 16 - 24 ।।

நமக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற அறிவைக் கொடுப்பவை சாஸ்த்ரங்கள்தான். அவையே ப்ரமாணம். ஆகவே, சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளதை அறிந்து செயல்புரிய வேண்டும் என்று பகவான் முன்பு கூறியதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

நித்ய, நைமித்திக கர்மங்களுக்கே சித்தசுத்தியைத் தரக்கூடிய ஆற்றல் இருக்கிறது. இருப்பினும், கர்மங்களைச் செய்யும்போது, பலனில் கவனம் வைக்காமல், எப்பொழுது வர வேண்டுமோ, பலன் அப்பொழுது வரட்டும் என்ற எண்ணத்துடன் செயலில் கவனம் செலுத்த வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

விருப்பு வெறுப்பில்லாமல், பொறுப்புணர்ச்சியுடன், ஈச்வரார்ப்பண புத்தியுடன், பலனில் கவனம் செலுத்தாமல் செயல்படுகின்ற கர்மயோக மனோபாவனையைப் பற்றி பகவான் **2-38, 2-47** முதலான ச்லோகங்களில் தொடங்கி, பலவிடங்களில் ஏற்கெனவே உபதேசித்திருக்கிறார்.

இத்தகைய கர்மம், ஸாத்விகமான கர்மம் என்று புரிந்துகொள்கிறோம்.

यत्तु कामेप्सुना कर्म साहङ्कारेण वा पुनः ।

क्रियते बहुलायासं तद्राजसमुदाहृतम् ।। १८ - २४ ।।

யத்து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புந: ।
க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸமுதாஹ்ருதம் ।। 18 - 24 ।।

பதவுரை

து - மாறாக, **யத்** - எந்த, **கர்ம** - செயல், **காமேப்ஸுநா** - பலனில் ஆசை உள்ளவனாலும், **புந: ஸாஹங்காரேண வா** - மேலும் அஹங்காரம் உடையவனாலும், **பஹுல-ஆயாஸம்** - மிகுந்த ச்ரமத்துடன் (படபடப்புடன்), **க்ரியதே** - செய்யப்படுகிறதோ, **தத்** - அது, **ராஜஸம்** - ராஜஸம், **உதாஹ்ருதம்** - எனப்படுகிறது.

பொழிப்புரை

பலனில் ஆசை உள்ளவனால், அஹங்காரத்துடன் கூடியவனால், மிகவும் ச்ரமப்பட்டு, படபடப்புடன் செய்யப்படுவது ராஜஸமான செயலாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ராஜஸ கர்மத்தைப் பற்றிக் கூறுகிறார்.

மிகுந்த ச்ரமத்துடன் செய்யப்படுகின்ற செயல் இது. செயல்புரிவதில் நமக்கு ஆசை இருந்தால், அது நமக்கு ச்ரமமாகத் தோன்றாது.

ராஜஸ கர்மத்தில், செயலை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட, பலனை அடைய வேண்டும் என்ற ஆசை அதிகமாக இருக்கும்.

சரியாகச் செயல்புரியவில்லையென்றால், பலன் சரியாக வராது. இதனைப் புரிந்துகொள்ளாமல், பலர் செயலில் கவனம் வைக்காமல் தடுமாறுகிறார்கள்.

பலனைப் பற்றிய கவலையில்லாமல், பொறுப்பாக, செயலில் கவனம் செலுத்தினால்தான் நன்கு செயல்பட முடியும். இது கர்மத்தின் ஸூக்ஷ்மம்.

ஆனால், பலனில் விருப்பம் வைத்து, செயலில் கவனமில்லாமல் இருப்பவனுக்கு, செயல் மிகுந்த ச்ரமத்தைத் தருவதாகத் தோன்றும்.

ச்லோகத்தில் உள்ள **காம** என்ற சொல்லுக்கு, பலனின் உள்ள ஆசை என்று பொருள். காம்ய, ப்ராயச்சித்த கர்மங்களையும் இங்கு நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

பலனை விரும்பாமல் செய்யப்படும் ஸாத்விக கர்மம், நிஷ்காம கர்மயோகம். பலனில் விருப்பத்துடன் செய்யப்படும் ராஜஸ கர்மம், ஸகாம கர்மயோகம்.

நான் செயல்புரிகிறேன் என்ற எண்ணத்துடன், ஜாதி அபிமானம், குல அபிமானம் ஆகியவற்றுடன் செய்யப்படுவது ராஜஸ கர்மம். இந்த கர்மாவை நான்தான் செய்ய முடியும், வேறு யாரும் செய்ய முடியாது என்ற எண்ணத்துடன் செய்வது ராஜஸ கர்மம்.

अनुबन्धं क्षयं हिंसामनवेक्ष्य च पौरुषम् ।

मोहादारभ्यते कर्म यत्तत्तामसमुच्यते ।। १८ - २५ ।।

அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாமநவேக்ஷ்ய ச பௌருஷம் ।
மோஹாதாரப்யதே கர்ம யத்தத்தாமஸமுச்யதே ।। 18 - 25 ।।

பதவுரை

அநுபந்தம் - விளைவையும், **க்ஷயம்** - நஷ்டத்தையும், **ஹிம்ஸாம்** - துன்பத்தையும், **பௌருஷம் ச** - வலிமையையும், **அநவேக்ஷ்ய** - ஆலோசிக்காமல், **மோஹாத்** - மயக்கத்தினால், **யத்** - எந்த, **கர்ம** - செயலானது, **ஆரப்யதே** - தொடங்கப்படுகிறதோ, **தத்** - அது, **தாமஸம்** - தாமஸம், **உச்யதே** - எனப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

செயலின் விளைவு, செயலினால் ஏற்படக்கூடிய நஷ்டம், துன்பம், செயலைச் செய்துமுடிப்பதற்குத் தேவைப்படும் வலிமை - இவற்றையெல்லாம் பற்றிச் சிந்திக்காமல், மயக்கத்தினால் தொடங்கப்படுவது தாமஸமான செயலாகும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தாமஸ கர்மத்தைப் பற்றிக் கூறுகிறார்.

ஒரு செயலைச் செய்யும்போது, அதனால் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும்? எத்தனை பேருக்கு எப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படும்? என்று சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

ஒரு செயலைச் செய்வதற்கு எவ்வளவு ஆற்றல் தேவைப்படும், பொருள் தேவை என்ன என்பதைப் பற்றியெல்லாம் யோசிக்காமல் செயலில் இறங்குவது தவறு.

நாம் செய்யக்கூடிய செயல்கள் சில நேரங்களில் பிறருக்குத் துன்பத்தைத் தரக்கூடும். பெரும்பாலானவர்கள், அதைப் பற்றி யோசிக்க மாட்டார்கள். சில இடங்களில் வேலை சரியாக நடப்பதற்காக, நாம் சற்று கடுமையாக நடந்துகொள்ள வேண்டியிருக்கும். அதில் அளவுக்கு மீறிச் செல்லவும் வாய்ப்பு இருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் கூட யோசிக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஒரு செயலை நம்மால் செய்ய முடியுமா, முடியாதா என்று தெரிந்துகொண்ட பிறகுதான், அதனை ஆரம்பிக்க வேண்டும்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (திருக்குறள் - 471)

செயலின் தன்மை, தன்னுடைய ஆற்றல், எதிரியின் ஆற்றல், தனக்குத் துணையாக இருப்பவர்களின் ஆற்றல் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்த பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும் என்பது திருவள்ளுவர் வாக்கு.

கோ தேஶ: காநி மித்ராணி க: கால: கௌ வ்யயாகமௌ ।
கஶ்சாஹம் காச மே ஶக்தி: இதி சிந்த்யம் முஹுர்முஹு: ।।

நாம் எந்த இடத்தில் இருக்கிறோம்? நமக்கு நண்பர்கள் யார்? ஒரு செயலைச் செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? இந்தக் காலத்திற்கு அது பயனுள்ளது தானா? இதன் வரவு செலவு என்ன? நான் யார்? என்னுடைய சக்தி என்ன? என்று நன்கு சிந்தித்துப் பார்த்த பிறகே செயலில் இறங்க வேண்டும்.

இவற்றையெல்லாம் சிந்திக்காமல், பகுத்தறியாமல், மயக்கத்தினால் ஆரம்பிக்கப்படும் கர்மம் தாமஸ கர்மம் எனப்படும்.

சிலர் ஒரு காரியத்தைத் தொடங்கினால் கஷ்டம் வரும் என்று எண்ணி, தொடங்காமலேயே இருந்துவிடுவார்கள். சிலர் செயலைத் தொடங்குவார்கள், ஆனால் இடையில் விட்டுவிடுவார்கள். எவ்வளவு ச்ரமங்கள் வந்தாலும்

Downloaded from **www.omkaravidya.com**

முயற்சியைக் கைவிடாமல், தொடர்ந்து செயலாற்றுபவர்கள் மிகச் சிலரே.

ராஜஸமான, தாமஸமான கர்மங்களை விட்டுவிட்டு, ஸாத்விகமான கர்மங்களைச் செய்ய வேண்டும் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

मुक्तसङ्गोऽनहंवादी धृत्युत्साहसमन्वितः ।

सिद्ध्यसिद्ध्योर्निर्विकारः कर्ता सात्त्विक उच्यते ।। १८ - २६ ।।

मुक्तसङ्गोऽनहम्वादी त्रुत्युत्साहसमन्वित: ।

सित्त्यसित्त्योर्निर्विकार: कर्त्ता सात्त्विक

उच्यते ।। 18 - 26 ।।

பதவுரை

முக்தஸங்க: - பற்று நீங்கியவனும், **அநஹம்வாதீ** - நான் என்று கூறாதவனும் (தன்முனைப்பு இல்லாதவனும்), **த்ருதி-உத்ஸாஹ-ஸமந்வித:** - உறுதியும் உற்சாகமும் கூடிய முயற்சியை உடையவனும், **ஸித்த்யஸித்த்யோ:** - வெற்றி தோல்விகளில், **நிர்விகார:** - மாறுபாடு இல்லாதவனுமான, **கர்த்தா** - கர்த்தா (செயல்புரிபவன்), **ஸாத்த்விக:** - ஸாத்விகன், **உச்யதே -** எனப்படுகிறான்.

பொழிப்புரை

பற்று நீங்கப்பெற்றவன், தன்முனைப்பு இல்லாதவன், உறுதி, உற்சாகம் ஆகியவற்றுடன் கூடிய முயற்சியாளன், வெற்றி

Downloaded from **www.omkaravidya.com**

தோல்விகளில் மாறுபாடு இல்லாதவன் - இத்தகையவன் ஸாத்விக கர்த்தா எனப்படுகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தொடங்கி, கர்மத்தைச் செய்பவனுடைய மனநிலையைக் கூறுகிறார். இப்பொழுது ஸாத்விக கர்த்தாவைப் பற்றிக் கூறுகிறார்.

ஸாத்விக கர்த்தாவானவன், செயல், செயலின் பலன் ஆகிய எதனோடும் ஒட்டிக்கொள்வதில்லை, பற்றில்லாதவனாக இருக்கிறான். பகவான் தனக்கு இட்டுள்ள கட்டளை என்ற எண்ணத்துடன், முக்கியமாக, பலனில் பற்றில்லாமல் செயல்புரிகிறான். செயல்புரியும்போது, பரபரப்பில்லாமல், நிதானமாக இருக்கிறான்.

இறைவன் இட்ட கட்டளை, இறைவனுக்குச் செய்கின்ற பூஜை, மனத்தூய்மைக்காகச் செய்தல், சமூகத்தின் தர்மத்தை நடத்துவதற்குத் தானும் உறுதுணையாக இருக்க வேண்டும் போன்ற பல மனோபாவனைகள் மூன்றாவது அத்யாயத்தில் கூறப்பட்டன. அவற்றை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

அஹம்வாதீ என்றால் நான் இதைச் செய்தேன், நான் அதைச் செய்தேன் என்று பேசுபவன். ஆனால், ஸாத்விக கர்த்தா செயல்புரியும்போது, நான்தான் இதைச் செய்தேன் என்ற தன்முனைப்பு இல்லாதவனாக இருக்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

தளர்ச்சியில்லாமல், உறுதியுடன் செயலாற்றுவான், சோர்ந்து போக மாட்டான். உற்சாகத்துடன், ஆர்வத்துடன், பகவான் தனக்குக் கொடுத்துள்ள வாய்ப்பு என்று எண்ணி மகிழ்ச்சியுடன் செய்வான்.

யோகஸ்த்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய ।
ஸித்த்யஸித்த்யோ ஸமோ பூத்வா ஸமத்வம் யோக
உச்யதே ।। 2 - 48

பற்றைத் துறந்து, வெற்றி தோல்விகளை ஸமமாகக் கருதுகின்ற மனோபாவனையுடன் செயலாற்றுவதைப் பற்றி, பகவான் ஏற்கெனவே கூறினார்.

மனத்தூய்மையை அடைந்து, ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தை உணர்தல் **ஸித்தி:** எனப்படும். மனப்பக்குவத்தை அடையாமல், குரு கூறுவதைப் புரிந்துகொள்ள முடியாமல் கஷ்டப்படுதல் **அஸித்தி:** எனப்படும். ஸாத்விக கர்த்தாவானவன், எப்படியிருந்தாலும் பொறுப்பாக கர்மங்களைச் செய்துகொண்டிருக்கிறான்.

சித்தசுத்தி, ஞானம் கிடைத்துவிட்டது என்றெண்ணி அதிகமாக மகிழ்வதுமில்லை, கிடைக்கவில்லையே என்று எண்ணி வருந்துவதுமில்லை.

அளவுக்கு மீறிய மகிழ்ச்சியோ, அளவுக்கு மீறிய துன்பமோ இல்லாத தன்மையைத்தான் **நிர்விகார:** என்ற சொல் குறிக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

இவ்வாறு சாஸ்த்ரம் உபதேசித்தப்படி, பலனில் பற்றில்லாமல் செயல்புரிபவன் ஸாத்விக கர்த்தா எனப்படுகிறான்.

रागी कर्मफलप्रेप्सुर्लुब्धो हिंसात्मकोऽशुचिः ।

हर्षशोकान्वितः कर्ता राजसः परिकीर्तितः ।। १८ - २७ ।।

ராகீ கர்மபலப்ரேப்ஸுர்லுப்தோ ஹிம்ஸாத்மகோऽஶுசி: ।

ஹர்ஷஶோகாந்வித: கர்த்தா ராஜஸ: பரிகீர்த்தித: ।। 18 - 27 ।।

பதவுரை

ராகீ - விருப்புகள் அதிகம் உடையவனும், **கர்மபலப்ரேப்ஸு:** - செயலின் பலனில் அதிகப் பற்றுடையவனும், **லுப்த:** - பிறருடைய பொருளை அனுபவிக்க வேண்டும் என்ற பேராசை உடையவனும், **ஹிம்ஸாத்மக:** - துன்புறுத்தும் இயல்புடையவனும், **அஶுசி:** - தூய்மை அற்றவனும், **ஹர்ஷ-ஶோக-அந்வித:** - அதிகமான மகிழ்ச்சி, துயரம் ஆகியவற்றுடன் கூடியவனுமான, **கர்த்தா** - கர்த்தா (செயல்புரிபவன்), **ராஜஸ:** - ராஜஸன், **பரிகீர்த்தித:** - எனப்படுகிறான்.

பொழிப்புரை

அதிகமான விருப்புகள் உடையவன், செயலின் பலனில் பற்றுடையவன், பிறருடைய பொருளை அனுபவிக்க வேண்டும் என்ற பேராசை உடையவன், பிறரைத் துன்புறுத்தும் இயல்புடையவன், தூய்மை இல்லாதவன்,

Downloaded from **www.omkaravidya.com**

அதிகமான மகிழ்ச்சி, துயரம் ஆகியவற்றுடன் கூடியவன் ராஜஸ கர்த்தா எனப்படுகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ராஜஸ கர்த்தாவின் இயல்புகளைக் கூறுகிறார்.

அவன், தனது குடும்பம், சொத்து முதலியவை மீது அதிகமான பற்றுடையவனாக இருப்பான். பேராசையினால் தூண்டப்பட்டு, அவனுடைய மனம் எப்பொழுதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும். **காமாதி-ஆகுல-சித்த:** என்று மதுஸூதந ஸரஸ்வதி ஸ்வாமிகள் உரை செய்கிறார். ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைந்திருப்பதால், அலைபாய்கின்ற மனதை உடையவன் என்று பொருள்.

விஷயலோலுப: - அவனுக்குப் புலனின்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையானது, அடங்காமல் இருக்கிறது.

செயலை எவ்வளவு நன்றாகச் செய்யலாம் என்று யோசிக்க மாட்டான். கர்மத்தைச் செய்வதைவிட, கர்மபலனில் ஆசை உடையவனாக, அதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருப்பான்.

லுப்த: - பிறரது பொருளை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவனாக இருப்பான். திருவள்ளுவர், இதனை **வெஃகுதல்** என்பார்.

லுப்த: என்பதற்கு மற்றொரு பொருளும் உள்ளது - நல்ல புண்ய க்ஷேத்ரங்களில், தகுதியுள்ளவர்களுக்குத் தன்னிடம்

Downloaded from **www.omkaravidya.com**

உள்ள பொருளை வழங்க அவனுக்கு மனம் வராது என்று ஆதிசங்கரர் உரை செய்கிறார்.

பிறருக்கு தானம் வழங்க இவனுக்கு மனம் வராது, பிறர் பொருளையும் அபரிகரிக்க வேண்டும் என்று நினைப்பான்.

ஹிம்ஸாத்மக: - பிறரை சொற்களாலும் செயல்களாலும் துன்புறுத்திக்கொண்டே இருப்பான்.

அஶுசி: - அவனிடத்தில் தூய்மை, ஒழுங்குப்பாடு ஆகியவை இருக்காது. பெயருக்கு ஏதோ செய்வானே தவிர, சுத்தமாக இருக்க மாட்டான்.

வெற்றி கிடைத்தால், அளவுக்கு மீறி ஸந்தோஷப்பட்டு, தர்மத்தைக்கூட மீறி விடுவான். தோல்வி அடைந்தால், அளவுக்கு மீறித் துயரப்படுவான்.

अयुक्तः प्राकृतः स्तब्धः शठो नैष्कृतिकोऽलसः ।

विषादी दीर्घसूत्री च कर्ता तामस उच्यते ।। १८ - २८ ।।

அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: ஶடோ நைஷ்க்ருதிகோऽலஸ: ।

விஷாதீ தீர்கஸூத்ரீ ச கர்த்தா தாமஸ உச்யதே ।। 18 - 28 ।।

பதவுரை

அயுக்த: - செயலில் கவனமில்லாதவன் (மன ஒருமுகப்பாடு இல்லாதவன்), **ப்ராக்ருத:** - மனப்பக்குவம் அற்றவன் (பண்பாடு இல்லாதவன், நெறிமுறைகளை அறியாதவன்), **ஸ்தப்த:** - பணிவு (வணக்கம்) இல்லாதவன், **ஶட:** - வஞ்சகன்,

Downloaded from **www.omkaravidya.com**

நைஷ்க்ருதிக: - பிறரது வளர்ச்சியைக் கெடுக்கக்கூடிய செயல்களைச் செய்பவன், **அலஸ:** - சோம்பேறி, **விஷாதீ** - எப்பொழுதும் சோர்வாக அழுதுகொண்டே இருப்பவன், **தீர்கஸூத்ரீ ச** - காலத்தை நீட்டிச் செய்பவனுமான (கால தாமதம் செய்பவனுமான), **கர்த்தா** - செயல்புரிபவன், **தாமஸ:** - தாமஸமானவன், **உச்யதே** - எனப்படுகிறான்.

பொழிப்புரை

செயலில் கவனமில்லாதவன், மன ஒருமுகப்பாடு இல்லாதவன், மனப்பக்குவம் இல்லாதவன், பண்பாடு இல்லாதவன், நெறிமுறைகளை அறியாதவன், பணிவு இல்லாதவன், வஞ்சகன், பிறரது வளர்ச்சியைக் கெடுக்கக்கூடிய செயல்களைச் செய்பவன், சோம்பேறி, எப்பொழுதும் சோர்வாக அழுதுகொண்டே இருப்பவன், காலத்தை நீட்டிச் செய்பவன் தாமஸ கர்த்தா எனப்படுகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தாமஸ கர்த்தாவைப் பற்றிக் கூறுகிறார்.

கீழான மனநிலையுடன் கூடியவன், தோன்றியபடி, கவனமில்லாமல் செயல்படுவான். மன ஒருமுகப்பாடு இல்லாத காரணத்தினால், அவனால் தொடர்ந்து செயல்பட முடியாது.

Downloaded from **www.omkaravidya.com**

குழந்தைகள், அங்குமிங்கும் அலைபாய்வதைப்போன்று அவனுடைய செயல்பாடுகள் இருக்கும்.

அவனுடைய செயலில் ஒரு பண்பாடு இருக்காது. பண்படுத்திக்கொள்ள முயற்சியும் எடுக்க மாட்டான். யாரையும் வணங்க மாட்டான், அப்படியே மரம் போன்று நிற்பான்.

முரட்டுத்தனத்துடன் இருப்பான். வேலை செய்யாமல் பிறரை வஞ்சிப்பான். தன்னிடத்தில் ஆற்றல் இருந்தாலும், அதனை வெளிப்படுத்துவதற்கு முயற்சி செய்ய மாட்டான். பிறருடைய வேலையைக் கெடுக்கும் இயல்புடைவன் இவன்.

வேலை செய்வதற்கு, தனது ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு, சிறிதுகூட முயற்சி செய்யாமல், சோம்பேறியாக இருப்பான்.

ஒரு வேலையைச் செய்துதான் ஆக வேண்டும் என்ற நிர்பந்தம் வரும்போது, அழுதுகொண்டே செய்வான். ஒரு சாதாரண வேலையைக்கூட, நீட்டிச் செய்வான்.

உரிய காலத்திற்குள் செய்யாமல், காலம் தாழ்த்திச்செய்தல் தாமஸ குணமுடையவர்களின் பண்பு. திருவள்ளுவர் இதனை **நெடுநீர் (திருக்குறள் - 605)** என்று கூறுவார்.

இதுபோன்ற பண்புகள் நம்மிடம் இருந்தால், அவற்றை விட்டுவிட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ள எல்லாப் பண்புகளும் இருந்தால்தான் தாமஸ கர்த்தா என்று பொருளல்ல. இதில் ஒரு சில குணங்கள் இருந்தாலே அவன் தாமஸ கர்த்தாதான்.

நாம் ராஜஸ கர்த்தாவாகவோ தாமஸ கர்த்தாவாகவோ இருக்கக் கூடாது. ஸாத்விக கர்த்தாவாக நம்மைப் பண்படுத்திக்கொள்ள வேண்டும்.

बुद्धेर्भेदं धृतेश्चैव गुणतस्त्रिविधं शृणु ।

प्रोच्यमानमशेषेण पृथक्त्वेन धनञ्जय ।। १८ - २९ ।।

புத்தேர்பேதம் த்ருதேஸ்சைவ குணதஸ்த்ரிவிதம் ஸ்ருணு ।
ப்ரோச்யமாநமஸேஷேண ப்ருதக்த்வேந தநஞ்ஜய ।। 18 - 29 ।।

பதவுரை

ஹே தநஞ்ஜய! - ஓ தனஞ்ஜயனே! **குணத:** - குணத்தின் அடிப்படையில், **அஸேஷேண** - முழுவதாகவும், **ப்ருதக்த்வேந** - பாகுபடுத்தியும், **ப்ரோச்யமாநம்** - கூறப்படும், **புத்தே:** - புத்தி (விவேகம், பகுத்தறிவு), **த்ருதே: ச ஏவ** - உறுதி ஆகியவற்றின், **த்ரிவிதம்** - மூன்றுவிதமான, **பேதம்** - வேறுபாடுகளை, **ஸ்ருணு** - கேட்பாயாக!

பொழிப்புரை

ஓ தனஞ்ஜயனே! குணத்தின் அடிப்படையில் முழுவதாகவும் பாகுபடுத்தியும் கூறப்படும் புத்தி, உறுதி ஆகியவற்றின்

Downloaded from **www.omkaravidya.com**

மூன்றுவிதமான வேறுபாடுகளை என்னிடமிருந்து கேட்பாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஆத்மா நிர்குணமாக இருந்தாலும், இந்த உடலில் இருக்கக்கூடிய ஜீவாத்மா மூன்று குணங்களுடன் கூடியதாக இருக்கிறது என்ற கருத்தை உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

இனி, பகவான் மூன்று விதமான புத்தியைப் பற்றியும், மூன்று வகையான உறுதியையும் பற்றியும், குணங்களின் அடிப்படையில், நன்கு பிரித்து, பகுத்தறிந்து கூறப் போகிறார். எதுவும் விட்டுப் போகாமல் முழுமையாகக் கூறப் போகிறார்.

பகவான் அர்ஜுனனை **ஹே தநஞ்ஜய!** என்று அழைக்கிறார். அதற்கு ஆதிசங்கரர் இந்த இடத்தில் அழகாகப் பொருள் கூறுகிறார்.

திக்விஜயே மாநுஷம் தைவம் ச ப்ரபூதம் தநம் அஜயத்
தேந அஸௌ தநஞ்ஜய: அர்ஜுந: ஸம்போத்யதே ।

அர்ஜுனன் திக்விஜயம் செய்தபோது, மனிதர்களிடமிருந்து செல்வத்தையும், நிறைய சாஸ்த்ரங்களையும், மந்த்ரங்களையும் தனது நாட்டிற்கு எடுத்து வந்தான்.

பல நாடுகளை வென்று, அறிவுச்செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் கொண்டுவந்த காரணத்தால் அர்ஜுனனுக்கு **தனஞ்ஜய:** என்று பெயர்.

Downloaded from **www.omkaravidya.com**

प्रवृत्तिं च निवृत्तिं च कार्याकार्ये भयाभये ।

बन्धं मोक्षं च या वेत्ति बुद्धिः सा पार्थ सात्त्विकी ।। १८ - ३० ।।

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே ।
பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த்த
ஸாத்த்விகீ ।। 18 - 30 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **யா** - எது, **ப்ரவ்ருத்திம் ச** - கர்ம மார்கத்தையும், **நிவ்ருத்திம் ச** - மோக்ஷ மார்கத்தையும், **கார்ய-அகார்யே** - (உலகியல் பணிகளிலும் ஆன்மிகப் பணிகளிலும்) செய்யத் தக்கதையும் தகாததையும், **பய-அபயே** - அஞ்சத் தக்கதையும் (பாபத்தையும்), அஞ்சத் தகாததையும் (புண்யத்தையும்), **பந்தம்** - பந்த காரணத்தையும், **மோக்ஷம் ச** - மோக்ஷ காரணத்தையும், **வேத்தி** - அறிகிறதோ, **ஸா** - அந்த, **புத்தி:** - புத்தியானது, **ஸாத்த்விகீ** - ஸாத்விகமானது.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! கர்ம மார்கம், மோக்ஷம் மார்கம் ஆகியவற்றையும், உலகியல் பணிகளிலும் ஆன்மிகப் பணிகளிலும் செய்யத் தக்கது, செய்யத் தகாதது ஆகியவற்றையும், அஞ்சத் தக்கது - அதாவது பாபத்தையும், அஞ்சத் தகாதது - அதாவது புண்யத்தையும், பந்த காரணத்தையும், மோக்ஷ காரணத்தையும் அறிகின்ற புத்தியானது ஸாத்விகமானது.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸாத்விக புத்தியைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறியருள்கிறார். புத்தி என்ற சொல்லானது, பகுத்தறிகின்ற ஆற்றலைக் குறிக்கும். ஞானம் என்பது ஒரு பொருளின் தன்மையைப் பற்றித் தெரிந்துகொள்வதாகும்.

ப்ரவ்ருத்தி: என்பது பந்தத்திற்குக் காரணமான கர்ம மார்கத்தைக் குறிக்கும். தர்மானுஷ்டானத்தையே சாஸ்த்ரம் அவ்வாறு கூறுகிறது. அதர்மத்தில் சென்றால், நிச்சயமாகத் துன்பம் ஏற்படும். தர்ம வழியில் சென்றுகொண்டிருந்தாலும், அந்த புண்யத்தை அனுபவிப்பதற்காக மீண்டும் பிறக்கத்தான் வேண்டும்.

ப்ரவ்ருத்தி: என்றால் தர்மத்தில் ஈடுபடுதல், **நிவ்ருத்தி:** என்றால் தர்மத்தை விட்டுவிடுதல். அதற்காக அதர்மத்தில் ஈடுபடுவார்கள் என்று பொருளல்ல, விசேஷ தர்மங்களை விட்டுவிடுவார்கள் என்று பொருள்.

நம் உடலில் உயிர் இருக்கின்ற வரையிலும் ஸாமான்ய தர்மத்தை விடக்கூடாது, பெரியோர்கள் அதனை விட மாட்டார்கள். எல்லோருமே ஸாமான்ய தர்மத்தைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் விசேஷ தர்மத்தை நாம் கடைப்பிடிக்கத் தொடங்கலாம், கடைப்பிடிக்கலாம், அதனை விடவும் செய்யலாம். விசேஷ தர்மம் மாறவும் செய்யும்.

Downloaded from **www.omkaravidya.com**

அதாவது ப்ரஹ்மசாரியின் தர்மம் வேறு, க்ருஹஸ்தனின் தர்மம் வேறு. ப்ரஹ்மசாரியாக இருந்தாலும் க்ருஹஸ்தனாக இருந்தாலும் பொய் சொல்லக் கூடாது, பிறரைத் துன்புறுத்தக் கூடாது என்பது ஸாமான்ய தர்மம்.

ஸாமான்ய தர்மம் என்பது எல்லா வர்ணத்திற்கும் எல்லா ஆச்ரமத்திற்கும் எல்லா மனிதர்களுக்கும் எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் பொதுவானது.

பூஜைகள், ஜபங்கள், சடங்குகள் போன்றவை வாழ்க்கைமுறைக்குத் தகுந்தாற்போல் மாறும்.

தர்மத்தில் ஈடுபடுவது என்றால் என்ன, தர்மத்தை விடுவது என்றால் என்ன என்ற விஷயத்தில் இங்கு ஸாமான்ய தர்மமல்ல, விசேஷ தர்மம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

தர்மத்தைக் கடைப்பிடித்தல் அல்லது தர்மத்தைத் துறந்துவிட்டு துறவு வாழ்க்கைக்குச் சென்று, ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தை உணர்தல் ஆகியவற்றைப் பகுத்தறிவதைப்பற்றி பகவான் இங்கு கூறுகிறார்.

தர்மே ப்ரவ்ருத்தி: என்றால் விசேஷ தர்மத்தைக் கடைப்பிடித்தல். **தர்மாத் நிவ்ருத்தி:** என்று விசேஷ தர்மத்தைத் துறந்துவிட்டு, ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தை உணர்தல் என்று பொருள்.

ப்ரவ்ருத்தி மார்கம் என்பது தர்ம மார்கம், நிவ்ருத்தி மார்கம் என்பது மோக்ஷ மார்கம். புண்யம் ஸம்பாதிப்பதற்குரியது ப்ரவ்ருத்தி மார்கம், முக்தி அடைகின்ற வழி, நிவ்ருத்தி மார்கம்.

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ரங்கள், பெரியோர்களின் உபதேசங்கள் ஆகியவற்றைக்கொண்டு, எந்த புத்தியானது இதைப் பகுத்தறிகிறதோ, அந்த புத்தி ஸாத்விகமானது.

கார்ய-அகார்யே - எந்த இடத்தில், எந்தக் காலத்தில் எந்த வாழ்க்கைமுறையில், எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற பகுத்தறிவு வேண்டும்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (திருக்குறள் - 466)

என்று திருவள்ளுவர் கூறியதுபோல், எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற விவேகம் வேண்டும்.

செய்ய வேண்டும் என்று சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்வதற்குப் பெயர் **கார்யம்**. செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பவை **அகார்யம்** எனப்படும்.

இது பற்றி, பகவான் முன்பே கூறினார் -

கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யம் ச விகர்மண: ।
அகர்மணஶ்ச போத்தவ்யம் கஹநா கர்மணோ கதி: ।। 4 - 17 ।।
கிம் கர்ம கிமகர்மேதி கவயோப்யத்ர மோஹிதா: । 4 - 16

எது கர்மம், எது அகர்மம் என்ற விஷயத்தில் அறிவாளிகளும் குழம்பிப் போகிறார்கள் என்று பகவான் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

எந்த இடத்தில், எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்ற பகுத்தறிவு மிக முக்கியம்.

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (திருக்குறள் - 672)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

எந்தச் செயலை, உடனே செய்ய வேண்டுமோ, அதனை காலம் தாழ்த்தாமல் உடனே செய்ய வேண்டும். எந்தச் செயலை, பிறகு செய்துகொள்ளலாமோ, அதனைப் பிறகு செய்ய வேண்டும்.

பய-அபயே - எதற்கு பயப்பட வேண்டும், எதற்கு பயப்படக் கூடாது என்பது தெரிய வேண்டும். புண்யம் செய்வதற்கு பயப்படக்கூடாது. ஆனால் பாபம் செய்வதற்கு பயப்பட வேண்டும்.

நல்ல காரியங்களைச் செய்வதற்கு பயப்படக் கூடாது. தவறான காரியங்களைச் செய்வதற்கு பயப்பட வேண்டும்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (திருக்குறள் - 428)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறிவுடைமையும், இங்கு கீதையில் கூறப்பட்டுள்ள ஸாத்விகமான புத்தியும் ஒன்றுதான்.

Downloaded from **www.omkaravidya.com**

பாபத்திற்கு பயப்பட வேண்டும். அடுத்தப் பிறவி, கீழான பிறவியாக வந்துவிடக்கூடாதே என்று அஞ்ச வேண்டும்.

சமூகம் நன்றாக இருக்க வேண்டுமெனில், அதற்கு எல்லோரும் தர்ம விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்ற ந்யாயமான பயம் இருக்க வேண்டும்.

பயம் என்றால் இந்த இடத்தில், கடவுளுக்கு, சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் என்று பொருள். சமூகமே நம்மைப் புறக்கணித்தாலும் தர்ம விஷயத்தில் பயப்படாமல் இறங்கிச் செய்ய வேண்டும்.

வெறும் புத்தி மட்டும் இருந்தால் போதாது, அது பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

எது நம்மை பந்தப்படுத்தும், எது நம்மை பந்தத்திலிருந்து விடுவிக்கும் என்பதையும் பகுத்தறிந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

ப்ரவ்ருத்தி:, அகார்யம், அதர்ம விஷயத்தில் **அபயம்** போன்றவை நம்மை பந்தப்படுத்தும்.

எப்படி வாழ்ந்தால் நாம் நிம்மதியாக வாழ முடியும், எப்படி வாழ்ந்தால் நாம் கஷ்டப்படுவோம் என்று பகுத்தறிந்து வாழ வேண்டும்.

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. (திருக்குறள் - 23)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

Downloaded from **www.omkaravidya.com**

இருமை வகைதெரிதல்தான் ஸாத்விகமான புத்தி. ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி, கார்யம்-அகார்யம், பயம்-அபயம், பந்தம்-மோக்ஷம் - இவையே இருமைகள். இவ்வாறு இருமைகளைப் பகுத்தறிந்து, துறவு வாழ்க்கையை மேற்கொள்கின்ற துறவியின் பெருமை உலகில் சிறப்புடையதாகும்.

यया धर्ममधर्मं च कार्यं चाकार्यमेव च ।

अयथावत्प्रजानाति बुद्धिः सा पार्थ राजसी ।। १८ - ३१ ।।

யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச ।

அயதாவத்ப்ரஜாநாதி புத்தி: ஸா பார்த்த ராஜஸீ ।। 18 - 31 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **யயா** - எதனால் (எந்த புத்தியினால்), **தர்மம்** - தர்மத்தையும், **அதர்மம் ச** - அதர்மத்தையும், **கார்யம் ச** - செய்யத் தக்கதையும், **அகார்யம் ஏவ ச** - செய்யத் தகாததையும், **அயதாவத் (ஏவ)** - உள்ளபடி அல்லாமல் (வேறாகவே), **ப்ரஜாநாதி** - அறிகிறானோ, **ஸா** - அந்த, **புத்தி:** - புத்தியானது, **ராஜஸீ** - ராஜஸமானது.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! தர்மம், அதர்மம், செய்யத் தக்கது, செய்யத் தகாது ஆகியவற்றை உள்ளவாறு அல்லாமல் வேறாக அறிவது ராஜஸ புத்தியாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ராஜஸ புத்தியைப் பற்றி இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

நம்முடைய புத்திக்கு, பகுத்தறிகின்ற ஆற்றல் இருக்கிறது. பகுத்தறிகின்ற அந்த ஆற்றலில் ஸாத்விக தன்மை, ராஜஸ தன்மை, தாமஸ தன்மை ஆகியவை இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள், தர்மம் எனப்படும். சாஸ்த்ரங்களால் விலக்கப்பட்ட கர்மங்கள், அதர்மம் எனப்படும்.

எந்த இடத்தில், எந்தக் காலத்தில், எந்தச் செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. எப்படிச் செய்யக் கூடாது என்றும் இருக்கிறது. இடம், பொருள், சூழ்நிலை, மனிதர்களைப் பொருத்து தர்ம, அதர்மங்கள் மாறுபடும்.

சில இடங்களில், தர்மம் அதர்மமாகிவிடும். வேறு சில இடங்களில், பொதுவாக நாம் அதர்மம் என்று நினைப்பது தர்மமாகிவிடும். இவ்வாறு புரிந்து செயலாற்ற வேண்டும். அதற்கு விவேக சக்தி, நன்கு வேலை செய்ய வேண்டும்.

ராஜஸ புத்தியானது, சிலவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ளும், சிலவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ளாது.

Downloaded from **www.omkaravidya.com**

ஸாத்விக புத்தி, எப்பொழுதுமே தவறாகப் புரிந்துகொள்ளாது, உள்ளதை உள்ளவாறு புரிந்துகொள்ளும். ராஜஸ புத்தியானது உள்ளதை உள்ளவாறு புரிந்துகொள்ளாது.

புத்தி என்பது எண்ணங்கள் மயமானது. ராஜஸ புத்திக்கு, தெரிந்துகொள்கின்ற விஷயங்களில் குழப்பம் ஏற்பட்டுவிடும்.

ஒரு விஷயத்தை, நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாதபோது, நம்முடைய புத்தி ராஜஸ தன்மையில் இருக்கிறது என்று நாம் புரிந்து கொண்டு, அதனை ஸாத்விக தன்மை உடையதாக ஆக்க வேண்டும். ஸத்ஸங்கம், சாஸ்த்ர விசாரம், பெரியோர்களிடம் கேட்டல் ஆகியவை, புத்தியை ஸாத்விகமாக மாற்ற உதவும்.

நம்முடைய மனம் எல்லா நேரமும் ஒரே மாதிரி இருக்காது. பகவான் முன்பே இதைப் பற்றிக் கூறினார்.

ரஜஸ்தமஸ் சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத ।
ரஜ: ஸத்த்வம் தமஶ்சைவ தம: ஸத்த்வம் ரஜஸ்ததா ।। 14 - 10 ।।

மனதில் சில சமயங்களில் ரஜோ குணமும், சில சமயங்களில் தமோ குணமும், சில சமயங்களில் ஸத்வ குணமும் மேலோங்கியிருக்கும்.

இதனைப் புரிந்துகொண்டு, நம் வாழ்க்கைமுறையை அமைத்துக்கொண்டால்தான், நம் வாழ்க்கை ஸத்வப்ரதானமாக ஆகும்.

Downloaded from **www.omkaravidya.com**

ராஜஸ புத்தியைப் புரிந்துகொண்டு, அதிலிருந்து விலகி, ஸாத்விக புத்தியை அடைய வேண்டும் என்பதுதான் தாத்பர்யம்.

अधर्मं धर्ममिति या मन्यते तमसावृता ।

सर्वार्थान्विपरीतांश्च बुद्धिः सा पार्थ तामसी ।। १८ - ३२ ।।

अधर्मं धर्ममिति या मन्यते तमसावृता ।
सर्वार्थान्विपरीताम्श्च बुद्धि: सा पार्त्थ तामसी ।। 18 - 32 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **யா** - எது, **தமஸா** - தமஸினால், **ஆவ்ருதா** - மூடப்பட்டதாய் (மறைக்கப்பட்டதாய்), **அதர்மம்** - அதர்மத்தை, **தர்மம்** - தர்மம், **இதி** - என்றும், **ஸர்வார்த்தாந்** - (அறியப்பட வேண்டிய பல) விஷயங்களையும், **விபரீதாந் ச** - விபரீதமாகவே, **மந்யதே** - எண்ணுகிறதோ, **ஸா** - அந்த, **புத்தி:** - புத்தியானது, **தாமஸீ** - தாமஸமானது.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா, தமஸினால் மறைக்கப்பட்டு, அதர்மத்தை தர்மம் என்று எண்ணுவதும், அறியப்பட வேண்டிய பல விஷயங்களை விபரீதமாக எண்ணுவதும் தாமஸ புத்தியாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தமோ குணத்தினால் கவரப்பட்ட, மூடப்பட்ட புத்தியைப் பற்றிக் கூறுகிறார்.

சரியாகப் புரிந்துகொள்ளாமல், அதர்மத்தை தர்மம் என்று நினைப்பது தாமஸ புத்தி.

இடம், பொருள், மனிதரைப் பொருத்து, ஸாமான்ய தர்மம், விசேஷ தர்மம் எல்லாவற்றையும் தெளிவாகப் பிரித்து அறிவது ஸாத்விக புத்தி. அரைகுறையாகப் புரிந்துகொள்வது ராஜஸ புத்தி. எல்லாவற்றையும் தவறாக, விபரீதமாகப் புரிந்துகொள்வது தாமஸ புத்தி.

அதர்மத்தை தர்மம் என்று புரிந்துகொள்வது மட்டுமல்ல, எல்லாவற்றையும் மாற்றி மாற்றி புரிந்துகொள்வது தாமஸ புத்தி. தாமஸ புத்தி படைத்தவர்களிடத்தில், நாம் பேசி ஒரு விஷயத்தைப் புரிய வைக்கவே முடியாது. எதைச் சொன்னாலும் விபரீதமாகவே அர்த்தம் செய்து கொள்வார்கள்.

கண்ணால் பார்க்கின்ற விஷயங்கள் தொடங்கி, சாஸ்த்ர விஷயங்கள் என எல்லாவற்றையுமே அவர்கள் தவறாகவே புரிந்துகொள்கிறார்கள்.

இத்தகைய புத்தி நம்மிடத்தில் இருந்தால், நாம் அதனை மாற்றிக்கொள்ள வேண்டும். நாம் நினைப்பதுதான் சரி என்று பிடிவாதம் பிடிக்கக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

ஸாதகனாக இருக்கின்ற ஒருவன், இதனைப் புரிந்துகொண்டு, அவ்வப்பொழுது ஏற்படக்கூடிய ராஜஸ புத்தி, தாமஸ புத்தியிலிருந்து விடுபட்டு, ஸாத்விக புத்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

धृत्या यया धारयते मनःप्राणेन्द्रियक्रियाः ।

योगेनाव्यभिचारिण्या धृतिः सा पार्थ सात्त्विकी ।। १८ - ३३ ।।

த்ருத்யா யயா தாரயதே மந:ப்ராணேந்த்ரியக்ரியா: ।
யோகேநாவ்யபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த்த
ஸாத்த்விகீ ।। 18 - 33 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **யயா** - எந்த, **அவ்யபிசாரிண்யா** - பிறழாத (அசையாத), **த்ருத்யா** - மனவுறுதியால், **மந: ப்ராண-இந்த்ரிய-க்ரியா:** - மனம், ப்ராணன், பொறிகள் இவற்றின் செயல்பாடுகளை, **யோகேந** - பரம்பொருளில் ஒருமுகப்படுத்துவதால், **தாரயதே** - நிலைநிறுத்துகிறானோ, **ஸா** - அந்த, **த்ருதி:** - மன உறுதியானது, **ஸாத்த்விகீ** - ஸாத்விகமானது.

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! மனம், ப்ராணன், பொறிகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை, பரம்பொருளில் ஒருமுகப்படுத்தி நிலைநிறுத்துகின்ற, பிறழாத மன உறுதியானது, ஸாத்விகமான த்ருதி எனப்படும்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் ஸாத்விகமான த்ருதியைப் பற்றிக் கூறுகிறார்.

த்ருதி: என்றால் உறுதியாக இருத்தல், முயற்சியை விடாமல் இருத்தல் என்று பொருள்.

எப்பொழுதும் மனதை பரம்பொருளில் ஒடுக்குவதற்கான முயற்சி, ஸாத்விகமான த்ருதி எனப்படும்.

இந்த ச்லோகத்தில் **யோக:** என்ற சொல்லுக்கு **ப்ரஹ்மணி ஸமாதானம்** - பரம்பொருளில் மனதை ஒருமுகப்படுத்துதல் என்று அர்த்தம்.

தர்மம், அர்த்தம், காமம் முதலான வேறு எதிலும் மனதைச் செலுத்தாமல், பரிபூர்ண வைராக்யத்துடன், வேதாந்த சாஸ்த்ரத்தில் உபதேசிக்கப்பட்டுள்ள சுத்த அத்வைத ப்ரஹ்மனிடத்திலேயே மனதை ஒருமுகப்படுத்துகின்ற உறுதியைப் பற்றி பகவான் இங்கு கூறுகிறார்.

ஸாதகன், இந்த உறுதியினால், மனம், ப்ராணன், இந்த்ரியங்கள் ஆகியவற்றைத் தாங்குகிறான். இப்படியா அப்படியா என்று சிந்திக்கின்ற மனம், மூச்சுக்காற்றை உள்ளிழுத்து வெளியேற்றுகின்ற ப்ராணன், விஷயங்களை அனுபவிக்கின்ற இந்த்ரியங்கள் ஆகியவை த்யானத்தினால், ஸமாதி அப்யாஸத்தினால் தாங்கப்படுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

மூச்சு விடுதல் மட்டும் கட்டுப்பாடுடன் இயங்கிக்கொண்டிருக்கும். மனம் வைதிக, லௌகிக விஷயங்களைச் சிந்திப்பதில்லை. இந்த்ரியங்கள் விஷயங்களை நுகர்வதில்லை.

மனம் பரம்பொருளிலேயே ஒருமுகப்பட்டிருக்கிறது, ஒடுங்கியிருக்கிறது. இத்தகைய உறுதி, ஸாத்விகமான உறுதி என்று பகவான் கூறுகிறார். இதுவே நமக்கு வேண்டும்.

यया तु धर्मकामार्थान्धृत्या धारयतेऽर्जुन ।

प्रसङ्गेन फलाकाङ्क्षी धृतिः सा पार्थ राजसी ।। १८ - ३४ ।।

ययா து தர்மகாமார்த்தாந்த்ருத்யா தாரயதேऽர்ஜுந ।

ப்ரஸங்கேந பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த்த ராஜஸீ ।। 18 - 34 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **து** - மாறாக, **ப்ரஸங்கேந** - சூழ்நிலைக்கேற்ப, **பல-ஆகாங்க்ஷீ** - பலனில் ஆசையுள்ளவன், **தர்ம-காம-அர்த்தாந்** - அறம், இன்பம், பொருள் ஆகியவற்றை, **யயா** - எந்த, **த்ருத்யா** - மன உறுதியால், **தாரயதே** - தாங்குகிறானோ, **ஸா** - அந்த, **த்ருதி:** - மன உறுதியானது, **ராஜஸீ** - ராஜஸமானது.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! சூழ்நிலைக்கேற்ப, பலனில் ஆசையுள்ளவன், அறம், இன்பம், பொருள் ஆகியவற்றை எந்த மன உறுதியால் தாங்குகிறானோ, அந்த மன உறுதி ராஜஸமானது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த ச்லோகத்தில் ராஜஸமான மனவுறுதியைப் பற்றிக் கூறுகிறார்.

மெய்ப்பொருளை ஆழ்ந்து த்யானிப்பதில், மனவுறுதியுடன் இருப்பது ஸாத்விக த்ருதி என்று கூறினார்.

ஒருவன் எந்த ஒரு மனவுறுதியினால் பணம், புலனின்பங்கள், புண்யச் செயல்கள் ஆகியவற்றிலேயே மனதைச் செலுத்துகிறானோ, அது ராஜஸ த்ருதி என்கிறார் பகவான்.

தர்மத்தைக் கடைப்பிடிக்கும்போதும், தர்மத்திற்குப் பலன் வர வேண்டும் என்று விரும்புகிறான். தான் செய்கின்ற புண்யச் செயல்களுக்குப் பலனாக, பொருளும் புலனின்பங்களும் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறான்.

தனது முயற்சியை, உறுதியை அவன் பயன்படுத்தினாலும், பொருள், இன்பங்களில்தான் அவனுக்கு நாட்டம் இருக்கிறது. நிறைய பணம் ஸம்பாதிக்க வேண்டும், நிறைய உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும். அதன்பொருட்டு, புண்யச் செயல்களைச் செய்வான். ஈச்வரனிடத்தில் பக்தியுடன் இருப்பான். ஆனால் அவனது குறிக்கோள்,

Downloaded from **www.omkaravidya.com**

மோக்ஷமல்ல, பொருள் இன்பங்களை மீண்டும் மீண்டும் அடைவதுதான்.

தன்னுடைய மனவுறுதியை பணம் ஸம்பாதிப்பதிலும் அதனைப் பாதுகாப்பதிலும், இன்பங்களை அனுபவிப்பதிலும் பயன்படுத்துகிறான். அதற்காகத்தான் தர்மத்தைக் கடைப்பிடிக்கிறான்.

பணம் ஸம்பாதிப்பது, அதற்குரிய வழிகளைத் தேடுவது தன்னுடைய பொறுப்பு என்றும் நினைக்கிறான். அதற்குக் காரணமான மனவுறுதி ராஜஸமானது.

यया स्वप्नं भयं शोकं विषादं मदमेव च ।

न विमुञ्चति दुर्मेधा धृतिः सा पार्थ तामसी ।। १८ - ३५ ।।

யயா ஸ்வப்நம் பயம் ஶோகம் விஷாதம் மதமேவ ச ।
ந விமுஞ்சதி துர்மேதா த்ருதி: ஸா பார்த்த தாமஸீ ।। 18 - 35 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **துர்மேதா:** - பகுத்தறியாதவன், **யயா** - எதனால், **ஸ்வப்நம்** - உறக்கத்தையும், **பயம்** - அச்சத்தையும், **ஶோகம்** - துயரத்தையும், **விஷாதம்** - துயர வெளிப்பாட்டையும் (மனத்தளர்வையும்), **மதம் ஏவ ச** - கர்வத்தையும், **ந விமுஞ்சதி** - விடுவதில்லையோ, **ஸா** - அந்த, **த்ருதி:** - மன உறுதி, **தாமஸீ** - தாமஸமானது.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! பகுத்தறியாதவன், எதனால் உறக்கம், அச்சம், துயரம், துயர வெளிப்பாடு, மனத்தளர்வு, கர்வம் ஆகியவற்றை விடுவதில்லையோ, அந்த உறுதி தாமஸமானது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் தாமஸமான மனவுறுதியைப் பற்றிக் கூறுகிறார்.

எதை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை, இந்த ச்லோகங்கள் காட்டுகின்றன. சிலர் தூக்கத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருப்பார்கள்.

ஸாத்விகமான மனவுறுதியில் நம் முயற்சி நிறைய இருக்கிறது. ராஜஸமான மனவுறுதியிலும்கூட முயற்சி இருக்கிறது. இங்கு முயற்சி அல்ல, மனிதனின் ஸ்வபாவம்தான் இவை. இவை கீழான இயல்புகள் என்ற தெரிந்தாலும், அவற்றை விடுவதற்கு முயற்சி எடுப்பதில்லை.

இத்தகையவன் எல்லா விஷயத்திலும் பயந்துகொண்டே இருப்பான். ஜோதிடத்தை அதிகமாக நம்புவான். தானும் பயந்து, பிறரையும் பயமுறுத்துவான். எதையாவது நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டே இருப்பான். விட்டால் சில நேரம் அழுதுவிடுவான்.

சோகம் என்பது மனதிற்குள் இருக்கின்ற துக்கம். விஷாதம் என்பது அழுது, அதனை வெளிப்படுத்துதல்.

Downloaded from **www.omkaravidya.com**

தூக்கம், பயம், சோகம் - இவை எல்லாமே இருக்க வேண்டுமென்பதில்லை. இவற்றில் ஒன்று இருந்தாலும் போதும். அது தாமஸமான மன உறுதிதான்.

சிறிதளவு பணமோ, அழகோ இருந்தால், அதைக் குறித்து கர்வப்படுவான். ஏன் இவ்வாறு இருக்கிறான் எனில், அவன் புத்தியைச் சரியாக உபயோகப்படுத்துவதில்லை.

சாஸ்த்ரங்களையும் படிப்பதில்லை, பெரியவர்கள் சொல்வதையும் கேட்பதில்லை. கெட்ட புத்தியுடையவனாக இருக்கிறான்.

மனிதப் பிறவியில் பயன்படுத்த வேண்டிய புத்தியை, நல்ல காரியங்களுக்குச் சிறிதளவுகூட பயன்படுத்தாமல் இருக்கிறான். உறக்கம் முதலானவற்றை விடாமல் இருக்கின்றான். இந்த இடத்தில், **த்ருதி:** என்பதற்கு மனவுறுதி என்பதைக்காட்டிலும், பிடிவாதம் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறிய உறக்கம், சோகம், பயம் முதலானவற்றையும், பொருளின்ப நாட்டத்தையும் விட்டுவிட வேண்டும். மோக்ஷ மார்கத்தில் மனதைச் செலுத்த வேண்டும்.

மோக்ஷத்தை உணர விரும்புபவன், ராஜஸமான, தாமஸமான த்ருதிகளை விட்டுவிட்டு, ஸாத்விகமான த்ருதியைக் கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

सुखं त्विदानीं त्रिविधं शृणु मे भरतर्षभ ।

अभ्यासाद्रमते यत्र दुःखान्तं च निगच्छति ।। १८ - ३६ ।।

यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम् ।

तत्सुखं सात्त्विकं प्रोक्तमात्मबुद्धिप्रसादजम् ।। १८ - ३७ ।।

ஸுகம் த்விதாநீம் த்ரிவிதம் ஶ்ருணு மே பரதர்ஷப ।

அப்யாஸாத்ரமதே யத்ர து:க்காந்தம் ச நிகச்சதி ।। 18 - 36 ।।

யத்ததக்ரே விஷமிவ பரிணாமேऽம்ருதோபமம் ।

தத்ஸுகம் ஸாத்த்விகம் ப்ரோக்தமாத்மபுத்தி-

ப்ரஸாதஜம் ।। 18 - 37 ।।

பதவுரை

ஹே பரதர்ஷப! - ஓ பரத குலத்தவர்களுள் சிறந்தவனே! **இதாநீம் து** - இப்பொழுது, **த்ரிவிதம்** - மூன்றுவிதமான, **ஸுகம்** - இன்பத்தைப் பற்றி, **மே** - என்னிடமிருந்து, **ஶ்ருணு** - கேட்பாயாக! **யத்ர** - எதில், **அப்யாஸாத்** - பயிற்சியினால், **ரமதே** - இன்புறுகிறானோ, **து:க்காந்தம் ச** - துன்பத்தின் முடிவையும், **நிகச்சதி** - அடைகிறானோ, **யத் தத்** - எந்த ஒன்று, **அக்ரே** - முதலில், **விஷம் இவ** - விஷம் போன்று (கடினமாகவும்), **பரிணாமே** - முடிவில், **அம்ருத-உபமம்** - அமுதத்திற்கு நிகராக (இனிமையாகவும்), **ஆத்மபுத்தி-ப்ரஸாதஜம்** - தன்னைப் பற்றிய மெய்யறிவினால் ஏற்படும் உள்ளத்தெளிவினால் உண்டாவதுமான, **தத்** - அந்த, **ஸுகம்** - இன்பம், **ஸாத்த்விகம்** - ஸாத்விகம், **ப்ரோக்தம்** - எனப்படுகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ பரத குலத்தவர்களுள் சிறந்தவனே! இப்பொழுது, மூன்றுவிதமான இன்பத்தைப் பற்றி என்னிடமிருந்து கேட்பாயாக!

பயிற்சியினால் வளரக்கூடியது, துன்பத்திற்கு முடிவை உண்டுபண்ணுவது ஸாத்விக இன்பம். ஆரம்பத்தில் விஷம் போன்று கடினமாகவும், முடிவில் அமுதம் போன்று இனிமையாகவும் இருப்பது ஸாத்விக இன்பம். அது, தன்னைப் பற்றிய மெய்யறிவினால் ஏற்படும் உள்ளத்தெளிவினால் உண்டாவதாகும்.

விளக்கவுரை

பகவான் மூன்றுவிதமான இன்பங்களைப் பற்றிக் கூறுவதாக ப்ரதிஜ்ஞை செய்து, முதலில் ஸாத்விக இன்பத்தைப் பற்றிக் கூறுகிறார். வாழ்க்கையில் நாம் முன்னேற வேண்டுமானால், பயிற்சி என்பது மிக முக்கியம். உடல்நலத்தைக் காக்க வேண்டுமெனில், விடாமல் தொடர்ந்து உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாள்தோறும் விடாமல் ஜபம் செய்துகொண்டிருந்தால், அதனால் நமக்கு ஓர் இன்பம் கிடைக்கும்.

எந்தக் காரியத்தையும் விடாமுயற்சியுடன் தொடர்ந்து செய்துகொண்டே இருந்தால், அதனால் வரக்கூடியதுதான் ஸாத்விக இன்பம். அது மட்டுமல்ல, நன்கு துன்பத்திற்கு முடிவை ஏற்படுத்துவது ஸாத்விக இன்பம்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸாத்விக ஸுகமானது, சுலபமாக ஏற்படக்கூடியதல்ல, தொடர்பயிற்சியினால் வரக்கூடியது என்று தெரிகிறது. குறிப்பாக, ஆன்மிக வாழ்க்கையில் முயற்சியினாலும் பயிற்சியினாலும்தான் இன்பத்தை அனுபவிக்க முடியும். பயிற்சியில்லாதவனுக்கு இன்பம் கிடைக்காது.

பயிற்சியுள்ளவன், பலவிதமான துன்பங்களுக்கு முடிவை உண்டுபண்ணி விடுகிறான்.

ஆன்மிக வாழ்க்கையில் நுழைகின்றபோது, ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆரம்பத்தில் விஷம் போன்று இருக்கும், அதாவது கடினமாக இருக்கும், விட்டுவிட வேண்டும் என்று தோன்றும்.

விஷம் என்றால் விஷம் என்று அர்த்தம் அல்ல, ஆரம்பத்தில் துன்பத்தைத் தரும் என்று அர்த்தம். எதிலும் முன்னேற வேண்டுமானால், முயன்று கஷ்டப்படத்தான் வேண்டும். நாமாக முயன்று கஷ்டப்பட்டால், அது கஷ்டமாகத் தோன்றாது.

கஷ்டப்பட்டால்தான், உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும் என்ற எண்ணத்துடன் செய்தால், கஷ்டத்தை நம்மால் பொறுத்துக்கொள்ள முடியும்.

ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும், முயற்சியுடன் பயிற்சியைத் தொடர்ந்தால், நாளாக ஆக, அது அம்ருதம் போன்று, இன்பத்தைத் தருவதாக ஆகிவிடும்.

Downloaded from **www.omkaravidya.com**

முயற்சி செய்தவர்களால்தான், அந்த ஆனந்தத்தை உணர முடியும். நன்கு உடற்பயிற்சி செய்வதினால்தான், உடல் ஆரோக்யத்தின், ஆற்றலின் அருமைபெருமைகளை உணர முடியும்.

ஞானம், வைராக்யம், த்யானம், ஸமாதி ஆகியவற்றால் ஏற்படக்கூடிய இன்பமானது, அமுதத்திற்கு நிகரானது.

ஆத்மபுத்தி: என்றால் ஆத்மாவைப் பற்றிய ஞானம். அந்த ஞானத்தினால் மனதில் ஒரு தெளிவு ஏற்படும். அந்தத் தெளிவில் ஓர் இன்பம் வெளிப்படும். ஆத்மானந்தத்தின் வெளிப்பாடு அதில் தோன்றும்.

இந்த இன்பமானது, புறப்பொருளைச் சாராதது. தன்னைப் பற்றிய மெய்யறிவால், உள்ளத்தில் ஏற்படுகின்ற தெளிவால் விளைகின்ற இன்பம் ஸாத்விகமான இன்பம் என்று பெரியோர்களால் கூறப்படுகிறது.

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम् ।

परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ।। १८ - ३८ ।।

விஷயேந்த்ரியஸம்யோகாத்யத்ததக்ரேऽம்ருதோபமம் ।

பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் ।। 18 - 38 ।।

பதவுரை

யத் தத் - எந்த ஒன்று, **விஷய-இந்த்ரிய-ஸம்யோகாத்** - புலனின்பப் பொருட்கள், பொறிகளின் சேர்க்கையினால்,

Downloaded from **www.omkaravidya.com**

அக்ரே - முதலில், **அம்ருத-உபமம்** - அமுதத்திற்கு நிகராகவும், **பரிணாமே** - பிறகு, **விஷம்-இவ** - விஷம் போன்றதோ, **தத்** - அந்த, **ஸுகம்** - இன்பம், **ராஜஸம்** - ராஜஸமாக, **ஸ்ம்ருதம்** - கருதப்படுகிறது.

பொழிப்புரை

புலனின்பப் பொருட்கள், பொறிகள் ஆகியவற்றின் சேர்க்கையினால் உண்டாவது ராஜஸ இன்பம். அது முதலில் அமுதத்திற்கு நிகராக இன்பத்தைத் தருவதாகவும், பிறகு விஷம் போன்று துன்பத்தைத் தருவதாகவும் இருக்கிறது.

விளக்கவுரை

பகவான் இந்த ச்லோகத்தில், ராஜஸ இன்பத்தை வர்ணிக்கிறார்.

விஷயம் என்றால், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐம்புலன்கள். இந்த்ரியம் என்றால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள்.

இந்த்ரியங்களுக்கும் இந்த்ரிய விஷயங்களுக்கும் ஏற்படுகின்ற தொடர்பால் தோன்றும் இன்பம் ராஜஸமானது. அது ஆரம்பத்தில், அமுதம் போன்று இன்பமாக இருக்கும்.

ஒரு புலனின்பத்தை அனுபவிக்கும்போது, அம்ருதம் போன்று, கிடைக்காத ஒரு விஷயம் என்று நினைத்து இன்பமாக உணர்கிறோம். ஆனால், பிறகு நோயாக, மனதை

Downloaded from **www.omkaravidya.com**

அலைக்கழிக்கக்கூடியதாக, புலனின்பங்களையே நினைத்து ஏங்கக்கூடிய தன்மை உடையதாக, அது வடிவெடுக்கிறது.

மனமானது, புலனின்பங்களுக்கு அடிமையாகிவிடுகிறது. புலனின்பத்தை அனுபவிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எவ்வளவு புலனின்பங்களை அனுபவித்தாலும், த்ருப்தி வருவதில்லை. புலனின்பங்களை விட முடிவதில்லை.

பெரியவர்கள், அது வேண்டாம் என்று சொன்னாலும், அவற்றிலுள்ள குறைபாடு நமக்கு விளங்கினாலும், அவற்றை விட முடிவதில்லை. அவ்வளவு தூரத்திற்கு அவை நம்மை அடிமைப்படுத்தி விடுகின்றன.

ஆக, புலன்நுகர்ச்சியால் நாம் அடைவது ராஜஸ இன்பம். அது இன்பமாகத் தொடங்கி, துன்பத்தில் முடிகிறது.

இந்த ராஜஸ இன்பமானது, நம்முடைய உடல் வலிமை, மன வலிமை, அழகு, அறிவு, நினைவாற்றல், செல்வம், உற்சாகம் அனைத்தையும் அழித்துவிடுகிறது. அது மட்டுமல்ல, நம்மைத் தவறு செய்யத் தூண்டுகிறது. அதனால் நரகத்தை அடைய நேரிடுகிறது. இது விஷம் போன்ற துன்பத்தைத் தருகிறது என்று ஆதிசங்கரர் வர்ணிக்கிறார்.

ராஜஸ இன்பத்தை அறிந்து, அதனை விட்டுவிடுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். உயர்ந்த ஸாத்விக இன்பத்தை அடைவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

यदग्रे चानुबन्धे च सुखं मोहनमात्मनः ।

निद्रालस्यप्रमादोत्थं तत्तामसमुदाहृतम् ।। १८ - ३९ ।।

यதக்ரே சாநுபந்தே ச ஸுகம் மோஹநமாத்மந: ।

நித்ராலஸ்யப்ரமாதோத்தம் தத்தாமஸமுதாஹ்ருதம் ।। 18 - 39 ।।

பதவுரை

யத் - எது, **நித்ரா-ஆலஸ்ய-ப்ரமாத-உத்தம்** - உறக்கம், சோம்பல், கவனக்குறைவு ஆகியவற்றிலிருந்து எழுகிறதோ, **அக்ரே ச** - முதலிலும், **அநுபந்தே ச** - முடிவிலும், **ஆத்மந:** - தன்னுடைய மனதை, **மோஹநம்** - மயக்குகிறதோ, **தத்** - அந்த, **ஸுகம்** - இன்பம், **தாமஸம்** - தாமஸமாக, **உதாஹ்ருதம்** - சொல்லப்படுகிறது.

பொழிப்புரை

உறக்கம், சோம்பல், கவனக்குறைவு ஆகியவற்றிலிருந்து எழுவது மற்றும் முதலிலும் முடிவிலும் மனதை மயக்குவது தாமஸ இன்பம் என்று சொல்லப்படுகிறது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், தாமஸ இன்பத்தைப் பற்றிக் கூறுகிறார்.

இன்பத்தை அனுபவிக்கிறோம் என்பதே தெரியாமல் இருப்பது தாமஸ இன்பம். இதனைப் புரிந்துகொள்வது சற்று கடினம். உயர்ந்த ஸமாதியில் இருப்பவருக்கும், ஸமாதியில் அனுபவிக்கின்ற இன்பம் தெரியாது. ஆனால் ஸமாதிக்காக

Downloaded from **www.omkaravidya.com**

த்யான பயிற்சியை மேற்கொள்ளும்போது, அந்த இன்பம் தெரியும்.

தாமஸ இன்பம், மனதை மயக்கக் கூடியது. தன்னை மறக்கடிக்கின்ற இன்பம் நல்லதல்ல. ஸமாதி இன்பம் என்பது வேறு விஷயம்.

தாமஸ இன்பத்தில், தொடக்கத்திலும் முடிவிலும் இடையிலும் இதனை அனுபவிப்பதே தெரியாது. மனதுடன் தொடர்புடையவன்தான் ஜீவன். ஆனால் ஜீவனுக்கு இன்பம் அனுபவிப்பதே தெரியாது.

உறக்கம், சோம்பேறித்தனம், செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் இருத்தல், கவனக்குறைவுடன் அலக்ஷ்யமாக இருத்தல் ஆகியவற்றால் விளைவது தாமஸ இன்பம்.

இத்தகைய இன்பத்தில் இருப்பவன் உண்பான், உறங்குவான், கதை பேசி நேரத்தை வீணடிப்பான். ஆனால் சமூகத்திற்கு உருப்படியாக ஒரு காரியத்தையும் செய்ய மாட்டான்.

வாழ்க்கையை மதிக்காமல், வாழ்க்கையைப் பற்றிய அறிவே இல்லாமல் வாழ்பவன் இவன். வாழ்க்கையை மதித்து, புரிந்து வாழ்பவர்களையும் இவன் கேலி பேசுவான்.

பொறுப்பில்லாமல் வாழ்தல், பெரியோர்களை அவமதித்தல் போன்றவற்றில் இவனுக்கு இன்பம் கிடைக்கிறது. அது அல்பமான, போலியான இன்பம்.

Downloaded from **www.omkaravidya.com**

உண்மையை அறியவொட்டாமல் மயக்குகின்ற இந்த இன்பத்தை நாம் விலக்க வேண்டும்.

தூங்க வேண்டிய நேரத்தில், தூங்க வேண்டும். சோம்பேறித்தனம் கூடாது. உலகியல் கடமைகளையும் வைதிக கடமைகளையும் பொறுப்பாகச் செய்ய வேண்டும். சாஸ்த்ர விதிகளை மீறி ஒரு நாளும் நடக்கக் கூடாது. பெரியோர்களின் வார்த்தைகளை மதித்து நடக்க வேண்டும். தேவையில்லாமல் நேரத்தை வீணடிக்கக் கூடாது.

உருப்படியாக எதுவும் செய்யாமல், வாழ்க்கையை வீணடிப்பது தர்மமாகாது என்பதை இந்த ச்லோகம் உணர்த்துகிறது.

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।

सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात्त्रिभिर्गुणैः ।। १८ - ४० ।।

न ततस्ति प्रुतिव्यां वा तिवि तेवेषू वा पुनः ।
सत्त्वं प्रक्रुतिजैर्मुक्तं यतेपिः स्यात्त्रि-
पिर्कुणैः ।। 18 - 40 ।।

பதவுரை

யத் - எது, **ப்ரக்ருதிஜை:** - ப்ரக்ருதியிலிருந்து தோன்றுகின்ற, **ஏபி:** - இந்த, **த்ரிபி:** - மூன்று, **குணை:** - குணங்களிலிருந்து, **முக்தம் ஸ்யாத்** - விடுபட்டதாக இருக்குமோ, **தத்** - அந்த, **ஸத்த்வம்** - பொருள், **ப்ருதிவ்யாம் வா** - மண்ணுலகிலோ, **புந:** - மேலும், **திவி** - விண்ணிலோ, **தேவேஷு வா** - தேவர்கள் இடையிலோ, **ந அஸ்தி** - இல்லை.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ப்ரக்ருதியிலிருந்து தோன்றுகின்ற இந்த மூன்று குணங்களிலிருந்து விடுபட்ட பொருள், மண்ணுலகிலோ, விண்ணிலோ, தேவர்கள் இடையிலோ இல்லை.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், பகவத்கீதா சாஸ்த்ரத்தை பூர்த்தி செய்யத் தொடங்குகிறார்.

பூலோகம், பூமியிலுள்ள உள்ள மனிதர்கள், மற்ற எல்லா உயிர்கள், விஷயங்கள், அதைப் போன்று தேவலோகத்திலுள்ள தேவர்கள், பிற விஷயங்கள் - உயிருள்ள, உயிரற்ற இவை அனைத்திலுமே, இந்த மூன்று குணங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு பொருளும் இல்லை.

ச்லோகத்திலுள்ள **ஸத்த்வம்** என்ற சொல்லுக்கு, பொருள் என்று அர்த்தம்.

ஏற்கெனவே பகவான் கூறினார் -

த்ரிபிர் குணமயை: பாவை: ஏபி: ஸர்வமிதம் ஜகத் । 7 - 13

இந்த மூன்று குணங்களால் ஆனவைதான் அனைத்தும். இந்த மூன்று குணங்களிலிருந்து விடுபட்ட பொருள் என்று எதுவும் இல்லை.

இந்த ப்ரபஞ்சம் முழுவதும் குணாத்மகம். அறிபவனுடைய உடல், மனம் உட்பட அனைத்துமே மூன்று குணங்களால்

Downloaded from **www.omkaravidya.com**

ஆனவை. இவற்றைப் பற்றி விரிவாக பகவான் 14 ஆவது அத்யாயமான குணத்ரய விபாக யோகத்திலேயே கூறினார்.

ந ஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।
கார்யதே ஹ்யவஸ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை: ।। 3 - 5 ।।

ப்ரக்ருதியின் குணங்களால் தூண்டப்பட்டு நாம் அனைவரும் செயல்புரிகிறோம் என்றும் பகவான் கூறினார்.

ப்ரபஞ்சம் குணமயம். ஆனால் ஆத்மா அல்லது பரம்பொருள், நிர்குணமானது, குணங்களைக் கடந்தது, குணங்களுக்கு அப்பாற்பட்டது என்ற கருத்தையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परन्तप ।

कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ।। १८ - ४१ ।।

ப்ராஹ்மணக்ஷத்ரியவிஶாம் ஶூத்ராணாம் ச பரந்தப ।
கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவப்ரபவைர்குணை: ।। 18 - 41 ।।

பதவுரை

ஹே பரந்தப! - ஓ எதிரிகளை வாட்டுபவனே! **ப்ராஹ்மண-க்ஷத்ரிய-விஶாம்** - ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர்களுக்கும், **ஶூத்ராணாம் ச -** சூத்ரர்களுக்கும், **ஸ்வபாவ-ப்ரபவைர்-குணை:** - தங்களது இயல்பிற்கேற்ற குணங்களின்படி, **கர்மாணி** - கர்மங்கள், **ப்ரவிபக்தாநி** - விதிக்கப்பட்டுள்ளன.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ எதிரிகளை வாட்டுபவனே! ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர், சூத்ரர் ஆகியோருக்கு, தங்களது இயல்பிற்கேற்ற குணங்களின்படி, கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், வர்ணங்களுடைய பெயர்கள், குணங்கள், கர்மங்கள் ஆகியவற்றைப் பற்றி இங்கு உபதேசிக்கிறார்.

வர்ணதர்மம் என்பது, இந்தக் காலத்திற்குப் பொருந்தாது என்று பெரும்பாலானவர்களால் கருதப்படுகிறது. இது மனிதர்களுக்கிடையே வேற்றுமை உணர்ச்சிகளை வளர்க்கிறது என்று நினைக்கிறார்கள்.

ஆனால், இது விஷயமாக, சாஸ்த்ரம் என்ன சொல்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளத்தான் வேண்டும்.

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ: । 4 - 13

குணங்களின் அடிப்படையிலும், கர்மங்களின் அடிப்படையிலும் நான்கு வர்ணங்களை, தாம் படைத்ததாக பகவான் முன்பு கூறினார்.

வர்ணம் என்றால் தொழிற்குழு என்று அர்த்தம். அதனைப் பிறப்பின் அடிப்படையில் வைத்தால் தரம் கூடும் என்பது ஒரு நம்பிக்கை. அதில் சில உண்மைகள் இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், சமூகத்தில்

Downloaded from **www.omkaravidya.com**

வேற்றுமை உணர்ச்சிகள் வளர்வதால், அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளது. இருந்தபோதிலும், பல குழப்பங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

பகவான் இந்த விஷயத்தைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதைத் திறந்த மனதுடன் பார்க்க வேண்டும். மனதில் பல அபிப்ராயங்களை வைத்துக்கொண்டு, இதைப் படிக்கக் கூடாது.

அவரவர்களுக்கு இயல்பாக இருக்கக்கூடிய குணங்களைக்கொண்டு, ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்கள், சூத்ரர்கள் என சமூகத்தில் நான்கு தொழிற்குழுக்கள் பொதுவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் சாஸ்த்ரங்களால் செயல்கள் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர், சூத்ரர் என்பது, தமிழில் முறையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று சொல்லப்படும்.

இந்தச் சொற்களில், இது உயர்ந்த சொல், இது தாழ்ந்த சொல் என்று நாம் கற்பனை செய்து, சமூகத்தில் தவறான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளக் கூடாது.

பரம்பரை பரம்பரையாக இருக்கக்கூடிய இயல்புகள், குணங்கள் ஆகியவற்றைப் பொருத்து, செயல்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

Downloaded from **www.omkaravidya.com**

ஸத்வகுணம் மேலோங்கி, அதற்குக் கீழ் ரஜஸ், தமோ குணங்களுடன் கூடியவர் ப்ராஹ்மணர்.

ரஜோகுணம் மேலோங்கி, அதற்குக் கீழ் ஸத்வ, தமோ குணங்களுடன் கூடியவர் க்ஷத்ரியர்.

ரஜோகுணம் மேலோங்கி, அதற்குக் கீழ் தமஸ், ஸத்வ குணங்களுடன் கூடியவர் வைச்யர்.

தமோகுணம் மேலோங்கி, அதற்குக் கீழ், ரஜஸ், ஸத்வ குணங்களுடன் கூடியவர் சூத்ரர்.

சமூகத்தின் அமைதியை முன்னிட்டு, குணங்களின் அடிப்படையில், இவ்வாறு தொழிற்குழுக்கள் சாஸ்த்ரங்களால் உபதேசிக்கப்பட்டுள்ளன.

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।

ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ।। १८ - ४२ ।।

ஶமோ தமஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச ।

ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம

ஸ்வபாவஜம் ।। 18 - 42 ।।

பதவுரை

ஶம: - மனக்கட்டுப்பாடு, **தம:** - புலனடக்கம், **தப:** - தவம், **ஶௌசம்** - தூய்மை, **க்ஷாந்தி:** - பொறுமை, **ஆர்ஜவம் ஏவ ச** - நேர்மை, **ஜ்ஞாநம்** - சாஸ்த்ரங்களைக் கற்றல், **விஜ்ஞாநம்** - பெற்ற ஞானத்தை ஆழ்மனதில் நிலைநிறுத்துதல், **ஆஸ்திக்யம்**

Downloaded from **www.omkaravidya.com**

- சாஸ்த்ரங்களில் பரமச்ரத்தையுடன் இருத்தல், **ஸ்வபாவஜம்** - இயல்பாக ஏற்பட்ட, **ப்ரஹ்மகர்ம** - அந்தணருடைய கர்மங்கள் (குணங்கள்).

பொழிப்புரை

மனக்கட்டுப்பாடு, புலனடக்கம், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, சாஸ்த்ரங்களைக் கற்றல், பெற்ற ஞானத்தை ஆழ்மனதில் நிலைநிறுத்துதல், சாஸ்த்ரங்களில் பரமச்ரத்தையுடன் இருத்தல் ஆகியவை இயல்பாக ஏற்பட்ட அந்தணருடைய கர்மங்கள் (குணங்கள்).

விளக்கவுரை

இந்த ச்லோகமானது, அந்தணருக்கு இயல்பாக இருக்க வேண்டிய செயல்களைக் கூறுகிறது.

பரம்பரை பரம்பரையாக, அந்தணர்களுக்கு, பெரியோர்களிடமிருந்து இவை வருகின்றன. அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலை, கற்கின்ற கல்வி, எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றால் இயல்பாகவே இவை அமைகின்றன. அவர்கள் ஆங்காங்கே குழுக்களாக இருந்து வாழ்வார்கள்.

சமூகத்திற்கு நன்மை செய்வதுதான் இந்த அமைப்பின் நோக்கமே தவிர, சமூகத்தில் உயர்வு தாழ்வு மனப்பான்மைகளை உருவாக்குவதோ, தவறான எண்ணங்களைப் பரப்புவதோ நோக்கமல்ல.

Downloaded from **www.omkaravidya.com**

இது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதால், சமூகத்தில் நிறைய குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பொதுவாக, அந்தணர்களுக்கு இயல்பாக இருக்க வேண்டிய பண்புகள் - வேதங்களைக் கற்றல், கற்பித்தல், வேள்விகளைச் செய்தல், செய்து வைத்தல் (பிறர் வேள்விகளைச் செய்வதற்கு உதவிபுரிதல்), பொருளை வழங்குதல், ஏற்றுக்கொள்ளுதல்.

அறுதொழிலோர் (திருக்குறள் - 560)

என்று திருவள்ளுவரும் கூறுகிறார்.

அத்யயனம் (ஓதுதல்), அத்யாபனம் (ஓதுவித்தல்), யஜனம் (வேட்டல்), யாஜனம் (வேட்டுவித்தல்), தானம் (வழங்குதல்), ப்ரதிக்ரஹம் (பெறுதல்) ஆகியவற்றை அந்தணர்களின் கர்மங்கள் என்று பொதுவாகக் கூறுவர்.

இங்கு பகவான் சற்று வித்யாஸமாகக் கூறுகிறார்.

ஶம: என்றால் எண்ணங்களில் கட்டுப்பாடு. தரமான, ஆரோக்யமான, சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடிய, வலிமை மிக்க உயர்ந்த எண்ணங்கள்தான் மனதில் இருக்க வேண்டும்.

புலனின்பங்களை அதிகமாக அனுபவிப்பதற்கு, அந்தணருக்கு சாஸ்த்ரம் உரிமை கொடுப்பதில்லை. புலனடக்கப் பயிற்சி மிக முக்கியம்.

ப்ராஹ்மணஸ்ய து தேஹோயம் ந உபபோகாய கல்பதே ।
இஹ க்லேஶாய மஹதே ப்ரேத்ய அநந்தஸுகாய ச ।।

Downloaded from **www.omkaravidya.com**

இதன் பொருள் - புலனின்பங்களை அனுபவிப்பதற்காக, அந்தணனுக்கு மனித உடல் கொடுக்கப்படவில்லை. இந்த உலகில், மிகுந்த முயற்சி செய்து, சமூகத்திற்கு அத்ருஷ்டமான சக்திகளை வாரி வழங்க வேண்டும். சமூகத்திற்கு நல்ல கருத்துகளைக் கொடுத்து, சமூகத்தின் நன்மையையும் அமைதியையுமே அவன் ப்ரார்த்தித்து வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால், இந்த உடலை உகுத்த பிறகு, அவனுக்கு மிகுந்த இன்பம் கிடைக்கும்.

எல்லோருக்கும் இருப்பது மனித உடல்தான். ஆனால், பழக்கவழக்கங்களை வைத்துத்தான், மனித உடலில் வாழ்கின்ற அந்த உயிரை பார்ப்பனன், அந்தணன் என்று சொல்கிறோம்.

அந்தணன் தவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அவனுக்கு நிறைய வ்ரதங்கள் விதிக்கபட்டுள்ளன. **அநஶநம் தப:** என்றும், **காயக்லேஶ: தப:** என்றும் கூறுவர். உணவில் கட்டுப்பாடு, பேச்சில் கட்டுப்பாடு, சாஸ்த்ரப்படி உடலை வருத்திக்கொள்ளுதல் ஆகியவை தவம் எனப்படும்.

அந்தணன் எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தபக்ஷம் மூன்று முறை நீராட வேண்டும்.

கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பதற்கிணங்க, எளிமையாக இருந்தாலும், தூய்மையாக இருக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அந்தணன் மிகுந்த பொறுமையுடன் இருக்க வேண்டும். சமூகத்தில் பலதரப்பட்ட மக்களின் ஏச்சுபேச்சுகள், குளிர், வெப்பம் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் நேர்க்கோட்டில் இருப்பது **ஆர்ஜவம்** எனப்படும். நேர்மையாக இருக்க வேண்டும்.

குருவின் வழிகாட்டுதலுடன் சாஸ்த்ரங்களின் உட்கருத்தைப் புரிந்துகொள்வது **ஜ்ஞானம்** எனப்படும். **விஜ்ஞானம்** என்றால், பெற்ற ஞானத்தை ஆழமான மனதில் பதிய வைத்துக்கொள்ளுதல் என்று பொருள்.

ஆஸ்திக்யம் என்றால், சாஸ்த்ரங்களில் பரிபூர்ண ச்ரத்தை வைத்தல் என்று பொருள். சாஸ்த்ரங்கள், பெரியோர்கள் கூறியருப்பவை பொய் அல்ல. அவை நமக்கும் சமூகத்திற்கும் மிகுந்த நன்மையைத் தரக்கூடியவை என்ற ஆழ்ந்த எண்ணம் இருக்க வேண்டும்.

சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள், கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாதவை. ஆனால், அவை தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நன்மை செய்யக்கூடியவை.

சாஸ்த்ரத்தை, அறிவைத் தரும் கருவியாக முழுமையாக ஏற்றுக்கொண்டு, அதன்படி எண்ணங்களையும் சொற்களையும் செயல்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும். ஆஸ்திக்யம் எனப்படும் முழுமையான ச்ரத்தைதான், அனைத்து

Downloaded from **www.omkaravidya.com**

குணங்களுக்கும் அடிப்படை. அது இருந்தால்தான் பிற பண்புகளைக் கடைப்பிடிக்க முடியும்.

இதில் கூறப்பட்டுள்ள பண்புகள் அனைத்துமே கீதையின் பல்வேறு அத்யாயங்களில் முன்பு கூறப்பட்டவைதான்.

இந்தப் பண்புகள், பொதுவாக எல்லோரிடத்திலும் இருக்கலாம். அந்தணனிடத்தில் மிக முக்கியமாக இருக்க வேண்டும் என்று ப்ராஹ்மண தர்மமாக பகவான் இதைக் கூறியிருக்கிறார்.

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।

दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ।। १८ - ४३ ।।

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ।। 18 - 43 ।।

பதவுரை

ஶௌர்யம் - சூரத்தன்மை, **தேஜ:** - மேலோங்கி இருக்கும் தன்மை, **த்ருதி:** - உறுதி, **தாக்ஷ்யம்** - நெருக்கடியான நேரத்திலும் முடிவு எடுத்து, திறம்பட செயல்களைச் செய்து, தைர்யமாக வழிநடத்திச் செல்லுதல், **யுத்தே ச அபி** - போரில், **அபலாயநம்** - புறமுதுகிட்டுச் செல்லாமலிருத்தல், **தாநம்** - தானம், **ஈஶ்வரபாவ: ச -** அனைவரையும் ஆளும்தன்மை, **ஸ்வபாவஜம்** - இயல்பாக ஏற்பட்ட, **க்ஷாத்ரம்** - க்ஷத்ரியர்களின், **கர்ம** - செயல்கள் (குணங்கள்).

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

சூரத்தன்மை, மேலோங்கி இருக்கும் தன்மை, உறுதி, நெருக்கடியான நேரத்திலும் முடிவு எடுத்து, திறம்படச் செயல்களைச் செய்து, தைர்யமாக வழிநடத்திச் செல்லுதல், போரில் புறமுதுகிட்டுச் செல்லாமலிருத்தல், தானம், அனைவரையும் ஆளும்தன்மை ஆகியவை இயல்பாக ஏற்பட்ட, க்ஷத்ரியர்களின் செயல்கள் (குணங்கள்).

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், க்ஷத்ரியனின் தர்மங்களைக் கூறுகிறார்.

சிறிதுகூட சோர்வில்லாமல் தொடர்ந்து செயலாற்றுதல் சூரத்தன்மை எனப்படும். ஒருபொழுதும் பின்வாங்காமல், மேலோங்கியிருத்தல் **தேஜ:** எனப்படும்.

தலைமைப் பண்புகளுள் இது தலையாயது. சமூகத்தில் கருத்துகளை ஆணித்தரமாக, அழுத்தமாக எடுத்துச் சொல்வதற்கு இந்தப் பண்பு தேவை.

தன்னைப் பெரிதாகக் காட்டிக்கொள்வது இங்கு நோக்கமல்ல, சமூகத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட வேண்டும்.

சுயநலம், புகழ் போன்றவற்றுக்காக அல்லாமல், நல்ல காரியம் நடக்க வேண்டும், தர்மம் மேலோங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் முன்நிற்க வேண்டும். அதுதான் **தேஜ:** என்ற

Downloaded from **www.omkaravidya.com**

சொல்லால் குறிக்கப்படுகிறது. தர்மத்திற்காக உழைப்பதற்கு நான், நான் என்று முன் வர வேண்டும்.

அது மட்டுமல்ல, தலைமைப் பண்புள்ளவன், எல்லோரையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அந்த அளவுக்கு அவனுக்கு தவ வலிமையும், சொற்களில் ஆற்றலும், செயல்களில் தூய்மையும், இறைவனுடைய அருளும் இருக்க வேண்டும்.

தேஜ: என்பது உடலில் தோன்றும் ஒளியல்ல. அதற்கு, **ப்ராகல்ப்யம்** - மேலோங்கியிருத்தல் என்று பொருள்.

திருவள்ளுவர், **அவை அஞ்சாமை** என்றோர் அதிகாரமே அருளியிருக்கிறார்.

தளர்வடையாத உறுதி வேண்டும். எத்தனைவிதமான தாக்குதல்கள் வந்தாலும், தன்னைச் சுற்றியிருப்பவர்களே தாக்கினாலும், பகைவர்கள் தாக்கினாலும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்.

பெரியோர்கள் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், செல்வம் வந்தாலும் போனாலும், மரணம் எப்பொழுது வந்தாலும் தன்னுடைய கொள்கையை விட்டுக் கொடுக்காமல் இருக்கின்ற ஒரு குணம் வேண்டும். செயல்களில் உறுதியாக இருக்கின்ற தன்மை வேண்டும்.

தாக்ஷ்யம் என்றால், ஓர் இக்கட்டான சூழ்நிலையில் எப்படிச் செயல்புரிய வேண்டும் என்ற ஸாமர்த்யத்துடன், திறமையுடன் செயல்புரிதல்.

Downloaded from **www.omkaravidya.com**

போர்களின்போது, தாக்குதல்கள் எப்படி, எந்த வடிவத்தில் வரும் என்று தெரியாது. ஒரு வழி இல்லையென்றால், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று பல வழிமுறைகளைச் சிந்தித்து வைத்திருப்பார்கள். இப்படிப்பட்ட திறமைக்கு **தாக்ஷ்யம்** என்று பெயர், இதனை உடையவன் **தக்ஷ:** எனப்படுவான்.

போரில் பின்வாங்காமல், எதிரியைச் சென்று அடிக்க வேண்டும். புறமுதுகிட்டு ஓடாமல், தொடர்ந்து முன் நின்று தாக்குகின்ற வீரத்தைப் பற்றி, தமிழ்நூல்களில் நிறைய குறிப்புகள் உள்ளன.

செல்வந்தர்களிடமிருந்து செல்வத்தைப் பெற்று, அதனைத் தேவைப்படுபவர்களுக்கு மனமுவந்து, பொறுப்பாக வழங்க வேண்டும்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. (திருக்குறள் - 385)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

தானம் என்பது அரசனுக்கு ஒரு முக்கியமான தர்மமாகும்.

இறைவன் தனக்கு இந்தத் தலைமைப் பொறுப்பை அருளியிருக்கிறார் என்ற எண்ணத்துடன், பொறுப்புணர்வுடன் தலைவன் செயலாற்ற வேண்டும்.

திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே

என்று ஆழ்வார் பாடுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்தப் பண்புகள் அனைத்தும் க்ஷத்ரியனுக்கு பரம்பரை பரம்பரையாக, ஸ்வபாவமாக வர வேண்டும். ஒரே நாளில் இவற்றை வளர்த்துக்கொள்ள முடியாது.

தலைமுறைகள் தோறும், இந்தப் பண்புகளைப் பண்படுத்திக்கொண்டு வர வேண்டும்.

कृषिगौरक्ष्यवाणिज्यं वैश्यकर्म स्वभावजम् ।

परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम् ।। १८ - ४४ ।।

க்ருஷிகௌரக்ஷ்யவாணிஜ்யம் வைஶ்யகர்ம ஸ்வபாவஜம் ।
பரிசர்யாத்மகம் கர்ம ஶூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம் ।। 18 - 44 ।।

பதவுரை

க்ருஷிகௌரக்ஷ்யவாணிஜ்யம் - விவசாயம், பசுக்களைப் பராமரித்தல், வாணிகம் செய்தல், **ஸ்வபாவஜம்** - இயல்பினால் ஏற்பட்ட, **வைஶ்யகர்ம -** வைச்யரின் செயல்கள். **ஶூத்ரஸ்ய ஆபி** - சூத்ரருக்கோ, **பரிசர்யாத்மகம்** - உதவி வடிவான செயலை, **கர்ம** - செய்தல், **ஸ்வபாவஜம்** - இயல்பாக ஏற்பட்டது.

பொழிப்புரை

விவசாயம், பசுக்களைப் பராமரித்தல், வாணிகம் செய்தல் - இவை இயல்பினால் ஏற்பட்ட வைச்யரின் செயல்கள். உதவி வடிவான செயல்கள் சூத்ரருக்கு இயல்பாக ஏற்பட்டவை.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் இந்த ச்லோகத்தில் வைச்யர்களுடைய தர்மங்களையும் சூத்ரர்களுடைய தர்மங்களையும் உபதேசிக்கிறார்.

அனைவரும் தர்மத்திற்குள் அடங்கியிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருடைய தொழிலும், சமூகத்தின் ஒவ்வோர் அம்சமாக இருக்கின்றது. நம் உடல் முழுவதும் இருக்கக்கூடிய அம்சங்களை வைத்துத்தான் வேதமே சொல்கிறது.

ப்ராஹ்மணோ5ஸ்ய முகமாஸீத் । பாஹூராஜந்ய: க்ருத: ।

ஊரு ததஸ்ய யத்வைச்ய: । பத்ப்யாம் ஶூத்ரோ அஜாயத ।

அந்தணர் விராட்புருஷனின் முகத்திலிருந்தும், க்ஷத்ரியர் கைகளிலிருந்தும், வைச்யர் தொடைகளிலிந்தும், சூத்ரர் கால்களிலிருந்தும் தோன்றினர் என்று வேதம் கூறுகிறது.

கால் இல்லாமல் நாம் ஒரு செயலையும் செய்ய முடியாது. இவர்கள் எல்லோருமே சமூகத்தின் அவயவங்களாக, உறுப்புகளாக விளங்குகிறார்கள்.

உழவுத் தொழில், பசுமாடுகளைப் பாதுகாத்தல், பொருட்களை விற்று வணிகம் செய்தல் ஆகியவை வைச்யருடைய தர்மங்களாகும்.

உழவுத் தொழிலும், பசுக்களைப் பராமரித்தலும், பாரத தேசத்தின் மிக உயர்ந்த தர்மங்களாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (திருக்குறள் -120)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

பிறர் பொருளை, தம் பொருள்போல் கருதுதல் உயர்ந்த வாணிக முறையாகும்.

பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுசேர்த்தல், பொருட்களை விற்றல் போன்ற பல அம்சங்கள் இதில் உள்ளன. இவற்றில் பல பிரிவினர் உள்ளனர்.

இங்கு பகவான், பொதுவாகத்தான் கூறுகிறார். ஒவ்வொரு தொழிற்குழுவிலும் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளன.

அந்தணர், அரசர், வணிகர் ஆகியோருக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ, அவற்றைச் செய்து கொடுப்பது சூத்ரர்களுடைய தர்மமாகும்.

இன்று, பெரும்பாலான வேலைகளைச் செய்வதற்கு கருவிகள் வந்துவிட்டன. இதனை நாம் சிந்தித்துப் பார்த்துப் புரிந்துகொள்ளலாம்.

பொதுவாக, சமூகத்தில் இந்த நால்வருடைய தேவையும் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான திறமைகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு, அவர்கள் சமூகத்திற்கு சேவை செய்கிறார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

அவர்கள் பெறுவது குறைவு, சமூகத்திற்கு வழங்குவது அதிகம். வழங்குவதாலேயே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்கிறார்கள்.

தேவாந் பாவயதாநேந தே தேவாந் பாவயந்து வ: ।
பரஸ்பரம் பாவயந்த: ஸ்ரேய: பரமவாப்ஸ்யத ।। 3 - 11 ।।

நீங்கள் தேவர்களுக்கு வழங்குங்கள், தேவர்கள் உங்களுக்கு வழங்குவார்கள் என்று பகவான் கூறினார். இதன் பொருள் என்னவென்றால், நாம் சமூகத்திற்கு வழங்க வேண்டும். அப்படிச் செய்தால், சமூகம் நம்மைப் பார்த்துக்கொள்ளும்.

நாம் யாருமே சுயநலமாக இருக்கக்கூடாது. எல்லோரும் சமூக நலத்தையே சிந்தித்தால், ஒவ்வொருவருடைய நலமும் அதில் அடங்கிவிடும். இதை யாரும் மறுக்க முடியாது.

சுயநலத்துடன் பொருளைச் சார்ந்த வாழ்க்கையல்ல, அறத்தைச் சார்ந்த, ஆண்டவனைச் சார்ந்த, சமூகத்தின் அமைதியைச் சார்ந்த வாழ்க்கையே மேலானது என்று பகவத்கீதை, திருக்குறள் போன்ற பல நூல்கள் நமக்குக் காட்டிக் கொடுக்கின்றன.

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।

स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ।। १८ - ४५ ।।

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ।
ஸ்வகர்மநிரத: ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு ।। 18 - 45 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஸ்வே ஸ்வே - அவரவருக்குரிய, **கர்மணி** - கடமையில், **அபிரத:** - உற்சாகத்துடன் ஈடுபடுகின்ற, **நர:** - மனிதன், **ஸம்ஸித்திம்** - வெற்றியை (நிறைவை), **லபதே** - அடைகிறான். **ஸ்வகர்மநிரத:** - தன்னுடைய கடமையை முறையாகச் செய்பவன், **யதா** - எவ்வாறு, **ஸித்திம்** - வெற்றியை (நிறைவை), **விந்ததி** - அடைகிறானோ, **தத்** - அதனை, **ச்ருணு** - கேட்பாயாக.

பொழிப்புரை

தனக்குரிய கடமையில், உற்சாகத்துடன் ஈடுபடுகின்ற மனிதன் வெற்றியை, அதாவது நிறைவை அடைகிறான். தன்னுடைய கடமையை முறையாகச் செய்பவன், எவ்வாறு வெற்றியை, நிறைவை அடைகிறான் என்பதை என்னிடமிருந்து கேட்பாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் அவரவர்கள் அவரவர்களின் கடமைகளை, ச்ரத்தாபக்தியுடன், சமூகத்தில் பொறுப்புணர்ச்சியுடன் விருப்பு வெறுப்பில்லாமல் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

நர: என்றால் மனித உடலில் வாழக்கூடிய ஜீவன் என்று பொருள். எந்தச் சூழ்நிலையில் தனக்குப் பிறப்பானது, வாய்ப்பானது அமைந்திருக்கிறதோ, அங்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை முறையாகச் செய்ய வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

மரபுரீதியான தர்மங்களில், தொழிலைத் தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பு மனிதர்களுக்குத் தரப்படவில்லை. தொழிலைத் தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பைக் கொடுத்தால், நிறைய குழப்பங்கள் வரும். அது ஓர் அமைப்பு. தற்போதுள்ள அமைப்புடன், அதனை நாம் ஒப்பிட்டுப் பார்த்தாலும், இதிலும் எத்தனையோ குழப்பங்கள் இருக்கின்றன என்பது விளங்கும்.

படிப்பு, தொழில், பொருளை ஸம்பாதித்தல், பொருளைப் பாதுகாத்தல் என எல்லாவற்றிலும் நிறைய குழப்பங்கள் உள்ளன. இன்றைய காலக்கட்டத்தில், ஆசைகள், தேவைகள் அதிகமாகிவிட்டன.

மனிதன் உண்மையிலேயே நிம்மதியாக இருக்கிறானா என்று ஒவ்வொருவரும் தன்னையே கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

ஓர் அழகான வாழ்க்கைமுறையை பகவான் இங்கு உபதேசித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள கர்மங்களை ஆசையுடன், ஈடுபாட்டுடன், மனமகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். அவ்வாறு செய்பவன், வாழ்க்கையில் வெற்றியடைகிறான்.

அமைதி, ஆனந்தம், ஸந்தோஷம், நிறைவு, த்ருப்தி - இவையே வெற்றி. கடவுள் நமக்கு இட்ட கட்டளைப்படி, விருப்பு வெறுப்பில்லாமல் செயல்புரிந்தோம்,

Downloaded from **www.omkaravidya.com**

ஆண்டவனுடைய கட்டளைப்படி வாழ்ந்தோம் என்ற மனநிறைவு ஏற்படும்.

ஸ்வகர்ம-நிரத: என்றால், தன்னுடைய கடமைகளை எப்பொழுதும் ஆசையுடன், மகிழ்ச்சியுடன், உற்சாகத்துடன் செய்பவன் என்று பொருள். அத்தகையவன் எப்படி ஸித்தியை அடைவான் என்பதை, தான் கூறப் போவதாக பகவான் ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।

स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ।। १८ - ४६ ।।

यत: प्रव்ருத்திர்பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் ।
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: ।। 18 - 46 ।।

பதவுரை

यत: - எவரிடமிருந்து, **பூதாநாம்** - உலகம், உயிர்கள் அனைத்தும், **ப்ரவ்ருத்தி:** - தோன்றியிருக்கின்றனவோ, **யேந** - எவரால், **இதம்** - இவை, **ஸர்வம்** - அனைத்தும், **ததம்** - வ்யாபிக்கப்பட்டுள்ளனவோ, **தம்** - அவரை, **ஸ்வகர்மணா** - தன்னுடைய கடமையால், **அப்யர்ச்ய** - வழிபட்டு, **மாநவ:** - மனிதன், **ஸித்திம்** - நிறைவாழ்வை (மனத்தூய்மை, ஞானம் ஆகியவற்றைப் பெற்று முக்தியை), **விந்ததி** - அடைகிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

இறைவனிடமிருந்து உலகம், உயிர்கள் அனைத்தும் தோன்றியிருக்கின்றன. அவர் அனைத்திலும் வ்யாபித்திருக்கிறார், எங்கும் நிறைந்திருக்கிறார். அத்தகைய இறைவனை, தன்னுடைய கடமையால் வழிபடுகின்ற மனிதன், நிறைவாழ்வை அடைகிறான். அதாவது, மனத்தூய்மை, ஞானம் ஆகியவற்றைப் பெற்று, முக்தியை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் கூறியுள்ள கருத்தைப் புரிந்துகொள்வதற்கு புண்யத்துடன் கூடிய அறிவு தேவை.

குழப்பமே இல்லாமல் வாழ்கின்ற வாழ்க்கையைத்தான் சாஸ்த்ரங்கள் நமக்குக் கற்றுத் தருகின்றன. நாம்தான் சாஸ்த்ரத்தின் சொற்களை நம்பாமல், அவற்றை மீறி, மனம் போன போக்கில் வாழ்ந்து, கஷ்டப்படுகிறோம்.

தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்த்திதௌ ।
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம் கர்மகர்த்து-

மிஹார்ஹஸி ।। 16 - 24 ।।

எவனொருவன் சாஸ்த்ரவிதியை மீறி, மனம் போன போக்கில் செயல்புரிகிறானோ, அவனுக்கு வாழ்க்கையில் வெற்றியும் கிடைப்பதில்லை, இன்பமும் கிடைப்பதில்லை என்று பகவான் பதினாறாவது அத்யாயத்தின் இறுதியில் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ரங்களை ப்ரமாணமாக ஏற்று, அதில் கூறப்பட்டுள்ளபடி எண்ணங்கள், சொற்கள், செயல்கள் ஆகியவற்றை வைத்துக்கொள்பவன், வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைகிறான், வெற்றி அடைகிறான், என்றும் இன்பமாக இருக்கிறான்.

தன்னுடைய கடமைகளால் இறைவனை வழிபடுகின்ற மனிதன், நிறைவை அடைகிறான் என்று பகவான் இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடமைகளையும் பொறுப்புகளையும், தனக்குப் பிடித்திருந்தாலும், பிடிக்காவிட்டாலும், ஈடுபாட்டுடன், மகிழ்ச்சியாக, இறைவழிபாட்டுணர்வுடன் செய்கிறான்.

இந்தச் செயல் தாழ்ந்தது என்று ஒன்றை வெறுப்பதில்லை, இந்தச் செயல் உயர்ந்தது என்று ஒன்றில் பற்றுக் கொள்வதில்லை.

ந த்வேஷ்ட்யகுஶலம் கர்ம குஶலே நாநுஷஜ்ஜதே ।
த்யாகீ ஸத்த்வஸமாவிஷ்ட: மேதாவீ சிந்நஸம்ஶய: ।। 18 - 10 ।।

எவனொருவன் உயர்ந்த செயல், தாழ்ந்த செயல் என்று செயலைப் பகுக்காமல், மனமகிழ்ச்சியுடன், விருப்பு வெறுப்பில்லாமல் செயல்புரிகிறானோ, அவனை த்யாகீ என்றும் ஸத்வகுணத்தில் மேலோங்கியவன் என்றும், அவன் சிறந்த அறிவாளி, வாழ்க்கையில் சிறிதுகூட சந்தேகமற்றவன் என்றும் பகவான் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

இறைவனை, தனது கடமையால் வழிபடுபவன் ஸித்தியைப் பெறுகிறான். **ஸித்தி:** என்ற சொல்லானது, மனத்தூய்மை, ஞானம் ஆகியவற்றைப் பெற்று, மோக்ஷத்தை உணர்தலைக் குறிக்கிறது.

இறைவன் வேறு, சமூகம் வேறு அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இறைவனே சமூகமாகக் காட்சியளிக்கிறார்.

அந்த இறைவனின் இலக்கணம் முதல் வரியில் கூறப்பட்டுள்ளது. எவரிடமிருந்து இந்தப் படைப்பு தோன்றியிருக்கிறதோ, எவரால் இந்த உலகமனைத்தும் வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ, உலகமாக, சமூகமாகக் காட்சியளிக்கும் அந்த இறைவனை, நம்முடைய கடமைகளால் போற்றி வழிபட வேண்டும்.

அவ்வாறு வழிபட்டால், மனத்தூய்மையும் மெய்ஞ்ஞானமும் பெற்று, முக்தியை உணரலாம் என்பதுதான் இந்த ச்லோகத்தின் பொருள்.

ஈஸ்வரார்ப்பணபுத்த்யா ஸ்வதர்மாநுஷ்டாநம் - இறைவழிபாட்டுணர்வுடன், தனது கடமைகளைச் செய்தல் என்ற கர்மயோகத்தின் இலக்கணம் இந்த ச்லோகத்தில் தெளிவாக உபதேசிக்கப்பட்டுள்ளது.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।

स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ।। १८ - ४७ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஶ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம் ।। 18 - 47 ।।

பதவுரை

ஸ்வநுஷ்டிதாத் - நன்கு செய்யப்படுகின்ற, **பரதர்மாத்** - பிறருடைய தர்மத்தைக் காட்டிலும், **விகுண: (அபி)** - குறைபாடுடையதாக (இருப்பினும்), **ஸ்வதர்ம:** - தன்னுடைய தர்மமானது, **ஶ்ரேயாந்** - சிறந்தது. **ஸ்வபாவநியதம்** - தனக்கென்று விதிக்கப்பட்ட, **கர்ம** - கடமையை, **குர்வந்** - செய்து, **கில்பிஷம்** - பாபத்தை, **ந ஆப்நோதி** - அடைய மாட்டான்.

பொழிப்புரை

நன்கு செய்யப்படுகின்ற பிறருடைய தர்மத்தைக் காட்டிலும், குறைபாடுடையதாக இருந்தாலும், தன்னுடைய தர்மமே சிறந்தது. தனக்கென்று விதிக்கப்பட்ட கடமையைச் செய்வதால், ஒருவன் பாபத்தை அடைய மாட்டான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மூன்றாவது அத்யாயத்தில் உபதேசித்துள்ள,

ஶ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ।। 3 - 35 ।।

என்ற ச்லோகத்துடன், இந்த ச்லோகத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம். இரண்டிலும் முதல் வரி ஒன்றாக இருக்கின்றது.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த ச்லோகத்தைப் புரிந்துகொள்வதற்கு மிகுந்த மனப்பக்குவம் தேவை.

நன்கு செய்யப்படும் பிறருடைய தர்மத்தைக் காட்டிலும், குறைபாடுடன் செய்யப்படும் தன்னுடைய தர்மம் சிறந்தது என்று பகவான் கூறுகிறார். அர்ஜுனனுக்கு, தற்போது தாத்தாவையும் குருவையும் கொல்ல வேண்டிய சூழல், தர்மமாக இருக்கிறது. அது தோஷமுள்ள, குற்றமுள்ள கர்மம் என்று அர்ஜுனன் நினைக்கலாம்.

இப்படிப்பட்ட கடமையை நான் செய்ய வேண்டியிருக்கிறதே! என்று அவன் வருத்தப்படக்கூடாது.

ந த்வேஷ்டி அகுஶலம் கர்ம। **(18-10)** என்று, விருப்பமில்லாத செயலை வெறுக்கக் கூடாது என்று பகவான் முன்பே கூறினார்.

இன்னொருவருடைய கடமையை நம்மால் சிறப்பாகச் செய்ய முடிந்தாலும், அது நமக்கும் சமூகத்திற்கும் நல்லதல்ல. யார் யாருக்கு, என்னென்ன பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் அவரவர்கள் செய்ய வேண்டும்.

நமக்கென்று கொடுக்கப்பட்ட வேலையை, நாம் சிறிது குறைபாட்டுடன் செய்தாலும் பரவாயில்லை என்கிறார் பகவான். சிறிது சிறிதாகப் பழகி, பிறகு நன்கு செய்ய முடியும்.

ஆனால் இன்னொருவரின் வேலை தனக்குப் பிடித்திருக்கிறது என்று அதில் ஈடுபட்டுச் செய்யத் தொடங்கினால், அதன் மூலம் பல குழப்பங்கள் ஏற்படும். மேலாண்மையின்

Downloaded from **www.omkaravidya.com**

கோணத்தில் சிந்தித்துப் பார்த்தாலும் இது உண்மை என்பது விளங்கும்.

சில சமயங்களில்,

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (திருக்குறள் - 517)

என்று கூறப்பட்டதைப் போன்று செய்வோம். ஆனால், இது இடம், பொருள், சூழல், தொழிலைப் பொருத்து மாறும்.

நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகுதான், இந்த உண்மைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியும். மேலெழுந்தவாரியாக நுனிப்புல் மேய்ந்து, இந்தக் கருத்துகளைத் தெரிந்துகொள்ள முடியாது.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (திருக்குறள் - 664)

என்று கூறப்பட்டதைப் போல, ஆழ்ந்து சிந்தித்து, இந்தக் கருத்துகளை உணர்ந்துகொள்ள வேண்டும்.

நமக்கென்று விதிக்கப்பட்ட கடமையைச் செய்வதால், நம் குழப்பங்கள் தீரும், மன அமைதி கிடைக்கும், ஞானத்தையும் முக்தியையும் அடைய முடியும். இதனால் பாபத்தையும் துன்பத்தையும் அடைய மாட்டோம்.

सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।

सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ।। १८ - ४८ ।।

Downloaded from **www.omkaravidya.com**

ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் ।
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிரி-
வாவ்ருதா: ।। 18 - 48 ।।

பதவுரை

ஹே கௌந்தேய! - ஓ குந்தியின் புதல்வனே! **ஸதோஷம் அபி** - குறையுடையது ஆயினும், **ஸஹஜம்** - உடன் பிறந்த, **கர்ம** - கர்மத்தை (கடமையை), **ந த்யஜேத்** - துறக்கலாகாது. **ஹி** - ஏனெனில், **ஸர்வ-ஆரம்பா:** - எல்லாச் செயல்களும், **தூமேந** - புகையினால், **அக்நி: இவ** - நெருப்புபோல், **தோஷேண** - குறையினால், **ஆவ்ருதா:** - சூழப்பட்டுள்ளன.

பொழிப்புரை

ஓ குந்தியின் புதல்வனே! குறையுடையது ஆயினும், உடன் பிறந்த, அதாவது உனக்கென்று விதிக்கப்பட்ட கடமையைத் துறக்கலாகாது. ஏனெனில், எல்லாச் செயல்களும் புகையினால் நெருப்புபோல், குறையினால் சூழப்பட்டுள்ளன.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் உபதேசித்துள்ள இந்த ச்லோகத்தின் பொருளை, உள்ளவாறு புரிந்துகொள்வதற்கு மிகுந்த மனப்பக்குவம் தேவை.

சாஸ்த்ரங்களின் அடிப்படையில், நாம் படிக்க வேண்டிய படிப்பும், செய்ய வேண்டிய தொழிலும், நாம் பிறப்பதற்கு முன்பே நிர்ணயிக்கப்படுகின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

இன்று அத்தகைய சூழல் இல்லை. இருப்பினும், இந்தக் கருத்துகளை முடிந்த அளவு புரிந்துகொண்டு, வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதில் கூறப்பட்டுள்ளவற்றை அப்படியே பார்க்கிறோம், இதில் நம்முடைய விருப்பு வெறுப்புகளை நுழைப்பதில்லை.

இந்த ச்லோகங்களுக்கு எப்படி வேண்டுமானாலும் பொருள் கூறலாம். ஆனால் அவ்வாறு கூறினால், இவற்றின் உண்மையான பொருள் வராது.

இவற்றைக் கேட்டு, ஏற்புடையதாக இருந்தால், நாம் பின்பற்றலாம். இல்லையெனில் விட்டுவிடலாம். நம்முடைய மதத்தில் அந்தச் சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஹிந்து மதத்தில், மத சுதந்திரம் இருக்கிறது, சமூக சுதந்திரம் இல்லை என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். இன்று சமூக சுதந்திரமும் வந்துவிட்டது.

ஹிந்து மதத்தைத் தவிர பிற மதங்களில் மத சுதந்திரம் என்பது கிடையாது. சமூக சுதந்திரம் எப்படியிருக்கிறது என்பதையும் ஆராய்ச்சி செய்தால், உண்மை விளங்கும்.

நம் கூடவே பிறந்த கர்மத்தை, ஸ்வபாவமான கர்மத்தை, ஹிம்ஸை முதலான குறைபாடுகளுடன் இருப்பதாகத் தோன்றினாலும், அதை விடக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

யுத்த பூமியில், அர்ஜுனன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மத்தில், பிறரைக் கொல்ல வேண்டியிருந்தாலும், அந்த தர்மத்தை அவன் விடக்கூடாது என்கிறார் பகவான்.

அது மட்டுமல்ல, எந்த செயலில்தான் தோஷமில்லாமல் இருக்கிறது? என்ற பொதுவான விதியைக் கூறுகிறார் பகவான். முற்றிலும் குறைபாடு இல்லாத செயல் என்று எதையும் சொல்ல முடியாது.

இருப்பதிலேயே குறைந்த குறைபாடுடைய செயல்களை நாம் எடுத்துக்கொள்ளலாமே தவிர, குறைகளே இல்லாத செயல் என்று எதுவும் இல்லை.

நெருப்பில் எப்பொழுதும் புகை இருப்பதுபோல, செயல்களில் குறைபாடுகள் இருக்கின்றன என்ற உதாரணத்தை பகவான் கூறுகிறார்.

குறைபாடு இல்லாத செயல் என்று எதுவும் இல்லை. உனக்கு எது கடமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தச் செயலை மகிழ்ச்சியுடன் செய்வாயாக! என்று மீண்டும் பகவான் வலியுறுத்திக் கூறுகிறார்.

असक्तबुद्धिः सर्वत्र जितात्मा विगतस्पृहः ।

नैष्कर्म्यसिद्धिं परमां सन्यासेनाधिगच्छति ।। १८ - ४९ ।।

அஸக்தபுத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ: ।
நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸேநாதிகச்சதி ।। 18 - 49 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஸர்வத்ர - எல்லா இடத்திலும் (எதிலும்), **அஸக்தபுத்தி:** - பற்றற்ற மனதுடன் கூடியவன், **ஜிதாத்மா** - (தர்மத்தைக் கடைப்பிடித்து) உடலையும் உள்ளத்தையும் வெற்றிகொண்டவன், **விகதஸ்ப்ருஹ:** - ஆசைகளை அறவே விட்டவன், **ஸந்ந்யாஸேந** - (ஞானத்துடன் கூடிய) துறவினால், **பரமாம்** - மேலான, **நைஷ்கர்ம்யஸித்திம்** - கர்மமற்ற நிலையை (மோக்ஷத்தை), **அதிகச்சதி** - உணர்கிறான்.

பொழிப்புரை

எல்லாவற்றிலும் பற்றற்ற மனதுடன் கூடியவன், தர்மத்தைக் கடைப்பிடித்து, உடலையும் உள்ளத்தையும் வெற்றிகொண்டவன், ஆசைகளை அறவே விட்டவன், ஞானத்துடன் கூடிய துறவினால், கர்மமற்ற நிலையாகிய, மேலான மோக்ஷத்தை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஒவ்வொருவரும் தனக்கென்று விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்து, மனத்தூய்மை பெற்று, மெய்யறிவைப் பெற்று, முக்தியை உணர வேண்டும் என்ற எண்ணத்துடன் உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

கடமைகளைப் பொறுப்பாகச் செய்ய வேண்டும். ஆனால் கடமைகளிலேயே உழன்று கொண்டிருக்கக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

அவரவர் பக்குவத்தைப் பொருத்து, எங்கும் பற்றில்லாமல் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். ஸத்ஸங்கத்தினால்தான் அது ஸாத்யம்.

ஸர்வத்ர என்றால் தன்னுடைய உடல், குடும்பம், சமூகம் என எல்லா இடத்திலும் என்று பொருள். ஒரு காலத்தில் பற்று வைத்து, ஈடுபாட்டுடன் செயல்புரிந்திருப்போம். பிறகு, பற்றை நன்றாக நீக்கிக்கொள்ள வேண்டும். உடலிலிருந்து உயிர் பிரிவதற்கு முன்பேயே, பற்றை விட்டுவிட வேண்டும்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் (திருக்குறள் -349) என்றும்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (திருக்குறள் - 350)

என்றும் திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

எங்கும், எதிலும் பற்றற்றவனாக, மனதை நன்கு வெற்றிகொண்டு, எதிலும் ஆசையில்லாதவனாக இருக்க வேண்டும். இந்த உடல் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற ஆசையைக்கூட விட்டுவிட வேண்டும்.

அனைத்து பற்றுகளையும் செயல்களையும் விட்டுவிடுவதுதான் துறவு. சமூகத்திற்குரிய செயல்கள், தான் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மிகக் கடமைகள், குடும்பக் கடமைகள் எல்லாவற்றையும் நன்கு துறந்துவிடுவதைப் பற்றி பகவான் இங்கு கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இவ்வாறு உடல் பற்று, உள்ளப் பற்று எல்லாவற்றையும் நீக்கி, ஞானத்துடன் கூடிய துறவு வாழ்க்கையினால், மேலான மோக்ஷத்தை உணர்கிறான்.

நைஷ்கர்ம்யஸித்தி: என்ற சொல்லானது, மோக்ஷத்தைக் குறிக்கும். இதற்கு **நிஷ்க்ரியாத்மஸ்வரூப அவஸ்த்தாந லக்ஷணம்।** என்று ஆதிசங்கரர் விளக்கம் கூறுகிறார். அதாவது, செயலற்ற ஆத்ம ஸ்வரூபத்தை, தன் ஸ்வரூபமாகவே அறிந்து, மோக்ஷத்தை உணர்கிறான் என்று பொருள்.

सिद्धिं प्राप्तो यथा ब्रह्म तथाप्नोति निबोध मे ।

समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा ।। १८ - ५० ।।

ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்நோதி நிபோத மே ।
ஸமாஸேநைவ கௌந்தேய நிஷ்டா ஜ்ஞாநஸ்ய யா
பரா ।। 18 - 50 ।।

பதவுரை

ஹே கௌந்தேய! - ஓ குந்தியின் புதல்வனே! **ஸித்திம்** - மெய்யறிவைப் பெறுவதற்குரிய தகுதியை, **ப்ராப்த:** - பெற்றவன், **யதா** - எப்படி, **ப்ரஹ்ம** - பரம்பொருளை, **ஆப்நோதி** - அடைவானோ (உணர்வானோ), **யா** - எது, **பரா** - உயர்ந்த, **ஜ்ஞாநஸ்ய** - மெய்யறிவின், **நிஷ்டா** - நிலைநிற்றலோ, **ததா** - அதனை, **மே** - என்னிடமிருந்து, **ஸமாஸேந ஏவ** - சுருக்கமாக, **நிபோத** - அறிந்துகொள்வாயாக.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ குந்தியின் புதல்வனே! மெய்யறிவைப் பெறுவதற்குரிய தகுதியைப் பெற்றவன், எப்படிப் பரம்பொருளை உணர்வானோ, எது உயர்ந்த மெய்யறிவில் நிலைநிற்றலோ, அதனை என்னிடமிருந்து, சுருக்கமாக அறிந்துகொள்வாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் ஸித்தியை அடைந்தவன், எப்படி மெய்ப்பொருளை உணர்வானோ, அதைக் கூறுகிறேன் என்று ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: । 18 - 46

தன்னுடைய கடமையின் மூலம் கடவுளை வழிபட்டு, ஸித்தியை அடைகிறான் என்று கூறினார். **ஸித்தி:** என்ற சொல்லுக்கு **ஜ்ஞாநயோக்யதா** - மெய்யறிவைப் பெறுவதற்குரிய தகுதி என்று பொருள்.

இந்த ச்லோகத்தில் **ஸித்திம் ப்ராப்த:** - ஞானத்திற்குரிய தகுதியைப் பெற்றவன் என்று கூறுகிறார். ஞானத்திற்குரிய தகுதி என்பது ஸாதன சதுஷ்டய ஸம்பத்தி எனப்படும் வேதாந்தம் கற்பதற்குரிய நான்கு தகுதிகள். விவேகம், வைராக்யம், மனவடக்கம் முதலான ஆறு பண்புகள், முக்தியை உணர விருப்பம் ஆகியவையே அவை.

Downloaded from **www.omkaravidya.com**

ஞானத்திற்குரிய தகுதியைப் பெற்றவன், எவ்வாறு மெய்ப்பொருளை அடைவானோ, அதைப் பற்றி, பகவான் சுருக்கமாகக் கூறப் போகிறார்.

நிஷ்டா ஜ்ஞாநஸ்ய யா பரா। என்பதற்கு ஆதிசங்கரர் விரிவான விளக்கத்தை அருளியிருக்கிறார்.

வடிவமற்ற மெய்ப்பொருளை, மனமானது எப்படி க்ரஹிக்க முடியும் என்பதற்குச் சிறப்பான விளக்கத்தை அங்கு கூறியிருக்கிறார்.

இந்த இடத்தில் **நிஷ்டா** என்றால் ஞானத்தின் எல்லை, முடிவு என்று பொருள். ஞானத்தின் எல்லை ப்ரஹ்மத்தை உணர்வதே ஆகும். ஞானமானது, ப்ரஹ்மத்தை உணர்வதில் நிறைவுபெறப் போகிறது.

ஸர்வம் கர்மாகிலம் பார்த்தே ஜ்ஞாநே பரிஸமாப்யதே । 4 - 33

என்று பகவான் முன்பே கூறினார்.

பரா நிஷ்டா என்பது, மெய்யுணர்வின் முடிந்த எல்லை.

ஆத்மஞான நிஷ்டை என்பது எத்தகையது? ஆத்மா எத்தகையது? ஞானம் எத்தகையது? அந்த ஆத்மாவின் இலக்கணங்கள் யாவை? போன்ற கேள்விகளை ஆதிசங்கரர் இந்த இடத்தில் எழுப்புகிறார்.

ஆத்மா சிந்திக்கக்கூடிய விஷயமல்ல. ஆத்மாவிற்கு வடிவமில்லை. வடிவமில்லாத ஆத்மாவைப் பற்றிய அறிவின் தன்மை என்ன?

Downloaded from **www.omkaravidya.com**

குடம் என்று சொல்லும்போது, மனதிலுள்ள எண்ணமானது குடமாக மாறுகிறது. கண்ணும் மனமும் இணையும்போது, எண்ணம் அதன்மயமாகும்.

விவசாயத்தில் பாத்தி கட்டி, அதற்குள் தண்ணீர் விடுவார்கள். எந்த வடிவத்தில் பாத்தி இருக்கிறதோ, அந்த வடிவத்தில் நீர் நிறையும். அதுபோல, எண்ணங்கள் விஷயாகாரமாக ஆகின்றன. தக்ஷிணாமூர்த்தி என்று சொன்னவுடன், நம் மனதிலுள்ள எண்ணமானது, அந்த வடிவமாக மாறுகிறது.

ஆத்மா அரூபம், வடிவமற்றது என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளது. அன்பு, கோபம், பொறாமை போன்ற உணர்ச்சிகளுக்குக்கூட வடிவம் கொடுக்க முடியும். ஆனால் தூய உணர்வுக்கு வடிவமில்லை.

அதனைப் புறப்பொருளாக அறிய முடியாது. அறிபவன், அறியப்படுபொருள் ஆகிய தன்மைகளுக்கு ஆதாரமாக அது இருக்கிறது.

ஒவ்வொரு பொருளைப் பற்றிய ஞானமும் அந்தந்த பொருள்மயமாக ஆகிறது. ஆத்மாவோ நிராகாரம் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆத்மா, ஞானம் (அறிவு) இரண்டுக்கும் வடிவமில்லை. வடிவமில்லாத அறிவு, வடிவமில்லாத ஆத்மாவை எப்படி விஷயீகரிக்க முடியும்?

ஆத்மாவைச் சார்ந்துள்ள புத்தியானது, ஸத்வகுணப்ரதானமாக இருப்பதால் மிகத் தெளிவாக இருக்கிறது, நிர்மலமாக

Downloaded from **www.omkaravidya.com**

இருக்கிறது, மிகவும் நுண்மையாக இருக்கிறது, ஆகவே ஆத்மாவை அதனால் ப்ரதிபலிக்க முடிகிறது.

நான் என்ற உணர்வு புத்தியில் ப்ரதிபிம்பிக்கிறது. தூய்மையான முகம் பார்க்கும் கண்ணாடியில் பிம்பம் தெளிவாக ப்ரதிபிம்பிப்பதைப்போல.

புத்தியில் ப்ரதிபிம்பிக்கின்ற உணர்வானது, மனதில் ப்ரதிபலிக்கிறது. மனதில் ப்ரதிபிம்பிப்பது இந்த்ரியங்களிலும், இந்த்ரியங்களில் ப்ரதிபிம்பிப்பது உடலிலும் ப்ரதிபிம்பிக்கின்றன. அதனால் சாதாரண உலக மக்கள், உடலில் மட்டும் இருப்பது ஆத்மா என்று நினைத்துவிடுகின்றனர்.

சிலர் உடலிலிருந்து சைதன்யம் தோன்றுகிறது, சைதன்யத்தை உடையது உடல் என்று நினைக்கிறார்கள். மின்சாரத்தை உடையது பல்பு என்று கூறுவது பொருந்தாது. மின்சாரம் எதையும் சார்ந்து இல்லை, அது பல்பு வழியாக இயங்குகிறது. ஆனால், பல்பு மின்சாரத்தைச் சார்ந்திருக்கிறது. அதுபோல, உடலும் மனமும் உணர்வைச் சார்ந்திருக்கின்றன. உணர்வு, அவற்றைச் சார்ந்து இல்லை.

உடம்பே உணர்வு என்று சிலரும், உடம்பில் உணர்வு வெளிப்படுகிறது என்று வேறு சிலரும் சொல்கிறார்கள். உடல் இருந்தால் உணர்வு இருக்கும், உடல் இல்லையெனில் உணர்வு இருக்காது என்று பொருளாகிவிடும்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலும் மனமும் இருப்பதால்தான், உணர்வு என்ற ஒன்று இருப்பதை நினைக்க முடிகிறது. ஆனால், இவை இல்லாமலும் உணர்வு இருக்கிறது.

சாஸ்த்ர ப்ரமாணத்தின் மூலம் தெரிந்துகொள்வது இதுதான் - அறியாமையினால் கற்பிக்கப்பட்டிருப்பதை நீக்குவது ஒன்றே நாம் செய்ய வேண்டியது, ப்ரஹ்மஞானத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம்.

நான் இருக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரிகிறது. நான் என்னவாக இருக்கிறேன் என்பதுதான் தெரிவதில்லை. நான் உடலா, மனமா, புத்தியா, இந்த்ரியங்களா அல்லது இவற்றுக்கு ஸாக்ஷியாக இருக்கும் உணர்வா?

நான் அல்லது ஆத்மா - அனைத்திற்கும் ஸாக்ஷியான, எங்கும் நீக்கமற நிறைந்த உணர்வு என்று சாஸ்த்ரம் கூறுகிறது.

விவேகம் இல்லாதவர்களுக்கு, இது தெரிந்துகொள்ள முடியாததாகத் தோன்றுகிறது. அறியாமையினால் தோற்றுவிக்கப்பட்ட பெயர் வடிவங்களால் அபகரிக்கப்பட்ட மனதை உடையவர்கள், அறிபவனை அறியாமல், அறியப்படு பொருட்களையே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவன் அதுவாகவே இருந்துகொண்டு, தன்னைத் தேடுகிறான்! புறநோக்கு உடையவர்களுக்கு இது விளங்குவதில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

இருள் வந்த பிறகு, ஏதோ ஒரு பொருளைக் காணவில்லை என்று தேடலாம், ஆனால் நான் எங்கே என்று தேடுவோமா? நான் என்பது, எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

புற விஷயங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மனதை உடையவன், குருவருளை உடையவன், தீவிர வைராக்யம், முமுக்ஷுத்வம், தூய்மையான மனம், நெறிப்படுத்தப்பட்ட இந்த்ரியங்கள் ஆகியவற்றை உடையவனுக்கு ஆத்ம தத்துவம் எளிதில் விளங்கும்.

ஈச்வர க்ருபை, குரு க்ருபை, சாஸ்த்ர க்ருபை, தன்னுடைய உடல், மனம், இந்த்ரியங்களின் உதவியாகிய ஆத்ம க்ருபை அனைத்தும் இவனுக்கு இருக்கின்றன.

நான் என்பது அபரோக்ஷமாக, இப்பொழுதே தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

குரு ஸம்ப்ரதாயம் இல்லாதவர்களுக்கு, வேதாந்தத்தைப் பொறுமையாகக் கற்காதவர்களுக்கு, ப்ரமாணத்தை அறியாதவர்களுக்கு உலக விஷயங்களில் மூழ்கியிருப்பவர்களுக்கு, இதனைத் தெரிந்துகொள்வது கடினமாகத் தோன்றும்.

ஆனால், குரு ஸம்ப்ரதாயத்துடன் கூடியவர்களுக்கு, வேதாந்தத்தைப் பொறுமையாகக் கற்பவர்களுக்கு, ப்ரமாணத்தை அறிந்தவர்களுக்கு, பரிபூர்ண வைராக்ய புத்தி உடையவர்களுக்கு இது முடியும்.

Downloaded from **www.omkaravidya.com**

தஸ்மாத் பாஹ்யாகார-பேதபுத்திநிவ்ருத்தி: ஏவ
ஆத்மஸ்வரூப-அவலம்பந-காரணம் ।

ஆத்மாவை நினைக்க வேண்டாம், அநாத்மாவை நினைப்பதை, வேற்றுமை எண்ணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை நிறுத்தினால் போதும் என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஆத்மாவை அடைய முடியாது, எடுத்துக்கொள்ள முடியாது, விடவும் முடியாது. ஏனெனில் நாமே அதுவாக, அந்த ப்ரஹ்மனாக இருக்கிறோம்.

நான் என்ற தத்துவமில்லாமல், எதுவும் நிகழ்வதில்லை. இளமை முதலான பருவ மாற்றங்களும், இன்ப, துன்பங்களும் என்னைச் சார்ந்தே நிகழ்கின்றன. நான் என்பது, எப்பொழுதும் அறியப்படுவதாக இருக்கிறது. அனைத்து நிலைகளிலும் நான் என்ற சொல் இருக்கிறது. குழந்தை நான், நடுவயது நான், முதியவனான நான் ஆகியவற்றில், நான் என்பது மாறாமல் இருக்கிறது.

ஆத்மஞானம் மிக சுலபம் என்பதை ஆதிசங்கரர் நிரூபிக்கிறார். எப்படி நம்முடைய உடலை அறிவதற்கு வேறு ப்ரமாணம் தேவையில்லையோ, அதேபோன்று, இந்த உடலுக்குள் இருக்கின்ற ஆத்மாவைத் தெரிந்துகொள்வதற்கும் வேறு ப்ரமாணம் தேவையில்லை.

அனைத்தையும் அறிகின்றவனுக்கு வடிவமில்லை என்பது, சற்று சிந்தித்தாலே விளங்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஞானம் ப்ரத்யக்ஷம் இல்லை என்றாலும், ஞானத்திற்கு வடிவமில்லை என்றாலும், அறிவில்லாமல் அறியப்படு பொருளை அறிய முடியாது. நான் என்பதும், அறிவு என்பதும் ப்ரஸித்தமாக நம்மால் அறியப்படத்தான் செய்கின்றன.

ஆத்மஞானம் எப்பொழுதும் இருக்கிறது. அதற்கு முயற்சி தேவையில்லை. அநாத்மஞானத்தை விடுவதற்குத்தான் முயற்சி தேவை.

ஞானநிஷ்டை என்பது மிகவும் எளிதானது. மனதைத் தூய்மைப்படுத்தியவர்கள், முயற்சிசெய்து உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தியவர்கள், பற்றற்ற தன்மையை வெளிப்படுத்துகின்ற துறவு வாழ்க்கையை மேற்கொண்டு, வேதாந்த தத்துவத்தைக் கேட்டு, சிந்தித்துத் தெளிவு பெறுகிறார்கள்.

யா ஜ்ஞாநஸ்ய பரா நிஷ்டா - ஞானத்தின் மேலான நிஷ்டையாகிய ஞானயோகம் எதுவோ, அதனை பகவான் கூறப் போகிறார்.

ஞானயோகத்தினால்தான் நாம் பரம்பொருளை அறிந்துகொள்ள முடியும்.

நிஷ்டா என்றால் நிலைத்திருத்தல், விடாமல் அதனையே பின்பற்றுதல் என்று பொருள். காலையிலிருந்து இரவு வரை வேதாந்த சாஸ்த்ரங்களையே கற்று, அதில் கூறப்பட்டுள்ள கருத்துகளையே ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருப்பதற்குப் பெயர்தான் ஞானயோகம்.

Downloaded from **www.omkaravidya.com**

அத்வைத ஸித்தாந்தப்படி இந்தக் கருத்துகளை நாம் சிந்திக்கிறோம்.

बुद्ध्या विशुद्धया युक्तो धृत्यात्मानं नियम्य च ।

शब्दादीन्विषयांस्त्यक्त्वा रागद्वेषौ व्युदस्य च ।। १८ - ५१ ।।

புத்த்யா விஶுத்தயா யுக்தோ த்ருத்யாத்மாநம் நியம்ய ச ।
ஶப்தாதீந்விஷயாம்ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ
வ்யுதஸ்ய ச ।। 18 - 51 ।।

பதவுரை

விஶுத்தயா - தூய்மையான (தெளிவான), **புத்த்யா** - புத்தியுடன், **யுக்த:** - கூடியவனாய், **த்ருத்யா** - உறுதியுடன், **ஆத்மாநம்** - உடல், மனக் கூட்டமைப்பை, **நியம்ய** - நெறிப்படுத்தி, **ஶப்தாதீந் ச** - ஒலி முதலான, **விஷயாந்** - புலனின்பப் பொருட்களை, **த்யக்த்வா** - விட்டுவிட்டு, **ராகத்வேஷௌ ச** - விருப்பு வெறுப்புகளையும், **வ்யுதஸ்ய** - அறவே அகற்றி ...

பொழிப்புரை

தூய்மையான, தெளிவான புத்தியுடன் கூடியவன், உறுதியுடன் உடல் மனக்கூட்டமைப்பை நெறிப்படுத்தியவன், ஒலி முதலான புலனின்பப் பொருட்களை விட்டவன், விருப்பு வெறுப்புகளை அறவே அகற்றியவன்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், கர்மயோகத்தினால் மனத்தூய்மை பெற்றவன், எப்படி ஞானயோகத்தினால் ஞானநிஷ்டை பெற்று, மோக்ஷத்தை உணர்கிறான் என்பதைக் கூறத் தொடங்குகிறார்.

பகவான் இந்த ச்லோகத்தில் தொடங்கி, அந்த மேலான ஞானநிஷ்டை என்பது என்ன என்பதை விளக்கிக் கூறுகிறார்.

வ்யவஸாயாத்மிகா புத்தி: ஏகேஹ குருநந்நந । 2 - 41

என்று பகவான் முன்பு உறுதியான புத்தியைப் பற்றிக் கூறினார்.

கர்மகாண்டத்தில் உழல்பவனுக்கு, உறுதியான மனம் ஏற்படாது என்று பகவான் அங்கு கூறினார். கர்மயோகத்தைச் செய்பவனுக்கு, உறுதியான மனம் இருக்கும்.

விஶுத்தயா புத்த்யா என்றால் மோக்ஷ புருஷார்த்தத்தில் உறுதியான புத்தியினால் என்று பொருள். மாயையின் பாதிப்பில்லாத புத்தி என்று உரையாசிரியர் கூறுகிறார்.

சுத்தமான புத்தியை உடையவன், ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியுடன் இருப்பவன், ஞானத்தை நன்கு பெற்றவன் போன்ற அர்த்தங்கள் எல்லாம் இதில் அடங்கியிருக்கின்றன.

ஆத்மாநம் என்றால் **கார்ய-கரண-ஸங்காத:** - உடல், மனக் கூட்டமைப்பு.

Downloaded from **www.omkaravidya.com**

அறிவின் துணைகொண்டு, முறையான பயிற்சியினால், உடலையும் உள்ளத்தையும் நன்கு கட்டுப்படுத்தியவனைப் பற்றி பகவான் இங்கு கூறுகிறார்.

உறுதியான புத்தி என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையின் குறிக்கோள் முக்தியை உணர்வதுதான். முக்திக்குத் தேவை ஞானம். ஞானத்திற்கு ஸாதனம், குருமுகமாக வேதாந்த சாஸ்த்ரங்களைக் கற்றல், அதற்குத் தேவையான தகுதிகள் இவை எனப் புரிந்துகொள்ள வேண்டும்.

பகவான் 3-30 ச்லோகத்தில், **அத்யாத்ம-சேதஸ்** என்ற சொல்லைப் பயன்படுத்தினார். குறிக்கோளையும், அதனை அடைவதற்கான வழியையும் பற்றிய தெளிவை அது குறிக்கிறது.

இவ்வாறு தெளிந்த புத்தியுடன், உடல், மனதை நன்கு கட்டுப்படுத்தியவன், புலனின்பங்களைத் துய்ப்பதை முற்றிலும் விட்டுவிடுகிறான். அத்துடன் விருப்பு வெறுப்புகளையும் நன்றாக நீக்கிவிடுகிறான்.

உடலைக் காப்பாற்றிக் கொள்கின்ற விஷயத்தில் கூட, அவனுக்கு விருப்பு வெறுப்பு இருப்பதில்லை.

இந்த ச்லோகத்தின் தொடர்ச்சியானது, 54 ஆவது ச்லோகம் வரை செல்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

विविक्तसेवी लघ्वाशी यतवाक्कायमानसः ।

ध्यानयोगपरो नित्यं वैराग्यं समुपाश्रितः ।। १८ - ५२ ।।

विविक्तसेवீ லக்வாஶீ யதவாக்காயமாநஸ: ।

த்யாநயோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாஶ்ரித: ।। 18 - 52 ।।

பதவுரை

விவிக்தஸேவீ - தனி இடத்தை நாடுபவனாய், **லக்வாஶீ** - எளிய உணவை உண்பவனாய், **யத-வாக்-காய-மாநஸ:** - வாக்கு, உடல், மனம் ஆகியவற்றினால் உலகியல் செயல்களில் ஈடுபடாதவனாய், **நித்யம்** - எப்பொழுதும், **த்யாநயோகபர:** - ஆத்மாவை ஆழ்ந்து எண்ணுவதிலேயே ஈடுபட்டவனாய், **வைராக்யம்** - பற்றற்ற தன்மையை, **ஸமுபாஶ்ரித:** - நன்கு உடையவனாய்...

பொழிப்புரை

தனிமையான இடத்தை நாடுபவன், எளிய உணவை உண்பவன், உடல், மனம், வாக்கு ஆகியவற்றால் உலகியல் செயல்களில் ஈடுபடாதவன், எப்பொழுதும் ஆத்மாவை ஆழ்ந்து எண்ணுவதிலேயே ஈடுபட்டிருப்பவன், பற்றற்ற தன்மையை நன்கு உடையவன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஞானநிஷ்டைக்கான ஸாதனைகளை உபதேசித்துக் கொண்டிருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஞானநிஷ்டையை அடைய விரும்புபவன், ஏகாந்தமான இடத்தை நாட வேண்டும். மக்கள் நடமாட்டமில்லாத காடுகள், நதிக்கரைகள், மலைகள், குகைகள் போன்ற இடங்களில், தூய்மையான இடங்களில் இருப்பவனுக்குத்தான் **விவிக்தஸேவீ** என்று பெயர்.

லக்வாஸீ: - அளவான, மிதமான உணவுகளை உண்பவன், ஸாத்விகமான காய், கனிகளை உண்பவன். இறைவனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட, சாஸ்த்ரங்களால் அனுமதிக்கப்பட்ட நல்ல அளவான உணவுகளை உண்ண வேண்டும் என்று உரையாசிரியர் கூறுகிறார்.

ஸாத்விகமான உணவை ஏற்பதால், உள்ளத்தில் காமக்ரோதங்கள் வெகுவாகக் குறையும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த ஸாதகன் உடல், மனம், வாக்கு ஆகியவற்றை நன்கு முயற்சிசெய்து, கட்டுப்படுத்தியிருக்கிறான். மௌனமாக இருத்தல், உடலை ஆன்மிக வாழ்க்கைக்குப் பொருத்தமாக வைத்துக்கொள்ளுதல், மனதை வேறு எண்ணங்களில் சிதறவிடாமல் இருத்தல் ஆகியவை மிக முக்கியம்.

தனிமையில் இருத்தல், குறைவாக உண்ணுதல் முதலிய ஒழுக்கங்கள், தூக்கம் வரக்கூடாது, வேறு எதிலும் கவனக்குறைவாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகக் கூறப்பட்டுள்ளன. அவ்வாறு இருந்தால், மனம் தெளிவாக இருக்கும்.

Downloaded from **www.omkaravidya.com**

இங்கு முக்கியமாக, பெற்ற ஞானத்தை நன்கு த்யானம் செய்தலாகிய, நிதித்யாஸனத்தைப் பற்றித்தான் பகவான் கூறுகிறார்.

ஏற்கெனவே ஞான விஷயங்கள் நன்கு உபதேசிக்கப்பட்டுள்ளன. இங்கு முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது, சோம்பேறித்தனமில்லாமல், கவனக்குறைவு இல்லாமல், உலகியல் விஷயங்களைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்க வேண்டும் முதலான கருத்துகளை ஆனந்தகிரி என்ற உரையாசிரியர் சேர்த்துக் கூறுகிறார்.

இந்த ஸாதகன், எப்பொழுதும் த்யானத்தில் ஈடுபட்டிருக்கிறான். நான் உண்மையில் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற ஞானத்தைப் பெற்று, அதனை த்யானிக்கிறான். 13 ஆவது அத்யாயத்தில் ஜீவ ப்ரஹ்ம ஐக்ய ஞானத்தைப் பற்றி பகவான் விரிவாக உபதேசித்தார். அந்த ஞானத்தைத்தான் த்யானிக்கிறான்.

த்யாநயோகபர: என்றால் ஆத்மஸ்வரூபத்தைச் சிந்தித்து, ஆத்ம விஷயத்திலேயே மனதை வைத்துக் கொண்டிருப்பவன் என்று பொருள். ஆத்மாவைப் பற்றியே எண்ணுகின்ற செயலில், மனதை ஈடுபடுத்த வேண்டும்.

த்யானம் மட்டுமே செய்ய வேண்டும். வேறு ஜபம், பாராயணம் முதலியவற்றைக்கூடச் செய்யக்கூடாது என்ற அர்த்தத்தையும் ஓர் உரையாசிரியர் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

புலனின்பப் பொருட்களில் முற்றிலும் பற்றற்ற தன்மைக்குத்தான் **வைராக்யம்** என்று பெயர். த்ருஷ்ட, அத்ருஷ்ட விஷயங்களில் ஆசையில்லாமல் இருக்க வேண்டும், அவற்றை நாடாமல் இருக்க வேண்டும். அத்தகைய பற்றற்ற தன்மையை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

अहङ्कारं बलं दर्पं कामं क्रोधं परिग्रहम् ।

विमुच्य निर्ममः शान्तो ब्रह्मभूयाय कल्पते ।। १८ - ५३ ।।

अहंङ्कारम் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம் ।

விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே ।। 18 - 53 ।।

பதவுரை

அஹங்காரம் - தன்னுணர்வை, **பலம்** - உடல் வலிமையை, **தர்பம்** - இறுமாப்பை, **காமம்** - ஆசையை, **க்ரோதம்** - கோபத்தை, **பரிக்ரஹம்** - உடைமையில் உள்ள பற்றை, **விமுச்ய** - விட்டுவிட்டு, **நிர்மம:** - எனது என்ற எண்ணத்தை நீக்கியவனாய், **ஶாந்த:** - அமைதியாக இருப்பவன், **ப்ரஹ்மபூயாய** - பரம்பொருளை உணர்வதற்கு, **கல்பதே** - தகுதி உடையவன் ஆகிறான்.

பொழிப்புரை

தன்னுணர்வு, உடல் வலிமை, இறுமாப்பு, ஆசை, கோபம், உடைமையில் உள்ள பற்று ஆகியவற்றை விட்டுவிட்டு, எனது

Downloaded from **www.omkaravidya.com**

என்ற எண்ணத்தை நீக்கி, அமைதியாக இருப்பவன், பரம்பொருளை உணர்வதற்குத் தகுதி உடையவன் ஆகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஞானநிஷ்டைக்கான உபாயங்களை உபதேசித்து வருகிறார்.

இங்கு நீக்க வேண்டியவற்றைக் கூறுகிறார். உடல், மனம், புத்தியிலுள்ள தன்னுணர்வுக்கு அஹங்காரம் என்று பெயர். அதனை விட்டுவிட வேண்டும்.

உலக வாழ்க்கையில் தவறு செய்யத் தூண்டக்கூடிய ஆசை, பற்றுடன் கூடிய உடல்பலம், மனோபலம் ஆகியவற்றை விட்டுவிட வேண்டும்.

உடலைக் காப்பாற்றிக் கொள்வதற்குரிய பலம், இயல்பாக இருக்கிறது. ஆனால், அறியாமையால் நாம் பழக்கப்படுத்திக் கொண்டவற்றை விட்டுவிட வேண்டும்.

நமக்கு, பல துறைகளில் திறமைகள் இருக்கலாம். அவற்றை விட்டுவிட வேண்டும். ஏனெனில் இவன் த்யானத்தில் ஈடுபட்டிருக்கிறான். எந்தச் செயலிலும் ஈடுபடப் போவதில்லை.

உலகியல் செயல்கள், சடங்குகள், வழிபாடுகள் என எதையும் செய்யப் போவதில்லை. ஆகவே அதற்குரிய பலத்தையெல்லாம் விட்டுவிட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

தர்ப: என்றால், வாழ்க்கையில் வெற்றியடைகின்றபோது வருகின்ற திமிர், அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை.

மனிதனுக்கு, தன்னம்பிக்கை என்பது வேண்டும். அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையோ, தன்னம்பிக்கையே இல்லாமல் இருப்பதோ தவறு. விவேகபூர்வமான நம்பிக்கை வேண்டும்.

ஆனால் செருக்கு, கர்வம் என்பது தர்மத்தை மீறுவதற்குக் காரணமாகிவிடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் வெற்றியடைகின்ற மனிதன், அளவுக்கு மீறிய களிப்பை அடைகிறான். களிப்பினால் அளவுக்கு மீறிய செருக்கு உடையவனாகிறான். செருக்கினால் தர்மத்தை மீறுகிறான் என்று ஆதிசங்கரர் இந்த இடத்தில் விளக்கம் அளித்திருக்கிறார்.

மனதிலுள்ள இத்தகைய எதிர்மறையான பண்புகளான பேராசை, பெருங்கோபம், விருப்பு, வெறுப்பு ஆகியவற்றை விட்டுவிட வேண்டும்.

பரிக்ரஹம் என்றால் உடைமைப் பொருட்கள்.

இயல்பாகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. (திருக்குறள் - 344)

என்கிறார் திருவள்ளுவர். மோக்ஷத்தை உணர விரும்புகின்ற மனிதன், உடைமைப் பொருட்கள் எதையும் வைத்துக்கொள்ளக் கூடாது. தன்னுடைய உடலைக் கூட அவன் உடைமைப் பொருளாகக் கருதக்கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

ஞானத்தில் நிலைபெற விரும்புபவன், யான், எனது என்கிற எண்ணமே இல்லாதவனாக இருக்க வேண்டும்.

யான்எனது எனும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். (திருக்குறள் - 346)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

அஹங்காரம் என்பது யான், மமகாரம் என்பது எனது. நான், என்னுடையது இவை இரண்டையும் விடுபவன், அமைதியைப் பெற்று, பரம்பொருள்மயமாக ஆகிவிடுகிறான். மெய்ப்பொருளை நன்குணர்ந்து, அதிலேயே நிலைத்திருக்கிறான்.

காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (திருக்குறள் - 360)

பேராசை, பெருங்கோபம், பகுத்தறிவின்மை ஆகிய மூன்றும் பெயரளவிற்குக்கூட இல்லாமல் நீங்குமானால், பிறவிநோய் நீங்கும் என்கிறார் திருவள்ளுவர்.

திருக்குறளில் **மெய்யுணர்தல்** அதிகாரத்திலுள்ள 10 குறட்பாக்களையும் இந்த ச்லோகத்துடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

ப்ரஹ்மபூயாய கல்பதே। என்பதற்கு ப்ரஹ்மத்தை நன்றாக உணர்வதற்குரிய தகுதியை அடைகிறான் என்று பொருள்.

ஒருவன் ப்ரஹ்மத்தை உணர்வதற்குரிய தகுதிகளை எப்படி அடைகிறான் என்பதை 51, 52, 53 ச்லோகங்கள் கூறின.

Downloaded from **www.omkaravidya.com**

ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति ।

समः सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् ।। १८ - ५४ ।।

ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி ।
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் ।। 18 - 54 ।।

பதவுரை

ப்ரஹ்மபூத: - பரம்பொருளை உணர்வதற்குரிய தகுதிகளைப் பெற்றவன், **ப்ரஸந்நாத்மா** - தெளிவான மனதை உடையவன், **ந ஶோசதி** - வருந்துவதில்லை, **ந காங்க்ஷதி** - ஆசைப்படுவதில்லை. **ஸர்வேஷு** - அனைத்து, **பூதேஷு** - உயிர்களிடத்திலும், **ஸம:** - ஸமமாக இருக்கின்ற அவன், **பராம்** - மேலான, **மத்பக்திம்** - என்னிடத்தில் பக்தியை, **லபதே** - அடைகிறான்.

பொழிப்புரை

பரம்பொருளை உணர்வதற்குரிய தகுதியைப் பெற்றவன், தெளிந்த மனமுடையவன், வருந்துவதில்லை, எதற்கும் ஆசைப்படுவதும் இல்லை. அனைத்து உயிர்களிடத்திலும் ஸமமாக இருக்கின்ற அவன், என்னிடத்தில் மேலான பக்தியை அடைகிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், பரம்பொருளை அடைவதற்குரிய தகுதி உடையவனைப் பற்றிய உபதேசத்தைத் தொடர்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரஹ்மபூத: என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் -

1) பரம்பொருளை உணர்ந்தவன் 2) பரம்பொருளை உணர்வதற்குரிய தகுதியைப் பெற்றவன்

இவ்வாறு இரண்டு விதமான உரைகள் காணப்படுகின்றன.

ப்ரஸந்நாத்மா - அவனுடைய மனம் தெளிவாக இருக்கிறது. அவனுடைய மனதில் எந்தவிதமான சஞ்சலமும் இல்லை. மானஸ ஸரோவரத்தின் தெளிந்த நீர்போன்று மனம் இருக்கிறது. அவன் வருந்துவதுமில்லை, எதையும் நாடுவதுமில்லை. எதைக் குறித்தும் அவன் துயரடைவதில்லை, எதையும் விரும்புவதில்லை.

அது மட்டுமல்ல, அவன் எல்லா சரீரங்களிலும் உள்ள மெய்ப்பொருளை உணர்ந்து, எல்லோரிடத்திலும் ஸமமாக இருக்கிறான்.

பகவான் ஆறாவது அத்யாயத்தில் இரண்டு விதமான ஸமத்வத்தைப் பற்றிக் கூறினார். பரம்பொருளே ஸமமாக இருக்கிறது என்று ஒரு பொருள், விருப்பு வெறுப்பில்லாத மனநிலை என்று மற்றொரு பொருள்.

தன்னைப் போன்றுதானே பிறருக்கும் உணர்ச்சிகள் இருக்கும் என்று புரிந்துகொண்டு, பிறரது உணர்ச்சிகளை மதிக்கின்ற ஸ்வபாவம் அவனிடத்தில் இருக்கும்.

ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோऽர்ஜுந ।

ஸுகம் வா யதி வா து:க்கம் ஸ யோகீ பரமோ மத: ।। 6 - 32 ।।

Downloaded from **www.omkaravidya.com**

தன்னையே உபமானமாக எடுத்துக்கொண்டு, தனக்கு எப்படி இன்ப துன்பங்கள் இருக்கின்றனவோ, அப்படித்தான் எல்லோருக்கும் இருக்கும் என்ற மனநிலையை பகவான் த்யானத்தின் பலனாகக் கூறினார்.

ஸமமான மனநிலையுடன் இவ்வாறு இருப்பவன், தன்னிடத்தில் மேலான பக்தியை அடைகிறான் என்று பகவான் இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

இங்கு மேலான பக்தி என்பதற்கு ஸர்வாத்மஸ்வரூப ஞானம் என்று பொருள். இதனை அடுத்த ச்லோகத்தில் பகவான் விளக்கிக் கூறுவார்.

भक्त्या मामभिजानाति यावान्यश्चास्मि तत्त्वतः ।

ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ।। १८ - ५५ ।।

பக்த்யா மாமபிஜாநாதி யாவாந்யஶ்சாஸ்மி தத்த்வத: ।
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விஶதே ததநந்தரம் ।। 18 - 55 ।।

பதவுரை

பக்த்யா - மெய்யறிவு வடிவான பக்தியினால், **மாம்** - என்னை, **யாவாந்: ய: ச அஸ்மி** - நான் யார், எத்தகையவனாக உள்ளேன் என்று, **தத்த்வத:** - உள்ளவாறு, **அபிஜாநாதி** - அறிகிறான். **தத:** - பிறகு, **மாம்** - என்னை, **தத்த்வத:** - உள்ளவாறு, **ஜ்ஞாத்வா** - அறிந்து, **ததநந்தரம்** - விரைவில், **விஶதே** - என்னில் புகுகிறான். (தானும் மெய்ப்பொருளும் ஒன்று என்று புரிந்துகொள்கிறான்).

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

மெய்யறிவு வடிவான பக்தியினால், நான் யார், எத்தகையவனாக உள்ளேன் என்பதை உள்ளவாறு அறிகிறான். அப்படி உள்ளவாறு என்னை அறிந்த பிறகு, விரைவில் தானும் மெய்ப்பொருளும் ஒன்று என்று புரிந்துகொள்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மெய்ப்பொருளை அறிவதற்குரிய தகுதியைப் பெற்றவன், பரம்பொருளிடத்தில் உயர்ந்த மேலான பக்தியைச் செலுத்துகிறான் என்று கூறினார். அந்த பக்தியைப் பற்றி விளக்கிக் கூறுகிறார்.

இங்கு பக்தி என்பது ச்ரவண, மனன, நிதித்யாஸன வடிவமான ஞானயோகம் என்று ஆதிசங்கரர் உரை செய்கிறார்.

ஞான வடிவிலான பக்தி, அதாவது உயிரும் உயிருக்கு உயிரான இறைவனும் ஒன்று என்று, ஜீவ ஈச்வர ஐக்யத்தை, ச்ரத்தாபக்தியுடன் விசாரம் செய்து புரிந்துகொள்வதுதான், அத்வைத ஸித்தாந்தப்படி, இங்கு பக்தி என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது.

நான் யாராக இருக்கிறேன், எத்தகையவனாக, என்ன தன்மை உடையவனாக இருக்கிறேன் என்பதை ஞானமாகிய பக்தியினால், அவன் தெளிவாக அறிந்துகொள்கிறான் என்று பகவான் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இறைவன் யார், அவர் எத்தகையவர், அவருக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன - இவ்வாறு குருநாதரிடமிருந்து தெளிவாக, தான் புரிந்துகொண்ட தத்துவத்தை, ஆழ்ந்து த்யானிக்கிறான்.

அவ்வாறு தெளிவாக அறிந்துகொண்ட பிறகு, அவன் என்னுடன் கலந்துவிடுகிறான் என்கிறார் பகவான். கலந்துவிடுதல் என்றால், தானும் மெய்ப்பொருளும் ஒன்றே என்று புரிந்துகொள்ளுதல் என்று பொருள்.

தான் ப்ரஹ்மமயம் என்பதை மட்டும் உணரவில்லை, இறைவனும் ப்ரஹ்மமயம்தான் என்பதை இவன் உணர்கிறான்.

அலைகளும் தண்ணீர், கடலும் தண்ணீரே. அதுபோல, அடிமையான உயிரும் மெய்ப்பொருள், ஆண்டவனாக இருக்கின்ற இறைவனும் மெய்ப்பொருள்.

இறைவன் உண்மையில் ஸர்வஜ்ஞனாகவும், ஸர்வேச்வரனாகவும், ஸர்வாதிஷ்டாதாவாகவும், ஜகத்கர்த்தாவாகவும் இல்லை. இதனை பகவான் முன்பே கூறினார்.

ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: ।
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந ।। 4 - 9 ।।

என்னுடைய தெய்வீகமான பிறவியையும், என்னுடைய தெய்வீகமான செயலையும் எவன் உள்ளவாறு அறிகிறானோ, அவன் உடல்பற்றை விட்டு, மீண்டும் உடலாகத் தன்னைக்

Downloaded from **www.omkaravidya.com**

கருதிக் கொள்வதில்லை. அவன் என்னை அடைகிறான், என் ஸ்வரூபமாகவே தன்னை உணர்ந்துகொள்கிறான் என்கிறார் பகவான்.

இறைவன் அக்ஷரபுருஷனாகவும் இருக்கிறார், புருஷோத்தமனாகவும் இருக்கிறார். உபாதியினால்தான் இறைவன் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி, பெரிதாகக் காட்சியளிக்கிறார்.

ஆனால் உண்மையில், அவர் உணர்வுத் தத்துவம். கடவுளுக்கு நாம் கற்பித்திருக்கும் எல்லாவிதமான உபாதிகளையும் நீக்கிப் பார்த்தால், அவரும் ப்ரஹ்மஸ்வரூபமே என்பது விளங்கும்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் - 355)

உயிராக இருப்பினும், உயிருக்கு உயிரான இறைவனாக இருப்பினும், உலகாக இருப்பினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் காண்பதே அறிவு. இந்த திருக்குறள் மஹாமஹா மந்த்ரம்.

இந்த ச்லோகத்தில் கூறப்பட்டுள்ள பக்தி என்பது ஞானலக்ஷண பக்தி, ஞானயோகமாகிய பக்தி.

மோக்ஷஸாதநஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ ।
ஸ்வஸ்ரூபாநுஸந்தாநம் பக்திரித்யபிதீயதே ।।
(விவேகசூடாமணி - 32)

Downloaded from **www.omkaravidya.com**

மோக்ஷ ஸாதனங்களில் பக்திதான் உயர்ந்தது. பக்தி என்பது தன்னுடைய ஸ்வரூபத்தை இடைவிடாமல் நினைப்பதே என்கிறார் ஆதிசங்கரர்.

தத: தத்த்வத: ஜ்ஞாத்வா ததநந்தரம் மாம் விஶதே - அத்வைத பக்தியினால், பராபக்தியினால் என்னை உள்ளவாறு அறிந்து, அதன்பின்னர், என்னிடத்தில் அவன் புகுந்து விடுகிறான் என்கிறார் பகவான்.

உயிர்களுக்கு உயிரான இறைவனும் உயிர்களும் உள்ளங்களும் உடல்களும் மெய்ப்பொருளின் மீது மாயையினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. மெய்ப்பொருள் ஒன்றே இருக்கிறது. அதுவே எல்லாமாகக் காட்சியளிக்கிறது. இவ்வாறு உண்மையை உள்ளவாறு அறிதலே இங்கு புகுதலாகும்.

காட்சிகள் அனைத்தும் மாயத்தோற்றங்கள், மெய்ப்பொருள் மட்டுமே உண்மை என்பதை அவன் தெளிவாக உணர்ந்துகொள்கிறான் என்று பொருள்.

सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।

मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ।। १८ - ५६ ।।

ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாஶ்ரய: ।

மத்ப்ரஸாதாதவாப்நோதி ஶாஶ்வதம் பதமவ்யயம் ।। 18 - 56 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

ஸர்வகர்மாணி அபி - அனைத்து செயல்களையும், **ஸதா** - எப்பொழுதும், **குர்வாண:** - செய்துகொண்டு, **மத்வ்யபாஶ்ரய:** - என்னைச் சார்ந்திருப்பவனாய், **மத்ப்ரஸாதாத்** - என்னுடைய அருளால் (மனத்தூய்மையையும் மெய்யறிவையும் பெற்று), **அவ்யயம்** - அழியாத, **ஶாஶ்வதம்** - நிலையான, **பதம்** - மோக்ஷத்தை (அமைதியான ஆனந்தத்தை), **அவாப்நோதி** - அடைகிறான் (உணர்கிறான்).

பொழிப்புரை

அனைத்து செயல்களையும் எப்பொழுதும் செய்துகொண்டு, என்னைச் சார்ந்திருப்பவனாய், என்னுடைய அருளால் மனத்தூய்மையையும் மெய்யறிவையும் பெற்று, அழியாத, நிலையான, அமைதியான ஆனந்தத்தை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மீண்டும் கர்மயோகத்தின் ஸாரத்தைக் கூறுகிறார்.

கர்மயோகியானவன், இறைவனைச் சார்ந்திருந்து, அனைத்து கர்மங்களையும், அதாவது நித்ய, நைமித்திக கர்மங்களையும், உடல், மனம், வாக்கால் செய்கின்ற கர்மங்களையும் செய்து, அவருக்கு அவற்றை ஸமர்ப்பணம் செய்கிறான்.

Downloaded from **www.omkaravidya.com**

பிறகு, இறைவனுடைய அருளால் மனத்தூய்மை பெற்று, குருவிடம் சென்று, தத்துவ ஞானத்தைப் பெற்று, அழியாத, மாறாத நிலையாகிய மோக்ஷத்தை உணர்கிறான்.

ஆப்நோதி - அடைகிறான் என்பதை இங்கு உணர்கிறான் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

தானே ப்ரஹ்மஸ்வரூபம் என்பதை நன்கு உணர்ந்துகொள்கிறான் என்பது இந்த ச்லோகத்தின் பொருள்.

चेतसा सर्वकर्माणि मयि सन्यस्य मत्परः ।

बुद्धियोगमुपाश्रित्य मच्चित्तः सततं भव ।। १८ - ५७ ।।

सेतसा सर्वकर्माणी मयी सन्न्यस्य मत्पर: ।
पुत्तियोकमुपाश्रित्य मच्चित्त: सततम् पव ।। 18 - 57 ।।

பதவுரை

சேதஸா - விவேக புத்தியினால், **ஸர்வகர்மாணி** - அனைத்து செயல்களையும், **மயி** - என்னிடத்தில், **ஸந்ந்யஸ்ய** - அர்ப்பணித்துவிட்டு, **மத்பர:** - என்னையே குறிக்கோளாகக் கொண்டவனாய், **புத்தியோகம்** - ஸகுண ப்ரஹ்ம த்யானத்தை, **உபாஶ்ரித்ய** - கடைப்பிடித்து, **ஸததம்** - எப்பொழுதும், **மச்சித்த:** - என்னிடத்திலேயே மனதை வைத்தவனாக, **பவ** - இருப்பாயாக.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

விவேக புத்தியினால், அனைத்து செயல்களையும் என்னிடத்தில் அர்ப்பணித்துவிட்டு, என்னையே குறிக்கோளாகக் கொண்டவனாய், ஸகுண ப்ரஹ்ம த்யானத்தைக் கடைப்பிடித்து, எப்பொழுதும் மனதை என்னிடத்திலேயே வைத்தவனாக இருப்பாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தையும் கர்மயோகத்தின் ஸாரமாகவே உபதேசித்திருக்கிறார்.

மனதினால் எல்லாச் செயல்களையும் பகவானுக்கு அர்ப்பணித்து, பேரின்பமே வடிவமான அந்த பகவானையே குறிக்கோளாகக் கொண்டு வாழ வேண்டும்.

எல்லா கர்மங்கள் என்று சொல்லும்போது, மனம், வாக்கு, காயங்களால் செய்யக்கூடிய உலகியல் செயல்கள், ஆன்மிகச் செயல்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அனைத்து செயல்களையும் பகவானுக்கு ஸமர்ப்பணம் செய்ய வேண்டும். நம் மனதில் பதிய வேண்டும் என்பதற்காக, பகவான் இந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் உபதேசிக்கிறார்.

சேதஸா என்றால் விவேக புத்தியினால் என்று பொருள். செயலை விட்டுவிடக் கூடாது. செயல்களைச் செய்து, அவற்றின் பலன்களை பகவானிடத்தில் ஸமர்ப்பணம் செய்ய வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

புத்தியோகம் என்றால் மன ஒருமுகப்பாடு, ஸகுணப்ரஹ்ம த்யானம், ஈச்வர உபாஸனை என்று பொருள் கொள்ளலாம். அதனைச் செய்து, எப்பொழுதும் என்னைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பாயாக என்கிறார் பகவான்.

இந்த ப்ரபஞ்சத்தைப் படைத்து, காத்து, ஒடுக்கி, மறைத்து, அருள்புரிபவர் இறைவன். இறைவனின் இலக்கணங்களை, சாஸ்த்ரங்களின் வாயிலாக உள்ளவாறு அறிந்து, அவரை த்யானிக்க வேண்டும்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருக்கக்கூடிய இலக்கணங்களை த்யானிக்கலாம். இவ்வாறு எப்பொழுதும் ஆனந்த ஸ்வரூபமான ஆண்டவனையே எண்ணிக்கொண்டு இருப்பாயாக என்று கூறுகிறார் பகவான்.

முதல் வரியில், கர்மயோகம் எனப்படும் நிஷ்காம தர்மாநுஷ்டானம் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது வரியில் ஸகுண ப்ரஹ்ம த்யானம் உபதேசிக்கப்பட்டுள்ளது.

मच्चित्तः सर्वदुर्गाणि मत्प्रसादात्तरिष्यसि ।

अथ चेत्त्वमहङ्कारान्न श्रोष्यसि विनङ्क्ष्यसि ।। १८ - ५८ ।।

மச்சித்த: ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத்தரிஷ்யஸி ।

அத சேத்த்வமஹங்காராந்ந ஶ்ரோஷ்யஸி

விநங்க்ஷ்யஸி ।। 18 - 58 ।।

Downloaded from **www.omkaravidya.com**

பதவுரை

மச்சித்த: - என்னிடத்தில் மனதை வைத்தவனாய், **மத்ப்ரஸாதாத்** - என்னுடைய அருளால், **ஸர்வதுர்காணி** - அனைத்துத் துன்பங்களையும், **தரிஷ்யஸி** - கடப்பாய். **அத** - மாறாக, **த்வம்** - நீ, **அஹங்காராத்** - அஹங்காரத்தினால், **ந ஶ்ரோஷ்யஸி சேத்** - கேட்கவில்லையெனில், **விநங்க்ஷ்யஸி** - அழிந்துபோவாய்.

பொழிப்புரை

என்னிடத்தில் மனதை வைத்தவனாய், என்னுடைய அருளால், அனைத்துத் துன்பங்களையும் கடப்பாய். மாறாக, நீ அஹங்காரத்தினால் கேட்கவில்லையெனில், அழிந்துபோவாய்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், என்னிடத்திலேயே மனதை வை என்று கூறினார். ஈச்வர தத்துவத்தை நன்கு உணர்ந்து, அவரிடத்தில் மனதை வைக்க வேண்டும்.

ஈச்வரன் சமூக வடிவில் இருக்கிறார். சமூகத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணமானது, தொடர்ந்து இருந்துகொண்டே இருக்க வேண்டும். சமூகம் நம்மை ஏற்றுக்கொள்கிறதா என்றெல்லாம் பார்க்கக்கூடாது.

சமூகத்திற்குச் செய்வது பகவானுக்குச் செய்வதாகும். சமூக ஸ்வரூபமாக இருக்கும் ஈச்வரனை நினைத்துக்கொண்டு, கர்மங்களைச் செய்ய வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

அவ்வாறு பகவானுக்கு ஸமர்ப்பணம் செய்பவனுக்கு பகவான் அருள்புரிகிறார். இறைவழிபாட்டுணர்வுடன், நாம் செய்யக்கூடிய தர்மானுஷ்டானத்திற்கு பகவான் இவ்வாறு பலன் கொடுக்கிறார். அதாவது, அவருடைய அருளால், எல்லா கஷ்டங்களையும் நம்மால் வெற்றிகொள்ள முடியும், கடக்க முடியும்.

மீண்டும் மீண்டும் ஸம்ஸாரத்தில் உழல்வதற்குக் காரணமான வினைப்பயன்களைக் கடந்துவிட முடியும். மனதிலுள்ள அழுக்குகள் நீங்கி, அறியாமையும் நீங்கி, மோக்ஷத்தை உணர முடியும்.

அர்ஜுனனுக்கு பகவான் மீது எவ்வளவு ச்ரத்தை இருக்கிறது என்பது பகவானுக்குத் தெரியும். இருப்பினும், உலகில் சிலர் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அவர்களுக்காக, பகவான் ஒரு தாயின் கண்டிப்பு உணர்வுடன் கூறுகிறார்.

உலகில் எல்லா மனிதர்களையும் மனதில் வைத்துக்கொண்டு, ஸ்ரீவேதவ்யாஸர் இதனை எழுதுகிறார். பகவானுடைய உபதேசத்தைக் கேட்கவில்லையெனில் என்ன ஆகும் என்று சொல்கிறார்.

ஒரு வேளை, அஹங்காரத்தினால் ஒருவன் தனக்கே எல்லாம் தெரியும் என்று கருதி, பகவான் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நினைத்தால், வாழ்க்கையின் குறிக்கோளாகிய மோக்ஷத்தை அடையாமல், முழுமையான அமைதியை உணராமல், வாழ்க்கையை வீணாக்கியவனாக ஆகிவிடுவான்.

Downloaded from **www.omkaravidya.com**

ந ஹி ப்ரவேத ஸுக்ருதஸ்ய பந்தா। நான் சொல்கின்ற உபதேசத்தை நீ கேட்கவில்லையென்றால், உனக்கு நல்ல வழியே தெரியாமல் போய்விடும் என்று வேதத்தில் ஒரு மந்த்ரம் இருக்கிறது.

நான் சொல்வதைக் கேட்கவில்லையெனில், நீ எப்படி உருப்படப் போகிறாயோ? என்று தாய் சொல்வதைப்போல, பகவான் கூறுகிறார்.

அழிந்துபோவாய் என்றால், வாழ்க்கையின் குறிக்கோளாகிய மோக்ஷத்தை அடையாமல், வாழ்க்கையை வீணாக்கியவனாக ஆகிவிடுவாய் என்று பொருள்.

வேதத்தின் உபதேசமும் பகவானுடைய உபதேசமும் ஒன்றே. தான் சொல்வதைக் கேட்கவில்லையென்றால் என்ன ஆகும் என்று பகவான் முன்பே கூறினார்.

யே த்வே ததப்யஸூயந்த: நானுதிஷ்டந்தி மே மதம் ।
ஸர்வஜ்ஞானவிமூடாந்ஸ்தாந் வித்தி நஷ்டாநசேதஸ: ।। 3 - 32 ।।

யார் என்னுடைய சொற்களைக் கேட்கவில்லையோ, அவர்களுடைய வாழ்க்கை வீணாகிவிடும் என்று கூறினார்.

பகவானைச் சார்ந்திருந்து அறத்தைக் கடைப்பிடித்தால், நம் செயல்களுக்குப் பலன்களாக, பகவான் மனத்தூய்மை, மெய்யறிவு, மோக்ஷம் எல்லாவற்றையும் அருள்வார். இறையருளால் நம் முயற்சிகள் சிறந்த பலனைத் தரும், வாழ்க்கை பயனுள்ளதாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

பகவான் கூறுவதைக் கேட்கவில்லையென்றால், வாழ்க்கையில் முயற்சிகள் அனைத்தும் பொன்னுக்கும் பொருளுக்கும் போகத்திற்கும் சென்று, எதற்கு முயற்சி செய்ய வேண்டுமோ, அதற்கு முயற்சி செய்யாமலேயே, வாழ்க்கையின் மேலான குறிக்கோளாகிய அமைதியான ஆனந்தத்தை உணராமலேயே வாழ்க்கை முடிந்துவிடும்.

यदहङ्कारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।

मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ।। १८ - ५९ ।।

यदहंङ्कारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।

मित्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वाम्

नियोक्ष्यति ।। 18 - 59 ।।

பதவுரை

அஹங்காரம் - அஹங்காரத்தை, **ஆஸ்ரித்ய** - கைக்கொண்டு, **ந யோத்ஸ்யே** - போரிட மாட்டேன், **இதி** - என்று, **யதி மந்யஸே** - நினைப்பாய் எனில், **தே** - உன்னுடைய, **ஏஷ:** - இந்த, **வ்யவஸாய:** - உறுதியானது, **மித்யா (ஏவ)** - பொய்யானது. **ப்ரக்ருதி:** - (உன்னுடைய) இயல்பானது, **த்வாம்** - உன்னை, **நியோக்ஷ்யதி** - தூண்டும்.

பொழிப்புரை

அஹங்காரத்தைக் கைக்கொண்டு, போரிட மாட்டேன் என்று நினைப்பாய் எனில், உன்னுடைய உறுதியானது பொய்யானது.

Downloaded from **www.omkaravidya.com**

ஏனெனில் உன்னுடைய இயல்பே, உன்னைச் செயலில் தூண்டும்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அர்ஜுனனுக்குச் சொல்வதுபோல், நம் எல்லோருக்கும் இவ்வாறு கூறுகிறார்.

ஒருவேளை, அஹங்காரத்தினால், தன்முனைப்பினால், நான் சுதந்திரமானவன், இன்னொருவர் சொல்வதை நான் ஏன் கேட்க வேண்டும் என்று நினைத்து, கடமையைச் செய்ய மாட்டேன் என்று ஒருவர் சொல்லலாம். அவ்வாறு கூறுகின்ற உறுதியானது, உண்மையல்ல என்கிறார் பகவான்.

அர்ஜுனனின் ஸ்வபாவம் பகவானுக்கு நன்றாகவே தெரியும். பொதுவாக, மனிதர்களின் ஸ்வபாவமும் தெரியும்.

இத்தனைக் காலமாக, தனது கடமையைச் செய்தவன் அர்ஜுனன். ஒரு துன்பத்தின் காரணமாகத்தான் கடமையிலிருந்து விலக நினைக்கிறான்.

அவனைக் கடமையைச் செய்ய வைப்பதில் பகவானுக்கு தாத்பர்யமில்லை. கடமையைச் செய்வதால் துன்பம் வரும் என்று அவன் நினைப்பதை மாற்றுவதுதான் நோக்கம் என்று ஆதிசங்கரர், மிக ஆழமாக நாம் சிந்திக்கும்படி உபதேசிக்கிறார்.

பொதுவாக, இது மனிதர்களின் இயல்புதான். கடமையைச் செய்ய முற்பட்டாலும், துன்பம் வந்தவுடன் அதிலிருந்து

Downloaded from **www.omkaravidya.com**

விலகி விடுகிறார்கள். அப்படி விலகக் கூடாது என்பதுதான் கீதையின் மிக முக்கியமான உபதேசம்.

கடமையைச் செய்ய மாட்டேன் என்று சொல்கின்ற உறுதியானது, வெறும் தோற்றமே, அது உண்மையல்ல என்கிறார் பகவான். ஏன் அவ்வாறு சொல்கிறார் என்பதற்குக் காரணத்தையும் சொல்கிறார். இத்தனை காலமாக, கடமையைச் செய்து பழகியிருக்கிறோம். நம்மால் சும்மா இருக்க முடியாது. இதைச் செய்யவில்லையெனில், வேறு எதையாவது செய்துகொண்டிருப்போம்.

நமக்கு மிகவும் பழக்கமானவற்றைத்தான் நம்மால் செய்ய முடியும். நம்முடைய ஸ்வபாவமே, நம்மை கடமையைச் செய்யத் தூண்டும் என்று பகவான் கூறுகிறார்.

கடமை என்றில்லாவிட்டாலும், ஏதாவது ஒன்றைச் செய்யத் தோன்றும். ஆயுதம் பிடித்த கையால் சும்மா இருக்க முடியாது. அத்தகையவன், எதையாவது கீறிக் கொண்டிருப்பான். அமைதியாக அமர்ந்திருக்கக்கூடிய மனப்பக்குவம் அவனுக்கு இருக்காது.

இறைவன், பொதுவாக, மக்கள் எல்லோர் பொருட்டும் உபதேசிப்பதாகப் புரிந்துகொள்ள வேண்டும். தன்முனைப்பை வைத்துக்கொண்டு, கடமையைச் செய்யத் தவறினால், நம்முடைய எண்ணம் சரிவராது.

Downloaded from **www.omkaravidya.com**

ப்ரக்ருதியானது, இயல்பாகவே ஏதாவது ஒரு செயலைச் செய்யும்படி நம்மைத் தூண்டும். அந்தச் செயலை முறையாகச் செய்தால், நமக்கும் சமூகத்திற்கும் நன்மை ஏற்படும்.

स्वभावजेन कौन्तेय निबद्धः स्वेन कर्मणा ।

कर्तुं नेच्छसि यन्मोहात्करिष्यस्यवशोऽपि तत् ।। १८ - ६० ।।

ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்த: ஸ்வேந கர்மணா ।

கர்த்தும் நேச்சஸி யந்மோஹாத்கரிஷ்யஸ்யவஶோऽபி

தத் ।। 18 - 60 ।।

பதவுரை

ஹே கௌந்தேய! - ஓ குந்தியின் புதல்வனே! **மோஹாத்** - அவிவேகத்தினால், **யத்** - எதை, **கர்த்தும்** - செய்வதற்கு, **ந இச்சஸி** - நீ விரும்பவில்லையோ, **தத்** - அதை, **ஸ்வபாவஜேந** - உடன்பிறந்த இயல்பாகிய, **ஸ்வேந** - உன்னுடைய, **கர்மணா** - கடமையினால், **நிபத்த:** - கட்டுண்டவனாய், **அவஶ: அபி** - உன் வசமின்றியே, **கரிஷ்யஸி (ஏவ)** - செய்தே தீருவாய்.

பொழிப்புரை

ஓ குந்தியின் புதல்வனே! அவிவேகத்தினால், எதைச் செய்வதற்கு நீ விரும்பவில்லையோ, அதனை, உடன்பிறந்த இயல்பாகிய உன்னுடைய கடமையினால் கட்டுண்டவனாக, உன் வசமின்றியே செய்வாய்.

Downloaded from **www.omkaravidya.com**

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அர்ஜுனனின் ஸ்வபாவத்தை இங்கு கூறுகிறார்.

அர்ஜுனனுடைய பிறப்பு, வளர்ப்பு, சூழ்நிலை, ஸ்வபாவம் முதலியவை க்ஷத்ரிய ஸ்வபாவம். அவனுக்கு க்ஷத்ரிய தர்மம் அமைந்திருக்கிறது. அந்தக் கடமையினால் அவன் கட்டுண்டவனாக இருக்கிறான்.

சூழ்நிலையினால், இயல்பாகவே, அந்தச் செயல்களைச் செய்து அவன் பழக்கப்பட்டிருக்கிறான். அதனால் அவனால் சும்மா இருக்க முடியாது.

ஒரு வேளை, அவிவேகத்தினால், தாற்காலிகமான இந்தச் சூழ்நிலையினால், துன்பத்தைச் சரியாக நீக்கிக்கொள்ள வழிதெரியாமல், பற்று, பாசம், அறியாமையினால், மயக்கத்தினால், கடமையைச் செய்ய வேண்டாம் என்று அர்ஜுனன் விரும்பினாலும்கூட, ப்ரக்ருதி அவனை விடாது.

தன்வசமில்லாமலேயே அதனை அவன் செய்யத்தான் போகிறான் என்கிறார் பகவான்.

ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।
கார்யதேஹ்யவஶ: கர்ம ஸர்வப்ரக்ருதிஜைர்குணை: ।। 3 - 5 ।।

என்று பகவான் கூறினார். கணநேரம்கூட செயல்புரியாமல் யாராலும் இருக்க முடியாது. தன்வயமின்றியே, ப்ரக்ருதியினால் தூண்டப்பட்டுச் செயல்களில் ஈடுபடுகிறோம்.

Downloaded from **www.omkaravidya.com**

பழக்கத்திலிருந்து யாராலும் அவ்வளவு எளிதில் விடுபட முடியாது.

ஒரு பழக்கத்திலிருந்து மற்றொரு பழக்கத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாலும்கூட, சில நேரங்களில் செய்ய முடியாது. வாழ்க்கையின் இந்த உண்மையை பகவான் நமக்கு உணர்த்துகிறார்.

இதன் ஸாரம் என்னவென்றால், நம்முடைய விருப்பு வெறுப்புகளுக்கு இங்கு இடம் கொடுக்கக்கூடாது. இத்தனை காலமாக ஒழுங்காகச் செய்துவந்த கடமையை, தொடர்ந்து செய்வதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

முரட்டுத்தனமாக, செய்ய மாட்டேன் என்று சொன்னால், ப்ரக்ருதி நம்மை விடாது என்று எச்சரிக்கை செய்கிறார் பகவான்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।

भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ।। १८ - ६१ ।।

ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி ।

ப்ராமயந்ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா ।। 18 - 61 ।।

பதவுரை

ஹே அர்ஜுந! - ஓ தூய மனம் படைத்தவனே! **ஈஶ்வர:** - இறைவன், **ஸர்வபூதாநி** - அனைத்து உயிர்களையும், **யந்த்ர-ஆரூடாநி (இவ)** - இயந்திரத்தில் ஏற்றி

Downloaded from **www.omkaravidya.com**

வைக்கப்பட்டவை போல், **மாயயா** - மாயாசக்தியினால், **ப்ராமயந்** - ஆட்டுவித்துக்கொண்டு, **ஸர்வபூதானாம்** - அனைத்து உயிர்களுடைய, **ஹ்ருத்-தேஶே** - உள்ளங்களில், **திஷ்டதி** - வீற்றிருக்கிறார்.

பொழிப்புரை

ஓ தூய மனம் படைத்தவனே! இறைவன், அனைத்து உயிர்களையும், இயந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்டவைபோல், மாயாசக்தியினால், ஆட்டுவித்துக்கொண்டு, செயல்களில் ஈடுபடுத்திக் கொண்டு, அனைத்து உயிர்களுடைய உள்ளங்களிலும் வீற்றிருக்கிறார்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், ஸ்வதர்மத்தை, கடமையைச் செய்துதான் ஆக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறி வருகிறார்.

இந்த ச்லோகத்தில் ஆதிசங்கரர் **அர்ஜுந:** என்ற சொல்லுக்கு, **ஸ்வச்சஸ்வபாவ:** என்ற அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறார். நல்ல இயல்பு உடையவனே! தூய்மையான ஸ்வபாவம் உடையவனே! கபடமில்லாதவனே! நேர்மையானவனே! என்று பொருள்.

மருத மரத்திற்கு அர்ஜுன வ்ருக்ஷம் என்று பெயர். அது நேராகத்தான் வளரும். **ருஜுஸ்வபாவ:** என்று சொல்வர், நேர்மை என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

எல்லா உயிர்களின் உள்ளங்களிலும் இறைவன் அந்தர்யாமியாக இருக்கிறார். நம்முடைய வாஸனைகளுக்கேற்ப நாம் செயல்புரிவதற்கு அருள்புரிந்து கொண்டிருக்கிறார்.

கடவுள்தான் செயல்புரிகிறார் என்று பொருளல்ல, கடவுள் இல்லாமல் எந்தச் செயலையும் நாம் செய்ய முடியாது. நாம் நிறைய செயல்களைச் செய்து பழகியிருக்கிறோம். செயல்புரிந்துகொண்டே இருப்பவன், திடீரென்று செயலற்ற தன்மைக்கு மாறிவிட முடியாது. சிறிது சிறிதாகத்தான் மாற முடியும்.

இறைவன் அனைத்து உடல்களிலும் இருந்துகொண்டு, அனைத்து உயிர்களையும் உள்ளங்களையும் வ்யாபித்துக்கொண்டு இருக்கிறார்.

மலர்மிசை ஏகினான் (திருக்குறள் - 3)

என்பது திருவள்ளுவர் வாக்கு. உள்ளத்தாமரையில் உணர்வாக வீற்றிருப்பவர் என்று பொருள்.

இறைவன் அனைத்து உடல்களையும் உயிர்களையும் உள்ளங்களையும் இயக்கிக் கொண்டிருக்கிறார்.

ப்ராமயந் என்றால் அந்தந்த செயல்களில் அவரவர்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்று பொருள்.

எப்படி என்றால், **யந்த்ராரூடாணி மாயயா** - பெரிய கடைகளின் வாயில்களில் பெரிய பெரிய பொம்மைக்குள் ஒருவன்

Downloaded from **www.omkaravidya.com**

நின்றுகொண்டு, கை கால்களை அசைத்து, அதனை இயக்குகிறான். அதுபோன்று, பகவான் எல்லா உயிர்களின் உள்ளிருந்துகொண்டு, அனைத்தையும் இயக்குகிறார் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

ஜாநாமி தர்மம் ந ச மே ப்ரவ்ருத்தி:
ஜாநாம்யதர்மம் ந ச மே நிவ்ருத்தி: ।
கேநாபி தேவேந ஹ்ருதிஸ்திதேந
யதா நியுக்தோஸ்மி ததா கரோமி ।।

எனக்கு தர்மம் என்றால் என்னவென்றும், அதர்மம் என்றால் என்னவென்றும் தெரியும். தர்மத்தில் ஈடுபட முடியவில்லை, அதர்மத்தை விட முடியவில்லை. யாரோ ஒருவன் என் ஹ்ருதயத்தில் இருந்துகொண்டு என்னை நடத்துகிறான் என்று துர்யோதனன் கூறுவதாக ஒரு ச்லோகம் இருக்கிறது.

இறைவன் ஹ்ருதயத்திலிருந்து மாயையினால் செயல்படுத்துகிறார் என்பதைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

வித்யா மாயையினால் என்று புரிந்துகொள்ள வேண்டும். அவித்யாமாயையினால் இயக்கப்படுவதாக துர்யோதனன் கூறுவது தர்மமாகாது. யாரோ ஒரு தேவன் என்னுள்ளிருந்து தூண்டுகிறான் என்று சொல்வது, தப்பித்துக் கொள்கின்ற ஒரு வழிதான்.

கடவுள் நமக்கு புத்தியைக் கொடுத்திருக்கிறார், சிந்திக்கின்ற ஆற்றலைக் கொடுத்திருக்கிறார், சாஸ்த்ரங்களைக்

Downloaded from **www.omkaravidya.com**

கொடுத்திருக்கிறார். அதில் நம்முடைய முயற்சியை இணைத்துச் செயல்படுத்த வேண்டுமே தவிர, எல்லாவற்றையும் கடவுளின் தலையில் போட்டுவிடக் கூடாது.

இதனைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும். நமக்கும் தேர்ந்தெடுக்கின்ற ஆற்றலை, சுயமாக இயங்குகின்ற சுதந்திரத்தை, பகவான் கொடுத்திருக்கிறார். நாம் அதைச் சரியாகப் பயன்படுத்தினால், நம்முடைய செயல்கள் நன்கு நடப்பதற்கு இறைவன் அருள்புரிவார். தவறாகப் பயன்படுத்தினாலும், அது அவரது அருளால்தான் நடக்கிறது.

வெளிச்சமில்லாமல் நம்மால் செயல்பட முடியாது. அதே சமயம், வெளிச்சம் நம்முடைய நற்செயல்கள், தீய செயல்களுக்குக் காரணமாக ஆகாது.

இறைவன் நம் உள்ளங்களில் இருந்துகொண்டு, நம்மை இயக்குகிறார். அவரில்லாமல் நம்மால் ஒரு துரும்பைக்கூட நகர்த்த முடியாது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று சொல்வது இதைத்தான்.

மாயயா என்றால் உள்ளுக்குள் இருந்துகொண்டு மாயாஜாலம் செய்பவன் என்று ஒரு பொருள். மற்றொரு பொருள், தனது மாயாசக்தியினால் நம்மையெல்லாம் இயக்கிக்கொண்டு இருக்கிறார் என்பது.

இயந்திரத்திற்குள் இருந்துகொண்டு, ஒருவன் இயந்திரத்தை இயக்குவதைப்போல், இறைவன் தனது மாயாசக்தியினால் உயிர்களின் உள்ளங்களில் அவரவரின் செயல்களைத் தூண்டி,

Downloaded from **www.omkaravidya.com**

இயக்கிக் கொண்டிருக்கிறார். இதனைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நம்மிடம் முயற்சி செய்கின்ற சக்தி இருக்கிறது. இருந்தாலும், இறைவனின் அருளால்தான் செயல்புரிகிறோம்.

இந்த ச்லோகத்தின் ஸாரம் என்னவென்றால், இறைவனின் அருளில்லாமல், நம்முடைய முயற்சியை மட்டும் கொண்டு நம்மால் செயல்பட முடியாது.

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।

तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ।। १८ - ६२ ।।

தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத ।

தத்ப்ரஸாதாத்பராம் ஶாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி

ஶாஶ்வதம் ।। 18 - 62 ।।

பதவுரை

ஹே பாரத! - ஓ பரதகுலத்தில் தோன்றியவனே! **தம் ஏவ** - (சாஸ்த்ரரூபமாக இருக்கின்ற) அவரையே, **ஸர்வபாவேந** - முழுமனதுடன் (எல்லா வகையிலும்), **ஶரணம்** - சரணம், **கச்ச** - அடைவாயாக (சார்ந்திருப்பாயாக). **தத்ப்ரஸாதாத்** - அவருடைய அருளால், **பராம்** - மேலான, **ஶாந்திம்** - அமைதியையும் (ஜீவன் முக்தியையும்), **ஶாஶ்வதம்** - அழிவில்லாத, **ஸ்தாநம்** - நிலையையும் (விதேஹ முக்தியையும்), **ப்ராப்ஸ்யஸி** - அடைவாய்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஓ பரதகுலத்தில் தோன்றியவனே! சாஸ்த்ரரூபமாக இருக்கின்ற அவரையே, முழுமனதுடன் எல்லா வகையிலும் சரணடைவாயாக, சார்ந்திருப்பாயாக. அவருடைய அருளால், மேலான அமைதியாகிய ஜீவன் முக்தியையும், அழிவில்லாத நிலையாகிய விதேஹ முக்தியையும் அடைவாய்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், எவ்வாறு சரணாகதி செய்ய வேண்டும் என்று இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

பகவானையே அனைத்து வகையிலும் முழுமையாக, எண்ணங்களாலும் சொற்களாலும் செயல்களாலும் சார்ந்திருப்பாயாக! என்று ஆனந்தகிரி என்ற உரையாசிரியர் விளக்கம் கூறுகிறார்.

ஶரணம் என்றால் சார்ந்திருத்தல். இறைவன் சாஸ்த்ரரூபமாக இருக்கிறார். சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று பகவான் ஏற்கெனவே (16-24) ச்லோகத்தில் கூறியருளினார்.

பகவானை சரணாகதி செய்வது என்பது சாஸ்த்ர சரணாகதியே ஆகும்.

சாஸ்த்ரத்தில் செய்யத் தக்கது எது, செய்யத் தகாதது எது என்று கூறப்பட்டுள்ளவற்றை அறிந்து, செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும், செய்யக் கூடாதவற்றைச் செய்யக் கூடாது.

Downloaded from **www.omkaravidya.com**

மனோபாவனையினால், இறைவா! நான் உன்னையே சார்ந்திருக்கிறேன் என்று கூறுகிறோம். நம்முடைய முயற்சி செய்கின்ற சக்தியை, பகவான் அருளியுள்ள சாஸ்த்ரத்துடன் சேர்க்க வேண்டும். அதுவே ஈச்வர சரணாகதியாகும்.

பகவானை சரணாகதி செய்திருக்கிறேன் என்று சொல்கிறோம். பகவான் என்பவர் யார்? என்று நமக்குக் கற்றுக்கொடுப்பதே சாஸ்த்ரம்தான். பகவானுடைய இலக்கணங்களைத் தெரிந்துகொள்ளாமல், அவரை எப்படி சரணடைய முடியும்?

பகவான் சாஸ்த்ரரூபமாக இருக்கிறார் என்பது அனைத்து மஹான்களுக்கும் ஏற்புடைய விஷயமாகும்.

தம் ஏவ ஶரணம் கச்ச। என்றால், உன்னுடைய எண்ணங்கள், சொற்கள், செயல்கள் அனைத்தும் சாஸ்த்ரத்தையே சார்ந்திருக்கட்டும் என்று பொருள்.

சாஸ்த்ரரூபமாக இருக்கின்ற இறைவனின் அருளால், நிலையான, மேலான அமைதியை நாம் அடைய முடியும் என்று பகவான் கூறுகிறார்.

பராம் ஶாந்திம் என்றால் அமைதி, சஞ்சலம் ஆகியவற்றைக் கடந்த, ஞானத்தினால் உண்டாகும் பேரமைதி என்று பொருள்.

ஶாஶ்வதம் ஸ்தானம் என்றால், இந்த உடலை விட்டுக் கிளம்பிய பிறகு, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள் ஸ்வரூபமாகவே ஆகிவிடுதல் என்று அர்த்தம். இது விதேஹ முக்தியைக் குறிக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

சாஸ்த்ரரூபமான இறைவனை முழுமையாகச் சார்ந்திருப்பதால், ஜீவன்முக்தியையும் விதேஹமுக்தியையும் அடைவாய் என்று பொருள்.

இதுவரை பகவான் உபதேசம் செய்த அனைத்துமே சாஸ்த்ரம்தான். சாஸ்த்ரத்தைச் சார்ந்திருந்தால், நமக்கு என்ன பயன் கிடைக்கும் என்பதை பகவான் இந்த ச்லோகத்தில் அழகாக உபதேசித்திருக்கிறார்.

इति ते ज्ञानमाख्यातं गुह्याद्गुह्यतरं मया ।

विमृश्यैतदशेषेण यथेच्छसि तथा कुरु ।। १८ - ६३ ।।

இதி தே ஜ்ஞானமாக்யாதம் குஹ்யாத்குஹ்யதரம் மயா ।
விம்ருச்யைததஶேஷேண யதேச்சஸி ததா குரு ।। 18 - 63 ।।

பதவுரை

இதி - இவ்வாறு, **குஹ்யாத்** - ரஹஸ்யத்திலும், **குஹ்யதரம்** - சிறந்த ரஹஸ்யமான, **ஜ்ஞானம்** - (துன்பத்தை நீக்குகின்ற வழியைக் கூறுகின்ற) மெய்யறிவு, **மயா** - என்னால், **தே** - உனக்கு, **ஆக்யாதம்** - கூறப்பட்டது. **ஏதத்** - இதை, **அஶேஷேண** - முழுமையாக, **விம்ருச்ய** - சிந்தித்துப் பார்த்து, **யதா** - எப்படி, **இச்சஸி** - விரும்புகிறாயோ, **ததா** - அப்படி, **குரு** - செய்வாயாக.

பொழிப்புரை

இவ்வாறு, ரஹஸ்யத்திலும் சிறந்த ரஹஸ்யமான, துன்பத்தை நீக்குகின்ற வழியைக் கூறுகின்ற மெய்யறிவானது, என்னால்

Downloaded from **www.omkaravidya.com**

உனக்குக் கூறப்பட்டது. இதை முழுமையாகச் சிந்தித்துப் பார்த்து, எப்படி விரும்புகிறாயோ, அப்படிச் செய்வாயாக.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், கீதா சாஸ்த்ரத்தை நிறைவு செய்யப் போகிறார்.

பகவான் இவ்வாறு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கை நெறிமுறைகளையும் மெய்ப்பொருள் தத்துவத்தையும், அதாவது கர்மயோகத்தையும் ஞானயோகத்தையும் உபதேசித்தார்.

கர்மயோகத்திற்குள் உபாஸனா யோகமும் அடங்கியிருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

பகவானால், இந்த ஞானம் வழங்கியருளப்பட்டது. இது **குஹ்யாத் குஹ்யதரம்** - உள்ளத்தின் ஆழத்தில் பதிய வைத்து, பாதுகாக்கப்பட வேண்டியவைகளில் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டியது.

ஏனெனில், கர்மயோக ஞானமும், ஞானயோக ஞானமும்தான் ஒரு மனிதனுக்கு உண்மையான, ஆழமான, அமைதியான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய சக்தி படைத்தவை.

குஹ்யாத் குஹ்யதரம் என்றால் மிகவும் ரஹஸ்மானது என்று அர்த்தம். **ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்** என்ற ९ ஆவது அத்யாயத்தில் இதைப் பற்றிப் பார்த்தோம்.

Downloaded from **www.omkaravidya.com**

இதன் பரமதாத்பர்யம் என்னவென்றால், இது மனதில் பதிய வைத்துப் பாதுகாக்க வேண்டியவைகளுள் முக்கியமானது என்பதாகும். இதற்கு மிகுந்த மதிப்புத் தர வேண்டும் என்று அர்த்தம்.

இரண்டாவது வரியில், 'இதனை முழுமையாக ஆராய்ச்சி செய்து பார்த்த பிறகு, நீ எப்படி விரும்புகிறாயோ, அப்படிச் செய்' என்று கூறி, சுதந்திரம் கொடுக்கிறார்.

நான் உபதேசித்ததை நீ கடைப்பிடித்துத்தான் ஆக வேண்டும் என்று அவசியமில்லை என்று இங்கு அர்த்தமில்லை!

பகவான் கூறிய கருத்துகளை மீண்டும் பல முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் இதன் மஹத்துவம் நமக்குப் பிடிபடும்.

அவ்வாறு நன்கு ஆராய்ச்சி செய்த பிறகும், என்னால் யுத்தம் செய்ய முடியாது, நான் துறவியாகப் போகிறேன் என்று சொன்னாலும் சரி, யுத்தம் செய்கிறேன் என்று சொன்னாலும் சரி என்கிறார் பகவான்.

இங்கு பகவான் யதேஷ்டாச்சாரத்தை, அதாவது மனம் போனபடி வாழ்வதைப் பரிந்துரை செய்யவில்லை. அப்படிச் செய்தால், தனிமனிதனுக்கும் குறிப்பாக, முக்கியமாக சமூகத்திற்கும் பெரிய பாதிப்பு வரும்.

சமூகத்தில் அறம் மிக முக்கியம். இது பொருளியலைச் சார்ந்த அறமல்ல, அருளியலைச் சார்ந்த உயர்ந்த அறம். கண்ணுக்கும்

Downloaded from **www.omkaravidya.com**

கருத்துக்கும் எட்டாத பல நன்மைகளை நமக்குச் செய்யக் கூடியது.

கீதையில் கூறப்பட்டுள்ளவை, மேலெழுந்தவாரியான கருத்துகள் அல்ல, அவை ஆழமான தத்துவங்களாகும்.

सर्वगुह्यतमं भूयः शृणु मे परमं वचः ।

इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम् ।। १८ - ६४ ।।

ஸர்வகுஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரமம் வச: ।

இஷ்டோऽஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே

ஹிதம் ।। 18 - 64 ।।

பதவுரை

பரமம் - உயர்ந்ததும், **ஸர்வகுஹ்யதமம்** - எல்லா ரஹஸ்யங்களிலும் சிறந்ததுமான (எல்லோராலும் ச்ரத்தாபக்தியுடன் பாதுகாக்கப்பட வேண்டிய), **மே** - எனது, **வச:** - வார்த்தையை, **பூய:** - மீண்டும், **ஸ்ருணு** - கேட்பாயாக. **மே** - எனக்கு, **த்ருடம் இஷ்ட:** - மிகவும் ப்ரியமானவனாக (என்னிடத்தில் பிறழாத பக்தி உடையவனாக), **அஸி** - இருக்கிறாய், **இதி தத:** - என்பதனால், **தே** - உனக்கு, **ஹிதம்** - நன்மையை, **வக்ஷ்யாமி** - உரைப்பேன்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

உயர்ந்ததும், எல்லா ரஹஸ்யங்களிலும் சிறந்ததும், எல்லோராலும் ச்ரத்தாபக்தியுடன் பாதுகாக்கப்பட வேண்டியதுமான எனது வார்த்தையை மீண்டும் கேட்பாயாக. எனக்கு மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறாய், என்னிடத்தில் பிறழாத பக்தி உடையவனாக இருக்கிறாய் என்பதனால், உனக்கு நன்மையை உரைப்பேன்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், மனதில் ஆழமாக வைத்துப் பாதுகாக்க வேண்டிய இந்த சாஸ்த்ரத்தின் வாக்யத்தை, அர்ஜுனன் மீண்டும் ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்கு உதவியாக இருக்கும் வகையில், மீண்டும் சுருக்கமாகக் கூறப் போவதாக, மிகுந்த கருணையுடன் ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

இறைவனுடைய வாக்யத்தைத்தான் நாம் ஆழமான மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அவை வாழ்க்கையில் நாம் மிகவும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய உபதேச சொற்களாகும்.

ஏன் மீண்டும் உபதேசிக்கப் போகிறார் என்பதற்கு பகவானே காரணம் கூறுகிறார். எனக்கு மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறாய் என்கிறார்.

நீ எனக்கு பக்தனாகவும் நண்பனாகவும் இருக்கிறாய் என்று (4-3) ச்லோகத்தில் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

த்ருடம் இஷ்ட: - பகவான் தனக்கு அர்ஜுனன் மிகவும் ப்ரியமானவன் என்று கூறுகிறார்.

இதற்கு, ஒரு நாள்கூட உனக்கு என்னிடத்தில் அன்பு குறைந்ததில்லை, அப்பேர்ப்பட்ட ப்ரியம் உள்ளவனாக நீ இருக்கிறாய் என்று அர்த்தம். ஆகவே, உனக்கு நன்மையை உபதேசிக்கப் போகிறேன் என்கிறார் பகவான்.

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।

मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ।। १८ - ६५ ।।

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि

मे ।। 18 - 65 ।।

பதவுரை

மந்மநா: - என்னிடம் மனதை வைத்தவனாகவும், **மத்பக்த:** - என்னிடம் பக்தி உள்ளவனாகவும், **மத்யாஜீ** - என்பொருட்டு வேள்விகளைச் செய்பவனாகவும், **பவ** - இருப்பாயாக. **மாம்** - என்னை, **நமஸ்குரு** - நமஸ்கரிப்பாயாக (முற்றிலும் சார்ந்திருப்பாயாக). **மாம் ஏவ** - (அமைதியே வடிவான, ஆனந்தமே வடிவான) என்னையே, **ஏஷ்யஸி** - அடைவாய். **தே** - உனக்கு, **ஸத்யம்** - உண்மையாக, **ப்ரதிஜாநே** - உறுதிகூறுகிறேன். **மே** - எனக்கு, **ப்ரிய:** - ப்ரியமானவனாக, **அஸி** - இருக்கிறாய்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

என்னிடம் மனதை வைத்தவனாகவும் என்னிடம் பக்தி உள்ளவனாகவும் என்பொருட்டு வேள்விகளைச் செய்பவனாகவும் இருப்பாயாக. என்னை நமஸ்கரிப்பாயாக, முற்றிலும் சார்ந்திருப்பாயாக. அமைதியே வடிவான, ஆனந்தமே வடிவான என்னையே அடைவாய். உனக்கு உண்மையாக உறுதி கூறுகிறேன். எனக்கு ப்ரியமானவனாக இருக்கிறாய்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் கர்மகாண்டத்தின் அல்லது கர்மயோகத்தின் ஸாரத்தை உபதேசிக்கிறார்.

நீ எனக்கு மிகவும் அன்புக்குரியவனாக இருக்கிறாய் என்று அர்ஜுனனிடம் மீண்டும் கூறுகிறார் பகவான். நான் உனக்கு உறுதி கூறுகிறேன். இவ்வாறு இதை நீ கடைப்பிடித்தால், நிச்சயமாக என்னையே அடைவாய் என்கிறார்.

பகவான் கூறுகின்ற இவற்றையெல்லாம் கடைப்பிடிப்பவர், இறைவனுடைய ஆனந்தத்தை உணரக்கூடிய வாய்ப்புடையவராக இருக்கிறார்.

மந்மநா: பவ - ஆனந்தமே வடிவமான, அமைதியே வடிவான இறைவனைக் குறிக்கோளாகக் கொள் என்று பொருள்.

மத்பக்த: பவ - துன்பமில்லாத பேரின்பமாகிய இறைவனையே போற்றி வழிபடு என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

நாம் செய்கின்ற வழிபாடுகளின் பயன், உண்மையான தத்துவத்தை உணர்ந்து, அமைதியில் ஆனந்தத்தில் திளைத்திருப்பதே ஆகும்.

மத்யாஜீ பவ - என்பொருட்டு வேள்விகளைச் செய்.

மாம் நமஸ்குரு - என்னையே வணங்குவாயாக.

நமஸ்குரு என்பதற்கு - என்னையே முற்றிலும் சார்ந்திருப்பாயாக என்று ஆதிசங்கரர் பொருள் கூறுகிறார்.

வாழ்க்கையில் அடைய வேண்டிய குறிக்கோள்கள், வழிமுறைகள் எல்லாவற்றையும் எனக்கு ஸமர்ப்பணம் செய், பொருளை ஸமர்ப்பணம் செய், புலனின்பங்களை அறவழியில் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கில் எனக்கு ஸமர்ப்பணம் செய்.

அறங்களையெல்லாம் எனக்கு ஸமர்ப்பணம் செய்வாயாக. ஞானத்தைப் பெறும்பொருட்டு, இவற்றையெல்லாம் நீ ஸமர்ப்பணம் செய்.

அவ்வாறு செய்தால், இன்பமே வடிவான, அமைதியே வடிவான, ஆண்டவனை நிச்சயம் அடைந்துவிடலாம்.

மாம் ஏவ ஏஷ்யஸி - என்னையே அடைவாய் என்கிறார் பகவான். நாம் அனைவருமே அமைதியை, ஆனந்தத்தை விரும்புகின்றவர்கள். அதை நாம் நிச்சயம் அடைவோம் என்பதில் சந்தேகமில்லை.

Downloaded from **www.omkaravidya.com**

வாழ்க்கையின் குறிக்கோள்கள் இறைவனைச் சார்ந்து இருக்கட்டும். அவற்றுக்கான வழிமுறைகள் இறைவனைச் சார்ந்து நிகழட்டும்.

ஜீவாத்மா பரமாத்மாவை அடிபணிந்து, அவர் இட்ட கட்டளைப்படி கடமைகளைப் பொறுப்புடன் செய்வதுதான் கர்மயோகத்தின் ஸாரம்.

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।

अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।। १८ - ६६ ।।

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி
மா ஶுச: ।। 18 - 66 ।।

பதவுரை

ஸர்வதர்மாந் - அனைத்து தர்மங்களையும், **பரித்யஜ்ய** - முறையாகத் துறந்துவிட்டு (துறவு வாழ்க்கையை அல்லது துறவு மனப்பான்மையை மேற்கொண்டு), **ஏகம்** - (அத்வைதமான, அனைத்து உயிர்களிலும் உறைகின்ற) ஒருவனாகிய, **மாம்** - என்னை, **ஶரணம்** - சரணம், **வ்ரஜ** - புகுவாயாக (உன் ஸ்வரூபமாக உணர்ந்துகொள்வாயாக). **அஹம்** - நான், **த்வா** - உன்னை, **ஸர்வபாபேப்ய:** - அனைத்து பாபங்களிலிருந்தும் (தளைகளிலிருந்தும்), **மோக்ஷயிஷ்யாமி** - விடுவிப்பேன். **மா ஶுச:** - வருந்தாதே.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

அனைத்து தர்மங்களையும் முறையாகத் துறந்துவிட்டு, அதாவது துறவு வாழ்க்கையை அல்லது துறவு மனப்பான்மையை மேற்கொண்டு, அத்வைதமான, அனைத்து உயிர்களிலும் உறைகின்ற ஒருவனாகிய என்னை, உன் ஸ்வரூபமாக உணர்ந்துகொள்வாயாக. நான் உன்னை அனைத்து பாபங்களிலிருந்தும், தளைகளிலிருந்தும் விடுவிப்பேன். வருந்தாதே.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த ச்லோகத்தில் வேதத்தின் ஞானகாண்டத்தின் ஸாரம், ஞானயோகத்தின் ஸாரத்தைக் கூறுகிறார்.

பகவான் இந்த ச்லோகத்தில் கீதா சாஸ்த்ர உபதேசத்தை நிறைவுசெய்கிறார். (2-11) ச்லோகத்தில், தொடங்கப்பட்ட உபதேசம் இங்கு நிறைவுபெறுகிறது.

கவலைப்படத் தகாத நபர்களைக் குறித்துக் கவலைப்படுகிறாய். ஞானியைப்போல பேசுகிறாய். ஞானிகள், இருப்பவரைக் குறித்தோ, இறந்தவரைக் குறித்தோ, கவலைப்பட மாட்டார்கள் என்று பகவான் (2-11) ச்லோகத்தில் கூறியருளினார்.

வாழ்க்கையில் தங்களுடன் இருப்பவர்களுக்கு ஏதாவது துன்பம் வந்தாலோ அல்லது அவர்களே இறந்துவிட்டாலோ, அவர்களைக் குறித்து, அறிவிலிகள்தான் கவலைப்படுவார்கள்.

Downloaded from **www.omkaravidya.com**

அறிவாளிகள் கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என எதில் ஏற்படுகின்ற எவ்வித அனுபவத்தைக் குறித்தும் கவலைப்பட மாட்டார்கள்.

ஞானத்தின் பயன் **ஸர்வஶோகநிவ்ருத்தி:** - துன்பங்கள் முற்றிலுமாக நீங்குதல்.

கவலைப்படுவதற்குக் காரணம், ஆத்மாவைப் பற்றிய அறியாமை என்று தெரிந்துகொண்டோம். கவலைப்படாமல் இருக்க வேண்டுமெனில், ஆத்மாவைப் பற்றிய அறிவைப் பெற வேண்டும். அதற்காகத்தான் பகவான் ஆத்மாவின் லக்ஷணங்களை உபதேசம் செய்தார்.

உடலுக்கு வேறாக இருக்கக்கூடிய ஜீவாத்மா, உண்மையிலேயே பரமாத்மாதான் என்று புரிந்துகொள்வதே சாஸ்த்ரத்தின் ஸாரம்.

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்த்தித: । 10 - 20

எல்லோருடைய உள்ளங்களிலும் ஆத்மாவாக இருப்பது நானே என்று பகவான் கூறினார்.

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத । 13 - 2

இந்த உடலுக்கு க்ஷேத்ரம் என்று பெயர், இந்த உடலுக்குள் இருந்துகொண்டு, இந்த உடலை அறிபவனுக்கு க்ஷேத்ரஜ்ஞன் என்று பெயர் என்று கூறினார்.

உண்மையில் ஜீவாத்மா என்பது பரமாத்மாவே ஆகும் என்பதை பகவான் பலவிடங்களில் கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஜீவாத்மா, பரமாத்மா அனைத்தும், பரம்பொருளின் மீது மாயையால் கற்பிக்கப்பட்டவைதான் என்பது அத்வைத ஸித்தாந்தத்தின் முக்கியமான உபதேசம்.

உலகம், இறைவன், உயிர்கள் அனைத்தும் பரம்பொருளின் மீது கற்பிக்கப்பட்டிருக்கின்றன. தூய உணர்வாகிய பரம்பொருளே, உயிர்களுக்கு உயிரான இறைவனாகவும் உயிர்களாகவும் உலகங்களாகவும் உள்ளங்களாகவும் உடல்களாவும் உறவுகளாகவும் மாயையால் காட்சியளிக்கிறது.

பண்டிதா: ந அநுஶோசந்தி। (2-11) ஞானிகள் கவலைப்பட மாட்டார்கள் என்று தொடங்கிய பகவான், இந்த (18-66) பூர்த்தி வாக்கியத்திலும் **மா ஶுச:।** - கவலைப்படாதே என்கிறார்.

கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. கவலைக்குக் காரணம் அறியாமை, கவலை நீங்குவதற்குக் காரணம் மெய்யறிவு என்ற கருத்தை பகவான் 2 ஆவது அத்யாயத்தில் உபதேசித்தார். அதே கருத்துதான் இங்கும் உபதேசிக்கப்படுகிறது.

இந்த ச்லோகத்தை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இப்படிப்பட்ட பொருளைத் தரும்.

எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு, என் ஒருவனையே சரணாகதி செய்வாயாக. நான் உன்னை எல்லா பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன். கவலைப்படாதே, வருந்தாதே.

Downloaded from **www.omkaravidya.com**

எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு என்பதைக் கேட்டவுடன், எல்லா தர்மங்களையும் எப்படி விட முடியும்? என்ற கேள்வி வரும்.

ஈச்வர சரணாகதி என்பதன் உண்மையான பொருள் என்ன?

சரணாகதி செய்பவன் யார்? சரணாகதியை ஏற்றுக்கொள்பவர் யார்?

எல்லா பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன் என்று பகவான் கூறுகிறார், அதை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்?

இந்த ச்லோகத்தில் நான்கு முக்கியமான கருத்துகள் உள்ளன.

1. **ஸர்வதர்மபரித்யாக:** - எல்லா தர்மங்களையும் விட்டுவிடுதல்

2. **ஈஶ்வர-ஶரணாகதி:** - ஈச்வரனையே சரணாகதி செய்தல்

3. **ஸர்வபாப-நிவ்ருத்தி: (ஸர்வபாப-விமோக்ஷ:)** - இறைவனின் அருளால் பாபங்களிலிருந்து விடுபடுதல்

4. **ஶோக-நிவ்ருத்தி:** - கவலையிலிருந்து விடுபடுதல்

1. **ஸர்வதர்மபரித்யாக:** - எல்லா தர்மங்களையும் விட்டுவிடுதல்

தர்மத்தைக் கடைப்பிடித்திருந்தால்தான், தர்மத்தை விட முடியும். நாம் செய்யாத ஒன்றை விட முடியாது.

இந்த இடத்தில், சடங்குகளையும் கடமைகளையும் விடுதல் என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

தர்மத்திற்கு சடங்குகள், கடமைகள், பாவனைகள், பண்புகள் என நான்கு பரிமாணங்கள் இருக்கின்றன.

பண்புகளும் பாவனைகளும் எப்பொழுதும் மனதில் இருக்க வேண்டும். புறத்தில் நாம் உலக நன்மைக்காக, கடவுளைச் சார்ந்திருந்து சடங்குகளையும் கடமைகளையும் செய்கிறோம்.

ஆனால், ஒருவன் ஞானயோகத்திற்குத் தன்னைத் தகுதியுடையவனாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்றால், எல்லா விதமான சடங்குகளையும் கடமைகளையும் விட வேண்டும்.

சடங்குகள், கடமைகளின் நோக்கம், பண்புகள், பாவனைகள் ஆகியவற்றை வளர்ப்பதே ஆகும்.

பண்புகளையும் பாவனைகளையும் நன்கு வளர்த்த பிறகு, சடங்குகளோ கடமைகளோ தனிமனிதனுக்குத் தேவையில்லை. அதற்குள் அவனுக்கு வயதும் ஆகிவிடும்.

சடங்குகளையும் கடமைகளையும் செய்வதற்கு உடலில் சக்தி குறைந்துவிடும். சாஸ்த்ரத்தின்படியும், நடைமுறைக்குப் பொருந்தும் வகையிலும் இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்ய என்று ஆதிசங்கரர் உரை செய்கிறார். எல்லா கர்மங்களையும் துறந்துவிட்டு என்று பொருள்.

Downloaded from **www.omkaravidya.com**

ஸர்வகர்மாணி மநஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வஶீ ।
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வந்நகாரயந் ।। 5 - 13 ।।

என்று பகவான் முன்பே கூறினார்.

கர்மயோகம் செய்யாமல், கர்மத்தைத் துறத்தல் துன்பத்தைத் தரும். ஆனால், கர்மயோகம் செய்தால், கர்மஸந்ந்யாஸம் செய்வது எளிது (5-6) என்றும் பகவான் கூறினார்.

மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ள விரும்புபவனுக்கு, கர்மம் ஸாதனம், மனதைப் பக்குவப்படுத்திக் கொண்ட பிறகு, அதாவது பண்புகளையும் பாவனைகளையும் இயல்பாக்கிக் கொண்ட பிறகு, அதை விட்டுவிடுவதுதான் ஸாதனம் (6-3) என்று பகவான் கூறினார்.

நம்மால் புறத்துறவை மேற்கொள்ள முடிகிறதோ இல்லையோ, அகத்துறவை நன்கு மேற்கொள்ள முடியும். **ஸர்வதர்ம பரித்யாக:** என்பது துறவைக் குறிக்கிறது.

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல. (திருக்குறள் - 342)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

கடமைகளையும் சடங்குகளையும் முறையாகத் தொடங்க வேண்டும். பிறகு, அவற்றை முறையாக விடவும் வேண்டும்.

மலையேறும்போது, ஒரு கம்பை ஊன்றிக்கொண்டு, ஏறுகிறோம். உச்சிக்குச் சென்ற பிறகு, அந்தக் கம்பை

Downloaded from **www.omkaravidya.com**

விட்டுவிடுகிறோம். அது போல, இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சடங்குகளையும் கடமைகளையும் விட்டுவிடுவதற்கு ஆச்ரம ஸந்ந்யாஸம் என்று பெயர். அல்லது புறத்தில் செயல்களைக் குறைத்துக்கொண்டு, மனதளவில் துறவு மனப்பான்மை மிக்கவர்களாக இருப்பது என்று பொருள்.

ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியை ஸம்பாதிக்க வேண்டும். விவேகம், வைராக்யம், சமாதி ஷட்க ஸம்பத்தி, முமுக்ஷுத்வம் ஆகியவற்றை ஸம்பாதித்த பிறகுதான், ஸர்வதர்ம பரித்யாகம் செய்ய முடியும்.

தர்மங்களைச் செய்யும்போதும், ஈச்வரனை சரணாகதி செய்துதான் ஆக வேண்டும். ஸர்வதர்ம அநுஷ்டானம் செய்தால்தானே, ஸர்வதர்ம பரித்யாகம் செய்ய முடியும்!

முதலில் ஸர்வ அதர்மத்தையும் பரித்யாகம் செய்ய வேண்டும். அதாவது, தர்மத்தைக் கடைப்பிடித்து, அதர்மத்தை விட வேண்டும். பிறகு, மெய்ப்பொருளை உணரும்பொருட்டு, ஞானயோகத்தை முன்னிட்டு தர்மத்தையும் விட வேண்டும் என்பதுதான் சாஸ்த்ரத்தின் முக்கியமான உபதேசம்.

எல்லா தர்மங்களையும் விட்டுவிடுவது என்பது லௌகிக, வைதிக தர்மங்களை விட்டுவிடுவதைக் குறிக்கும். ஞானயோகத்திற்கான தகுதியைப் பெற்ற பிறகு, விட வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

ஞானயோகத்தைப் பயிற்சி செய்வதற்குரிய தகுதி ஏற்படவில்லையெனில், கர்மங்களை விடக்கூடாது. இந்தக் கருத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.

மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் 329 ஆவது அத்யாயத்தில் 40 ஆவது ச்லோகம் பின்வருமாறு கூறுகிறது -

த்யஜ தர்மமதர்மம் ச உபே ஸத்யாந்ருதே த்யஜ ।
உபே ஸத்யாந்ருதே த்யக்த்வா யேந த்யஜஸி தத் த்யஜ ।।

முதலில் அதர்மத்தை தர்மத்தினால் விட்டுவிடு. பிறகு தர்மத்தையும் விட்டுவிடு. பொய்யை வாய்மையால் விட்டுவிடு, பிறகு வாய்மையையும் விட்டுவிட்டு, அமைதியாக இரு. பொய்யையும் வாய்மையையும் விட்டுவிட்டு, நான் பொய்யை விட்டேன், வாய்மையை விட்டேன் என்ற அஹங்காரத்தையும் விட்டுவிடு.

இவ்வாறு, தன்னுணர்வையும் பொய் என்று உணர்ந்து, அறிவால் அதனை நீக்கிவிட வேண்டும்.

பண்புகளையும் பாவனைகளையும் விடக்கூடாது. அதிகமான நேரம் வேதாந்த சாஸ்த்ரத்தைக் கற்பதற்குக் கொடுக்க வேண்டும். அதைத்தான் அடுத்த பகுதி கூறுகிறது.

2. ஈஶ்வர-ஶரணாகதி: - ஈச்வரனையே சரணாகதி செய்தல்

மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ ।

மேலெழுந்தவாரியாகப் படித்தால், ஒருவனாகிய என்னை, சரணடைவாயாக என்று அர்த்தமாகும்.

Downloaded from **www.omkaravidya.com**

இதற்கு ஆழமான பொருள் - ஞானயோகத்தைச் சார்ந்திருப்பாயாக என்பதாகும்.

ஈச்வரனும் ஜீவனும் ஒன்று. உயிர்கள், உலகங்கள், ஈச்வரன் அனைத்தும் பரம்பொருளில் மாயையால் கற்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் அத்வைத ஸித்தாந்தம்.

மாம் ஏகம் - அத்வைத ஸ்வரூபமான பரம்பொருளை, **ஶரணம் வ்ரஜ** - நன்கு ச்ரவண, மனன, நிதித்யாஸனங்களால் உணர்ந்துகொள்.

சொற்பொருளை விட்டுவிட்டு, குறிப்புப்பொருளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆதிசங்கரரின் உரையின் அடிப்படையில் இந்தப் பொருளை எடுத்துக்கொள்கிறோம்.

செயல்களையெல்லாம் துறந்துவிட்டு, குருவை நாடி, அவரிடமிருந்து தத்துவத்தை நன்கு உணர்ந்துகொள்வாயாக! அத்வைத ஞானத்தை ஆழமான மனதில் பதிய வைத்துக்கொள்வாயாக! என்று பொருள்.

மாம் ஏகம் - ஸர்வாத்மாநம் ஸமம் ஸர்வபூதஸ்த்தம்
ஈஶ்வரம் அச்யுதம் கர்ப-ஜந்ம-ஜரா-மரண-விவர்ஜிதம்
அஹம் ஏவ மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ ।

ஆதிசங்கரரின் உரை இவ்வாறு அமைந்துள்ளது - என் ஒருவனையே என்றால், அனைத்து உடல்களிலும் இருக்கின்ற, ஸமமாக இருக்கின்ற, அழியாத பொருளை, கருவிலிருத்தல், பிறப்பு, முதுமை, மரணம் இவற்றிலிருந்து விடுபட்ட தூய

Downloaded from **www.omkaravidya.com**

உணர்வு தத்துவத்தை, நானே மெய்ப்பொருள் என்கின்ற எண்ணத்தினால், இரண்டற்ற மெய்ப்பொருளாகிய என்னைத் தவிர, இறைவன், உயிர்கள், உலகங்கள் ஆகியவை இல்லவே இல்லை என்று புரிந்துகொள்ளுதலே இங்கு சரணடைதல்.

தூய உணர்வாகிய, இரண்டற்ற மெய்ப்பொருளாகிய எனக்கு அந்நியமாக ஒன்றும் இல்லை. இதுதான் **ஶரணம் வ்ரஜ** என்பதற்கு அர்த்தம்.

சரணாகதி என்றால் இந்த இடத்தில் மெய்ஞ்ஞானத்தைச் சார்ந்திருத்தல் என்று பொருள். இரண்டற்ற மெய்ப்பொருளுக்கு அந்நியமாக ஒரு பொருளும் இல்லை என்பதை நன்கு மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் - 355)

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நானே இரண்டற்ற மெய்ப்பொருள் என்பதை, ச்ரவண, மனன, நிதித்யாஸனங்களின் மூலம், தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நான் என்பதும், நீ என்பதும் உண்மையல்ல. பரம்பொருள் ஒன்றே உண்மை என்ற ஞானத்தில் நிலைபெற வேண்டும்.

இந்த ஞானத்தின் பலனை பகவான் இவ்வாறு கூறுகிறார்.

3. **ஸர்வபாப-நிவ்ருத்தி: (ஸர்வபாப-விமோக்ஷ:)** - இறைவனின் அருளால் பாபங்களிலிருந்து விடுபடுதல்

Downloaded from **www.omkaravidya.com**

அஹம் த்வா ஸர்வபாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி ।

த்வா - த்வாம் அதாவது உன்னை என்று அர்த்தம்.

அஹம் என்பது நான் மெய்ப்பொருளாக இருக்கிறேன் என்ற அகண்டாகார வ்ருத்தியைக் குறிக்கிறது.

நான் உன்னை எல்லா பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் என்பது மேலெழுந்தவாரியான சொற்பொருள்.

இதன் ஆழமான பொருள் - ப்ரஹ்மஞானமே பேசுவதுபோல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அஹம் ப்ரஹ்ம அஸ்மி। நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற அகண்டாகார வ்ருத்தி ஞானமானது, இந்தத் தன்னுணர்வை நீக்குகிறது.

பாபங்கள் என்றால், தர்ம-அதர்மங்களால் ஏற்பட்டுள்ள பந்தங்களான உலகப்பற்று, உடல்பற்று, அகப்பற்று, புறப்பற்று முதலியவை. தன்னுணர்வுதான் எல்லா பாபங்களுக்கும் மூல காரணம்.

ஸர்வபாபேப்ய: என்பது **ஸர்வபுண்யேப்ய:** என்பதையும் குறிக்கும். பாபங்கள், புண்யங்கள் அனைத்திலிருந்தும் ப்ரஹ்மஞானம் நம்மை விடுவிக்கிறது. புண்யம் இருந்தாலும், பாபம் இருந்தாலும் மீண்டும் பிறவி எடுக்க வேண்டும்.

ஸர்வபாபம் என்றால் ஸம்ஸாரம், துன்பம் என்று பொருள். இந்த ப்ரஹ்மஞானமானது, அனைத்து பாபங்களிலிருந்தும், ஸம்ஸாரத்திலிருந்தும் நம்மை விடுவிக்கிறது.

Downloaded from **www.omkaravidya.com**

நீயும் நானும் ஒரே தத்துவம் என்பதைப் புரிந்துகொண்டால், அவ்வாறு புரிந்துகொள்கின்ற தன்மையே நம்மை பாபங்களிலிருந்து விடுவித்துவிடும்.

உன்னை விடுவிக்கிறேன் - எப்படி?

மோக்ஷயிஷ்யாமி என்பதற்கு **ஸ்வாத்மபாவ-ப்ரகாஶீகரணேந** என்கிறார் ஆதிசங்கரர்.

உன்னுடைய உண்மையான இயல்பை விளக்குவதன் மூலம் உன்னை விடுவிக்கிறேன் என்று பொருள். இவ்வாறு நம்முடைய யதார்த்த ஸ்வரூபத்தை உணர்த்துவதன் மூலம் விடுவிக்கிறார் பகவான்.

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ।। 10 - 11

என்னிடத்தில் பரிபூர்ணமாக பக்திசெய்பவனுக்கு நான் ஞானயோகத்தை உபதேசிக்கிறேன் என்று பகவான் கூறினார். அந்த ச்லோகத்தை ஆதிசங்கரர் இங்கு நினைவூட்டுகிறார்.

4. ஶோக-நிவ்ருத்தி: - கவலையிலிருந்து விடுபடுதல்

மா ஶுச:। நீ கவலைப்படுவதற்கு அவசியமே இல்லை என்று பகவான் கூறுகிறார். கவலைப்படுபவன் என்று ஓர் ஆளே இல்லை, அவனே கற்பனை. ஸந்தோஷப்படுபவன், கவலைப்படுபவன் என்பதெல்லாம் வெறும் கற்பனைதான்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த உண்மையை உணர்ந்துவிட்டால், நாம் கவலைக்கும் அடிமையாக மாட்டோம், இந்த குறுகிய மகிழ்ச்சிக்கும் அடிமையாக மாட்டோம். இதுவே மோக்ஷம் எனப்படும்.

தானே பேரின்பமாகிய மெய்ப்பொருள் என்று அறிந்து, இன்ப துன்பங்கள் மாயத் தோற்றங்கள் என்று உணர்ந்திருப்பதே மோக்ஷம்.

மா ஶுச: - இந்த ப்ரஹ்மஞானத்தினால், உனது உள்ளத்தில் இருக்கக்கூடிய துயரங்களை வெற்றிகொள்வாயாக என்று பொருள்.

உற்றார், உறவினரைப் பற்றிய கவலை, நான் ஏன் தாத்தாவையும் குருவையும் கொல்ல வேண்டும் என்ற கவலை ஆகியவற்றை அடியோடு விட்டுவிடு. இது நடைமுறை தர்மமே தவிர, பாரமார்த்திக த்ருஷ்டியில், இவையெல்லாம் மாயத்தோற்றங்கள் என்று உணர்ந்துகொள் என்று உணர்த்துகிறார் பகவான்.

ஸாரம்

அறவழியில்தான் வாழ்க்கையைத் தொடங்க வேண்டும். அறவழியில் பொருளீட்டுதல், அறவழியில் இன்பங்களைத் துய்த்தல் - இதற்கு **ஸகாமதர்மாநுஷ்டானம்** என்று பெயர்.

இவ்வாறு தர்மத்தைக் கடைப்பிடிப்பதால், நம் மனதிற்கு ஒரு தெளிவும் பக்குவமும் வரும், பகுத்தறிவு சரியாக வேலை செய்யும். அப்பொழுது, பொருளின்பங்களை நாடாமல்,

Downloaded from **www.omkaravidya.com**

அறத்தைக் கடைப்பிடிக்கின்ற ஒரு மனோபாவனை நமக்கு வரும். அதற்கு **நிஷ்காமதர்மானுஷ்டானம்** என்று பெயர்.

இவை எல்லாவற்றுக்கும் அடிப்படை, உடல் வேறு, உயிர் வேறு என்ற ஞானம்.

ஜீவாத்மபுத்தியுடன், ஈச்வரபக்தியுடன், ஸகாமதர்மானுஷ்டானத்தைச் செய்து, பிறகு நிஷ்காமதர்மானுஷ்டானத்தைச் செய்ய வேண்டும். அதன் மூலம், சித்தசுத்தியைப் பெற்று, ஸாதன சதுஷ்டய ஸம்பத்தி என்ற வேதாந்தம் கற்பதற்குரிய தகுதியை ஸம்பாதிக்க வேண்டும்.

நிஷ்காம தர்மானுஷ்டானம், ஞானயோகத்திற்குரிய தகுதியை அருளும். வேதாந்த விசாரத்தினால்தான் நமக்கு, ஆத்ம-ஏகத்வ-ஞானம் ஸித்திக்கும்.

ஸர்வதர்மபரித்யாகம் என்பது, ஸாதன சதுஷ்ய ஸம்பத்தியைப் பெற்ற பிறகு, நம்முடைய லௌகிக, வைதிக கர்மங்களைத் துறந்துவிடுதலாகும்.

மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ। - அத்வைத ஞானம் அல்லது குருரூபமாக இருக்கின்ற ஈச்வரனை, ஞானயோக ஸாதனையாகிய ச்ரவண மனன நிதித்யாஸனத்தின்பொருட்டு சரணாகதி செய்தல்.

மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ। என்பது குருவிடம் சென்று வேதாந்தத்தைக் கற்றலைக் குறிக்கும். ஜகத்குரு ஸ்வரூபமாக இருக்கின்ற பகவான் ஸ்ரீக்ருஷ்ணரை சரணாகதி செய்தால்,

Downloaded from **www.omkaravidya.com**

அவர் நம்முடைய உள்ளத்தில் இருக்கக்கூடிய அறியாமையை, ஞானதீபத்தினால் நீக்கியருள்வார்.

அஹம் த்வா ஸர்வபாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி ।

குரு வடிவில் இருக்கின்ற பரமேச்வரனை நாம் சரணாகதி செய்தால், அவர் ஞானத்தைக் கொடுத்து, எல்லா விதமான பந்தங்களிலிருந்தும் நம்மை விடுவித்துவிடுவார்.

தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் । 12 - 7

என்பதற்கிணங்க, பிறவிப் பெருங்கடலிலிருந்து நம்மை விடுவித்துவிடுவார்.

மா ஶுச: - கவலையே பட வேண்டாம் என்று அர்ஜுனனுக்கு உறுதிமொழி கொடுக்கிறார் பகவான்.

தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மனத்தூய்மையைப் பெற வேண்டும். ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியை அடைந்து, குருவை சரணடைய வேண்டும். அவர் நமக்கு அத்வைத ஞானத்தை, ஆத்ம-ஏகத்வ-ஞானத்தை உபதேசிப்பார். அதன் மூலம் நாம் மோக்ஷத்தை உணரலாம். இந்த விஷயத்தில் நாம் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

அர்ஜுனன், யுத்தபூமியில் குருவைக் கொல்லுதல், உறவினர்களைக் கொல்லுதல் ஆகியவையெல்லாம் தர்மமா, அதர்மமா என்று கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

எந்தக் கவலையும் இல்லாமல், பெரியோர்கள் நமக்கு வகுத்துக் கொடுத்துள்ளவற்றை நன்கு கடைப்பிடிக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

மா ஶுச: ஸம்பதம் தைவீம் அபிஜாதோ3ஸி பாண்டவ । 16 - 5

அர்ஜுனா! நீ தைவ ஸம்பத் உடையவன், கவலைப்படாதே என்று பகவான் முன்பு கூறியதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்த விஷயத்தில் உனக்குக் கவலையே வேண்டாம், ஒருபொழுதும் பாதுகாப்பில்லாதவனாக உணராதே. கிடைக்குமோ கிடைக்காதோ என்று நினைக்காதே. உனக்கு நிச்சயமாக எல்லா அருளும் கிடைக்கும் என்கிறார் பகவான்.

ஆக, தர்மத்தைக் கடைப்பிடித்து, ஞானயோகத்திற்குரிய தகுதியைப் பெற்ற பிறகு, தர்மத்தை விட வேண்டும். குரு, ஈச்வர, சாஸ்த்ர சரணாகதியை நன்கு செய்ய வேண்டும். ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தை உணர்ந்து, வாழ்க்கையை நிறைவு செய்ய வேண்டும்.

इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन ।

न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति ।। १८ - ६७ ।।

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந ।
ந சாஶுஶ்ரூஷவே வாச்யம் ந ச மாம்
யோ3ப்யஸூயதி ।। 18 - 67 ।।

பதவுரை

தே - உனக்கு, **இதம்** - (உபதேசிக்கப்பட்ட) இதனை (இந்த சாஸ்த்ரத்தை), **கதாசந** - ஒருபொழுதும், **அதபஸ்காய** - தவம் இல்லாதவனுக்கு, **ந வாச்யம்** - சொல்லக்கூடாது. **அபக்தாய** -

Downloaded from **www.omkaravidya.com**

பக்தியில்லாதவனுக்கு, **ந (வாச்யம்)** - சொல்லக்கூடாது. **அஶுஶ்ரூஷவே** - கேட்க விருப்பமில்லாதவனுக்கு, **ந (வாச்யம்)** - சொல்லக் கூடாது. **ச** - மேலும், **ய:** - எவன், **மாம்** - என்னை (என்னுடைய சொற்களில்), **அப்யஸூயதி** - குறைகாண்கிறானோ (அவனுக்கும்), **ந (வாச்யம்)** - சொல்லக்கூடாது.

பொழிப்புரை

உனக்கு உபதேசிக்கப்பட்ட இந்த சாஸ்த்ரத்தை, ஒருபொழுதும், தவம் செய்யாதவனுக்குச் சொல்லக்கூடாது. பக்தியில்லாதவனுக்குச் சொல்லக் கூடாது. கேட்க விருப்பமில்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. மேலும், என்னுடைய சொற்களில் குறைகாண்பவனுக்கும் சொல்லக்கூடாது.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், யாருக்கு இந்த வித்தை பயனைக் கொடுக்கும் என்பதைக் கூறுகிறார். தகுதியுடையவர்களுக்குத்தான் இதனை உபதேசிக்க வேண்டும் என்பதைச் சொல்கிறார்.

அர்ஜுனன் வேண்டிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவனது நன்மைக்காக, அவனுடைய மனதிலுள்ள சோக மோஹங்கள் நீங்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்த கீதா சாஸ்த்ரத்தை பகவான் உபதேசம் செய்தார்.

Downloaded from **www.omkaravidya.com**

அஹம் தே ஶிஷ்ய: மாம் ஶாதி । 2 – 7

நான் உங்களுடைய சீடன். என்னுடைய துன்பத்தைப் போக்குவதற்குரிய ஞானத்தை உபதேசம் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டான் அர்ஜுனன். அதன்படி பகவானும் உபதேசித்திருக்கிறார்.

இந்த சாஸ்த்ரத்தை, தவம் செய்யாதவனுக்குச் சொல்லக்கூடாது என்கிறார் பகவான். புலனடக்கம் போன்ற கட்டுப்பாடுகளால், தன்னை நெறிப்படுத்திக் கொள்ளாதவனுக்கு, அறவாழ்க்கையை நன்கு பின்பற்றாதவனுக்கு இதனைக் கற்றுக் கொடுக்கக்கூடாது.

அறவாழ்க்கையை நன்கு கடைப்பிடிப்பவனுக்குத்தான் இதைக் கற்றுத் தர வேண்டும். இந்த ஞான சாஸ்த்ரத்தை, தர்மத்தைக் கடைப்பிடிப்பவனுக்குத்தான் கற்றுத் தர வேண்டும். இல்லையெனில், அது தவறான விளைவுகளை உண்டாக்கிவிடும்.

அறிவைப் போற்றி மதிக்கக்கூடிய, அறவாழ்க்கை வாழ்பவனுக்குத்தான் இதனை உபதேசிக்க வேண்டும்.

ஈச்வரன், குரு, சாஸ்த்ரம் ஆகியோரிடத்தில் பக்தி இல்லாதவனுக்கு, இதனைச் சொல்லக்கூடாது. இதன் அருமைபெருமைகளை உணர்ந்திருப்பவனுக்குத்தான் இதனைச் சொல்ல வேண்டும். இல்லையெனில், அது விழலுக்கு இறைத்த நீர் போன்று வீணாகிவிடும். பயனுடைய இடத்தில்தான் இதனைக் கொடுக்க வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

தவமும் பக்தியும் உடையவர்களாக சிலர் இருப்பார்கள். அப்படி இருப்பினும், கேட்க விருப்பமில்லாதவர்களாக இருப்பார்கள். அத்தகையவர்களுக்குச் சொல்லக்கூடாது என்கிறார் பகவான்.

வாழ்க்கையின் ரஹஸ்யம் என்ன, உண்மை என்ன என்று தெரிந்துகொள்வதற்கு ஆசை இருப்பவருக்கே, இதனைக் கற்றுத் தர வேண்டும்.

தன்னுடைய சொற்களில், உபதேச வார்த்தைகளில் குறை காண்பவனுக்குச் சொல்லக்கூடாது என்கிறார் பகவான். ச்ரத்தை உள்ளவனுக்கே சொல்ல வேண்டும்.

இறைவனுடைய சொற்களில் குறை காணக்கூடாது. குறை தெரிந்தாலும், எப்படி அதனைச் சரியாகப் புரிந்துகொள்வது, திருத்திக்கொள்வது என்று பார்க்க வேண்டுமே தவிர, இதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லக்கூடாது.

பகவான் கூறிய வர்ணாச்ரம விஷயங்கள், படைப்பு ஸம்பந்தமான சில கருத்துகள் போன்றவை நமக்குப் புரியாமல் இருக்கலாம். புரியவில்லை என்பதற்காக, அதைக் குறை சொல்லக்கூடாது. புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டுமே தவிர, அந்த சாஸ்த்ரத்தைக் குறை சொல்வது தவறு.

அறவாழ்க்கை வாழ்பவன், தவம் செய்தவன், பக்தி உள்ளவன், கேட்பதில் விருப்பம் உள்ளவன், சாஸ்த்ரத்தின் சொற்களில் குறைகாணாதவன் - இத்தகையவனுக்கே இதனை உபதேசம் செய்ய வேண்டும்.

ஆதிசங்கரர் இவ்வாறு பிரித்துக் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

தவம் செய்யாதவனுக்குச் சொல்லக்கூடாது. தவம் செய்திருந்தாலும், பக்தி இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது.

தவமும் பக்தியும் இருந்தாலும், கேட்க விருப்பமில்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. கேட்க விருப்பமிருந்தாலும், இடையிடையே இதில் குறை காண்பவனுக்கு, இதனைச் சொல்லக்கூடாது.

பரிபூர்ண ச்ரத்தா பக்தியுடன், கேட்கின்ற விருப்பத்துடன், அறவாழ்க்கையைப் பின்பற்றுபவனுக்குத்தான், இந்த கர்மயோகம், ஞானயோகம், இறைவனை த்யானிக்கின்ற முறைகள் முதலியவை அடங்கியுள்ள இந்த சாஸ்த்ரத்தை உபதேசிக்க வேண்டும்.

இது உபதேச விதி. இந்த வித்தையைப் பாதுகாப்பவனுக்குத்தான் இதனைக் கற்றுத் தர வேண்டும்.

य इमं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति ।

भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयः ।। १८ - ६८ ।।

य इमम् परमम् गुह्यम् मत्भक्तेष्वभिधास्यति ।
भक्तिम् मयि पराम् कृत्वा मामेवैष्यत्यसंशयः ।। 18 - 68 ।।

பதவுரை

यः - எவனொருவன், **मयि** - என்னிடத்தில், **पराम्** - மேலான, **भक्तिम्** - பக்தியை, **कृत्वा** - செய்து, **इमम्** - இதனை (இந்த), **परमम्** - உயர்ந்த, **गुह्यम्** - ரஹஸ்யத்தைப் (புனிதமாகப்

Downloaded from **www.omkaravidya.com**

பாதுகாத்து), **மத்பக்தேஷு** - என்னுடைய பக்தர்களிடத்தில், **அபிதாஸ்யதி** - (ச்லோகத்தைக் கூறி)ப் பொருளை விளக்குகிறானோ (அவன்), **மாம் ஏவ** - என்னையே, **அஸம்ஶய:** - ஐயமின்றி, **ஏஷ்யதி -** அடைகிறான் (மோக்ஷத்தை உணர்கிறான்).

பொழிப்புரை

எவனொருவன், என்னிடத்தில் மேலான பக்தியைச் செய்து, இந்த உயர்ந்த ரஹஸ்யத்தைப் புனிதமாகப் பாதுகாத்து, என்னுடைய பக்தர்களிடத்தில், ச்லோகங்களைக் கூறிப் பொருளை விளக்குகிறானோ, அவன் ஐயமின்றி என்னையே அடைகிறான், மோக்ஷத்தை உணர்கிறான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் 68, 69, 70 ஆகிய மூன்று ச்லோகங்களில், இந்த கீதா சாஸ்த்ரத்தை மற்றவர்களுடன் அல்லது அடுத்தத் தலைமுறையுடன் பகிர்ந்துகொள்பவருக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதைக் கூறுகிறார்.

வரக்கூடிய தலைமுறை, ஒவ்வொரு நாளும் மன அமைதியுடன், சமூகத்தில் பயனுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமெனில், அதற்கு இந்த சாஸ்த்ரம்தான் தேவைப்படும். ஆகவே, இந்த கீதா சாஸ்த்ரமானது, தெய்வீகமாக, புனிதமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியதாகும்.

குரு, ஈச்வரன், சாஸ்த்ரத்திடம் பரிபூர்ண பக்தி உடையவராக, தலைமுறை தலைமுறையாக, மன அமைதியின்பொருட்டுப்

Downloaded from **www.omkaravidya.com**

பாதுகாக்கப்பட வேண்டிய, மேலான சாஸ்த்ரத்தை என்னுடைய பக்தனுக்குக் கூறுபவர், ச்லோகத்தையும், அதன் பொருளையும் எடுத்துச்சொல்பவர், அவர்களுடைய உள்ளங்களில் பதிய வைப்பவர் பகவானையே அடைகிறார்.

கற்றுத் தருபவரும் ச்ரத்தாபக்தியுடன் கற்றுத் தர வேண்டும். கேட்பவனுக்கும் குரு, ஈச்வர, சாஸ்த்ரங்களிடத்தில் பக்தி இருக்க வேண்டும். இதனைக் கேட்டு, உள்வாங்கி, மனதில் ஆழமாகப் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ச்ரத்தாபக்தி, தவம், கேட்பதில் விருப்பம் ஆகியவற்றை உடையவர்களுக்கு, அவர்களது மனங்களில் பதியும்படி உபதேசம் செய்பவர், தன்னையே அடைகிறார் என்கிறார் பகவான்.

மாம் ஏவ ஏஷ்யதி। என்றால், ஆனந்தமே வடிவாகிய மெய்ப்பொருளை தன் ஸ்வரூபமாகவே உணர்ந்துகொள்கிறார் என்று பொருள். ஆனந்தமே வடிவான இறைவனை அடைகிறார், எப்பொழுதும் அமைதியாக, ஆனந்தமாக இருக்கிறார்.அவர் மோக்ஷத்தை உணர்வார் என்பதில் சந்தேகமேயில்லை என்கிறார் பகவான்.

இந்த சாஸ்த்ரத்தை மற்றவர்களுக்குக் கற்றுத் தருவதன் மூலம், நமக்கு மோக்ஷம் கிடைக்கிறது. பிறரும் மோக்ஷத்தை உணர்வதற்கு உதவுகிறோம்.

முக்தஶ்ச அந்யாந் விமோசயேத் ।

Downloaded from **www.omkaravidya.com**

பந்தத்திலிருந்து விடுபட்டு, முக்தியடைந்தவன், பிறரையும் பந்தத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று ஒரு ப்ரார்த்தனை இருக்கிறது.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்! என்பதற்கிணங்க, ச்ரத்தாபக்தி உள்ளவர்களுக்கு இதனைக் கற்றுத் தர வேண்டும் என்பதையும் பகவான் இங்கு உபதேசித்திருக்கிறார்.

न च तस्मान्मनुष्येषु कश्चिन्मे प्रियकृत्तमः ।

भविता न च मे तस्मादन्यः प्रियतरो भुवि ।। १८ - ६९ ।।

न च तस्मान्मनुष्येषू कश्चिन्मे प्रियकृत्तमः ।
भविता न च मे तस्मादन्यः प्रियतरो पुवि ।। 18 - 69 ।।

பதவுரை

ச - மேலும், **மநுஷ்யேஷு** - மனிதர்களுள், **தஸ்மாத்** - அவனைவிட, **கஶ்சித்** - ஒருவனும், **மே** - எனக்கு, **ப்ரியக்ருத்தம:** - அதிகமாக ப்ரியமானதைச் செய்பவன், **ந (அஸ்தி)** - இல்லை. **தஸ்மாத்** - அவனைவிட, **அந்ய:** - வேறொருவன், **புவி** - இவ்வுலகில், **மே** - எனக்கு, **ப்ரியதர:** - அதிக ப்ரியமானவனாக, **ந ச பவிதா** - இருக்கப் போவதும் இல்லை.

பொழிப்புரை

மனிதர்களுள் அவனைவிட ஒருவனும் எனக்கு அதிகமாக ப்ரியமானதைச் செய்பவன் இல்லை. அவனைவிட

Downloaded from **www.omkaravidya.com**

வேறொருவன், இவ்வுலகில் எனக்கு அதிக ப்ரியமானவனாக இருக்கப் போவதும் இல்லை.

விளக்கவுரை

இந்த கீதா சாஸ்த்ரத்தை ச்ரத்தாபக்தி உடையவர்களுக்கு எடுத்துச் சொல்பவருக்குக் கிடைக்கின்ற பலனைப் பற்றி பகவான் கூறிக் கொண்டிருக்கிறார்.

இந்த கீதா சாஸ்த்ரத்தை இன்னொருவருக்குக் கற்றுக்கொடுத்து, தான் பெற்ற இன்பத்தை, மற்றவர்களுக்கு யார் மனமார வழங்குகிறானோ, அவனே தனக்கு மிகவும் ப்ரியமானவன் என்று பகவான் கூறுகிறார்.

சடங்குகளைக் கற்றுத் தருபவரைக் காட்டிலும், வாழ்க்கையைப் பற்றிய அறிவைக் கொடுப்பவர் மிக உயர்ந்தவர் என்ற அர்த்தத்தில் பகவான் கூறுகிறார்.

அறிவை வழங்கிட வேண்டும் – இங்கு
அத்தனை பேருக்கும் ஒன்றாய்

என்று பாடினார் மஹாகவி பாரதியார்.

அனைவருக்கும் அமைதியான ஆனந்தத்தை வழங்கக்கூடிய அறிவை, பிறருடன் பகிர்ந்துகொள்வது மிகச் சிறந்த ஒன்றாகும். அவ்வாறு செய்பவன், தனக்கு மிகவும் ப்ரியமானவன். அது மட்டுமல்ல, வரக்கூடிய காலத்திலும் அவனை அல்லது அவளைக் காட்டிலும் தனக்கு ப்ரியமானவர்கள் இல்லை என்று பகவான் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆண்கள், பெண்கள் யார் வேண்டுமானாலும், இந்த கீதா சாஸ்த்ரத்தைக் கற்று, பிறருக்கு வழங்கலாம். ஸம்ப்ரதாயம் என்ற சொல்லுக்கு, சரியாக வழங்குதல் என்று பொருள்.

நிதித்யாஸனம் செய்பவனைக்காட்டிலும், இவ்வாறு ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்றுபவனை பகவான் சிறப்பித்துக் கூறுகிறார். ஆனந்தகிரி என்ற உரையாசிரியர் இதனைச் சிறப்பாகப் பாராட்டிக் கூறுகிறார்.

अध्येष्यते च य इमं धर्म्यं संवादमावयोः ।

ज्ञानयज्ञेन तेनाहमिष्टः स्यामिति मे मतिः ।। १८ - ७० ।।

அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாதமாவயோ: ।
ஜ்ஞாநயஜ்ஞேந தேநாஹமிஷ்ட: ஸ்யாமிதி மே மதி: ।। 18 - 70 ।।

பதவுரை

ச - மேலும், **ய:** - எவன், **ஆவயோ:** - நம் இருவருடைய, **தர்ம்யம்** - தர்மத்தை ஒட்டிய, **இமம்** - இந்த, **ஸம்வாதம்** - உரையாடலை, **அத்யேஷ்யதே** - கற்பிக்கிறானோ (மனப்பாடம் செய்யும்படி செய்து, பொருளையும் கூறுகிறானோ), **தேந** - அந்த, **ஜ்ஞாநயஜ்ஞேந** - ஞான வேள்வியினால், **அஹம்** - நான், **இஷ்ட: ஸ்யாம்** - வழிபடப்பட்டவன் ஆவேன், **இதி** - என்பது, **மே** - எனது, **மதி:** - உறுதியான எண்ணம்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

மேலும், எவன், தர்மத்தை ஒட்டிய நம் இருவருடைய இந்த உரையாடலைக் கற்பிக்கிறானோ, மனப்பாடம் செய்யும்படி செய்து, பொருளையும் கூறுகிறானோ, அந்த ஞான வேள்வியினால் நான் வழிபடப்பட்டவன் ஆவேன் என்பது எனது உறுதியான எண்ணம்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், இந்த கீதா சாஸ்த்ரத்தை ச்ரத்தாபக்தியுடன் கற்பிப்பதன் பயனை இங்கு மீண்டும் கூறுகிறார்.

இந்த கீதா சாஸ்த்ரத்தின் ச்லோகங்களை மனப்பாடம் செய்ய வைத்து, அதன் பொருளையும் கற்றுத் தருபவனைப் பற்றி பகவான் கூறுகிறார்.

இமம் தர்ம்யம் - வாழ்க்கையைப் பண்படுத்துவது, தர்மத்திற்கு முரண்படாதது இந்த கீதா சாஸ்த்ரம் என்று அர்த்தம்.

கற்றுத் தருவது மட்டுமல்ல, இதனைக் கேட்பவர்களும் பலருக்குக் கற்றுத் தரும் வகையில், ஒரு விளக்கைக்கொண்டு, பல விளக்குகளை ஏற்றுவதுபோல், கற்றுத் தருகிறான்.

ஓர் ஆசிரியர் மாணவனுக்குக் கற்றுத் தந்தால், அந்த மாணவன் ஆசிரியராக மாறி, அவனும் பலருக்குக் கற்றுத் தருகிறான். அது எவ்வளவு மகிழ்ச்சிகரமான விஷயம்!

Downloaded from **www.omkaravidya.com**

எவனொருவன், இந்த சாஸ்த்ரத்தை வழங்கி, பிறரையும் வழங்கும்படி செய்கிறானோ, அத்தகைய ஞான யஜ்ஞத்தினால், நான் மிகவும் மகிழ்கிறேன் என்று பகவான் கூறுகிறார்.

ஶ்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப । 4 - 33

ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே । 4 - 38

என்றெல்லாம் பகவான் முன்பு கூறினார்.

கீதையைக் கற்றுத் தருதலாகிய ஞானவேள்வியின் மூலம், சாஸ்த்ரரூபமாக இருக்கின்ற இறைவன் மகிழ்கிறார் என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி! என்று திருநாவுக்கரசர் பாடுகிறார்.

சாஸ்த்ரத்தை உயிருள்ள தத்துவமாக நாம் பார்க்கிறோம். கீதா சாஸ்த்ரமே இதனால் மகிழ்ச்சியடையும்.

கீதா மே பரமா வித்யா... கீதா மே சோத்தமம் க்ருஹம் ।
கீதாஜ்ஞாநமுபாஶ்ரித்ய த்ரீந்லோகாந் பாலயாம்யஹம் ।।

என்று கீதா மாஹாத்ம்யத்தில் கூறப்பட்டது. கீதையே என்னுடைய மேலான வித்தை, கீதையில்தான் நான் வாழ்கிறேன். கீதாஞானத்தைச் சார்ந்திருந்துதான், நான் மூன்று உலகங்களையும் பாதுகாக்கிறேன் என்று பகவான் கூறுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த ச்லோகத்தில், வெறும் ஸ்துதிக்காக சொல்லவில்லை, கீதா ஞான யஜ்ஞத்தினால், நான் நிச்சயமாக மகிழ்கிறேன் என்கிறார் பகவான்.

மே மதி: என்றால், இது என்னுடைய நிச்சயமான அபிப்ராயம், இதில் சந்தேகமில்லை என்று பொருள்.

श्रद्धावाननसूयश्च शृणुयादपि यो नरः ।

सोऽपि मुक्तः शुभांल्लोकान्प्राप्नुयात्पुण्यकर्मणाम् ।। १८ - ७१ ।।

श्रद्धावाननसूयश्च शृणुयादपि यो नरः ।
सोऽपि मुक्तः शुभांल्लोकान्प्राप्नुयात्पुण्य-
कर्मणाम् ।। 18 - 71 ।।

பதவுரை

श्रद्धावान் - ச்ரத்தை உடையவனும், **अनसूयः च** - (இந்த சாஸ்த்ரத்தில்) குற்றம் காணாதவனுமான, **यः नरः** - எந்த மனிதன், **शृणुयात् अपि** - இதைக் கேட்டாலும்கூட, **सः अपि** - அவனும், **मुक्तः** - (பாபத்திலிருந்து) விடுபட்டவனாய், **पुण्यकर्मणाम்** - புண்யகர்மங்கள் செய்தவருக்குரிய, **शुभान்** - மேலான, **लोकान்** - உலகங்களை, **प्राप्नुयात்** - அடைவான்.

பொழிப்புரை

ச்ரத்தை உடையவனும், இந்த சாஸ்த்ரத்தில் குற்றம் காணாதவனுமான மனிதன், இதைக் கேட்டாலும்கூட, அவனும்

Downloaded from **www.omkaravidya.com**

பாபத்திலிருந்து விடுபட்டவனாய், புண்யகர்மங்கள் செய்தவருக்குரிய மேலான உலகங்களை அடைவான்.

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் இந்த கீதா சாஸ்த்ரத்தை ச்ரத்தாபக்தியுடன் கேட்பவன் அடைகின்ற பலனைக் கூறுகிறார்.

இந்த கீதா சாஸ்த்ரத்தின் ச்லோகங்களைக் கேட்டாலே பலன் உண்டு. அர்த்தத்தை அறிந்துகொண்டால், அதன் பலனைக் கேட்கவும் வேண்டுமா? என்று ஓர் உரையாசிரியர் கூறுகிறார்.

அந்யே த்வேவமஜாநந்த: ஶ்ருத்வாந்யேப்ய உபாஸதே ।
தேऽபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா: ।। 13 - 25 ।।

என்று பகவான் கூறியதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இந்த ச்லோகத்தில் பகவான் ஒரு நிபந்தனையைக் கூறுகிறார். பகவான் உபதேசிக்கின்ற இந்த விஷயம் சிறிதளவுகூட பொய்யில்லை, இது நூற்றுக்கு நூறு உண்மை, ஸத்யம் என்ற எண்ணத்திற்குப் பெயர்தான் ச்ரத்தை. அந்த எண்ணத்தை உடையவனுக்கு **ஶ்ரத்தாவாந்** என்று பெயர்.

அநஸூய: என்றால் சாஸ்த்ரத்தில் குற்றம் பார்க்காத மனநிலையை உடையவன் என்று பொருள். நம்மிடமுள்ள புரிந்துகொள்கின்ற சக்தியை நன்கு வளர்த்துக்கொண்டு, புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். புரியாத

Downloaded from **www.omkaravidya.com**

விஷயங்களைப் பெரியவர்களிடம் கேட்டுத் தெளிவதில் தவறில்லை.

ஆனால், பகவான் கூறியிருப்பது சரி என்று எனக்குத் தோன்றவில்லை என்றெல்லாம் சொல்லக்கூடாது. அவ்வாறு சொன்னால், சாஸ்த்ரத்தின் அர்த்தம் தெளிவாக விளங்காமல் போய்விடும்.

நம்முடைய பகுத்தறிவு உயர்ந்ததுதான். ஆனால், நம் சிற்றறிவுக்குப் புலப்படாத எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. அறிவை நன்கு பயன்படுத்தியவனுக்குத்தான் அந்த உண்மை விளங்கும்.

அறிதோறு அறியாமை கண்டற்றால் (திருக்குறள் - 1110)

என்கிறார் திருவள்ளுவர்.

படிக்கப் படிக்கத்தான், நம்மிடத்தில் எவ்வளவு அறியாமை இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்.

நம்முடைய மனதில் சிறிதுகூட **அஸூயா** - அதாவது குறைகாண்கின்ற மனப்பான்மை இருக்கக்கூடாது. குணத்திலும் குறையைக் காண்கின்ற தன்மை அது. நல்லதைக்கூட கெட்டதாகப் பார்க்கின்ற ஸ்வபாவம் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. அது இல்லாமல் இருப்பது **அநஸூயா.**

எவனொருவன் ஆழ்ந்த நம்பிக்கையுடனும், குறை காணாத மனதுடனும் இதைக் கேட்கின்றானோ, அவனும்

Downloaded from **www.omkaravidya.com**

புண்யத்தினால் காலப்போக்கில் ஞானத்தைப் பெற்று, மோக்ஷத்தை உணர்வான்.

ஒருவன் பாராயணம் மட்டும் செய்கிறான், அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், அடுத்தப் பிறவியில் நல்ல உடலும், தகுந்த வாழ்க்கையும் கிடைத்து, அதில் இதே ஞானத்தை அவன் பெறுவான் என்று நாம் புரிந்துகொள்ளலாம்.

புண்ய கர்மங்களைச் செய்தவர்களுடைய உலகங்களை அவன் அடைவான். பகவான் இந்தக் கருத்தை ஏற்கெனவே கூறியிருக்கிறார்.

ப்ராப்ய புண்யக்ருதாம் லோகாந் உஷித்வா ஶாஶ்வதீ ஸமா: ।
ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே ।। 6 - 41

அவன் யோகப்ரஷ்டனாகவும் பிறக்கக்கூடும் என்ற கருத்தை இங்கு நாம் புரிந்துகொள்ளலாம்.

कच्चिदेतच्छ्रुतं पार्थ त्वयैकाग्रेण चेतसा ।

कच्चिदज्ञानसम्मोहः प्रनष्टस्ते धनञ्जय ।। १८ - ७२ ।।

கச்சிதேதச்ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா ।
கச்சிதஜ்ஞாநஸம்மோஹ: ப்ரநஷ்டஸ்தே தநஞ்ஜய ।। 18 - 72 ।।

பதவுரை

ஹே பார்த்த! - ஓ அர்ஜுனா! **ஏதத்** - இது, **த்வயா** - உன்னால், **ஏகாக்ரேண** - ஒருமுகப்பட்ட, **சேதஸா** - மனதுடன், **கச்சித்**

Downloaded from **www.omkaravidya.com**

ஸ்ருதம் (கிம்) - கேட்கப்பட்டதா? **ஹே தநஞ்ஜய!** - ஓ அர்ஜுனா! **தே** - உன்னுடைய, **அஜ்ஞாந-ஸம்மோஹ:** - அறியாமையினால் ஏற்பட்ட மயக்கம், **கச்சித் ப்ரணஷ்ட:** - நன்றாக அழிந்ததா?

பொழிப்புரை

ஓ அர்ஜுனா! இது உன்னால் ஒருமுகப்பட்ட மனதுடன் கேட்கப்பட்டதா? ஓ அர்ஜுனா! உன்னிடத்தில் அறியாமையினால் ஏற்பட்ட மயக்கமானது, நன்றாக அழிந்ததா?

விளக்கவுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், அர்ஜுனனிடம் கேள்வி கேட்கிறார்.

மாணவன் சரியாகப் புரிந்துகொண்டானா என்று ஆசிரியர் மாணவனிடத்தில் கேட்க வேண்டும். புரியவில்லையென்றால், மீண்டும் கற்றுத் தர வேண்டும்.

சீடன் எளிதாக மோக்ஷத்தை உணரும்படி செய்வது என்பது ஆசார்யரின் தர்மமாகும். எப்படியாவது முயற்சித்து, பாடுபட்டு, சீடனுக்குக் கற்றுத் தர வேண்டியது ஆசார்யரின் தர்மமாகும்.

பகவான் இந்த ச்லோகத்தில் ஆசார்ய தர்மத்தைக் காட்டுகிறார். ஒருமுகப்பட்ட மனதுடன் அர்ஜுனன் கேட்டானா என்று பகவான் கேட்கிறார். பல இடங்களில் **ஸ்ருணு** - கவனமாகக் கேள் என்று கூறினார். மனம் சிதறாமல் அர்ஜுனன் கேட்டானா, அனைத்தும் தெளிவாக உள்வாங்கிக் கொள்ளப்பட்டதா என்று பகவான் அறிய விரும்புகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

விஷயம் புரிந்தால் மட்டும் போதாது, அதன் பயன் கிடைத்ததா?

கார்ப்பண்யதோஷோபஹத: ஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே ஶிஷ்ய-
ஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ।। 2 - 7 ।।

ந ஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்யாத்
யச்சோகமுச்சோஷணமிந்த்ரியாணாம் ।
அவாப்ய பூமாவஸபத்நம்ருத்தம் ராஜ்யம்
ஸுராநாமபிசாதிபத்யம் ।। 2 - 8 ।।

சிறுமை எனும் கேட்டினால் குழம்பிய மனமுடையவனாக, உன்னைச் சரணடைந்து கேட்கிறேன். என்னைச் சீடனாக ஏற்று, எனக்கு எது நன்மையைத் தருமோ, அதனை உபதேசித்தருள்வாய்.

இந்தப் பணம், பதவி, உறவுகள் எவையும் என் துன்பத்தைப் போக்க முடியாது என்பதைத் தெரிந்துகொண்டேன். என்னுடைய இந்த்ரியங்களையெல்லாம் பொசுக்குகின்ற இந்தத் துன்பம் நீங்குவதற்கு எனக்கு வழி தெரியவில்லை என்று அர்ஜுனன் கூறினான்.

அவனுடைய வேண்டுகோளை ஏற்று, பகவான் கீதையை உபதேசித்து அருளினார். இப்போது, குருவைக் கொல்வது, தாத்தாவைக் கொல்வது முதலிய விஷயங்களில் உன்னுடைய

Downloaded from **www.omkaravidya.com**

அறியாமையால் ஏற்பட்ட குழப்பம் நீங்கியதா? என்று பகவான் அவனிடத்தில் கேட்கிறார்.

अर्जुन उवाच

नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ।

स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ।। १८ - ७३ ।।

அர்ஜுந உவாச

நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந்மயாச்யுத ।

ஸ்திதோ3ஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ ।। 18 - 73 ।।

பதவுரை

அர்ஜுந: - அர்ஜுனன், **உவாச** - கூறினான்.

ஹே அச்யுத! - ஓ தனது ஸ்வரூபத்திலிருந்து நழுவாதவரே! **த்வத்ப்ரஸாதாத்** - தங்களுடைய அருளால் (ஏற்பட்ட உள்ளத்தெளிவால்), **மோஹ:** - (அறியாமையினால் உண்டான) மயக்கம், **நஷ்ட:** - அழிந்தது. **மயா** - என்னால், **ஸ்ம்ருதி:** - ஆத்ம ஞானம், **லப்தா** - அடையப்பட்டது. **கத-ஸந்தேஹ:** - ஐயம் நீங்கியவனாய், **ஸ்தித: அஸ்மி** - உறுதியுடன் நிற்கிறேன். **தவ** - உம்முடைய, **வசநம்** - சொல்லை (சொற்படி), **கரிஷ்யே** - செய்வேன்.

பொழிப்புரை

அர்ஜுனன் கூறினான்.

Downloaded from **www.omkaravidya.com**

ஓ தனது ஸ்வரூபத்திலிருந்து நழுவாதவரே! தங்களுடைய அருளால் ஏற்பட்ட உள்ளத்தெளிவால், அறியாமையினால் உண்டான மயக்கம் அழிந்தது. என்னால் ஆத்ம ஞானம் அடையப்பட்டது. ஐயம் நீங்கியவனாய், உறுதியுடன் நிற்கிறேன். உம்முடைய சொற்படி நடப்பேன்.

விளக்கவுரை

அர்ஜுனன் தனது மனநிலையை பகவானிடத்தில் சொற்களால் வெளிப்படுத்துகிறான். பகவான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுகிறான்.

அச்யுத: என்றால் தன் ஸ்வரூபமாகிய அமைதி, ஆனந்தத்திலிருந்து நழுவாதவர் என்று பொருள். நெருப்பில் சூடும் ஒளியும் இயல்பாக இருப்பதுபோல, பகவானை விட்டு ஆனந்தமும் அமைதியும் ஒருபொழுதும் விலகாமல் இருக்கின்றன.

த்வத் ப்ரஸாதாத் - உம்முடைய கருணையினால் என்கிறான் அர்ஜுனன். பகவான் அர்ஜுனனை சிஷ்யனாக, பக்தனாக ஏற்றுக்கொண்டு, மிகுந்த கருணையுடன் உபதேசம் செய்திருக்கிறார். இந்த மாபெரும் உபதேசம்தான் பகவான் அவனுக்குக் கொடுத்த ப்ரஸாதம்.

ஜ்ஞாநப்ரஸாதேந விஶுத்தஸத்த்வ:

(முண்டகோபநிஷத் : 3-1-8)

என்று உபநிஷதம் கூறும்.

Downloaded from **www.omkaravidya.com**

இந்த இடத்தில் **ஸ்ம்ருதி:** என்ற சொல்லுக்கு, என்னுடைய உண்மை ஸ்வரூபம், நினைவு, உண்மையில் நான் யார் என்ற அறிவு என்று பொருள்.

ஸ்வபாவ: உபஹத:। (2-7) பற்றின் காரணமாக, என் இயல்பை நான் இழந்துவிட்டேன், காணவில்லை என்று முன்பு கூறினான் அர்ஜுனன்.

ஸ்ம்ருதி: என்ற சொல்லுக்கு, ஆத்ம தத்துவ விஷயம் என்று பொருள். ஜீவாத்மா, பரமாத்மா என்றால் யார்? ஜீவாத்மாவும் பரமாத்மாவும் எப்படி ஒன்று முதலான தத்துவங்கள் அவனுக்கு நன்கு விளங்குகின்றன என்று பொருள்.

நான் பரம்பொருளாக இருக்கிறேன், அனைத்தும் பரம்பொருளே என்ற ஞானம் அர்ஜுனனுக்கு வந்துவிட்டது. நடைமுறைக் கோணத்தில், நான் ஜீவனாக, உயிராக இருக்கிறேன். அறுதிக் கோணத்தில், நான் பரம்பொருளாக இருக்கிறேன்.

இந்த ஞானத்தை அர்ஜுனன் அடைந்திருக்கிறான். ஞானம் வந்ததால்தான் மோஹம் நீங்குகிறது. ஏனெனில் மோஹம் அஜ்ஞானத்தினால் வந்தது.

அர்ஜுனனிடத்தில் இப்பொழுது தேஹாத்ம புத்தியோ ஜீவாத்மபுத்தியோ இல்லை, ப்ரஹ்மாத்ம புத்தி இருக்கிறது. வ்யவஹாரத்தில், தர்மத்தை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அறிவு இருக்கிறது. இங்கு இருக்கக்கூடியவர்களின் யதார்த்த ஸ்வரூபமும் அவனுக்குத் தெரிகிறது.

Downloaded from **www.omkaravidya.com**

ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ।
ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ।। 2 - 12 ।।

அந்தவந்த இமே தேஹா: நித்யஸ்யோக்தா ஶரீரிண: ।
அநாஶிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத ।। 2 - 18 ।।

என்று பகவான் கூறிய கருத்துகளை அர்ஜுனன் எண்ணிப் பார்க்கிறான். சரியாகக் கேட்டிருந்தால் தானே, சரியாக நினைத்துப் பார்க்க முடியும்?

என் கடமையைச் செய்வது சரியா, தவறா என்ற விஷயத்தில் குழப்பம் இருந்தது. நான் யார், இவர்கள் யார் என்ற உண்மை தெரியாத ஒரு குழப்பம் இருந்தது.

தர்ம விஷயத்தில் இருந்த குழப்பமும், தத்துவ விஷயத்தில் இருந்த குழப்பமும் நீங்கிவிட்டன.

கத ஸந்தேஹ: - ஞானம் வந்தது மட்டுமல்ல, அந்த ஞானத்தில் இருந்த சந்தேகங்களும் நீங்கிவிட்டன என்று அர்ஜுனன் கூறுகிறான்.

3, 5, 6 போன்ற அத்யாயங்களில் பல சந்தேகங்களைக் கேட்டு, பகவானிடம் தெளிவு பெற்றான். கர்மமா, ஞானமா? இல்லறமா, துறவறமா? எல்லாவிதமான சந்தேகங்களும் நீங்கிவிட்டன.

அர்ஜுனன் ஆத்மஞானத்தைப் பெற்றான். தர்ம விஷயத்திலும் தத்துவ விஷயத்திலும் இருந்த குழப்பங்கள் நீங்கப் பெற்றான்.

Downloaded from **www.omkaravidya.com**

சந்தேகங்களும் அடியோடு நீங்கின, விபரீத பாவனையும் நீங்கியது.

ஸ்ம்ருதி: லப்தம் என்றால் ஐயம், திரிபற்ற ஞானம் என்னால் பெறப்பட்டது என்று பொருள்.

அர்ஜுனன் இத்தனை நேரம் கீழேதான் அமர்ந்திருந்தான். எழுந்திரு! எழுந்திரு! என்று பகவான் பல முறை கூறினார்.

ந ச ஶக்நோம்யவஸ்த்தாதும்। (1-30) நிற்க முடியவில்லை என்று முதலில் கூறினான்.

இப்பொழுது, **ஸ்தித: அஸ்மி।** - ஸ்திரமாக நிற்கிறேன் என்று கூறுகிறான். எப்படி வில்லை ஏந்திக்கொண்டு, கம்பீரமாகப் போர்க்களத்திற்கு அர்ஜுனன் வந்தானோ, அப்படியே இப்பொழுது இருக்கிறான்.

தவ வசநம் கரிஷ்யே। - நீ உபதேசித்தபடி நடந்துகொள்கிறேன் என்கிறான்.

பகவான் நான்காவது அத்யாயத்தில் ஞானகர்ம ஸந்ந்யாஸத்தை உபதேசித்தார். கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பதைப் பற்றிக் கூறினார்.

அஜ்ஞானி பற்றுடன் விரும்பிச் செயல்புரிவதுபோல, ஞானி, பற்றில்லாமல், ஈடுபாட்டுடன் செயல்புரிய வேண்டும் என்று கூறினார்.

Downloaded from **www.omkaravidya.com**

குரு கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம் । 4 – 15

என்று கூறினார் பகவான்.

ஆதிசங்கரர் கூறுகிறார் - அவன் செயல்புரிய வந்தவன்தான். செயல்புரிவதில் இருந்த குழப்பம்தான் நீக்கப்பட்டது. ஆனால், அவனைச் செயலில் தூண்டுவது, இங்கு நோக்கமல்ல.

செயல்புரிவதற்குத் தடையாக இருந்த அம்சங்கள் நீக்கப்பட்டன. செயல்புரிவதும், புரியாமல் இருப்பதும் அவனுடைய இஷ்டம். தான், ஜனகர் முதலிய அரச பரம்பரையில் வந்தவர்கள், கடமைகளை முறையாகச் செய்து, மக்களுக்கு வழிகாட்டுவதைப் பற்றிக் கூறினார் பகவான்.

யத்யதாசரதி ஶ்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ।। 3 – 21

என்று பகவான் லோக ஸங்க்ரஹ த்ருஷ்டி - உலக நன்மையின்பொருட்டு செயலாற்றுவதைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

பகவான் கூறியபடி, தான் கடமைகளை ஒழுங்காகச் செய்கிறேன் என்று உறுதியெடுத்துக் கொள்கிறான் அர்ஜுனன். அகர்த்ருத்வ ஞானத்துடன், இந்த கர்த்ருத்வத்தைக் கையாளுகிறேன் என்று அவன் கூறுவதாக ஓர் உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ஆத்மாவாகிய நான் செயல்புரியாதவன் என்ற ஞானத்துடன், வ்யவஹாரத்தில் தர்மத்தை முன்னிட்டுச் செயல்புரிகிறேன் என்று கூறுகிறான்.

இந்த இடத்தில் நாம் முக்கியமாக 2, 3, 4 அத்யாயங்களை நினைவில்கொள்ள வேண்டும்.

அர்ஜுனன் தனது அனுபவத்தைக் கூறுகிறான். இதுதான், பகவத்கீதையினுடைய பலன்.

நாம் இதனைக் கற்றால், நமக்கும் ஆத்மஞானம் ஸித்திக்கும். வாழ்க்கையில் எந்தக் குழப்பமும், சந்தேகமும் வராது. எப்பொழுதும் தர்மமாகச் செயல்புரிவதில் நாம் உறுதியுடன் இருப்போம்.

செயல்புரியும்போதும் நன்றாகச் செயல்புரிவோம், த்யானமும் நன்றாகச் செய்வோம்.

பகவான் சாஸ்த்ரரூபமாக இருந்து, நமக்கு உபதேசம் செய்கிறார்.

தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்த்திதௌ ।
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்த்து-

மிஹார்ஹஸி ।। 16 - 24 ।।

என்று கூறியதற்கிணங்க, சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக்கொண்டு, எப்படிக் கடமைகளைச் செய்ய வேண்டுமோ, அப்படிச் செய்வேன் என்று அர்ஜுனன் கூறியதாக நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

Downloaded from **www.omkaravidya.com**

பகஜத்கீதையைப் படித்தால், நமக்கு ஆத்மஞானம் கிடைக்கும், சந்தேகம் நீங்கும், குழப்பமில்லாமல் இருப்போம். வாழ்க்கையில் எப்பொழுதும் அசையாமல், உறுதியுடன் இருப்போம். சாஸ்த்ரப்படி விருப்பு வெறுப்பில்லாமல் கடமைகளைச் செய்து, வருங்காலத் தலைமுறைக்கு வழிகாட்டுவோம்.

இதுவே, பகவத்கீதை படிப்பதால், நமக்குக் கிடைக்கும் பலன்.

सञ्जय उवाच

इत्यहं वासुदेवस्य पार्थस्य च महात्मनः ।

संवादमिममश्रौषमद्भुतं रोमहर्षणम् ।। १८ - ७४ ।।

ஸஞ்ஜய உவாச
இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்ய ச மஹாத்மந: ।
ஸம்வாதமிமமஶ்ரௌஷமத்புதம் ரோமஹர்ஷணம் ।। 18 - 74 ।।

பதவுரை

ஸஞ்ஜய: - ஸஞ்ஜயர், **உவாச** - கூறினார்.

இதி - இவ்வாறு, **அஹம்** - நான், **மஹாத்மந:** - மஹாத்மாவான, **வாஸுதேவஸ்ய** - வாஸுதேவருக்கும், **(மஹாத்மந:** - மஹாத்மாவான**), பார்த்தஸ்ய ச** - அர்ஜுனனுக்கும் நடந்த, **இமம்** - இந்த, **அத்புதம்** - அற்புதமானதும், **ரோமஹர்ஷணம்** - புளகாங்கிதம் அடையச்செய்வதுமான, **ஸம்வாதம்** - உரையாடலை, **அஶ்ரௌஷம்** - கேட்டேன்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

ஸஞ்ஜயர் கூறினார்.

இவ்வாறு, நான் மஹாத்மாவான வாஸுதேவருக்கும், மஹாத்மாவான அர்ஜுனனுக்கும் இடையே நடந்த இந்த அற்புதமானதும், புளகாங்கிதம் அடையச் செய்வதுமான உரையாடலைக் கேட்டேன்.

விளக்கவுரை

ஸ்ரீமத்பகவத்கீதா சாஸ்த்ரத்தில், பகவானுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த அருள் உரையாடல் நிறைவுபெற்றது.

இனி ஸஞ்ஜயர் பேசுகிறார் - வாஸுதேவருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நிகழ்ந்த இந்த தெய்வீகமான உரையாடலைக் கேட்டுத் தாம் பயன்பெற்றதாகக் கூறுகிறார்.

மஹாத்மந: என்பது விச்வரூபமுடைய, பரந்த மனப்பான்மை உடைய வாஸுதேவரைக் குறிக்கும். அந்தச் சொல், அர்ஜுனனுக்கும் பொருந்தும். அவன் மிக நேர்மையானவன்.

தாம் கேட்ட தெய்வீகமான உரையாடலுக்கு இரண்டு அடைமொழிகளைக் கொடுக்கிறார் ஸஞ்ஜயர். **அத்புதம் ஸம்வாதம்** - வாழ்க்கையைப் பற்றிய பல உண்மைகளையும், வாழ்க்கையில் எப்பொழுதும் அமைதியாக வாழ்வதற்குரிய நெறிமுறைகளையும் பகவான் அற்புதமாக உபதேசம் செய்திருக்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

ரோமஹர்ஷணம் ஸம்வாதம் - அந்த ஞானத்தின் பயனை நினைத்து, உடம்பே மயிர்க்கூச்செறிகிறது, புளங்காங்கிதம் ஏற்படுகிறது. இவ்வாறு ஸஞ்ஜயர் தமது அனுபவத்தைக் கூறுகிறார்.

திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிர, என் கண் குளிர்ந்தனவே (திருவிசைப்பா)

என்று சேந்தனார் பாடியிருப்பதைப்போல, இங்கு ஸஞ்ஜயர் கூறுகிறார்.

व्यासप्रसादाच्छ्रुतवानेतद्गुह्यमहं परम् ।

योगं योगेश्वरात्कृष्णात्साक्षात्कथयतः स्वयम् ।। १८ - ७५ ।।

வ்யாஸப்ரஸாதாச்ச்ருதவாநேதத்குஹ்யமஹம் பரம் ।
யோகம் யோகேஸ்வராத்க்ருஷ்ணாத்ஸாக்ஷாத்கதயத:
ஸ்வயம் ।। 18 - 75 ।।

பதவுரை

வ்யாஸ-ப்ரஸாதாத் - வ்யாஸருடைய அருளால், **அஹம்** - நான், **ஏதத்** - இந்த, **பரம்** - ஒப்புயர்வற்றதும், **குஹ்யம்** - ரஹஸ்யமும் ஆன, **யோகம்** - ஞானயோகத்தை, **ஸ்வயம்** - தானே, **ஸாக்ஷாத்** - நேரடியாக, **கதயத:** - கூறுகின்ற, **யோகேஸ்வராத்** - யோகேச்வரரான, **க்ருஷ்ணாத்** - ஸ்ரீக்ருஷ்ணரிடமிருந்து, **ஸ்ருதவாந்** - கேட்டேன்.

Downloaded from **www.omkaravidya.com**

பொழிப்புரை

வ்யாஸருடைய அருளால், நான் இந்த ஒப்புயர்வற்றதும் ரஹஸ்யமும் ஆன ஞானயோகத்தை, தானே நேரடியாகக் கூறுகின்ற யோகேச்வரரான ஸ்ரீக்ருஷ்ணரிடமிருந்து கேட்டேன்.

விளக்கவுரை

ஸஞ்ஜயர் தொடர்ந்து கூறுகிறார் - பகவான் ஸ்ரீவேத வ்யாஸரின் அருளால் தமக்குக் கிடைத்ததாகக் கூறுகிறார். வ்யாஸர்தான், தொலைவில் நடக்கக்கூடியவற்றைக் காண்பதற்கும் கேட்பதற்கும் ஸஞ்ஜயருக்கு அநுக்ரஹம் செய்திருக்கிறார்.

குருக்ஷேத்ர போருக்கு இடையே நடந்த உரையாடலை, ஹஸ்தினாபுரத்தில் இருந்தபடியே, வ்யாஸர் அநுக்ரஹம் செய்த யோக த்ருஷ்டியால், ஸஞ்ஜயரால் கேட்க முடிந்தது.

இவ்வாறு அவர் த்ருதராஷ்டரரிடம் கூறுகிறார்.

கேள்வி-பதில் ரூபமாக பகவான் ஸ்ரீக்ருஷ்ணரும் அர்ஜுனனும் பேசிக்கொண்டதை, பகவான் உபதேசித்து ஆனந்தம் அடைந்ததை, அர்ஜுனன் பயன் பெற்ற இந்த மேலான சாஸ்த்ரத்தை, சமூகத்தில் எல்லோரும் தங்களது உள்ளத்தில் வைத்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய சாஸ்த்ரத்தை, நான் கேட்டேன் என்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

யோகம் என்ற சொல், இந்த ச்லோகத்தில் ஞானத்தைக் குறிக்கும்.

கர்மயோகம், ஞானயோகம் ஆகியவை உபதேசிக்கப்பட்டிருந்தாலும், முக்கியமாக இங்கு ஞானயோகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆத்மாவே பரம்பொருள் என்ற தத்துவ ஞானத்தை, பகவான், தானே நேரடியாக அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தார்.

யோகேச்வரரான, வித்யாமாயை, அவித்யாமாயை ஆகியவற்றுக்குத் தலைவராக இருக்கக்கூடிய, ஸாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ணரிடமிருந்து, தாம் கேட்டதாக ஸஞ்ஜயர் கூறுகிறார்.

राजन्संस्मृत्य संस्मृत्य संवादमिममद्भुतम् ।

केशवार्जुनयोः पुण्यं हृष्यामि च मुहुर्मुहुः ।। १८ - ७६ ।।

ராஜந்ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதமிமமத்புதம் ।
கேஶவார்ஜுநயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச
முஹுர்முஹு: ।। 18 - 76 ।।

பதவுரை

ஹே ராஜந்! - ஓ அரசரே! **கேஶவ-அர்ஜுநயோ:** - கேசவன்-அர்ஜுனன் இடையே ஆன, **இமம்** - இந்த, **அத்புதம்** - அற்புதமும், **புண்யம்** - புண்யமுமான, **ஸம்வாதம்** - உரையாடலை, **ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய** - நன்கு நினைந்து

Downloaded from **www.omkaravidya.com**

நினைந்து, **முஹு: முஹு:** - மீண்டும் மீண்டும், **ஹ்ருஷ்யாமி ச** - மகிழ்கிறேன்.

பொழிப்புரை

ஓ அரசரே! கேசவன்-அர்ஜுனன் இடையே ஆன இந்த அற்புதமும் புண்யமுமான உரையாடலை, நன்கு நினைந்து நினைந்து, மீண்டும் மீண்டும் மகிழ்கிறேன்.

விளக்கவுரை

ஸஞ்ஜயர், இந்த சாஸ்த்ரத்தைக் கேட்டுத் தமக்கு ஒரே ஆனந்தமாக இருப்பதாகக் கூறுகிறார்.

பகவானுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்த தெய்வீகமான, கேள்வி பதில் ரூபமான உரையாடல் என்பது வாழ்க்கையில் கிடைத்தற்கரியது.

இது மிகப் புனிதமானது. இதைப் படித்தாலே, கேட்டாலே நமக்கு புண்யம் கிடைக்கும். வாழ்க்கைக்குத் தேவையான வளங்களும் கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேல், மன அமைதி நம்மை விட்டு ஒருநாளும் நீங்காது.

இதனை நன்கு நினைந்து நினைந்து, இதனைக் கேட்டுக் கேட்டு, நிறைய புண்யத்தையும் ஸம்பாதிக்கிறோம். அது மட்டுமல்ல, அடிக்கடி புளகாங்கிதம் அடைகிறேன் என்கிறார்.

இதனை நினைத்தாலே தமக்கு அப்படியோர் ஆனந்தமாக இருப்பதாகக் கூறுகிறார். ஆழமான மனதில் அதனை நினைத்து மகிழ்கிறேன் என்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

तच्च संस्मृत्य संस्मृत्य रूपमत्यद्भुतं हरेः ।

विस्मयो मे महान् राजन्हृष्यामि च पुनः पुनः ।। १८ - ७७ ।।

तच्च स्मंस्मृत्य स्मंस्मृत्य रूपमत्यद्भुतं हरे: ।
विस्मयो मे महान् राजन्हृष्यामि च पुन: पुन: ।। 18 - 77 ।।

பதவுரை

ஹே ராஜந் - ஓ அரசரே! **ச** - மேலும், **ஹரே:** - ஹரியினுடைய, **தத்** - அந்த, **அத்யத்புதம்** - மேலான அற்புதமான, **ரூபம்** - ரூபத்தை, **ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய** - நன்கு நினைந்து நினைந்து, **மே** - எனக்கு, **மஹாந்** - மிகுந்த, **விஸ்மய:** - வியப்பு உண்டாகிறது. **புந: புந:** - மீண்டும் மீண்டும், **ஹ்ருஷ்யாமி** - மகிழ்கிறேன்.

பொழிப்புரை

ஓ அரசரே! மேலும், ஹரியினுடைய அந்த மேலான அற்புதமான ரூபத்தை நன்கு நினைந்து நினைந்து, எனக்கு மிகுந்த வியப்பு உண்டாகிறது. மீண்டும் மீண்டும் மகிழ்கிறேன்.

விளக்கவுரை

ஸஞ்ஜயர் மேலும் தொடர்கிறார் - முதலில் சாஸ்த்ரோபதேசத்தை நினைந்து மகிழ்ந்தார். இப்போது, ஹரியினுடைய விச்வரூபத்தை நினைத்து மகிழ்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

விருப்பு வெறுப்பற்ற உலகப் பார்வையாகிய விச்வரூபத்தை அவர் அநுக்ரஹம் செய்தபோது, உலகம் எப்படியிருந்தது தெரியுமா, எங்கு பார்த்தாலும் அமைதி, ஆனந்தம்தான்.

இப்பேர்ப்பட்ட போர்க்களத்தில் அர்ஜுனனின் ப்ரார்த்தனைக்கு இணங்கி, பகவான் விச்வரூபத்தைக் காட்டியருளினார். மிகுந்த கம்பீரத்துடன் ஜகத்குருவாக இருந்து, உபதேசம் செய்தார்.

மஹாவிஷ்ணு க்ருஷ்ணாவதாரம் செய்தது, அந்த அவதாரத்தின் சிறப்பம்சமாகிய ஆசார்யத்தன்மையை வெளிப்படுத்தியது என ஸ்ரீக்ருஷ்ணரூபம், விச்வரூபம் எல்லாவற்றையும் இங்கு சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்யத்புதம் என்றால் அற்புதங்களில் சிறந்ததான, மேலான அற்புதம் என்று பொருள்.

அந்த ரூபம் அவருடைய மனதிலேயே இருக்கிறது. அதனை நினைந்து, நினைந்து, மிகுந்த ஆச்சர்யம் ஏற்படுகிறது.

அர்ஜுனனுக்கு இந்த உணர்ச்சிகளெல்லாம் வந்தன. முதலில் ஆச்சர்யம், பயம், பக்தி ஆகியவற்றைப் பார்த்தோம்.

இங்கு ஸஞ்ஜயர் இங்கு வியப்புடன் பக்தியை வெளிப்படுத்துகிறார். மீண்டும் மீண்டும் அதனை நினைத்து மகிழ்கிறார்.

यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।

तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम ।। १८ - ७८ ।।

Downloaded from **www.omkaravidya.com**

யத்ர யோகேஸ்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தநுர்தர: ।
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம ।। 18 - 78 ।।

பதவுரை

யத்ர - எந்தப் பக்ஷத்தில் (எவருடைய உள்ளத்தில்), **யோகேஸ்வர:** - யோகேச்வரரான, **க்ருஷ்ண:** - க்ருஷ்ணர் (உள்ளாரோ), **யத்ர** - எந்தப் பக்ஷத்தில் (எவருடைய உள்ளத்தில்), **தநுர்தர:** - வில்லை ஏந்தியிருக்கும், **பார்த்த:** - அர்ஜுனன் (உள்ளானோ), **தத்ர** - அங்கு, **த்ருவா** - நெறிபிறழாத, **நீதி:** - நீதியும் (அறமும்), **ஸ்ரீ:** - செல்வமும் (பொருளும்), **பூதி:** - இன்பமும், **விஜய:** - வெற்றியும் (மோக்ஷமும்) நிலைத்திருக்கும் என்பது, **மம** - என்னுடைய, **மதி:** - உறுதியான எண்ணம்.

பொழிப்புரை

எந்தப் பக்ஷத்தில், எவருடைய உள்ளத்தில், யோகேச்வரரான க்ருஷ்ணரும், வில்லை ஏந்தியிருக்கும் அர்ஜுனனும் உள்ளனரோ, அங்கு நெறிபிறழாத நீதியாகிய அறம், பொருள், இன்பம், வெற்றியாகிய மோக்ஷம் ஆகியவை நிலைத்திருக்கும் என்பது என்னுடைய உறுதியான எண்ணம்.

விளக்கவுரை

ஸஞ்ஜயர் நிறைவு செய்கிறார் - என்னுடைய அபிப்ராயத்தைக் கூறுகிறேன் என்கிறார்.

Downloaded from **www.omkaravidya.com**

எங்கு, யோகத்தை, அதாவது மாயாசக்தியையே ஆளக்கூடிய, அனைத்து சாஸ்த்ரங்களின் தலைவராக, ஜகத்குருவாக விளங்குகின்ற ஸ்ரீக்ருஷ்ணர் இருக்கிறாரோ, எங்கு வில்லேந்திக் கொண்டிருக்கின்ற அர்ஜுனன் இருக்கிறானோ, அங்கு என்னவெல்லாம் நிலைத்திருக்கும் என்று கூறுகிறார்.

ஸ்ரீ: என்பது வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தையும், **பூதி:** என்பது புலனின்பத்தையும், **விஜய:** என்பது மோக்ஷத்தையும், **த்ருவா நீதி:** என்பது புண்யத்தையும் குறிக்கும்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய அனைத்தும் கிடைக்கும்.

யாருடைய உள்ளத்தில், ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமான ஸ்ரீமத்பகவத்கீதா சாஸ்த்ரம் இருக்கிறதோ, அவர்களுக்கு வாழ்க்கையின் நான்கு குறிக்கோள்களும் நன்கு நிறைவேறும்.

அவர்களுக்கு எல்லையற்ற புண்யம் கிடைக்கும், மோக்ஷம் கிடைக்கும். இந்த உடல் வாழ்க்கைக்குத் தேவையான பொருளும் இன்பமும் கிடைக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

மற்றொரு பொருள்

ஸ்ரீக்ருஷ்ணர் இறையருளின் ப்ரதிநிதி, அர்ஜுனன் முயற்சியின் ப்ரதிநிதி.

எங்கு முயற்சியும் இறையருளும் இணைகின்றனவோ, அங்கு வாழ்க்கையில் எல்லாவிதமான வெற்றிகளும் நிச்சயம்.

Downloaded from **www.omkaravidya.com**

உடலுக்குத் தேவையான பொருளும் இன்பமும், உயிருக்கு உறுதி தரக்கூடிய அறமும், வீடும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பூதி: என்பது நற்பண்புகளையும் குறிக்கும்.

பகவத்கீதையில், **அமாநித்வம்** முதலான நற்பண்புகளும் உபதேசிக்கப்பட்டுள்ளன. அவையும் தர்மத்திற்குள் அடங்கும்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அடைதல்தான் வாழ்க்கையின் பயன். உடலுக்கு பொருளும் இன்பமும் தேவை. உயிருக்கு, உள்ளத்திற்கு அறமும் வீடும் அவசியம்.

இதை நம் முன்னோர்கள் நமக்கு அருளியிருக்கிறார்கள். இப்படி வாழ்ந்தால்தான் வாழ்க்கையில் அமைதியை உணர முடியும் என்று உணர்த்தியிருக்கிறார்கள்.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे

श्रीकृष्णार्जुनसंवादे मोक्षसन्न्यासयोगो नाम अष्टादशोऽध्याय: ।। १८ ।।

ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகஸாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே
மோக்ஷஸந்ந்யாஸயோகோ நாம அஷ்டாதஸோऽத்யாய: ।। 18 ।।

சொற்குற்றம், பொருட்குற்றம் நீங்குவதற்கு, ஓம் தத் ஸத் என்று கூறி, உபநிஷதங்களின் பரமதாத்பர்யத்தை விளக்கிக் கூறுகின்ற, ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கின்ற, மனதைப் பக்குவப்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கூறுகின்ற

Downloaded from **www.omkaravidya.com**

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்-அர்ஜுனன் ஆகியோரின் அருள் உரையாடல் வடிவிலிருக்கும் இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்தில் மோக்ஷஸந்ந்யாஸம் என்ற தலைப்பிலான இந்த பதினெட்டாவது அத்யாயம் நிறைவுபெறுகிறது.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணரின் திருவடிகளில் இந்த அறிவையும் வாழ்க்கையையும் ஸமர்ப்பிக்கிறோம். நாமும் இன்புற்று, வருங்காலத் தலைமுறைக்கும் அமைதியான ஆனந்தத்தை உணர்த்துவோம்!

ॐ श्रीकृष्णार्पणमस्तु। ஓம் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து।

Downloaded from **www.omkaravidya.com**

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

ஓங்காரவித்யா - செயல்பாடுகள்

பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்த மஹாஸ்வாமிகள் வடிவமைத்து அருளிய ஆத்மவித்யா வகுப்புகளைக் கேட்டு, இதுவரை ஆயிரக்கணக்கானோர் பயன்பெற்றுள்ளனர்.

- ஆத்மவித்யா ஐந்தாண்டு கல்வித்திட்டம் முதல் இரண்டு பேட்ச்கள் நிறைவுபெற்றன.
- ஆத்மவித்யா 3, 4, 5, 6 பேட்ச்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
- அவஸானா என்ற உயர்கல்வித் திட்டத்தில் 1, 2 பேட்ச்களில் சேர்ந்து, நூற்றுக்கணக்கானோர் ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் வகுப்புகளைக் கேட்டுப் பயன்பெற்று வருகின்றனர்.
- Omkaravidya என்ற யூ ட்யூப் சேனலில் நாள்தோறும் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் ஸ்ரீமத்பகவத்கீதை விளக்கங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

Downloaded from **www.omkaravidya.com**

- Omkara Hrudayam என்ற வாட்ஸ்ஆப் சேனலில் நாள்தோறும் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் ஞானமலர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகின்றன.
- யூ. வி - குறளின் குரல் என்ற திட்டத்தின் மூலம், திருக்குறள் பாடங்களை எளிமையாக ஆன் லைனில் கற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்கள் கற்றுத் தந்த மரபுப்படி திருக்குறள் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.
- Omkaravalluvam என்ற வலைத்தளத்தில் ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் திருக்குறள் விளக்கங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன.
- பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் ஜயந்தியும், ஆராதனையும் பக்தியுடன் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றன. மேலும் விபரங்களுக்கு academic.atmavidya@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்புகொள்ளவும்.

****

Downloaded from **www.omkaravidya.com**

Downloaded from **www.omkaravidya.com**

Downloaded from **www.omkaravidya.com**